2022 இல் இலங்கை சுதந்திரத்திற்குப் பிறகு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது, இது பொருளாதார முகாமையில் பல முக்கியமான பாடங்களைக் கற்றுக் கொடுத்தது. பல தசாப்தங்களாக பின்பற்றப்பட்டு வரும் அதன் பொருளாதார மாதிரியை மறுபரிசீலனை செய்ய இது ஒரு முக்கியமான வாய்ப்பை நாட்டிற்கு வழங்கியுள்ளது. சனரஞ்சக மற்றும் நீடிக்க முடியாத கொள்கைகளை நம்புவதற்கு இடமில்லை என்பதை நெருக்கடி காட்டுகிறது. புறநிலைத் தீர்ப்புடன் ஆதாரம் சார்ந்த முடிவெடுப்பதற்கு மாற்றமாக அரசியல் மற்றும் கருத்தியல் சார்ந்த உந்துதல் முடிவுகளில் அதிக நம்பிக்கை வைப்பதன் ஆபத்துகளை இது தெளிவாகக் காட்டுகிறது. துரதிஷ்டவசமாக, இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது, பொருளாதாரம் எவ்வாறு நிர்வகிக்கப்படக்கூடாது என்பதற்கான கற்றல் நிகழ்வாக, அதன் தீவிரத்தன்மை மற்றும் பொருளாதாரம் மற்றும் பரந்த சமூகத்தின் மீது அது ஏற்படுத்திய பாதகமான விளைவுகளைக் கருத்தில் கொண்டு இப்போது பரவலாக சுட்டிக்காட்டப்படுகிறது. எனவே, இலங்கையின் பொருளாதார மாதிரி மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார முகாமைத்துவ மூலோபாயம் மற்றும் தற்போதைய பொருளாதார சூழல் மற்றும் புதிய யதார்த்தங்களுக்கு முகங்கொடுக்க பொருத்தமான அரசியல் பொருளாதார பிரச்சினைகளை மீள்பரிசீலனை செய்வது சரியான தருணத்திலாகும். எதிர்காலத்தில் மேம்பட்ட வாழ்க்கைத் தரத்துடன் வலுவான பொருளாதாரத்திற்கான அடித்தளத்தை அமைப்பதற்கு மிகவும் தேவையான ஆனால் நீண்டகால தாமதமான சீர்திருத்தங்களை செயல்படுத்துவதற்கு நெருக்கடி ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது. 2048 ஆம் ஆண்டிற்குள் முன்னேற்றமடைந்த பொருளாதாரமாக மாறுவதற்கான இலக்கை பிரகடனப்படுத்துவதில் அரசாங்கம் இதற்கான வழிகாட்டியை வழங்கியுள்ளது.

தற்போதைய நெருக்கடியானது, பல ஆண்டுகளாகத் தாமதமான சீர்திருத்தங்களின் திரட்சியை பிரதிபலிக்கிறது, இது சமீபத்திய துரதிஷ்டமான கொள்கைத் தெரிவுகளின் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. சேமிப்பை விட நுகர்வுக்கு சாதகமாக மிகையான இறக்குமதி கேள்விக்கு வழிவகுக்கும் அரசிறை மற்றும் நாணயக் கொள்கை, உள்நாட்டுத் தொழிற்துறை பாதுகாப்பு வர்த்தகக் கொள்கையில் (Protectionist Trade Policy) அதிக நம்பிக்கைக் கொண்ட வர்த்தக ஆட்சிகளில் ஏற்றுமதி எதிர்ப்பு சார்பு, நிலையான மற்றும் நம்பகமான முதலீட்டு சூழல் இல்லாததால் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கத் தவறுதல். வர்த்தகம் அல்லாத துறையில் முதலீடுகள், வணிக நடவடிக்கைகளில் அரசின் அதிகப்படியான பங்கு மற்றும் கொள்கைப் பிரச்சினைகளான தனியார்மயமாக்கல், வேலைவாய்ப்பை வழங்குவதில் பொதுத்துறையின் மீது அதிக நம்பிக்கை வைத்தல், எரிசக்தி போன்ற முக்கியப் பயன்பாடுகளின் தவறான விலை நிர்ணயம், அவசியமான ஆனால் ஒருவேளை மக்கள் விரும்பாத, சரியான நேரத்திலும் சீரான முறையிலும் எடுக்க வேண்டிய சீர்திருத்தங்கள், மற்றும் முந்தைய சர்வதேச நாணய நிதியத் திட்டங்களின் கீழ் ஸ்டாப்-கோ வகை கொள்கைகள் (Stop-Go Type Policies) என்பன நீடித்த கொள்கை போதாமையின் முக்கிய பகுதிகளாக காணப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டின் முற்பகுதியில், குறிப்பாக காலக்கெடுவை மீறிய கொள்கைத் தெரிவுகள், தீவிரமான நிர்வாகக் குறைபாடுகள் மற்றும் செயலூக்கமின்மை ஆகியவற்றால் உருவான பாதகமான பொருளாதாரச் சூழல் சுதந்திரத்திற்குப் பிந்தைய வரலாற்றில் ஏற்பட்ட மோசமான பொருளாதார நெருக்கடியினை அனுபவிக்க வழிவகுத்தது. உலகளாவிய மற்றும் உள்நாட்டு ஆதாரங்களில் இருந்து வெளிப்பட்ட எண்ணற்ற பாதிப்புகளால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டதால், 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அதன் பாதுகாப்பு இருப்புக்கள் முழுமையாக தீர்ந்துவிட்டன. அதீத எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு, நீண்ட மின்வெட்டு, கணிசமான பெறுமதி இறக்கம், உச்ச பணவீக்க சூழ்நிலை, அந்நியச் செலாவணி பற்றாக்குறை காரணமாக மருந்துகள் உள்ளிட்ட பிற அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை ஆகியவை இதற்கு சான்றாகிறது. சாதகமற்ற நிதி நிலைமைக்கான அடிப்படைக் காரணங்களை நிவர்த்தி செய்வதற்கான எந்தவொரு கொள்கை முயற்சியும் இல்லாமல் நாணய நிதியளிப்பு விதிவிலக்கான உயர் மட்டங்களை

கட்டம் 1.1 | 2022 பொருளாதார நெருக்கடி - கற்றுக்கொண்ட பாடங்களும் எதிர்கால திட்டமும் தொடர்...

எட்டியது. நாட்டின் பயன்படுத்தக்கூடிய அந்நியச் செலாவணி கையிருப்பு, நெருக்கடியைத் தவிர்க்க அல்லது நெருக்கடியின் அளவைப் பொது மக்களுக்குத் தெரிவிக்க எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில், அத்தியாவசிய இறக்குமதிப் பொருட்களின் பற்றாக்குறை ஒரு முக்கியமான நிலையை அடையும் வரை, பொதுமக்களின் எதிர்ப்புக்கு வழிவகுத்தது. கடைசி முயற்சியாக சில வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்கான முயற்சிகள் மிகவும் தாமதமாகியதாலும் சாத்தியமற்றதாலும் அதுவும் வெற்றிபெறவில்லை. சாதகமற்ற போக்குகளைக் கருத்தில் கொண்டு, குறிப்பாக 2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவது உட்பட, சரியான பொருளாதாரக் கொள்கை நடவடிக்கைகள் முன்கூட்டியே எடுக்கப்பட்டிருந்தால், நிலைமையை சிறப்பாக நிர்வகித்திருக்கலாம். மேலும் நெருக்கடியின் மோசமான விளைவுகள் தணித்திருக்கலாம். உண்மையில், சாத்தியமான பொருளாதார நெருக்கடி குறித்தான பல எதிர்வுகூறல்கள் மற்றும் விவாதங்கள் அதிகாரப்பூர்வமாகவும் பகிரங்கமாகவும் இருந்தன, அவை மிகவும் தாமதமாகும் வரை புறக்கணிக்கப்பட்டன. மிகவும் விரிவானதும் வெளிப்படைத் தன்மைமிக்க பொருளாதாரக் கொள்கைக் கட்டமைப்பை பின்பற்றத் தவறியது இந்த நெருக்கடியிலிருந்து கற்ற மற்றொரு முக்கியமான பாடமாகும். இந்த பொருளாதார தவறான முகாமைத்துவத்தின் இறுதி விளைவு என்னவென்றால், அத்தியாவசியப் பொருட்களுக்கான நீண்ட வரிசையில் பல உயிர்களை இழந்ததுடன் இலட்சக் கணக்கான மக்கள் வறுமை மற்றும் பாதிக்கப்படக்கூடிய பொருளாதார நிலைக்கு ஆளாகியது உட்பட நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் முன்னெப்போதும் கண்டிராத சிரமங்களுக்கு ஆளாக வேண்டியிருந்தது.

எனவே, இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான அடிப்படைக் காரணங்களை அனைத்து அக்கறைதாரர்களும் புரிந்துகொள்வதும், எதிர்காலத்தில் ஏற்படும் மற்றொரு நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு, சரியான முடிவெடுக்கும் மாதிரிகள் எதிர்காலத்தில் பின்பற்றப்படுவதை உறுதிசெய்ய ஒவ்வொரு முயற்சியும் எடுக்கப்பட வேண்டியது அவசியம். இந்த நெருக்கடி பொறுப்பான பொருளாதார முகாமைத்துவம் பற்றிய முக்கியமான கவலைகளை எழுப்புகிறது. குறிப்பாக நாட்டின் அரசிறை மற்றும் நாணய விவகாரங்கள், பொருத்தமான பொறுப்புக்கூறல் பொறிமுறைகள் அமைக்கப்படுவதை வேண்டி நிற்கிறது.

மேற்கூறிய அபிவிருத்திகளைத் தொடர்ந்து இலங்கை பொருளாதாரப் பேரழிவின் விளிம்பை நோக்கி நகர்ந்தபோது, 2022 ஏப்ரல் தொடக்கத்தில் சமூக எழுச்சி வெடித்ததோடு நிர்வாகத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களும் ஏற்பட்டன. எரிபொருள், சமையல் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மருந்துகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதே முக்கிய முன்னுரிமையாக இருந்தது. தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் குழாம் மட்டத்தில் ஒப்பந்தத்திற்கு வந்த அதேவேளை நிதி உத்தரவாதங்களைப் பெறுவதற்காக கடன் மறுசீரமைப்பு செயல்முறையைத் தொடங்கியது. அரசாங்கம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கிடையே ஒப்புக் கொள்ளப்பட்ட சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டமானது, குறிப்பாக அரசிறை நடவடிக்கைகள், பயன்பாட்டு விலைகள் மற்றும் விலை ஸ்திரத்தன்மை ஆகியவற்றில் தொடர்ச்சியான சீராக்கங்களை அவசியப்படுத்தியது. இந்த நிதி உத்தரவாதங்கள் மூலம் முக்கிய கடன் வழங்குநர்களிடமிருந்து பெறப்பட்ட வலுவான ஆதரவுடன், 2023 மார்ச் 20 அன்று சர்வதேச நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டம் அதன் நிறைவேற்று சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. இந்த நான்கு வருட 3 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டம் இலங்கையின் பொருளாதாரத்தின் இரட்டை ஏற்றத்தாழ்வுகளையும், அரசிறைப் பற்றாக்குறை, மற்றும் சென்மதி நிலுவையிலுள்ள நடைமுறை கணக்குப் பற்றாக்குறையினையும் நிவர்த்தி செய்ய எதிர்பார்க்கிறது. பேரின நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டம், பேரின பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைபேற்றுதன்மையை மீட்டெடுக்க, நிலையான மற்றும் சமமான பொருளாதார வளர்ச்சிக்கான அடித்தளத்தை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டமானது 3 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவிக்கு அப்பாற்பட்ட மதிப்பைக் கொண்டுள்ளது. ஏனெனில் இது மற்ற சர்வதேச நாணய நிதியத்திலிருந்து கூடுதல் நிதியுதவியை உள்ளடக்கியது. மேலும் முக்கியமாக இது இலங்கையின் பொருளாதார சீர்திருத்தத் திட்டத்தில் நம்பகத்தன்மையை வெளிப்படுத்துகிறது. இது நாட்டில் ஆழமாக வேரூன்றியிருக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது.

2022 இன் இரண்டாவது காலாண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் மூலம், பொருளாதாரம் ஸ்திரத்தன்மைக்கான அறிகுறிகளைக் காட்டியுள்ளது. வரி கட்டமைப்பில் திருத்தங்கள், வலுவான செலவின முகாமைத்துவ முன்முயற்சிகள், நாணயக் கொள்கை இறுக்கம் மற்றும் சந்தை நிலவர அடிப்படையில் நாணயமாற்று வீதத்தை நிர்ணயம் செய்ய அனுமதித்தல் மற்றும் விநியோகத் துறை மேம்பாடுகள் உள்ளிட்ட கடுமையான ஆனால் அத்தியாவசியமான கொள்கை

கட்டம் 1.1 | 2022 பொருளாதார நெருக்கடி - கற்றுக்கொண்ட பாடங்களும் எதிர்கால திட்டமும் தொடர்...

நடவடிக்கைகளுடன் அத்தியாவசிய பொருட்களின் விநியோகத்தை மீட்டமைத்தல் என்பன இந்த சாதகமான வளர்ச்சியை அடைய உதவியது. ஆயினும் கூட, குறிப்பாக அறசிறைக் கொள்கை முன்னேற்றம் குறித்த தொடர்ச்சியான மற்றும் மையப்படுத்தப்பட்ட முயற்சிகள், ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்துவதற்கும் இந்த முன்னேற்றத்தை நிலைநிறுத்துவதற்கும் அவசியமாகும். வரவுசெலவுத் திட்டத்தின் செலவினங்களில் உள்ள கட்டமைப்பு வரம்புகளைக் கருத்திற் கொண்டு, மேம்படுத்தப்பட்ட வருவாய் உருவாக்கம், நிதிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முக்கியமானதாகும். சமீபத்திய வரி வீதங்கள் திருத்தப்பட்டதன் மூலம், வரி அடிப்படையை விரிவுபடுத்துவதற்கும், திறமையாக வரி வசூலிக்கும் முறையை செயல்படுத்துவதற்கும் முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. தற்போதைய சூழலில் கிடைக்கக்கூடிய வரையறுக்கப்பட்ட அரசிறை இடைவெளியினை கருத்தில் கொண்டு, இலங்கை தனது செலவினங்களை திறமையாக நிர்வகிப்பது மிகவும் முக்கியமானதாகும். இது அத்தியாவசிய சேவைகளான சுகாதாரம், கல்வி மற்றும் முக்கியமான உட்கட்டமைப்பு போன்றவற்றிற்கான செலவினங்களுக்கு முன்னுரிமை அளிப்பதை, அதே நேரத்தில் அத்தியாவசியமற்ற செலவுகளைக் குறைப்பதையும் உள்ளடக்கியது. அரசிறைத் துறையில் தீவிரமான சிக்கல்களைக் கருத்திற் கொண்டு ஆடம்பரத்திற்கு இடமில்லை. எனவே பொது நிதிகளை மிகுந்த கவனத்துடனும் வலுவான ஒழுக்கத்துடனும் நிர்வகிப்பது முன்னெப்போதையும் விட முக்கியமானது. வெளிநாட்டு நிதியளிப்பில் உள்ள வரையறைகளைக் கருத்தில் கொண்டு மிக அதிக செலவில் (சுமார் 25 சதவீதம்) நிதி வழங்கப்படுவதால், நிதித் துறை மிகவும் முக்கியமானது. அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களில் தொடரும் சீர்திருத்தங்களும் இந்த சீர்திருத்த செயன்முறையின் ஒரு பகுதியாகும். இச்செயன்முறையானது வெளிவரும் உண்மைகளை எதிர்கொள்ளவும் மற்றும் திறைசேரியினதும் பொதுமக்களினதும் சுமையை குறைக்கவும் நாட்டை தயார்படுத்துகின்றது.

பொருளாதார உறுதிப்பாடு மற்றும் கடன் மறுசீரமைப்பு மூலோபாயம் ஆகியவற்றிற்கு அப்பால் பார்க்கையில், இந்த நெருக்கடியை பொருளாதாரத்தை மாற்றுவதற்கான ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொள்வதற்கும், விரைவான டிஜிட்டல் மயமாக்கல், இயந்திரமயமாக்கல், செயற்கை நுண்ணறிவு மற்றும் காலநிலை மாற்றம் போன்ற பாதகமான முன்னேற்றங்கள் மற்றும் மக்களின் வயது முதிர்ச்சி ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட சிக்கலான மற்றும் பன்முக கோரிக்கைகளை எதிர்கொள்வதற்கும் முக்கியமானதாகும். சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சித் திட்டம் பொருளாதார உறுதிப்பாட்டினை மீட்டெடுக்க உதவும் என்றாலும், நாடு எதிர்கொள்ளும் அனைத்து துன்பங்களுக்கும் இது ஒரு தீர்வாக அமையாது. எனவே, சர்வதேச நாணய நிதிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு அப்பாற்பட்ட கொள்கைகள் அவசியம். எதிர்காலத்தில் முன்வைக்கப்படவிருக்கும் புதிய கொள்கைகளில் விவசாயம், கல்வி, சுகாதார சேவைகள், பொது சேவைகள ஆகியவற்றை நவீனமயமாக்கல், சர்வதேச உறவுகள் மற்றும் பாதுகாப்பு, காரணி சந்தை சீர்திருத்தங்கள் (தொழிலாளர் சட்டங்கள், காணி சட்டங்கள், புதிய சட்டங்கள் மற்றும் அரச தொழில் முயற்சிகளுக்கான சீர்திருத்தங்கள் முதலீட்டை ஊக்குவித்தல்), அதிக சர்வதேச பொருளாதார ஒருங்கிணைப்பு (வெளிநாட்டு வர்த்தகம், சுற்றுலா மற்றும் முதலீட்டை மேம்படுத்துதல்), அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் சீர்திருத்தங்கள் (அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் மறுசீரமைப்பு மற்றும் பொது தனியார் கூட்டாண்மை திட்டத்திற்கான புதிய சட்டங்கள்), நிறுவன மற்றும் சட்ட சீர்திருத்தங்கள், சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் மேம்பாடு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் என்பன சீர்திருத்தத்தில் உள்ளடங்கும். வர்த்தக ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும், பெறுமதி சங்கிலி ஒருங்கிணைப்பு போன்ற உற்பத்தியில் உலகளாவிய போக்குகளுடன் சிறப்பாகச் சீரமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்தச் செயல்பாட்டில், திறமையான நிதிக் கட்டுப்பாடு, ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள், மேம்பட்ட நிர்வாகம் மற்றும் நாட்டிற்கான சட்டத்தின் ஆட்சியைக் கடைப்பிடிப்பது ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தப்படும். இவை சர்வதேச நாணய நிதிய நிகழ்ச்சிதிட்டத்தை செயற்படுத்தினாலும் இவைகள்தான் செயல்படுத்தப்பட வேண்டிய கொள்கை சீர்திருத்தங்கள் ஆகும். இந்த சீர்திருத்தங்கள் பாராளுமன்றத்தில் விவாதம் மற்றும் ஒப்புதலுக்காக தேவைப்படும்போது சமர்ப்பிக்கப்படும்.

போட்டித்தன்மையை மேம்படுத்தவும், பேரின அரசிறை ஸ்திரத்தன்மையை பராமரிக்கவும், நிறுவனங்களை வலுப்படுத்தவும் நடைபெற்று வரும் சீர்திருத்தங்களானது வலுவான பொருளாதார வளர்ச்சி, வேலை வாய்ப்பு உருவாக்கம் மற்றும் வறுமைக் குறைப்புக்கு வழி வகுக்கும். அதன்படி, மேலே குறிப்பிட்டுள்ள அம்சங்களின் அடிப்படையில், சமமான, நிலையான முன்முயற்சிகள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கலுக்கு முன்னுரிமை அளித்து, அதிக போட்டித்தன்மை கொண்ட, ஏற்றுமதி சார்ந்த மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த புதிய பொருளாதார மாதிரி நிறுவப்படும். மேம்படுத்தப்பட்ட ஏற்றுமதிகள் மற்றும் தனியார் முதலீடுகளுக்கு பொருளாதாரத்தை திறப்பதன் மூலம் நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கு உயர்வான, நிலைபேறான ,தொழில் வளமிக்க வளர்ச்சியினை நடுத்தர மற்றும் நீண்டகாலத்திற்கு எதிர்பாக்கப்படுகிறது. பொதுவில் எதிர்பார்த்த

கட்டம் 1.1 | 2022 பொருளாதார நெருக்கடி - கற்றுக்கொண்ட பாடங்களும் எதிர்கால திட்டமும் தொடர்...

மேம்படுத்தபட்ட பொருளாதார ஒருங்கிணைப்பு, பிராந்திய விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம் (Regional Comprehensive Economic Partnership Agreement – RCEP) மற்றும் பசிபிக் நாடுகளுக்கிடையிலான கூட்டாண்மைக்கான விரிவான மற்றும் முற்போக்கான ஒப்பந்தம் (Progressive Agreement for Trans-Pacific Partnership- CPTPP) ஆகியவற்றுடனும் குறிப்பாக பெரிய வர்த்தக பங்காளிகளுடனும் இது மேலும் வலுப்பெறும். வரவிருக்கும் தசாப்தங்களில் ஆசியாவின் வளர்ச்சியிலிருந்து பயனடைவதில் குறிப்பிட்ட கவனம் செலுத்தப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ளபடி நாட்டின் பொருளாதார வளர்ச்சி செயல்முறைக்கு இடையூறாக இருக்கும் கட்டமைப்புத் தடைகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை செயல்படுத்தும் அதே வேளையில் ஸ்திரத்தன்மையை ஒருங்கிணைக்க தொடர்ச்சியான முயற்சிகள் அவசியம். கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் நிறைவு இந்த கடினமான முயற்சிகளை மேற்கொள்வதற்கு மேலதிக உத்வேகத்தை வழங்கும். அதே சமயம், பொருளாதாரத்தின் திசையை மாற்றும் எந்த முயற்சியும் முறையான, உறுதியான மற்றும் நடைமுறைப்படுத்தக்கூடிய மாற்றீடு இல்லாமல், வெறும் அரசியல் உந்துதல் கொண்ட சொல்லாட்சியின் அடிப்படையில் மட்டுமே மேற்கொள்வதானது நிலைமையை மோசமாக்குவதோடு ஏற்கனவே பலவீனமாகவுள்ள பொருளாதாரத்திற்கு மேலும் நெருக்கடிளை உருவாக்கும் என்பதைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானதாகும். எனவே, மிகவும் நீடித்த மீட்சிக்காக, கடந்த கால தாமதமான கொள்கைத் தெரிவுகளிலிருந்து கற்றுக்கொள்வதன் மூலம், பொருளாதாரக் கொள்கைகளின் நோக்கம் கொண்ட அடிப்படைக் கட்டமைப்பை நாடு வெற்றிகரமாகத் தொடர வேண்டும். அதேவேளை, நாட்டின் பிரதான இனக்குழுக்களுக்கு இடையில் பொருளாதார முகாமைத்துவம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அர்ப்பணிப்பின் தேவையை நிவர்த்தி செய்யும் ஒரு புதிய அரசியல் கட்டமைப்பானது, முன்னோக்கிச் செல்லும் உயர் வளர்ச்சிப் பாதையை இலக்காகக் கொண்ட சீர்திருத்த நிகழ்ச்சி நிரலானது உண்மையான கூட்டு இலங்கை என்ற அடையாளத்திற்கு வழிவகுக்கும்.

1.2 2022 ஆம் ஆண்டின் பொருளாதார நிலைமைகள்

பொருளாதார நெருக்கடியிலிருந்து வெளிப்படும் அழுத்தங்களுக்கு மத்தியில், இலங்கையின் பொருளாதாரம் 2022 ஆம் ஆண்டில் ஆண்டு அடிப்படையில் 7.8 வீதத்தால் சுருங்கியது, இது சுதந்திரத்திற்குப் பிந்தைய வரலாற்றில் நாட்டில் பதிவுசெய்யப்பட்ட மிக உயர்ந்த பொருளாதார சுருக்கமாகும். அதன்படி, பொருளாதாரத்தின் மூன்று துறைகளும் சுருங்கின. உரம் பற்றாக்குறை, எரிபொருள் தட்டுப்பாடு, கால்நடைத் உணவுப் பற்றாக்குறை, மூலப்பொருட்களின் விலை உயர்வு ஆகியவற்றால் உருவான அரிசி மற்றும் காய் கறிகள், மீன்பிடி மற்றும் கால்நடை உற்பத்தியில் ஏற்பட்ட சரிவு காரணமாக விவசாயத் துறை 4.6 சதவீதத்தினால் சுருங்கியது. சுரங்கமறுத்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள், கட்டுமானம் மற்றும் உற்பத்தி ஆகியவற்றில் ஏற்பட்ட சுருக்கங்களால் கைத்தொழில்துறை 16.0 சதவீதத்தினால் பாரியதொரு சுருக்கத்தைச் சந்தித்தது. தடைபட்ட மின்சாரம், குறைவான அந்நியச் செலாவணி திரவத்தன்மை முக்கிய மூலப்பொருட்களின் பற்றாக்குறை, அதிக உள்ளீடு விலைகள் மற்றும் கொள்வனவு சக்தியின் சரிவால் ஏற்படும் குறைந்த தேவை ஆகியவை இதற்குக் காரணமாகும். மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், நிதிச் சேவைகள் மற்றும் ஆதன விற்பனை நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க சுருக்கங்களுடன் சேவைகள் துறையும் 2.0 சதவீதத்தினால் சுருங்கியது.

வரைபு 1.3 | காலாண்டிற்கான மொ.உ.உற்பத்தி வளர்ச்சி விகிதம்



மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியற் திணைக்களம்

எவ்வாறாயினும், ஆண்டின் இறுதியில், கிவ்ஆர் குறியீடு பொறிமுறையின் அறிமுகத்தின் கீழ் கேள்வியினை முகாமை செய்ததன் மூலம் எரிபொருள் கிடைக்காத நிலை மற்றும் செலவு-பிரதிபலிப்பு விலையை அறிமுகப்படுத்துதல் என்பவற்றினூடாக கடுமையான விநியோகக் கட்டுப்பாடுகளை அரசாங்கத்தால் தீர்க்க முடிந்தது. அவசர அத்தியாவசிய இறக்குமதித் தேவைகளுக்கு நிதியளிப்பதற்கான வழிகளை மறுபரிசீலனை செய்த சர்வதேச பங்காளிகளின் ஆதரவுடன் சமையல் எரிவாயுவின் தடையற்ற விநியோகமும் மீட்டெடுக்கப்பட்டது. கடன் பெறுபவருக்கான நீடிக்கப்பட்ட கடன்தொகை (லைன் ஒ.ப் கிரெடிட்) என பெறப்பட்ட குறிப்பிட்ட ஆதரவின் காரணமாக எரிபொருள் கிடைப்பது உறுதி செய்யப்பட்டது. மேலும், பல நாடுகளிலிருந்து மனிதாபிமான ஆதரவு கிடைத்தது. அன்னியச்

செலாவணி வெளியேறுவதைக் குறைக்க அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு முன்னுரிமை வழங்க எடுக்கப்பட்ட கொள்கைத் தலையீடுகளுடன், மூலப்பொருட்கள் போன்ற அத்தியாவசிய இறக்குமதிகளின் கிடைக்கும் தன்மையும் ஆண்டின் பிற்பகுதியில் மேம்படுத்தப்பட்டது.

2022 ஆம் ஆண்டில், மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கு இடையில் விலை நிலைகளின் கூர்மையான முடக்கத்துடன், பணவீக்கம் வரலாற்று ரீதியாக உயர் மட்டத்துக்கு அதிகரித்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொநுவிசு, 2013 =100) மூலம் அளவிடப்படும் பணவீக்கம் மார்ச் 2022 இல் 18.7 சதவீதத்திலிருந்து ஆண்டுக்கு ஆண்டு என்ற அடிப்படையில் 2022 செப்டம்பரில் 69.8 சதவீதமாக அதிகரித்துள்ளது. உயர் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக, கொள்கை வீதங்கள் 2022 ஏப்ரல் இல் 700 அடிப்படைப் புள்ளிகளாலும், ஜூலை 2022 இல் 100 அடிப்படைப் புள்ளிகளாலும், மேலும் 2023 மார்ச் இல் 100 அடிப்படைப் புள்ளிகளாலும் 15.50 - 16.50 சதவீதமாக அதிகரிக்கப்பட்டன. நாணய கொள்கை மற்றும் அரசிறை கொள்கை நடவடிக்கைகளின் கணிசமான இறுக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில், செப்டம்பர் 2022 முதல் ஆண்டின் இறுதி வரை பணவீக்க அளவுகள் குறைந்து 2022 டிசம்பரில் அது 57.2 சதவீதமாக பதிவாகியுள்ளது. 2023 மே மாத அளவில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொநுவிசு, 2021=100) மூலம் அளவிடப்படும் பணவீக்கம் 25.2 சதவீதமாகக் குறைந்தது.

வரைபு 1.4 | பணவீக்கத்தின் மாதாந்த இயக்கநிலை - கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்



மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியற் திணைக்களம்
குறிப்பு : கொ.நு.வி.சு. (2013 = 100) அடிப்படையில் 2020 சனவரி - 2023 சனவரி மற்றும் கொ.நு.வி.சு. (2021 = 100) அடிப்படையில் 2023 பெப்ரவரி மே

சென்மதி நிலுவை மீதான கணிசமான அழுத்தம், பயன்படுத்தக்கூடிய அந்நியச் செலாவணி இருப்புக்கள் கடுமையாகக் குறைவடைந்தமை மற்றும் நாணயத்தின் குறிப்பிடத்தக்க பெறுமதி இறக்கம் ஆகியவற்றுடன் 2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டுத் துறை கொந்தளிப்பானதொரு காலகட்டத்திற்கு உட்பட்டது. தற்காலிக இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் செலவு-பிரதிபலிப்பு பயன்பாட்டு விலை நிர்ணயம் ஆகியவற்றுடன் இணைந்த அரசிறை மற்றும் நாணய கொள்கைகளின் இறுக்கமான நடவடிக்கைகள் வர்த்தகப் பற்றாக்குறை சுருங்குவதற்கு வழிவகுத்ததுடன், மேம்படுத்தப்பட்ட பணம் அனுப்புதல் மற்றும் சுற்றுலாவின் வருவாய் ஆகியவற்றால் ஆதரிக்கப்படும் நடப்பு கணக்கு இருப்பு முன்னேற்றத்தை செயல்படுத்தியது.

வர்த்தகப் பற்றாக்குறையானது 2021 இல் பதிவான 8.1 பில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 2022 இல் 5.2 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு குறைந்துள்ளது. இலங்கையின் ஏற்றுமதி 2021 இல் 12.5 பில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 13.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாக 2022 இல் கணிசமான அளவு வளர்ச்சியடைந்தது. இது ஆடை போன்ற கைத்தொழில் பொருள் ஏற்றுமதியின் வளர்ச்சி மூலம் பெறப்பட்ட நன்மையாகும். எனினும், இறக்குமதியானது 2021 இல் 20.6 பில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 2022 இல் 18.3 பில்லியன் அமெரிக்க டொலராக குறைவடைந்துள்ளது. சுற்றுலாத்துறை மூலம் ஈட்டப்பட்ட வருமான அதிகரிப்பானது 2021 இல் 194,495 சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் 507 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்து 2022 இல் 719,978 சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் 1,136 மில்லியன் அமெரிக்க டொலராக, சேவை வர்த்தகத்தில் மிகை பதிவு செய்யப்பட்டது. இது 124.2 சதவீதம் அதிகரிப்பாகும். இருப்பினும், 2021 இல் 5,491 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த தொழிலாளர்களினால் அனுப்பப்பட்ட பணம் 2022 இல் 31.0 சதவீதத்தினால் சரிவடைந்து 3,789 மில்லியன் அமெரிக்க டொலர்களாக வீழ்ச்சியடைந்துள்ளது. இருப்பினும், 2022 இன் பிற்பகுதியிலும், 2023 இல் தொடர்ந்த பணப்பரிவர்த்தனையிலும் குறிப்பிடத்தக்க மீட்சி ஏற்பட்டது.

வரைபு 1.5 | வர்த்தகப் பற்றாக்குறையின் வளர்ச்சிகள்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

2022 டிசம்பர் முடிவில் இருந்த மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு அமெரிக்க டொலர் 2021 டிசம்பர் முடிவில் ஒப்பிடுகையில் 3.1 பில்லியனிலிருந்து (சீனாவின் மக்கள் வங்கியின் இடமாற்று கடன் வசதி உட்பட, சுமார் அமெரிக்க டொலர் 1.4 பில்லியனுக்கு சமம், இது பயன்பாட்டிற்கான நிபந்தனைகளுக்கு உட்பட்டது) 2022 டிசம்பர் அளவில் அமெரிக்க டொலர் 1.9 பில்லியன்களுக்கு கணிசமாகக் குறைக்கப்பட்டது. 2022 ஏப்ரல் 12 அன்று அரசாங்கத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட

வெளிநாட்டுக் கடனுக்கான சேவையை நிறுத்தி வைப்பது மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அத்தியாவசிய இறக்குமதிகளை எளிதாக்குவதற்கான நிகர அடிப்படையில் அந்நியச் செலாவணி திரவத்தன்மையினை வழங்குதல் ஆகியவை அறிவிக்கப்படுவதற்கு முன், 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வெளிநாட்டு நாணயக் கடன் சேவைப் பணம் செலுத்தியதே மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பின் சரிவுக்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

வரைபு 1.6 | மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இலங்கை ரூபாயின் வரலாற்றில் மிகப் பெரிய பெறுமதி இறக்கம் பதிவானது. 2022 ஆம் ஆண்டு முதல் பகுதியில் ஒரு அமெரிக்க டொலருக்கு ரூபா 200 - 203 என்ற வீச்சிலிருந்து 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாயின் பெறுமதி 41.4 வீதத்தால் பெறுமதி இறக்கம் செய்யப்பட்டது. இருப்பினும், 2022 மே மாதத்தில் வழிகாட்டல் குழுவைச் சுற்றி ரூபாய் ஸ்திரநிலை அறிமுகப்படுத்தப்பட்டு 2022 டிசம்பர் இறுதி வரை ஒரு சிறிய பெறுமதி இறக்கம் மட்டுமே பதிவு செய்யப்பட்டது. மேலும், இலங்கை ரூபாயின் குறிப்பிடத்தக்க பெறுமதி ஏற்றமும் பதிவு செய்யப்பட்டது. 2023 மார்ச் மாத தொடக்கத்தில், ஏற்றுமதி வருமான மாற்றத்தின் மூலம் கட்டாய அந்நியச் சொவணி விற்பனை தேவைப்பாடுகள் குறைந்தமை. வெளிநாட்டு தொழிலாளர்களின் பணப்பரிமாற்ற அதிகரிப்பு, சேவைத் துறைக்கு நிலையான வரவு, துறை முதலீடுகளுக்கான நிதிப் பாய்ச்சல்கள் மற்றும் சர்வதேச நாணய நிதிய ஏற்பாடுகள் நிறைவடைதுள்ளதால் சந்தை நம்பிக்கை அதிகரிப்பு ஆகியவற்றிலிருந்து கட்டாய அந்நிய செலாவணி விற்பனைத் தேவைகள் குறைக்கப்பட்டன.

வரைபு 1.7 | நாணய மாற்று விகித இயக்கங்கள்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

1.3 அரசிறை செயலாற்றுகை

2022 ஆம் ஆண்டின் முற்பகுதி அளவில் அரசாங்க நிதிச் செயல்பாடுகள் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டன. இருப்பினும், ஒரே வரியாக (ஒன் ஒப் டெக்ஸ்) விதிக்கப்பட்ட கூடுதல் கட்டண வரி விதிப்பு அடங்கலாக பல வரிக் கொள்கை நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம், நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி வீதம் ஜனவரி 2022 முதல் நடைமுறைக்கு வந்ததிலிருந்து 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக அதிகரித்தது. 2022 ஜூன் 1 முதல் நடைமுறைக்கு வந்த பொது பெறுமதி சேர் வரி வீதம் 8 முதல் 12 சதவீதமாக அதிகரித்தது. மேலும் 2022 செப்டம்பர் 1 முதல் இது 15 சதவீதம் வரை அதிகரித்தது, உயர் பணவீக்கம் மற்றும் பெறுமதி இறக்கம் ஆகியவற்றின் மூலம் வருவாய் மீதான தாக்கம் காரணமாக, 2022 ஒக்டோபர் 1 முதல் அமுலுக்கு வரும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி விதிப்பு, மொத்த வருவாய் மற்றும் மானியங்கள் 2021 ஆம் ஆண்டில் ரூபா 1,463.8 பில்லியன்களிலிருந்து 2022 இல் 37.5 சதவீதத்தால் ரூபா 2,012.6 பில்லியன்களுக்கு அதிகரித்தது. இந்த அதிகரிப்பானது வருமான வரிகளின் வருவாய் 76.8 சதவீதம் அதிகரித்துள்ளததாலாகும். இது 2021 உடன் ஒப்பிடும்போது அந்த ஆண்டில் பெறப்பட்ட கூடுதல் கட்டண வரி ரூபா 120.7 பில்லியன்கள் வருவாயிலிருந்து 2022 இல் ரூபா 534.0 பில்லியனகளான வருவாய் வரவுகள் பெற்றதன் விளைவினாலாகும். பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி வருவாய் 35.6 சதவீதத்தினால் ரூபா 876.0 பில்லியன்களுக்கு அதிகரித்தது, அதேசமயம் வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகள் ரூபா 341.1 பில்லியனகளாகும். இது 2021 இல் பதிவு செய்யப்பட்ட 349.8 பில்லியன்களுடன் ஒப்பிடும்போது 2.5 சதவீத சரிவைக் குறிக்கின்றது. வரி அல்லாத வருவாய் 2022 இல் ரூபா 228.0 பில்லியனகளாகும், அதே சமயம் ரூபா 33.4 பில்லியன்கள் மானியமாக பெறப்பட்டது.

வரைபு 1.8 | அரசாங்க வருமானம் (மொ.உ.உ %)



மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

வரைபு 1.9 | வரி வருமானத்தின் பிரதான கூறுகள் (மொ.உ.உ. %)



மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

வரைபு 1.10 | அரசாங்க செலவினத்தின் பிரதான கூறுகள் (மொ.உ.உ. %)



மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

அரசாங்க செலவினங்களும் 27.0 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. இது 2021 இல் பதிவாகிய ரூபா 3,521.7 பில்லியன்களுடன் ஒப்பிடுகையில் 2022 இல் ரூபா 4,472.6 பில்லியனாக காணப்பட்டது. செலவினத்தில் ஆண்டு சராசரி பணவீக்கம் கிட்டத்தட்ட 50 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளதால் உண்மையான அடிப்படையில் அரசாங்க செலவினம் கணிசமாகக் குறைக்கப்பட்டது. மீண்டெழும் செலவினம் 2021 இல் ரூபா 2,747.5 பில்லியனிலிருந்து 2022 இல் ரூபா 3,519.6 பில்லியனாக அதாவது 28.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இது முதன்மையாக வட்டி செலுத்துதல்கள் ரூபா 1,048.4 பில்லியனிலிருந்து 49.3 சதவீதத்தினால் ரூபா 1,565.2 பில்லியனாக அதிகரித்தது. மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களினால் எதிர்கொள்ளும் பொருளாதார இடர்களுக்காக வழங்கப்பட்ட நலன்புரி கொடுப்பனவுகள் அதிகரித்ததன் காரணமாக மானியங்கள் மற்றும் மாற்றல்கள் மீதான செலவினம் 2021 இல் ரூபா 684.5 பில்லியன்களிலிருந்து 2022 ல் ரூபா 815.4 பில்லியனாக 19.1 சதவீதத்தினால் அதிகரித்து. சம்பளம் மற்றும் ஊதியத்திற்கான செலவினம் 2021ல் ரூபா 845.7 பில்லியனிலிருந்து 2022 இல் 13.1 சதவீதத்தினால் ரூபா 956.2 பில்லியனாக அதிகரித்தது. அதிக பணவீக்கச் சூழலுக்கு மத்தியிலும்கூட, பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான செலவினம் 8.2 சதவீதம் மட்டுமே அதிகரித்து. இது 2021 இல் பதிவாகிய ரூபா 169.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 182.9 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடுமையான செலவினக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பிரதிபலிக்கிறது.

இருப்பினும், வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை பெயரளவாக 2021 இல் பதிவாகிய ரூபா 2,057.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இல் ரூபா 2,460.0 பில்லியனாக அதிகரித்துள்ளது. வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2021 இல் 11.7 சதவீதத்திலிருந்து 2022 இல் 10.2 சதவீதமாக குறைக்கப்பட்டது. மேலும், முதன்மைப் பற்றாக்குறை பெயரளவு அடிப்படையில் 2021 இல் ரூபா 1,009.5 பில்லியனிலிருந்து ரூபா 894.8 பில்லியனாக வீழ்ச்சியடைந்தது.

சர்வதேச நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டுக்கான முதன்மை பற்றாக்குறை இலக்கு ரூபா 954 பில்லியனாம் (மொ.உ.உ இல் 4.0 மாகும்), இருப்பினும், முதன்மை பற்றாக்குறை ரூபா 894.8 பில்லியன் (மொ.உ.உ இல் 3.7) 2022 இல் அறிமுகப்படுத்தப்பட்ட வருவாய் நடவடிக்கைகளால் எட்டப்பட்டது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பொது திறைசேரிக்கு தனது கடப்பாடுகளை ஒப்புக்கொண்ட காலத்திலேயே திருப்பிச் செலுத்த முடிந்திருந்தால், முதன்மை பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மேலும் 1.0 சதவீதத்தால் குறைக்கப்பட்டிருக்கும். 2022 ஆம் ஆண்டில் அரசிறை விளைவுகளின் அடிப்படையில் குறிப்பிடத்தக்க அதிசெயல்திறன் என்பது, அரசிறைத்துறையில் ஒழுக்கத்தை வளர்ப்பதில் கவனம் செலுத்திய கொள்கை நடவடிக்கைகளின் பிரதிபலிப்பாகும்.

வரைபு 1.11 | பிரதான அரசிறை மீதிகள் (மொ.உ.உ.%)



மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

அரசிறை விளைவுகளில் பொருள் முன்னேற்றம் இருந்தபோதிலும், வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பது மற்றும் திறைசேரி காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம் ஆகியவை 2022 இல் பெரும் சவாலாக உள்ளன. 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உலக மூலதனச் சந்தைகளுக்கான அணுகையினை நாடு இழந்ததால், வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையானது, பணவீக்க நாணய நிதியளித்தலின் குறிப்பிடத்தக்க கூறு உட்பட உள்நாட்டு நிதிமூலங்களால் நிதியளிக்கப்பட்டது. அரசாங்கம் இப்போது நாணய நிதியுதவியை படிப்படியாக அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது, இதன் விளைவாக வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை உள்நாட்டுச் சந்தைக் கடன்கள் மூலம் நிதியளிக்க வேண்டும், இது திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்கள் சந்தைகளின் வரையறுக்கப்பட்ட இயல்திறனை நீடிக்க வேண்டும். பொதுத்துறை ஊதியங்கள், ஓய்வூதியங்கள், வட்டிச் செலவுகள் மற்றும் நலன்புரிக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட கட்டாயத் மீண்டெழும் செலவினங்கள் அரசாங்க வருவாய்களினை கணிசமான அளவில் விஞ்சியுள்ளன. எனவே, வெளிநாட்டு கடன்கள், குறைக்கப்பட்ட பண நிதியுதவி மற்றும் நிலையற்ற உள்நாட்டு திறைசேரி ஏலங்கள் இல்லாத நிலையில், திறைசேரியின் காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம் விதிவிலக்கான சவாலாக உள்ளது. காசுப்பாய்ச்சல் அத்தியாவசிய செலவினங்களுக்காக மட்டுமே நிதியை வெளியிடுவதில் தீவிர விடாமுயற்சியின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது, அதே நேரத்தில் மேலும் நிலுவைத் தொகையை குறைக்கவும் பயன்படுத்தப்படுகிறது. சமீபத்திய மாதங்களில் குறைந்த அளவிலான பண நிதியளிப்பு நிகழ்வுகள் நிலுவையிலுள்ள கடன் சேவை கடமைகளை பூர்த்தி செய்ய மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. வெளிநாட்டு நிதியளிப்பு வழிகள் படிப்படியாக மீட்டெடுக்கப்படும் போதும், கடன் மறுசீரமைப்பு முடிந்ததும், வட்டிச் செலவுகள் குறைவடைந்ததுடன், திறைசேரி பாதுகாப்பு முறிகள் ஏலங்களின் வழக்கமான சந்தா பராமரிக்கப்படும்போதும் திறைசேரி காசுப்பாய்ச்சல் முகாமைத்துவத்திலுள்ள சிரமங்கள் இலகுவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வரைபு 1.12 | நிலுவையிலுள்ள மத்திய அரசின் கடன் (மொ.உ.உ. %)



மூலம் : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.1 | அரசாங்க அரசிறைத் தொழிற்பாடுகள் (அ)

	(ரூபா.பில்)		(மொ.உ.உ. %)	
	2021 உண்மையான	2022 தற்காலிக	2021 தற்காலிக	2022 மதிப்பிட்ட
வருமானங்கள், நன்கொடை	**1,464**	**2,013**	**8.3**	**8.3**
வருமானம்	1,457	1,979	8.3	8.2
வரி வருமானம்	1,298	1,751	7.4	7.3
வருமான வரி	302	534	1.7	2.2
பொருட்கள் சேவைகள் மீதான வரி	646	876	3.7	3.6
வெளிநாட்டு வர்த்தக வரிகள்	350	341	2.0	1.4
வரியல்லா வருமானம்	159	228	0.9	0.9
கொடைகள்	7	33	0.04	0.1
செலவினம்	**3,522**	**4,473**	**20.0**	**18.5**
மீண்டெழும் செலவினம்	2,748	3,520	15.6	14.6
சம்பளங்கள், கூலிகள்	846	956	4.8	4.0
பொருட்கள், சேவைகள்	169	183	1.0	0.8
வட்டி	1,048	1,565	6.0	6.5
மானியங்கள், மாற்றல்கள்	685	815	3.9	3.4
மூலதனச் செலவினம், தேறிய பெறுகைகள்	774	953	4.4	3.9
பொது முதலீடுகள்	790	1,014	4.5	4.2
ஏனையவை	-15	61	-0.1	-0.3
நடைமுறைக் கணக்கு மீதி	**-1,290**	**-1,540**	**-7.3**	**-6.4**
முதன்மை மீதி	**-1,010**	**-895**	**-5.7**	**-3.7**
ஒட்டுமொத்த அரசிறை மீதி (வரவுசெலவு திட்டப் பற்றாக்குறை)	**-2,058**	**-2,460**	**-11.7**	**-10.2**
மொத்த நிதியளிப்பு	**2,058**	**2,460**	**11.7**	**10.2**
வெளிநாட்டு நிதியளிப்பு (தேறிய)	-14	425	-0.1	1.8
உள்நாட்டு நிதியளிப்பு (தேறிய)	2,072	2,035	11.8	8.4

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) அரசாங்க அரசிறை தொழில்களின் பொருளாதார வகுப்பாக்கத்தின் அடிப்படையில்

1.4 2022 ஆம் ஆண்டில் சீர்திருத்த முயற்சிகள்

2022 ஆம் ஆண்டு ஒரு திருப்புமுனையான ஆண்டாகும். இது பொருளாதாரத்திலுள்ள கட்டமைப்பு பலவீனங்கள் மற்றும் கொள்கை பொருத்தமின்மைகளை அங்கீகரிக்கவும், பொருளாதாரத்தின் அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய ஒரு விரிவான சீர்திருத்த நிகழ்ச்சி நிரலை மேற்கொள்ளவும் அரசாங்கத்திற்கு உத்வேகத்தை அளித்தது.

அரசிறை பலவீனங்கள் இலங்கையின் பேரின பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு ஒரு முக்கிய உந்துதலாக இருந்து வருகிறது. இதனால் அரசாங்கத்தின் பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சி நிரலில் அரசிறை சீர்திருத்தங்கள் முக்கியமாக இடம்பெற்றுள்ளன. அதன்படி, 2022 ஜூன் முதல் வருவாய் அடிப்படையிலான அரசிறை ஒருங்கிணைப்பில் கவனம் செலுத்தும் விரிவான சீர்திருத்தங்களை அரசாங்கம் மேற்கொண்டது. 2022 ஜூன் 1 முதல் அமுலாகும் வகையில் பெறுமதி சேர் வரியின் வீதத்தினை 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயர்த்துதலும், மேலும் 2022 செப்டம்பர் 1 முதல் அமுலாகும் வகையில் 15 சதவீதம் வரை உயர்துதலும் இதில் உள்ளடங்கும்.

அத்துடன், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்திற்கு 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அங்கீகரிக்கப்பட்ட திருத்தங்களுடன், வருமான வரி மற்றும் பெறுமதிசேர் வரி தொடர்பான பல சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்துள்ளன. தனிநபர் வருமான கட்டமைப்பானது, வரி தளத்தை விரிவுபடுத்துவதன் மூலம் இது மேலும் முன்னேற்றகரமானதாக மாற்றப்பட்டுள்ளது. இங்கு குறைக்கப்பட்ட நிவாரணம் 2023 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வரும் வண்ணம் ரூபா 3 மில்லியன்களிலிருந்து ரூபா 1.2 மில்லியன்கள் ஆகும். அத்துடன், வரி வீதங்கள் ஆண்டொன்றிற்கு ஒவ்வொரு 500,000 ரூபாவுக்கும் 6 சதவீத புள்ளிகள் தொடக்கம் கூடுதல் மட்டம் 36 சதவீதம் வரை அதிகரிக்கும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளன. இவ்வரி வீதம் முந்தைய கட்டமைப்பில் ஒவ்வொரு ரூபா 3 மில்லியனுக்கும் 6 சதவீத புள்ளிகள் தெடக்கம் கூடுதல் மட்டம் 18 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டிருந்துது. 2022 ஒக்டோபர் 1 முதல் அமுலுக்கு வரும் வகையில் அனைத்து துறை சார்ந்த விலக்களிப்புகள் மற்றும் சலுகை வீதங்கள் நீக்கப்பட்டு 30 சதவீத ஒருங்கிணைந்த கூட்டு வருமான வரி வீதம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2022 ஒக்டோபர் 1 முதல் அமுலுக்கு வரும் வகையில் பெறுமதி சேர் வரி ஆரம்பநிலை குறைத்தலுடன் பெறுமதி சேர் வரி தொடர்பிலான வருமான அடிப்படையானது ஆண்டுக்கு ரூபா 300 மில்லியனிலிருந்து ரூபா 80 மிலியனுக்கு விரிவுபடுத்தபபட்டது.

இந்த அறிக்கையை தொகுக்கும் போது நடைமுறைப்படுத்தப்பட்ட மேற்கூறிய சீர்திருத்தங்களைத் தவிர, மேலும் வரி சீர்திருத்தங்கள் 2023 வரவு செலவு திட்டத்தில் அறிவித்த பிரகாரம் பெறுமதிசேர் வரி தொடர்பான ஆக்கப்பூர்வமற்ற வரி விலக்குகளை அகற்றுதல், உப கட்டணங்களை படிப்படியாகக் குறைத்தல் மற்றும் வரி நிர்வாகத்தை வலுப்படுத்துதல் ஆகியவை குறித்து திட்டமிடப்பட்டுள்ளன.

வருவாயை மேம்படுத்தும் நடவடிக்கைகளுடன், அரச நிறுவனங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் அத்தியாவசியமற்ற ஆட்சேர்ப்புகளை நிறுத்தி, முன்னுரிமையற்ற செலவினங்களை ஒத்திவைப்பதன் மூலம் செலவினங்களை நியாயப்படுத்த குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இது தொடர்பான பல சுற்றறிக்கைகள் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் செலவினங்களை குறைப்பதற்கான வழிகளில் செலவின முகவர் நிறுவனங்களுக்கு வழிகாட்டும் வகையில் வெளியிடப்பட்டது. எவ்வாறாயினும், குறிப்பாக சுகாதாரம், கல்வி மற்றும் சமூகப் பாதுகாப்பு தொடர்பான முக்கிய செலவுத் தேவைகள் அரசாங்கத்தால் குறைக்கப்படவில்லை.

நிதித் துறையில் குறிப்பிடத்தக்க சீர்திருத்தங்களுடன், விலை ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும், வெளிப்புறக் கொள்கை இடையகங்களை வலுப்படுத்தவும், பேரின பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்க அத்தியாவசியமான சட்டமன்ற மற்றும் நிறுவன சீர்திருத்தங்களைத் தொடங்கவும் கணிசமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொள்கை வட்டி வீத உயர்வுகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட தகவல் தொடர்பாடல் முயற்சிகள் பணவீக்க மீள்-முனை எதிர்பார்ப்புகளை கணிசமான அளவிற்கு மீண்டும் நிலைநிறுத்த உதவியதோடு பணவீக்கம் இப்போது தெளிவான கீழ்நோக்கிய பாதையில் உள்ளது. இதன் விளைவாக மேம்பட்ட நம்பிக்கையானது வெளிநாட்டு நாணய வரவுகளை முறையான வழிமுறைகளுக்கு மாற்றவும் வங்கி அமைப்பில் அந்நிய செலாவணி திரவத்தன்மையினை மேம்படுத்தவும் உதவியது. நீண்ட கால தாமதமான எரிசக்தி விலை நிர்ணய சீர்திருத்தம் காரணமாக அந்நியச் செலாவணி வெளிச்செல்வதை குறைக்கவும் பொருளாதாரத்தில் ஒட்டுமொத்த கேள்வி முகாமைத்துவ முயற்சிகள் அதிகரிப்பதற்கும் பங்களிப்பு செய்தன. அதே நேரத்தில் தொடர்புடைய நிறுவனங்களின் நிதி நிலையை வலுப்படுத்த உதவியது. மேலும், இலங்கையை பாதுகாப்பான மற்றும் கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலமாக மேம்படுத்தவும் அதன் மூலம் நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அந்நியச் செலாவணி கையிருப்புகளை மீட்டெடுக்க அனுமதிக்கும் வகையில், சுற்றுலா, பண மற்றும் நிதிக் கொள்கைக் கலவையுடன் தொடர்புடைய அதிக கடன் அல்லாத வரவுகள், நடப்புக் கணக்கு மீதியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது.

கட்டம் 1.2 | இலங்கை 2023 இல் பொருளாதார மீட்சிப் பாதையில் பயணிக்கின்றது

இலங்கை, 2022 இல் எதிர்கொண்ட மோசமான பொருளாதார நிலைமையுடன் ஒப்பிடுகையில் வலுவான அத்துடன் படிப்படியான பொருளாதார மீட்சியினை அவதானிக்கின்றது. 2022 இல் உண்மைப் பொருளாதாரம் 7.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது, 8.7 சதவீதம் கொண்ட எதிர்பார்த்த சுருக்கத்தை விட இது குறைவானதாகும். 2023 இல் பொருளாதாரம் மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுவதாயினும், உள்நாட்டு மற்றும் உலகளாவிய அழுத்தங்களைப் பிரதிபலித்து ஏறத்தாழ 2.0 தொடக்கம் 3.0 சதவீதம் வரை சுருக்கமடையும். 2023 இன் முதல் நான்கு மாதங்களில் உண்மையான பொருளாதாரம் படிப்படியாக வளர்ச்சியடைவதுடன் ஒதுக்குகள், பணவீக்கம் மற்றும் செலாவணி வீதம் எனபவற்றை தீவிரப்படுத்திய அழுத்தங்கள் குறைவடைந்துள்ளன. சுற்றுலா, தொழிலாளர் பணவனுப்பல்கள், இறக்குமதிச் சுருக்கம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல்களுக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் ஆகியன வெளிநாட்டுத் துறையை வலுப்படுத்த உதவும். மேலும், இறுக்கமாக்கப்பட்ட நாணய நிலையானது இடம்பெறுகின்ற பணவீக்க வீழ்ச்சிச் செயன்முறையை நிலைநிறுத்தும். ஏனையவற்றுக்கு மத்தியில், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றில் இருந்து எதிர்பார்க்கப்படும் நிதி உதவி அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தொகுதி என்பன வரவுசெலவுத் திட்டம் மீதான அழுத்தத்திலிருந்து பாதுகாக்கின்ற அதேவேளை ஒதுக்கு நிலையினை வலிமைப்படுத்தும்.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் முதன்மைப் பணவீக்கம் (கொநுவிசு 2013=100), 2021 டிசம்பரில் 12.1 சதவீதத்திலிருந்து 2022 செப்டம்பரில் 68.8 சதவீதமாக திடீர் உயர்வடைந்து, 2022 டிசம்பரிலிருந்து தொடங்கி அப்போதிருந்த 57.2 சதவீதத்திலிருந்து மிதமான வீழ்ச்சியடைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்பட்டவாறு, 2023 காலப்பகுதியில் பணவீக்க வீழ்ச்சி தொடர்ந்து சென்று 2023 மே மாதத்தில் 25.2 சதவீதமாக சடுதியாக வேகங்குறைந்தது.

2023 இன் முதல் காலாண்டில் வெளிநாட்டு துறை, மேம்படுதல் சமிக்ஞைகளை காண்பித்தது. வணிகப் பொருள் வர்த்தக பற்றாக்குறையானது 2022 இன் முதல் காலாண்டின் ஐ.அ.டொலர் 2.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 இன் முதல் காலாண்டில் 0.9 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2022 இல் பதிவாகிய ஐ.அ.டொலர் 3.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 இன் முதல் காலாண்டில் ஐ.அ.டொலர் 3.0 பில்லியனாக 7.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதிகள் மீதான செலவினமும் 2022 இன் முதல் காலாண்டில் பதிவாகிய ஐ.அ.டொலர் 5.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 இன் முதல் காலாண்டில் ஐ.அ.டொலர் 3.9 பில்லியனாக 31.7 சதவீதத்தினால் கணிசமாக குறைவடைந்தது. ஏற்றுமதி, இயந்திரங்கள், மற்றும் உபகரணங்கள், புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள், கட்டிடப் பொருட்கள், அடிப்படை உலோகங்கள் மற்றும் தானியங்கள் அத்துடன் அரைக்கும் ஆலை கைத்தொழில் உற்பத்திகள் என்பவற்றின் இறக்குமதிகளில் வீழ்ச்சி இதற்கு பிரதான காரணமாக அமைந்தது. இதற்கு மேலதிகமாக, சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் 2022 இல் அதேகாலப்பகுதியில் பதிவாகிய ஐ.அ.டொலர் 591.0 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 சனவரி - எப்பிரல் காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 696.3 மில்லியனாக 17.8 சதவீதத்தால் அதிகரித்தது. மேலும், தொழிலாளர் பண அனுப்பல்களில் இருந்தான உட்பாய்ச்சலகள் 2022 இன் நேரொத்த காலப்பகுதியில் பதிவாகிய ஐ.அ.டொலர் 1,031.5 மில்லயனுடன் ஒப்பிடுகையில் 2023 சனவரி-எப்பிரல் காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,867.2 மில்லியனாக 81.0 சதவீதத்தால் கணிசமாக அதிகரித்தது.

வரைபடம் 1 | வணிகப் பொருள் வர்த்தக மீதி 2023 கா.1



மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2 | முக்கிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2023 சன-ஏப்ரல்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

கட்டம் 1.2 | இலங்கை 2023 இல் பொருளாதார மீட்சிப் பாதையில் பயணிக்கின்றது தொடர்...

2022 யூன் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட தீவிரமான வருமான அதிகரிப்பு வழிமுறைகள் மூலம் அரசாங்க வருவாயானது 2022 இன் முதல் காலாண்டின் ரூபா 446.9 பில்லியனிலிருந்து 2023 முதலாவது காலாண்டில் ரூபா 635.3 பில்லியனாக 42.1 சதவீதத்தால் அதிகரித்தது. வருமான வரிகளிலிருந்தான வருவாய் 2022 இன் அதே காலப்பகுதியில் பதிவாகிய ரூபா 82.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 இன் முதல் காலாண்டில் 161.8 பில்லியனாக ஏறத்தாழ இரட்டிப்படைந்தது. பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகளிலிருந்தான வருவாயும் ரூபா 163.7 பில்லியன் கொண்ட பெறுமதி சேர் வரி வருவாயில் அதிகரிப்பு அத்துடன் ரூபா 51.2 பில்லியன் தொகையுடைய புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சமூக பாதுகாப்ப பங்களிப்பு அறவீடு கிடைப்பனவு என்பவற்றிலிருந்து நன்மையடைந்து ரூபா 195.2 பில்லியனிலிருந்து ரூபா 325.8 பில்லியனாக 66.9 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும், மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி தீர்வை, செஸ் அறவீடு மற்றும் சிறப்பு பண்ட தீர்வை என்பவற்றிலிருந்தான வருவாய் இறக்குமதி தடைகளின் காரணமாக 2023 இன் முதல் காலாண்டில் குறைவடைந்தது.

வரைபடம் 3 | வருமானச் செயலாற்றுகை ஒப்பீடு 2022 -2023



மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

வரைபடம் 4 | அரசாங்க அரசிறை தொழிற்பாடுகள்



மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

எவ்வாறாயினும், மொத்தச் செலவினமும் 2023 இன் முதல் காலாண்டில் ரூபா 1,260.0 பில்லியனாக அதிகரித்தது. இது பிரதானமாக ரூபா 379.0 பில்லியனிலிருந்து ரூபா 673.1 பில்லியனாக 77.6 சதவீதத்தால் வட்டிக் கொடுப்பனகளின் அதிகரிப்பினால் தூண்டப்பட்டு 2022 இன் முதல் காலாண்டின் ரூபா 931.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 35.3 சதவீதத்தால் அதிகரிப்பினை குறிக்கின்றது. பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான செலவினமும் ரூபா 36.9 பில்லியனிலிருந்து ரூபா 53.0 பில்லியனாக 43.6 சதவீதத்தால் அதிகரித்தது. மேம்படுத்தப்பட்ட சமூகபாதுகாப்பு வலை நிகழ்ச்சிதிட்டத்துடன் உதவுதொகைகள் மற்றும் மாற்றல்கள் மீதான செலவினம் 168.6 பில்லியனிலிருந்து 185.8 பில்லியனாக 10.2 சதவீதத்தால் அதிகரித்து. எனினும், சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் புதிய ஆட்சேர்ப்புகள் இடைநிறுத்தப்பட்டமை மற்றும் அதிகரித்த ஓய்வுபெறுதல்கள் காரணமாக 236.5 பில்லியனிலிருந்து ரூபா 228.3 பில்லியனாக 3.5 சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்தது. 3 மாதங்களுக்க மேற்பட்ட கட்டண பட்டியலுக்கான செலவின நிலுவைகள் பூச்சியமாகி சமுர்த்திக்கான சமூக செலவிடல், முதியோருக்கான உதவியின் ஏனைய வகை செலவினங்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான கொடுப்பனவுகள், சிறுநீரக நோயாளிகளுக்கான நிதியியல் ஆதரவு என்பன 2023 இன் முதல் காலாண்டில் ஏறத்தாள 35 மில்லியனுக்கு அதிகரித்து.

எரிபொருள் மீதான செலவுப் பிரதிபலிப்பு விளைகளிலிருந்து நன்மையடைந்து இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2023 இன் முதலாவது காலாண்டில் ரூபா 29.7 பில்லியன் கொண்ட இலாபத்தை பதிவுசெய்தது. எனினும், செலவுப் பிரதிபலிப்பு விலைப் பொறிமுறை 2023 பெப்பரவரி நடுப்பகுதியிலே நடைமுறைப்படுத்தப்பட்மையினால் இலங்கை மின்சார சபை 2023 இன் முதல் காலாண்டின் ரூபா 34.4 பில்லியன் கொண்ட நட்டத்தினை பதிவுசெய்தது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சாரசபை, ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ், வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றின் ஐந்தொகைகளை வலுப்படுத்தவதற்காக அனைத்தையும் உள்ளடக்கிய உபாயம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

முதலாந்தர செலவினம் (வட்டிக் கொடுப்பனவுகள் நீங்கலாக மொத்தச் செலவினம்) 6.3 சதவீதத்தால் சிறிதளவு அதிகரிப்புடன் இணைந்து அதிகரிக்கப்பட்ட வருவாய் சேகரிப்பின் மூலம் ரூபா 56 பில்லியன் கொண்ட நிர்ணயிக்கப்பட்ட முதலாந்தர பற்றாக்குறை இலக்கை விட ரூபா 48.3 பில்லியன் கொண்ட முதலாந்தர மிகையுடன் அரசாங்கத்தின் முதலாந்தர மீதியின் தளம் மீது சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிர்ணயிக்கப்பட்ட குறிகாட்டி இலக்கினை விட அரசாங்கம் மிகையாக செயலாற்றியிருந்தது. எனினும், திட்டமிடப்பட்ட மற்றும் புதிய வருவாய் வழிமுறைகளை துரிதமாக நடைமறைப்படுத்தவதுடன் இணைந்த கண்டிப்பான அமுலாக்கள் வழிமுறைகள் உள்ளடங்கலாக வரி நிருவாகத்தை வலிமைப்படுத்தலுடன் ஒன்றிணைந்து வருவாய் மேம்படுத்தல் வழிமறைகள் வருடாந்த வருவாய் இலக்கினை அடைவதற்கு முன்நிபந்தனைகளாக காணப்படுகின்றன.

1.5 நடுத்தரக் காலத்தில் அரசிறை உபாயம்

நடுத்தரக் கால நிதிக் கண்ணோட்டம் பின்வருவனவற்றைச் சுற்றி தொகுக்கப்பட்டுள்ளது

- 2026 மற்றும் அதற்குப் பிறகு 15 சதவீதத்திற்கும் அதிகமான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசாங்க வருமானத்தை அடைதல்.
- அரசாங்க செலவினங்களைக் குறைத்து மீண்டுடெழும் செலவினத்தினை மொ. உ. உற்பத்தியில் ஏறக்குறைய 15 சதவீதமாகப் பேணுதல்.
- 2024 மற்றும் அதற்குப் பிறகு மொ. உ. உற்பத்தியில் 4 சதவீதத்திற்கும் மேலாக பொது முதலீட்டை படிப்படியாக அதிகரித்து அதனைப் பேணுதல்.
- 2025 மற்றும் அதற்குப் பிறகு மொ. உ. உற்பத்தியில் வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையை 5 சதவீதத்திற்கும் குறைவாக படிப்படியாகக் பேணுதல் மற்றும்
- 2024 இல் 0.8 சதவீதத்திற்கும் மேலான ஆரம்ப மிகையினை அடைவதுடன் 2025 மற்றும் அதற்குப் பிறகு 2.3 சதவீதத்திற்கு மேல் ஆரம்ப மிகையினைப் பேணுதல்.

அட்டவணை 1.2 I நடுத்தரகால அரசிறை வேலைச் சட்டகம் 2023 - 2027

மொ.உ.உ. %

குறிகாட்டிகள்	2022	மதிப்பிடப்பட்ட	தற்காலிக			
	தற்காலிக	2023	2024	2025	2026	2027
மொத்த வருமானம் மற்றும் மானியங்கள்	**8.3**	**11.3**	**13.3**	**14.9**	**15.0**	**15.1**
மொத்த வருமானம்	**8.2**	**11.3**	**13.3**	**14.9**	**15.0**	**15.1**
வரி வருமானம்	**7.3**	**10.4**	**12.4**	**14.0**	**14.1**	**14.2**
வரி வருமானம்	2.2	3.0	3.0	3.0	3.0	3.0
பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள்	3.6	5.9	7.3	8.8	8.9	8.9
வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகள்	1.4	1.5	2.0	2.1	2.2	2.2
வரியல்லாத வருமானம்	**0.9**	**0.9**	**0.9**	**0.9**	**0.9**	**1.0**
மானியங்கள்	**0.14**	**0.02**	**0.00**	**0.00**	**0.00**	**0.00**
மொத்த செலவினம்	**18.5**	**19.3**	**19.7**	**19.9**	**19.9**	**19.6**
மீண்டெழும் செலவினம்	**14.6**	**15.3**	**15.3**	**15.5**	**15.4**	**15.1**
சம்பளங்கள் மற்றும் வேதனங்கள்	4.0	3.3	3.6	3.6	3.6	3.6
பொருட்கள் மற்றும் சேவைகள்	0.8	1.0	1.0	1.0	1.0	1.0
வட்டி	6.5	7.3	7.2	7.3	7.1	6.8
மானியங்கள் மற்றும் இடமாற்றங்கள்	3.4	3.7	3.6	3.6	3.7	3.7
மூலதனச் செலவு மற்றும் தேறிய கடன்	**3.9**	**4.0**	**4.3**	**4.4**	**4.4**	**4.5**
பொது முதலீடுகள்	4.2	4.0	4.3	4.4	4.4	4.5
நடைமுறைக் கணக்கு மீதி	**-6.4**	**-4.0**	**-2.0**	**-0.6**	**-0.4**	**0.0**
முதன்மை மீதி	**-3.7**	**-0.7**	**0.8**	**2.3**	**2.3**	**2.3**
வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை	**-10.2**	**-8.0**	**-6.4**	**-5.0**	**-4.8**	**-4.5**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் சர்வதேச நாணய நிதிய நிகழ்ச்சித்திட்ட இலக்குகள்

இந்த நடுத்தர கால பேரிண நிதிக் கட்டமைப்பானது, சர்வசே நாணய நிதிய - நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழ் நிதி இலக்குகள், ஏற்கனவே செயற்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க வருமான மேம்பாடு மற்றும் செலவு பகுத்தறிவு நடவடிக்கைகள் மற்றும் எதிர்வரும் ஆண்டுகளில் செயற்படுத்தப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் ஆகியவற்றை கணக்கில் எடுத்துள்ளது.

வரி மறுசீரமைப்புகள்

எதிர்வரும் ஆண்டுகளில் முக்கிய வரி சீர்திருத்தங்கள் செயற்படுத்தப்படும்:-

- 2024 சனவரி 1 திகதியில் மூலோபாய அபிவிருத்தித் கருத்திட்டங்கள் மற்றும் முதலீட்டுச் சபை சட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட வரிச் சலுகைகளால் ஏற்படும் நேரடிச் செலவுகளை மதிப்பீடு செய்து வெளியிடத் தொடங்குதல்.
- வருமான இடைவெளியை நிரப்புவதற்காக, 2023 இல் பெரும் சுமையாக அமையவிருக்கின்ற பெரும்பாலான வரி விலக்களிப்புகளை 2024 சனவரி 1 இல் இரத்து செய்வதன் மூலம் பெறுமதி சேர் வரி முறையை மறுசீரமைத்தல்.
- செல்லுபடியாகும் பெறுமதி சேர் வரி மீள்கொடுப்பனவுகளை கணிசமாளவு விரைவுபடுத்தவும் 2024 சனவரி 1 இல் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறையை ஒழிக்கவும் நடவடிக்கை எடுத்தல்.
- 2024 சனவரி 1 இற்குள் பணவீக்கத்திற்கு மது வரி தானியங்கி குறியீட்டை அறிமுகப்படுத்துதல்.

- 2025 சனவரி 1 இல் தேவைப்படும் தொழில்நுட்ப உதவியைக் கோருதல், அரசிறை பரிமாற்றங்கள் தொடர்பான மீளாய்வு உட்பட நாடு தழுவிய உண்மையான சொத்து வரியை அறிமுகப்படுத்துதல்.

- 2025 சனவரி 1 இல் வரியல்லாத கொடுப்பனவு மற்றும் குறைந்தபட்ச விலக்களிப்புகளுடன் கொடை மற்றும் வாரிசுரித்து வரியை அறிமுகப்படுத்துதல்.

வரி நிர்வாக சீர்திருத்தங்கள்

வருமானத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகளுக்கு துணையாக வரி நிர்வாகத்தை மேலும் வலுப்படுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

2023 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டத்தின் கீழ், நிறுவனமல்லாத வரி செலுத்துவோருக்கு கட்டாய இலத்திரனியல் வரிக் கோவையினை சமர்ப்பித்தல், பணத்தைத் திரும்பப்பெறுதல் செயல்முறையை ஒழுங்குபடுத்துதல், பணப் பரிவர்த்தனைகளை ஊக்கப்படுத்துதல் மற்றும் வரி செலுத்துவோர் பரிவர்த்தனைத் தகவலை தனிப்பட்ட அளவில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்க முக்கிய நிறுவனங்களை கட்டாயப்படுத்துதல் என்பவற்றுக்கு சட்ட ஏற்பாடுகளுடன் வரி நிர்வாகத்தை மேம்படுத்த குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும், வரி விதிப்பு முறையை எளிமைப்படுத்தல், டிஜிட்டல் மயமாக்கல், வரி இணக்கப்பாட்டினை அதிகரித்தல், வரி வருமான கசிவைக் குறைத்தல் போன்ற வரி நிர்வாகத்தை வலுப்படுத்தும் பல சீர்திருத்தங்கள் எதிர்வரும் ஆண்டுகளில் செயற்படுத்தப்பட உள்ளன.

- 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வரிக் கோப்பைத் திறத்தல்.

- முக்கிய வருமான நிறுவனங்களில் டிஜிட்டல் மயமாக்கல் முயற்சிகளை வலுப்படுத்துதல் மற்றும் கண்டறியப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்தல்.

- உப தீர்வைகள் / அறவீடுகளை படிப்படியாக இல்லாதொழித்தல்.

    - 2023 சனவரி 1 முதல் ஆரம்பமாகும் மூன்று ஆண்டுகளில் படிப்படியாக செஸ் வரியை நீக்குதல். 2023 மார்ச் 29 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் செஸ் வரி விதிக்கத்தக்க அனைத்துப் பொருட்களுக்குமான செஸ் வரி விகிதங்களை 25 -30 சதவீதமாகக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

    - துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டினை ஐந்து ஆண்டுகளில் படிப்படியாக நீக்குதல். 2023 ஏப்ரல் 4 முதல் நடைமுறைக்கு வரும் 1,631 எச்எஸ் குறியீடுகளுக்கு ஏற்புடையதான தீர்வை விதிக்கத்தக்க பொருட்களுக்கு இந்த அறவீட்டினை நீக்குவதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

    - 2023 மார்ச் 29 முதல் நடைமுறைக்கு வரும் உப தீர்வைகள்/அறவீடுகளை படிப்படியாக நீக்குகின்ற உத்தேச திட்டத்திற்கு இடமளிப்பதற்கு சுங்க இறக்குமதித் தீர்வையின் தற்போதைய விகிதங்களை 0%; 10% மற்றும் 15% இலிருந்து 0%; 15% மற்றும் 20% ஆக மேல்நோக்கி திருத்துதல்.

- வருமான அறவீட்டு நிறுவனங்களுக்கு பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளை அறிமுகப்படுத்துதல்.

- வரி செலுத்துவோரின் உரிமைகள் மற்றும் கடமைகளை உள்ளடக்கிய ஒரு சாசனத்தை அறிமுகப்படுத்துதல்.

- வரி செலுத்துவோரின் குறைகளைத் தீர்க்க குறைகேள் அதிகாரி ஒருவரினை நியமித்தல்.

- மதுவரி மற்றும் சுங்கத் திணைக்களங்களில் வரி அறவீட்டுத்திறனை மேம்படுத்துவதற்கான சட்டத் திருத்தங்களை அறிமுகம் செய்தல்.

- வரிக் கணக்காய்வு மற்றும் சரிபார்த்தல் நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தல்.

அரசுடமை தொழில்முயற்சிகளில் சீர்திருத்தங்கள்

2022 இல் இலங்கையின் பொது நிதித்துறையில் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களால் சுமத்தப்படும் நிகர சுமையைக் குறைக்க குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. முக்கிய நிறுவனங்களின் மறுசீரமைப்பை முன்னெடுப்பதற்கு தனியான மறுசீரமைப்பு அலகு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, சர்வதேச நாணய நிதிய நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழ் எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்கான செலவுக்கேற்ற விலை பொறிமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அங்கு எரிபொருளுக்கு மாத அடிப்படையிலும் மின்சாரத்திற்கு அரை ஆண்டு அடிப்படையிலும் விலைகள் தொடர்ந்து சரிசெய்யப்படுகின்றன.

மேலும், அரச நிறுவனங்களின் நிர்வாகத்தை வலுப்படுத்தவும், அவற்றை நிதி ரீதியாக சாத்தியமானதாக மாற்றவும் குறிப்பிடத்தக்க கட்டமைப்பு சீர்திருத்தங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை மின்சார சபை,

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றின் ஐந்தொகையினை மறுசீரமைத்தல், புதிய அரச நிறுவனங்கள் கடன் வாங்குவது வணிக ரீதியாக சாத்தியமான நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பதற்கு (உதாரணமாக, முதலீட்டுக் கருத்திட்டங்கள்) மட்டுமே என்பதை உறுதிப்படுத்தல், அரசாங்க நிதி மாற்றல்கள் மூலம் மானியங்கள் மற்றும் பிற அரை-நிதி நடவடிக்கைகளுக்கு நிதியளித்தல், வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படும் வருமானம் 20 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்படும் நிதியல்லாத அரச நிறுவனங்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் புதிய கடன் வழங்காதிருப்பதை உறுதி செய்தல் என்பன இதில் அடங்கும். இந்த நிறுவனங்களின் சீர்திருத்தங்கள் ச.நா.நி. நீடிக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

பொது நிதி முகாமைத்துவத்தில் மறுசீரமைப்புகள்

சர்வதேச நாணய நிதியம் நீடிக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் கீழ் பொது நிதி நிர்வாக சீர்திருத்தங்கள் பிரதான சீர்திருத்தமாக இருப்பதனால், புதிய பொது நிதி முகாமைத்துவ (Public Financial Management - PFM) சட்டமொன்று 2024 இல் இயற்றப்படும். பேரின அறசிறைப் பகுப்பாய்வு மற்றும் எதிர்வுகூறல், நிதித் தரவு சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல், நிதி முகாமைத்துவம், வரவுசெலவுத்திட்டத் தயாரிப்பு மற்றும் நிறைவேற்றல் போன்ற முக்கிய பொது நிதி முகாமைத்துவ செயல்பாடுகளை வலுப்படுத்தத் தேவையான சட்ட கட்டமைப்பை இப்புதிய நிதி முகாமைத்துவச் சட்டம் உள்ளடக்கியிருக்கும். புதிய சட்டம் வரவுசெலவுத்திட்டத் தயாரிப்புச் செயன்முறையைத் தெளிவாக வரையறுப்பதுடன், நிதி அமைச்சு மற்றும் செலவின முகவராண்மைகளின் வகிபாகம் மற்றும் பொறுப்புகளை குறிப்பிடுகிறது. மேலும் தகவல் மற்றும் பொறுப்புக்கூறல் தேவைகளை வலியிறுவுத்துகிறது. புதிய பொது நிதி முகாமைத்துவச் சட்டம், தற்போதுள்ள 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டம் நீக்கப்படுவதுடன், கடன் குறைப்பு மற்றும் நிதி நிலைத்தன்மை ஆகியவற்றின் ஒட்டுமொத்த நோக்கத்துடன் அரசாங்கத்தின் நிதி நடவடிக்கைகளில் ஒழுக்கத்தை மேம்படுத்த புதிய நிதி விதிகள் கட்டமைப்பை உள்ளடக்கும்.

அரசாங்கத்தின் கடன் நடவடிக்கைகளை சுயாதீனமாக நிர்வகிப்பதற்கு பொதுக் கடன் முகாமைத்துவ நிறுவனமொன்று (Public Debt Management Agency -PDMA) தாபிக்கப்படும். பொதுப் படுகடன் முகாமைத்துவ முகவராண்மை கணிசமான செயற்பாட்டு சுதந்திரத்தைக் கொண்டிருப்பதுடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச நிதியுதவி தொடர்பான முடிவுகளை எடுப்பது உட்பட கடன் நிர்வாகத்தின் அனைத்து அம்சங்களையும் மேற்பார்வையிடுவதும் பொறுப்பாகும். மேலும், முகவராண்மையானது அனைத்து வகையான கடன்கள், பெறுதிகள் மற்றும் உத்தரவாதங்களை மதிப்பீடு செய்வதில் ஈடுபடும். மேலும், அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்றத்தின் பொது நிதி பொறுப்புகளை நிறைவேற்றுவதில் பாராளுமன்றத்திற்கு உதவுவதற்காக பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகம் அமைக்கப்படும். தேசிய வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல், நிலையான நிதி நிலையைப் பேணுவதற்கு பொறுப்பான முடிவுகளை எடுத்தல் மற்றும் பொது வளங்களை திறம்பட ஒதுக்கீடு செய்தல் ஆகியவை இதில் அடங்கும். மேலும், ஊழலுக்கான வாய்ப்பைக் குறைக்க பல சீர்திருத்த முயற்சிகள் செயற்படுத்தப்படும். ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சமவாயத்துடன் இணைந்த விரிவான சட்டத்தை அறிமுகப்படுத்துதல், வருமான நிர்வாகம் மற்றும் கொள்முதல் போன்ற முக்கிய துறைகளில் டிஜிட்டல் மயமாக்கலின் பயன்பாட்டை விரிவுபடுத்துவதன் மூலம் ஊழலுக்கான வாய்ப்புகளை குறைத்தல் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த ஆன்லைன் தளத்தை நிறுவுதல் ஆகியவை இந்த நடவடிக்கைகளில் அடங்கும்.

வெளிநாட்டுத் துறையில் மறுசீரமைப்புகள்

சென்மதி நிலுவைக்கு ஒத்துழைப்பதற்காக விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் பரிமாற்றக் கட்டுப்பாடுகள் உள்ளிட்ட நிர்வாக நடவடிக்கைகள் படிப்படியாக அகற்றப்படும். மேலும், ஏற்றுமதியை பல்வகைப்படுத்துதல், முதலீட்டுச் சபையில் ஒரே இடத்து சேவை மையத்தினை (one-stop-shop) உருவாக்குதல், முதலீட்டுச் சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு மூலம் நாட்டுக்கு வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை வலுப்படுத்தவும் வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்கு உகந்த சூழலை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நிதி மற்றும் நாணயத் துறையில் மறுசீரமைப்புகள்

தற்போதுள்ள நாணய விதிச் சட்டத்திற்குப் பதிலாக புதிய மத்திய வங்கிச் சட்டத்தின் ஊடாக இலங்கை மத்திய வங்கிக்கு அதிக சுயாட்சி வழங்குவதன் மூலம் நாணயத் துறையில் நிறுவன கட்டமைப்பு மேலும் பலப்படுத்தப்படும். உறுதியான மற்றும் போதுமான மூலதனமயமாக்கப்பட்ட வங்கி முறையைப் பராமரிக்க, ஒன்பது பெரிய வங்கிகளுக்கு விரிவானதொரு சொத்துத் தர மதிப்பாய்வு உட்பட கண்டறியும் ஆய்வு நடத்தப்படும். மேலும், ஒரு புதிய வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் வங்கிச் சட்டத்தில் திருத்தங்கள் நிதித்துறை மேற்பார்வையை வலுப்படுத்த செயற்படுத்தப்படும். அரசுக்குச் சொந்தமான வங்கிகளுக்கு ஒழுங்குமுறை மற்றும் நிர்வாகக் கட்டமைப்பும் மேம்படுத்தப்படும், அதே நேரத்தில் சிறிய வங்கி அல்லாத வைப்புத்தொகை பெறுவோர் மீதான கண்காணிப்பு மேம்படுத்தப்படும்.

ஸ்திரத்தன்மையிலிருந்து வளர்ச்சிக்கு

கடந்த 12 மாதங்களில், பொருளாதாரத்தை கிட்டத்தட்ட சரிவு நிலையில் இருந்து ஒப்பீட்டு ஸ்திரத்தன்மைக்கு மாற்றுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதிய ஆதரவுடன் சீர்திருத்தத் திட்டத்தை நிறுவுதல் மற்றும் கடனை மறுசீரமைப்பதற்கான முயற்சிகள் மேம்பட்ட கடன் மதிப்பீடுகள் மற்றும் மூலதன சந்தை அணுகலை மீட்டெடுப்பதற்கான களத்தை அமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும், நீண்ட காலத்திற்கு நிலையான மீட்சிக்காக, இலங்கை தனது அந்நிய செலாவணி இருப்புக்களை கட்டியெழுப்புவதற்காக கடனற்ற உள்வரவுகளை (முதன்மையாக பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு) மேம்படுத்துதல் வேண்டும். இந்நோக்கத்திற்காக அரசாங்கம் வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் அதிக பொருளாதார ஒருங்கிணைப்பு மூலம் உலகளாவிய சந்தைகளுடன் ஈடுபாட்டை மீண்டும் தொடங்குகிறது. இந்தியா, சீனா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுடனான பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்தை கட்டியெழுப்ப, இலங்கையானது பிராந்திய விரிவான பொருளாதார பங்களிப்பு (Regional Comprehensive Economic Partnership – RCEP) உட்பட பரந்த பிராந்திய வர்த்தக ஏற்பாடுகளுடன் ஈடுபட விரும்புகிறது. இத்தகைய வர்த்தக நிறுவனங்களுடன் ஈடுபடுவது, நாடு பிராந்திய மதிப்புச் சங்கிலிகளுடன் இணைவதற்கும், பெரிய பயனுள்ள சந்தையுடன் கவர்ச்சிகரமான முதலீட்டு இடமாக மாறுவதற்கும் உதவும்.

அதே நேரத்தில், உள்நாட்டு விநியோக திறனையும் கவனிக்க வேண்டும். நீண்ட கால வளர்ச்சியை சந்தைகளில் காணப்படும் போட்டியினை வெற்றிபெறுவதன் மூலம் மட்டுமே நிறுவ முடியும். நிலம், உழைப்பு மற்றும் மூலதனம் உள்ளிட்ட முக்கிய காரணிகளான சந்தைகளுக்கு முக்கியமான சீர்திருத்தங்கள் மூலம் பொருளாதாரத்தின் போட்டித்தன்மை மேம்படுத்தப்படும். முதலீட்டு வலயங்கள் உட்பட வர்த்தக பயன்பாட்டிற்கு நில வளங்களை விடுவிக்கும் நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்படும். ஏற்றுமதிகள் மற்றும் முதலீட்டை ஆதரிக்கும் நிறுவன கட்டமைப்பானது மூலதனச் சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையிலிலிருந்து ஒரு புதிய நிறுவன பொறிமுறையின் மூலம் உகந்த மதிப்பைப் பிரித்தெடுக்க மறுசீரமைக்கப்படும். தொழிலாளர் சந்தை சீர்திருத்தங்கள் பெண் தொழிலாளர் பங்கேற்பை மேம்படுத்தவும், நெகிழ்வான வேலையை ஊக்குவிக்கவும் முயல்கின்ற அதே நேரத்தில் முதலாளிகள் மற்றும் ஊழியர்களின் நலன்களுக்கு இடையே பொருத்தமான சமநிலையை ஏற்படுத்த தொழிலாளர் சட்டத்தை மதிப்பாய்வு செய்யும். சந்தைச் சக்திகள் பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்டும் அதே வேளையில், நியாயமான போட்டி மற்றும் போட்டியை உறுதி செய்யும் நவீன ஒழுங்குமுறை கட்டமைப்பை அரசாங்கம் உறுதி செய்யும். பொருளாதார நடவடிக்கைகள் இலங்கையின் இயற்கை பாரம்பரியம் மற்றும் உயிரியல் பன்முகத்தன்மையை சமரசம் செய்யாமல் இருப்பதையும் கொள்கை கட்டமைப்பானது உறுதி செய்யும். கல்வி, சுகாதாரம், சமூகப் பாதுகாப்பு, பொதுப் போக்குவரத்து மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் ஆகியவற்றில் திறமையான பொதுச் சேவைகளை வழங்குவதற்கும் சமூக நீதியை உறுதி செய்வதற்கும் மேம்படுத்தப்பட்ட முதலீட்டை அரசாங்கம் உறுதி செய்யும். சமமான, நிலையான மற்றும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட பொருளாதாரத்தின் அடிப்படையிலான புதிய வளர்ச்சி மாதிரியை இலங்கை தொடங்குவதற்கு இந்த நடவடிக்கைகள் ஒட்டுமொத்தமாக முக்கியமானதாக இருக்கும்.

கட்டம் 1.3 - சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் பொருளாதர மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

உபயோகிக்கத்தக்க அலுவல்சார் ஒதுக்குகள் கடுமையாக குறைவடைதல், சடுதியான நாணய மதிப்பிறக்கம் அத்துடன் அதன் விளைவாக ஏற்பட்ட எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் மருந்துப்பொருட்கள் உள்ளடங்கலாக அத்தியாவசிய பொருட்கள் பற்றாக்குறை, குறைவடைந்த அரசாங்க வருவாய் மற்றும் உயர்வான மீண்டெழும் செலவினம் என்பவற்றிலிருந்து தோற்றம்பெற்ற அரசாங்கத்தின் தீவிரமான காசுப்பாய்ச்சல் தடைகள், இறைவரி மற்றும் நாணயத் துறைகளில் இருந்து தோன்றிய அதிர்வுகளுடன்கூடிய உறுதியற்ற நிதியியல் முறைமை அத்துடன் சமூக அமைதியின்மை மற்றும் அரசியல் கவிழ்ப்பு நிலமைகள் என்பன மூலம் 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் தோன்றிய பொருளாதார நெருக்கடிகள் மிகவும் தேவையான அத்துடன் அதிகம் புறக்கணிக்கப்பட்ட மறுசீரமைப்புகளை குறிப்பாக, இறை வரி மற்றும் நாணய, நிதியியல், மற்றும் வளர்ச்சியை அதிகரிக்கும் துறைகள் என்பவற்றில் உடனடியாக செயற்படுத்துவதற்கு அரசாங்கத்தை தூண்டியது. ஆகையினால், சர்வதேச நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்படும் பொருளாதார உறுதிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றிற்கு அரசாங்கம் முறைசார்ந்த கோரிக்கையினை முன்வைத்தது. இதனுடன் இணைந்த நிகழ்வாக, அரசாங்கம் 2022 ஏப்பிரலில் படுகடன் தீர்ப்பனவுகளை முடக்குவதை அறிவித்து, இருதரப்பு அபிவிருத்தி பங்காளர்களின் உதவியுடன் அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறையினை தீர்த்தல் உள்ளடங்கலாக வேறு உறுதிப்படுத்தல் வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது. சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்திட்டத்திற்கு வழியமைப்பதற்கும் படுகடன் நிலைபெறுதன்மையினை பெறுவதற்கும் படுகடனை மறுசீரமைக்கும் பொருட்டு கடன்கொடுநர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை தொடங்கியதுடன் சட்ட மற்றும் நிதியியல் ஆலோசகர்களையும் பணிக்கமர்த்தியது.

பலமாதங்களை கொண்ட பேச்சு வார்த்தைகளுக்கு பின்னர், அரசாங்கம் 2022 செப்டெம்பர் 01 அன்று சர்வதேச நாணய நிதியத்துடன் அலுவலர் மட்ட இணக்கப்பாட்டினை வெற்றிகரமாக எட்டியதுடன் அலுவலர் மட்ட இணக்கப்பாட்டுக்கு இசைவாக கொள்கைச் சீராக்கங்களின் தொடரொன்றை நடைமுறைப்படுத்தியது. அதற்கமைய, இணங்கியவாறு ஒன்பது முன்கூட்டிய நடவடிக்கைளை அரசாங்கம் நிறைவுசெய்தது.

1. நிகழ்ச்சித்திட்ட அளவுருக்களுக்கிணங்க 2023 காலப்பகுதியில் இறைவரி திரட்டலுக்கு ஆதரவளிப்பதற்கு வருவாய் வழிமுறைகளுக்கான அமைச்சரவை அனுமதி
2. நிகழ்ச்சித்திட்டத்தின் அளவுருக்களுக்கு இசைவாகவுள்ள திருத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு திட்டமொன்றுக்கான பாராளுமன்ற அனுமதி
3. நிகழ்ச்சித்திட்ட அளவுருக்களுக்கு இசைவாக காணப்படுகின்ற 2023 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்தை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்
4. செலவு மீட்பினை அடைவதற்கு 2018 எரிபொருள் விலையிடல் சூத்திரம் மூலம் குறித்துரைக்கப்பட்டவாறு மாதாந்த சில்லறை எரிபொருள் விலை சீர்படுத்தலை தானியக்கப்படுத்துவதற்கான அமைச்சரவை அனுமதி
5. ஆண்டுக்கு இரு-முறை செலவு மீட்பு அடிப்படையில் அமைந்த மினசார விலைச் சீர்திருத்தத்தினை தானியக்கப்படுத்துவதற்கான அமைச்சரவை அனுமதி
6. சர்வதேச நாணய நிதியத்தின் அலுவலர்களுடனான ஆலோசனையுடன் 2019 நவம்பரில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலத்திலிருந்தான திருத்தங்களுடன் புதிய மத்திய வங்கி சட்டத்திற்கான அமைச்சரவை அனமதி
7. இலங்கை மத்திய வங்கியின் நெருக்கடி முகாமைத்துவத்தின் முக்கிய கூறுகளை வலுப்படுத்தவதற்கு இலங்கை மத்திய வங்கியின் அதிகாரங்களுக்கான வங்கித் தொழில் (விசேட எற்பாடுகள்) சட்டத்திற்கான அமைச்சரவை அனுமதி
8. சர்வதேச நாணய நிதியத்தின் அலுவலர்களுடனான ஆலோசனையுடன் நிர்ணயிக்கப்பட்ட ஆய்வெல்லை மற்றும் காலக்கெடு அடிப்படையிலமைந்த வங்கிச் தொழிற்துறை ஆய்வுச் செயன்முறையினை நடாத்தவதற்கு இலங்கை மத்திய வங்கியின் மூலம் சுயாதீன நிறுவனமொன்றினை பணிக்கமர்த்தல்
9. உறுதியான மேல்நோக்கிய பாதையில் உண்மைக் கொள்கைகள் வீதங்களை எதிர்பார்ப்பதை உறுதிசெய்வதற்கு 100 அடிப்படை புள்ளிகளால் கொள்கை வட்டி வீதங்களை அதிகரித்தல்

கட்டம் 1.3 - சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் பொருளாதர மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்...

நிகழ்ச்சித்திட்ட அளவுருக்களுக்கமைவாக 2022 இல் அரசாங்கத்தின் இறைவரி தொழிற்பாடுகள் திருத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம் மூலம் வழிநடாத்தப்பட்டன. திருத்தப்பட்ட வரவுசெலவு திட்டத்தின் கீழ், ரூ 954 பில்லியன் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.0 சதவீதம் கொண்ட முதலதந்தர பற்றாக்குறை இலக்கிடப்பட்டிருந்ததுடன் கடுமையான வருவாய் மேம்படுத்தல் வழிமுறைகள் மற்றும் செலவின சீரமைத்தல் முயற்சிகள் என்பன காரணமாக இலக்கினையும் விஞ்சி ரூ 894.7 பில்லியன் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.7 சதவீதம் கொண்ட முதலாந்தர பற்றாக்குறை அடையப்பெற்றது. இந்திய தொடர் கொடுகடன் வசதியின் கீழ் இறக்குமதிசெய்யப்பட்ட எரிபொருள்களுக்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஐ.அ.டொலர் 700 மில்லியன் (ஏறத்தாழ ரூபா 252 பில்லியன்) தொகையினை திறைசேரிக்கு கொடுப்பனவு செய்திருக்குமாயின், இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.7 சதவீதத்திற்கு மேலும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். இதற்கு மேலதிகமாக, தொடர்ச்சியான சூத்திரம் அடிப்படையிலமைந்த விலை திருத்தங்களுடன் எரிபொருளுக்கும் மின்சாரத்திற்கும் செலவு மீட்பு விலையிடல் முறைமையொன்று பின்பற்றப்பட்டது.

முன்கூட்டிய நடவடிக்கைகளை நிறைவுசெய்தல் அத்துடன் அலுவல்சார் கடன் கொடுநர்களிடமிருந்து நிதியியல் உத்தரவாதங்களை பெற்றுக்கொள்ளல் என்பவற்றுடன் இலங்கையின் பொருளதார கொள்கைகள் மற்றும் சீரமைப்புகளுக்கு ஆதரவளிப்பதற்கு 2023 மார்ச் 20 அன்று சிறப்பு எடுப்பனவு உரிமை 2.286 பில்லியன் (சுமார் ஐ.அ.டொலர் 3 பில்லியன்) கொண்ட விரிவாக்கப்பட நிதி வசதியின் கீழ் 48 மாத நீடிக்கப்பட்ட ஏற்பாடொன்றுக்கு சர்வதேச நாணய நிதியச் சபை அனுமதியளித்தது. அனுமதியை தொடர்ந்து உடனடியாக, சுமார் ஐ.அ.டொலர் 330 மில்லியன் கொண்ட முதலாவது தொகுதியின் பகிர்ந்தளிப்பு இடம்பெற்றது. பேரண்டப்பொருளாதார உறதிப்பாட்டினை மீள நிலைப்படுத்தவதற்கும் பொதுப்படுகடன் நிலைபெறுதன்மையினை உறுதி செய்வதற்கும் இந்நிகழ்ச்சிதிட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது

அட்டவணை : 1 | சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் 07 முக்கிய தூண்கள்.

1.	**வருவாய் அடிப்படையிலமைந்த இறைவரித் திரட்டல்**
	- இலக்காககொண்ட மற்றும் முன்னேற்றகரமான வரி மறுசீரமைப்புகள் - வருமான நிருவாக மறுசீரமைப்புகள் - செலவின மறுசீரமைப்பு வழிமுறைகள் மற்றும் முன்னுரிமைச் செலவிடுதல்களை பேணிக்காத்தல் - இறைவரி தரவுகளின் உரியகாலம், செம்மை, மற்றும் உள்ளடக்கம் என்பவற்றை மேன்படுத்தல் - எரிபொருள் மற்றும் மின்சாரம் என்பவற்றுக்காக செலவு மீட்பு அடிப்படையிலமைந்த விலையிடலை தானிக்கப்படுத்தல் - அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளின் ஆளுகையினை வலுப்படுத்தல் மற்றும் நிதியியல் ரீதியாக அவற்றை வளம்பெறச்செய்தல் - புதிய பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் மைய அரசாங்க நிதியியல் முகாமைத்தவ தொழிற்பாடுகளை வலுப்படுத்தல்
2.	**வலுவான சமூகப் பாதுகாப்பு வலைகள்**
	- வலுவான சமூகப் பாதுகாப்பு வலை நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக பொருளாதார நெருக்கடி மற்றும் கொள்கைச்சீராக்கங்கள் என்பவற்றின் தாக்கங்களுக்கெதிராக பாதிக்கப்படக்கூடிய வகுப்பினரை பாதுகாத்தல். - சமூகப் பாதுகாப்பு வலை நிகழ்ச்சித்திட்டங்களின் செயல்திறன்வாய்ந்த தன்மையினையும் வினைத்திறனையும் மேம்படுத்துவதற்கு நிறுவனசார் கட்டமைப்பினை வலுப்படுத்தல்.

கட்டம் 1.3 - சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் பொருளாதர மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்...

3.	**நாட்டுக்கான படுகடன் மறுசீரமைப்பு உபாயம்.**
	- சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்ட அளவுருக்களுக்கு இசைவாக கடன்கொடுனர் மத்தியில் நியாயமாகவும் சமமாகவும் சுமைகளை பகிர்ந்து கொள்ளும் விதத்தில் படுகடன் தீர்மானம் - சர்வதேச சிறந்த நடத்தைகளுக்கு அமைவாக பொதுப் படுகடன் முகாமைத்துவ முகவராண்மையினை நிறுவுதல் - பொதுப்படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவு பற்றிய காலாண்டு செய்தித்திரட்டினை கிரமமாக வெளியிடுதல்
4.	**விலை உறுதிப்பாட்டினை மீளநிலைப்படுத்தல் மற்றும் சர்வதேச ஒதுக்குகளை மீளக் கட்டியெழுப்புதல்**
	- பல கூறுகளைக் கொண்ட பணவீக்க குறைப்பு உபாயத்தினை நடைமுறைப்படுத்தி நாணய நிதியிடலில் இருந்து தவிர்ந்துகொள்ளல் - பாரிய செலாவணி வீத நெகிழ்ச்சி தன்மையினை அனுமதித்தல் - நெகிழ்வுமிக்க பணவீக்க இலக்கிடல் மற்றும் பாரிய செலாவணி வீத நெகிழ்வுத்தன்மைக்கு ஆதரவளிக்கின்ற நிறுவனசார் கட்டமைப்புக்களை வலுப்படுத்தல் - சென்மதி நிலுவக்கு ஆதரவளிப்பதறகாக விதிக்கப்பட்ட நிர்வாக வழிமுறைகளை படிப்படியாக நீக்குதல்.
5.	**நிதியியல் உறுதிப்பாட்டினை பாதுகாத்தல்**
	- ஆரோக்கியமான, போதியளவு மூலதனமாக்கப்பட்ட வங்கித்தொழில் துறைமையினை உறுதிசெய்தல் அத்துடன் வங்கித்தொழில் முறைமையிலுள்ள குறிப்பிடத்தக்க பாதிக்கப்படும்தன்மைகளை தீர்த்தல். - நிதியியல் துறை மேற்பார்வைக்கும் நெருக்கடி முகாமைத்தவத்துக்குமான கட்டமைப்புக்களை வலுப்படுத்தல் - அரசுக்கு சொந்தமான வங்கிகளின் தாக்குப்பிடிக்கும்தன்மையினையும் ஆளுகையினையும் வலுப்படுத்தல்.
6.	ஆளுகை மற்றும் ஊழல் பாதிக்கப்படும் தன்மைகளை தீர்த்தல்
	- ஊழல் மற்றும் ஆளுகை பாதிக்கப்படும்தன்மைகள் பற்றிய நாட்டுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட விரிவான மதிப்பீடான ஆளுகை ஆய்வு அறிக்கை ஒன்றினை சர்வதேச நாணய நிதியம் வெளியிடும் - ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்துடன் ஊழலுக்கெதிரான சட்டவாக்கத்தை இசைவாக்குகின்ற அனைத்தையும் உள்ளடக்கிய சட்டவாக்கப் பிரிவொன்றினை சட்டமாக்குதல் - இறைவரி தரவுகளின் உரியகாலம் மற்றும் செம்மை என்பவற்றை மேம்படுத்தல் அத்துடன் படுகடன் வெளிப்படைத்தன்மையினை அதிகரித்தல் மூலம் இறைவரி வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்தல
7.	**இலங்கையின் வளர்ச்சி வாய்ப்புகளுக்கு சந்தர்ப்பமளிப்பதற்கு கட்டமைப்புசார்ந்த மறுசீரமைப்புகள்**
	- வெளிநாட்டு முதலீடுகளுக்கான முக்கிய தடையினை அகற்றும் நோக்குடன் 2016-2020 விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் கீழ் உருவாக்கப்பட்ட எஞ்சியுள்ள பரந்தளவிலான வரிகளை சீரமைப்பதற்கான 5 ஆண்டு திட்டத்தினை மீளமைத்தல் - வர்த்தகத்துக்கான தனியொரு வசதிப்படுத்தல் பிரிவொன்றை நடைமுறைப்படுத்தி அபிவிருத்தி பங்காளிகளிடமிருந்து கிடைக்கும் தொழில்நுட்ப உதவியுடன் மேலும் வர்த்தக மறுசீரமைப்புகளை பின்தொடர்தல். - அனைத்தையும் உள்ளடக்கிய தொழிலாளர் சந்தை மறுசீரமைப்புகளை மேற்கொள்ளுதல்

கட்டம் 1.3 - சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் பொருளாதர மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்...

மேற்குறிப்பிட்ட 7 தூண்களையும் உள்ளடக்குகின்ற குறிப்பான காலவரையறையினுள் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பல எண்ணிக்கையான கொள்கை நடவடிக்கைகளை இந்நிகழ்ச்சிதிட்டம் விபரிக்கின்றது. நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகளை அடைவதற்கு இவ் அளவுகோல்கள் மிகவும் முக்கியமானவை என்பதுடன் நிகழ்ச்சிதிட்ட நடைமுறைப்படுத்தலை கணிப்பிடுவதற்கான குறிகாட்டிகளாக பயன்படுத்தப்படுகின்றன.

அட்டவணை 2 | கட்டமைப்பு சார்ந்த அளவுகோல்கள்

இறைவரி, அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு வலை மறுசீரமைப்புகள்	
மாதாந்த சூத்திரம் அடிப்படையிலமைந்த சீராக்கங்களுடன் அவற்றின் செலவு மீட்பு மட்டங்களுக்கு சில்லறை எரிபொருள் விலைகளை நிர்ணயித்தல். அத்துடன் வரவுசெலவு திட்ட மாற்றல்கள் மீது ஏதேனும் எரிபொருள் உதவுதொகைகளை வழங்குகின்றமைக்காக இலங்கை பெற்றோலிய கூட்டுதாபனத்திற்கு ஈடளித்தல்	தொடர்ச்சியாக
ஒவ்வொரு ஆண்டும் சனவரி மற்றும் யூலை (முறையே சனவரி 1 தொடக்கம் யூலை 1 வரைக்கும் நடைமுறைக்கு வரும்) முன்நோக்கிய அடிப்படையில் ஆண்டுக்கு இருமுறை சூத்திரத்தின் அடிப்படையிலமைந்த சீராக்கங்களுடன் அதன் செலவு மீட்பு மட்டத்திற்கு இறுதிப் பயனாளர் மின்சார கட்டண அட்டவணையை சீர்படுத்தல் (இறுதி வாடிக்கையாளர்களின் வேறுபட்ட வகைகள் முழுவதும் ஒட்டு மொத்தமாக). ஒக்டோபர் இறுதியளவிலும் (சனவரி கட்டண திருத்தங்களுக்காக) மற்றும் ஏப்பிரல் இறுதியளவிலும்(யூலை கட்டண திருத்தங்களுக்காக) இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு இலங்கை மின்சாரசபை கட்டண திருத்த கோரிக்கைகளை சமர்ப்பித்தல் அத்துடன் வரவுசெலவு திட்ட மாற்றல்கள் மீதான ஏதேனும் எஞ்சிய உதவுதொகைகளை வழங்குவதற்காக மின்சார துறைக்கு ஈடளித்தல்	தொடர்ச்சியாக
நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு திட்டத்தின் பாராளுமன்ற அனுமதி மற்றும் நலன்புரி நன்மைகளை பெற்றுக் கொடுப்பதற்கான குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களை இனங்காண்பதற்கு புதிய தகமை பிரமாணத்தை பிரயோகித்தல்	2023 மே இறுதி
சர்வதேச நாணய நிதியத்தின் அலுவலர்களின் ஆலோசனையுடன் இலங்கை மின்சாரசபை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றின் ஐந்தொகைகளை மறுசீரமைப்பதற்கு அனைத்தையும் உள்ளடக்கிய உபாயம் ஒன்றுக்கான அமைச்சரவை அனுமதி (தெளிவான காலவரையறைகளையும் முறைகளையும் முன்வைத்தல்)	2023 யூன் இறுதி
நிகழ்ச்சித்திட்டத்தின் அளவுருக்களுக்கு இசைவாக 2024 காலப்பகுதியில் இறைவரி திரட்சிக்கு ஆதரவளிப்பதற்கு வருமான வழிமுறைகளுக்கான அமைச்சரவை அனுமதி	2023 யூலை இறுதி
அனைத்து 220 வருமான தலைப்புகளுக்கும் (தேசிய வரவுசெலவு திட்ட நிறைவேற்று முகவராண்மைகள்) அதன் செயற்பரப்பினை விரிவுபடுத்தி ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையினை (ITMIS) தொடங்குவதை நிறைவுசெய்தல்	2023 செப்டெம்பர் இறுதி
நிகழ்ச்சித்திட்ட அளவுருக்களுக்கு இசைவாக காணப்படுகின்ற 2024 ஒதுக்கீட்டு சட்டமூலத்தை முதலாவது வாசிப்பிற்காக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்	2023 ஒக்டோபர் இறுதி

கட்டம் 1.3 - சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் பொருளாதர மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்...

2024 ஒதுக்கீட்டுச் சட்டத்தினை பாராளுமன்றத்தில் அங்கீகரித்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்ட எண்ணக்கரு அடிப்படையில் செலவின ஒதுக்கீடுகள்	2023 டிசம்பர் இறுதி
வரவுசெலவு திட்ட உருவாக்கச் செயன்முறை மற்றும் தொடர்புடைய முகவராண்மைகளின் வகிபாகங்கள் அத்துடன் பொறுப்புகள் மற்றும் தகவல் மற்றும் பொறுப்புக்கூறல் தேவைப்படுத்தல் என்பவற்றுக்கு அதிகாரமளிக்கின்ற புதிய பொது நிதி முகாமைத்தவ சட்டத்தை சர்வதேச நாணய நிதியத்தின் அலவலர்களின் ஆலோசனையுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்	2023 டிசம்பர் இறுதி
மின்சாரத்திற்கான உதவுதொகையை செம்மையாக அளவிடுவதற்கு மொத்த வழங்கல் கொடுக்கல்வாங்கல் கணக்கை மேம்படுத்தல் அத்துடன் செலவு மீட்பு அடிப்படையிலமைந்த மின்சார கட்டணங்களை மற்றும் அரசாங்க மாற்றல் தேவைப்பாட்டை நிர்ணயிப்பதற்கு அதனை பயன்படுத்தத் தொடங்குதல்	2023 டிசம்பர் இறுதி
நாணய மற்றும் செலாவணி வீத கொள்கைகள்	
சர்வதேச நாணய நிதியத்தின் அலுவலர்களின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்ட புதிய மத்திய வங்கி சட்டத்திற்கான பாராளுமன்ற அனுமதி	2023 ஏப்பிரல் இறுதி
நிதியியல் துறை	
இரு பாரிய அரசுக்கு சொந்தமான வங்கிகளுக்கும் 3 பாரிய தனியார் வங்கிகளுக்கம் வங்கி ஆய்வு நடைமுறையின் சொத்து மீளாய்வு கூறை நிறைவுசெய்தல்	2023 ஏப்பிரல் இறுதி
சர்வதேச நாணய நிதியத்தின் அலுவலர்களின் ஆலோசனையுடன் வங்கித்தொழில் சட்டத்திற்கான அமைச்சரவை அனுமதி	2023 யூன் இறுதி
வங்கித் தொழில் முறைமை மூலதனம் மற்றும் வெளிநாட்டு செலாவணி திரவத்தன்மை பற்றாக்குறை என்பவற்றை தீர்ப்பதற்கான வழிகாட்டல் ஒன்றை மத்திய வங்கி உருவாக்குதல் அத்துடன் வளம்பெற முடியாதவை என கணிப்பிடப்பட்ட வங்கிகளில் தலையீடு செய்தல்	2023 யூலை இறுதி
தனியார் மூலங்களிலிருந்து மூலதன பற்றாக்குறைகளை முடிவுறுத்துவதற்கு இயலாதுள்ள வளம்பெறக்கூடிய வங்கிகளில் சாத்தியதமான அரசாங்க மீள் மூலதனமாக்கலுக்கான அளவு, காலம், சாதனங்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளை நிதியமைச்சினால் நிர்ணயித்தல்	2023 ஒக்டோபர் இறுதி
சர்வதேச நாணய நிதிய அலுவலர்களின் ஆலோசனையுடன் வங்கித் தொழில் சட்டத்தின் முழுமையான திருத்தத்திற்கான பாராளுமன்ற அனுமதி	2023 டிசம்பர் இறுதி
ஆளுகை	
சர்வதேச நாணய நிதியத்தின் அலுவலர்களின் ஆலோசனையுடன் முடிவுறாதுளள் அனைத்தையும் உள்ளடக்கிய சொத்து மீட்பு ஏற்பாடுகளுடன் ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்துடன் அதனை இசைவாக்குவதற்கு புதிய ஊழலுக்கெதிரான சட்டத்தை இயற்றுதல்	2023 யூன் இறுதி
இலங்கையின் ஊழலுக்கெதிரான கட்டமைப்பினை மதிப்பிடுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் தலைமையிலான ஆளுகை ஆய்வு தொழில்நுட்ப உதவி பணிக்குழுவின் அறிக்கையினை வெளியிடுதல்.	2023 செப்டம்பர் இறுதி

கட்டம் 1.3 - சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் பொருளாதர மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்...

இந்நிகழ்ச்சிதிட்டத்தின் கீழ் நிறுவப்படட் பல எண்ணிக்கையான பிரமாணத்தின் அடிப்படையிலமைந்த செயலாற்றுகை மீளாய்வுசெய்கின்ற ஆண்டுக்கு இருமுறை மீளாய்வுக்கு சர்வதேச நாணய நிதிய நிகழச்திட்டம் உட்பட்டுள்ளது

அட்டவணை 3 | சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சி திட்டத்தின் கண்காணிப்பு பிரமாணம்

வகை	பிரமாணம்
அளவுசார் செயலாற்றுகை பிரமாணம	- மத்திய அரசாங்க முதலாந்தர நிலுவை(தளம்) - மத்திய அரசாங்கத்தின் செலவின நிலுவைகளின் இருப்பு (உச்சம்) - தேறிய அலுவல்சார் சர்வதேச ஒதுக்குகள்(தளம்) - இலங்கை மத்திய வங்கியிடமிருந்து அரசாங்கத்துக்கான தேறிய கொடுகடன் (உச்சம்)
வெளிநாட்டு நிலுவை மற்றும் உறுப்புரை (VIII) கடப்பாடுகள் தொடர்பில் தொடர்ச்சியான செயலாற்றுகைப் பிரமாணம்	- நிதியல்லாத் துறை மற்றும் மத்திய வங்கி என்பவற்றின் புதிய கொடுப்பனவு நிலுவைகள்(உச்சம்) - நடைமுறை சர்வதேச கொடுக்கல் வாங்கல்களுக்காக கொடுப்பனவுகள் மற்றும் மாற்றல்களை மேற்கொள்வதன் மீது கட்டுப்பாடுகளை விதிக்காமை அல்லது தீவிரப்படுத்தாமை - பல நாணய நடத்தைகளை அறிமுகப்படுத்தாமை அல்லது திருத்தியமைக்காமை - உத்தேச நாணய நிதிய உடன்படிக்கை உறுப்புரையின் VIII உறுப்புரைக்கு முரணாக இருதரப்பு கொடுப்பனவு உடன்படிக்கைகளை முடிவுறுத்தாமை - சென்மதி நிலுவை நோக்கங்களுக்காக இறக்குமதி கட்டுப்பாடுகளை விதிக்காமை அல்லது தீவிரப்படுத்தாமை
நாணய கொள்கை ஆலோசனை வாசகம்	- குறித்துரைக்கப்பட்ட இலக்கு திகதிகளில் ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கம் 2024 இறுதியளவில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு வீச்சுக்கு அத்துடன் இலங்கை மத்திய வங்கியின் 4-6 சதவீதம் கொண்ட இலக்கு வீச்சுக்கு ஒத்திசைவாக காணப்படுகின்றதா என்பதனை கண்காணித்தல்
குறிகாட்டி இலக்குகள்	- மத்திய அரசாங்க வரி வருமானம் (தளம்) - சமூகப் பாதுகாப்பு வலை செலவிடல் (தளம்) - எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்கான வர்த்தகமல்லா கடப்பாடுகள் செலவு (அரசாங்க மாற்றல்களின் நீங்கலாக) (உச்சம்) - திறைசேரி உத்தரவாதங்கள்(உச்சம்)

வரைபடம் 1 | மத்திய அரசாங்க முதலாந்தர நிலுவை



மூலம் : அரசிறைக் கொள்கை திணைக்களம் (2010-2022) சர்வதேச நாணய நிதிய இலக்குகள் (2023-2028)

வரைபடம் 2 | வருவாய் மற்றும் மானியங்கள்



மூலம் : அரசிறைக் கொள்கை திணைக்களம் (2010-2022) சர்வதேச நாணய நிதிய இலக்குகள் (2023-2028)

கட்டம் 1.3 - சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் பொருளாதர மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்...

குறித்துரைக்கப்பட்ட கால வரையறையினுள் மறுசீரமைப்புக் கொள்கை வழிமுறைகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதும் நிகழ்ச்சித்திட்டம் முழுவதும் குறிப்பிடப்பட்ட செயலாற்றுகை பிரமாணத்தை நிறைவேற்றுவதை மையப்படுத்திய முயற்சிகளும் பொருளாதாரம் மற்றும் படுகடன் நிலைபெதன்மையை எனபவற்றை நோக்கி இலங்கையை வழிநடாத்தவதில் முக்கிய பங்காற்றுகின்றன. அதன் சவால்களை வெற்றிகொள்வதற்கு இம்மறுசீரமைப்பகள் இன்றியமையாதவையாக காணப்படுகின்றன. மேலும் அரசாங்க நிதி முகாமைத்துவம் மற்றும் ஊழலுக்கெதிரானவை மீதான சட்ட கட்டமைப்புகளை பற்றிய நிகழ்ச்சிதிட்ட அறிமுகப்படுத்தலானது பொது பொறப்புகூறலையும் வெளிப்படைத் தன்மையையும் ஊக்கவித்து ஆளுகைச் செயன்முறைகளை வலிமைப்படுத்தும்.

இவ்வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவது இலங்கையின் முதலீட்டாளர்கள் நம்பிக்கையினை மீள நிலைப்படுத்தி 2023 இல் ஐ.அ.டொலர் 900 மில்லியன் கொண்ட எதிர்பார்க்கப்படட் பகிர்ந்தளிப்பு உள்ளடங்களாக உலக வங்கி மற்றம் ஆசிய அபிவிருத்திவங்கி என்பவற்றிடமிருந்து ஏறத்தாள ஐ.அ.டொலர் 3.75 பில்லியன் கொண்ட மதிப்பிடப்பட்ட வரவுசெலவு திட்ட ஆதரவுடன் அபிவிருத்தி பங்காளர்களிடமிருந்து மேலதிக நிதியிடலுக்கான பெறுவழியை வசதிப்படுத்தும். வெளிநாட்டு நிதிகளுக்கான இவ்வழிகளும் படுகடன் மறுசீரமைப்பும் வெளிநாட்டு நிதியிடல் இடைவெளியினை நிவர்த்திசெய்வதற்கு உதவும். இதற்கு மேலதிகமாக, வெளிநாட்டு ஒதுக்குகளை மேம்படுத்தவதற்கும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அதிர்வுகளுக்கெதிராக பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கும் இவ் அணுகுமுறை முக்கியமானதாக விளங்குகின்றது.

02

2022 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்திகள்

2.1 மேன்நோக்கு

2022 ஆம் ஆண்டில் இலங்கைப் பொருளாதாரமானது பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அரசியல் ரீதியான பதட்டங்களுடனான சவால்களை சந்தித்தது. 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட 3.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சியானது 7.8 சதவீதத்தினால் கடுமையாகச் சரிவடைந்தது. பாரிய அந்நியச் செலாவணி பற்றாக்குறையின் வெளிப்பாடாகிய மொத்தவழங்கலில் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக, உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருள், சமையல் எரிவாயு உட்பட எரிசக்தி, மின்சாரம், மருந்துகள் போன்ற பிற அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான உள்ளீடுகள் ஆகியவற்றுக்கான நீண்ட வரிசைகளுக்கு இந்நெருக்கடி இட்டுச்சென்றது. இதன் விளைவாக, விலைகள் வானளாவ உயர்ந்து 2022, செத்தெம்பரில் பணவீக்கம் ஏறக்குறைய 70 சதவீதமாக இருந்தது மட்டுமன்றி இது கொள்கை விகித உயர்வுகள் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும், அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் குறைக்கவும் நாணய மற்றும் அரசிறைக் கொள்கைகள் ஆகிய இரண்டினையும் கடுமையாக்க மத்திய வங்கியையும் அரசாங்கத்தையும் கட்டாயப்படுத்தியது. இத்தகைய துணிச்சலான நடவடிக்கைகள், வாழ்க்கை நிலைமைகளை இயல்பாக்குவதற்கும், கைத்தொழில்களுக்கான வழங்கல் ரீதியான மேம்பாடுகளுக்கும் உதவியது.

2022 ஆம் ஆண்டில் உற்பத்தி, கட்டுமானம், சுரங்கம் மற்றும் கல்லுடைத்தல், கடல் மீன்பிடித்தல் மற்றும் கடல் நீர்வாழ் உயிரினவளர்ப்பு, நிலைச் சொத்து விற்பனை, காப்புறுதி மற்றும் நிதிச் சேவைகள் ஆகியவற்றில் கூர்மையான சுருக்கத்துடன் விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் உட்பட பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளும் பின்னடைவிற்குட்பட்டன. இதன் விளைவாக, 2021 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் காணப்பட்ட எதிர்மறை வளர்ச்சி வேகமானது நெருக்கடியின் பாதகமான தாக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில், 2022 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டு வரை தொடர்ந்தது. 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பதிவான 0.5 சதவீத பொருளாதாரச் சுருக்கமானது, முக்கியமாக எரிபொருள் மற்றும் மின்சாரப் பற்றாக்குறை உட்பட வழங்கலிலுள்ள தடைகள் காரணமாக 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 7.4 சதவீதமான வேகமான சரிவினையடைப்பெற்றது. உயரும் பணவீக்க அழுத்தங்கள் மற்றும் பிற இடையூறுகள், 2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 11.5 சதவிகிதம் எதிர்மறையான வளர்ச்சியை விளைவித்துள்ள அதே நேரத்தில் ஒட்டுமொத்த பலவீனமான கேள்வி நிலைமைகளை பிரதிபலிக்கும் வகையில் 2022 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் வளர்ச்சியானது 12.4 சதவிகிதமாக வீழ்ச்சியடைந்தது.

வெளித் துறையானது பெரும்பாலும் சென்மதி நிலுவைக் கொடுப்பனவுகள் மீதான அழுத்தங்கள், மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகளின் வீழ்ச்சி, நாணயமாற்று விகிதத்தின் கூர்மையான பெறுமதித் தேய்வு மற்றும் சந்தையில் அந்நியச் செலாவணித் திரவநிலைப் பற்றாக்குறை போன்றவற்றால் முன்னெப்போதும் இல்லாதவாறு பாதிப்புகளை எதிர்கொண்டது. எவ்வாறாயினும், 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 8,139 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2010 ஆம் ஆண்டிற்குப் பிறகு மிகக் குறைந்த வர்த்தகப் பற்றாக்குறையாக 2022 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 5,185 மில்லியன்கள் பதிவாகியது. கடுமையான சென்மதி நிலுவை அழுத்தத்திற்கு மத்தியில், இறக்குமதியைக் குறைக்க எடுக்கப்பட்ட கொள்கை நடவடிக்கையின் காரணமாக பண்ட ஏற்றுமதியின் வருமான விரிவாக்கம் மற்றும் பண்டங்களின் இறக்குமதிக்கான செலவினங்களின் சுருக்கம் இதற்கு வழிவகுத்துள்ளது. அதிக உலகளாவிய தடுப்பூசி விகிதங்கள், பயணக் கட்டுப்பாடுகளின் நீக்கம் ஆகியவற்றுடன் விமானச்சேவை இணைப்பு அதிகரித்ததன் காரணமாக 2022 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறையின் வருமானம் 124.2 சதவீதம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து ஐ.அ.டொ. 1,136 மில்லியன்களைப் பதிவுசெய்தது. சாம்பல் சந்தை வழங்கும் அதிக விகிதங்களுடன் முறைசாரா வழிகள் மூலம் நாட்டிற்கு பணம் அனுப்பப்பட்டதன் காரணமாக தொழிலாளர்களின் பணவனுப்பல் 31.0 சதவீதத்தினால் குறைந்து ஐ.அ.டொ. 3,789 மில்லியன்களைக் கொண்டிருந்தது. இதன் விளைவாக, வெளித் துறையில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 3.3 பில்லியன்களுடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 1.5 பில்லியன் வரை கணிசமாக குறைந்தது.

இதற்கிடையில், மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கு 2021 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவான ஐ.அ.டொ. 3.14 பில்லியன்களுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ஐ.அ.டொ. 1.90 பில்லியன்களாகக் குறைந்துள்ளது. இது 2022 ஆம் ஆண்டின் இறுதியில் அதன் பயன்பாட்டிற்கான நிபந்தனைகளுக்குட்பட்டு சுமார் ஐ.அ.டொ. 1.43 பில்லியன்களுக்குச் சமமான சீனா மக்கள் வங்கியின் பரஸ்பர பரிமாற்று வசதியையும் உள்ளடக்கியது. எவ்வாறாயினும், சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான நிதியுதவி மற்றும் சந்தையில் இருந்து அந்நியச் செலாவணி கொள்வனவு ஆகியவற்றின் கீழ், மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கானது 2023, ஏப்ரல் மாத இறுதிக்குள் சுமார் ஐ.அ.டொ. 2.76 பில்லியன்களாக அதிகரித்தது. 2022, ஏப்ரல் இறுதியில் அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாயின் பெறுமதி 41.4 சதவீதத்தால் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்ததெனினும், மேம்பட்ட சந்தை உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில், 2023, மே இறுதிக்குள் அமெரிக்க டொலருக்கு நிகராக 22.9 வீதத்தால் அதிகரித்தது. 2021 ஆம் ஆண்டின் ஐ.அ.டொ 88.5 பில்லியன்களுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டின் நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஐ.அ.டொ. 77.1 பில்லியன்களாக மதிப்பிடப்பட்டது.

உரிமைப்பங்குச் சந்தையின் செயலாற்றுகையானது 2022 ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்துள்ளது. அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 2022, சனவரி 19 ஆம் திகதியன்று 13,462.4 புள்ளிகளாக வரலாற்று ரீதியாக உயர் பெறுமதியைப் பதிவு செய்த போதிலும், அது 2022 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் 8,490 புள்ளிகளாகக் குறைந்துள்ள அதேவேளை, எஸ் அன்ட் பீ = லங்கா 20 சுட்டி 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 2,636 புள்ளிகள் வரை குறைவடைந்தது. மேலும், சந்தை மூலதனமாக்கல் 2021, இறுதியில் ரூபா 5,489 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 3,847 பில்லியன் வரை 29.9 சதவீதத்தினால் சரிந்துள்ளது.

மொத்தத் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 2021 ஆம் ஆண்டில் 49.9 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 49.8 சதவீதமாக மிகச் சற்றே குறைந்துள்ளது. இது தொழிற்படையின் வீழ்ச்சியையும் செயற்பாடற்ற மக்கள்தொகை அதிகரிப்பினையும் பிரதிபலிக்கிறது. இருப்பினும், வேலையின்மை விகிதம் 2021 ஆம் ஆண்டில் 5.1 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 4.7 சதவீதம் வரை மிதமாகக் குறைந்துள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் (2013=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் தலைக்குரிய பணவீக்கமானது 2022, திசெம்பரில் 57.2 சதவீதமாகக் குறைவதற்கு முன்னர், முக்கியமாக வழங்கல் ரீதியான இடையூறுகள் காரணமாக 2022, செத்தெம்பரில் 69.8 சதவீதமாக வேகமாக அதிகரித்தது. 2023 ஆம் ஆண்டில் பணவீக்கத்தின் சரிவுப் போக்கு மேலும் தொடர்ந்ததுடன் 2023, மேயில் 25.2 சதவீதமாக (கொ.நு.வி.சு, 2021=100) சரிந்தது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்பட்டவாறு, 2023 ஏப்பிரல் மாதத்தில் தலைக்குரிய பணவீக்கம் 33.6 சதவீதமாகக் கடுமையாகக் குறைந்துள்ளது. இதற்கிடையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் (2021=100) நகர்வுகளால் அளவிடப்படும் ஆண்டுக்கு ஆண்டு முக்கிய பணவீக்கம் 2023, மே மாதத்தில் 20.3 சதவீதமாகவும் குறைந்த அதேசமயம் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100) நகர்வுகளின்படி ஆண்டுக்கு ஆண்டு முக்கிய பணவீக்கம் 2023 ஏப்பிரல் மாதத்தில் 31.8 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

மத்திய வங்கியானது 2022 ஆம் ஆண்டில், ஆண்டு முழுவதுமாக அதன் இறுக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டை ஏனைய துணைக் கொள்கை நடவடிக்கைகளுடன் தொடர்ந்தது. அதற்கிணங்க, நிலையான வைப்பு வசதி விகிதம் மற்றும் நிலையான கடன்பெறுகை வசதி விகிதம் ஆகியவை 2022, யூலை 07 ஆம் திகதியன்று 100 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 14.5 சதவீதமாகவும், 15.5 சதவீதமாகவும் உயர்த்தப்பட்டதுடன் 2023, மாச்சு 03 ஆம் திகதியன்று 100 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 15.5 சதவீதமாகவும் 16.5 சதவீதமாகவும் அதிகரிக்கப்பட்டது.

வரைபு 2.1 | மொ.உ.உ. இன் காலாண்டு வளர்ச்சி



மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம்

அட்டவணை 2.1 | 2022 இல் மொ.உ.உ. துறைரீதியான வளர்ச்சி வீதங்கள் (%)

துறை	கா 1	கா 2	கா 3	கா 4	வருடாந்தம்
மொ.உ.உ. (சாதாரணம்)	**20.7**	**40.0**	**49.8**	**39.2**	**37.2**
விவசாயம்	16.0	39.4	49.1	38.9	35.9
கைத்தொழில்	22.1	57.3	55.0	21.7	38.5
சேவைகள்	21.5	33.5	48.7	49.1	38.4
மொ.உ.உ. (உண்மை)	**-0.5**	**-7.4**	**-11.5**	**-12.4**	**-7.8**
விவசாயம்	-4.4	-7.9	-6.7	0.7	-4.6
கைத்தொழில்	-3.7	-10.1	-21.3	-30.1	-16.0
சேவைகள்	1.8	-1.8	-4.2	-3.9	-2.0

மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம்

வரைபு 2.2 | தலா வீத மொ.உ.உ. (ஐ.அ.டொலர்)



மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம்

2.2 இலங்கையின் பொருளாதாரம்

இலங்கையின் பொருளாதாரமானது 2022 ஆம் ஆண்டில் பொருளாதார மற்றும் சமூக ரீதியான சவால்கள் மற்றும் வழங்கல் பகுதியிலமைந்த இடையூறுகள் ஆகியவற்றின் காரணமாக, 8.7 சதவீத எதிர்வுகூறலுடன் ஒப்பிடுகையில் 7.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. இருப்பினும், நெருக்கடியிலிருந்து தோன்றும் முன்னொருபோதுமில்லாத சவால்கள் விவேகமான கொள்கை நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் படிப்படியாக குறைக்கப்பட்டன. 2022 ஆம் ஆண்டில் விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைத்

துறைகள் சுருக்கமடைந்ததுடன் வழங்கல் பக்க இடையூறுகள், நீடித்த எரிசக்தி நெருக்கடி மற்றும் மக்களின் கொள்வனவு சக்தியின் வீழ்ச்சி காரணமாக குறைவடைந்த கேள்வி நிலைமைகள் ஆகியவை இதற்குக் காரணமாக அமைந்தன. 2021 ஆம் ஆண்டில் 0.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது தானியங்கள், தேயிலை, அரிசி, பிற பானப் பயிர்கள், காய்கறிகள், இரப்பர், கடல் மீன்பிடித்துறை மற்றும் விலங்கு உற்பத்தி உட்பட துணைத் துறைகளின் பின்னடைவின் விளைவாக 2022 ஆம் ஆண்டில் விவசாயத் துறையானது 4.6 சதவீதமாகச் சுருக்கமடைந்தது. புடைவை, ஆடையணிகள் மற்றும் தோல் தொடர்பான பொருட்களைத் தவிர கட்டுமான நடவடிக்கைகள், சுரங்கம் அகழ்வு மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் மற்றும் தயாரிப்புக்கள் ஆகியவற்றின் சுருக்கம் காரணமாக 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 5.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் கைத்தொழில் துறையானது 16.0 சதவீதத்தினால் கணிசமாகக் குறைவடைந்தது. பொருளாதாரத்தில் மிகப்பெரிய துறையான, ரூபா 7,265 பில்லியன் வரையான பெறுமதி சேர்க்கை அடிப்படையிலான சேவைகள் துறையானது 2021 ஆம் ஆண்டில் பதிவான 3.5 வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், நிலைச் சொத்து விற்பனை நடவடிக்கைகள், காப்புறுதி சேவைகள், நிதிச் சேவைகள், சுகாதார நடவடிக்கைகள், தொழில்முறைச் சேவைகள், தகவல் தொழில்நுட்ப நிரலாக்கம், நிரலாக்கம் மற்றும் ஒளிபரப்பு மற்றும் மொத்த மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் ஆகியவற்றின் பின்னடைவு காரணமாக 2022 ஆம் ஆண்டில் 2.0 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றது.

நிலையான (2015) சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி சரிந்தாலும் நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2021 ஆம் ஆண்டில் ரூபா 17,600.2 பில்லியனுடன் (ஐ.அ.டொ. 88.5 பில்லியன்) ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 37.2 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 24,147.7 பில்லியனாகக் (ஐ.அ.டொ. 77.1 பில்லியன்) காணப்பட்டமையானது இவ்வருடத்தில் அதிகரித்த விலை மட்டங்களின் தாக்கத்தைப் பிரதிபலிக்கிறது. அதற்கிணங்க, தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 3,997 இலிருந்து 2022 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 3,474 ஆகக் குறைந்துள்ளது.

அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை, உள்நாட்டு நாணயத்தின் மிகக்கூடியளவிலான பெறுமதித் தேய்வு மற்றும் உயர்வான வட்டி விகிதங்கள் ஆகியவற்றால் ஏற்பட்ட முதலீட்டுப் பொருட்களின் குறிப்பிடத்தக்க விலை அதிகரிப்பு காரணமாக 2022 ஆம் ஆண்டில் முதலீட்டுச் செலவினம் 28.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் பதிவான 8.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் தனியார் மற்றும் அரசாங்க செலவினங்களை உள்ளடக்கிய நுகர்வுச் செலவு 34.3 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்துள்ளது. பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியின் கணிசமான வளர்ச்சியின் பயனாக 2022 ஆம் ஆண்டில் நடைமுறைச் சந்தை விலைகளில் தேறிய வெளிப்புறக் கேள்வி 34.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு மேம்பட்டதுடன், இது இவ்வாண்டில் பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதியின் அதிகரிப்பினையும் விஞ்சியுள்ளது. 2021 ஆம் ஆண்டில் 17.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, 2022 ஆம் ஆண்டில் தேசிய சேமிப்புக்கள் 37.6 சதவீதம் வளர்ச்சியடைந்த அதே நேரத்தில், தேசிய சேமிப்பு இடைவெளி விகிதம் 33.1 சதவீதமாகக் குறைந்துள்ளது. மேலும், 2022 ஆம் ஆண்டில் முதலீட்டுடன் ஒப்பிடுகையில் சேமிப்பின் அதிகளவு வளர்ச்சியின் காரணமாக தேசிய சேமிப்பு முதலீட்டு இடைவெளியானது குறைந்துள்ளது.

அட்டவணை 2.2 | மொத்த உள்நாட்டு உற்பத்தி அடிப்படையில் (2015) நிலையான சந்தை விலைகளில் 2017 - 2022(அ)

ரூபா. மில்லியன்

	பொருளாதார செயற்பாடுகள்	2017	2018	2019	2020	2021	2022(ஆ)	2020/2021 மாற்றம் (%)	2021/2022 மாற்றம் (%)
	விவசாயம், காடாக்கம், மீன்பிடி	**889,557**	**945,292**	**949,582**	**941,046**	**949,929**	**906,505**	**0.9**	**-4.6**
1	தானியங்கள் (நெல் நீங்கலாக)	14,371	14,676	13,355	21,342	21,949	17,200	2.8	-21.6
2	நெல்	73,247	106,333	112,919	121,663	107,359	93,377	-11.8	-13.0
3	மரக்கறிகள்	104,540	105,072	102,037	111,088	109,147	99,960	-1.7	-8.4
4	கரும்பு, புகையிலை, நீண்ட காலப் பயிர்கள் அல்லாதவை	3,267	3,116	3,275	4,021	3,729	3,797	-7.3	1.8
5	பழங்கள்	63,514	70,906	77,200	81,823	72,949	73,310	-10.8	0.5
6	எண்ணெய் பிரித்தெடுக்கும் காய்கள் (தேங்காய், செவ்விளநீர், பனங்காய்)	85,798	89,706	102,800	92,197	102,490	111,315	11.2	8.6
7	தேயிலை (பச்சை இலைகள்)	73,767	75,219	72,733	67,971	73,741	62,005	8.5	-15.9
8	ஏனைய பிற பானப் பயிர்கள் (கோப்பி, கொக்கோ) முதலியன	1,407	1,748	1,302	1,613	1,352	1,229	-16.2	-9.1
9	நறுமணப் பொருட்கள், வாசனைப் பயிர்கள், மருந்தாக்கல் பயிர்கள்	86,727	91,543	90,880	93,776	98,021	101,235	4.5	3.3
10	இறப்பர்	25,583	26,050	24,029	24,081	25,571	23,863	6.2	-6.7
11	ஏனைய நீண்டகாலப் பயிர்கள்	26,157	27,185	28,751	29,781	26,963	27,513	-9.5	2.0
12	கால்நடை உற்பத்தி	90,822	94,582	90,284	86,907	94,039	81,874	8.2	-12.9
13	தாவரப் பரவல்	961	795	772	622	813	881	30.7	8.4

14	விவசாய ஒத்துழைப்பு செயற்பாடுகள்	16,811	23,159	22,969	26,102	29,810	34,202	14.2	14.7
15	விரகு, காடாக்கம்	51,611	44,606	43,133	42,587	44,440	51,611	4.4	16.1
16	ஆழ்கடல் மீன்பிடி, ஆழ்கடல் மீன் வளர்ப்பு	151,558	149,782	141,700	111,307	112,814	95,451	1.4	-15.4
17	நன்னீர் மீன்பிடி மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு	19,417	20,815	21,444	24,166	24,742	27,682	2.4	11.9
கைத்தொழில்		**4,145,813**	**4,101,467**	**3,933,728**	**3,724,566**	**3,937,880**	**3,309,764**	**5.7**	**-16.0**
18	அகழ்வு, சுரங்கக மறுத்தல்	331,386	322,522	318,658	284,079	287,969	198,661	1.4	-31.0
19	உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள்	855,603	896,813	929,371	980,863	1,014,150	869,715	3.4	-14.2
20	பிடவை, ஆடைகள் மற்றும் தோற்பொருட்கள்	441,181	463,618	469,028	416,312	473,911	512,399	-13.8	8.1
21	மரம், மரப்பொருள், தக்கை உற்பத்திகள் தளபாடம் நீங்கலாக	38,346	39,879	36,321	32,831	35,579	29,758	8.4	-16.4
22	காகித உற்பத்திகள், அச்சு மற்றும் ஊடக உற்பத்திகளின் மீள் உற்பத்தி	56,009	57,716	54,064	51,896	56,811	52,069	9.5	-8.3
23	சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் தார் வகை உற்பத்திகள்	21,395	19,846	24,630	22,108	15,492	6,474	-29.9	-58.2
24	இரசாயனப் பொருட்கள் மற்றும் அடிப்படை மருந்தாக்கல் பொருட்கள் உற்பத்தி	84,781	88,399	90,144	92,157	95,793	82,350	3.9	-14.0
25	இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் உற்பத்திகள்	102,246	101,890	98,429	81,182	97,436	67,507	20.0	-30.7
26	ஏனைய உலோக கனிப்பொருட்கள் அல்லாத உற்பத்திகள்	97,743	102,554	107,062	102,685	119,973	85,188	16.8	-29.0
27	அடிப்படை உலோகங்கள், பொருத்தப்பட்ட உலோகப் பொருட்கள்	76,380	84,102	80,312	77,859	81,174	58,781	4.3	-27.6
28	இயந்திரங்கள், சாதனங்கள்	63,885	64,638	66,114	65,187	73,090	59,181	12.1	-19.0
29	தளபாடம்	92,650	88,078	95,470	81,651	82,694	60,837	1.3	-26.4
30	ஏனைய இயந்திர சாதன தயாரிப்பு, பொருத்துதல், பழுதுபார்த்தல்	97,692	97,155	96,432	87,586	101,048	79,088	15.4	-21.7
31	மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டல் சேவை	159,607	175,518	184,041	180,176	188,924	177,783	4.9	-5.9
32	நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்	18,948	15,857	14,701	15,908	13,083	13,168	-17.8	0.6
33	கழிவுப் பொருட்கள், கழிவு, சுத்திகரித்தல் மற்றும் அகற்றல் செயற்பாடுகள்	25,562	27,271	29,253	28,960	27,992	29,088	-3.3	3.9
34	நிர்மாணம்	1,582,397	1,455,612	1,239,700	1,123,127	1,172,761	927,719	4.4	-20.9
சேவைகள்		**6,807,557**	**7,099,084**	**7,307,036**	**7,166,506**	**7,414,251**	**7,265,095**	**3.5**	**-2.0**
35	மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்	1,509,059	1,579,590	1,636,752	1,650,889	1,675,083	1,672,370	1.5	-0.2
36	பண்டசாலை உள்ளடங்கலாக பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து	1,342,326	1,370,263	1,398,230	1,313,312	1,325,233	1,372,116	0.9	3.5
37	தபால் மற்றும் விரைவுத் தபால் செயற்பாடுகள்	16,385	16,495	17,099	17,620	18,714	19,780	6.2	5.7
38	தங்குமிடம், உணவு மற்றும் குடிபானச் செயற்பாடுகள்	219,701	230,929	216,976	128,556	130,743	166,059	1.7	27.0
39	ஒலிபரப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒலி, ஒளி தயாரிப்புகள்	45,416	40,839	42,752	43,841	42,161	37,510	-3.8	-11.0
40	தொலைத்தொடர்பு	79,288	87,840	103,325	118,845	135,663	139,919	14.2	3.1
41	தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்ட மதியுரையும் மற்றும் தொடர்புபட்ட செயற்பாடுகளும்	143,360	158,565	175,634	194,893	243,971	238,455	25.2	-2.3
42	நிதிச்சேவை செயற்பாடுகள், துணை நிதிச்சேவை	439,437	511,418	510,367	557,357	596,106	530,274	7.0	-11.0
43	காப்புறுதி, மீள் காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியளிப்பு	95,004	111,838	120,550	117,595	148,665	78,509	26.4	-47.2
44	வதிவிட உரித்து உள்ளடங்கலாக ஆதன விற்பனை	549,511	580,367	610,231	604,259	630,570	554,473	4.4	-12.1
45	உயர் தொழில் சேவைகள்	271,832	282,095	297,462	287,781	301,890	289,841	4.9	-4.0
46	பொது நிருவாகம் பாதுகாப்பு கட்டாய சமூகப் பாதுகாப்பு	589,829	600,932	605,938	616,176	621,834	629,213	0.9	1.2
47	கல்வி	269,953	267,448	283,605	284,751	290,475	301,510	2.0	3.8
48	மனித தேகாரோக்கிய செயற்பாடுகள்,வதிவிட பராமரிப்பு, சமூகபணி செயற்பாடுகள்	219,153	228,368	235,136	246,735	260,482	238,638	5.6	-8.4
49	ஏனைய தனிப்பட்ட சேவை செயற்பாடுகள்	1,017,303	1,032,097	1,052,980	983,900	992,662	996,429	0.9	0.4
	அடிப்படை விலைகளில் மொத்த பெறுமதி சேர்கைகள்	**11,842,927**	**12,145,843**	**12,190,346**	**11,832,118**	**12,302,060**	**11,481,364**	**4.0**	**-6.7**
	(+) குறைந்த மானியங்கள் பொருட்கள் மீதான வரிகள்	**1,093,685**	**1,089,616**	**1,015,930**	**763,432**	**735,874**	**536,485**	**-3.6**	**-27.1**
	நிலையான விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி	**12,936,612**	**13,235,458**	**13,206,276**	**12,595,550**	**13,037,934**	**12,017,849**	**3.5**	**-7.8**

மூலம்: தொகை மதிப்பீடு புள்ளிவிபரவியல் திணைக்களம்
(அ) திருத்தப்பட்ட
(ஆ) தற்காலிகமானது

அட்டவணை 2.3 | மொ.உ.உற்பத்தி வளர்ச்சி (%) இல் துறைரீதியான பகிர்வு (2015) நிலையான விலைகள்

	பொருளாதார செயற்பாடுகள்	2017	2018	2019	2020	2021	2022(ஆ)
	விவசாயம், காடாக்கம், மீன்பிடி	**-1.8**	**6.3**	**0.5**	**-0.9**	**0.9**	**-4.6**
1	தானியங்கள் (நெல் நீங்கலாக)	-10.0	2.1	-9.0	59.8	2.8	-21.6
2	நெல்	-9.7	45.2	6.2	7.7	-11.8	-13.0
3	மரக்கறிகள்	-5.5	0.5	-2.9	8.9	-1.7	-8.4
4	கரும்பு, புகையிலை, நீண்ட காலப் பயிர்கள் அல்லாதவை	-16.1	-4.6	5.1	22.8	-7.3	1.8
5	பழங்கள்	7.3	11.6	8.9	6.0	-10.8	0.5
6	எண்ணெய் பிரித்தெடுக்கும் காய்கள் (தேங்காய், செவ்விளநீர், பனங்காய்)	-17.0	4.6	14.6	-10.3	11.2	8.6
7	தேயிலை (கொழுந்து)	4.4	2.0	-3.3	-6.5	8.5	-15.9
8	ஏனைய பிற பானப் பயிர்கள் (கோப்பி, கொக்கோ முதலியன)	-5.7	24.2	-25.5	23.9	-16.2	-9.1
9	வாசனைப் பொருட்கள், வாசனைப் பயிர்கள், மருந்தாக்கல் பயிர்கள்	0.6	5.6	-0.7	3.2	4.5	3.3
10	இறப்பர்	4.3	1.8	-7.8	0.2	6.2	-6.7
11	ஏனைய நீண்டகாலப் பயிர்கள்	2.8	3.9	5.8	3.6	-9.5	2.0
12	கால்நடை உற்பத்தி	11.2	4.1	-4.5	-3.7	8.2	-12.9
13	தாவரப் பரவல்	13.2	-17.3	-2.9	-19.5	30.8	8.3
14	விவசாய ஒத்துழைப்பு செயற்பாடுகள்	-27.4	37.8	-0.8	13.6	14.2	14.7
15	விறகு, காடாக்கம்	12.0	-13.6	-3.3	-1.3	4.4	16.1
16	ஆழ்கடல் மீன்பிடி, ஆழ்கடல் மீன் வளர்ப்பு	-1.7	-1.2	-5.4	-21.4	1.4	-15.4
17	நன்னீர் மீன்பிடி மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு	10.7	7.2	3.0	12.7	2.4	11.9
	கைத்தொழில்	**13.0**	**-1.1**	**-4.1**	**-5.3**	**5.7**	**-16.0**
18	அகழ்வு, சுரங்க மறுத்தல்	11.7	-2.7	-1.2	-10.9	1.4	-31.0
19	உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள்	2.1	4.8	3.6	5.5	3.4	-14.2
20	பிடவை, ஆடைகள் மற்றும் தோற்பொருட்கள்	5.3	5.1	1.2	-11.2	13.8	8.1
21	மரம், மரப்பொருள், தக்கை உற்பத்திகள் தளபாடம் நீங்கலாக	0.0	4.0	-8.9	-9.6	8.4	-16.4
22	காகித உற்பத்திகள், அச்சு மற்றும் ஊடக உற்பத்திகளின் மீள் உற்பத்தி	5.5	3.0	-6.3	-4.0	9.5	-8.3
23	சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் தார் வகை உற்பத்திகள்	-3.8	-7.2	24.1	-10.2	29.9	-58.2
24	இரசாயனப் பொருட்கள் மற்றும் அடிப்படை மருந்தாக்கல் பொருட்கள் உற்பத்தி	4.9	4.3	2.0	2.2	3.9	-14.0
25	இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் உற்பத்திகள்	11.4	-0.3	-3.4	-17.5	20.0	-30.7
26	ஏனைய உலோக கனிப்பொருட்கள் அல்லாத உற்பத்திகள்	11.7	4.9	4.4	-4.1	16.8	-29.0
27	அடிப்படை உலோகங்கள், பொருத்தப்பட்ட உலோகப் பொருட்கள்	15.6	10.1	-4.5	-3.1	4.3	-27.6
28	இயந்திரங்கள், சாதனங்கள்	10.0	1.2	2.3	-1.4	12.1	-19.0
29	தளபாடம்	1.5	-4.9	8.4	-14.5	1.3	-26.4
30	ஏனைய இயந்திர சாதன தயாரிப்பு, பொருத்துதல், பழுதுபார்த்தல்	10.2	-0.6	-0.7	-9.2	15.4	-21.7
31	மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டல் சேவை	3.6	10.0	4.9	-2.1	4.9	-5.9
32	நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்	6.4	-16.3	-7.3	8.2	-17.8	0.6
33	கழிவுப் பொருட்கள், கழிவு, சுத்திகரித்தல் மற்றும் அகற்றல் செயற்பாடுகள்	10.2	6.7	7.3	-1.0	-3.3	3.9
34	நிர்மாணம்	27.3	-8.0	-14.8	-9.4	4.4	-20.9
	சேவைகள்	**3.6**	**4.3**	**2.9**	**-1.9**	**3.5**	**-2.0**
35	மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்	3.8	4.7	3.6	0.9	1.5	-0.2
36	பண்டசாலை உள்ளடங்கலாக பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து	3.3	2.1	2.0	-6.1	0.9	3.5
37	தபால் மற்றும் விரைவுத் தபால் செயற்பாடுகள்	2.7	0.7	3.7	3.0	6.2	5.7
38	தங்குமிடம், உணவு மற்றும் குடிபானச் செயற்பாடுகள்	3.1	5.1	-6.0	40.8	1.7	27.0
39	ஒலிபரப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒலி, ஒளி தயாரிப்புகள்	-0.7	-10.1	4.7	2.5	-3.8	-11.0
40	தொலைத்தொடர்பு	12.1	10.8	17.6	15.0	14.2	3.1
41	தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்ட மதியுரையும் மற்றும் தொடர்புபட்ட செயற்பாடுகளும்	14.8	10.6	10.8	11.0	25.2	-2.3
42	நிதிச்சேவை செயற்பாடுகள், துணை நிதிச்சேவை	8.4	16.4	-0.2	9.2	7.0	-11.0
43	காப்புறுதி, மீள் காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியளிப்பு	3.4	17.7	7.8	-2.5	26.4	-47.2
44	வதிவிட உரித்து உள்ளடங்கலாக ஆதன விற்பனை	7.3	5.6	5.1	-1.0	4.4	-12.1
45	உயர் தொழில் சேவைகள்	1.9	3.8	5.4	-3.3	4.9	-4.0
46	பொது நிருவாகம் பாதுகாப்பு கட்டாய சமூகப் பாதுகாப்பு	-4.3	1.9	0.8	1.7	0.9	1.2
47	கல்வி	5.3	-0.9	6.0	0.4	2.0	3.8
48	மனித தேகாரோக்கிய செயற்பாடுகள், குடியிருப்பு பராமரிப்பு மற்றும் சமூக பணி நடவடிக்கைகள்	5.6	4.2	3.0	4.9	5.6	-8.4
49	ஏயை தனிப்பட்ட சேவை செயற்பாடுகள்	2.9	1.5	2.0	-6.6	0.9	-0.4
	அடிப்படை விலைகளில் மொத்த பெறுமதி சேர்க்கை	**6.3**	**2.6**	**0.4**	**-2.9**	**4.0**	**-6.7**
	(+) குறைந்த மானியங்கள் பொருட்கள் மீதான வரிகள்	**8.6**	**-0.4**	**-6.8**	**-24.9**	**-3.6**	**-27.1**
	நிலையான விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி	**6.5**	**2.3**	**-0.2**	**-4.6**	**3.5**	**-7.8**

மூலம்: தொகை மதிப்பீடு புள்ளிவிபரவியல் திணைக்களம்
(அ) திருத்தப்பட்ட
(ஆ) தற்காலிகமானது

விவசாயத் துறை

2021 ஆம் ஆண்டில் பதிவான 0.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் பெறுமதி சேர்க்கை நியதிகளில் விவசாயத் துறையானது 4.6 சதவீதத்தால் சரிவுற்றது. இச் சரிவு முக்கியமாக தானியங்கள், தேயிலை, அரிசி, பிற பானப் பயிர்கள், காய்கறிகள், இரப்பர், கடல் மீன்பிடித்துறை மற்றும் கடல்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் விலங்கு உற்பத்தி போன்ற விவசாய நடவடிக்கைகளின் பின்னடைவால் ஏற்பட்டதாகும். உரங்கள் மற்றும் வேளாண் இரசாயனங்களின் பற்றாக்குறை, உற்பத்திச் செலவில் கணிசமான அதிகரிப்பு மற்றும் எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்ட இடையூறுகள் விவசாயத் துறையின் ஒட்டுமொத்த செயலாற்றுகைக்கு இடையூறாக இருந்தன. இருப்பினும், காடு வளர்ப்பு மற்றும் மரம் வெட்டுதல், நன்னீர் மீன்பிடித்தல் மற்றும் நன்னீர் உயிரின வளர்ப்பு, எண்ணெய்ப் பயிர்கள், நறுமணப் பொருட்கள், வாசனை, மருந்து மற்றும் மருந்தாக்கப் பயிர்கள் மற்றும் பிற வற்றாத பயிர்கள் போன்றவற்றின் நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டில் சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

வரைபு 2.3 | விவசாயத்துறையின் பகுதிகள் - 2022



மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம்

நெல்

2021 ஆம் ஆண்டில் 5.15 மில்லியன் மெட்ரிக் தொன்களைக் கொண்ட மகத்தான அறுவடையைத் தொடர்ந்து, 2022 ஆம் ஆண்டில் வருடாந்த நெல் உற்பத்தியானது 34.1 சதவிகிதத்தினால் வீழ்ச்சியடைந்து 3.39 மில்லியன் மெட்ரிக் தொன்களைப் பதிவுசெய்ததுடன் இத்தொகையானது 2017 ஆம் ஆண்டின் பின்னர் பதிவுசெய்யப்பட்ட மிகக் குறைந்த வருடாந்த உற்பத்தியாகும். 2021/22 பெரும் போகப் பருவத்தில் நெல் அறுவடையில் 36.9 சதவீத வீழ்ச்சியும் 2022 சிறு போக அறுவடையில் 30.0 சதவீத வீழ்ச்சியும் இணைந்து இப்பின்னடைவினை ஏற்படுத்தியுள்ளது. 2021 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நீக்கப்பட்ட, கனிம உரங்கள் மற்றும் பிற வேளாண் இரசாயனங்கள் இறக்குமதி மீதான தடையின் விளைவுகள் மற்றும் தேவையான உரங்களை இறக்குமதி செய்ய அந்நிய செலாவணி பற்றாக்குறை ஆகியவற்றினால் ஏற்பட்ட கடுமையான உரத் தட்டுப்பாடு நெல் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. 2021 ஆம் ஆண்டில் 1,126,605 ஹெக்ட்டெயராக இருந்த தேறிய பயிர்செய்கை நிலப்பரப்பு, 2022 ஆம் ஆண்டில் 1.1 சதவீதத்தினால் சற்றே குறைந்து 1,114,246 ஹெக்ட்டெயரினைப் பதிவுசெய்தது. அதன்படி, 2021 ஆம் ஆண்டில் ஹெக்ட்டெயரொன்றுக்கு 4,571 கிலோ கிராமாகக் காணப்பட்ட சராசரி நெல் அறுவடை 2022 ஆம் ஆண்டில் ஹெக்ட்டெயரொன்றுக்கு 3,045 கிலோ கிராம் வரை குறைந்துள்ளது.

2022 ஆம் ஆண்டின் மொத்த நெல் உற்பத்திக்கு சமமான அரிசி உற்பத்தியானது சுமார் 2.1 மில்லியன் மெட்ரிக் தொன்களாக இருந்ததுடன், இது வீட்டுத்தேவைக்கு 11 மாதங்களுக்குத் தேவையான அரிசியின் கேள்வியைப் பூர்த்தி செய்ய மட்டுமே போதுமானதாக இருந்தது. ஆகையால் 2022 ஆம் ஆண்டில் உள்நாட்டு அரிசித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அரிசி தட்டுப்பாட்டினாலேற்பட்ட விலை அழுத்தத்தைக் குறைப்பதற்கும் அரசாங்கம் 783,420 மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்தது. எவ்வாறாயினும், ஆண்டின் பிற்பகுதியில் அரிசியின் கிடைப்பனவைக் கருத்தில் கொண்டு, 2022 திசெம்பர் 09 முதல், சில அரிசிவகைகள் நீங்கலாக, அரிசி இறக்குமதி தடை செய்யப்பட்டது.

சந்தைக்கான வழங்கலை தொடர்ந்து மேற்கொள்ளும் அதேநேரத்தில் நெற் பயிர்செய்கையாளர்களுக்காக நியாயமான விலையை உறுதி செய்யும் வகையில், அரசாங்க நெல் கொள்வனவுத் திட்டம் தொடரப்பட்டதுடன் நெல்லிற்காக உத்தரவாத விலையும் விதிக்கப்பட்டது. சம்பா, நாடு, கீரி சம்பா ஆகியவற்றின் கிலோ ஒன்றிற்கான உத்தரவாத விலை முறையே ரூபா 92.00, ரூபா 90.00 மற்றும் ரூபா 95.00 என்றவாறு நிர்ணயிக்கப்பட்டதுடன், 2021/2022 பெரும்போகப் பருவத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையால் 71,280 மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்ய முடிந்தது. மீளாய்விற்கான ஆண்டில் நெல் உற்பத்திச் செலவு மேலும் அதிகரித்ததன் காரணமாக, 2022 சிறுபோகப் பருவத்தில் சம்பா, நாடு, கீரி சம்பா ஆகிய நெல் வகைகளின் கிலோ ஒன்றிற்கான உத்தரவாத விலை முறையே ரூபா 125.00, ரூபா 120.00 மற்றும் ரூபா 130.00 என்றவாறு விதிக்கப்பட்டது. எவ்வாறாயினும், நிதிப் பற்றாக்குறை காரணமாக, சிறு போகப் பருவத்தில் 7,076 மெட்ரிக் தொன் நெல்லை மட்டுமே நெல் சந்தைப்படுத்தல் சபையால் கொள்வனவு செய்ய முடிந்தது.

நெல் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியும் உற்பத்திச் செலவு அதிகரிப்பும், 2022 ஆம் ஆண்டில் அரிசியின் விலைகள் அதிகரிக்கக் காரணமாகின. அதற்கிணங்க 2022 ஆம் ஆண்டில் சம்பா மற்றும் நாடு ஆகியவற்றின் சராசரி சில்லரை விலைகள் முறையே கிலோ கிராமொன்றிற்கு ரூபா 209.19 ஆகவும் கிலோ கிராமொன்றிற்கு ரூபா 213.36 ஆகவும் காணப்பட்டது. சந்தையில் அரிசியின் சில்லறை விலையை நிலைநிறுத்துவதற்காக அரசாங்கத்தினால் நாடு, சம்பா மற்றும் கீரி சம்பா ஆகியவற்றிற்கு கிலோ கிராமொன்றிற்கு அதிகபட்ச சில்லறை விலையாக முறையே ரூபா 220.00, ரூபா 230.00 மற்றும் ரூபா 260.00 என்றவாறு 2022, மே 02 ஆம் திகதி முதல் விதிக்கப்பட்டது. மிகவும் நலிவடையும் துறைகளுக்கு நிவாரணம் அளிக்கும் நோக்கில், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு மாதமொன்றிற்கு 10 கிலோ கிராம் அரிசியை விநியோகிக்கும் பொருட்டு, அரசாங்கமானது 2022/23 பெரும்போகப் பருவத்தில் நாடு நெல்லை கிலோ கிராமொன்றிற்கு ரூபா 100.00 என்ற விலையில் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்தது.

தேயிலை

பெறுமதி சேர்க்கை நியதிகளில், தேயிலை உப - துறையானது 2021 ஆம் ஆண்டில் 8.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில் 15.9 சதவீதத்தினால் சரிந்தது. 2021 ஆம் ஆண்டில் 299.5 மில்லியன் கிலோ கிராமாகக் காணப்பட்ட தேயிலை உற்பத்தி, முக்கியமாக உள்நாட்டில் உரங்கள் மற்றும் வேளாண் இரசாயனங்களின் கடுமையான பற்றாக்குறையின் காரணமாக 2022 ஆம் ஆண்டில் 251.5 மில்லியன் கிலோ கிராம் வரை 16.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

கொழும்பு தேயிலை ஏலத்தில் 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட சராசரியாக கிலோ கிராமொன்றிற்கு ரூபா 619.15 தேயிலை விலைகள், 105.2 சதவீதத்தால் அதிகரித்து 2022 ஆம் ஆண்டில் கிலோ கிராமொன்றிற்கு ரூபா 1,270.50 வினைப் பதிவு செய்து, வரலாற்று ரீதியில் மிக உயர்ந்த மட்டத்தை எட்டியது. தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலையைப் (எப்ஓபீ) பொறுத்தவரை, 2021 ஆம் ஆண்டில் கிலோ கிராமொன்றிற்கு ரூபா 920.76 உடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 78.5 சதவீதத்தினால் அதிகரித்து கிலோ கிராமொன்றிற்கு ரூபா 1,643.11 ஆக இருந்த அதே சமயம், ஐ.அ.டொ. பெறுமதியில் தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை 2021 ஆம் ஆண்டில் கிலோ கிராமொன்றிற்கு ஐ.அ.டொ. 4.63 இலிருந்து 2022 ஆம் ஆண்டில் கிலோ கிராமொன்றிற்கு ஐ.அ.டொ. 5.03 வரை 8.7 சதவீதத்தினால் அதிகரித்தது. உள்நாட்டு உற்பத்தியின் வீழ்ச்சிக்கு மத்தியில் 2022 ஆம் ஆண்டு சராசரி தேயிலை விலையில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு, இலங்கை தேயிலைச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட அளவு வீழ்ச்சியடைந்ததும் ஒரு காரணமாகிய அதேவேளை இலங்கை ரூபாவின் பெறுமதித் தேய்வும் ரூபாவின் நியதிகளில் விலை உயர்வுக்கு பங்களித்தது.

இறப்பர்

பெறுமதி சேர்க்கை அடிப்படையில், இறப்பர் உப - துறையானது, 2021 ஆம் ஆண்டில் 6.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், இறப்பர் தோட்டப் பகுதிகளில் பாதகமான காலநிலை, உரத் தட்டுப்பாடு மற்றும் பெஸ்ரலோரியோப்சிஸ் நோய் பரவல் போன்ற காரணங்களால் 2022 ஆம் ஆண்டில் 6.7 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. அதற்கிணங்க, 2021 ஆம் ஆண்டில் 76.9 மில்லியன் கிலோ கிராமாகக் காணப்பட்ட மொத்த இறப்பர் உற்பத்தி 2022 ஆம் ஆண்டில் 70.9 மில்லியன் கிலோ கிராம் வரை 7.8 சதவீதத்தினால் குறைந்துள்ளது. கொவிட்-19 தொற்றுநோய் மறைந்தவுடன் உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளில் மருத்துவ கையுறைகளுக்கான கேள்வி குறைந்ததன் காரணமாக, கைத்தொழில்துறையின் உள்நாட்டு பதனிடப்படாத இறப்பர் நுகர்வும் 2021 ஆம் ஆண்டில் 133.9 மில்லியன் கிலோ கிராமிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 117.3 மில்லியன் கிலோ கிராமாக 12.4 சதவீதத்தினால் சரிவுற்றது.

உலக சந்தையில் கேள்வி அதிகரித்ததன் காரணமாக 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் கொழும்பு இறப்பர் ஏலத்தில் பெரும்பாலான இறப்பர் வகைகளின் விலைகள் வரலாற்று ரீதியாக உயர் மட்டத்தை எட்டியது. இருப்பினும், ஆண்டின் பிற்பகுதியில், உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளில் இறப்பர் சார்ந்த உற்பத்திகளுக்கான கேள்வி குறைந்ததன் காரணமாக இறப்பரின் விலை வீழ்ச்சியடைந்தது. குறைந்துள்ளது. அதற்கிணங்க, இறப்பரின் சராசரி FOB விலை, 2021 ஆம் ஆண்டில் கிலோ கிராமொன்றிற்கு ஐ.அ.டொ. 2.72 இலிருந்து 2022 ஆம் ஆண்டில் கிலோ கிராமொன்றிற்கு ஐ.அ.டொ. 2.73 மாத்திரமே அதிகரித்தது.

தெங்கு உற்பத்தி

2021 ஆம் ஆண்டில் 3,120 மில்லியன் காய்களைப் பதிவுசெய்த தேங்காய் உற்பத்தி, தெங்குப் பயிர்செய்கைப் பிரதேசங்களில் நிலவிய சாதகமான காலநிலை நிலைமைகளின் காரணமாக 2022 ஆம் ஆண்டில் 8.7 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் 3,391 மில்லியன் காய்களைப் பதிவுசெய்தது. இது அதிகபட்ச வருடாந்த உற்பத்தியாகும். இந்த சாதகமான விளைவுகள், ஆண்டு முழுவதும் நிலவிய மட்டுப்படுத்தப்பட்ட இரசாயன உரங்களின் பயன்பாட்டினால் ஏற்பட்ட பாதகமான தாக்கத்தை ஈடுகட்டியுள்ளன. இதனால், தென்னை சார்ந்த சில கைத்தொழில்களும் பயனடைந்துள்ளன. உலர் தேங்காய் உற்பத்தியானது 2021 ஆம் ஆண்டில் 33,289 மெட்ரிக் தொன்னிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 35,030 மெட்ரிக்

தொன்னாக 5.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதுடன் தேங்காய் எண்ணெய் உற்பத்தியும் 59.4 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்து 68,590 மெட்ரிக் தொன்னினைப் பதிவு செய்துள்ளது. முக்கியமாக தேங்காய் எண்ணெய் மற்றும் பாம் எண்ணெய் இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் எண்ணெய் உற்பத்திக்கு போதுமான காய்களின் கிடைப்பனவு ஆகியவை, இவ் அதிகரிப்பிற்கு காரணமாகியுள்ளதுடன் தேங்காய்ப் பால் மா உற்பத்தியும் 2022 ஆம் ஆண்டில் 15.8 சதவீதத்தினால் அதிகரித்தது.

தேங்காய் உற்பத்தி அதிகரித்த போதிலும், 2022 ஆம் ஆண்டில் தேங்காயொன்றின் சராசரி சில்லறை விலையானது ரூபா 91.36 ஆகக் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் தேங்காயொன்றின் சராசரி சில்லறை விலையாகிய ரூபா 83.90 உடன் ஒப்பிடுகையில் இது 8.9 சதவீத அதிகரிப்பாகும். தேங்காய் ஏல விலையானது 2021 ஆம் ஆண்டில் சராசரியாக தேங்காயொன்றிற்கு ரூபா 56.51 இலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 60.14 வரை 6.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கிடையில், தேங்காயெண்ணெய் போத்தல் ஒன்றின் (750 மில்லி லீற்றர்) சராசரி சில்லறை விலையானது 2022 ஆம் ஆண்டில் ரூபா 520.19 ஆகக் காணப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டில் ரூபா 443.42 உடன் ஒப்பிடும்போது இது 17.3 சதவீத அதிகரிப்பாகும். உலர்ந்த தேங்காயின் விலையும் 2021 ஆம் ஆண்டில் கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 537.25 ஆகக் காணப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டில் கிலோ கிராம் ஒன்றிற்கு 0.3 சதவீதத்தினால் சற்றே அதிகரித்து ரூபா 538.75 இனைப் பதிவுசெய்தது. உலர்ந்த தேங்காய், தேங்காய் எண்ணெய் மற்றும் கொப்பரை ஆகியவற்றின் மொத்த ஏற்றுமதி அளவு 2022 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்து, உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பின் சாதகமான பங்களிப்பினைப் பிரதிபலிக்கச் செய்தது.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

உள்நாட்டு விநியோகச் சங்கிலிகள் மற்றும் உரத் தட்டுப்பாடுகளில் சிக்கல்கள் இருந்தபோதிலும், பெறுமதி சேர்க்கை நியதிகளில் சிறு ஏற்றுமதி பயிர் உப துறையானது 2021 ஆம் ஆண்டில் 4.5 சதவீதமாகவும் 2022 ஆம் ஆண்டில் 3.3 சதவீதமாகவும் வளர்ந்தது. இலவங்கப்பட்டை (கருவா) கிராம்பு, ஏலக்காய், கோப்பி, கொக்கோ, சாதிக்காய், வெற்றிலை போன்ற நறுமணப் பொருட்களின் உற்பத்தி அதிகரிப்புடன், சிறு ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் உற்பத்தியானது 2021 ஆம் ஆண்டில் 143,165 மெட்ரிக் தொன்னிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 186,962 மெட்ரிக் தொன் வரை 30.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

சிறு ஏற்றுமதி பயிர்களின் மொத்த ஏற்றுமதி அளவு 7.0 சதவிகிதத்தினால் சரிவுற்ற அதே நேரத்தில், ரூபாய் நியதிகளிலமைந்த ஏற்றுமதி வருமானமானது 2022 ஆம் ஆண்டில் 44.8 சதவிகிதத்தினால் அதிகரித்துள்ளது. இலவங்கப்பட்டை (கருவா) ஏற்றுமதியின் வருமானம் 2022 ஆம் ஆண்டில் 50.1 சதவீதத்தால் கணிசமானளவு அதிகரித்து, ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் ஏற்றுமதி வருமானத்தின் அதிகரிப்பிற்குப் பெருமளவில் பங்களித்தது. 2022 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழுவிடமிருந்து (EUC) இலங்கை இலவங்கப்பட்டைக்கான புவியியல் அடையாள (GI) சான்றிதழும் பெறப்பட்டது. நல்ல விவசாய நடைமுறைகள் (GAP) மற்றும் நல்ல உற்பத்தி நடைமுறைகள் (GMP) ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 2.4 | சிறு ஏற்றுமதி விவசாய பயிர்களின் உற்பத்தியும் ஏற்றுமதியும் (மெ.தொன்)

பயிர்	உற்பத்தி						ஏற்றுமதி *					
	2017	2018	2019	2020	2021	2022(a)	2017	2018	2019	2020	2021	2022(அ)
கறுவா	22,341	20,398	20,352	20,866	22,872	23,764	16,617	17,537	17,480	19,090	19,195	18,519
மிளகு	29,546	22,551	22,156	23,970	25,047	44,090	13,309	13,535	8,335	9,542	18,575	11,805
கொக்கோ	471	413	548	612	658	1,221	2,584	296	520	255	159	67
ஏலம்	113	86	69	86	104	690	839	108	13	1	3	3
கராம்பு	6,413	3,360	4,786	3,512	3,837	5,722	7,806	3,279	5,126	2,597	6,487	2,338
சாதிக்காய்	3,545	4,180	5,119	2,751	2,818	3,618	2,043	1,938	3,417	2,451	2,651	2,604

மூலம் : இலங்கை மத்திய வங்கி மற்றும் இலங்கை சுங்கம்
(அ) தற்காலிகமானது
* மீள் ஏற்றுமதியுடன்

ஏனைய பயிர்கள்

2021 ஆம் ஆண்டில் 2.8 சதவீத சாதகமான வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, முக்கியமாக சந்தையில் உரம் மற்றும் வேளாண் இரசாயனங்களின் பற்றாக்குறை காரணமாக 2022 ஆம் ஆண்டில் பெறுமதி சேர்க்கை அடிப்படையில் தானியங்கள் (அரிசி தவிர) உப துறை 21.6 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. ஏனைய களப்பயிர்ச்செய்கைப் பயிர்களின் ஒட்டுமொத்த உற்பத்தி 2022 ஆம் ஆண்டில் 37.5 சதவீதம் குறைவடைந்து 526,803 மெட்ரிக் தொன்களாக இருந்ததுடன் பற்றாக்குறையின் தாக்கம் இறக்குமதிகளின் மூலம் பெருமளவு குறைக்கப்பட்டது. மக்காச்சோள உற்பத்தி 2022 ஆம் ஆண்டில் 45.2 சதவீதம் குறைந்து 259,040 மெட்ரிக் தொன்னாக இருந்ததன் விளைவாக கால்நடைத் தீவனத் தொழிலின் தேவையைப் பூர்த்தி

செய்வதற்காக சோளத்தின் இறக்குமதி 190,686 மெட்ரிக் தொன்னாக அதிகரிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் உருளைக்கிழங்கு உற்பத்தி 37.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 47,614 மெட்ரிக் தொன்னாக இருந்த அதே நேரத்தில் உருளைக்கிழங்கு இறக்குமதி முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 31.8 சதவீதம் அதிகரித்துள்ளது. பெரிய வெங்காய உற்பத்தியும் 2022 ஆம் ஆண்டில் 73.0 சதவீதத்தினால் குறைந்து 17,799 மெட்ரிக் தொன்னாக இருந்தது. இதே ஆண்டில் பெரிய வெங்காயத்தின் இறக்குமதி 2.5 சதவீதம் அதிகரித்து 263,781 மெட்ரிக் தொன்னினைப் பதிவுசெய்தது.

காய்கறிகளின் உற்பத்தி 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 1,669,515 மெட்ரிக் தொன்களுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் 4.9 சதவீதத்தினால் சரிவடைந்து 1,588,256 மெட்ரிக் தொன்னாக இருந்தது. 2022 ஆம் ஆண்டில் குறைந்த உற்பத்தி மற்றும் எரிபொருள் பற்றாக்குறையால் ஏற்பட்ட இடைக்கால விநியோகச் சங்கிலி சீர்குலைவுகள் காரணமாக காய்கறிகளின் விலைகளும் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டன. 2022 ஆம் ஆண்டில், பழங்களின் உற்பத்தி முந்தைய ஆண்டை விட 26.9 சதவீதம் குறைந்துள்ளது. தோடம்பழம், எலுமிச்சை, ரம்புட்டான், ஆனைக்கொய்யா மற்றும் முலாம்பழம் ஆகியவற்றின் உற்பத்தியில் கணிசமான வீழ்ச்சியும், மாம்பழம், பப்பாளி, வாழைப்பழம் மற்றும் அன்னாசிப்பழம் ஆகியவற்றின் உற்பத்தியில் அதிகரிப்பும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் வாழைப்பழம் மற்றும் பப்பாளி உட்பட அதிகரித்த உற்பத்தியுடன், ஐ.அ.டொ. 37.6 மில்லியன் பெறுமதியான 41,526 மெட்ரிக் தொன் பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள அதேவேளை, ஐ.அ.டொ. 42.2 மில்லியன் பெறுமதியான 32,591 மெட்ரிக் தொன் பழங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

பண்ணை விலங்குகள்

பெறுமதி சேர்க்கை அடிப்படையில், விலங்கு உற்பத்தி உப துறையானது, 2021 ஆம் ஆண்டில் 8.2 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில் 12.9 சதவீதத்தால் சரிவுற்றது. 2021 ஆம் ஆண்டில் பதிவான 513 மில்லியன் லீற்றருடன் ஒப்பிடுகையில், கால்நடைத் தீவனங்களின் தட்டுப்பாடு மற்றும் அதிக விலை, மேய்ச்சல் மற்றும் தீவன சாகுபடிக்கு தேவையான இரசாயன உரங்கள் கிடைக்காமை மற்றும் களஞ்சிய மற்றும் போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றிலுள்ள சிரமங்கள் போன்ற காரணங்களால் 2022 ஆம் ஆண்டில் மொத்த பால் உற்பத்தி 1.3 சதவீதம் குறைந்து 506 மில்லியன் லீற்றர்களைக் கொண்டிருந்தது. கோழி வளர்ப்புக்கான போதுமான தீவனப் பொருட்கள் மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தீவனங்களுக்கான உள்ளீட்டுப் பொருட்களின் பற்றாக்குறை காரணமாக 2022 ஆம் ஆண்டில் கோழி வளர்ப்புத் துறையும் பின்னடைவைச் சந்தித்தது. இதன் விளைவாக, 2021 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 1,954 மில்லியன் முட்டைகளுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் முட்டை உற்பத்தி 5.4 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்று, 1,849 மில்லியன் முட்டைகளாக இருந்தது. இதற்கிடையில், கோழியிறைச்சி உற்பத்தியும் 2021 ஆம் ஆண்டில் 236,790 மெட்ரிக் தொன்னிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 3.7 சதவீதம் குறைந்து 228,130 மெட்ரிக் தொன்னாக வீழ்ச்சியடைந்தது.

கடல் மற்றும் உள்நாட்டு மீன்பிடித் துறை

மீன்பிடி நடவடிக்கைகளில், குறிப்பாக கடல் மீன்பிடி நடவடிக்கைகளில் உள்நாட்டு எரிபொருள் பற்றாக்குறையால் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக 2022 ஆம் ஆண்டில் மொத்த மீனுற்பத்தி 8.9 சதவீதம் வீழ்ச்சியடைந்து 397,230 மெட்ரிக் தொன்னைக் கொண்டிருந்தது. அதன்படி, பெறுமதி சேர்க்கை அடிப்படையில், கடல் மீன்பிடி மற்றும் கடல் உயிரின வளர்ப்பு உப துறையானது 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 1.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 15.4 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. எவ்வாறாயினும், பெறுமதி சேர்க்கை நியதிகளில் நன்னீர் மீன்பிடி மற்றும் நன்னீர் உயிரின வளர்ப்பு உப துறையானது 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 2.4 சதவீத மிதமான வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது நீர்நிலைகளின் சரியான பராமரிப்பு மற்றும் அதிகரித்த நீர்த்தேக்கங்களின் சேமிப்பு காரணமாக, 2022 ஆம் ஆண்டில் 11.9 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

கைத்தொழில் துறை

பெறுமதி சேர்க்கை நியதிகளில், கைத்தொழில் துறையானது முக்கியமாக கட்டுமான நடவடிக்கைகள், சுரங்கம் அகழ்வு மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் மற்றும் புடைவை, ஆடை மற்றும் தோல் பொருட்கள் தவிர உற்பத்தி நடவடிக்கைகளின் பின்னடைவு காரணமாக, 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 5.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில் 16.0 சதவீதத்தினால் கணிசமாக சுருக்கமடைந்தது. நீடித்த எரிசக்தி நெருக்கடி, முக்கிய மூலப்பொருட்களின் பற்றாக்குறை மற்றும் குறைந்த கேள்வி நிலைமைகள் ஆகியவை ஆண்டு முழுவதும் கைத்தொழில் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த செயலாற்றகையைத் தடுத்துள்ளன. இருப்பினும், புடைவை உற்பத்தி, ஆடை ஆணிகள் மற்றும் தோல் சார்ந்த பொருட்கள், கழிவுநீர், கழிவு சுத்திகரிப்பு மற்றும் அகற்றும் நடவடிக்கைகள் மற்றும் நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் விநியோக நடவடிக்கைகள் ஆகியவை 2022 ஆம் ஆண்டில் விரிவடைந்தன.

வரைபு 2.4 | கைத்தொழிற் துறையின் பகுதிகள் - 2022



மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம்

சுரங்கம் அகழ்வும் கல்லுடைத்தலும்

2021 ஆம் ஆண்டில் 1.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், பெறுமதி சேர்க்கை நியதிகளில் சுரங்கம் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டில் 31.0 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. இந்த நடவடிக்கைகள் முக்கியமாக மணலகழ்வு போன்ற கட்டுமான நடவடிக்கைகளுக்கு உள்ளீடுகளை வழங்கும் சுரங்க நடவடிக்கைகளைக் கொண்டிருந்தது. இரத்தினச் சுரங்கத்தில் ஏற்பட்ட பின்னடைவை பிரதிபலிக்கும் வகையில், 2022 ஆம் ஆண்டில் ஏற்றுமதி அளவுக்கான இரத்தினக்கற்கள் 8.9 சதவீத சரிவைப் பதிவு செய்தது.

உற்பத்தி

2021 ஆம் ஆண்டில் பதிவான 7.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் பெறுமதி சேர்க்கை அடிப்படையில் ஒட்டுமொத்த உற்பத்தி நடவடிக்கைகள் 12.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. உள்நாட்டுப் பாதகமான சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்கான ஆற்றலைக் கொண்டுள்ள புடைவை உற்பத்தி, ஆடை மற்றும் தோல் தொடர்பான பொருட்களின் உப துறையைத் தவிர அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளும் 2022 ஆம் ஆண்டில் குறைவடைந்தது. நீடிக்கப்பட்ட மின்வெட்டு, எரிபொருள் மற்றும் முக்கிய மூலப்பொருட்களின் பற்றாக்குறை, பண்டகச் சேவை பிரச்சினைகள் மற்றும் குறைந்த கேள்வி நிலைமைகள் ஆகியவற்றின் பாதகமான பாதிப்புகள் இந்த உற்பத்தி நடவடிக்கைகளின் மோசமான செயற்பாட்டிற்கான முக்கிய காரணங்களாகும்.

உணவு, பானங்கள் மற்றும் புகையிலைப் பொருட்களின் உற்பத்தி, ஒட்டுமொத்த உற்பத்தி நடவடிக்கைகளில் மிகப்பெரிய பங்களிப்பினைக் கொண்டுள்ளதுடன், இது 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 3.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் 14.2 சதவீதத்தால் கணிசமாகச் சுருக்கமடைந்தது.

உற்பத்தி நடவடிக்கைகளில் இரண்டாவது பெரிய பங்களிப்பினை வழங்கும் புடைவை உற்பத்தி, ஆடை மற்றும் தோல் தொடர்பான தயாரிப்புகள் 2022 ஆம் ஆண்டில் 8.1 சதவிகிதத்தினால் வளர்ந்துள்ளது. இறக்குமதிக் கட்டுப்பாடுகள், பண்டகச் சேவை சிக்கல்கள், மற்றும் ஆடையணி உற்பத்தித் துறையில் மின்சாரத் தடைகள் ஆகியவற்றின் பாதகமான தாக்கங்கள், மீளாய்வுக்கான காலப்பகுதியில் பல மூலப்பொருள் இறக்குமதிகளுக்கு வரிச் சலுகைகள் வழங்குவது போன்ற அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட கொள்கை முடிவுகளால் பெரும்பாலும் ஈடுசெய்யப்பட்டன.

2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, மற்ற உலோகமல்லாத கனிமப் பொருட்கள் (29.0 சதவீதம்) இரப்பர் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்கள் (30.7 சதவீதம்) அடிப்படை உலோகங்கள் மற்றும் புனையப்பட்ட உலோகப் பொருட்கள் (27.6 சதவீதம்) தளபாடங்கள் (26.4 சதவீதம்) இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் (19.0 சதவீதம்) இரசாயனப் பொருட்கள் மற்றும் அடிப்படை மருந்தாக்கப் பொருட்கள் (14.0 சதவீதம்) கற்கரி(கோக்) மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் (58.2) மரம் மற்றும் மரம் சார்ந்த பொருட்கள் (16.4 சதவீதம்) காகிதப் பொருட்கள் (8.3 சதவீதம்) மற்றும் பிற உற்பத்திகள் (21.7). உள்ளடங்கலாக பிற உற்பத்தி நடவடிக்கைகளும் 2022 ஆம் ஆண்டில் சுருக்கம் கண்டது. மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டல் வழங்கல் உப துறையானது 2021 ஆம் ஆண்டில் 4.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், கைத்தொழில்துறை நடவடிக்கைகளில் ஒட்டுமொத்த பின்னடைவு காரணமாக 2022 ஆம் ஆண்டில் 5.9 சதவீத எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவு செய்தது.

அட்டவணை 2.5 | தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில் ஏற்றுமதிகளின் செயலாற்றுகை

ஐ.அ.டொ.மில்

விபரம்	2016	2017	2018	2019	2020	2021	2022(அ)
உணவு குடிபானங்கள் மற்றும் புகையிலை	324	393	462	447	464	587	520
விலங்குணவு	68	80	108	129	103	149	171
புடவைகள் மற்றும் ஆடைகள்	4,884	5,032	5,318	5,596	4,423	5,435	5,952
இறப்பர் உற்பத்தி	768	835	875	866	786	1050	977
இரத்தினக்கல், வைரம், ஆபரணங்கள்	274	258	278	306	181	277	451
இயந்திரங்கள், இயந்திரவியல் உபகரணங்கள்	318	371	435	400	338	501	581
போக்குவரத்து உபகரணங்கள்	131	162	120	146	71	148	129
பெற்றோலிய உற்பத்திகள்	287	434	622	521	374	506	568
இரசாயன உற்பத்திகள்	126	146	167	176	173	223	223
மரம் மற்றும் அச்சுத்தொழில் உற்பத்திகள்	117	139	141	129	99	130	137
தோற்பொருள், பயண பொருட்கள் , பாதணிகள்	166	158	148	103	54	58	86
பிளாஸ்ரீக் மற்றும் பினாஸ்ரிக் பொருட்கள்	66	75	78	73	176	79	61
அடிப்படை உலோகம் உலோகப் பொருட்கள்	90	116	165	177	111	156	177
மட்பாண்ட உற்பத்திகள்	34	34	31	30	24	37	38
ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள்	288	309	311	326	295	361	395
மொத்தம்	**7,940**	**8,542**	**9,258**	**9,426**	**7,672**	**9,702**	**10,465**

மூலம் : இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானது

கட்டுமானத் துறை

பெறுமதி சேர்க்கை நியதிகளில், கட்டுமானத் தொழிற்துறையானது 2021 ஆம் ஆண்டில் 4.4 சதவிகித வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில் 20.9 சதவீதத்தினால் கணிசமாகச் சுருக்கமடைந்தது. இதற்கு, வழங்கல் மற்றும் கேள்வி ஆகிய இரண்டு பகுதியிலும் நிலவிய பின்னடைவுகள் காரணமாக இருந்தது. மூலப்பொருட்கள் மற்றும் எரிபொருளின் பற்றாக்குறை, அதிகரித்த உள்ளீடுகளின் செலவு, வழங்குநருக்கான கடன்வசதியின்மை மற்றும் முடிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்குத் தாமதமான கொடுப்பனவு போன்றவை கட்டுமான நடவடிக்கைகளில் விநியோக பக்க சிக்கல்களுக்கு வழிவகுத்தது. அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட திட்டங்களின் இடைநிறுத்தம் மற்றும் தனியார் முதலீடுகளை குறைக்கும் அதிக வட்டி விகித சூழல் ஆகியவற்றிலிருந்து கேள்விப் பகுதியிலான சுமைகள் உருவாகியிருந்தன.

2021 ஆம் ஆண்டில் பதிவான 0.8 சதவீத சிறிய சரிவுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த சீமெந்து கிடைப்பனவு 35.9 சதவீதமாகக் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. கட்டடப் பொருள் இறக்குமதியும் 2021 ஆம் ஆண்டில் 4.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் 35.8 சதவீதத்தால் கணிசமாகக் குறைந்துள்ளது. மேலும், தனிப்பட்ட வீட்டுக் கட்டுமானங்களுக்காக உரிமம் பெற்ற வணிக வங்கிகளால் வழங்கப்பட்ட தனியார் துறைக்கான கடன் தொகையும் 2022, திசெம்பர் மாத இறுதியில் சுருக்கத்தைப் பதிவு செய்தது.

சேவைகள் துறை

பெறுமதி சேர்க்கை நியதிகளில் சேவைத் துறையானது 2021 ஆம் ஆண்டில் பதிவான 3.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, நிலைச் சொத்து விற்பனை நடவடிக்கைகள், காப்புறுதிச் சேவைகள், நிதிச் சேவைகள், மனித சுகாதார நடவடிக்கைகள், தொழில்முறை சேவைகள், தகவல் தொழில்நுட்ப நிரலாக்கல், நிகழ்ச்சி நிரலாக்கல் மற்றும் ஒளிபரப்பு மற்றும் மொத்த மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் ஆகியவற்றில் பதிவான எதிர்மறை வளர்ச்சியின் காரணமாக, 2022 ஆம் ஆண்டில் 2.0 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. நீடித்த எரிசக்தி நெருக்கடி, மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களின் இருப்பு மற்றும் உயர்வான பணவீக்கம் ஆகியவற்றால் சேவைத்துறையின் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. எவ்வாறாயினும், தங்குமிடம், உணவு மற்றும் குடிபானங்கள் சேவைத் துறை செயற்பாடுகள், போக்குவரத்து, தொலைத்தொடர்பு, கல்வி, பொது நிருவாகம், பிற தனிப்பட்ட சேவைத் துறை செயற்பாடுகள் மற்றும் அஞ்சல் மற்றும் கூரியர் சேவை நடவடிக்கைகள் ஆகியவை வருடத்தில் சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்தன.

மொத்த மற்றும் சில்லறை விற்பனை வர்த்தகம்

2022 ஆம் ஆண்டில் பெறுமதி சேர்க்கை நியதிகளில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக செயற்பாடுகள் 2021 ஆம் ஆண்டில் பதிவான 1.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், விநியோக இடையூறுகள் மற்றும் கேள்வியின்மை நிலைமைகள் காரணமாக 2022 ஆம் ஆண்டில் 0.2 சதவீத்தினால் சற்று சுருக்கமடைந்தது. வீழ்ச்சியுற்ற உள்நாட்டு உற்பத்தி, இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் காரணமாக இறக்குமதியின் அளவு குறைவுற்றமையும் மற்றும் எரிபொருள் விநியோகப் பற்றாக்குறை ஆகியவை, ஆண்டு முழுவதும் வர்த்தக நடவடிக்கைகளை மோசமாகப் பாதித்தன. உயர் பணவீக்க அழுத்தம், பயன்பாட்டுக் கட்டணங்களின் அதிகரிப்பு மற்றும் அதிக வட்டி விகிதங்கள் ஆகியவை ஆண்டின் பிற்பகுதியில் கேள்விப் பற்றாக்குறையை ஏற்படுத்தியது.

பொருட்களினதும் பயணிகளினதும் போக்குவரத்து

பெறுமதி சேர்க்கை நியதிகளில் போக்குவரத்து உப துறையானது, 2021 ஆம் ஆண்டில் 0.9 சதவீத மிதமான அதிகரிப்புடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில் 3.5 சதவீதத்தால் விரிவடைந்துள்ளது. முக்கியமாக தொற்றுநோய்க்குப் பின்னரான மீட்சியே இதற்குக் காரணமாகும். இலங்கை போக்குவரத்துச் சபை, தனியார் பேருந்து இயக்குநர்கள் மற்றும் இலங்கைப் புகையிரதத் திணைக்களம் ஆகியவற்றால் இயக்கப்படும் பயணிகள் கிலோமீற்றர்கள் 2022 ஆம் ஆண்டில் கணிசமாக அதிகரித்தது. இது குறிப்பிடத்தக்களவு உயர்வான எரிபொருள் செலவுகள் மற்றும் பொது போக்குவரத்திற்கான முன்னுரிமை எரிபொருள் வழங்கல் ஆகியவற்றிற்கு மத்தியில் பொது போக்குவரத்து முறைகளுக்கான அதிகரித்த கேள்வியைப் பிரதிபலிப்பதாக இருந்தது. சுற்றுலா நடவடிக்கைகளின் மீட்சி காரணமாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஊடாக பயணிக்கும் கிலோமீற்றர்களும் படிப்படியாக மேம்பட்டன. இருப்பினும், முக்கியமாக உலகளாவிய வர்த்தக அளவுகளில் ஏற்பட்ட மந்தநிலை காரணமாகக் கொள்கலன் கையாளுகை மற்றும் சரக்குக் கையாளுகை நடவடிக்கைகள் ஆண்டு முழுவதும் பின்னடைவினைக் கொண்டிருந்தது.

தங்குமிடம், உணவு மற்றும் குடிபானச் சேவைச் செயற்பாடுகள்

பெறுமதி சேர்க்கை நியதிகளில், 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 1.7 சதவீதத்தின் சிறிய அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காரணமாக தங்குமிடம், உணவு மற்றும் குடிபான சேவை நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டில் 27.0 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்துள்ளன. சுற்றுலாப் பயணிகளுக்கு பிரத்தியேகமான பொதித்தொகுதிகளை அறிமுகப்படுத்தியமை மற்றும் உள்ஷர் நாணயத்தின் பெறுமானத் தேய்வு ஆகியவற்றின் பங்களிப்புடன் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான விடுமுறை இடமாக இலங்கை மேலும் கவரப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் மிகைப்படுத்தப்பட்ட எதிர்மறையான சித்தரிப்பு இந்த வருடத்தில் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகளைத் தடுத்துள்ளது.

நிதி, காணி, காப்புறுதி மற்றும் நிலைச் சொத்து விற்பனைச் செயற்பாடுகள்

பெறுமதி சேர் செயற்பாடுகளில் நிதி, காப்புறுதி மற்றும் நிலைச் சொத்துச் செயற்பாடுகளைப் பொறுத்தவரை, 2021 ஆம் ஆண்டில் 7.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, அத்தகைய மூன்று நடவடிக்கைகளிலும் பதிவான சரிவுகள் காரணமாக 2022 ஆம் ஆண்டில் 15.4 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. அதிக வட்டி விகிதங்களால் ஏற்படும் கடனுக்கான கேள்வி வீழ்ச்சி, பணவீக்க அழுத்தம் மற்றும் குறைவான மீளச் செலுத்தும் திறன் காரணமாக கடன் வழங்க விருப்பமின்மை ஆகியவை நிதி மற்றும் நிலைச் சொத்து நடவடிக்கைகளின் செயலாற்றுகையைத் தடுத்துள்ளன. அதற்கிணங்க, 2021 ஆம் ஆண்டில் பதிவான 7.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் நிதி மற்றும் துணை நிதி நடவடிக்கைகள் 11.0 சதவீதத்தால் குறைந்துள்ளன. 2021 ஆம் ஆண்டில் பதிவான 4.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, 2022 ஆம் ஆண்டில் குடியிருப்புகளின் உரிமை உட்பட நிலைச் சொத்துச் செயற்பாடுகள் 12.1 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. 2021 ஆம் ஆண்டில் பதிவான 26.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஓய்வூதிய நிதியளிப்பு செயற்பாடுகளின் குறைவான செயலாற்றுகை காரணமாக, காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியளிப்பு செயற்பாடுகள் 2022 ஆம் ஆண்டில் 47.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு சுருக்கமடைந்தது.

அட்டவணை 2.6 | சேவைத்துறையில் தெரிவு செய்யப்பட்ட சுட்டிகள்

சுட்டிகள்	2018	2019	2020	2021(அ)	2022(ஆ)
துறைமுக சேவைகள்					
வருகைதந்த சரக்கு கப்பல்கள் *	4,874	4,697	4,337	4,180	4,073
கையாளப்பட்ட மொ.சரக்குகள் (மொ.தொ "000)	104,934	106,979	102,908	109,356	100,376
மொ. கொள்கலன் கையாடல் (மொ.கொ.கை "000) (இ)	7,047	7,228	6,855	7,249	6,862
வழிமாற்றல் செய்யப்பட்ட கொள்கலன்கள்** (மொ.கொ.கை "000)	5,704	5,955	5,765	6,050	5,832
தொலைத்தெடர்புத் துறை					
நிலையான தொலைபேசி இணைப்புகள் *** (எண் "000)	1,216***	1,245***	2,613	2,852	2,651
செல்லிட தொலைபேசிகள் (எண் "000)	32,528	32,884	28,739	29,959	28,838
கம்பியல்லாத தொலைபேசி (எண் "000)	1,269	1,055	1,367	1,587	1,388
இணையம், மின்னஞ்சல் வாடிக்கையாளர்கள் ("000) (ஈ)	10,563	13,408	17,524	22,106	21,668
சுகாதாரத்துறை					
தனியார் வைத்தியசாலைகள்	191	209	217	243	250
அரசாங்க கைத்தியசாலைகள்	612	603	609	618	617
கட்டில்களின் எண்ணிக்கை (அரசாங்க)	76,824	77,964	77,121	78,228	78,228
வைத்தியர்களின் எண்ணிக்கை (அரசாங்க)	19,692	18,130	18,218	20,209	21,045
தாதியர்களின் எண்ணிக்கை (அரசாங்க)	34,714	38,276	37,133	39,091	40,775
வங்கித்துறை					
வங்கிக் கிளைகள், பிற விற்பனை நிலையங்கள்	6,882	7,390	7,406	7,369	7,378
பாவனையிலுள்ள கடன் அட்டைகள்	1,710,671	1,854,103	1,984,525	2,054,985	2,054,896
பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்	43	42	40	39	37
பதிவு செய்யப்பட்ட குத்தகைக் கம்பனிகள்	5	4	3	3	1
சுற்றுலாத்துறை					
சுற்றுலா பயணிகளின் வருகை	2,333,796	1,913,702	507,704	194,495	719,978
சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அ.டொ.மில்)	4,381	3,607	682	507	1,136
வருடாந்த அறை பயன்பாட்டு வீதம்	72.8	57.1	15.0	18.6****	30.4
போக்குவரத்து சேவைகள் (புதிய பதிவுகள்)					
பேரூந்துகள்	2,957	1,613	578	281	404
கார்கள்	80,776	38,232	21,021	3,495	1,489
இரட்டை நோக்க வாகனங்கள்*****	16,931	13,459	9,532	771	760
பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள் - லொறிகள்	9,371	5,223	3,941	2,593	940
மோட்டார் சைக்கிள்கள்	339,763	284,301	151,634	8,011	9,060
முச்சக்கர வண்டிகள்	20,063	15,490	7,150	2,093	36
தரை வாகனங்கள் - ட்ரக்டர்கள்	7,460	5,696	6,025	8,272	2,725
தரை வாகனங்கள் - பெட்டிகள்	2,822	1,970	2,277	4,344	2,560

மூலம்: இலங்கை துறைமுக அதிகார சபை, இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு, மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்ட
(ஆ) தற்காலிகமானது
(இ) காங்கேசன்துறை மயிலிட்டி, காரைநகர், பருத்தித்துறை உள்ளடங்கலாக
(ஈ) செல்லிட இணையதளம் உள்ளடங்கலாக
* படகோட்டம், கடற்படை கப்பல்கள், மீன்பிடி, இழுவைப்படகுகள், படகு மற்றும் அகழிகள் தவிர்ந்த
**மீள் ஏற்றுதல் உள்ளடங்கலாக
***கம்பியற்ற தொலைபேசி தவிர்ந்த
**** 1ஆம் நிலை/2ஆம் நிலை மற்றும் பிற பாதுகாப்பான விடுதிகளில்
***** ஒற்றை வண்டிகள் நீங்கலாக

ஏனைய சேவைச் செயற்பாடுகள்

பெறுமதி சேர்க்கப்பட்ட தொலைத்தொடர்பு செயற்பாடுகள், உயர் பணவீக்க அழுத்தங்களால் கேள்வி வீழ்ச்சியடைந்தமையால் 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 14.2 சதவீத கணிசமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் 3.1 சதவீத மெதுவான வளர்ச்சியினையே பெற்றது. தகவல் தொழில்நுட்ப நிரலாக்கம், ஆலோசனை மற்றும் தொடர்புடைய செயற்பாடுகள் என்பன 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 25.2 சதவிகித வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், உலகளாவிய கேள்வியின் மந்தநிலை மற்றும் இக்காலப்பகுதியில் நிலவிய நீடித்த மின்வெட்டு காரணமாக 2022 ஆம் ஆண்டில் 2.3 சதவிகிதத்தினால் சுருக்கமடைந்தது.

2022 ஆம் ஆண்டில், தொழில்முறை சேவைகள் மற்றும் நிரலாக்க மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகள் முறையே 4.0 சதவீதத்தினாலும் 11.0 சதவீதத்தினாலும் சுருக்கமடைந்தது. கொவிட்-19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஆண்டாகிய 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 5.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில் மனித சுகாதார நடவடிக்கைகளும் 8.4 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. இருப்பினும், கல்வி, பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்பு, பிற தனிப்பட்ட சேவைகள் மற்றும் அஞ்சல் மற்றும் கூரியர் சேவைகள் 2022 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமான பங்களிப்பினையளித்தன.

உள்நாட்டுக் கேள்வியும் நுகர்வும்

இந்நாட்டின் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினங்கள் அடங்கிய உள்நாட்டுக் கேள்வியானது 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட மொத்தக் கேள்வியாகிய ரூபா 18,901 பில்லினுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் நடைமுறைச் சந்தை விலைகளில் ரூபா 25,005 பில்லியனினைப் பதிவு செய்தது. இது 32.3 சதவீத அதிகரிப்பாகக் காணப்பட்டதுடன், அந்த ஆண்டில் நிலவிய உயர்ந்த விலைமட்டங்கள் இதற்குக் காரணமாக அமைந்தன.

2021 ஆம் ஆண்டின் ரூபா 2,980 பில்லியனுடன் ஒப்பிடுகையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியானது முக்கிய ஏற்றுமதிப் பிராந்தியங்களின் நாணயங்களுக்கு நிகராக இலங்கை ரூபாயின் கடுமையான பெறுமதித் தேய்வின் பயனால் 2022 ஆம் ஆண்டில் 74.1 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 5,188 பில்லியனினைப் பதிவுசெய்தது. பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதியானது 2021 ஆம் ஆண்டில் ரூபா 4,281 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் ரூபா 6,045 பில்லியன் வரை 41.2 சதவீதத்தினால் அதிகரித்தது. இறக்குமதியில் ஒப்பீட்டளவில் மெதுவான வளர்ச்சிக்கு, இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் அந்நிய செலாவணிப் பற்றாக்குறை காரணமாக இறக்குமதி அளவுகளில் ஏற்பட்ட சரிவு காரணமாக இருந்தது. அதற்கிணங்க, நடைமுறை விலைகளில் தேறிய வெளிப்புறக் கேள்வியானது 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 34.7 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில் 34.1 சதவீதத்தால் கணிசமாக அதிகரித்தது.

நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த நுகர்வானது 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 8.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் நுகர்வோர் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால் ரூபா 16,701 பில்லியனாக 34.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மொத்த நுகர்வில் 89.7 சதவீதமாக இருந்த தனியார் நுகர்வு, 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 9.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் நடைமுறைச் சந்தை விலைகளில் 39.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அந்த வகையில், 2022 ஆம் ஆண்டில் முறையே 25.9 சதவீதம் மற்றும் 69.8 சதவீதம் வளர்ச்சியடைந்த உணவு மற்றும் மது அல்லாத பானங்கள் மற்றும் போக்குவரத்து போன்ற முக்கிய தனியார் நுகர்வு வகைகளிலிருந்து குறிப்பிடத்தக்க பங்களிப்புகள் அவதானிக்கப்பட்டன. 2021 ஆம் ஆண்டில் 2.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் நடைமுறைச் சந்தை விலைகளில் அரசாங்க நுகர்வு 3.8 சதவீதம் மிதமாக வளர்ச்சியடைந்து மொத்த நுகர்வின் வளர்ச்சிக்குப் பங்களித்துள்ளது.

அட்டவணை 2.7 | உள்நாட்டு கேள்வி, வழங்கல் மற்றும் வர்த்தக மீதி(அ)

விபரம்	தற்போதைய சந்தை விலைகள் (ரூபா பில்.)			மாற்றம் (%)			மொ.உ. உற்பத்தி சதவீதத்தில்		
	2020	2021(ஆ)	2022(இ)	2020	2021(ஆ)	2022(இ)	2020	2021(ஆ)	2022(இ)
உள்நாட்டுக் கேள்வி	**16,638**	**18,901**	**25,005**	**-1.1**	**13.6**	**32.3**	**106.2**	**107.4**	**103.6**
நுகர்வு	11,469	12,434	16,701	0.6	8.4	34.3	73.2	70.6	69.2
தனியார்	9,842	10,770	14,973	-1.3	9.4	39.0	62.8	61.2	62.0
அரசாங்கம்	1,627	1,665	1,727	14.0	2.3	3.8	10.4	9.5	7.2
முதலீடு	5,168	6,467	8,305	-4.8	25.1	28.4	33.0	36.7	34.4
தேறிய வெளிநாட்டு கேள்வி (வர்த்தக மீதி)	**-966**	**-1,301**	**-857**	**9.0**	**-34.7**	**34.1**	**-6.2**	**-7.4**	**-3.6**
பொருட்கள் சேவைகள் ஏற்றுமதி	2,419	2,980	5,188	-26.5	23.2	74.1	15.4	16.9	21.5
பொருட்கள் சேவைகள் இறக்குமதி	3,385	4,281	6,045	-22.3	26.5	41.2	21.6	24.3	25.0
உள்நாட்டு வழங்கல் ஸ்ரீ மொ.உ.உற்பத்தி	**15,672**	**17,600**	**24,148**	**-0.6**	**12.3**	**37.2**	**100.0**	**100.0**	**100.0**

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி
(அ) தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் 2010 ஆம் ஆண்டை அடிப்படையாக கொண்ட மொ.உ.உ.
(ஆ) மீளாய்வு
(இ) தற்காலிகமான

அட்டவணை 2.8 | மொத்த வழங்கல் மற்றும் பொருட்கள், சேவைகளின் பயன்பாடு (அ)

விடயம்	ரூபா.பில்			மாற்றம் (%)		மொ.உ.உ. % இல்	
	2020(அ)	2021(இ)	2022(இ)	2020/2021(இ)	2021/2022(இ)	2021(இ)	2022(இ)
திரட்டிய கேள்வி	19,056	21,881	30,193	14.8	38.0	124.3	125.0
உள்நாட்டு கேள்வி	16,638	18,901	25,005	13.6	32.3	107.4	103.6
வெளிநாட்டுக் கேள்வி ஸ்ரீ பொருட்கள், சேவைகளின் ஏற்றுமதி	2,419	2,980	5,188	23.2	74.1	16.9	21.5
திரட்டிய வழங்கல்	19,056	21,881	30,193	14.8	38.0	124.3	125.0
மொத்த உள்நாட்டு உற்பத்தி	15,672	17,600	24,148	12.3	37.2	100.0	100.0
பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதி	3,385	4,281	6,045	26.5	41.2	24.3	25.0
பொருட்கள் மற்றும் சேவைகளின் வர்த்தக இடைவெளி	-966	-1,301	-857	-34.7	34.1	-7.4	-3.5
திரட்டிய வளங்களின் இறக்குமதிகளின் பங்கு (%)	17.8	19.6	20.0	-17.3	2.3	0.1	0.1

மூலம்: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி
(அ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 மொ.உ.உ. மதிப்பீடுகளை அடிப்படை ஆண்டாகக் கொண்ட தரவுகள்
(ஆ) திருத்தியமைக்கப்பட்ட
(இ) தற்காலிகமானது

முதலீடு மற்றும் சேமிப்புகள்

2021 ஆம் ஆண்டில் 25.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் நடைமுறைச் சந்தை விலைகளில் முதலீட்டுச் செலவினமானது முதலீட்டுப் பொருட்களின் குறிப்பிடத்தக்க விலை உயர்வை பிரதிபலிக்கும் வகையில், 28.4 சதவீதத்தினால் அதிகரித்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 8,305 பில்லியன்களைப் பதிவு செய்தது. அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை, உள்நாட்டு நாணயத்தின் கடுமையான பெறுமதித் தேய்வு மற்றும் அதிக வட்டி விகிதங்கள் ஆகியவை முதலீட்டுப் பொருட்களின் விலை உயர்விற்குக் காரணமாக அமைந்தன. கட்டுமானப் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் விலைகளின் அதிகரிப்பினைப் பிரதிபலிக்கும் வகையில், நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த நிலையான மூலதன உருவாக்கல் 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 15.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 21.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. மேலும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பொறுத்தவரை 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 780.2 மில்லியன்களுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் 37.9 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொ. 1,075.6 மில்லியன்களைப் பதிவுசெய்தது. உட்கட்டமைப்பு மற்றும் உற்பத்தித் துறைகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளானவை, மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் முறையே 54.0 சதவீதமும் 34.0 சதவீதமுமாகும். இது 2022 ஆம் ஆண்டில் அந்நிய நேரடி முதலீடுகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்களவில் பங்களிப்பு செய்துள்ளது. இலங்கை முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் மொத்தப் பெறுமதியானது 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 514.1 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில் ரூபா 546.4 பில்லியன் வரை 6.3 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.

2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 22.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 44.2 சதவீத உள்நாட்டு சேமிப்பின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியானது ஆண்டில் தனியார் சேமிப்பின் அதிகரிப்பால் உந்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 29.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டு சேமிப்பு 2022 ஆம் ஆண்டில் 30.8 சதவீதமாக அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், ரூபாயின் நியதிகளில், 2022 ஆம் ஆண்டில் உலகின் பிற நாடுகளின் தேறிய முதன்மை வருமானம் 57.1 சதவிகிதம் கணிசமாக சுருக்கமடைந்த அதே நேரத்தில், உலகின் பிற பகுதிகளிலிருந்து தேறிய நடைமுறைப் பரிமாற்றல்கள், இவ்வாண்டில் 12.1 சதவிகிதத்தினால் வளர்ச்சியுற்றன. 2022 ஆம் ஆண்டில் தேசிய சேமிப்பு 37.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 33.1 சதவீதமாகும்.

அட்டவணை 2.9 | முதலீடுகளும் சேமிப்புகளும்

விடயம்	ரூபா.பில்			மொ.உ.உ % இல்		
	2020 (அ)	2021 (ஆ)	2022 (ஆ)	2020(அ)	2021(அ)	2022(ஆ)
உள்நாட்டு முதலீடு	**5,168**	**6,467**	**8,305**	**33.0**	**36.7**	**34.4**
உள்நாட்டு சேமிப்புக்கள்	**4,203**	**5,166**	**7,447**	**26.8**	**29.4**	**30.8**
தனியார்	5,383	6,456	8,988	34.3	36.7	37.2
அரசாங்கம்	-1180	-1,290	-1,540	-7.5	-7.3	-6.4
முதலீடு, உள்நாட்டு சேமிப்பு இடைவெளி	**966**	**1301**	**858**	**6.2**	**7.4**	**3.6**
வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானம் (இ)	-423	-396	-621	-2.7	-2.2	-2.6
தேறிய வெளிநாட்டு தனியார் மாற்றல்கள்	1,151	1,035	1,159	7.3	5.9	4.8
தேசிய சேமிப்புக்கள்	**4,930**	**5,805**	**7,985**	**31.5**	**33.0**	**33.1**

மூலம்: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி
(அ) திருத்தியமைக்கப்பட்ட
(ஆ) தற்காலிகமானது
(இ) கொடுப்பனவு மீதி மதிப்பீடுகளுடனான வித்தியாசம் தொகுப்பினுடைய கால தாமதம் காரணமாக ஏற்பட்டுள்ளது.

வரைபு 2.5 | சேமிப்பு முதலீட்டு இடைவெளி



மூலம் : இலங்கை மத்திய வங்கி

2.3 வெளிநாட்டுத்துறை

2022 ஆம் ஆண்டில், இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது சென்மதி நிலுவைச் சமநிலை மீதான அழுத்தங்கள், மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் குறைதல் மற்றும் அந்நியச் செலாவணி சந்தையில் தொடர்ச்சியான இடையூறுகளுக்கு மத்தியில் தொழிலாளர்களின் பணப்பரிமாற்றங்களில் இருந்து வரவுகள் குறைதல் போன்றவற்றின் காரணமாகப் பல பிரச்சினைகளை எதிர்கொண்டது. 2022 ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருமானம் 4.9 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்து ஐ.அ.டொ. 13,106 மில்லியன்களாக உயர்ந்துள்ளது. இது கைத்தொழில்துறை ஏற்றுமதிகளின் அதிகரித்த வருமானம் காரணமாக 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொ. 12,499 மில்லியன்களைத் தாண்டியுள்ளது. இதற்கிடையில்,

இறக்குமதிச் செலவினமானது தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிகளுக்கு எல்லை வைப்புத் தேவைகளை விதித்தல் மற்றும் அவசரமற்ற இறக்குமதிகளைக் குறைத்தல் போன்ற நடைமுறைப்படுத்தப்பட்ட இறக்குமதி கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் காரணமாக 2022 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 18,291 மில்லியன்கள் வரை 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 20,637 மில்லியன்களிலிருந்து 11.4 சதவிகிதம் குறைந்தது. எவ்வாறாயினும், இவ் எல்லைவைப்புத் தேவைப்பாடு 2023, மே 18 முதல் நீக்கப்பட்டது. இதன் விளைவாக, 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 8,138.8 மில்லியனுடன் ஒப்பிடுகையில் வர்த்தகப் பற்றாக்குறையானது 2022 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 5,184.6 மில்லியன் வரை 36.3 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.

அட்டவணை 2.10 | வெளிநாட்டு வர்த்தகம்

ரூபா.மில்லியன்

	2019	2020(அ)	2021(ஆ)	2022(ஆ)
ஏற்றுமதிகள்	**11,940**	**10,047**	**12,499**	**13,106**
விவசாய ஏற்றுமதிகள்	2,462	2,336	2,730	2,568
கைத்தொழில் ஏற்றுமதிகள்	9,426	7,672	9,702	10,465
கனிப்பொருள் ஏற்றுமதிகள்	34	25	45	50
வகைபடுத்தப்படாதவை	18	14	23	23
இறக்குமதிகள்	**19,937**	**16,055**	**20,637**	**18,291**
நுகர்வுப் பொருட்கள்	3,957	3,402	3,849	2,813
இடைநிலைப் பொருட்கள்	11,370	9,077	12,309	12,439
முதலீட்டுப் பொருட்கள்	4,603	3,563	4,463	3,031
வகைப்படுத்தப்படாதவை	8	14	17	9
வர்த்தக மீதி	**-7,997**	**-6,008**	**-8,139**	**-5,185**

மூலம் : இலங்கை மத்திய வங்கி
(அ) திருத்தியமைக்கப்பட்ட
(ஆ) தற்காலிகமானது

2021 முக்கியமாக வர்த்தகப் பற்றாக்குறையின் சுருக்கம் மற்றும் சேவைகளின் வர்த்தகத்தில் முன்னேற்றம் காரணமாக 2021 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.7 சதவீதமாக இருந்த வெளிப்புற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2022 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.9 சதவீதமாகக் குறைந்தது. அதன்படி, வெளித்துறையின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 3.3 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 1.5 பில்லியனாகச் சுருக்கமடைந்தது.

2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 1.6 பில்லியன்களாக இருந்த சேவைகள் கணக்கு மிகையானது சுற்றுலாத் துறையின் வருமான அதிகரிப்பு காரணமாக ஐ.அ.டொ. 2.1 பில்லியனாக அதிகரித்ததுடன் கடல் சரக்குப் போக்குவரத்து மற்றும் IT/BPO துறைகளிலிருந்து குறைவான செயலாற்றுகை பதிவு செய்யப்பட்டது. முதன்நிலை வருமானக் கணக்குப் பற்றாக்குறையானது வங்கித் துறையின் உயர்வான வட்டி வருமானத்தின் காரணமாக 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 1,959 மில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 1,874 மில்லியனாகக் குறைந்துள்ளது. நிதிக் கணக்குப் பற்றாக்குறையானது 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 4.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில், நிதிக் கணக்கிற்கான மிதமான உட்பாய்ச்சல்கள் காரணமாக 2022 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 1.9 பில்லியனினைப் பதிவு செய்தது.

வரைபு 2.6 | ஏற்றுமதி இறக்குமதி வளர்ச்சி மற்றும் இறக்குமதி வர்த்தக மீதி (காலாண்டில்)



மூலம் : இலங்கை மத்திய வங்கி

2022 ஆம் ஆண்டில் அரசாங்கப் பிணையச் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகள் மூலம் ஐ.அ.டொ. 51 மில்லியன்களின் மொத்தத் தேறிய வரவு பதிவாகியது. 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 4,597 மில்லியன்களுடன் ஒப்பிடும்போது, வெளிநாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுத் தொகை ஐ.அ.டொ. 2,471 மில்லியன்களாக இருந்தது. எவ்வாறாயினும், இருதரப்புக் கடன்தாரர்களுக்கான வெளிப்புறக் வெளிநாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் 2022 ஆம் ஆண்டு ஏப்பிரல் நடுப்பகுதியில் இருந்து அரசாங்கத்தால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. அரசாங்கமானது படுகடன் மறுசீரமைப்புச் செயல்பாட்டில் ஈடுபட்டதுடன், நிதி ஏற்பாடொன்றிற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளையும் நடாத்தியது. வெற்றிகரமான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, 2022, செத்தெம்பர் மாதத்தில் இலங்கையின் அதிகாரிகளுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர்களுக்குமிடையில், நீடிக்கப்பட்ட நிதி வசதிக்காக பணியாளர் மட்ட உடன்பாடு எட்டப்பட்டது. அதன்படி, சர்வதேச நாணய நிதியச் சபையானது 2023, மாச்சு மாதத்தில், நீடிக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் கீழ் சுமார் ஐ.அ.டொ. 3 பில்லியன் தொகைக்காக 48 மாத ஏற்பாட்டிற்கு அங்கீகாரமளித்தது.

வரைபு 2.7 | வர்த்தக மீதி



மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபு 2.8 | கொடுப்பனவு மீதிகள்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

2021 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து அதிகரித்த, சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் சுற்றுலாத் துறை மீட்பு அறிகுறிகளை வெளிப்படுத்தியது மட்டுமன்றி 2022, மாச்சு மாதத்தில் அதன் உச்சத்தைப் பதிவு செய்தது. மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகளைப் பொறுத்தவரை, 2021 ஆம் ஆண்டு திசெம்பர் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொ. 3,139 மில்லியன்களுடன் ஒப்பிடும்போது, உள்நாட்டு அந்நியச் செலாவணி சந்தையில் பணப்புழக்கக் குறைவு மற்றும் வெளிநாட்டு நிதியளிப்பு மூலங்களின் வீழ்ச்சி ஆகியவை காரணமாக 2022 ஆம் ஆண்டு திசெம்பர் இறுதியில் ஐ.அ.டொ. 1,898 மில்லியன் வரை குறைவடைந்தது. மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்ககள், அதன் பயன்பாட்டிற்கான நிபந்தனைகளுக்குட்பட்டு, சீன மக்கள் வங்கியின் ஐ.அ.டொ. 1.4 பில்லியன் பெறுமதியுடைய சர்வதேச இடமாற்று (ஸ்வப்) வசதியை உள்ளடக்கியிருந்தது. நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள், 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 3.6 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகவும் 2022 திசெம்பர் மாத இறுதியில் 3.9 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகவுமிருந்தது. 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில், அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாய் வரலாற்று ரீதியாக மிகப்பெரிய தேய்மானத்தை வெளிப்படுத்தியதுடன், 2022 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாயின் வருடாந்த பெறுமதி தேய்வு 44.8 சதவீதமாகப் பதிவு செய்யப்பட்டது.

வரைபு 2.9 | ஏற்றுமதி பிரிவுகள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.11 | சேவைகளின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி

ஐ.அ.டொ.மில்

விடயம்	இறக்குமதிகள்		ஏற்றுமதிகள்	
	2021	2022 (அ)	2021	2022 (அ)
போக்குவரத்துச் சேவைகள்	256	333	608	676
கணனி மற்றும் தகவற்துறை	140	133	1168	1,066
பிரயாணங்கள், சுற்றுலாத்துறை	239	244	507	1,136
தொலைத் தொடர்பாடல்	31	28	32	31
நிர்மாணம்	11	11	10	9
காப்புறுதி	37	36	20	19
நிதிச் சேவைகள்	102	96	95	92
ஏனைய வர்த்தக சேவைகள்	17	16	16	15
அரசாங்கச் செலவினம்	57	56	19	18
மொத்தம்	890	953	2,475	3,062

மூலம் : இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானது

ஏற்றுமதிகள்

2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 12,498.6 மில்லியன்களுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் ஏற்றுமதிகளின்ன் வருவாய் 4.9 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொ. 13,106.4 மில்லியன்களாக உயர்ந்துள்ளது. இது புடைவை மற்றும் ஆடைகள், இரத்தினக் கற்கள், வைரம் மற்றும் ஆபரணங்கள், இயந்திரங்கள் மற்றும் பொறிமுறை உபகரணங்கள் மற்றும் பெற்றோலியப் பொருட்கள் உட்பட கைத்தொழில்துறை ஏற்றுமதிகளின் அதிகரித்த வருவாய்கள் காரணமாக 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட அதிகபட்ச ஏற்றுமதி வருவாயை விஞ்சியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக ஏற்றுமதி வருவாய் 2021 ஆம் ஆண்டில் 14.1 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 17.0 சதவீதமாக அதிகரித்தது. விவசாய ஏற்றுமதிகளின் வருமானம் வீழ்ச்சியடைந்தபோதிலும், சாதகமான நாணயமாற்று விகிதம் மற்றும் உலகளாவிய பொருட்களின் விலைகள் உயர்வு ஆகியவற்றிற்கிடையே கைத்தொழில்துறை மற்றும் கனிம ஏற்றுமதி வருவாய் அதிகரித்ததே இதற்குக் காரணமாகும். அதற்கிணங்க, கைத்தொழில்துறை ஏற்றுமதி 7.9 சதவீதம் அதிகரித்து

ஐ.அ.டொ. 10,465.3 மில்லியன்களாகவும், கனிம ஏற்றுமதி 12.3 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 50.0 மில்லியன்களாகவும் காணப்பட்ட அதேவேளை, விவசாய ஏற்றுமதி 5.9 சதவீதத்தினால் குறைந்து ஐ.அ.டொ. 2,568.0 மில்லியன்களையும் பதிவுசெய்தது. புடைவை மற்றும் ஆடைகள், தேயிலை ஏற்றுமதி மற்றும் இரப்பர் பொருட்கள் 2022 ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருவாயில் அதிக பங்களிப்பினையளித்தன.

வரைபு 2.10 | மொத்த ஏற்றுமதிகள் மற்றும் புடவை, தைத்த ஆடைகளின் ஏற்றுமதிகள்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

மொத்த ஏற்றுமதியில் 79.8 சதவீதத்தைப் பகிர்ந்து கொள்ளும் கைத்தொழில்துறை ஏற்றுமதி வருவாயைப் பொறுத்தவரையில், 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 9,702.1 மில்லியன்களுடன் ஒப்பிடும்போது, 2022 ஆம் ஆண்டில் 7.9 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொ. 10,465.3 மில்லியன்களைப் பதிவுசெய்தது. புடைவை மற்றும் ஆடைகள் மூலம் 9.5 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 5,952.0 மில்லியன், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் 62.8 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 450.6 மில்லியன், இயந்திரங்கள் மற்றும் பொறிமுறைச் சாதனங்கள் 16.0 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 580.9 மில்லியன்களாகவும், பெற்றோலியப் பொருட்கள் 12.2 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 568 மில்லியன்களாகவும் காணப்பட்டன. இதற்கிடையில், கனிம ஏற்றுமதி வருவாய் 12.3 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொ. 50.0 மில்லியன்களாகவும், வகைப்படுத்தப்படாத ஏற்றுமதி வருவாய் 2.6 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொ. 23.2 மில்லியன்களாகவும் 2022 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளது.

அட்டவணை 2.12 | கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி

ஐ.அ.டொ.மில்

வகை	2018	2019	2020	2021	2022 (அ)
துணி வகைகள் ஆடைகள்	5,318	5,597	4,423	5,435	5,952
இறப்பர் உற்பத்திகள்	875	866	786	1,050	977
பெற்றோலியம் மற்றும் இரசாயணப் பொருட்கள்	622	521	374	506	568
இரத்தினம், வைரம், ஆபரணங்கள்	278	306	181	277	451
இயந்திர, பொறியியல் மற்றும் ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள்	435	400	338	501	581
உணவு, குடிபானங்கள், புகையிலை	462	447	464	587	520
ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள்	1,268	1,290	1,106	1,346	1,416
மொத்தம்	**9,258**	**9,426**	**7,672**	**9,702**	**10,465**

மூலம் : இலங்கைச் சுங்கம், வியாபார முதலீட்டு கொள்கை திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானது

எவ்வாறாயினும், 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொ. 2,729.5 மில்லியன் விவசாய ஏற்றுமதி வருமானம் தேயிலை, இரப்பர், தேங்காய், வாசனைப் பொருட்கள், காய்கறிகள் மற்றும் பதனிடப்படாத புகையிலை ஆகியவற்றின் வருமான வீழ்ச்சியுடன் 2022 ஆம் ஆண்டில் 5.9 சதவிகிதம் குறைவடைந்து ஐ.அ.டொ. 2,568.0 மில்லியன்களைக் கொண்டிருந்தது. சராசரித் தேயிலை விலைகள் அதிகமாக இருந்த போதிலும் தேயிலை ஏற்றுமதியின் அளவு குறைந்தமையால், 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 1,324.4 மில்லியனாகக் காணப்பட்ட தேயிலையின் ஏற்றுமதி வருமானம் 2022 ஆம் ஆண்டில் 5.0 சதவீதம் குறைந்து ஐ.அ.டொ. 1,258.8 மில்லியனினைப் பதிவுசெய்தது. தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி வருமானம் 5.9 சதவீதத்தினால் குறைந்து ஐ.அ.டொ. 400.3 மில்லியனாகக் காணப்பட்டமைக்கு, தேங்காய்ச்சதைக்கான குறைவான ஏற்றுமதி விலைகள் காரணமாக இருந்தது.

அட்டவணை 2.13 | விவசாய ஏற்றுமதிகளின் பெறுமதி

ஐ.அ.டொ.மில்

வகை	2018	2019	2020	2021	2022 (அ)
தேயிலை	1,429	1,346	1,241	1,324	1,259
இறப்பர்	32	24	30	42	41
தெங்கு	311	330	345	425	400
ஏனைய விவசாய ஏற்றுமதிகள்	542	499	530	665	599
கடலுணவு	266	263	190	274	269
மொத்தம்	**2,579**	**2,462**	**2,336**	**2,730**	**2,568**

மூலம் : இலங்கைச் சுங்கம், வியாபார முதலீட்டு கொள்கை திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானது

இறக்குமதிகள்

2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 20,637.4 மில்லியனுடன் ஒப்பிடும்போது, 2022 ஆம் ஆண்டில் மொத்த இறக்குமதிச் செலவு 11.4 சதவீதத்தினால் குறைவடைந்து ஐ.அ.டொ. 18,291.0 மில்லியன்களைப் பதிவுசெய்தது. உலகளாவிய கேள்வியின் வீழ்ச்சி, மாற்று விகிதத்தின் தேய்மானம், உலகளாவிய உயர்வான எண்ணெய் விலைகளுக்கு மத்தியில் அவசரமற்ற இறக்குமதிகளுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடு ஆகியவை இதற்குக் காரணமாக அமைந்தது. நுகர்வோர் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதி செலவினங்களில் ஏற்பட்ட சரிவு முக்கியமாக பங்களித்தது. 2021 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 23.3 சதவீதமாக இருந்த இறக்குமதிச் செலவினம் 2022 ஆம் ஆண்டில் 23.7 சதவீத மிதமான அதிகரிப்பினைக் கொண்டிருந்தது.

2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 3,848.7 மில்லியன்களுடன் ஒப்பிடுகையில், நுகர்வுப் பண்டங்களின் இறக்குமதிச் செலவினமானது உணவும் பானங்களும் மற்றும் உணவு அல்லாத நுகர்வுப் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதி செலவினங்களின் வீழ்ச்சி காரணமாக, 2022 ஆம் ஆண்டில் 26.9 சதவிகிதம் குறைந்து ஐ.அ.டொ. 2,813.0 மில்லியனாகக் காணப்பட்டது. உணவு மற்றும் பானங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 1,666.5 மில்லியனாக இருந்ததுடன், உலகளாவிய உணவு விலைகள் அதிகரித்த போதிலும் குறைவான இறக்குமதி அளவுகள் காரணமாக 2022 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 1,607.9 மில்லியனாக 3.5 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. அதற்கிணங்க, பாற்பொருட்கள், காய்கறிகள், சர்க்கரை மற்றும் இனிப்புப்பண்டங்கள், பருப்பு மற்றும் கடலுணவுகள் ஆகியவற்றின் இறக்குமதிச் செலவினங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. மருத்துவ மற்றும் மருந்தாக்கப் பொருட்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், வீட்டுத் தளபாடப் பொருட்கள், ஆடை மற்றும் அணிகலன்கள் மற்றும் தனிப்பட்ட வாகனங்கள் ஆகியவற்றின் இறக்குமதிச் செலவு குறைந்ததன் காரணமாக 2022 ஆம் ஆண்டில் உணவு அல்லாத நுகர்வுப் பண்டங்களின் மீதான செலவு 44.8 சதவீதம் குறைந்து ஐ.அ.டொ. 1,205.1 மில்லியனினைக் கொண்டிருந்தது.

இதற்கிடையில், முக்கியமாக எரிபொருள், வைரம், விலையுயர்ந்த கற்கள் மற்றும் உலோகங்கள் மற்றும் உரம் ஆகியவற்றின் இறக்குமதிச் செலவினம் அதிகரித்ததனால் மொத்த இறக்குமதியில் 68.0 சதவீத பங்களிப்பை வழங்கிய இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிச் செலவினமானது 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 12,308.9 மில்லியனிலிருந்து 1.1 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 12,438.8 மில்லியனாக உயர்ந்துள்ளது. இறக்குமதி அளவு குறைந்தாலும், மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி ஆகியவற்றின் சராசரி இறக்குமதி விலைகள் அதிகரித்ததனால் எரிபொருள் இறக்குமதிக்கான செலவினம் 30.8 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 4,896.8 மில்லியன்களைப் பதிவுசெய்தது. வீழ்ச்சியடைந்த இறக்குமதி அளவுகளுக்கு மத்தியில் சராசரி இறக்குமதி விலைகள் அதிகரித்ததன் காரணமாக உர இறக்குமதிக்கான செலவினமானது 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 158.2 மில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 275.9 மில்லியன் வரை 74.4 சதவீதத்தினால் அதிகரித்தது.

அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிகளுக்கு முன்னுரிமையளிக்கும் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், கட்டுமானப் பொருட்கள், போக்குவரத்துச் சாதனங்கள் மற்றும் பிற முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தது. இதனால் 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 4,462.7 மில்லியன்களாக இருந்த முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிச் செலவு 2022 ஆம் ஆண்டில் 32.1 சதவீதத்தினால் குறைவடைந்து ஐ.அ.டொ. 3,030.5 மில்லியனினைக் கொண்டிருந்தது. அலுவலக உபகரணங்கள், இயந்திராதிகள் மற்றும் உபகரண பாகங்கள் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றின் இறக்குமதிகளின் சரிவினால் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் இறக்குமதிச் செலவினம் 29.9 சதவீதத்தினால் விழ்ச்சியடைந்து ஐ.அ.டொ. 1,969 மில்லியனினைப் பதிவுசெய்தது. இதற்கிடையில், இரும்பு மற்றும் இரும்புருக்கு, சீமெந்து மற்றும் கனிமப் பொருட்களிலின் குறைவான இறக்குமதி செலவினம் காரணமாக கட்டுமானப் பொருட்களின் இறக்குமதிச் செலவினம் 25.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ஐ.அ.டொ. 926.3 மில்லியன்களாகக் காணப்பட்டது. விவசாய உழவு இயந்திரங்கள், ரேங்கர்கள் மற்றும் பவுசர்கள் மற்றும் இரயில்வே உபகரணங்களுக்கான இறக்குமதி செலவினங்கள் குறைக்கப்பட்டதன் மூலம் போக்குவரத்து உபகரணங்களுக்கான செலவு 66.8 சதவீதத்தினால் சரிவுற்று ஐ.அ.டொ. 132.1 மில்லியனினைப் பதிவுசெய்தது.

அட்டவணை 2.14 : இறக்குமதிகளின் பெறுமதி

ஐ.அ.டொ.மில்

வகை	2019	2020	2021	2022 (அ)
நுகர்வுப் பொருட்கள்	**3,958**	**3,402**	**3,848**	**2,813**
உணவும் குடிபானங்களும்	1,428	1,554	1,667	1,608
சீனி	201	277	289	258
பால் மற்றும் பால் உற்பத்தி	312	334	318	225
ஏனைய உணவும் குடிபானங்களும்	915	944	1,060	1,125
உணவல்லாத வாசனைப் பொருட்கள்	2,530	1,847	2,182	1,205
வாகனங்கள்	816	283	13	12
வீட்டுப் பாவனைப் பொருட்கள்	207	174	257	86
இறப்பர் உற்பத்தி	83	58	102	61
மருத்துவ மற்றும் மருந்தக உற்பத்திகள்	553	596	883	533
வீட்டு உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள்	172	147	161	116
ஏனையவை	700	590	766	397
இடைநிலைப் பொருட்கள்	**11,370**	**9,077**	**12,309**	**12,439**
உரம்	221	259	158	276
பெற்றோலியம்	3,892	2,543	3,743	4,897
இரசாயண உற்பத்திகள்	832	832	1,074	966
காகிதம் மற்றும் காகித அட்டைகள்	457	383	469	466
கோதுமை மற்றும் சோளம்	346	384	418	303
புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள்	2,909	2,335	3,067	3,065
வைரம் மற்றும் பெறுமதியான உலோகங்கள்	201	117	144	204
அடிப்படை உலோகம்	563	460	866	323
பிற இடைநிலைப் பொருட்கள்	1,948	1,763	2,370	1,939
முதலீட்டுப் பொருட்கள்	**4,603**	**3,563**	**4,463**	**3,031**
இயந்திர சாதனங்களும் உபகரணங்களும்	2,490	2,176	2,810	1,969
போக்குவரத்து உபகரணம்	597	348	399	132
கட்டிடப் பொருட்கள்	1,509	1,036	1,249	926
ஏனைய முதலீட்டுப் பொருட்கள்	8	3	6	3
வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்	**8**	**14**	**17**	**9**
மொத்த இறக்குமதிகள்	**19,938**	**16,055**	**20,637**	**18,291**

மூலம் : இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா IOC PLC, வியாபார முதலீட்டு கொள்கை திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானது

சுற்றுலாத்துறை வருமானங்கள்

2022 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறையானது, உயர்ந்தளவிலான சமூக பதட்டங்கள், எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு போன்றவற்றால் கணிசமான பிரச்சினைகள் இருந்தபோதிலும் ஒரு நிலையான மீட்சியைப் பதிவு செய்தது. இந்த மீட்சியானது உலகளாவிய அதிக தடுப்பூசியேற்றல் விகிதங்கள், இலங்கைக்கு சுற்றுலாவை மேற்கொள்ளும் முக்கிய நாடுகளால் வழங்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளின் நீக்கத்தின் விளைவாக அதிக விமான இணைப்பு ஆகியவற்றினால் பெரிதும் பயனடைந்தது. அதன்படி, 2021 ஆம் ஆண்டில் 194,495 ஆட்களாக பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகை 2022 ஆம் ஆண்டில் 719,978 ஆக அதிகரித்துள்ளது. 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் அனைத்து முக்கிய பிராந்தியங்களிலிருந்தும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்தது. இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகள் வருகையின் மிகப்பெரிய ஆதாரப் பிரதேசமாக ஐரோப்பா இருந்தது. இப்பிராந்தியத்திலிருந்து, மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 60 வீதமாகிய 432,226 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். மொத்த வருகையில் 17 சதவிகிதமாகிய 123,004 சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் இந்தியா மிகப்பெரிய பங்களிப்பினைக் கொண்டிருந்தது. சுற்றுலாப் பயணிகளின் வருகையின் முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில், 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 506.9 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறையின் வருமானம் ஐ.அ.டொ. 1,136.3 மில்லியன்களாக கணிசமாக அதிகரித்து, ஆண்டு வளர்ச்சியாக 124.2 சதவீதத்தினைப் பதிவுசெய்தது.

தொழிலாளர்களின் பணஅனுப்பல்

தொழிலாளர்களின் பண அனுப்பீடுகளைப் பொறுத்தவரை 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொ. 5,491.5 மில்லியன்களுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் 31.0 சதவீதத்தினால் குறைவடைந்து ஐ.அ.டொ. 3,789.5 மில்லியன்களாக வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே,

அரசாங்கம் பல சலுகைகளை அறிமுகப்படுத்தியது. அவற்றில் இலங்கை மத்திய வங்கி "லங்கா ரெமிட்" என பெயரிடப்பட்ட தேசிய பணப்பரிமாற்ற செல்லிடச் செயலியை அறிமுகப்படுத்தியது. இது 2022, பெப்ருவரி மாதத்தில் தொடங்கப்பெற்றது. இச் செயலி வங்கி மற்றும் பிற முறையான நிதி நிறுவனங்களின் தற்போதைய பணம் அனுப்பும் மார்க்கங்களை, புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் நேரடியாக அணுகுவதற்கு உதவுகிறது. இதற்கிடையில், 2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் 311,056 இலங்கைத் தொழிலாளர்கள் புலம்பெயர்ந்ததன் காரணமாக, 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் தொழிலாளர்களின் பண அனுப்பீடு புத்துயிர் பெற்றதெனினும் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே இருந்தது. எவ்வாறாயினும், புவிசார் அரசியல் ரீதியாக பணம் அனுப்பீடுகளின் பாதிப்புகளைக் குறைக்கும் அதே வேளையில், தொழிலாளர்களின் பணஅனுப்பல் தொகையை அதிகரிக்க, அதிக ஊதியம் பெறும் திறன் கொண்ட பரந்த அளவிலான வேலை வகைகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் மாற்று இடங்களை மேம்படுத்துவதற்கான தேவை எழுந்துள்ளது.

வரைபு 2.11 | தொழிலாளர் பணவனுப்பல்கள்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.15 | கொடுப்பனவு மீதி : 2018- 2022

ரூபா.மில்லியன்

விடயம்	2018	2019	2020	2021 (a)	2022 (b)
வர்த்தக மீதி	**-10,343**	**-7,997**	**-6,008**	**-8,139**	**-5,185**
ஏற்றுமதி	11,890	11,940	10,047	12,499	13,106
இறக்குமதி	22,233	19,937	16,055	20,637	18,291
சேவை (தேறிய)	**3,766**	**2,849**	**819**	**1,586**	**2,110**
பெறுகைகள்	8,374	7,474	3,035	2,475	3,062
கொடுப்பனவுகள்	4,608	4,625	2,216	889	953
வருமானம் (தேறிய)	**-2,384**	**-2,462**	**-2,205**	**-1,959**	**-1,874**
பெறுகைகள்	249	252	198	116	249
கொடுப்பனவுகள்	2,633	2,713	2,404	2,075	2,124
பொருட்கள், சேவைகள், வருமானம் (தேறிய)	**-8,962**	**-7,610**	**-7,394**	**-8,512**	**-4,949**
நடைமுறை மாற்றல்கள் (தேறிய)	**6,163**	**5,766**	**6,207**	**5,228**	**3,496**
தனியார் மாற்றல்கள் (தேறிய)	6,155	5,757	6,194	5,222	3,493
பெறுகைகள் வெளிநாட்டு (ஊழிய) சம்பாத்தியம்	7,015	6,717	7,104	5,491	3,789
கொடுப்பனவுகள்	860	960	910	270	296
உத்தியோகபூர்வ மாற்றல்கள் (தேறிய)	8	9	13	6	3
நடைமுறைக் கணக்கு	**-2,799**	**-1,843**	**-1,187**	**-3,284**	**-1,453**
மூலதன மற்றும் நிதிக் கணக்கு	**-3,364**	**-2,437**	**-232**	**-4,186**	**-1,927**
மூலதனக் கணக்கு	**14**	**23**	**28**	**25**	**19**
நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு	**-2,785**	**-1,820**	**-1,159**	**-3,259**	**-1,433**
நிதிக் கணக்கு (இ)	**-3,378**	**-2,460**	**-260**	**-4,211**	**-1,946**
தவறுகள், தவிர்ப்புக்கள்	-593	-640	795	-952	-513
முழு மொத்த மீதி (கொடுப்பனவு மீதி)	**-1,103**	**377**	**-2,328**	**-3,967**	**-2,806**
மொ.உ.உ.சதவீதம்					
வர்த்தக பற்றாக்குறை	-11.7	-9.5	-7.4	-9.2	-6.7
நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை	-3.2	-2.2	-1.5	-3.7	-1.9

மூலம் : இலங்கை மத்திய வங்கி
(அ) திருத்தியமைக்கப்பட்ட
(ஆ) தற்காலிகமானது
(இ) 2012 ஆம் ஆண்டிலிருந்து அடிப்படையாகக் கொண்ட BPM6 புதிய வகைப்படுத்தலில் மேலதிகக்கூறுகளும் நிதிக் கணக்கில் உள்ளடக்கப்படுகின்றது.

2.4 நாணயத் துறை அபிவிருத்திகள்

மத்திய வங்கியானது, உயர்ந்து செல்லும் பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்துதல், வெளித் துறையிலுள்ள பாதிப்புகளை நிவர்த்தி செய்தல் ஆகியவற்றுடன் சாத்தியமான மிகைப் பணவீக்கத்தினையும் பொருளாதார நடவடிக்கைகளின் நீண்டகால இழப்பையும் தடுப்பதற்காக பணவீக்க உயர்வுகளைத் தடுப்பதற்குத் தேவையான கொள்கை நடவடிக்கைகளுடன் 2022 ஆம் ஆண்டு முழுவதும் தனது இறுக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டைத் தொடர்ந்தது. 2022, சனவரி 20 இல் 50 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 5.5 சதவீதம் மற்றும் 6.5 சதவீதமாக உயர்த்தப்பட்ட நிலையான வைப்பு வசதி விகிதமும் நிலையான பெறுகை வசதி விகிதமும் 2022, மாச்சு 04 இல் மேலும் 100 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 6.5 சதவீதமாகவும் மற்றும் 7.5 சதவீதமாகவும் அதிகரிக்கப்பட்டது. 2022, மாச்சு மாதத்தில் இலங்கை ரூபாயின் செங்குத்தான வீழ்ச்சியானது குறிப்பிடத்தக்க பணவீக்க அழுத்தங்களை ஏற்படுத்தி மத்திய வங்கியின் கொள்கை வட்டி விகிதங்களை மேலும் உயர்த்த நிர்ப்பந்தித்தது. அதன்படி, 2022 ஏப்பிரல் 08 இல் 700 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 13.5 சதவீதம் மற்றும் 14.5 சதவீதமாக அதிகரிக்கப்பட்ட நிலையான வைப்பு வசதி விகிதமும் நிலையான கடன் வசதி விகிதமும் 2022, யூலை 07 இல் 100 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 14.5 சதவீதம் மற்றும் 15.5 சதவீதமாக அதிகரிக்கப்பட்டன. 2022, ஏப்பிரல் முதல் மத்திய வங்கியால் எடுக்கப்பட்ட கடுமையான நாணயக் கொள்கை நடவடிக்கைகள், கேள்வியால் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தங்களை நிருவகிக்க உதவியது மட்டுமன்றி அதன் மூலம் பாதகமான பணவீக்க எதிர்பார்ப்புகளின் அதிகரிப்பைத் தடுக்கவும், வெளித்துறை மீதான அழுத்தத்தைத் தணிக்கவும் மற்றும் சந்தை வட்டி விகித கட்டமைப்பில் அவதானிக்கப்பட்ட முரண்பாடுகளை சரிசெய்யவும் உதவியது.

உரிமம் பெற்ற வணிக வங்கிகளின் வைப்புத்தொகைகளினைப் பொறுத்தவரை 2022 ஆம் ஆண்டில் 4.0 சதவீதத்தில் மாறாத நிலையான ஒதுக்கு விகிதத்துடன், இந்த ஆண்டில் ஓரளவு அதிகரித்தது. 2023, மாச்சு 03 ஆம் திகதியன்று 100 அடிப்படைப் புள்ளிகளால் 2023, நிலையான வைப்பு வசதி விகிதத்தினையும் நிலையான பெறுகை வசதி விகிதத்தினையும் முறையே 15.5 சதவீதமாகவும் 16.5 சதவீதமாகவும் அதிகரித்து, மத்திய வங்கி அதன் இறுக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை, தொடர்ந்து மேற்கொண்டது. இந்நடவடிக்கை அடிப்படைப் பணவீக்கம் மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புகள் போதுமான அளவு கட்டுப்படுத்தப்படுவதற்கு உதவியது.

வரைபு 2.12 | ஒதுக்கப்பட்ட கடன் மற்றும் தனியார் துறை கடன் வளர்ச்சி



மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபு 2.13 | தனியார்துறையின் கடன் வளர்ச்சி மற்றும் வர்த்தக பற்றாக்குறை



மூலம்: இலங்கை மத்திய வங்கி

இறுக்கமான பணப்புழக்க நிலைமைகள் மற்றும் இறுக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாடு ஆகியவை தொடரப்பட்டதன் காரணமாக, சராசரி நிறையளிக்கப்பட்ட அழைப்புப் பண விகிதம் 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிலையான விகித இடைவெளியின் மேல் எல்லையைச் சுற்றியே இருந்ததுடன் வங்கி முறையின் பாரிய திரவநிலைப் பற்றாக்குறையின் விளைவாக நிலையான விகித இடைவெளியின் மேல் எல்லையைத் தொட்டது. சராசரி நிறையளிக்கப்பட்ட அழைப்புப் பண விகிதமானது 2022 ஆம் ஆண்டில் கொள்கை வட்டி விகிதங்களின் திரட்டிய சீராக்கல்களின் விளைவாக 9.55 சதவீதப் புள்ளிகளால் அதிகரித்தது. சராசரி நிறையளிக்கப்பட்ட அழைப்புப் பண விகிதமானது 2023, சனவரியின் நடுப்பகுதியில் நிலையான விகித இடைவெளியின் மேல் எல்லையில் இருந்து ஒரு சிறிய குறைப்பைப் பதிவு செய்தது. இருப்பினும், 2023, மாச்சு மாதத்தில் கொள்கை வட்டி விகிதங்களின் அதிகரிப்புடன், 2023, மாச்சு 07 ஆம் திகதியன்று உள்ளவாறு சராசரி நிறையளிக்கப்பட்ட அழைப்புப் பண விகிதம் 16.46 சதவீதமாக உயர்ந்ததுடன் 2023, மாச்சு இறுதிக்குள் நிலையான விகித இடைவெளியின் மேல் வரம்பில் இருந்தது. இறுக்கமான நாணய மற்றும் திரவநிலை நிலைமைகளுக்கு விடையிறுக்கும் வகையில், சந்தைக் கடன் வட்டி விகிதங்களும் 2022 ஆம் ஆண்டில்

அட்டவணை 2.16 | வர்த்தக வங்கிகள் முற்பணங்களும் நிலுவைக் கடன்களும் (அ)(ஆ)

ரூபா.பில்.

விடயம்	2021	2022(இ)	2021/2022 % மாற்றம்
விவசாயம் மற்றும் மீன்பிடி	**551.7**	**601.7**	**9.1**
அவற்றில்			
தேயிலை	101.2	108.2	6.9
இறப்பர்	41.4	59.1	42.8
தென்னை	33.7	30.0	-11.0
நெல்	44.4	38.9	-12.4
மரக்கறி, பழங்கள், சிறு உணவுப் பொருட்கள்	30.9	32.2	4.2
கால்நடை மற்றும் பாற்பண்ணை	27.7	30.4	9.7
மீன்பிடிகள்	24.0	26.4	10.0
கைத்தொழில்	**2,860.9**	**3100.6**	**8.4**
அவற்றில்			
நிர்மாணம்	1,525.1	1571.9	3.1
உணவு, குடிபாணங்கள்	174.7	214.6	22.8
துணிவகைகள், ஆடைகள்	273.1	293.8	7.6
இரசாயம், பெற்றோலியம் மற்றும் மருந்துப் பொருட்கள் உற்பத்திகள்	141.2	162	14.7
அடிப்படை உலோக உற்பத்திகள்	59.6	61.1	2.5
தயாரிக்கப்பட்ட உலோகப் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் போக்குவரத்து உபகரணங்கள்	152.8	144.9	-5.2
சேவைகள்	**1,996.5**	**2,079.6**	**4.2**
அவற்றில்			
மொத்த மற்றும் சில்லறை உபகரணங்கள்	570.3	563.7	-1.2
சுற்றுலா	288.2	372.8	29.4
நிதியியல் மற்றும் வியாபாரச் சேவைகள்	437.2	446.6	2.2
போக்குவரத்து	80.7	58.8	-27.1
தொடர்பாடல் மற்றும் தகவல் தொழிநுட்பம்	96.6	75.5	-21.8
தனிப்பட்ட கடன்களும் முற்பணங்களும் (ஈ)	**1,799.8**	**2,013.0**	**11.8**
அவற்றில்			
பாவணையாளர் உறுதி	375.0	368.5	-1.7
பொற்கடன் அடகு	302.4	423.4	40.0
கடனட்டைகள்	144.8	149.3	3.1
மொத்தம்	7,208.9	7, 794.8	8.1

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) வர்த்தக வங்கிகளின் தனியார் துறைக்கடன் மற்றும் முற்பணங்களின் னுடீரு மற்றும் ழுடீரு உள்ளடங்கலாக காலாண்டு ஆய்வுகளை அடிப்படையாக கொண்டுள்ளது.

(ஆ) கடன், மிகைப் பற்றுக்கள், ரசீதுகள், தள்ளுபடிகள் மற்றும் கொள்வனவுகள் உள்ளடங்கியும், பணச்சேகரிப்பு சம்பந்தமானவை தவித்தும் காணப்படுகின்றது

(இ) தற்காலிமானது

(ஈ) தனிப்பட்ட வீட்டுக் கடன்கள் நீங்கலாக, கைத்தொழிலின் கீழ் நிர்மாணத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டதும் பாதுகாப்பு வலைத் திட்டம் தொடர்பான கடன்கள் உள்ளடங்கலாக

குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்தன. அதன்படி, 2022 ஆம் ஆண்டின் இறுதியில் சராசரி நிறையளிக்கப்பட்ட கடன்பெறுகை விகிதம் சுமார் 9 சதவீத புள்ளிகளிலிருந்து 18.70 சதவீதமாக அதிகரித்த அதே நேரத்தில் மாதாந்த சராசரி நிறையளிக்கப்பட்ட முதனிலை கடன்பெறுகை விகிதம் 2022, நவம்பர் மாதத்தில் 28.25 சதவீதமாக உயர்ந்தது. இதற்கிடையில், கொள்கை விகிதங்களில் கணிசமான அதிகரிப்பு மற்றும் அரசாங்கப் பிணையங்களின் ஈட்டுகைகள் காரணமாக, ஏற்கனவே உள்ள வைப்புகளைத் தக்கவைத்துக்கொள்வதற்காகவும், புதிய வைப்புகளை மேம்படுத்துவதற்காகவும், வங்கிகள் புதிய வைப்புக்களுக்கு அதிக வட்டி விகிதங்களை வழங்கின. அதன்படி, 2022 இறுதியில் சராசரி நிறையளிக்கப்பட்ட வைப்பு விகிதம் 14.06 சதவீதமாக அதிகரித்துள்ளது.

2021 ஆம் ஆண்டின் இறுதியில் 21.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டின் இறுதியில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கான கடன் 8.3 சதவீதம் சுருக்கமடைந்தது. முக்கியமாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கான கடன்களுக்கான வட்டி விகிதங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, ஒட்டுமொத்த கேள்வி குறைவு, மற்றும் பிற காரணிகளுடன் சில கைத்தொழில்களுக்கான மூலப்பொருட்களின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவும் இதற்குக் காரணமாக அமைந்தன. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 6,981 பில்லியன்களாகக் காணப்பட்ட தனியார் துறைக்கான கடன் சராசரியாக 6.2 சதவீதத்தினால் அதிகரித்து 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா. 7,414 பில்லியனாகக் காணப்பட்டமை முன்னொருபோதுமில்லாத பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இறுக்கமான நாணய நிலைமைகள் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகளின் மிதமான தன்மையைப் பிரதிபலிக்கிறது. இதற்கிடையில், அரசாங்கத்திற்கான தேறிய கடனானது பெரிய அளவிலான நாணய நிதியுதவிக்கு மத்தியில் முக்கியமாக மத்திய வங்கியால் இயக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 5,832 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா. 7,471 பில்லியனாக 28.1 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், விரிந்த பண வழங்கலின் (M_2b) ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி 2022 ஆம் ஆண்டு இறுதிக்குள் 15.4 சதவீத மிதமான அதிகரிப்பினைப் பெற்றது. 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் விரிந்த பணத்தின் வளர்ச்சியானது 2022 ஏப்பிரல் இறுதியில் 20.0 சதவீதமாக குறிப்பிடத்தக்களவு அதிகரித்து, 2022, மே மாதம் முதல் வீழ்ச்சியடைந்தது.

தொழில்வாய்ப்பு மற்றும் தொழிலின்மை

விவசாயத் துறைச் செயற்பாடுகளில் வேலைவாய்ப்பு குறைவாகக் காணப்பட்டபோதிலும், முக்கியமாக கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகளில் வேலைவாய்ப்புக்கள் அதிகரித்தமையால் 2022 ஆம் ஆண்டில் மொத்த வேலைவாய்ப்புப்பெற்றோர் தொகையானது 2021 ஆம் ஆண்டின் 8.114 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 8.148 மில்லியனாக அதிகரித்தது. அதற்கிணங்க, கைத்தொழில் துறை நடவடிக்கைகளில் முந்தைய ஆண்டில் 2.109 மில்லியனாக இருந்து 2022 ஆம் ஆண்டில் 2.158 மில்லியனாக அதிகரித்துள்ள அதே சமயம் 2021 ஆம் ஆண்டில் 3.791 மில்லியனாக இருந்த சேவைத் துறை நடவடிக்கைகளிலான வேலைவாய்ப்பு 2022 ஆம் ஆண்டில் 3.831 மில்லியனாகவும் அதிகரித்தது. இருப்பினும் விவசாயத் துறை செயற்பாடுகளிலான வேலைவாய்ப்பின் மொத்தத் தொகை 2021 ஆம் ஆண்டில் 2.213 மில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 2.159 மில்லியனாக வீழ்ச்சியடைந்தது. அதற்கிணங்க, 2021 ஆம் ஆண்டில் முறையே 26.0 சதவீதமாகவும் 46.7 சதவீதமாகவும் காணப்பட்ட கைத்தொழில் மற்றும் சேவைத் துறையில் வேலைவாய்ப்புக்கள் 2022 ஆம் ஆண்டில் முறையே 26.5 சதவீதமாகவும், 47.0 சதவீதமாகவும் அதிகரித்ததுடன் விவசாயத்துறை வேலைவாய்ப்புக்கள் 2021 ஆம் ஆண்டில் 27.3 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 26.5 சதவிதமாகக் குறைவடைந்தது.

இதற்கிடையில், 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2022 இல் பொதுத்துறை ஊழியர்கள், சுய தொழில் புரிவோர் மற்றும் பங்களிக்கும் குடும்பப் பணியாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ள அதேசமயம் தனியார் துறை ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் மொத்த வேலைவாய்ப்பில் 42.9 சதவீத மிகப்பெரிய பங்கினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற, முக்கிய வேலைவாய்ப்பை உருவாக்கும் துறையாகவும் தனியார் துறை தொடர்ந்து நீடித்தது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் பொதுத்துறையில் மொத்த வேலைவாய்ப்பு 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 1.401 மில்லியனிலிருந்து 1.394 மில்லியனாகக் குறைவடைந்தது. பொதுத்துறைக்கான புதிய ஆட்சேர்ப்புகளைக் குறைத்தல் மற்றும் அரசுடைமை நிறுவனங்களில் வேலைவாய்ப்புக்கள் குறைந்தமையே இதற்கான முக்கிய காரணமாகும்.

பொருளாதாரமானது தொற்றுநோயிலிருந்து கணிசமாக மீட்சி பெறுவதைக் காட்டும் வகையில், 2021 ஆம் ஆண்டில் 440,000 ஆக இருந்த வேலையற்றோர் தொகை 2022 ஆம் ஆண்டில் 399,000 ஆகக் குறைந்துள்ளது. வேலையின்மை விகிதம் 2021 ஆம் ஆண்டில் 5.1 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 4.7 சதவீதமாகக் குறைந்தது. பெண்கள் வேலையின்மை விகிதம் 2021 ஆம் ஆண்டில் 7.9 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 6.5 சதவீதமாகக் குறைந்துள்ளபோதிலும், ஆண்கள் வேலையின்மை விகிதமானது 2022 ஆம் ஆண்டில் 3.7 சதவீதத்தில் மாறாமலிருந்தது. க.பொ.த உயர்தரம் மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வித்தகைமையுடைய பிரிவினரிடையே வேலையின்மை விகிதமானது 2021 ஆம் ஆண்டில் 9.1 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 7.8 சதவீதமாக கணிசமாகக் குறைந்துள்ளது. இளைஞர்களின் வேலையின்மை விகிதம் (15-24 வயதுடையோர்) 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 26.5 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 22.8 சதவீதமாக குறிப்பிடத்தக்களவில் குறைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைக்கான புறப்படுகைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது, இவ்வருடத்தில் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் பிரதிபலிப்பாக இருந்தது. 2021 ஆம் ஆண்டில் 122,264 ஆக இருந்த வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான புறப்பாடு 2022 ஆம் ஆண்டில் 311,056 ஆக 154.4 சதவீதத்தினால் பாரிய அதிகரிப்பினைப் பெற்றிருந்தது. ஒட்டுமொத்த வேலையின்மை விகிதங்களில் சரிவு இருந்தபோதிலும், குடும்ப உறுப்பினர் தொகை அதிகரிப்புடன் தொழிற் படை பங்கேற்பு விகிதம் 2021 ஆம் ஆண்டில் 49.9 சதவீத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 49.8 சதவீதமாகக் குறைந்துள்ளது. பெண்கள் தொழிற் படையில் பங்கேற்பு விகிதம் 2021 ஆம் ஆண்டில் 31.8 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 32.1 சதவீதமாக அதிகரித்த அதே நேரத்தில் ஆண்கள் தொழிற் படை பங்கேற்பு விகிதமானது, 2021 ஆம் ஆண்டில் 71.0 சதவீதத்திலிருந்து 2022 இல் 70.5 சதவீதமாகக் குறைந்துள்ளமை பெண் தொழிற் படை பங்கேற்பினை அதிகரிக்க தொழிலாளர் சந்தை மறுசீரமைப்பிற்கான உத்தரவாதத்தினை அளித்துள்ளது.

பணவீக்கம்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் (CCPI> 2013=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் தலைக்குரிய பணவீக்கமானது, 2021 திசெம்பரில் 12.1 சதவீதத்திலிருந்து 2022 செத்தெம்பரில் 69.8 சதவீதமாக அதிகரித்து 2022 திசெம்பரில் 57.2 சதவீதமாக சற்றே குறைவடைந்தது. உணவுப் பொருட்களின் குறிப்பிடத்தக்க விலையேற்றம், இலங்கை ரூபாவின் செங்குத்தான வீழ்ச்சி, எரிசக்தி மற்றும் போக்குவரத்து விலைகளில் ஏற்பட்ட சரிவுகள் மற்றும் கடந்த சில வருடங்களாக பணப்புழக்கத்தில் ஏற்பட்ட பின்னடைவின் தாக்கத்தினால் ஏற்பட்ட மொத்தக் கேள்வி அழுத்தங்கள் உட்பட வழங்கல் பகுதியிலான இடையூறுகள் தலைக்குரிய பணவீக்கத்தின் அதிகரிப்புக்கு முக்கிய பங்காற்றியுள்ளன. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்பட்டதன்படி, முக்கிய பணவீக்கத்தின் சரிவுப் போக்கு 2023, மே 25.2 சதவீதமாகக் குறைந்து 2023 ஆம் ஆண்டில் மேலும் தொடர்ந்தது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டியின்படி (2013=100) அளவிடப்படும் ஆண்டுக்கு ஆண்டு தலைக்குரிய பணவீக்கம் 2021, திசெம்பரில் 14.0 சதவீதத்திலிருந்து 2022, செத்தெம்பரில் 73.7 சதவீதமாக உயர்ந்து, 2022 டிசம்பரில் 59.2 சதவீதமாக மீண்டும் குறைந்துள்ளது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டியின்படி (2021=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்பட்டதன்படி,

2023 ஆம் ஆண்டில், தலைக்குரிய பணவீக்கத்தின் சரிவுப் போக்கு மேலும் தொடர்ந்ததுடன், 2023 எப்பிரல் மாதத்தில் 33.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100) அடிப்படையிலான வருடாந்த சராசரி தலைக்குரிய பணவீக்கம், 2021 ஆம் ஆண்டில், 6.0 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில், 46.4 சதவீதமாக அதிகரித்த அதே நேரத்தில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டியின் (2013=100) அடிப்படையிலான வருடாந்த சராசரி பணவீக்கமானது 2021 ஆம் ஆண்டில் 7.0 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில் 50.4 சதவீதமாக உயர்ந்தது.

பொருளாதாரத்தில் அடிப்படையான பணவீக்கத்தைப் பிரதிபலிக்கும் முக்கிய பணவீக்கம், பிரதானமாகக் கடந்த காலத்தில் நாணய வசதியின் பின்தங்கிய தாக்கம், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலை உயர்வு மற்றும் சில உணவு அல்லாத வகைகளின் விலைகள் அதிகரிப்பின் காரணமாக 2022 ஆம் ஆண்டு முடிவடையும் ஒன்பது மாதங்களில் கணிசமாக உயரத் தொடங்கி, அதன் பின்னர் நடுநிலைப்படுத்தப்பட்டது. முக்கிய பணவீக்கத்தின் அளவீட்டில் இருந்து எளிதில் ஆவியாகும் உணவு மற்றும் ஆற்றல் கூறுகளை நீக்கியதன் காரணமாக, முக்கிய பணவீக்கத்தின் குறையும் போக்கு, தலைக்குரிய பணவீக்கத்தை விட மெதுவானதாக இருந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100) நகர்வுகளால் அளவிடப்படும் ஆண்டுக்கு ஆண்டு முக்கிய பணவீக்கம் 2021, திசெம்பரில் 8.3 சதவீதத்திலிருந்து 2022, செத்தெம்பரில் 50.2 சதவீதமாக உயர்ந்து 2022, திசெம்பரில் 47.7 சதவீதமாக சற்றுக் குறைவடைந்தது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டியில் (2013=100) உள்ள நகர்வுகளால் அளவிடப்படும் ஆண்டுக்கு ஆண்டு முக்கிய பணவீக்கத்திலும் இதேபோன்ற போக்கு காணப்பட்டது. அச்சுட்டெண்ணானது 2021, திசெம்பரில் 10.8 சதவீதத்திலிருந்து 2022, செத்தெம்பரில் 64.1 சதவீதமாக அதிகரித்து, 2022, திசெம்பரில் 57.5 சதவீதமாக மிதமாகக் குறைந்துள்ளது. இதற்கிடையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் (2021=100) உள்ள நகர்வுகளால் அளவிடப்படும் ஆண்டுக்கு ஆண்டு முக்கிய பணவீக்கம் 2023, மே மாதத்தில் 20.3 சதவீதமாகக் குறைந்துள்ளதுடன் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டியின் (2021=100) இயக்கங்களால் அளவிடப்படும் ஆண்டுக்கு ஆண்டு முக்கிய பணவீக்கம் 2023, ஏப்பிரல் மாதத்தில் 31.8 சதவீதம் வரை குறைந்துள்ளது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் (2013=100) அடிப்படையிலான வருடாந்த சராசரி மைய பணவீக்கம் 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 4.4 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 34.6 சதவீதமாக அதிகரித்த அதேசமயம் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டியின் (2013=100) அடிப்படையில் அளவிடப்படும் வருடாந்த சராசரி முக்கிய பணவீக்கம் 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 5.5 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 43.9 சதவீதமான செங்குத்தான அதிகரிப்பினைப் பெற்றது.

வரைபு 2.14 | தலைக்கான பணவீக்கம், உணவிற்கான பணவீக்கம் மற்றும் உணவற்றவைக்கான பணவீக்கம்



மூலம்: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
குறிப்பு : 2020 சனவரி - 2023 சனவரி CCP1 (2013=100) அடிப்படையில் மற்றும் 2023 பெப்ரவரி - மே CCP1 (2021=100) அடிப்படையில்

உரிமைப் பங்குச் சந்தை அபிவிருத்திகள்

பாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமகளுக்கு மத்தியில், 2022 ஆம் ஆண்டில் விலைக் குறியீடுகள், சந்தை மூலதனமாக்கல் மற்றும் நாளாந்த புரள்வு ஆகியவற்றின் அடிப்படையில் பங்குச் சந்தை குறைந்த செயலாற்றுகையைப் பதிவு செய்த அதே நேரத்தில் விலைக் குறியீடுகளில் குறிப்பிடத்தக்க ஏற்ற இறக்கம் தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது. அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்ணானது 2022, சனவரி 19 ஆம் திகதியன்று வரலாற்று ரீதியாக மிக உயர்ந்த புள்ளியாகிய 13,462.4 புள்ளிகளைப் பதிவுசெய்தது. அதன்பின்னர் இக் குறியீடுகளில் 2022, பெப்ருவரி தொடக்கத்திலிருந்து சரிவுப் போக்கு அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க, அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 8,490 புள்ளிகளாகச் சரிந்த அதே சமயம், உயர் மட்டத்திலுள்ளதும் அதிக திரவநிலைப் பங்குகளை பிரதிநிதித்துவப்படுத்துவதுமான ஸ்டாண்டர்ட் அண்ட் புவர்ஸ் ஸ்ரீலங்கா 20 சுட்டெண் (S&P SL20) 2022, இறுதிப்பகுதியில் 2,636 புள்ளிகளுக்குச் சரிந்தது. 2022 ஆம் ஆண்டில் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் மற்றும் S&P SL20 சுட்டெண் ஆகியவை முறையே 30.6 சதவீதத்தினாலும் 37.7 சதவீதத்தினாலும் சுருக்கமடைந்தன.

அதேசமயம், 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 5,489 பில்லியனாகக் காணப்பட்ட சந்தை மூலதனமாக்கல் 2022, இறுதியில் 29.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ரூபா 3,847 பில்லியனினைக் கொண்டிருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக சந்தை மூலதனமாக்கலின் பங்கு, 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 31.2 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2022, இறுதியில் 15.9 சதவீதமாகக் குறைந்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் கொழும்புப் பங்குச் சந்தையின் சராசரி நாளாந்தப் புரள்வாக ரூபா 687 பில்லியன் பதிவுசெய்யப்பட்டது. இது 2021 ஆம் ஆண்ல் பதிவு செய்யப்பட்ட ரூபா 1,173 மில்லியனுடன் ஒப்பிடுகையில்

குறிப்பிடத்தக்க வீழ்ச்சியாகும். கொழும்புப் பங்குச் சந்தையின் கீழ், வர்த்தகம் செய்யும் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கையும் 2021 ஆம் ஆண்டில் 296 ஆக இருந்த நிலையில், 2022 ஆம் ஆண்டில் 290 ஆகக் குறைந்துள்ளது.

வெளிநாட்டு விற்பனைகளைப் பொறுத்தவரை 2021 ஆம் ஆண்டில் ரூபா 86,689 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 57.5 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 36,863 மில்லியனினைப் பதிவுசெய்தது. வெளிநாட்டுக் கொள்முதல் 2021 ஆம் ஆண்டில் ரூபா 39,410 மில்லியனிலிருந்து 71.2 சதவீதத்தினால் அதிகரித்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 67,488 மில்லியனாகக் காணப்பட்டது. அதன்படி, ஒரு சில பெரிய நிறுவனங்களால் ஈர்க்கப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் காரணமாக 2022 ஆம் ஆண்டில் தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டன. அதன்படி, 2021 ஆம் ஆண்டில் ரூபா 52.6 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்ட தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2022 ஆம் ஆண்டில் ரூபா 30.6 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 2.17 | மூலதனச் சந்தை அசைவுகள்

சுட்டிகள்	2014	2015	2016	2017	2018	2019	2020	2021	2022
அனைத்து பங்குகள் விலைச்சுடடெண் (1985=100)	7,299	6,895	6,228	6,369	6,052	6,129	6,774	12,226	8,490
எஸ் அன்ட் பீ எஸ்எல் 20 சுட்டெண்	4,089	3,626	3,496	3,672	3,135	2,937	2,638	4,233	2,636
சந்தை முதலாக்கம் (ரூபா பில்.)	3,105	2,938	2,745	2,899	2,840	2,851	2,961	5,489	3,847
வர்த்தக பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளின் எண்	294	294	295	296	297	289	283	296	290
வருடாந்த சராசரி பங்கு மாற்றல்கள் (ரூபா பில்.)	341	253	176	221	200	171	397	1,173	687
வெளிநாட்டு விற்பனைகள் (ரூபா மில்.)	83,554	89,793	74,275	94,627	100,316	68,272	104,165	86,689	36,863
வெளிநாட்டு கொள்வனவுகள் (ரூபா மில்.)	104,771	84,421	74,625	112,285	77,067	56,537	52,889	39,410	67,488

மூலம் : கொழும்பு பங்கு பரிவர்த்தனைச் சந்தை, இலங்கை மத்திய வங்கி

03

உலகப் பொருளாதார அபிவிருத்திகள்

3.1 மேன்நோக்கு[1]

உலகப் பொருளாதாரம் 2022 இல் அதிகளவு காணப்பட்ட பணவீக்க வீழ்ச்சி மற்றும் மிதமான பொருளாதார வளர்ச்சி என்பவற்றின் மூலம் மீட்சிக்கான அறிகுறியை காட்டியது. இருப்பினும், தீவிரமான நிதி நெருக்கடி, கொவிட்-19 தொற்றுநோயின் பிற்பட்ட கால விளைவு மற்றும் குறிப்பாக உலகளாவிய விநியோகச் சங்கிலியில் ரஷ்யா - உக்ரைன் மோதலின் பரவலான விளைவு ஆகியவற்றால் கண்ணோட்டம் இருண்டதாக உள்ளது. 2022 ஆம் ஆண்டில், பல பொருளாதாரங்கள் அதிகரித்த தேவை, விநியோக இடையூறுகள் மற்றும் பொருட்களின் விலை உயர்வு ஆகியவற்றால் வெளிப்படும் பொருளாதாரங்களின் துறைகளில் அதிக பணவீக்கத்தின் தாக்கத்தை எதிர்கொண்டன. இதன் விளைவாக, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு கொள்கை விகிதங்களை அதிகரிப்பதன் மூலம் மத்திய வங்கிகள் தங்கள் பணவியல் கொள்கை நிலைப்பாடுகளை கடுமையாக்கியுள்ளன. கொள்கை விகிதங்களின் அதிகரிப்பு வங்கி மற்றும் வங்கி அல்லாத துறைகளில் நிதித் துறையை பாதிப்படையச் செய்துள்ளது. இதற்கு மேலதிகமாக, பல வளர்முக நாடுகளில் கடன் அளவுகள் நீடித்து நிலைக்க முடியாத அளவிற்கு உயர்ந்து, அவற்றின் நிதி அளவுருக்களை நிர்வகிப்பதற்கான நிதி சவால்களை முன்வைத்தது. இதற்கிடையில், மேம்படுத்தப்பட்ட உலகளாவிய விநியோகச் சங்கிலியிலிருந்து பயனடைகிறது, குறிப்பாக சீனாவில், தற்போதைய ரஷ்யா - உக்ரைன் மோதல் இருந்தபோதிலும், பொருட்களின் விலைகள் 2022 இல் மிதமானதாக இருந்தது.

உலகப் பொருளாதார வளர்ச்சி 2022ல் 3.4 இல் சதவீதமாக இருந்தது 2023 இல் 2.8 இல் சதவீதமாகவும் 2024ல் 3.0 சதவீதமாகவும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில், உலகளாவிய பணவீக்கம் 2022 இல் 8.7 சதவீதத்திலிருந்து 2023 இல் 7.0 சதவீதமாகும். மேலும், 2024 இல் 4.9 சதவீதமாகவும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதாரங்களை தொற்றுநோய்க்கு முந்தைய நிலைக்கு கொண்டு வருவதற்கு கட்டமைப்பு மாற்றங்கள் ஒரு முன்நிபந்தனை என்பதை இந்த முன்னேற்றங்கள் நிரூபித்துள்ளன.

முன்னேறிய பொருளாதாரங்களின் பொருளாதார வளர்ச்சி 2023 இல் 1.3 சதவீதமாக குறையும், 2022 இல் 2.7 சதவீதமாக இருந்து. 2024 இல் 1.4 சதவீதமாக சற்று அதிகரிக்கும். இந்த சரிவு முக்கியமாக யூரோ பகுதியில் எதிர்பார்க்கப்படும் மந்தநிலை மற்றும் 2023 இல் ஐக்கிய இராச்சியத்தில் வெறும் 0.7 சதவீத வளர்ச்சி விகிதத்துடன் 4.0 சதவீத வளர்ச்சியின் சுருக்கம் காரணமாக உள்ளது. இதற்கு மாறாக, வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் வளரும் பொருளாதாரங்கள் அதிக வளர்ச்சியை அனுபவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2022 இல் 2.8 சதவீதத்திலிருந்து 2023ல் 4.5 சதவீதமாகவும், 2024 இல் 4.4 சதவீதமாகவும் இருக்கும். வளர்ந்து வரும் மற்றும் வளரும் ஆசியப் பொருளாதாரங்களும் 2023 இல் 5.3 சதவீதமும், 2024ல் 5.1 சதவீதமும் நேர்மறையான வளர்ச்சியை அனுபவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சீனப் பொருளாதாரம் மீண்டும் திறக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. 2022 இல் 3.0 சதவீதத்திலிருந்து 2023 இல் 5.2 சதவீத வளர்ச்சியுடன் நேர்மறையான கசிவு விளைவுகளைக் கொண்டுள்ளது, 2024 இல் 4.5 சதவீதமாகக் குறையும்.

உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் நிலையற்றதாக இருக்கும் என்றும், மத்திய வங்கிகள் தங்கள் கொள்கை விகிதங்களை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ள நிதி அழுத்தங்களில் இருந்து உருவான பின்னடைவை நோக்கியதாகவும் கணிக்கப்பட்டுள்ளது. இது இறையாண்மைக் கடன் நெருக்கடியால் மேலும் மோசமாகியுள்ளது. மேலும், மூலதன வரவுகள் சீர்குலைந்து, உலகில் வளர்ச்சியில் பெரிய ஏற்றத்தாழ்வை உருவாக்குகின்றன, இது புவி-அரசியல் பதட்டங்களுடன், குறிப்பாக ரஷ்யா மற்றும் உக்ரைனில் மேலும் தீவிரமடைந்துள்ளது. உணவு மற்றும் எரிசக்தி விலைகள் மீதான அழுத்தங்கள், வளர்ச்சிகளின் நிலை இருந்தபோதிலும், மத்திய வங்கிகள் தங்கள் பணவியல் கொள்கை நிலைப்பாட்டை கடுமையாக்க நிர்ப்பந்தித்தன. எனவே, நிதித் துறையின் பாதிப்புகள் மற்றும் அதிக வாழ்க்கைச் செலவு ஆகியவற்றிலிருந்து வெளிப்படும் அபாயங்களைக் குறைக்க பல நாடுகள் பணவியல் மற்றும் நிதிக் கொள்கை கடுமையாக்கல் நடவடிக்கைகளைப் பயன்படுத்துகின்றன. கடனின் நிலைத்தன்மையை ஆக்கிரமிப்பு வருவாய் அடிப்படையிலான நிதி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளின் மூலம் நிவர்த்தி செய்வது அவசியமாகும், கடன் மிகவும் தாங்க முடியாததாக இருக்கும் இலங்கை போன்ற நாடுகளில் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளுக்கும் இது முக்கியமானது. மேலும், நாணயமாற்று விகிதங்களில் சரிசெய்தல் மற்றும் பலதரப்பு முகவராண்மைகளுடன் ஒத்துழைப்பது ஆகியவை நெருக்கடியின் பாதகமான விளைவுகளைத் தணிக்கும், அதே நேரத்தில் பேரண்ட பொருளாதார அடிப்படைகளில் புவிசார் அரசியல் தாக்கங்களைத் தீர்க்க வேண்டும்.

1. உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் (ச.நா. நிதியம் ஏப்ரல் 2023), நிதி கண்காணிப்பு (ச.நா. நிதியம், ஏப்ரல் 2023), உலகளாவிய நிதி நிலைத்தன்மை அறிக்கை (ச.நா. நிதியம், ஏப்ரல் 2023), வியாபர பண்டச் சந்தை கண்ணோட்டம் (ஏப்ரல் 2023, ச.நா. நிதியம்), உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் (உலக வங்கி, சனவரி 2023) மற்றும் உலக வங்கி, உலக வங்கி மற்றும் உலகளாவிய இணையத்தின் பிற தரவு மற்றும் தகவல்கள்.

அட்டவணை 3.1 | உலகப் பொருளாதாரம் பற்றிய ஓர் பார்வை - 2022

நாடு	மொ.உ.உ. வளர்ச்சி (வருடாந்த சதவீத மாற்றம்)	பணவீக்கம் (சதவீதம்)	வேலையின்மை (சதவீதம்)	அரசிறைப் பற்றாக்குறை (மொ.உ.உ. சதவீதம்)	மொத்த படுகடன் (மொ.உ.உ. சதவீதம்)
	2022				
ஆர்ஜன்டீனா	5.2	72.4	7	-3.9	84.5
அவுஸ்திரேலியா	3.7	6.6	3.7	-3.3	55.7
பிரேசில்	2.9	9.3	7.9	-4.6	85.9
கனடா	3.4	6.8	5.3	-0.7	106.6
சிலி	2.4	11.6	7.9	-1.3	38.0
சீனா	3	1.9	4.2	-7.5	77.1
பிரான்ஸ்	2.6	5.9	7.3	-4.9	111.1
ஜேர்மனி	1.8	8.7	3.1	-2.6	66.5
கிறீஸ்	5.9	9.3	12.2	-4.0	177.4
இந்தியா	6.8	6.7	...	-9.6	83.1
இந்தோனேசியா	5.3	4.2	5.9	-2.3	39.9
இத்தாலி	3.7	8.7	8.1	-8.0	144.7
ஜப்பான்	1.1	2.5	2.6	-7.8	261.3
கொரியா	2.6	5.1	2.9	-0.9	54.3
மலேசியா	8.7	3.4	3.8	-5.3	66.3
மெக்சிகோ	3.1	7.9	3.3	-4.4	56.0
ரஷ்யா	-2.1	13.8	3.9	-2.2	19.6
சிங்கப்பூர்	3.6	6.1	2.1	-0.4	134.2
தென்னாபிரிக்கா	2.0	6.9	33.5	-4.5	71.0
ஸ்பெயின்	5.5	8.3	12.9	-4.5	112.0
இலங்கை	-7.8	46.4	4.7	-10.2	113.8
தாய்லாந்து	2.6	6.1	1.0	-5.5	60.5
ஐக்கிய இராச்சியம்	4	9.1	3.7	-6.3	102.6
ஐக்கிய அமெரிக்கா	2.1	8	3.6	-5.5	121.7
வியட்நாம்	8	3.2	2.3	-2.5	37.1
வெனிசூலா	8	201	...	-6.0	157.8

மூலம் : "உலக பொருளாதார நோக்கு" சர்வதேச நாணய நிதியம், ஏப்ரல் 2023
அரசிறை அவதானிப்பு, சர்வதேச நாணய நிதியம், ஏப்ரல் 2023, அரசிறைக கொள்கைத் தினணக்களம், கொகை மதியப்டு மற்றும் புள்ளிபைசத் தினணக்களம்.
இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2022, அரசிறைக் கொள்கைத் திணைக்களம், சனத்தொகைப் புள்ளிவிபரவியற் திணைக்களம்.
.... தகவல் இல்லை.

3.2 உலக வெளியீடு

2022 ஆம் ஆண்டில், உலகளாவிய தொற்றுநோயின் தொடர்ச்சியான தாக்கம் மற்றும் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள் எதிர்கொள்ளும் சிரமங்கள் இருந்தபோதிலும், நாடுகள் பின்னடைவு மற்றும் இணக்கத்தன்மையை வெளிப்படுத்தின, இது குறிப்பிடத்தக்க மீட்சிக்கு வழிவகுத்தது.

2021 இல் 6.3 சதவீதமாக இருந்த உலகளாவிய உற்பத்தி 2022 இல் 3.4 சதவீதம் அதிகரித்துள்ளது. மேம்பட்ட பொருளாதாரங்களும் வளர்ச்சியில் மந்தநிலையைக் கண்டன, 2021 இல் 5.4 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2022 இல் 2.7 சதவீத வளர்ச்சி விகிதம் இருந்தது. இது முதன்மையாக அமெரிக்காவில் வளர்ச்சி விகிதத்தின் வீழ்ச்சியால் உந்தப்பட்டது, இது 2022 இல் 5.9 சதவீதத்திலிருந்து 2.1 சதவீதமாகக் குறைந்தது. 2021 இல், மற்றும் யூரோ பகுதியில், இது 2021 இல் 5.4 சதவீதத்திலிருந்து 2022 இல் 3.5 சதவீதமாகக் குறைந்தது. 2022 இல் ஹொங்கொங் எஸ்ஏஆர் (-3.5 சதவீதமாகவும்) மகாஓ எஸ்ஏஆர் (-26.8 சதவீதமாகவும்) 2022 இல் குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சி வீழ்ச்சியினைப் பதிவாக்கியது. ஸ்பெய்னில் வளர்ச்சி வீதமானது 2021 மற்றும் 2022 இல் 5.5 சதவீதமாக மாற்றமடையாது தொடர்ந்து காணப்பட்டது. அதே பாணியில், வளர்ந்து வரும் சந்தை மற்றும் அபிவிருத்தி பொருளாதாரங்களின் வளர்ச்சி 2022 இல் 4.0 சதவிகிதமாக குறைந்துள்ளது, 2021 இல் பதிவு செய்யப்பட்ட 6.9 சதவிகித உயர் வளர்ச்சி விகிதத்துடன் ஒப்பிடப்பட்டது. இருப்பினும், வளர்ந்து வரும் சந்தை மற்றும் அபிவிருத்தி பொருளாதாரங்களுக்கான வளர்ச்சி வாய்ப்புகள் மேம்பட்ட பொருளாதாரங்களை விட வலுவாகவே உள்ளது. 2022 இல் இலங்கையைத் தவிர ஆசியப் பொருளாதாரங்களில் தென் பொருளாதார வளர்ச்சி விரிவடைந்தது. இந்தியா, பங்களாதேஷ், மாலைதீவு, பூட்டான், நேபாளம் மற்றும் பாகிஸ்தான்

ஆகிய நாடுகள் 2022 இல் முறையே 9.1 சதவீதம், 7.1 சதவீதம், 4.3 சதவீதம், 5.8 சதவீதம், மற்றும் 6.0 சதவீத வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தன. எனினும், இலங்கைப் பொருளாதாரம் 2022 இல் 7.8 வீதத்தால் சுருங்கியது.

அதிக நிச்சயமற்ற தன்மை இருந்தபோதிலும், மேம்பட்ட பொருளாதாரங்களுக்கான வளர்ச்சி கணிப்புகள் முந்தைய கணிப்புகளை விட சற்று அதிக நம்பிக்கையுடன் உள்ளன. 2023 ஆம் ஆண்டில், ஜெர்மனி மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் எதிர்பார்க்கப்படும் சுருக்கம் முறையே 0.1 சதவீதம் மற்றும் 0.3 சதவீதம் தவிர, பெரும்பாலான முன்னேறிய பொருளாதாரங்கள் நேர்மறையான வளர்ச்சியை வெளிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்னேற்றமடைந்து வரும் சந்தை மற்றும் வளரும் பொருளாதாரங்களின் வளர்ச்சி விகிதங்கள் விருத்தியடையும் 2023 இல் 3.9 சதவீதமாகவும், 2024 இல் 4.2 சதவீதமாகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. சீனா மற்றும் இந்தியாவை உள்ளடக்கிய வளர்ந்து வரும் ஆசியா, 2023 இல் 5.3 சதவீத வளர்ச்சி விகிதத்தை எதிர்பார்க்கிறது, அதற்கு முன் 2024 இல் 5.0 சதவீதத்திற்கு சற்று குறையும். வணிகம் மற்றும் நுகர்வோர் நம்பிக்கை, உணவு மற்றும் எரிசக்தி விலை குறைதல் மற்றும் சீனப் பொருளாதாரத்தின் மறு திறப்பு சீனாவின் வளர்ச்சி 2023 இல் 5.2 சதவீதத்தால் மீண்டு எழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு முன் 2024ல் 4.5 சதவீதமாக குறையும். தெற்காசியாவின் மிகப்பெரிய பொருளாதாரமான இந்தியாவின் பொருளாதாரம் 2023 இல் 5.9 சதவீதமாகவும், 2024ல் 6.3 சதவீதமாகவும் விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. பங்களாதேஷ், பூட்டான், மாலத்தீவுகள் மற்றும் இலங்கை உள்ளிட்ட வளர்ந்துவரும் மற்றும் வளரும் ஆசிய நாடுகள் 2022 இல் 3.4 சதவீதத்தில் இருந்து 2023 இல் 4.2 சதவீதமாகவும், 2024 இல் 5.6 சதவீதமாகவும் வளரும் என்று கணிக்கப்பட்டுள்ளது. மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியா, மற்றும் உப-சஹாரா ஆபிரிக்கா ஆகியவை 2023 இல் முறையே 1.6 சதவீதம், 1.2 சதவீதம், 2.9 சதவீதம் மற்றும் 3.6 சதவீதம் என்ற மிதமான வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

பொருளாதாரங்கள் முழுவதும் உள்ள வளர்ச்சியின் மாறுபாடுகள் காரணமாக, உலகப் பொருளாதாரத்தின் வளர்ச்சி விகிதம் 2022 இல் 3.4 சதவீதத்திலிருந்து 2.8 சதவீதமாகவும், 2024 இல் 3.0 சதவீதமாகவும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2023 இற்குப் பின்னர் நடுத்தர காலத்தின் போது உலக பொருளாதார வளர்ச்சியானது, 3.0 சதவீதமாகக் குறையுமென எதிர்பார்க்கப்பட்டதுடன், இந்த வளர்ச்சியானது தொற்று நோய் காலத்திற்கு முந்திய மட்டத்தினாலாகும். உலகப் பொருளாதாரத்தின் ஏற்ற இறக்கத்திற்கு எதிராக பல கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இருந்தபோதிலும், உலகப் பொருளாதாரத்தை மீட்பதற்கான நிச்சயமற்ற தன்மை வேகமான வேகத்தில் உள்ளது. எனவே, பொருளாதாரம் மற்றும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுக்க நாணய, அரசிறை, நிதி மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தும் கொள்கைகள் உள்ளிட்ட கட்டமைப்பு சீர்திருத்தங்களை சரியான நேரத்தில் செயல்படுத்துவது முக்கியமாகும்.

அட்டவணை 3.2 | உலக மற்றும் பிராந்திய வெளியீடு

	வருடாந்த சதவீத மாற்றம்			
	உண்மை		எதிர்வு கூறல்	
	2021	2022	2023	2024
உலக வெளியீடு	**6.3**	**3.4**	**2.8**	**3.0**
மேம்பட்ட பொருளாதாரங்கள்	**5.4**	**2.7**	**1.3**	**1.4**
ஐக்கிய அமெரிக்கா	5.9	2.1	1.6	1.1
ஐரோப்பிய பிராந்தியம்	5.4	3.5	0.8	1.4
ஜேர்மனி	2.6	1.8	-0.1	1.1
பிரான்ஸ்	6.8	2.6	0.7	1.3
இத்தாலி	7.0	3.7	0.7	0.8
ஸ்பெயின்	5.5	5.5	1.5	2.0
ஜப்பான்	2.1	1.1	1.3	1.0
ஐக்கிய இராச்சியம்	7.6	4.0	-0.3	1.0
கனடா	5.0	3.4	1.5	1.5
வளர்ந்து வரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள்	**6.9**	**4.0**	**3.9**	**4.2**
அபிவிருத்தி அடைந்து வரும் ஆசியா	**7.5**	**4.4**	**5.3**	**5.1**
சீனா	8.4	3.0	5.2	4.5
இந்தியா	9.1	6.8	5.9	6.3
இந்தோனேசியா	3.7	5.3	5.0	5.1
மலேசியா	3.1	8.7	4.5	4.5
தாய்லாந்து	1.6	2.6	3.4	3.6
வியட்நாம்	2.6	8.6	5.8	6.9
இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியம்	**7.0**	**4.0**	**1.6**	**2.2**
பிரேசில்	5.0	2.9	0.9	1.5
அபிவிருத்தி அடைந்து வரும் ஐரோப்பியா	**7.3**	**0.8**	**1.2**	**2.5**
ரஷ்யா	5.6	-2.1	0.7	1.3
மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியா	**4.6**	**5.3**	**2.9**	**3.5**
உப சகாரா ஆபிரிக்கா	**4.8**	**3.9**	**3.6**	**4.2**
தென்னாபிரிக்கா	4.9	2.0	0.1	1.8
இலங்கை	3.5	-7.8	-3.0	1.5

மூலம் : உலக பொருளாதார நோக்கு, சர்வதேச நாணய நிதியம், ஏப்ரல் 2023
இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2022

3.3 பணவீக்கம்

2022 இல் உலக பணவீக்கம் 8.7 சதவீதமாக இருந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் ஏப்ரல் 2023 கணிப்பின்படி, 2023 இல் உலகளாவிய பணவீக்க விகிதம் 7.0 சதவீதமாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பணமதிப்பிழப்பு குறுகிய

மற்றும் நடுத்தர அளவில் எதிர்பார்க்கப்படுகிறது, இது எரிபொருள் மற்றும் எரிபொருள் அல்லாத பொருட்களின் விலை வீழ்ச்சி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்படும் பண இறுக்கத் தாக்கத்தைக் குறிக்கும்.

மேம்பட்ட பொருளாதாரங்களில் நுகர்வோர் விலைகள் 2021 இல் 3.1 சதவீதத்திலிருந்து 2022 இல் 7.3 சதவீதமாக அதிகரித்தது. அமெரிக்கா மற்றும் யூரோ பகுதிகள் முறையே 8.0 சதவீதம் மற்றும் 8.4 சதவீத பணவீக்கத்தை 2022 இல் பதிவுசெய்தன. வளர்ந்துவரும் மற்றும் வளரும் பொருளாதாரங்களின் பணவீக்கமானது 2021 இல் 5.9 சதவீதத்திலிருந்து 2022 இல் 9.8 ஆக உயர்ந்தது. 2021 இல் வளர்ந்துவரும் மற்றும் வளரும் ஆசியா 2022 இல் முன்னேற்றமடைந்துவரும் பொருளாதாரங்களின் பிற பகுதிகளுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டளவில் குறைந்த பணவீக்கமான 3.8 சதவீதத்தை பதிவு செய்தது. வளர்ந்துவரும் மற்றும் வளரும் ஐரோப்பாவில் பணவீக்கம் 2021 இல் 9.6 சதவீதத்தில் இருந்து 2022 இல் 27.9 சதவீதமாக 18.3 சதவீத புள்ளிகள் கணிசமாக அதிகரித்துள்ளது. இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளில் பணவீக்கம் 2022 இல் 14.0 சதவீதமாக உயர்ந்துள்ளது. 2021 இல் 9.8 சதவீதமாக இருந்தது. மத்திய கிழக்கில் பணவீக்கம் மத்திய ஆசியா மற்றும் உப-சஹாரா ஆப்பிரிக்கா ஆகியவை 2022 இல் முறையே 14.3 சதவீதம் மற்றும் 14.5 சதவீதமாக அதிகரித்துள்ளன. எரிபொருள் அல்லாத பொருட்களால் 27.6 சதவீத பணவீக்கம் பதிவு செய்யப்பட்டது 2022 இல் 22.1 சதவீதமாக உயர்ந்த பணவீக்கத்தை பதிவு செய்தது.

பணவீக்க எதிர்பார்ப்புகள் எதிர்காலத்தில் ஒரு நிலைப்படுத்தப்படும். 2023 இல் பணவீக்கம் முன்னேறிய பொருளாதாரங்களில் 4.7 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது: அமெரிக்காவில் 4.5 சதவீதம் யூரோ பகுதியில் 5.3 சதவீதம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் 6.8 சதவீதம். முன்னேற்றமடைந்துவரும் பொருளாதாரங்களில் பணவீக்கம் 2023 இல் 8.6 சதவீதமாக இருக்குமென மதிப்பிடப்பட்டதுடன், அதிகரிக்கும் பணவீக்கமான 19.7 சதவீதம் முன்னேற்றமடைந்துவரும் மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் ஐரோப்பாவில் எதிர்பார்கப்படுகின்றது. துருக்கி, உக்ரைன் மற்றும் ஹங்கேரியில் இருந்து முறையே 50.6 சதவீதம், 21.1 சதவீதம், மற்றும் 17.7 சதவீதம் அதிக பணவீக்கத்துடன் வளர்ந்துவரும் மற்றும் வளரும் ஆசியாவின் பணவீக்கம் 2023 இல் 3.4 சதவீதமாக மிதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன், மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியா மற்றும் உப-சஹாரா ஆப்பிரிக்காவில் இருந்து பணவீக்க எதிர்பார்ப்புகள் 13.3 சதவீதம், 15.9 சதவீதம் மற்றும் 14.0 சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. முறையே 2024 இல். உலகளாவிய பணவீக்கம் 2023 இல் 7.0 சதவீதமாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், முக்கிய பணவீக்கம் மெதுவாக குறைக்கப்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது, மேலும் பணவீக்க விகிதங்கள் 2025 க்கு முன் அவற்றின் அசல் இலக்குகளை அடைய வாய்ப்பில்லை.

அட்டவணை 3.3 | சராசரி நுகர்வோர் விலையில் பண வீக்கம்

	வருடாந்த சதவீத மாற்றம்			
	உண்மை		எதிர்வு கூறல்	
	2021	2022	2023	2024
உலகம்				
மேம்பட்ட பொருளாதாரங்கள்	**3.1**	**7.3**	**4.7**	**2.6**
ஐக்கிய அமெரிக்கா	4.7	8.0	4.5	2.3
ஐரோப்பிய பிராந்தியம்	2.6	8.4	5.3	2.9
ஜேர்மனி	3.2	8.7	6.2	3.1
பிரான்ஸ்	2.1	5.9	5.0	2.5
இத்தாலி	1.9	8.7	4.5	2.6
ஸ்பெயின்	3.0	8.3	4.3	3.2
ஜப்பான்	-0.2	2.5	2.7	2.2
ஐக்கிய இராச்சியம்	2.6	9.1	6.8	3.0
கனடா	3.4	6.8	3.9	2.4
வளர்ந்து வரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள்				
அபிவிருத்தி அடைந்து வரும் ஆசியா	**2.2**	**3.8**	**3.4**	**3.0**
சீனா	0.9	1.9	2.0	2.2
இந்தியா	5.5	6.7	4.9	4.4
இந்தோனேசியா	1.6	4.2	4.4	3.0
மலேசியா	2.5	3.4	2.9	3.1
தாய்லாந்து	1.2	6.1	2.8	2.0
வியட்நாம்	1.8	3.2	5.0	4.3
இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியம்	**9.8**	**14.0**	**13.3**	**9.0**
பிரேசில்	8.3	9.3	5.0	4.8
அபிவிருத்தி அடைந்து வரும் ஐரோப்பியா	**9.6**	**27.9**	**19.7**	**13.2**
ரஷ்யா	6.7	13.8	7.0	4.6
மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியா	**12.8**	**14.3**	**15.9**	**12.0**
உப சகாரா ஆபிரிக்கா	**11.0**	**14.5**	**14.0**	**10.5**
தென்னாபிரிக்கா	4.6	6.9	5.8	4.8
இலங்கை	6.0	46.4	28.5	8.7

மூலம் : உலக பொருளாதார நோக்கு, சர்வதேச நாணய நிதியம், ஏப்பிரல் 2023
இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2022

3.4 வட்டி வீதங்கள்

ஐக்கிய அமெரிக்காவில், பெடரல் ரிசேர்வ் அதன் பெடரல் பண விகிதத்தை 2022 அக்டோபர் முதல் தொடர்ந்து உயர்த்தி வருகிறது, இது சமீபத்திய விகிதத்தை 4.75 சதவீதத்திலிருந்து 5.0 சதவீதமாகக் கொண்டு வருகிறது, மேலும் பெடரல் திறந்த சந்தைக் கமிட்டி இந்த சமீபத்திய விகிதம் 4.3 சதவீதமாகவும் 3.0 ஆகவும் குறைவதற்கு முன்பு 5.0 சதவீதத்திற்கு மேல் உயரும் என்று எதிர்பார்க்கிறது. 2024 மற்றும்

2025 இல் முறையே சதவீதம். 2023 மார்ச் 16 அன்று ஐரோப்பிய மத்திய வங்கி கொள்கை விகிதங்களை 50 அடிப்படை புள்ளிகளால் அதிகரித்தது. 2021 டிசம்பர் இங்கிலாந்து வங்கி, ஐரோப்பிய மத்திய வங்கி, கனடா வங்கி மற்றும் அவுஸ்திரேலியாவின் ரிசர்வ் வங்கி ஆகியன முறையே 400 அடிப்படை புள்ளிகள், 300 அடிப்படை புள்ளிகள், 425 அடிப்படை புள்ளிகள் மற்றும் 350 அடிப்படை புள்ளிகள் என கொள்கை விகிதங்களை உயர்த்தியுள்ளன.

அதேபோன்று உலகிலுள்ள அனைத்து நாடுகளும் பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தும் அதேவேளை, அதிகரித்த கேள்விக்கேற்ப வட்டி வீதத்தினையும் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், நிதித்துறை உறுதிப்பாட்டினை பேணுகின்ற அதேவேளை பணவீக்கத்தினைக் குறைத்தல் மற்றும் நிலையான வளர்ச்சியினை உறுதிப்படுத்தல் என்பவற்றுக்கிடையில் மீதமொன்றினை ஏற்படுத்துவதற்கு சரியான நடவடிக்கைகளை உடனடியாக அறிமுகப்படுத்துதல் வேண்டும்.

வரைபு 3.1 | ஆறுமாத காலத்தில் LIBOR இன் மாத அசைவு*



மூலம் : *Moneycafe.com*

* LIBOR 2022 சனவரியிலிருந்து வலுப்பெரும் வகையில் பிணையளிக்கப்பட்ட ஓரிரவு நிதியளிப்பு வீதத்தினால் மாற்றப்பட்டுள்ளது.

வரைபு 3.2 | பிணையளிக்கப்பட்ட ஓரிரவு நிதியளிப்பு வீதம் (30 நாள் சராசரி)



மூலம் : *Moneycafe.com*

3.5 அரசிறை நிலைமை

மூன்று வருட கடுமையான நிதி ஏற்றத்தாழ்வுகளுக்குப் பிறகு 2022 இல் நிதி மீட்சிக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டில், வட்டி செலுத்துதல் மற்றும் பொதுச் செலவினங்களின் அதிகரிப்பு காரணமாக அனைத்துப் பொருளாதாரங்களிலும் சராசரியாக ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதமாக சற்று விரிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2021-2022 இல் பதிவுசெய்யப்பட்ட பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியில் இருந்து உருவான 70 ஆண்டுகளில் இல்லாத செங்குத்தான சரிவு 2020 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 100 சதவீதத்திலிருந்து 2022 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 92 சதவீதத்தை எட்டியது.

அட்டவணை 3.4 | பொது அரச நிதி இருப்பு : ஒட்டுமொத்த இருப்பு

மொ.உ.உ. %

	உண்மை		எதிர்வு கூறல்	
	2021	2022	2023	2024
உலகம்	**-6.6**	**-4.7**	**-5.0**	**-4.6**
மேம்பட்ட பொருளாதாரங்கள்	**-7.5**	**-4.3**	**-4.4**	**-4.2**
ஐக்கிய அமெரிக்கா	-4.4	-0.7	-0.4	-0.4
ஐரோப்பிய பிராந்தியம்	-5.4	-3.8	-3.7	-2.8
ஜேர்மனி	-6.5	-4.9	-5.3	-4.8
பிரான்ஸ்	-3.7	-2.6	-3.7	-1.9
இத்தாலி	-9.0	-8.0	-3.7	-3.3
ஸ்பெயன்	-6.9	-4.5	-4.5	-3.5
ஜப்பான்	-6.2	-7.8	-6.4	-4.0
ஐக்கிய இராச்சியம்	-8.3	-6.3	-5.8	-4.4
ஐக்கிய அமெரிக்கா	-11.6	-5.5	-6.3	-6.8
ஏனைய முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள்				
வளர்ந்து வரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள்	**-5.2**	**-5.2**	**-5.8**	**-5.3**
சீனா தவிர்ந்த வளர்ந்து வரும் சந்தைகள்	-4.5	-3.4	-5.0	-4.4
மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கா தவிர்ந்த எண்ணெய் உற்பத்தி	-5.0	-6.0	-6.3	-5.7
ஆசியா	-6.5	-7.4	-6.8	-6.3
சீனா	-6.0	-7.5	-6.9	-6.4
இந்தியா	-9.6	-9.6	-8.9	-8.3
ஐரோப்பியா	-1.9	-2.8	-5.8	-4.0
இரஷ்யா கூட்டமைப்பு	0.8	-2.2	-6.2	-2.8
இலத்தீன் அமெரிக்கா	-4.5	-3.9	-5.2	-4.4
பிரேசில்	-4.3	-4.6	-8.8	-8.2
மெக்சிகோ	-3.9	-4.4	-4.1	-2.7
மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கா	-2.1	2.6	-1.0	-17.0
சவூதி அரேபியா	-2.3	2.5	-1.1	-1.2

தென் ஆபிரிக்கா	-5.6	-4.5	-5.9	-6.1
அபிவிருத்தி அடைந்துவரும் குறைந்த வருமானமுடைய நாடுகள்	**-4.7**	**-4.2**	**-4.2**	**-4.0**
கென்யா	-7.1	-6.0	-5.2	-4.4
நைஜீரியா	-6.0	-5.5	-5.3	-5.4
வியட்நாம்	-3.4	-2.5	-3.3	-3.1
எண்ணெய் உற்பத்தி	**-1.1**	**2.0**	**-0.3**	**0.1**
இலங்கை	-11.7	-10.2	-8.0	-6.4

மூலம் : அரசிறை அவதானிப்பு, சர்வதேச நாணய நிதியம், ஏப்பிரல் 2023 அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

3.5.1 அரசிறைப் பற்றாக்குறை

சமீபத்திய பொருளாதார மீட்சியின் பயனாக, உலகளாவிய சராசரி நிதிப் பற்றாக்குறை மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 2021 இல் 6.6 சதவீதத்திலிருந்து 2022 இல் 4.7 சதவீதமாகக் குறைந்துள்ளது. 2024 இல் 4.6 சதவீதமாகக் குறைவதற்கு முன்பு 2023 இல் 5.0 சதவீதமாக சற்று விரிவடையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதே வகையில், முன்னேறிய பொருளாதாரங்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்திற்கான நிதிப் பற்றாக்குறை 2021 இல் 7.5 சதவீதமாக இருந்த கணிசமான உயர் மட்டத்திலிருந்து 2022 இல் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக 4.3 சதவீதமாகக் குறைந்துள்ளதுடன், 2023 இல் 4.4 சதவீதமாகவும் 2024 இல் 4.2 சதவீதமாகவும் மேலும் குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2021 மற்றும் 2022 இல் நிதிப் பற்றாக்குறை மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் மாறாமல் 5.2 சதவீதமாக இருந்தது. அதிக வட்டிக் கட்டணங்கள் மற்றும் வருமான இலக்கை அடைவதற்கான பற்றாக்குறை காரணமாக நிதிச் செலவுகள் பெருமளவில் அதிகரித்துள்ளன. எவ்வாறாயினும், வளர்ந்து வரும் சந்தை மற்றும் வளரும் பொருளாதாரங்களின் நிதிப் பற்றாக்குறை மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 2023 இல் 5.8 சதவீதமாக விரிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2024 இல் 5.3 சதவீதமாகக் குறையும். வளர்ந்து வரும் மற்றும் வளரும் ஆசிய நாடுகளில் சீனாவில் நிதிப் பற்றாக்குறை 6.0 சதவீதத்தில் இருந்து 7.5 சதவீதமாக விரிவடைந்து உள்ளது. இருப்பினும், 2021 இல் சீனாவின் ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறை 2023 மற்றும் 2024 இல் முறையே 6.9 சதவீதமாகவும் மேலும் 6.4 சதவீதமாகவும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2022 மற்றும் 2021 இல் இந்தியாவின் நிதிப் பற்றாக்குறை 9.6 சதவீதமாக மாறாமல் இருந்தது. மேலும் 2023 இல் 8.9 சதவீதமாகக் காணப்பட்டதுடன், 2024 இல் 8.3 சதவீதமாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அரசிறைப் பற்றாக்குறை மீதி 2021 இல் 4.5 சதவீதத்தில் இருந்து 2022ல் 3.9 சதவீதமாக குறைந்து, 2023 இல் 5.2 சதவீதமாக அதிகரித்ததுடன், 2024 இல் 4.4 சதவீதமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறைந்த வருமானம் கொண்ட வளரும் நாடுகளில் கென்யா (6.0 சதவீதத்தில் இருந்து 7.1 சதவீதமாக உள்ளது.), நைஜீரியா (6.0 சதவிகிதத்திலிருந்து 5.5 சதவிகிதம்), மற்றும் வியட்நாம் (3.4 சதவிகிதத்தில் இருந்து 2.5 சதவிகிதம்) நிதிப் பற்றாக்குறையைக் குறைத்தது. அதன்படி, குறைந்த வருமானம் பெறும் வளரும் நாடுகளின் நிதிப் பற்றாக்குறை 2021 இல் 4.7 சதவீதத்தில் இருந்து 2022ல் 4.2 சதவீதமாகக் குறைந்துள்ளது. மேலும், 2023 இல் 4.2 சதவீதமாக இருந்ததுடன், 2024 இல் 4.0 சதவீதமாக குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. சராசரியாக, ரஷ்ய நிதிப் பற்றாக்குறை ரஷ்யா உக்ரைன் மோதலின் அதிகரிப்பின் காரணமாக 2021 இல் 0.8 சதவீத உபரியாக இருந்த கூட்டமைப்பு 2022 இல் 2.2 சதவீத பற்றாக்குறையாக வளர்ச்சியடைந்தது. மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கா (Middle East and North Africa – MENA) நாடுகளில், எண்ணெய் வருமான சேமிப்பு அதிகரிப்பின் காரணமாக, சராசரியாக ஒட்டுமொத்த இருப்புநிலை 4.7 சதவீத புள்ளிகளால் மேம்பட்டு 2021 இல் 2.1 பற்றாக்குறையிலிருந்து 2022 இல் 2.6 சதவீத மிகையாகக் காணப்பட்டது.

3.5.2 அரசாங்க படுகடன்

2021-2022 இல் வலுவான பெயரளவிலான மொ.உ.உ. வளர்ச்சியால் பயனடைவதன் மூலம் 2021 இல் 95.5 சதவீதமாக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக உலகளாவிய கடன் பங்கு 3.4 சதவீத புள்ளிகள் குறைந்து 92.1 சதவீதமாக உள்ளது, இது தொற்றுநோய்க்கு முந்தைய அளவை விட 8 சதவீத புள்ளிகள் அதிகமாக உள்ளது 2019 இல் 84.3 சதவீதம். இருப்பினும், இது 2023ல் 93.3 சதவீதமாகவும், 2024 இல் 94.6 சதவீதமாகவும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டு நாணயம், விரைவான கரன்சி தேய்மானம் மற்றும் அதிகரித்து வரும் வட்டி விகிதங்கள் ஆகியவற்றால் பொதுக் கடனில் கணிசமான பங்கு உள்ளது. மேம்பட்ட பொருளாதாரங்களில் பொதுக் கடன் 2021ல் 117.4 சதவீதத்தில் இருந்து 2022 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 112.5 சதவீதமாகக் குறைவடைந்தது. இது 2023ல் 112.4 சதவீதமாகக் காணப்பட்டதுடன் 2024ல் 113.6 சதவீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்க படுகடன் எடுச்சிபெச சந்தை மற்றும் வளரும் பொருளாதாரங்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் 6 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2021ல் 64.3 சதவீதமாகவும் 2022ல்

64.6 சதவீதமாகவும், 2023 இல் 67.5 சதவீதமாகவும், 2024 இல் 69.8 சதவீதமாகவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, சீனாவைத் தவிர்ந்த முன்னேற்றமடைந்த மற்றும் வளர்ந்துவரும் சந்தை பொருளாதாரங்கள் 2022 இல் பொதுக் கடனில் வீழ்ச்சிப் போக்கொன்றினை நிரூபித்த போதிலும் அவற்றின் படுகடன் விகிதங்கள் இன்னும் முறையே 8 மற்றும் 4 சதவீத புள்ளிகள் தொற்றுநோய் காலத்துக்கு முந்தைய நிலையில் காணப்படுகின்றன. குறைந்த வருமானம் பெறும் வளரும் நாடுகளில் பொதுக் கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் சுமார் 48 சதவீதமாக உயர்ந்தது. இது 2000 இன் ஆரம்பத்திலிருந்து அதி கூடிய மட்டமாகும்.

அட்டவணை 3.5 | அரசாங்க மொத்த படுகடன்

மொ.உ.உ. %

	உண்மை		எதிர்வு கூறல்	
	2021	2022	2023	2024
உலகம்	**95.5**	**92.1**	**93.3**	**94.6**
மேம்பட்ட பொருளாதாரங்கள்	**117.4**	**112.5**	**112.4**	**113.6**
ஐக்கிய அமெரிக்கா	126.4	121.7	122.2	125.8
ஐரோப்பிய பிராந்தியம்	94.9	90.9	89.8	89.0
ஜேர்மனி	68.6	66.5	67.2	66.5
பிரான்ஸ்	112.6	111.1	111.4	112.4
இத்தாலி	149.8	144.7	140.3	140.0
ஸ்பெயின்	118.4	112.0	110.5	108.3
ஜப்பான்	255.4	261.3	258.2	256.3
ஐக்கிய இராச்சியம்	108.1	102.6	106.3	109.7
கனடா	115.1	106.6	105.1	102.2
வளர்ந்து வரும் சந்தைப் பொருளாதாரங்கள்	**64.3**	**64.6**	**67.5**	**69.8**
வளர்ந்து வரும் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் ஆசியா	**71.5**	**75.1**	**79.1**	**82.6**
சீனா	71.8	77.1	82.4	87.2
இந்தியா	84.7	83.1	83.2	83.7
இந்தோனேசியா	41.1	39.9	39.1	38.8
மலேசியா	69.3	66.3	67.0	67.1
தாய்லாந்து	58.4	60.5	61.0	61.6
வியட்நாம்	39.3	37.1	36.3	35.4
இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியா	**71.9**	**69.7**	**68.6**	**69.3**
பிரேசில்	90.7	85.9	88.4	91.5
வளர்ந்து வரும் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் ஐரோப்பா	**34.7**	**32.7**	**36.9**	**37.9**
ரஷ்யா	16.5	19.6	24.9	25.3
மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான்	**52.1**	**43.0**	**42.5**	**41.2**
உப சகாரா ஆபிரிக்கா	**50.8**	**51.5**	**50.7**	**48.6**
தென்னாபிரிக்கா	69.0	71.0	72.3	74.0
இலங்கை	100.1	113.8	100.0	101.6

மூலம் : அரசிறை அவதானிப்பு , சர்வதேச நாணய நிதியம், ஏப்பிரல் 2023 அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
நீடிக்கப்பட்ட நிதி வசதித் திட்டம்-சர்வதேச நாணய நிதியம்

3.6 நாணய இயக்கங்கள்

பெரும்பாலான நாடுகளில், அமெரிக்க டொலருக்கு எதிராக பாரிய வெளிநாட்டு நாணய மாற்று விகித நகர்வுகள் காணப்படுகின்றன, அமெரிக்காவில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த நாணயக் கொள்கை கடுமையாக்கப்படுகிறது. பணவீக்க அழுத்தத்தைக் கட்டுப்படுத்த மத்திய வங்கிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையை முன்கூட்டியே தளர்த்துவது நாணய மாற்று விகிதங்களை மேலும் குறைக்கலாம். இது வெளிநாட்டு நாணயம் குறிப்பிடப்பட்ட கடன் மற்றும் மூலதன வெளியேற்றத்தினை அதிகரிக்கும். குறைந்த வருமானம் கொண்ட வளர்ந்துவரும் நாடுகளில், பெயரளவிலான மாற்று விகிதத்தின் தேய்மானத்துடன், கடன் அதிகரிப்பின் காரணமாக முதன்மை பற்றாக்குறைகள் விரிவடைகின்றன. மாற்று விகிதத் தேய்மானம் காரணமாக, பல நாடுகளில் உள்நாட்டு நாணயங்களில் உணவுப் பொருட்களின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. குறைந்த வருமானம் கொண்ட நாடுகளிலுள்ள வீட்டு உபயோகக் கூடையில் உணவு கணிசமான பங்கைக் கொண்டிருப்பதால், அதிக தளம்பலான மாற்று விகிதத்தில் இறக்குமதி செய்யப்படும் உணவைச் சார்ந்திருப்பது குறைந்த வருமானம் கொண்ட நாடுகளின் பாதிப்பை அதிகரிக்கிறது. அதன்படி, தற்போது நிலவும் மிகவும் நிச்சயமற்ற சூழலில் நாணய மாற்று விகித நெகிழ்வுத்தன்மையை உறுதிப்படுத்துவது குறிப்பிடத்தக்க மற்றும் அவசரத் தேவையாகும்.

வரைபு 3.3 | ஐ.அ.டொலருக்கான மாற்று விகிதம் : 2009 - 2023 ஏப்பிரல்



மூலம் : x-rates.com

3.7 உலக வர்த்தகம்

உலக வர்த்தகத்தின் அளவு 2022 இல் 5.1 சதவீதம் அதிகரித்துள்ளது. முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் மற்றும் சந்தை மற்றும் அபிவிருத்தி பொருளாதாரங்களில் வர்த்தகத்தின் அளவு 2022 இல் முறையே 5.2 சதவீதம் மற்றும் 4.1 சதவீதம் அதிகரித்துள்ளது. இது 2021 இல் பதிவு செய்யப்பட்ட

வர்த்தக அளவின் அதிகரிப்பை விட ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தது. 2021 உடன் ஒப்பிடும்போது 2022 இல் உலக வர்த்தகத்தின் அளவு 5.5 சதவீத புள்ளிகள் குறைவடைந்த அதேவேளை, முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் ஏற்றுமதியின் வளர்ச்சி 4.3 சதவீதமும், முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் மற்றும் வளர்ந்து வரும் சந்தை மற்றும் அபிவருத்தி பொருளாதாரங்கள் 8.4 சதவீதமும் குறைந்துள்ளது. 2021 உடன் ஒப்பிடும்போது, 2022 இல் முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் இறக்குமதியின் வளர்ச்சி 3.4 சதவீத புள்ளிகளாலும், வளர்ந்து வரும் சந்தை மற்றும் அபிவிருத்தி பொருளாதாரங்கள் 8.2 சதவீத புள்ளிகளாலும் குறைந்துள்ளது.

ரஷ்யா - உக்ரைன் மோதலுடன் தொடர்புடைய சர்வதேச வர்த்தக போக்கில் ஏற்படும் இடையூறுகள் மற்றும் அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையே அதிகரித்து வரும் வர்த்தக பதட்ட நிலைமைகள் காரணமாக 2023 ஆம் ஆண்டில் 3.5 சதவீதமான உலக வர்த்தகம் 2024 ஆம் ஆண்டில் 2.4 சதவிகிதமாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேம்பட்ட பொருளாதாரங்களில் ஏற்றுமதியின் அளவு 2023 இல் 3.0 சதவிகிதம் குறையும் என்றும் 2024 இல் 4.3 சதவீதத்தினால் மீள்கட்டமைக்க முன்னர் எதிர்பார்க்கப்படுகிறது, 2024 இல் 3.1 சதவிகிதத்திற்கு சற்று அதிகரிக்கும். வளர்ந்து வரும் சந்தை மற்றும் அபிவருத்தி பொருளாதாரங்களில் ஏற்றுமதியின் வளர்ச்சி 2023 இல் 1.6 சதவிகிதமாகக் குறையும் என்று 2024 இல் 4.3 சதவீதத்தினால் மீள்கட்டமைக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் இறக்குமதி அளவு 2023 இல் 1.8 சதவீதமாகக் குறையும் என்பதுடன், 2024 இல் 2.7 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே போக்கைத் தொடர்ந்து, வளர்ந்து வரும் சந்தை மற்றும் அபிவருத்தி பொருளாதாரங்களில் இறக்குமதி அளவின் வளர்ச்சி 2023 இல் 3.3 சதவீதமாகக் குறைவடைவதுடன் 2024 இல் 5.1 சதவீதமாக அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. பலதரப்பு வர்த்தக அமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம் உலகளாவிய வர்த்தகத்தை வளர்ப்பது, சாதகமான வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஏற்பாடுகளுக்கு முன்னுரிமை அளிப்பது, ஏற்கனவே உள்ள வர்த்தகம் மற்றும் நிதி இணைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளின் செயற்திறனை மேம்படுத்துதல் ஆகியவை ஆரோக்கியமான உலக வர்த்தக அமைப்பு இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

3.8 உலக வியாபாரப் பண்ட சந்தை

2021 இன் விலைகளுடன் ஒப்பிடுகையில் 2022 இல் ஆற்றல் மற்றும் ஆற்றல் அல்லாத பொருட்கள் உள்ளிட்ட பொருட்களின் விலைகள் குறைந்துள்ளன. இருப்பினும், புவிசார் அரசியல் பதட்டங்கள் தீவிரமடைந்ததால் பொருட்களின் விலைகள் அதிகரிக்கலாம். 2023 இன் முதல் காலாண்டில், மார்ச் இறுதிக்குள் பொருட்களின் விலைகள் 14 சதவீதம் சரிந்த அதேவேளை, 2022 ஜூனில் பொருட்களின் விலைகள் அவற்றின் குறிப்பிடத்தக்க உச்சத்திலிருந்து 30 சதவீதம் மகிகண்டுணய் கச்சா எண்ணெய் விலை 2023 இல் 24 சதவீதமும், 2024ல் மேலும் 5.8 சதவீதமும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அதே நேரத்தில் எரிபொருள் அல்லாத பொருட்களின் விலைகள் மாறாமல் இருக்கும்.

அட்டவணை 3.6 | உலக வர்த்தக பெறுமதிகள்

வருடாந்த சதவீத மாற்றம்

	சராசரி 2005-2014	2015	2016	2017	2018	2019	2020	2021	2022	2023	2024
பொருட்கள் சேவைகள் வர்த்தகம்											
உலக வர்த்தக அளவு	4.7	2.9	2.2	5.6	4.0	1.0	-7.8	10.6	5.1	2.4	3.5
ஏற்றுமதிகளின் அளவு											
மேம்பட்ட பொருளாதாரம்	4	3.8	2.0	5.0	3.5	1.4	-8.9	9.5	5.2	3.0	3.1
வளர்ந்து வரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள்	6.2	1.9	2.8	6.5	4.2	0.5	-4.9	12.5	4.1	1.6	4.3
இறக்குமதிகளின் பெறுமதி											
முன்னேற்றமடைந்த பொருளாதாரம்	3.2	4.7	2.5	4.8	3.9	2.1	-8.3	10.0	6.6	1.8	2.7
வளர்ந்து வரும் சந்தை மற்றும் வளரும் பொருளாதாரங்கள்	8	-0.7	1.5	7.4	5.1	-1.1	-7.9	11.7	3.5	3.3	5.1

மூலம் : உலக பொருளாதார நோக்கு, ஏப்ரல் 2023

அட்டவணை 3.7 | விலைச்சுட்டிகள் (2010=100)

	2011	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020	2021	2022
சக்தி	135.22	134.12	131.65	120.4	66.1	56.02	69.36	89.36	78.25	52.68	95.38	152.57
சக்தியற்ற	119.56	109.51	101.29	96.47	81.62	79.36	83.73	85.13	81.56	84.12	112.46	124.36
விவசாயம்	121.52	114.29	105.68	101.88	87.86	87.45	86.95	86.56	83.13	87.08	108.31	122.75
குடிபானங்கள்	115.97	92.63	83.3	101.77	93.95	91.29	83.11	79.08	76.13	80.38	93.49	106.28
உணவு	122.47	124.15	114.59	106.02	88.46	89.63	90.2	90.45	86.98	93.12	121.85	143.68
எண்ணெய் மற்றும் உணவுகள்	120.54	125.35	114.34	106.35	84.36	88.27	87.57	85.01	77.46	89.79	127.1	145.21
தானியங்கள்	138.19	141.34	128.25	104.08	87.06	80.69	80.55	88.76	88.96	95.35	123.82	150.37
ஏனைய உணவுகள்	110.77	107.02	102.56	107.33	95.13	99.5	102.41	99.13	97.71	95.49	113.14	135.61
மூலப் பொருட்கள்	122.04	101.34	95.41	91.91	83.29	80.2	81	80.9	77.34	75.79	82.95	80.27
உரங்கள்	137.62	141.06	114.36	101.47	98.4	77.71	74.26	82.5	81.38	74.61	152.31	235.74
உலோகம் மற்றும் கனியங்கள்	113.49	96.13	90.81	84.79	66.94	62.97	78.2	82.51	78.36	79.15	116.44	115.02
பெறுமதியான உலோகங்கள்	136.27	138.46	115.09	101.12	90.64	97.45	97.84	97.17	105.44	133.54	140.17	136.8

மூலம் : உலக பொருளாதார நோக்கு, ஏப்ரல் 2023

3.8.1 எரிசக்தி விலைகள்

2023 இன் முதல் காலாண்டில், எரிசக்தி விலைகள் 2022 இன் இறுதி காலாண்டில் இருந்ததை விட 20 சதவீதம் குறைவாக இருந்தது. 2023 இல், இயற்கை எரிவாயுவின் விலைக் குறைப்பு காரணமாக 2022 இல் 152.57 ஆக இருந்த எரிசக்தி விலைக் குறியீடு 26 சதவீதம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2022 ஜூனில் இருந்த உச்ச விலையுடன் ஒப்பிடும்போது, 2023 மார்ச் மாதத்தில் பீப்பாய் மசகு எண்ணெயின் விலை உச்ச விலையினைவிட 35 சதவீதம் குறைவாக இருந்தது. 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், பீப்பாய் மசகு எண்ணெய் சராசரியாக 81 ஐ.அ.டொ/பீப்பாய் ஆகக் காணப்பட்டது. இது 2022 மார்ச்சில் 116 ஐ.அ.டொ/பீப்பாய் உடன் ஒப்பிடும்போது 30 சதவீதம் வீழ்ச்சியகும். 2023 இன் முதல் காலாண்டில் ஒரு பீப்பாய்க்கான தினசரி விலை ஐ.அ.டொ. 72-87 வரை ஏற்ற இறக்கமாக இருந்தது. பெப்ரவரி தொடக்கத்தில் ரஷ்ய தரவரிசையின் விலை சராசரியாக 47 ஐ.அ.டொ/பீப்பாய் ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது 60 ஐ.அ.டொ/பீப்பாய் என்ற ஜீ7 விலை வரம்பை விட ஐ.அ.டொ 13 குறைவாகும். 2023 சனவரி இல், சீனாவிலும் ஆசியாவின் பிற நாடுகளிலும் பீப்பாய் மசகு எண்ணெயின் சராசரி விலை 72 ஐ.அ.டொ/பீப்பாய் ஆக இருந்தது. சீனா மீண்டும் திறக்கப்பட்டதன் காரணமாக உலக எண்ணெய் சந்தை ஆரம்பத்தில் எண்ணெய்க்கான தேவையில் விரைவான அதிகரிப்பை எதிர்பார்த்திருந்தாலும், சீனாவில் பயணக் கட்டுப்பாடுகள் எளிதாக இருப்பதால், 2023 இல் எண்ணெய் தேவை கடுமையாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. பீப்பாய் மசகு எண்ணெய்யின் சராசரி விலை 2022 இல் 100 ஐ.அ.டொ/பீப்பாயிலிருந்து 2023 இல் 84 ஐ.அ.டொ/பீப்பாயினை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் 2024 இல் சிறிது அதிகரிக்கும் மற்றும் தொற்றுநோய்க்கு முந்தைய (2015-2019) மாத சராசரியான 57 ஐ.அ.டொ/பீப்பாவின் அளவை விட அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வரைபு 3.4 | மசகு எண்ணெய் விலைகள் : 2016 - ஏப்ரல் 2023



மூலம் : உலக வர்த்தக பண்ட நோக்கு, உலக வங்கி, ஏப்ரல் 2023

2023 மார்ச்சில் அமெரிக்காவில் இயற்கை எரிவாயு விலை தொற்றுநோய்க்கு முந்தைய (2015-2019) சராசரியை விட 16 சதவீதம் குறைவாக இருந்தது. ஜப்பானின் திரவ இயற்கை எரிவாயு இறக்குமதி விலை 2023 முதல் காலாண்டில் 9 சதவீதம் குறைந்துள்ளதுடன், 2023 மார்ச் நிலவரப்படி, அமெரிக்காவில் இயற்கை எரிவாயு விலை ஐ.அ.டொ 6.4/mmbtu இலிருந்து 2023 இல் ஐ.அ.டொ 2.7/mmbtu ஆக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2024 இல் ஐ.அ.டொ 3.7/mmbtu ஆக அதிகரிப்பதற்கு முன், முக்கியமாக உள்நாட்டு உற்பத்தி உயரும். எல்என்ஜி இறக்குமதி வசதிகளில் அதிகரித்த முதலீடுகளைக் கருத்தில் கொண்டு, ஐரோப்பாவில் விலைகள் 2023 இல் ஐ.அ.டொ 19.0/mmbtu ஆகவும், மேலும் 2022 இல் ஐ.அ.டொ 40.3/mmbtu இல் இருந்து 2024 இல் ஐ.அ.டொ 17.0/mmbtu ஆகவும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2022 இல் ஐரோப்பாவில் நிலக்கரி நுகர்வு 7 சதவிகிதம் அதிகரித்தது, ஐரோப்பாவில் உள்ள மின் உற்பத்தியாளர்கள் ரஷ்யாவின் இயற்கை எரிவாயுவிற்கு மாற்றாக நிலக்கரியை பரவலாகப் பயன்படுத்தினார்கள். அமெரிக்காவின் மின்வலுத் துறை படிப்படியாக புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களுக்கு மாறியதால், 2022 இல் நிலக்கரி நுகர்வு 6 சதவீதம் 2022 இல் இந்தியாவின் நிலக்கரி நுகர்வு 7 சதவீதம் அதிகரித்தது. சீனாவின் நிலக்கரி நுகர்வு மிதமாக அதிகரித்தது, நிலக்கரி நீர்மின் பற்றாக்குறையை பூர்த்தி செய்ய பயன்படுத்தப்பட்டது. அவுஸ்திரேலிய நிலக்கரி விலை 2023 இல் ஐ.அ.டொ 200/மெற்றிக் தொன்னாகவும் மேலும் 2024 இல் ஐ.அ.டொ 155/மெற்றிக் தொன் ஆகவும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2022ல் ஐ.அ.டொ 344.9/மெற்றிக் தொன் என்ற குறிப்பிடத்தக்க உயர் விலையில் இருந்து அதிக கார்பன் விலைகள் மற்றும் ஐரோப்பாவில் குறைந்த திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு விலைகள் காரணமாக உலக நிலக்கரி விலை 2023 மற்றும் 2024 இல் முறையே 42 சதவீதம் மற்றும் 23 சதவீதமாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

3.8.2 விவசாய விலைகள்

அதிக உற்பத்தி செலவுகள், உள்நாட்டு மற்றும் உலகளாவிய தேவை அதிகரிப்பு காரணமாக விவசாய விலைக் குறியீடு 2021 இல் 108.31 இல் இருந்து 2022 இல் 122.75 ஆக அதிகரித்துள்ளது. ஊள்ளீட்டு செலவுகள் குறைவாலும், விவசாய வழங்கல்கள் அதிகரிப்பதாலும், 2023 இல் விவசாய விலைகள் 7 சதவீதம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2023க்கு அப்பால் உற்பத்தி மற்றும் விநியோக வழிகளில் எளிதாக விலைகள் மேலும் குறையும். கடுமையான வானிலை நிகழ்வுகள் மற்றும் அதிக உள்ளீட்டு விலைகள் காரணமாக, உணவுப் பாதுகாப்பு இன்னும் குறிப்பிடத்தக்க சவாலாக உள்ளது, இருப்பினும் இது எதிர்காலத்தில் விவசாய விலைகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. US Hard Red Winder கோதுமையின் விலை 2022 இல் ஐ.அ.டொ. 430/மெற்றிக் தொன்னிலிருந்து 2023 இல் ஐ.அ.டொ. 355/மெற்றிக் தொன்னாகக் குறையும் மற்றும் 2024 இல் ஐ.அ.டொ. 335/மெற்றிக் தொன்னாகக் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும், உற்பத்தி பற்றாக்குறை காரணமாக 2021 உடன் ஒப்பிடும்போது 2022 இல் பெரும்பாலான சமையல் எண்ணெய் விலைகள் சிறிய விலை உயர்வை பதிவு செய்துள்ளன. பாம் எண்ணெய் விலை 2022 இல் ஐ.அ.டொ. 1,276/மெற்றிக் தொன்னிலிருந்து 2023 இல் ஐ.அ.டொ. 980/மெற்றிக் தொன்னாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, 2024 இல் ஐ.அ.டொ. 1,020/மெற்றிக் தொன்னாக சற்று குறையும். தாய்லாந்து அரிசி விலை 2022 இல் 458/ மெற்றிக் தொன்னிலிருந்து ஐ.அ.டொ. 437/மெற்றிக் தொன்னாகக் குறைந்தது. இந்த விலை 2024 இல் ஐ.அ.டொ. 490/ மெற்றிக் தொன்னாகக் குறைவதற்கு முன்பு 2023 இல் ஐ.அ.டொ. 510/மெற்றிக் தொன்னாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2023 இல் உலகெங்கிலும் உள்ள 349 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது, ஏனெனில் அதிக உணவு மற்றும் உர விலைகள், பொருளாதார மற்றும் காலநிலை அதிர்ச்சிகள், புவி பொருளாதார துண்டாடுதல் மற்றும் மோதல்கள். உணவுப் பொருட்களின் விலை உயர்வு காரணமாக, 2023 முதல் காலாண்டில், ஆண்டுக்கு ஆண்டு உள்நாட்டு உணவுப் பணவீக்கம் சராசரியாக 19.5 சதவீதமாக இருந்தது. ஆர்ஜன்டினா, லெபனான் மற்றும் ஜிம்பாப்வே போன்ற தனிப்பட்ட நாடுகள் 100 சதவீதத்திற்கும் அதிகமான உணவுப் பணவீக்கத்தை சந்தித்துள்ளன. மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கா நாடுகளில், ஒரு பிராந்தியமாக 2023 இன் தொடக்கத்தில் சராசரியாக உயர்ந்த உணவு விலை பணவீக்கத்தை பதிவு செய்தது. குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு மேலதிகமாக, 81.8 சதவீத உயர் வருமான நாடுகளில் 2023 சனவரி-ஏப்ரலுக்கு இடையில் அதிக உணவு விலை பணவீக்கம் ஏற்பட்டது.

3.8.3 உலோகம் மற்றும் கனிம விலைகள்

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் உலோகங்கள் மற்றும் கனிமங்களின் விலைக் குறியீடு 10 சதவிகிதம் உயர்ந்துள்ளது, இது ஒரு வருடத்திற்கு முன்பு இருந்ததை விட 3 சதவிகிதம் குறைவாக உள்ளது. அலுமினியம், பித்தளை, இரும்புத் தாது, ஈயம், நிக்கிள், தகரம், துத்தநாகம் போன்ற உலோகங்கள் மற்றும் தாதுப்பொருட்களின் விலை 2022 உடன் ஒப்பிடும்போது 2023 இல் முறையே 11 சதவீதம், 3.6 சதவீதம், 5.2 சதவீதம், 2.4 சதவீதம், 14.8 சதவீதம், 23.4 சதவீதம் மற்றும் 19.6 சதவீதம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தங்கம் மற்றும் வெள்ளி போன்ற விலைமதிப்பற்ற உலோகங்களின் விலைகள் புவிசார் அரசியல் நிச்சயமற்ற தன்மை மற்றும் தொடர்ச்சியான உயர் பணவீக்கம் காரணமாக ஒவ்வொன்றும் 5.5 சதவிகிதம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறைந்த தேவை காரணமாக 2022 உடன் ஒப்பிடும்போது 2023 இல் பிளாட்டினம் விலை 11.8 சதவிகிதம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3.9 இலங்கைச் சூழலில் எதிர்காலத்திட்டம்

கொவிட்-19 தொற்றுநோய், நிதித்துறை குழப்பம், உயர் பணவீக்கம் மற்றும் ரஷ்யா - உக்ரைன் முரண்பாடுகள் மற்றும் உள்நாட்டு பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றின் விளைவாக உருவான உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் விலை உயர்வுகள் இலங்கையின் எதிர்கால வளர்ச்சியை மோசமாக பாதித்துள்ளன. 2022 இல் பொருளாதார வளர்ச்சி 7.8 சதவிகிதம் கூர்மையான சுருக்கத்தில் இது நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே, சமூகத்தின் ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரைப் பாதுகாக்கும் அதே வேளையில், பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக, மிகவும் புறக்கணிக்கப்பட்ட கட்டமைப்பு சீர்திருத்தங்கள் உட்பட பேரண்டப் பொருளாதார சரிசெய்தல் நடவடிக்கைகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட விரிவான சீர்திருத்தப் பொதி, இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது நடுத்தர காலப்பகுதியில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2022 இன் இரண்டாம் அரையாண்டில் ஏற்பட்ட கடுமையான வீழ்க்கிகுப் பிறகு உலகப் பொருளாதாரம் மீண்டு வருவதற்கான அறிகுறிகளை நிரூபித்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் வரலாற்று உயர் மட்டங்களில் இருந்து உலகளாவிய பொருட்களின் விலைகள் குறைந்ததைத் தொடர்ந்து, உள்நாட்டு பணவீக்க அழுத்தமும் குறைந்துள்ளது. ஏற்றுமதி, சுற்றுலா மற்றும் பணம் அனுப்புதல் மூலம் வெளிச்செல்லும் பணத்தை நிர்வகிக்க மேம்படுத்தப்பட்டுள்ளது. அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளில் சீர்திருத்தங்கள் மற்றும் வருமான அடிப்படையிலான நிதி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை வெற்றிகரமாக செயல்படுத்துவதன் காரணமாக ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறை குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அரசிறை, நாணயம், நிதி மற்றும் உண்மையான துறைகள் உட்பட நான்கு துறைகளையும் உள்ளடக்கிய நன்கு திட்டமிடப்பட்ட தொரு பொருளாதாரக் கொள்கை சரிசெய்தல் கட்டமைப்பானது, நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கு பெரிய பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுக்க வழி வகுக்கும்.

பகுதி II

இறுதி வரவுசெலவுத் திட்ட நிலைமை

04

அரசாங்க வருமானம்

4.1 மேன்நோக்கு

பரந்த அடிப்படையிலானதும் முற்போக்கானதுமான வரி முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு துணிச்சலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதனால், 2022 ஆம் ஆண்டு இலங்கையின் வரிக் கொள்கையாக்கத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கொண்டிருந்தது. 2022 ஆம் ஆண்டில் கடுமையான பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில், அதிகரிகக்கப்பட்ட விலை மட்டங்கள் மற்றும் நாணயமாற்று விகிதத்தின் தேய்மானம் ஆகியவற்றின் சாதகமான விளைவுகளுடனிணைந்து, கடும் வருமான மேம்பாட்டு நடவடிக்கைகளின் காரணமாக அரசாங்கத்தின் வருமானத் திரட்டல் 2022 ஆம் ஆண்டில் ரூபா 2,000 பில்லியனினைத் தாண்டியுள்ளது.

பெயரளவு நியதிகளில், மானியங்கள் உட்பட அரசாங்கத்தின் வருமானமானது 2021 ஆம் ஆண்டில் ரூபா 1,463.8 பில்லியனிலிருந்து 37.5 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 2,012.6 பில்லியனினைப் பதிவுசெய்தது. மானியங்கள் நீங்கலாக 2022 ஆம் ஆண்டில் அரசாங்க மெய் வருமானம் ரூபா 1,979.2 பில்லியனாகும். இத்தொகையானது வருடாந்த மதிப்பீடாகிய ரூபா 2,084 பில்லியனில் ரூபா 104.8 பில்லியன் விலகலுற்று, மதிப்பீட்டிற்கு நிகராக 95 சதவிகித தேறலைக் கொண்டிருந்தது. விகிதத் திருத்தத்தின் பயனாக பெறுமதி சேர் வரி (ரூபா 154.9 பில்லியனினால்), மிகைக்கட்டண வரி (ரூபா 120.7 பில்லியன் ஈட்டிய ஒரே தடவை அறவிடப்படும் வரி), நிறுவன வருமான வரி (ரூபா 85.8 பில்லியனினால்) விற்பனை மற்றும் கட்டணங்கள் (ரூபா 47.4 பில்லியனினால்) மற்றும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (2022, ஒக்றோபர் 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்த பிறகு ரூபா 36.1 பில்லியன் ஈட்டிய) ஆகியவற்றின் முக்கிய பங்களிப்பு காரணமாக வருமானத் திரட்டலின் அதிகரிப்பு மேம்பட்டுள்ளது.

வருமானத்தில் பெயரளவிலான அதிகரிப்பு காணப்பட்டபோதிலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்தில் வரி வருமானமானது 0.1 சதவீத புள்ளிகளால் குறைக்கப்பட்டதன் காரணமாக 2021 ஆம் ஆண்டில் 8.3 சதவீதமாக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசாங்க வருமானமானது 2022 ஆம் ஆண்டில் 8.2 சதவீதமாகச் சரிந்துள்ளது. இந்த விகிதம் 2022 ஆம் ஆண்டில் பிராந்தியத்தில் பதிவுசெய்யப்பட்ட மிகக் குறைவான விகிதமாக இருந்ததுடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.8 சதவீத வருமான மதிப்பீட்டிலிருந்து 0.6 சதவீத புள்ளிகளின் விலகலைக் குறித்திருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5 சதவிகித மிகைக்கட்டண வரி அறவிடப்பட்டதன் காரணமாக 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 1.7 சதவிகிதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் வருமான வரிகளின் வருவாய் 2.2 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. பெறுமதி சேர் வரி விகிதம் 8 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அதிகரித்த போதிலும், 2022 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விகித மாற்றங்களின் காரணமாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதமாக பெறுமதி சேர் வரி வருமானம் 2022 ஆம் ஆண்டில் 1.9 சதவீதத்தில் மிதமான அதிகரிப்பினையே பெற்றுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டில் இது 1.8 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும், பணவீக்கத்திற்கேற்ப உற்பத்தித் தீர்வை விகிதங்களை மாற்றியமைக்காததாலும், மோட்டார் வாகனங்கள் மற்றும் பெற்றோலியம் மீதான உற்பத்தி வரியிலிருந்து குறைவடைந்த வருமானத்தினாலும், 2021 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 1.7 சதவீதமாகக் காணப்பட்ட உற்பத்தி வரிகளின் வருமானம் 2022 ஆம் ஆண்டில் 1.4 சதவீதமாகக் குறைந்துள்ளது. இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக 2021 ஆம் ஆண்டில் 2.0 சதவீதமாக இருந்த வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான வரிகள் 2022 ஆம் ஆண்டில் 1.4 சதவீதமாகக் குறைந்துள்ளது.

அட்டவணை 4.1 | அரசாங்க வருமானத்தின் சாராம்சம்

ரூபா.மில்லியன்

விடயம்	2019	2020	2021	2022 (a)
மொத்த வருமானம், மானியங்கள்	**1,898,808**	**1,373,308**	**1,463,810**	**2,012,589**
மொத்த வருமானம்	**1,890,899**	**1,367,960**	**1,457,071**	**1,979,184**
வரி வருமானம்	1,734,925	1,216,542	1,298,019	1,751,132
வருமான வரி	427,700	268,249	302,115	534,021
பொருட்கள், சேவைகள் மீதான வரி	975,557	586,650	646,068	875,995
வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகள்	331,668	361,643	349,836	341,116
வரியல்லாத வருமானம்	155,974	151,417	159,052	228,052
மானியங்கள்	**7,909**	**5,348**	**6,740**	**33,405**
மொ.உ.உற்பத்தி சதவீதத்தில்				
வருமனம் மற்றும் மானியங்கள்	**11.9**	**8.8**	**8.3**	**8.3**
மொத்த வருமானம்	**11.9**	**8.7**	**8.3**	**8.2**
வரி வருமானம்	**10.9**	7.8	7.4	7.3
வரியல்லாத வருமானம்	1.0	1.0	0.9	0.9
மானியங்கள்	0.0	**0.0**	**0.0**	**0.1**

(அ) தற்காலிகமானது
மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

4.2 வரிக் கொள்கை சீரமைப்புக்கள்

இலங்கையானது 2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அசாதாரணமான வரிக் குறைப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. இந்த மறுசீரமைப்புக்களில் பெறுமதி சேர் வரி, தனியாள் வருமான வரி மற்றும் நிறுவன வருமான வரி ஆகியவற்றின் வரி விகிதங்களைக் குறைத்தல் மற்றும் பெறுமதி சேர் வரி மற்றும் தனியாள் வருமான வரி ஆகியவற்றின் வரித் தளங்களைக் குறைத்தல் ஆகியவை உள்ளடங்கியிருந்தன. இருப்பினும், இந்த மறுசீரமைப்புக்கள் அரசாங்க வருவாயில் கணிசமான இழப்புக்கு வழிவகுத்ததன் விளைவாக பிராந்தியத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதத்தில் மிகக் குறைந்த வருமானத்தினைப் பதிவுசெய்தது. அந்த வகையில் 2019 ஆம் ஆண்டில் 11.9 சதவீதமாகக் காணப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்தில் வருமானத்தின் பங்கு 2022 ஆம் ஆண்டில் 8.2 சதவீதமாகக் குறைந்துள்ளது.

வருமானத் திரட்டல்களில் கொவிட் - 19 பெருந்தொற்றின் தாக்கம் மற்றும் நெருக்கடிகளுடனான நிவாரண நடவடிக்கைகள் என்பவற்றோடு ஒன்றிணைந்து இந்த குறைந்த வரி நடைமுறைகள், வரவு செலவு பற்றாக்குறையைப் பொறுத்தவரை 2019 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9.0 சதவீதத்திலிருந்து 2021 ஆம் ஆண்டில் 11.7 சதவீதமாக குறிப்பிடத்தக்களவில் விரிவடைய செய்திருந்தது. இந்த பங்கு விகிதமானது செலவு செயற்பாட்டு ஒழுங்குபடுத்தல்களிலான நேர்முக விளைவுகளுடன் கூடிய வருவாய் அதிகரிப்பு நடவடிக்கைகளின் விளைவாக 2022 ஆம் ஆண்டில் 10.2 சதவீதம் என்பதாக முன்னேற்றமடைந்திருந்தது. எவ்வாறாயினும், குறைந்தளவிலான வருவாய் செயற்திறன் மற்றும் ஒப்பீட்டளவில் அதிகமானதும் இறுக்கத்தன்மையுடையதுமான மீண்டெழும் செலவினங்கள் என்பன காரணமான தொடர்ந்திருந்த அரசிறைப் பற்றாக்குறை வினைத்திறனற்ற பொதுச் செலவினங்கள் என்பதோடு இணைந்து நிதித்தேவைகளின் அதிகரிப்பு மற்றும் நிலைபேறற்ற பொது படுகடன் நிலைக்கும் இட்டுச் சென்றிருந்தது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரச படுகடன்களின் விகிதம் 2022 ஆம் ஆண்டில் 113.8 சதவீதத்திற்கு அதிகரித்து சென்றிருப்பதை வெளிப்படுத்தியது.

உயர்ந்தளவு அரசிறைப் பற்றாக்குறை காரணமாக அரசாங்கத்திற்கு அதிக கடன் பெற வேண்டிய தேவைப்பாடுகள் இருந்தன. மேலும் உள்நாட்டு வங்கியல்லா மூலங்களில் தேறிய நிதியீட்டத்திற்கேற்ப போதியளவு நிதியில்லாமை மற்றும் சர்வதேச மூலதன சந்தைக்கான வாய்ப்புகளை இழந்திருந்தமை என்பன வரவு செலவுப் பற்றாக்குறை நிதியளிப்பிற்கான தெரிவுகளை மட்டுப்படுத்தியிருந்தது. அரசாங்கம் வங்கித் துறையிலிருந்தே குறிப்பாக இலங்கை மத்திய வங்கியிலிருந்து பெருமளவிலான நிதியீட்டத்தை தேடிக்கொள்ள வேண்டியிருந்ததன் காரணமாக ஒரு கடுமையான பணப்பாய்ச்சல் தடைகளை ஏற்படுத்தியிருந்தது. இத்தகைய விரிவான நாணயவியல் நிதியீட்டம் 2022 ஆம் ஆண்டில் உயர் பணவீக்க அழுத்தங்களிற்கு முகங்கொடுக்க வழியமைத்தது.

இந்த அரசிறை சமமின்மைகள் அரசாங்கத்தை 2022 யூன் மாதத்திலிருந்து இறுக்கமான இலட்சிய வருமான கொள்கை நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தத் தூண்டியது. இந்த வழியிலான சீரமைப்பு என்பது வரிவிகிதங்களிலான அதிகரிப்பு, வரி அடிப்படைகளிலான விஸ்தரிப்புகள், அதிக எண்ணிக்கையிலான வரிவிலக்களிப்புகள் சலுகைகளை நீக்குதல் என்பவற்றை பிரதான நோக்காக கொண்டிருந்தது. இந்த சீரமைப்பு 2026 ஆம் ஆண்டும் அதனைத் தொடர்ந்தும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரச வருவாயினை தொடர்தேர்ச்சியாக 15 சதவீதம் வரையில் உயர்த்துவதை இலக்காகக் கொண்டுள்ளது. இது வருவாயினை அடிப்படையாகக் கொண்ட அரசிறை ஒன்று திரட்டல் நடவடிக்கைகளுடன் இணைந்து, நிலைபேறான அரசிறை நிலையினை மீட்டெடுத்தல், நாட்டின் அரசிறை கட்டுக்கோப்பினை பலப்படுத்தல் என்பதுடன் இறுதியாக பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் படுகடன் நிலைபேற்றுத்தன்மை என்பவற்றை மீட்டெடுக்க பங்களிப்பு செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது.

4.2.1 வருமான வரி நடவடிக்கைகள்

- வரியல்லாத தொடக்க அளவைக் குறைத்தல், தனியாள் வருமான வரி விகிதங்களின் எல்லையையும் உயர் எல்லை விகிதங்களையும் அதிகரித்தல் மற்றும் 2023, சனவரி 01 ஆம் திகதியிலிருந்து வலுவாகும் அதிகரித்து செல்லும் வரி அடுக்குகளை ஒழுங்கமைத்தல்.
    - தனியாள் வருமான வரிக்கான வரியல்லா தொடக்க அளவினை ஆண்டொன்றிற்கு ரூபா 3.0 மில்லியனிலிருந்து ரூபா 1.2 மில்லியனாகக் குறைத்தல்
    - கல்வி, சுகாதாரம், ஓய்வூதிய பங்களிப்புத் திட்டம், வீட்டுக் கடன் மீதான வட்டிக் கொடுப்பனவு போன்றவற்றிற்கு வழங்கப்பட்ட ரூபா 1.2 மில்லியன் நிவாரண செலவினங்களை நீக்குதல்
    - ஆண்டொன்றிற்கான வரி அடுக்கினை ரூபா 3.0 மில்லியனிலிருந்து ரூபா 500,000 ஆகக் குறைத்தல்.
    - வரி நிவாணைத்தை மீறும் ஒவ்வொரு ரூபா 500,000 மீது வரி விகிதத்தினை 6% இலிருந்து 36% இற்கு படிப்படியாக அதிகரிக்கும் வகையில் வரி விகிதங்களை மீளமைத்தல்.

- மதிப்பீட்டாண்டொன்றிற்கு ரூபா 1.2 மில்லியனுக்கு மேற்படுகின்ற தனியாள் நிவாரணத்தினைக் கொண்டுள்ள சகல வரி செலுத்துவோருக்கும், வேலை வருமானத்திலான (உழைக்கும்போது செலுத்தும் வரி) முற்பண தனியாள் வருமான வரி/ நிறுத்தி வைத்தல் வரியை கட்டாயமாக்குதல்.
- ஏனைய கொடுப்பனவுகள் மீதான உயர் வருமான வரியை பின்வரும் விகிதங்களில் கட்டாயமாக்குதல்.

அட்டவணை 4.2 மே.வ.வரி/பி.வை.வரி

வகை	விகிதம் (%)	இறுதியான/ இறுதியல்லாத
பங்கிலாபம்	15	இறுதியான
செலுத்தப்பட்ட வட்டி அல்லது கழிப்பீடு	5	இறுதியல்லாத
மாதமொன்றிற்கு ரூபா 100,000 இற்கு மேற்பட்ட வாடகைக் கொடுப்பனவுகள்	10	இறுதியல்லாத
தொழில் வல்லுநர்கள் போன்ற தனியாட்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 100,000 இற்கு மேற்பட்ட சேவைக் கொடுப்பனவுகள்	5	இறுதியல்லாத
ஏனைய எல்லா சந்தர்ப்பங்களிலும் (வதிவோரல்லாதோர் தவிர்ந்த)	14	இறுதியல்லாத
வதிவோரல்லாதோர்	14	இறுதியல்லாத

மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

- மதுபானம், புகையிலை, பந்தயம்பிடித்தல் மற்றும் சூதாடல் மீதான நிறுவன வருமான வரி விகிதத்தினை 40 சதவீதமாக வைத்திருக்கும் அதேவேளையில் 2022, ஒற்றோபர் 01 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நிறுவன வருமான வரி விகிதத்தினை 24 சத வீதத்திலிருந்து 30 சத வீதத்திற்கு அதிகரித்தல் மற்றும் நிறுவன வருமான வரி விகிதங்களின் விலக்களிப்புக்களையும் சலுகை விகிதங்களையும் நிறுத்துதல். இந்த வருவாய் நடவடிக்கையின் முழு விளைவும் 2023 ஆம் ஆண்டில் உணரப்படுமென்பதுடன், இதனூடாக ஆண்டுக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.8 சதவீதம் ஈட்டப்படும்.
- வருவாயை மேம்படுத்தும் ஒரு தற்காலிக நடவடிக்கையாக 2020/2021 மதிப்பீட்டு வருடத்திற்கு ரூபா 2.0 பில்லியனுக்கும் மேலான வரி செலுத்த வேண்டிய வருமானம் கொண்ட தனியாள், பங்குடமை, கம்பனி மீதான மிகைக் கட்டண வரி 25 சதவீதம் விதித்தல். இதன் வெளிப்பாடாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5 சதவீதமாகிய ரூபா 120.7 பில்லியன் பதிவுசெய்யப்பட்டது.

4.2.2 பெறுமதிசேர் வரி நடவடிக்கைகள்

- 2022, யூன் 01 ஆம் திகதியிலிருந்து பெறுமதிசேர் வரி 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகவும், அதனைத் தொடர்ந்து 2022, செப்தெம்பர் 01 ஆம் திகதியிலிருந்து 15 சதவீதமாகவும் அதிகரித்தல்.
- பெறுமதிசேர் வரிக்கான பதிவு செய்யும் தொடக்க அளவினை 2022, ஒக்றோபர் 01 ஆம் திகதியிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூபா 300 மில்லியனிலிருந்து ரூபா 80 மில்லியனாகக் குறைத்தல்.
- தொடர்மாடி வீட்டுமனைகள் மீதான பெறுமதிசேர் வரி விலக்களிப்புகளை 2023, சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் நீக்குதல்.
- சுற்றுலா தொடர்பான சேவைகளின் பூச்சிய விகிதத்தினை 2022, யூன் 01 ஆம் திகதியிலிருந்து நீக்குதல்.

4.2.3 உற்பத்தி வரி நடவடிக்கைகள்

- 2023, சனவரி 01 ஆம் திகதி முதல் 60 மி.மீ. இலும் (98 சதவிகித அதிகரிப்பு) குறைந்த சிகரெட்கள் தவிர்ந்த ஏனைய சிகரெட்டுகளிற்கும் உற்பத்தி வரி 20 சதவீதத்தினால் அதிகரித்தல் மற்றும் மதுபானத்தின் மீதான வரியை 2023, சனவரி 03 ஆம் திகதி தொடக்கம் 20 சதவீதத்தினால் அதிகரித்தல்.
- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து திறைசேரிக்கு மாற்றப்பட்ட பொறுப்புக்களுக்கு நிதியளிப்பதற்காக எரிபொருள் மீதான உற்பத்தி வரியினை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.3 சதவீதமாக வெளிப்படுத்தும் வகையில் 2023, சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் எரிபொருள் மீதான உற்பத்தி வரியினை லீற்றரொன்றிற்கு ரூபா 25 வரை அதிகரித்தல்.

4.2.4 ஏனைய வரி தொடர்பான நடவடிக்கைகள்

- தொலைத்தொடர்புகள் மீதான அறவீடுகளினை 2022, யூன் 01 தொடக்கம் 11.25 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரித்தல்.
- 2022, ஒக்றோபர் 01 தொடக்கம் வருடத்திற்கு ரூபா 120 மில்லியனுக்கு மேலான பொறுப்புடைய விற்பனை புரள்வுகள் மீது சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடாக 2.5 சதவீதத்தினை விதித்தல்.
- பந்தயம்பிடித்தல் மற்றும் சூதாடல் அறவீட்டு விகிதங்களை அதிகரித்தல். (பாராளுமன்ற அனுமதிக்காக உள்ளது)
    - சூதாட்டத் தொழில் மீதான வருடாந்த அறவீடுகளை ரூபா 200 மில்லியனிலிருந்து ரூபா 500 மில்லியனாக அதிகரித்தல்.
    - பந்தயங்களிலான வருடாந்த விதிப்பனவுகளை பின்வருமாறு அதிகரித்தல்.

- முகவர்களினூடாக நடாத்தப்படுபவற்றிற்கு ரூபா 4 மில்லியன்களிலிருந்து ரூபா 5 மில்லியன்களாக அதிகரித்தல்.
- நேரடி ஒளிபரப்பு வசதிகளைப் பாவித்து நடாத்தப்படுபவற்றிற்கு ரூபா 600,000 இலிருந்து ரூபா 1 மில்லியனாக அதிகரித்தல்.
- நேரடி ஒளிபரப்பு வசதிகளை பாவிக்காது நடாத்தப்படுபவற்றிற்கு ரூபா 50,000 இலிருந்து ரூபா 75,000 ஆக அதிகரித்தல்.
- மொத்த சேகரிப்புகளிலான விதிப்பனவு விகிதத்தை 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அதிகரித்தல்.
- சூதாட்ட விடுதிகளின் நுழைவு விதிப்பனவுகளாக ஐ.அ.டொ. 50 இனை விதித்தல்.

o சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளை வெளியிட்டு சீட்டாட்டத் தொழில் இயக்குநர்கள் மீது ரூபா 500 மில்லியன் உரிமக் கட்டணத்தை விதித்தல்.

அட்டவணை 4.3 வரி முறைமைகளின் ஒப்பீடு

விபரம்	முன்னைய சட்டம்	தற்போதைய சட்டம்	பயன்வலுப்பெறும் திகதி
தனியாள் வருமான வரி			
தனியாள் நிவாரணம் (ஆண்டொன்றிற்கு)	ரூபா 3 மில்லியன்	ரூபா 1.2 மில்லியன	2023, சனவரி 01
செலவின நிவாரணம் (ஆண்டொன்றிற்கு)	ரூபா 1.2 மில்லியன்	செலவின நிவாரணத்தை நீக்குதல்	
அடுக்குகள் (ஆண்டொன்றிற்கு)	முதல் ரூபா 3 மில்லியன் – 6% அடுத்த ரூபா 3 மில்லியன் -12% மிகுதி ரூபா 3 மில்லியன் - 18%	முதல் ரூபா 0.5 மில்லியன் - 6% அடுத்த ரூபா 0.5 மில்லியன் -12% அடுத்த ரூபா 0.5 மில்லியன் -18% அடுத்த ரூபா 0.5 மில்லியன் -24% அடுத்த ரூபா 0.5 மில்லியன் -30% மிகுதியின் மீது - 36%	
பிடித்து வைத்தல் வரி			
மேம்படுத்தப்பட்ட தனியாள் வருமான வரி/ உழைக்கும்போது செலுத்தும் வரி	வதிவோர் மற்றும் வதிவோரல்லாதவர்களுக்கு தொழில்வழங்குநரொருவர் செலுத்தும் கொடுப்பனவுகளுக்கு மாத்திரம் கட்டாயமாக்குதல்	தனிப்பட்ட நிவாரணத்தைத் தாண்டிய அனைத்து ஊழியர்களுக்கும் மே.த.வ. வரியைக் கட்டாயமாக்குதல்	2023, சனவரி 01
மேம்படுத்தப்பட்ட வருமான வரி	வதிவோருக்கும் பிரஜைகளுக்கும் தெரிவுக்குரியது வதிவோருக்கு தெரிவுக்குரியது மற்றும் அவர்களது வேண்டுகோளின் பேரில் கழிக்கப்படும்	மே.வ.வரியை பின்வரும் விகிதங்களின் கீழ் அனைவருக்கும் கட்டாயமாக்குதல்: • வட்டி - 5 சதவீதம் • பங்கிலாபம் - 15 சதவீதம் • வாடகை - மாதமொன்றிற்கு ரூபா 100,000 இற்கு மேற்படும் வாடகை மீது 10 சதவீதம் • சேவைக் கொடுப்பனவுகள் - மாதமொன்றிற்கு ரூபா 100,000 இற்கு மேற்படும் சேவைக் கொடுப்பனவுகளுக்கு - 5 சதவீதம் • ஏனைய எல்லா சந்தர்ப்பங்களிலும் - 14 சதவீதம் • பங்கிலாபங்கள் நீங்கலாக அனைத்துக் கொடுப்பனவுகள் மீதும் பிடித்துவைத்தல் வரியை இறுதியற்றதாக ஆக்குதல் • பங்கிலாபங்கள் மீதானபிடித்துவைத்தல் வரியை இறுதியானதாக ஆக்குதல்	
நிறுவன வருமான வரி			
நிலையான நிறுவன வருமான வரி விகிதம்	24%	30%	2022, ஒற்றோபர் 01
துறை-குறிப்பிடப்பட்ட நி.வ.வ.ச. விகிதம்	14%	துறை-குறிப்பிடப்பட்ட சலுகை விகிதத்தினை நீக்குதல்	
மதுபானம், புகையிலை, பந்தயம் பிடித்தல் மற்றும் சூதாடல் மீதான நி.வ.வ. விகிதம்	40%	40%	
பெறுமதி சேர் வரி			
பெறுமதி சேர் வரி பதிவிற்கான ஆரம்ப அளவு (ஆண்டொன்றிற்கு)	ரூபா 300 மில்லியன்	ரூபா 80 மில்லியன்	2022, ஒற்றோபர் 01
தொடர்மாடி மனைகள் மீதான விலக்களிப்பு		விலக்களிப்பினை நீக்குதல	2023, சனவரி 01

மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

4.2.5 வரி நிருவாக நடவடிக்கைகள்

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்நாட்டு அரசிறை (திருத்தச்) சட்டத்தின் கீழ் குறிப்பிடத்தக்க வரி நிருவாக நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டன.

- தனியாள் வருமான வரி செலுத்துவோருக்கு மின்னணு வரித் தாக்கல் முறையை கட்டாயமாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துதல்.
- பணமீளளிப்புச் செயல்முறையை ஒழுங்குபடுத்தவும், வதிவோர் தனிநபர்களால் வரிப் பொறுப்பை விட அதிகமாக செலுத்தப்பட்ட தொகைகளைத் திரும்பப் பெறுவதை விரைவுபடுத்தவும் சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துதல்.
- பணக் கொடுக்கல் வாங்கல்களைக் குறைப்பதற்கு சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துதல்.
- அதற்கிணங்க, பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்ய அல்லது பெறுகை நடைமுறையில் பெற்றுக்கொள்ள எவரேனும் ஆளொருவரால் மற்றொருவருக்கு ஒரு நாளில், அல்லது ஒரு பரிவர்த்தனையின் போது மொத்தமாக ரூபா 500,000 அல்லது அதற்கு மேல் பணமாகச் செலுத்தும் தொகை வரி நோக்கத்திற்காக செலவினங்களாகக் கழிக்க அனுமதிக்கப்படமாட்டாது.
- நிதி நிறுவனங்கள், பொருட்கள் பணிகள் அல்லது ஆலோசனை மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகளின் கொள்முதல் ஒப்பந்தங்களுக்குப் பொறுப்பான அரசாங்க நிறுவனம், பங்குச் சந்தை, பதிவாளர் நாயகம் திணைக்களம், நிறுவனங்களின் பதிவாளர் நாயகம் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் ஆகியவை, வரி செலுத்துவோர் பரிவர்த்தனைத் தகவலை தனிநபர் மட்டத்தில், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு முறையான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட காலவரையறை முறையில் சமர்ப்பிக்கத் தேவைப்படுத்தும் சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துதல்.
- நாட்டின் பொருளாதார நன்மைகளைக் கருத்தில் கொண்டு நிதி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதும் வெளிநாட்டுக் கொடைகளிலிருந்து நிதியளிக்கப்பட்டதுமான இலங்கை அரசாங்கத்தின் கருத்திட்டமொன்றில் ஈடுபடுவதன் மூலம் வெளிநாட்டவரொருவரால் பெறப்படும் தொகைகளுக்கு வரி விலக்களித்தல்.

மேலும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்காக நடாத்தப்பட்ட வரி நிருவாகக் கண்டறிதல் மதிப்பீட்டு கருவி மதிப்பீடானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நான்கு முக்கிய வரிப் பொறுப்புக்களிலும் (பதிவு செய்தல், தாக்கல் செய்தல், பணம் செலுத்துதல் மற்றும் அறிக்கை செய்தல்) கணிசமான சிக்கல்கள் இருப்பதைக் கண்டறிந்துள்ளது. வரி நிருவாக சீரமைப்பு நடவடிக்கைகளின் மூலம் அடையாளம் காணப்பட்ட பலவீனங்களை சரிசெய்வதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. அத்தகைய மறுசீரமைப்புக்களில் உள்ளடங்கும் விடயங்கள்:

- அடையாள விவரங்களைப் பதிவு செய்வதனைத் தேவைப்படுத்துவதற்காகவும் வரி அடையாள இலக்கத்தினை ஒதுக்குவதற்கும், தனியாள் வருமான வரி அறிக்கையின் இலகுபடுத்தப்பட்ட பதிப்பிலிருந்து குறைந்தபட்ச வருமான மற்றும் வரிப் பிடித்தம் செய்யும் தரவுப் புள்ளிகளைப் பெறுவதற்கும் வருமான நிருவாக முகாமை ஒருங்கிணைப்பு முறைமையை இலகுபடுத்துதல்.
- பெரும் வரி செலுத்துவோர் பிரிவு மற்றும் உயர்ந்த தேறிய செல்வந்தர் தொடர்பான பிரிவு ஆகியவற்றின் நிருவாகத்தை மீளஒழுங்கமைத்தலும் வலுப்படுத்தலும்.
- தனிப்பட்ட வரி அடையாள இலக்கப் பதிவு மற்றும் தனியாள் வருமான வரி தாக்கல் செய்வதற்கான இணைய வழியை இலகுபடுத்துவதன் மூலம் செயல்முறைகளை ஒழுங்குபடுத்தலும் மற்றும் பாதிப்புகளைக் குறைத்தலும் மற்றும் மூலப்பொருள் விடயங்களுக்கு பெறுமதி சேர் வரி அட்டவணையின் நேர்பொருத்தத்தினை மட்டுப்படுத்துதல்.
- இடர் முகாமைக் குழு மற்றும் புதிய இடர் முகாமைப் பிரிவின் முயற்சிகளை முடுக்கிவிடுவதுடன் கணக்காய்வு செயல்முறை மற்றும் பிற இணக்க நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஊழியர் நெறிமுறைகள் மற்றும் நடத்தைக் கோவை 2005 இனை இற்றைப்படுத்தலும் இலகுபடுத்தலும் மற்றும் அனைத்து ஊழியர்களும் இந் நடத்தைக் கோவையுடனான தங்கள் முழுமையான புரிதல் மற்றும் இணக்கம் ஆகியவற்றை எழுத்துபூர்வமாக சான்றளிக்கத் தேவைப்படுத்தும் ஊழிய பயிற்சித் திட்டமொன்றின் மூலம் அதைச் செயற்படுத்துதல்.

- மறுசீரமைப்பு ஒருங்கிணைப்புப் பிரிவொன்றினை வடிவமைத்தல், வளப்படுத்துதல் மற்றும் ஆரம்பித்தல்.
- செயல்நுணுக்க மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலை வழங்க நவீனமயமாக்கல் வழிகாட்டுதல் குழுவை நிறுவுதல்.
- தற்போதைய வரி அடிப்படையை விரிவுபடுத்துவதற்காக 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து வதிவோர்களுக்கும் கட்டாய வரி பதிவினை அறிமுகப்படுத்துதல்.

வருமானக் கசிவினைக் கட்டுப்படுத்த 2022, சனவரி முதல் பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் முகாமை முறையைச் செயற்படுத்துவதன் மூலம் மதுவரி (கட்டளைச்சட்டம்) தீர்வை தொடர்பான நிருவாக நடவடிக்கைகள் மேலும் வலுப்படுத்தப்பட்டன. மேலும், மதுபான விநியோகச் சங்கிலியை ஒழுங்குபடுத்துவதற்கும், மதுபான உற்பத்தி, நுகர்வு மற்றும் விற்பனை குறித்த தகவல்கள் மற்றும் தரவுகளை சேகரிப்பதற்கும் டிஜிட்டல் முறைமையை அறிமுகப்படுத்த மதுவரி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கட்டம் 4.1 | 2023 - வரவுசெலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்ட வருமான மேம்பாட்டு நடவடிக்கைகள்

2023 - வரவுசெலவுத் திட்டத்தில், அரசாங்கத்தின் வருமான அடிப்படையிலான அரசிறை ஒருங்கிணைப்பு முயற்சிகளை மேலும் வலுப்படுத்துவதற்காக குறுகிய கால மற்றும் நடுத்தர காலத்திற்குள் செயற்படுத்தப்படவுள்ள வரிக் கொள்கை மற்றும் வரி நிருவாகம் தொடர்பான பல நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டன.

வருமான வரி -

- வரி செலுத்துவோரின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய வரி செலுத்துவோரின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை விளக்கும் சாசனமொன்றினை அறிமுகப்படுத்துதல் மற்றும் வரிசெலுத்துவோர் குறைகேட்பாளர் (ஓம்புட்ஸ்மன்) ஒருவரை நியமித்தல்.
- அரசுடைமை நிறுவனங்கள், ஊழியர்களின் உழைக்கும் போது செலுத்தும் வரி / முற்பண தனியாள் வருமான வரி பொறுப்புக்களை செலுத்துவதை நிறுத்துதல்.
- முழுமையாக வெளிநாட்டு மானியங்களால் நிதியளிக்கப்படும், நிதியமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களிலிருந்து வதிவோரல்லாதோர் பெற்றுக்கொள்ளும் வருமானத்திற்கு விலக்களித்தல்.

பெறுமதி சேர் வரி -

- 2002 முதல் 2022 வரை அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களை ஒருங்கிணைத்து, புதிய பெறுமதிசேர் வரிச் சட்டத்தை அறிமுகப்படுத்துதல்.
- சுகாதாரம், கல்வி மற்றும் விவசாயம் போன்ற அத்தியாவசிய துறைகளுக்கு விலக்களிப்புக்களை மட்டுப்படுத்துவதன் மூலம் பெறுமதிசேர் விலக்களிப்புக்களின் அட்டவணையை ஒழுங்குமுறைப்படுத்துதல்.

பந்தயம்பிடித்தல் மற்றும் சூதாடல் அறவீட்டுச் சட்டம் மற்றும் சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் (பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக உள்ளது)

- பந்தயம்பிடித்தல் மற்றும் சூதாடல் அறவீட்டுச் சட்டத்தில் "புக்மேக்கர்" என்ற வரையறையை விரிவாக்க, இணையத்தளம் வாயிலாக பந்தயம் உட்பட அனைத்து வகையான விளையாட்டு நிகழ்வுகளிலும் பந்தயம் பிடிக்கும் அல்லது பேரம் பேசும் ஆட்களைச் சேர்ப்பதற்கு.
- புக் மேக்கர் தொழிலுக்கான உரிமப் பொறிமுறையொன்றினை அறிமுகப்படுத்துதல் மற்றும் உரிமம் பெற்ற புக் மேக்கர்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்ய அனுமதிக்கும் சட்டத் திருத்தங்களைச் செய்வதற்கு.
- உரிமம் பெறாமல், பதிவு செய்யப்படாமல் புக்மேக்கர் தொழிலில் ஈடுபடுவதை தண்டனைக்குரிய குற்றமாக குறிப்பிடுதல்.
- சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ், இணையவழி சூதாட்டம்/ சீட்டாட்டத்தினைச் சேர்க்க சூதாட்டம்/ சீட்டாட்டத்தின் வரையறையை விரிவுபடுத்தல்.

சுங்க இறக்குமதித் தீர்வை, துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு, செஸ் அறவீடு மற்றும் பிற வரிகள்

- 2023 சனவரியில் தொடங்கி மூன்றாண்டுகளில் செஸ் வரியையும் ஐந்து ஆண்டுகளில் துறைமுக மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டினையும் படிப்படியாக நீக்குதல்.
  - 2023, சனவரி 1, முதல் மூன்று ஆண்டுகளில் படிப்படியாக செஸ் வரியை நீக்குதல். 2023 மாச்சு 28 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அனைத்து வரிவிதிக்கத்தக்க பொருட்களுக்கும் பொருந்தக்கூடிய செஸ் விகிதங்களை 25-30 சதவிகிதம் குறைப்பதன் மூலம் பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கட்டம் 4.1 | 2023 - வரவுசெலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்ட வருமான மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடர்ச்சி...

- துறைமுக மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு, ஐந்தாண்டுகளில் படிப்படியாக நிறுத்தப்படும். 2023, ஏப்பிரல் 3, முதல் நடைமுறைக்கு வரும் 1,631 இ.மு. குறியீடுகளுக்கு (கட்டணவரி விதிக்கத்தக்க பொருட்கள்) பொருந்தக்கூடிய துறைமுக மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டினை நீக்குவதன் மூலம் இது தொடர்பாக ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- உத்தேச வரிகளை படிப்படியாகக் குறைப்பதற்காக 2023, மாச்சு 28, முதல் சுங்க இறக்குமதித் தீர்வையை 0:10:15 சதவீதத்திலிருந்து 0:15:20 சதவீதமாக அதிகரிப்பதற்கு.
- சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டிலிருந்து மோட்டார் வாகனங்களுக்கு விலக்களிப்பதற்காக.
- வர்த்தக மைய நடவடிக்கைகளின் கீழுள்ள களஞ்சிய சேவைகளுக்கு விலக்களிப்புக்களை நீடிக்கவும் மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு உதவுதொகையிலிருந்து வர்த்தக மைய நிறுவனங்களுக்கு விலக்களிப்பதற்காகவும்.
- டீசல் மற்றும் பெற்றோல் மீதான உற்பத்தி வரியை 2023, சனவரி முதல் அதிகரிப்பதற்காக..
- பீடி நுகர்வை குறைக்கவும், பீடி கைத்தொழிலை ஒழுங்குமுறைப்படுத்தவும் பீடியொன்றிற்கு ரூபா2.0 வீதம் வரியொன்றினை விதித்தல்.

வரி அல்லாதவை

- கடந்த மூன்று வருடங்களில் ஏற்கனவே அதிகரிக்கப்பட்டுள்ளவை தவிர ஏனை கட்டணங்கள் மற்றும் அறவீடுகளையும் கடவுச்சீட்டு மற்றும் வீசா மீது குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் அறவிடப்படும் கட்டணங்களையும் அதிகரிப்பதற்கு.
- அரசாங்க நிறுவனங்களால் அறவிடப்படும் வேத்துரிமை, வாடகை மற்றும் பிற வரி அல்லாத வருவாய்க் கட்டணம் மற்றும் அறவீடுகள் குறித்து ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்க குழுவொன்றை நியமித்தல்.

வரி நிருவாகம்

- நிறுவனமல்லாத துறைகளுக்கு கட்டாய (மின்னணு) எலக்ட்ரொனிக் வரி தாக்கல் விரிவாக்கம், எலக்ட்ரொனிக் கொடுப்பனவு முறையை ஊக்குவித்தல், மூன்றாம் தரப்பு நிறுவனங்களிடமிருந்து தகவல்களைச் சேகரிக்கும் பொறிமுறையை உருவாக்குதல், வரி இணக்கத்தினை மேம்படுத்துவதையும் வரி தொடர்பான ஊழலைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்ட வரி சேகரிப்பின் வினைத்திறனை மேம்படுத்தும் சட்ட திருத்தங்களைச் செய்தல் உள்ளடங்கலாக பல நடவடிக்கைகள் முன்மொழியப்பட்டது.
- தொழில்நுட்ப மேம்பாடு, செயல்முறை மேம்பாடு மற்றும் மனித வளங்களில் முதலீடு செய்தல் ஆகியவற்றின் ஊடாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம் மற்றும் இலங்கை மதுவரி திணைக்களம் ஆகியவற்றில் வரி நிருவாகத்தை மேம்படுத்துதல் மற்றும் முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள் ஊடாக மூன்று முக்கிய வருமான சேகரிப்பு நிறுவனங்களின் செயல்திறனைக் கண்காணிப்பதற்கு.
- உள்நாட்டு இறைவரி திணைக்களத்திலுள்ள வருமான நிருவாக முகாமைத்துவ ஒருங்கிணைப்பு முறைமையிலுள்ள குறைபாடுகளை மீளாய்வு செய்யவும் மற்றும் சரி செய்வதற்கும், மற்றும் வரி இணக்கத்தை மேம்படுத்தும் பொருட்டு தகவலைப் பகிர்வதற்காக முக்கிய வருவாய் சேகரிக்கும் நிறுவனங்களின் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான தளங்களை இணைப்பதற்காகவும்.
- 2023, சனவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அனைத்து வருமானங்கள் மற்றும் வரவுகளையும் நாளாந்த ஒருங்கிணைந்த நிதிக்கு மாற்றுவதற்கு வருமானம் சேகரிக்கும் நிறுவனங்களுக்குக் கட்டாயப்படுத்துதல்.

அட்டவணை 4.4 | மதிப்பிடப்பட்ட மற்றும் மெய் வருமானம் - 2022

ரூபா.மில்லியன்

விடயம்	திருத்தப்பட்ட மதிப்பீடு	உண்மையான (அ)	விலகல்
மொத்த வருமானம்	**2,084,000**	**1,979,184**	**-104,816**
வரி வருமானம்	**1,852,000**	**1,751,132**	**-100,868**
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்			
வருமானம், இலாபம் மீதான வரி	558,000	534,021	-23,979
பெ.சே.வரி - உள்நாட்டு (தேறிய)	317,000	291,619	-25,381
தேசக் கட்டுமான வரி (உள்நாட்டு)	–	352	352
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு	35,000	36,111	1,111
ஏனையவை	4,503	10,275	5,772
உப மொத்தம்	**914,503**	**872,377**	**-42,126**
சுங்கத் திணைக்களம்			
இறக்குமதித் தீர்வை	42,000	50,009	8,009
பெ.சே.வரி - இறக்குமதிகள் (தேறிய)	216,000	171,452	-44,548
தேசக் கட்டுமான வரி (இறக்குமதி)	–	61	61
துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீடு	177,000	180,595	3,595
செஸ் வரி	68,000	70,318	2,318
விசேட நுகர்வு அறவீடு மற்றும் ஏனைய	35,000	40,194	5,194
உற்பத்தி விசேட ஏற்பாடுகள்			
சிகரெட்டுகள்	110,000	104,160	-5,840
பெற்றோலியம்	55,000	53,074	-1,926
மோட்டார் வாகனங்கள் மற்றும் பிற	24,000	20,102	-3,898
உப மொத்தம்	**727,000**	**689,966**	**-25,370**
மதுவரித் திணைக்களம்			
மதுபானம்/புகையிலை	185,000	165,188	-19,812
உப மொத்தம்	**185,000**	**165,188**	**-19,812**
ஏனையவை			
தொலைத்தொடர்பு அறவீடு	16,000	14,995	-1,005
உரிம வரி மற்றும் பிற	9,497	8,606	-891
உப மொத்தம்	**25,497**	**23,601**	**-1,896**
வரியல்லாத வருமானம்	**232,000**	**228,052**	**-3,948**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

4.3 அரசாங்க வருமான செயலாற்றுகை

மானியங்கள் உட்பட அரசாங்கத்தின் மொத்த வருமானம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 1,463.8 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 2,012.6 பில்லியனாக 37.5 சதவீதம் அதிகரித்திருந்தது. 2021 ஆம் ஆண்டில் நேரடி மற்றும் மறைமுக வரி விகிதத்தில், 23:77 இலிருந்து 2022 ஆம் ஆண்டில் 30:70 இற்கு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் பதிவு செய்யப்பட்டது. வரி வருமானமானது பெறுமதி சேர் வரி மற்றும் தாபன வருமான வரியிலிருந்து வருமான சேகரிப்பில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பும் மிகைக்கட்டண வரி மற்றும் சமூக பாதுகாப்பு உதவுதொகை அறவீடு ஆகியவற்றிலிருந்து வருமானமீட்டல் ஆகியவற்றின் காரணமாகவும் 2021 ஆம் ஆண்டில் ரூபா 1,298 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 34.9 சதவீதத்தினால் ரூபா 1,751.1 பில்லியன் வரை அதிகரித்திருந்தது. 2021 ஆம் ஆண்டில் ரூபா 159.0 பில்லியன்களாகப் பதிவுசெய்யப்பட்ட வரி அல்லாத வருமானம், அரசாங்கக் கட்டணங்கள் மற்றும் அறவீடுகளை உயர்த்துவதன் மூலம் விற்பனை மற்றும் கட்டணங்கள் மூலம் அடையப்பெற்ற வருவாயில் அதிகரிப்பை பிரதிபலிக்கும் வகையில், 2022 ஆம் ஆண்டில் ரூபா 228.0 பில்லியன் வரை 43.4 சதவீதம் அதிகரித்தது 2022 ஆம் ஆண்டில் உரிமக் கட்டணங்களின் ஒழுங்குமுறைப்படுத்தலும் இதற்கு பங்களித்துள்ளது.

உள்நாட்டு நுகர்வு அடிப்படையிலான வரிகளின் வருவாய் 2021 ஆம் ஆண்டில் ரூபா 419.3 பில்லியன்களிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 40.8 சதவீதம் அதிகரித்து ரூபா 590.3 பில்லியனினைப் பதிவுசெய்தது. முக்கியமாக உள்நாட்டு பெறுமதி சேர் வரி மூலம் 57.2 சதவிகிதமும் மற்றும் மதுபானங்கள் மீதான மதுவரி மூலம் 19.2 சதவிகிதமும் வருமானம் அதிகரித்தமை இதற்குக் காரணமாகும். இறக்குமதி சார்ந்த பெறுமதி சேர் வரி மற்றும் துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானத்தின் அதிகரிப்பு காரணமாக இறக்குமதி அடிப்படையிலான வரிகள் மூலம் திரட்டப்பட்ட வருமானம் 2022 ஆம் ஆண்டில் ரூபா 593.0 பில்லியன் வரை அதிகரித்தது. 2021 ஆம் ஆண்டின் ரூபா 546.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 8.6 சதவீத அதிகரிப்பாகும். 2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகள் மூலம் திரட்டப்பட்ட வருமானமாக ரூபா 341.1 பில்லியன் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் ரூபா 349.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில், இவ் 2.5 சதவீத

வீழ்ச்சிக்கு இறக்குமதித் தொகுதியில் மோட்டார் வாகனங்கள் மற்றும் பிற ஆடம்பர பொருட்கள் போன்ற இறக்குமதிகளுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் தொடர்ச்சி காரணமாக அமைந்தது. விசேட வியாபாரப் பண்ட அறவீடு மற்றும் இறக்குமதி வரிகள் மூலம் ஈட்டப்பட்ட வருவாய் 2022 ஆம் ஆண்டில் முறையே 28.0 சதவீதத்தினால் குறைந்து ரூபா 40.2 பில்லியனாகவும் மற்றும் 22.3 சதவீதத்தினால் குறைந்து ரூபா 50.0 பில்லியனாகவுமிருந்தது.

வரைபு 4.1 | அரசாங்க வருமானம்



மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

அட்டவணை 4.5 | அரசாங்க வருமானம்

ரூபா.மில்லியன்

விடயம்	2018	2019	2020	2021	2022 (அ)
வரி வருமானம்	**1,712,318**	**1,734,925**	**1,216,542**	**1,298,019**	**1,751,132**
வருமான வரி	310,449	427,700	268,249	302,115	534,021
பெ.சே.வரி	461,651	443,877	233,786	308,213	463,072
தே.க.வரி	71,357	70,672	2,351	434	413
உற்பத்தி வரி	484,242	399,478	321,932	306,861	342,523
இறக்குமதித் தீர்வைகள்	96,991	98,427	114,183	64,339	50,009
துறைமுக மற்றும் விமானநிலைய அறவீடு	113,950	112,174	115,442	154,125	180,595
விசேட நுகர்வு அறவீடு	75,807	70,364	82,709	55,828	40,194
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு	–	–	–	–	36,111
ஏனையவை	97,872	112,233	77,890	106,104	104,194
வரியல்லாத வருமானம்	**207,656**	**155,974**	**151,417**	**159,052**	**228,052**
வட்டி/ வாடகை	13,731	18,547	19,351	11,556	13,188
இலாபம் மற்றும் பங்கிலாப்கள்	41,828	27,857	17,624	30,591	28,092
விற்பனை மற்றும் அறவீடுகள்	105,202	73,884	47,370	42,645	90,050
சமூகப் பாதுகபப்பு பங்களிப்பு	25,215	28,985	32,417	34,619	37,416
மத்திய வங்கி இலாப மாற்றல்கள்	15,000	–	24,009	15,012	30,007
ஏனையவை	6,681	6,701	10,646	24,630	29,300
மொத்த வருமானம்	**1,919,973**	**1,890,899**	**1,367,960**	**1,457,071**	**1,979,184**
மொ.உ.உ. %					
வரி வருமானம்	**11.2**	**10.9**	**7.8**	**7.4**	**7.3**
வருமான வரி	2.0	2.7	1.7	1.7	2.2
பெ.சே.வரி	3.0	2.8	1.5	1.8	1.9
தே.க.வரி	0.5	0.4	0.0	0.0	0.0
உற்பத்தி வரி	3.2	2.5	2.1	1.7	1.4
இறக்குமதித் தீர்வைகள்	0.6	0.6	0.7	0.4	0.2
துறைமுக மற்றும் விமானநிலைய அறவீடு	0.7	0.7	0.7	0.9	0.7
விசேட வியாபாரப் பண்ட அறவீடு	0.5	0.4	0.5	0.3	0.2
ஏனையவை	-	-	-	-	0.1
வரியல்லா வருமானம்	0.6	0.7	0.5	0.6	0.4
வட்டி/வாடகை	**1.4**	**1.0**	**1.0**	**0.9**	0.9
இலாபம் மற்றும் பங்கிலாபங்கள்	0.1	0.1	0.1	0.1	0.1
விற்பனை மற்றும் அறவீடுகள்	0.3	0.2	0.1	0.2	0.1
சமூகப் பாதுகபப்பு பங்களிப்பு	0.7	0.5	0.3	0.2	0.4
மத்திய வங்கி இலாப மாற்றல்கள்	0.2	0.2	0.2	0.2	0.2
மொத்த வருமானம்	-	-	-	-	0.1
மொத்த வருமானம்	**12.5**	**11.9**	**8.7**	**8.3**	**8.2**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது
- புறக்கணிக்கத்தக்கது
- தகவல் இல்லை

4.3.1 வரி வருமானம்

பெயரளவு நியதிகளில், வரி வருமானமானது 2021 ஆம் ஆண்டில் ரூபா 1,298.0 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 1,751.1 பில்லியனாக அதிகரித்த அதேவேளை வரி வருமானம், 2021 ஆம் ஆண்டில் 7.4 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டாலும் 2022 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி சதவீதத்தில் 7.3 சதவீதமாக 0.1 சதவீதப் புள்ளிகளினால் சரிவடைந்தது. மொத்த வருவாயில் வரி வருமானத்தின் பங்கு 2021 ஆம் ஆண்டில் 89.1 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 88.5 சதவீதமாக மிதமானளவில் குறைந்துள்ளது. ஒரு தடவை அறவிடப்படும் மிகைக்கட்டண வரி மற்றும் நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வரிகளிலிருந்து அதிக வருமானம் சேகரிப்பட்டதன் தாக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில் 2022 ஆம் ஆண்டில் வருமான வரி வருமானம் ரூபா 534 பில்லியனினைப் பதிவுசெய்தது. 2021 ஆம் ஆண்டில் பதிவாகிய ரூபா 302.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 76.8 சதவீதத்தினாலான அதிகரிப்பாகும். பெறுமதி சேர் வரியின் வருமானம் 50.2 சதவீதம் அதிகரித்து ரூபா 463.0 பில்லியனினையும் உற்பத்தி வரிகள் 11.6 சதவீதம் அதிகரித்து ரூபா 342.5 பில்லியனினையும் பதிவுசெய்தமையால் பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான வரி வருமானத்தினைப் பொறுத்தவரை, 35.6 சதவீதம் அதிகரித்தமையால் 2021 ஆம் ஆண்டில் ரூபா 646 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 876 பில்லியனினை அடையப்பெற்றது. இருப்பினும், வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான வரி மூலம் திரட்டப்பட்ட வருமானம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 349.8 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 341.1 பில்லியன் வரை 2.5 சதவீதத்தினால் சரிந்தது. 2022 ஆம் ஆண்டில் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு வருமானம் ரூபா 40.2 பில்லியன் வரை 28.0 சதவீதத்தினாலும் சுங்க இறக்குமதித் தீர்வை வருமானம் ரூபா 50.0 பில்லியன் வரை 22.3 சதவீதத்தினாலும் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தமையே இதற்குக் காரணமாகும்.

வரைபு 4.2 | வரி வருமானத்தின் வகுதி - 2022



மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

அட்டவணை 4.6 | அரசாங்க வரி வருமானம் - மூலம் அடிப்படையில்

மூலம்	2021	ரூபா.மில்லியன் 2022(அ)	2022/2021 மாற்றம் (%)
வருமான வரி	**302,115**	**534,021**	**76.8**
உள்நாட்டு நுகர்வு அடிப்படை வரிகள்	**419,264**	**590,275**	**40.8**
பெ.சே.வரி - உள்நாட்டு	185,462	291,619	57.2
தேச கட்டுமான வரி - உள்நாட்டு	355	352	-0.8
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு - உள்நாட்டு	–	23,358	
மதுபானம் மீதான வரி	138,637	165,188	19.2
சிகரெட்டு அல்லது புகையிலை மீதான வரி	88,576	104,160	17.6
ஏனையவை (உற்பத்தி)	6,234	5,598	-10.2
இறக்குமதி அடிப்படை வரிகள்	**546,117**	**592,960**	**8.6**
இறக்குமதி வரிகள்	64,339	50,009	-22.3
பெ.சே.வரி - இறக்குமதி	122,751	171,452	39.7
தே.க.வரி - இறக்குமதி	79	61	-22.8
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு - இறக்குமதி	–	12,753	
து.வி.நி.அி அறவீடு	154,125	180,595	17.2
வி.வி.பண்ட அறவீடு	55,828	40,194	-28.0
செஸ் வரி	75,543	70,318	-6.9
பெற்றோலியம் உற்பத்தி	55,339	53,074	-4.1
மோட்டார் வாகனங்கள் - உற்பத்தி	18,113	14,504	-19.9
உரிமம் மற்றும் ஏனையவை	**30,523**	**33,876**	**11.0**
தொலைத்தொடர்பாடல் அறவீடு	12,840	14,995	16.8
ஏனையவை	17,683	18,881	6.8
மொத்த வரி வருமானம்	**1,298,019**	**1,751,132**	**34.9**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

வருமான வரிகள்

நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வரிகள், மிகைக்கட்டண வரி, வட்டி மீதான வரி மற்றும் மூலதன ஈட்டுகை வரி ஆகியவற்றின் வருமான அதிகரிப்புடன் வருமான வரிகளினால் மொத்த வருமானமானது 2021 ஆம் ஆண்டில் ரூபா 302.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 76.8 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 534.0 பில்லியனினைப் பதிவுசெய்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வருமான வரி வருமானம் 2021 ஆம் ஆண்டில் 1.7 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 2.2 சதவீதமாக அதிகரித்துள்ளது. வரி வருமானத்தின் சதவீதமாக வருமான வரி வருமானம் 2021 ஆம் ஆண்டில் 23.3 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 30.5 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டில் வருமான வரி வருமானம் 95.7 சதவீதமாக இருந்தது. நிறுவனம் மற்றும் நிறுவனமல்லாத வரிகளின் வருமானம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 272.8 பில்லியனிலிருந்து 31.4 சதவீதத்தினால் அதிகரித்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 358.5 பில்லியனினைக் கொண்டிருந்தது. நிறுவன வரி வருமானமானது மிகைக்கட்டண வரி விதிப்பின் ஊடாக மேலதிக வருமானமாக ரூபா 120.7 பில்லியனினைச் சேகரித்தமையால், அவ்வருமானம் 83.8 சதவீதத்தினால் ரூபா 464.4 பில்லியன் வரை அதிகரித்தது. உழைக்கும்போது செலுத்தும் வரி/ முற்பண தனியாள் வருமான வரியானது, 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 15.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில், தனியார் துறையில் இடம்பெற்ற சம்பள உயர்வு காரணமாக 2022 ஆம் ஆண்டில் 66.4 சதவீதம் கணிசமாக அதிகரித்து ரூபா 25.5 பில்லியனாகக் காணப்பட்டது. வட்டி மீதான வரி வருமானம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 12.4 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 59.9 சதவீதம் கணிசமாக அதிகரித்து ரூபா 19.8 பில்லியனாகவும், மூலதன ஈட்டுகை வரி வருமானம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 0.7 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 5.3 பில்லியனாகவும் அதிகரித்தது. இதற்கிடையில், 2021, செத்தெம்பர் 15 முதல் 2022 மாச்சு 31 வரை நடைமுறையிலுள்ளவாறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வெளிப்படுத்தப்படாத நிதிகள் மற்றும் சொத்து மீதான முதலீட்டின் பெறுமதியில் 1.0 சதவீதம் என்ற விகிதத்தில் தன்னார்வ வெளிப்படுத்தல் மீதான வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானமாக 2022 ஆம் ஆண்டில் ரூபா 4.0 பில்லியன் சேகரிக்கப்பட்டது.

பெறுமதி சேர் வரி

நிதிச் சேவைகள் மீதான விகிதம் 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாகவும், நிலையான விகிதம் 8 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகவும் அதிகரித்தமையால் பெயரளவு நியதிகளில், பெறுமதி சேர் வரியின் வருமானமானது 2022 ஆம் ஆண்டில் ரூபா 463 பில்லியனினைப் பதிவுசெய்தது. இது 2021 ஆம் ஆண்டில் ரூபா 308 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 50.2 சதவீதத்தினாலான கணிசமான அதிகரிப்பாகும். 2022 ஆம் ஆண்டில், உள்நாட்டு நடவடிக்கைகளின் மீதான பெறுமதி சேர் வரி வருமானம் 57.2 சதவீதம் அதிகரித்து ரூபா 291.6 பில்லியனாக இருந்த அதேவேளையில், இறக்குமதி மூலம் பெறப்பட்ட பெறுமதி சேர் வரி வருமானம் 39.7 சதவீதம் அதிகரித்து ரூபா 171 பில்லியனினைக் கொண்டிருந்தது. இருப்பினும், இறக்குமதி சுருக்கத்தின் காரணமாக இறக்குமதியிலேற்பட்ட சரிவின் விளைவாக இறக்குமதி தொடர்பான பெறுமதி சேர் வரி மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தினை விட வருமானத்தின் தேறலானது மதிப்பீட்டில் 86.9 சதவிகிதத்தினையே பதிவுசெய்தது. மொத்த வரி வருமானத்தின் சதவீதமாக பெறுமதி சேர் வரி வருமானம் 2021 ஆம் ஆண்டில் 23.7 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 26.4 சதவீதமாக அதிகரித்த அதே நேரத்தில், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக பெறுமதி சேர் வரி வருமானம் 2021 ஆம் ஆண்டில் 1.8 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 1.9 சதவீதமாக மிதமாக அதிகரித்தது.

அட்டவணை 4.7 | பெறுமதிசேர் வரி வருமானம்

ரூபா.மில்லியன்

விடயம்	2017	2018	2019	2020	2021	2022(அ)
உள்நாட்டு	276,065	283,327	275,089	150,823	185,918	292,293
இறக்குமதிகள்	168,394	179,163	169,914	85,727	122,766	171,478
மொத்த வருமானம்	**444,459**	**462,490**	**445,003**	**236,550**	**308,684**	**463,771**
மீளளிப்புக்கள்	720	840	1,126	2,764	471	699
தேறிய வருமானம்	**443,739**	**461,651**	**443,877**	**233,786**	**308,213**	**463,072**
மொ.உ.உ % இல் தேறிய வருமானம்	**3.1**	**3.0**	**2.8**	**1.5**	**1.8**	**1.9**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு

சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடானது, 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தின் கீழ் 2022, ஒற்றோபர் 1 ஆம் திகதி முதல் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் உற்பத்தியாளர், மொத்த விற்பனையாளர், சில்லறை விற்பனையாளர் அல்லது சேவை வழங்குநரின் ஆண்டொன்றிற்கு ரூபா 120 மில்லியனினை விஞ்சும் வரிவிதிக்கத்தக்க புரள்வு மீது 2.5 சதவிகிதம் என்ற விகிதத்தில் விதிக்கப்பட்டது. மற்றும் ஏதேனும் இறக்குமதியாளரும் 2.5 சதவீத விகிதத்தில் சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டினை செலுத்துதல் வேண்டும்.

2022 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டு வருமானம் ரூபா 36.1 பில்லியனாகக் காணப்பட்டதுடன் சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு - உள்நாட்டு மற்றும் சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு - இறக்குமதி ஆகியவை முறையே ரூபா 23.3 பில்லியனினையும் ரூபா 12.7 பில்லியனினையும் பதிவுசெய்தது.

அட்டவணை 4.8 | மதுபானத்தின் மீதான உற்பத்தி வரிகளின் திருத்தங்களின் அமைப்பு முறை

ரூபா.மில்லியன

மதுபான வகைகள்	முந்திய தீர்வை ஒரு நிகர லீற்றருக்கு (ரூபா) (2023, சன. 03 இற்கு முந்தைய)	புதிய தீர்வை ஒரு நிகர லீற்றருக்கு (ரூபா) (2023.01.03 அன்று அல்லது அதற்குப் பிறகு முதல்)	அதிகரிப்பு வீதம்
விசேட சாராயம்	4,180	5,000	20
கரும்புச் சக்கைகள்/பனை/தென்னை சாராயம்	4,460	5,350	
உள்நாட்டில் தயாரிக்கும் வெளிநாட்டு சாராயம்	4,570	5,500	
பியர் (செறிவு - 5% குறைந்தது)	3,300	3,960	
செறிவு கூடிய பியர் (செறிவு - சமனானது/5 மூற்கு கூடியது)	3,450	4,150	
வைன்	3,300	3,960	
சைடர் மதுபானம்	–	3,000	

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

உற்பத்தித் தீர்வை

மதுபானம் மற்றும் மதுபானம் சார்ந்த பொருட்களுக்கான பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் முகாமை முறையின் முழுமையான நடைமுறைப்படுத்தல் மற்றும் 2021, நவம்பரில் அந்தந்த வரி விகிதங்கள் திருத்தப்பட்டதையடுத்து ஏற்பட்ட மதுபானம் மற்றும் சிகரெட்டுகளின் வருமான அதிகரிப்பு காரணமாக, பெயரளவு நியதிகளில் மது வரித் தீர்வைகளின் வருமானம் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. எவ்வாறாயினும், முக்கியமாக இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் வழங்கல் இடையூறுகள் போன்றவை 2022 ஆம் ஆண்டில், மோட்டார் வாகனங்கள், பெற்றோலியப் பொருட்கள் மற்றும் பிற சுத்திகரிக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதியிலிருந்தான வருமான சேகரிப்பு குறைவதற்கு வழிவகுத்துள்ளன.

அட்டவணை 4.9 | மதுவரி வருமானம்

ரூபா.மில்லியன்

விடயம்	2017	2018	2019	2020	2021	2022 (a)	மாற்றம் (%) 2021/2022
மதுபானம்	113,684	113,944	115,443	120,990	138,637	165,188	19.2
சிகரெட்	85,956	92,198	87,367	94,345	88,539	104,160	17.6
மோட்டார் வாகனம்	189,740	204,081	130,378	48,760	18,113	14,504	-19.9
பெற்றோலிய உற்பத்திகள்	73,983	66,318	61,740	53,111	55,339	53,074	-4.1
ஏனைய	6,091	7,701	4,549	4,727	6,234	5,598	-10.2
மொத்தம்	**469,454**	**484,242**	**399,478**	**321,932**	**306,861**	**342,523**	**11.6**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக உற்பத்தித் தீர்வைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் 2021 ஆம் ஆண்டில் 1.7 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 1.4 சதவீதமாகக் குறைந்துள்ளது. இது சர்வதேச சராசரியான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4-5 சதவீதத்தை விட மிகக் குறைவாக உள்ளதுடன் இது உற்பத்தித் தீர்வை வருமானத்தினை மேலும் அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தைப் பிரதிபலிக்கிறது. அதே வகையில், பெயரளவு நியதிகளில் உற்பத்தித் தீர்வைகளின் வருமானம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 306.9 பில்லியனிலிருந்து 11.6 சதவீதம் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 342.5 பில்லியனினைப் பதிவுசெய்துள்ளது. மேலும், உற்பத்தித் தீர்வைகளின் வருமானப் பங்களிப்பு 2021 ஆம் ஆண்டில் 23.6 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் மொத்த வரி வருவாயில் 19.6 சதவீதமாகக் குறைந்துள்ளது. உற்பத்தித் தீர்வை மூலம் கிடைக்கும் வருமானம்

பல ஆண்டுகளாக அரசாங்க வருமானத்தின் முக்கிய ஆதாரங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. 2022 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாயில் உற்பத்தித் தீர்வை சேகரிப்பு 91.6 சதவீதமாக இருந்தது.

வரைபு 4.3 | மதுபான உற்பத்தி மற்றும் மதுவரி வருமானம்



மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம்

குறிப்பு : 2017 இன் பின்னர் மதுபான உற்பத்தியானது நிகர தொகையில்

மதுபானங்கள் மீதான மதுவரித் தீர்வை மூலம் சேகரிக்கப்பட்ட வருமானம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 138.6 பில்லியனாகக் காணப்பட்டதெனினும் 2022 ஆம் ஆண்டில் 19.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்து ரூபா 165.2 பில்லியனினைக் கொண்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில் 37.5 மில்லியன் நிகர லீற்றராக இருந்த மதுபான உற்பத்தி 2022 ஆம் ஆண்டில் 41.2 மில்லியன் நிகர லீற்றராக 9.9 சதவீதத்தினால் அதிகரித்தது. மதுபானம் மற்றும் மதுபானம் சார்ந்த பொருட்களிலிருந்து இலக்கு வருவாயை அதிகரிக்க மதுவரி திணைக்களத்தின் பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் முகாமை முறையிலுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு முறையான கண்காணிப்பு அமைப்பொன்றிற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது.

மோட்டார் வாகனங்களுக்கான உற்பத்தித் தீர்வையானது, 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 18.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில், நாணய மாற்று விகிதத்தின் மீதுள்ள அழுத்தத்தைக் குறைப்பதற்காக 2020, மே 22 ஆம் திகதி முதல் நடைமுறையிலிருந்த மோட்டார் வாகனங்களின் தொடர்ச்சியான குறைப்பு காரணமாக 2022 ஆம் ஆண்டில் 19.9 சதவீதம் வீழ்ச்சியடைந்து ரூபா 14.5 பில்லியனினைக் கொண்டிருந்தது.

இதற்கிடையில், 2021 ஆம் ஆண்டில் ரூபா 88.5 பில்லியனுடன் ஒப்பிடும்போது, சிகரெட் விற்பனை வருமானம் 2021, நவம்பர் 12 ஆம் திகதியன்று சிகரெட் மீதான உற்பத்தி தீர்வையை உயர்த்தியதன் காரணமாக 2022 ஆம் ஆண்டில் 17.6 சதவீதத்தினால் ரூபா 104.1 பில்லியன் வரை அதிகரித்தது. அதற்கிணங்க, சிகரெட் விற்பனையானது 2022 ஆம் ஆண்டில் 2,828.7 மில்லியன் குச்சிகளாக இருந்தது. இது 2021 ஆம் ஆண்டில் ரூபா 2,384.1 மில்லியன் குச்சிகளுடன் ஒப்பிடும்போது, 18.6 சதவீத அதிகரிப்பாகும்.

அட்டவணை 4.10 | மதுபானம், சிகரெட்டுகளிலிருந்து உற்பத்தி, மதுவரி சேகரிப்பு

	உற்பத்தி செய்யப்பட்ட அளவு						உற்பத்தி வரி வருமானம்			
ஆண்டு	வன் மதுபானம் (லீற்றர் மில்.)	மாற்றம் %	மாவூறல் மதுபானம் (லீற்றர் மில்.)	மாற்றம் %	சிகரெட் கூறுகளின் எண். மில்)	மாற்றம் %	மதுபானம் (ரூபா.பில்)	மாற்றம் %	சிகரெட் (ரூபா.பில்)	மாற்றம் %
2014	43.9	-0.6	124.5	3.6	3,777	-6.4	69.1	4.6	57.2	-2.3
2015	51.8	17.9	125.8	1.0	4,116	9.0	105.9	53.3	80.0	39.9
2016	55.6	7.3	52.2	-58.5	3,789	-7.9	120.8	14.1	88.8	11.0
2017	46.9	-15.5	71.1	36.3	3,149	-16.9	113.7	-5.9	86.0	-3.2
2018	25.3 [a]	-46.1	11.4 [a]	-84.0	3,150	0.0	113.9	0.2	92.2	7.2
2019	24.7	-2.4	19.1	67.9	2,622	-16.8	115.4	1.3	87.4	-5.2
2020	22.0	-10.9	11.4	-40.4	2,287	-12.8	121.0	4.9	94.3	8.0
2021	25.0	13.6	12.5	9.6	2,384	4.3	138.6	14.6	88.5	-6.2
2022	27.0	8.0	14.1	12.8	2,829	18.7	165.2	19.2	104.2	17.6

மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம், இலங்கை சுங்கத் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம்

(அ) 2017 இன் பிறகு வன்மதுபான மற்றும் மாவூறல் மதுபானம் நிகர லீற்றரில்

வரைபு 4.4 | சிகரெட் உற்பத்தி மற்றும் உற்பத்தித் தீர்வை வருமானம்



மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம்

2021 ஆம் ஆண்டில் ரூபா 55.3 பில்லியன், பெற்றோலியப் பொருட்களின் மூலம் கிடைத்த வருமானம் 2022 ஆம் ஆண்டில் 4.1 சதவீதம் சற்று குறைவடைந்து ரூபா 53.1 பில்லியனாகக் காணப்பட்டது. சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் மசகெண்ணெய் இறக்குமதி ஆகியவை முறையே 13.8 சதவீதத்தினாலும் 45.1 சதவீதத்தினாலும் சரிவடைந்து அரிதாகவுள்ள எரிபொருளை நியாயமான முறையில் பங்கீடு செய்வதற்கு QR முறையில் ஒதுக்கீட்டுத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

மேலும், அத்தியாவசியமற்ற பொருட்களுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடு காரணமாக இனிப்புப் பானங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், பாம் எண்ணெய் மற்றும் கொழுப்பமிலம் போன்ற பிற உற்பத்தித் தீர்வை விதிக்கத்தக்க பொருட்களிலிருந்து உருவாக்கப்பட்ட உற்பத்தித் தீர்வை வருமானம், 2021 ஆம் ஆண்டின் ரூபா 6.2 பில்லியனினை விட 10.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 2022 ஆம் ஆண்டில் 5.6 பில்லியனாகக் காணப்பட்டது.

சுங்க இறக்குமதித் தீர்வை

அத்தியாவசியமற்ற பொருட்களின் மீதான தொடர்ச்சியான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக சுங்க இறக்குமதித் தீர்வையின் வருமானம் 2021 ஆம் ஆண்டில் 64.3 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 50.0 பில்லியன் வரை 22.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பெற்றோல் 92 மற்றும் 95, பூச்சு எண்ணெய்கள், சூப்பர் டீசல் மற்றும் பிற டீசல் ஆகியவை 2022 ஆம் ஆண்டில் சுங்க இறக்குமதித் தீர்வையில் மிகப்பெரிய பங்களிப்பினை ஆற்றியுள்ளன. இருப்பினும், சுங்க இறக்குமதித் தீர்வை வருமானத் திரட்டல், திருத்தப்பட்ட மதிப்பீடாகிய ரூபா 42 பில்லியனில் 119.1 சதவீதமாக இருந்தது.

விசேட வியாபாரப் பண்ட அறவீடு

விசேட வியாபாரப் பண்ட அறவீட்டின் வருமான சேகரிப்பானது 2021 ஆம் ஆண்டில் ரூபா 55.8 பில்லியனிலிருந்து 28 சதவீதம் கணிசமாகக் குறைந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 40.2 பில்லியனாகக் காணப்பட்டது. சீனி மற்றும் பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கான பெயரளவு நியதிகளில் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு விகிதங்களைத் தொடருதல், உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் போன்ற பிற அத்தியாவசியப் பொருட்களின் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு விகிதங்கள் அவ்வப்போது குறைக்கப்பட்டமை மற்றும் இறக்குமதியின் அளவில் ஒட்டுமொத்தச் சரிவு ஆகியவையே இதற்கான முக்கிய காரணமாகும். எவ்வாறாயினும், விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு வருவாயின் தேறல் திருத்தப்பட்ட மதிப்பீடாகிய ரூபா 35 பில்லியனில் 114.8 சதவீதமாக இருந்தது.

துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு

துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டின் மூலம் 2021 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற ரூபா 154.1 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில் கிடைத்த வருமானம் 17.2 சதவீதத்தினால் அதிகரித்து, ரூபா 180.6 பில்லியனினைப் பதிவுசெய்துள்ளது. இந்த வருடத்தில் இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியின் தாக்கத்தினால் ஒட்டோ டீசல், பெற்றோல் (92 ஒக்ரேன்), யூரியா, கோதுமை மா மற்றும் கோதுமை தானியம் போன்ற முக்கிய இறக்குமதிப் பொருட்களிலிருந்து கிடைத்த வருமான அதிகரிப்பே இதற்கு முக்கிய காரணமாகும். துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டின் வருமானத்தின் தேறல் 2022 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட மதிப்பீடாகிய ரூபா 177 பில்லியனில் 102 சதவீதமாகும்.

பண்ட ஏற்றுமதி மானியத் திட்ட அறவீடு (செஸ்)

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆகிய இரண்டிலிருந்தும் உருவாக்கப்பட்ட செஸ் அறவீட்டின் வருமானம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 75.5 பில்லியனாகக் காணப்பட்டபோதிலும், அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் கட்டுப்பாடான கொள்கை நடவடிக்கைகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிகளில் விளிம்பு வைப்புத் தேவைகள் விதிக்கப்பட்டதன் காரணமாக உருவாகிய இறக்குமதியின் வீழ்ச்சி காரணமாக 2022 ஆம் ஆண்டில் ரூபா 70.3 பில்லியன் வரை 6.9 சதவீதத்தினால் குறைவடைந்தது. அதற்கிணங்க, இறக்குமதி மீதான செஸ் அறவீட்டின் மூலம் சேகரிக்கப்பட்ட வருமானமானது 2021 ஆம் ஆண்டில் ரூபா 73.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 7.1 சதவீதத்தினால் சரிந்து 2022 ஆம் ஆண்டில் 68.1 பில்லியனினைப் பதிவுசெய்தது. பூச்சு எண்ணெய்கள் (அடிப்படை எண்ணெய்கள்) தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மசகு எண்ணெய்கள் 2022 ஆம் ஆண்டில் இறக்குமதி செஸ் வருமானத்தில் மிகப்பெரிய பங்களிப்பினையளித்தன. மேலும், பீடி இலைகள், ரயர்கள், நெய்த துணிகள் மற்றும் போர்ட்லண்ட் சீமெந்து ஆகியவை செஸ் வருமானத்திற்கான மற்ற முக்கிய

வருவாய் மூலங்களாகக் காணப்பட்டன. ஏற்றுமதி மீதான செஸ் வருமானம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 2.22 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 2.24 பில்லியனாக மாத்திரமே அதிகரித்துள்ளது. ஆகக் கூடிய செஸ் ஏற்றுமதி வருமானமானது தேயிலை, இல்மனைட், தேங்காய், கிரனைட் மற்றும் வெளிர் க்ரீப் இரப்பர் போன்றவற்றின் மூலம் ஈட்டப்பட்டது. செஸ் வருமானத்தின் தேறல் 2022 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடாகிய ரூபா 68 பில்லியனில் 103.4 சதவீதமாகும்.

அட்டவணை 4.11| சர்வதேச வர்த்தகத்திலிருந்தான செஸ் வரி வருமானம் மற்றும் விவசாயத்துறை அபிவிருத்திக்கான அரசாங்க மானியம் : 2020-2022

ரூபா.மில்லியன்

விபரம்	2020	2021	2022(அ)	விபரம்	2020	2021	2022(அ)
ஏற்றுமதிகள் மீதான செஸ்வரி	**1,775**	**2,223**	**2,243**	**வர்த்தகப் பயிர் அபிவிருத்தி**	**39,595**	**24,056**	**64,074**
தேயிலை- தேயிலை (வரியும் ஏற்றுமதிக் கட்டுப்பாடும்) இலங்கை தேயிலைச் சபைச் சட்டம் என்பவற்றின் கீழ்	408	482	465	தேயிலை	737	1,177	462
இறப்பர்- இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டத்தின் கீழ்	7	8	10	இறப்பர்	823	897	652
தெங்கு- தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் கீழ்	196	180	189	தெங்கு	734	322	213
ஏ.அ.ச. செஸ்- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ்	1,164	1,553	1,579	மரமுந்திரிகை	85	64	29
இறக்குமதிகள் மீதான செஸ் வரி	**47,534**	**73,320**	**68,076**	சிறு ஏற்றுமதிப் பயிர்கள் (கறுவா, கொக்கோ, கோப்பி.மிளகு)	529	361	241
இறக்குமதிகள் - இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ்	47,534	73,320	68,076	மொத்த விவசாயத்துறை அபிவிருத்திக்கான உர மானியம்	36,687	21,235	62,477
மொத்தம்	**49,309**	**75,543**	**70,318**	**மொத்தம்**	**39,595**	**24,056**	**64,074**

மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம் மற்றும் தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

ஏனைய வரிகள்

தொலைதொடர்பு அறவீடு : 2022 ஆம் ஆண்டில் தொலைத்தொடர்பு அறவீடு மூலம் கிடைத்த வருமானம் ரூபா 15.0 பில்லியனாகும். இத்தொகையானது 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 12.8 பில்லியனுடன் ஒப்பிடும்போது 16.8 சதவீத மிதமான அதிகரிப்பாகும். 11.25 சதவீதமாக இருந்த தொலைத்தொடர்பு அறவீடு 2022 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் 15 சதவீதமாக அதிகரித்தது தொலைத்தொடர்பு சேவைகளின் ஒட்டுமொத்த அதிகரிப்பும் இதற்குப் பங்களித்துள்ளது.

புறப்படுகை அறவீடு : புறப்படுகை அறவீட்டிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானமானது, இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியில் ஏற்பட்ட சாதகமான தாக்கத்துடன், கொவிட்-19 பயணக் கட்டுப்பாடுகளின் நீக்கத்தின் மூலம் சர்வதேசப் பயணங்களின் அதிகரிப்பின் பயனாக, 2022 ஆம் ஆண்டில் ரூபா 22.2 பில்லியனினைப் பதிவு செய்தது. இந்தப் பாரிய அதிகரிப்பு 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 3.3 பில்லியனினை விட 570 சதவீதம் அதிகமானதாகும்.

பந்தயம்பிடித்தல் மற்றும் சூதாடுதல் அறவீடு: 2021 ஆம் ஆண்டில் ரூபா 1.9 பில்லியனாகப் பதிவுசெய்யப்பட்ட பந்தயம்பிடித்தல் மற்றும் சூதாடுதல் அறவீட்டின் மூலமான வருமானமானது சுற்றுலா மற்றும் பயணம் தொடர்பான நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கப்பட்டதன் விளைவாக, 2022 ஆம் ஆண்டில் ரூபா 5.2 பில்லியனாக 170.5 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. சீட்டாட்டத்தொழில்துறையை நெறிப்படுத்துவதற்காக, 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ், கேசினோ நடத்துபவர்களை கட்டாயமாக பதிவு செய்யும் வகையில் வர்த்தமானி அறிவித்தலொன்றில் ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டன.

4.3.2 வரியல்லாத வருமானம்

பெயரளவு நியதிகளில், வரி அல்லாத வருமானமானது 2021 ஆம் ஆண்டில் ரூபா 159 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 228.1 பில்லியனாக 43.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இது பல்வேறு சேவைக் கட்டணங்களின் அதிகரிப்பின் விளைவாக 2021 ஆம் ஆண்டில் ரூபா 42.6 பில்லியனாகப் பதிவுசெய்யப்பட்ட விற்பனைகளும் கட்டணங்களும் 2022 ஆம் ஆண்டில் ரூபா 90 பில்லியன் வரை 111.2 சதவீதத்தினால் அதிகரித்ததன் பிரதிபலிப்பாகும். கடவுச்சீட்டுக்கான கட்டணங்கள் மற்றும் விசா கட்டணம், வாகனங்களின் பதிவுக் கட்டணம் மற்றும் வருவாய் உரிமக் கட்டணம் உள்ளடங்கலாக,

ஏனைய பிற கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வரி அல்லாத வருமானம் 0.9 சதவீதமாக மாறாமல் இருந்தது. வாடகை வருமானம் மற்றும் வட்டி வருமானத்திலிருந்து வரி அல்லாத வருமானம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 11.6 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 13.2 பில்லியன் வரை 14.1 சதவீதத்தினால் அதிகரித்தது. மத்திய வங்கியின் இலாபப் பரிமாற்றல்கள் 2021 ஆம் ஆண்டில் ரூபா 15.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 30 பில்லியனாகவும், சமூகப் பாதுகாப்பு உதவுதொகைகளின் வருமானம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 34.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 8.1 சதவீதத்தினால் அதிகரித்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 37.4 பில்லியனாகவும் அதிகரித்தது. திறைசேரி முறி முதிர்வுகளின் வருமானம் உட்பட வரி அல்லாத வருமானத்தின் பிற மூலங்கள் 2021 ஆம் ஆண்டில் ரூபா 24.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 29.3 பில்லியன் வரை 19 சதவீதத்திலான அதிகரிப்பினைப் பெற்றிருந்தது.

அட்டவணை 4.12 | வரியல்லாத வருமானம்

ரூபா.மில்லியன்

விடயம்	2021	2022 (அ)	2021/2022 (% மாற்றம்)	2022 (மொத்த வரியல்லாத வருமானம் %)
வட்டி / வாடகை	11,556	13,188	14.1	5.8
இலாபங்கள், பங்கிலாபங்கள்	30,591	28,092	-8.2	12.3
விற்பனைகள் / அறவீடுகள்	42,645	90,050	111.2	39.5
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு	34,619	37,416	8.1	16.4
மத்திய வங்கி இலாப மாற்றல்கள்	15,012	30,007	99.9	13.2
ஏனையவை	24,630	29,300	19.0	12.8
மொத்தம்	**159,052**	**228,052**	**43.4**	**100.0**

மூலம் : திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம், அரச கணக்குகள் திணைக்களம், அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

அட்டவணை 4.13 | அரசாங்க வருமானத்தின் விலகல் பகுப்பாய்வு

ரூபா பில்லியன்

விடயம்	2021	2022 மதிப்பீடு	2022	காரணங்கள்
வருமான வரிகள்	302.1	558	534	வருமான வரிகளிலிருநது வருவாய் சேகரிப்பானது 2021 அம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 302.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 76.8 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 534.0 பில்லியனைப் பதிவுசெய்தது. இத்தொகை 2022 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டின் 95.7 சதவீத தேறலாகும். இது முக்கியமாக 2022 ஆம் ஆண்டில் ஒரே தடவை அறவிடப்படும் அறவீடாக அறிமுகப்படுத்தப்பட்ட மிகைக் கட்டண வரியிலிருந்து அடையப்பெற்ற ரூபா 120.7 பில்லியன் வருமானம் உள்ளடங்கலாக நிறுவனம் மற்றும் நிறுவனமல்லாத வரி வருமானத்தின் ரூபா 272.8 பில்லயனிலிருந்து ரூபா 358.5 வரை 31.4 சதவீத அதிகரிப்பின் காரணமாக ஏற்பட்டதாகும். மேலும் 2021, செத்தெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்ட தன்னார்வ வெளிப்பாடு மீதான வரியிலிருந்து அடையப்பெற்ற ரூபா 4.0 பில்லியன் வருமானமும் இதற்கு சாதகமான பங்களிப்பினை வழங்கியுள்ளது. அத்துடன் உழைக்கும்போது செலுத்தும் வரி/மேம்படுத்தப்பட்ட தனியாள் வருமான வரியும் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது ரூபா 15.4 பில்லியனில் இருந்து ரூபா 25.5 பில்லியன் வரை 66.4 சதவீதத்தினாலும் வட்டி மீதான வரி வருமானம் ரூபா 12.4 பில்லியனிலிருந்து ரூபா 19.8 பில்லியன் வரை 59.9 சதவீதத்தினாலும் கணிசமானளவு அதிகரித்துள்ளது. மேலும், 2022 ஆம் ஆண்டில் மூலதன ஈட்டுகை வரியானது ரூபா 668 மில்லியனிலிருந்து ரூபா 5.3 பில்லியனாக 695.9 சதவீதத்தினால் அதிகரித்தது.

அட்டவணை 4.13 | அரசாங்க வருமானத்தின் விலகல் பகுப்பாய்வு

ரூபா பில்லியன்

விடயம்	2021	2022 மதிப்பீடு	2022	காரணங்கள்
பெறுமதி சேர் வரி	308.2	533	463	2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது பெறுமதி சேர் வரி வருமானம் 2022 ஆம் ஆண்டில் 50.2 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்து ரூபா 463.1 பில்லியனைக் கொண்டிருந்தது. இது 2022 ஆம் ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி சேர் வரி வருமானத்தின் 86.9 சதவீத தேறலாகும். இவ்வருமானச் செயலாற்றுகைக்கு, முக்கியமாக 2022, ஜுன் 01, மற்றும் 2022, செப்டம்பர் 01 ஆம் திகதிகளில் நடைமுறைக்கு வரும் வகையில் முறையே 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகவும், 12 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகவும் உயர்த்தப்பட்ட பெறுமதி சேர் வரி விகிதம் விகிதம் காரணமாக இருந்தது. 2022 ஜனவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி விகிதம் 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்தப்பட்டமையும் இச்செயலாற்றகைக்கு சாதகமான பங்களிப்பினை வழங்கியுள்ளது. உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் சுருக்கம் மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட போதிலும், அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு சரிவு மற்றும் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தையில் பொருட்களின் விலை உயர்வு ஆகியவை பெறுமதி சேர் வரி வருவாயில் இந்த பெயரளவிலான உயர்வை ஏற்படுத்தியது. உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் இறக்குமதி தொடர்பான நடவடிக்கைகள் மீதான பெறுமதி சேர் வரி ஆகிய இரண்டினதும் வருமானம் 2022 ஆம் ஆண்டில் முறையே 57.2 சதவீதம் அதிகரித்து ரூபா 291.6 பில்லியனாகவும் 39.7 சதவீதம் அதிகரித்து ரூபா 171.5 பில்லியனாகவும் காணப்பட்டது.
உற்பத்தி வரி	306.9	374	342.5	முக்கியமாக மதுபானம் மற்றும் சிகரெட்டுகளின் வருமான அதிகரிப்பின் காரணமாக உற்பத்தித் தீர்வையியலிருந்து வருமான சேகரிப்பு 2021 ஆம் ஆண்டின் ரூபா 306.9 பிலலியனுடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில் ரூபா 342.5 பில்லியனாக 11.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இது 2022 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 91.6 சதவிகித தேறலாகும். 2021, நவம்பர் 12 முதல் மதுபான உற்பத்திக்கான உற்பத்தி வரியை உயர்த்தியதன் காரணமாகவும் 2022, சனவரி 03 முதல் மதுபானம் மற்றும் மதுபானம் சார்ந்த தயாரிப்புகளுக்காக பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் முகாமை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலமும் மதுபானத்தின் வருமானம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 138.6 பல்லியனிலிருந்து 19.2 சதவீதம் அதிகரித்து 2022 இல் ரூபா 165.2 பில்லியனாக அதிகரித்தது. முக்கியமாக 2022 - வரவுசெலவு திட்டத்தில் சிகரெட்டுகளின் வரி விகிதங்கள் திருத்தப்பட்டதன் காரணமாகவும், 2022 ஆம் ஆண்டில் குச்சிகளின் விற்பனை 18.7 சதவீதம் அதிகரித்தமையாலும் மீளாய்வு காலத்தின் போது சிகரெட் வருமானம் 17.6 சதவீதம் அதிகரித்து ரூபா 104.2 பில்லியனினைக் கொண்டிருந்தது. இருப்பினும், மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி வரி 2021 ஆம் ஆண்டில் ரூபா 18.1 பில்லியனாக இருந்ததுடன் 2020 மாச்சு முதல் மோட்டார் வாகன இறக்குமதியைக் குறைக்க அறிமுகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக 2022 ஆம் ஆண்டில் ரூபா 14.5 பில்லியன் வரை 19.9 சதவீதத்தினால் குறைவுற்றது. மேலும், எரிபொருள் கேள்வியைச் சமாளிக்கும் நோக்கில் “புவல் பாஸ்” முறைமையை செயற்படுத்துவதன் மூலம் எரிபொருள் நுகர்வு குறைந்தன் விளைவாக பெற்றோலியப் பொருட்கள் மீதான உற்பத்தி வரி வருமானம் 4.1 சதவீதம் குறைந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 53.1 பில்லியனாகக் காணப்பட்டது. ஏனைய உற்பத்திகளின் வருவாய் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.2 சதவீததினால் ரூபா 5.6 பில்லியனாக சுருக்கமடைந்தது.

அட்டவணை 4.13 | அரசாங்க வருமானத்தின் விலகல் பகுப்பாய்வு

ரூபா பில்லியன்

விடயம்	2021	2022 மதிப்பீடு	2022	காரணங்கள்
இறக்குமதித் தீர்வைகள்	64.3	42	50.0	இறக்குமதி வரி வருவாய் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 22.3 சதவீதம் கணிசமாகக் குறைந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 50.0 பில்லியனினைக் கொண்டிருந்தது. இது 2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருவாயில் 119.1 சதவிகித தேறலாகும். இறக்குமதி கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை விதித்தல், அத்தியாவசியமற்ற பொருட்களுக்கான உரிம முறை அறிமுகம் மற்றும் அந்நிய செலாவணி வெளியேற்றத்தை சமாளிப்பதற்கு பல அத்தியாவசியமற்ற இறக்குமதிகளுக்கு மேலதிகக் கட்டணம் விதித்தல் ஆகியவை மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் இறக்குமதி வரி வருமானத்திற்கு எதிர்மறையாக பங்களித்தன.
துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு	154.1	177	180.6	துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து வருமான திரட்டல் 17.2 சதவீதம் அதிகரித்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 180.6 பில்லியனாகவும், இது 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த திருத்தப்பட்ட மதிப்பீட்டின் 102 சதவிகித தேறலாகவும் இருந்தது. ஒட்டோ டீசல், பெற்றோல் (92 ஆக்டேன்), யூரியா, கோதுமை மா மற்றும் கோதுமை தானியங்கள் மற்றும் பிற நுகர்வுப்பொருட்கள் போன்ற முக்கிய இறக்குமதி பொருட்களால் உருவாக்கப்பட்ட வருமான அதிகரிப்புடன், அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி சரிந்ததே இதற்கு முக்கிய காரணமாகும்.
விசேட வியாபாரப் பண்ட அறவீடு	55.8	35	40.2	2022 ஆம் ஆண்டில் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிலிருந்து வருவாய் 28.0 சதவீதம் குறைந்து ரூபா 40.2 பில்லியன் சேகரிக்கப்பட்டது. இத்தொகை 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 114.8 சதவிகிதமாகும். சர்க்கரை, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கான பெயரளவிலான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு விகிதங்களின் தொடர்ச்சி மற்றும் உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் போன்ற பிற அத்தியாவசியப் பொருட்களின் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு விகிதங்களை அவ்வப்போது குறைத்தல் மற்றும் இறக்குமதி அளவுகளில் ஒட்டுமொத்த குறைவு ஆகியவற்றின் காரணமாக இந்த செயலாற்றுகை மேம்படுத்தப்பட்டது.
ஏனைய வரிகள்	106.5	133	140.7	2022 ஆம் ஆண்டில் ஏனைய வரிகளின் வருமானம் ரூபா 106.5 பில்லியனிலிருந்து மீளாய்வுக்கான அதே காலகட்டத்தில் 32.1 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 140.7 பில்லியனாகக் காணப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 105.8 சதவீதத்தினை அடையப்பெற்றது. முக்கியமாக 2022, ஒற்றோபர் 01 ஆம் திகதி முதல் அறிமுகப்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டினை அமுல்படுத்தியமை இதற்குக் காரணமாகும். 2022, யூன் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தொலைத்தொடர்பு அறவீட்டு விகிதம் 11.25 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக உயர்த்தப்பட்டதனால் தொலைத்தொடர்பு அறவீட்டிலிருந்து வருமானத் திரட்டல் 16.8 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 15.0 பில்லியனினை அடையப்பெற்றது. இருப்பினும், செஸ் வரியிலிருந்து வருவாய் 6.9 சதவீதத்தினால் குறைந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 70.3 பில்லியனாக இருந்தது, தெரிவுசெய்யப்பட்ட செஸ் அறவீடு பொருந்தக்கூடிய பொருட்களுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டின் தாக்கம் இந்த செயலாற்றுகையை எதிர்மறையாகப் பாதித்தது.
வரியல்லாத வருமானம்	159.1	232	228.1	முக்கியமாக விற்பனை மற்றும் அறவீடுகளின் திருத்தக் கட்டணங்கள் மற்றும் வாடகை, வட்டி வருமானம் மற்றும் பிற வரி அல்லாத வருமான மூலங்களிலிருந்து மேம்படுத்தப்பட்ட வருமான சேகரிப்பின் காரணமாக, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் வரி அல்லாத வருமானம் 43.4 சதவீதத்தால் கணிசமாக அதிகரித்துள்ளது. இது 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 98.3 சதவிகிதம் ஆகும். மேலும், மத்திய வங்கியின் இலாபப் பரிமாற்றல்களின் ரூபா 30 பில்லியன் வரவு மற்றும் சமூகப் பாதுகாப்பு உதவுதொகைகள் ஆகியவை 2022 ஆம் ஆண்டில் வரி அல்லாத வருமானத்தின் வருவாயை அதிகரிப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினையளித்துள்ளன.
மொத்தம்	**1,457.1**	**2,084**	**1,979.2**	

தொகுப்பு அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

கட்டம் 4.2 பிரதான அரசிறை நடவடிக்கைகள் 2022, சனவரி முதல் 2023, ஏப்பிரல் வரை	
பயன்வலுத் திகதி	**நடவடிக்கைகள்**
மது வரி (கட்டளைச்சட்ட) தீர்வை - மதுவரி கட்டளைச்சட்டம் (52 ஆம் அத்தியாயம்)	
01.01.2022	01/2022 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2022.01.01 ஆம் திகதிய 2260/78 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - 3 நட்சத்திர மற்றும் 4 நட்சத்திர வகை ஹோட்டல்கள் மற்றும் 5 நட்சத்திர வகை மற்றும் அதற்கு மேற்பட்ட நட்சத்திர வகுப்புக்கள்/பல்பொருள் ஹோட்டல்கள் பல்பொருள் வில்லாக்கள்/பாரம்பரிய ஹோட்டல்களுக்கான மதுபானங்களைப் பயன்படுத்துவதற்குப் பொருந்தும் அங்கீகாரக் கட்டணத்தைச் செலுத்துவதில் 2022, மாச்சு 31 வரை விலக்களிப்பதற்காக.
01.01.2022	02/2022 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2022.01.01 ஆந் திகதிய 2260/79 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - ஹோட்டல்களுக்கான வருடாந்த உரிமக் கட்டணத்திற்கு 2022, மாச்சு 31 வரை விலக்களிப்பதற்கு (மதுவரி திணைக்களத்தினால் FL/7, FL/8, FL/11, FL/12, FL/22ஆ என வகைப்படுத்தப்பட்ட உரிமங்களுக்கு) [02/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.01.01 ஆம் திகதிய 2208/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இரத்துச்செய்யப்பட்டது)].
27.01.2022	2022.01.27 ஆந் திகதிய 2264/28 ஆம் இலக்க மற்றும் 2022.01.27 ஆந் திகதிய 2264/29 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்கள் - சட்டத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக மதுவரி கட்டளைச்சட்டத்தின் (32 ஆம் அத்தியாயம்) கீழ் 08/2021 மற்றும் 09/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்கள் 2021, திசெம்பர் 10 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதை அறிவிப்பதற்காக.
04.05.2022	03/2022 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2022.04.29 ஆந் திகதிய 2277/62 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட உரிமம் பெற்ற ஏதேனும் உற்பத்திச்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டு வெளியிடப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட கள் லீற்றரொன்றிற்கு ரூபா 25 இலிருந்து ரூபா 50 வரை தீர்வையை உயர்த்துவதற்காக.
09.06.2022	04/2022 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2022.06.08 ஆந் திகதிய 2283/28 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - உள்நாட்டில் வழங்கப்படும்/இறக்குமதி செய்யப்படும் எத்தைல் மதுசாரம் மீதான தீர்வையை அதிகரிப்பதற்காக.
28.07.2022	05/2022 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2022.07.28 ஆந் திகதிய 2290/24 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட சுற்றுலா நிறுவனங்களுக்கு மென் மதுபான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.
03.01.2023	07/2022 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2022.12.31 ஆந் திகதிய 2312/70 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - மதுபானம் மீதான தீர்வையை அதிகரிப்பதற்காக.
01.01.2023	2022.12.31 ஆந் திகதிய 2312/71 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - 1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டத்தின் கீழ் பீடி கூறு ஒன்றிற்கு ரூபா 2 வீதம் வரியொன்றினை விதித்தல்.

கட்டம் 4.2 பிரதான அரசிறை நடவடிக்கைகள் 2022, சனவரி முதல் 2023, ஏப்பிரல் வரை	
பயன்வலுத் திகதி	**நடவடிக்கைகள்**
பெறுமதி சேர் வரி - 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச் சட்டம்	
01.01.2022	2022 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டம் - நிதிச் சேவைகளின் வழங்கல் மீதான பெறுமதி சேர் வரி விகிதத்தை 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்துதல் மற்றும் சில பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களித்தல்.
01.06.2022	2022.05.31 ஆம் திகதிய 2282/26 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - பொதுவான பெறுமதி சேர் வரி விகிதத்தினை 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதம் வரை உயர்த்துவதற்காக.
01.09.2022	2022.08.31 ஆம் திகதிய 2295/08 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - பொதுவான பெறுமதி சேர் வரி விகிதத்தினை 12 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரை உயர்த்துவதற்காக.
07.10.2022	2022.10.06 ஆம் திகதிய 2300/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - இ.மு. குறியீடு 9619.00.10 இன் கீழ் சுகாதாரத் துணிகள் (பேட்) மற்றும் ரம்பொன்களின் இறக்குமதி மற்றும்/அல்லது வழங்கலுக்கு பூச்சிய விகிதமளித்தல்
01.10.2022	2022 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டம் - பெறுமதி சேர் வரி பதிவிற்கான வரம்பை ஆண்டொன்றிற்கு ரூபா 300 மில்லியனிலிருந்து ரூபா 80 மில்லியன் வரை குறைப்பதற்காக.
01.01.2023	2022 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டம் - தொடர்மாடி மனைகளுக்கான பெறுமதி சேர் வரி விலக்களிப்பினை நீக்குவதற்காக.
2022 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, மிகைக்கட்டண வரிச் சட்டம்	
08.04.2022	- 2020/2021 மதிப்பீட்டு ஆண்டிற்காக ரூபா 2,000 மில்லியனினை விஞ்சும் வரி விதிக்கத்தக்க வருமானத்தைக் கொண்டுள்ள தனிநபர்கள், பங்குடைமைகள் அல்லது நிறுவனங்களுக்கு 25 சதவீத விகிதத்தில் ஒரே தடவை அறவிடப்படும் மிகைக் கட்டண வரியை விதிப்பதற்காக.
சுங்க மிகைக் கட்டணம் - சுங்கக் கட்டளைச்சட்டம் (235 ஆம் அத்தியாயம்)	
01.06.2022	2022.05.31 ஆம் திகதிய 2282/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - வரி விலக்களிக்கப்பட்ட பொருட்களுக்கு சுங்க வரி விதிப்பது மற்றும் இறக்குமதி செய்வதை கட்டுப்படுத்தும் நோக்கில் அவற்றின் மீது கூடுதல் கட்டணத்தை அறவிடல்.
01.12.2022	2022.11.30 ஆம் திகதிய 2308/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - கட்டணக் கொள்கை கட்டமைப்பை மாற்றாமல், இலங்கை மத்திய வங்கியின் பரிந்துரையைப் பூர்த்தி செய்வதற்காக, தெரிவுசெய்யப்பட்ட சில பொருட்களுக்கு (இ.மு குறியீடுகள்) சுங்க இறக்குமதி தீர்வையின் சதவீதமாக கூடுதல் கட்டணத்தை அறவிடல்
05.01.2023	2023.01.04 ஆம் திகதிய 2313/35 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - 2022 இன் புதிய இ.மு. பதிப்புடன் இ.மு. குறியீடுகள் 2017 பதிப்பு உள்ள தற்போதைய கட்டளைகளை மீண்டும் வெளியிட.

கட்டம் 4.2 பிரதான அரசிறை நடவடிக்கைகள் 2022, சனவரி முதல் 2023, ஏப்பிரல் வரை	
பயன்வலுத் திகதி	**நடவடிக்கைகள்**
2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்	
06.01.2022	2022.01.06 ஆம் திகதிய 2261/58 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - அரசாங்க மருத்துவமனைகள் அல்லது சுகாதார அமைச்சிற்கு நன்கொடையாக அளிக்கப்பட்ட மருத்துவ உபகரணங்கள், இயந்திரங்கள் போன்றவற்றுக்கு துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து விலக்களிப்பதற்காக 2020, ஒற்றோபர் 26, ஆம் திகதிய 2199/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலினைத் திருத்தம் செய்வதற்கு.
12.01.2022	2022.01.11 ஆம் திகதிய 2262/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய இ.மு. உப பிரிவுகளுக்கு துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டு சலுகை விகிதங்களையும் விலக்களிப்புக்களையும் ஒதுக்குவதற்கு.
23.08.2022	2022.08.22 ஆம் திகதிய 2294/26 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - அத்தியாவசிய பொருட்களின் நன்கொடைக்கு துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து விலக்களிப்பதற்காக.
05.10.2022	2022.10.05 ஆம் திகதிய 2300/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - சுகாதாரத் துணிகளின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களுக்கு துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து விலக்களிப்பதற்காக.
01.01.2023	2022.12.31 ஆம் திகதிய 2312/67 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - இலங்கை சுங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட 2022 இ.மு. குறியீட்டின் திருத்தத்திற்கு இடமளிக்கும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்ட/துணைப்பிரிவு மற்றும் திருத்தப்பட்ட இ.மு. குறியீடுகளுக்குப் பொருந்தும் து.வி.அ.அ. இற்கு ஒதுக்குவதற்காக.
04.04.2023	2023.04.03 ஆம் திகதிய 2326/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - 2023 வரவுசெலவு திட்டத்தின் முன்மொழிவின்படி, ஐந்தாண்டு காலத்தில் கட்டம்வாரியாக துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து வெளியேறும் முதல் படியாக, 1631 தீர்வை பொருந்தக்கூடிய பொருட்களுக்கு துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து விலக்களிக்க.
செஸ் அறவீடு - 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்	
12.01.2022	2022.01.11 ஆம் திகதிய 2262/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - அரிசி, மீன்வளப் பொருட்கள் மற்றும் திரவ பெற்றோலிய வாயு தொடர்பான துணைப் பொருட்களுக்காக உருவாக்கப்பட்ட புதிய தேசிய இ.மு. உப பிரிவுகளுக்கு தற்போதுள்ள செஸ் வரி விகிதங்களை ஒதுக்குதல்.
11.03.2022	2022.03.10 ஆம் திகதிய 2270/59 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - புடைவை மற்றும் ஆடைகளுக்கான தற்போதைய செஸ் வரி விகிதங்களை உயர்த்துவதற்காக.
10.08.2022	2022.08.09 ஆம் திகதிய 2292/32 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - நிவாரண நடவடிக்கையாக விநியோகிப்பதற்கு நன்கொடையாக வழங்கப்பட்ட பொருட்களின் இறக்குமதி மீதான செஸ் வரிக்கு விலக்களிப்பதற்காக.

கட்டம் 4.2 பிரதான அரசிறை நடவடிக்கைகள் 2022, சனவரி முதல் 2023, ஏப்பிரல் வரை	
பயன்வலுத் திகதி	**நடவடிக்கைகள்**
06.10.2022	2022.10.05 ஆம் திகதிய 2300/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - கைத்தொழில்துறை அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில் உள்ளூர் சுகாதாரப்பொருட்கள் உற்பத்தியாளர்களால், தெரிவுசெய்யப்பட்ட சில மூலப்பொருட்களை இறக்குமதி செய்வது தொடர்பாக செஸ் வரியிலிருந்து விலக்களிப்பதற்காக.
15.11.2022	2022.11.14 ஆம் திகதிய 2306/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - ரூபாவின் பெறுமதித் தேய்வினையும் உலகளாவிய சந்தை விலையின் தாக்கத்தையும் கருத்தில் கொண்டு மொத்தம் 677 இ.மு. குறியீடுகளுக்குப் பொருந்தும் செஸ் வரியை அதிகரிப்பதற்காக.
01.01.2023	2023.01.01 ஆம் திகதிய 2312/76 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - இலங்கை சுங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட 2022 இ.மு. குறியீடு திருத்தத்திற்கு இடமளிக்கும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்ட/வகைப்படுத்தப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட இ.மு. குறியீடுகளுக்குப் பொருந்தக்கூடிய செஸ் வரியை ஒதுக்குவதற்காக.
29.03.2023	2023.03.28 ஆம் திகதிய 2325/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - 2023 - வரவுசெலவு திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு மூன்று ஆண்டுகளுக்குள் செஸ் வரியை படிப்படியாக நிறுத்துவதற்கான முதல் படிமுறையாக, 8,155 இ.மு. குறியீடுகளில் 2,668 இ.மு. குறியீடுகளுக்கு செஸ் வரியைக் குறைப்பதற்காக.
31.01.2023	2023.01.26 ஆம் திகதிய 2316/32 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - பிணையப் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஓவர் தி கவுண்டர் (ஓரீசீ) தளத்தின் மீதான பெருநிறுவனக் கடன் பிணையங்களில் மீள்கொள்வனவு பரிமாற்றத்தின் (ரெபோ) மீது 0.006% செஸ் வரியை விதிப்பதற்காக.
சுங்க இறக்குமதித் தீர்வை - 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்	
12.01.2022	01/2022 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2022.01.11 ஆம் திகதிய 2262/14 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) பின்வருவனவற்றிற்காக இ.மு. குறியீட்டு உப பிரிவுகளை உருவாக்குவதற்காக - திரவ பெற்றோலிய வாயு தொடர்பான துணைப் பொருட்களின் தரத்தை மதிப்பிடலும் கண்காணித்தலும் - மீன்பிடி பொருட்களின் இறக்குமதி மற்றும் சந்தைத் தகவல்களை கண்காணித்தல் - இழைய வளர்ப்பு தாவரங்களின் ஏற்றுமதி வளர்ச்சி மற்றும் சந்தைத் தகவலை கண்காணித்தல் - ICUMSA பெறுமதி அடிப்படையில் பழுப்புநிற சீனி மற்றும் வெள்ளைச் சீனியைத் தெளிவாக இனங்காணல் மற்றும் உள்நாட்டு பழுப்புநிற சீனி உற்பத்தியை ஊக்குவித்தல் - வகைப்பாடு சிக்கல்களை நீக்குதல் மற்றும் பாஸ்மதி மற்றும் பிற அரிசி வகைகளை எளிதாக இனங்காணல்
10.03.2022	02/2022 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2022.03.09 ஆம் திகதிய 2270/20 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - அந்நியச் செலாவணி வெளியேற்றத்தினைத் தடுக்கும் பொருட்டு, இறக்குமதியைக் குறைப்பதற்காக அத்தியாவசியமற்ற பண்டங்களின் மீதான சுங்க இறக்குமதித் திர்வையை அதிகரிப்பதற்கு.

கட்டம் 4.2 பிரதான அரசிறை நடவடிக்கைகள் 2022, சனவரி முதல் 2023, ஏப்பிரல் வரை	
பயன்வலுத் திகதி	**நடவடிக்கைகள்**
01.06.2022	03/2022 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2022.05.31 ஆம் திகதிய 2282/24 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - 369 பொருட்களில் 55 இ.மு. குறியீடுகள் மீது பூச்சிய விகித சுங்க இறக்குமதித் தீர்வை பொருந்தும் 52 இ.மு. குறியீடுகளுக்கு 15 சதவீத சுங்கத் தீர்வையையும் 03 இ.மு. குறியீடுகளுக்கு 10 சதவீத சுங்கத் தீர்வையையும் ஏற்புடையதாக்குதல்.
10.08.2022	04/2022 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2022.08.09 ஆம் திகதிய 2292/31 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - நிவாரணப் பொருட்களாக விநியோகிப்பதற்காக நன்கொடையாக வழங்கப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்கு சுங்க இறக்குமதித் தீர்வையிலிருந்து விலக்களிப்பதற்காக.
07.10.2022	05/2022 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2022.10.06 ஆம் திகதிய 2300/27 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - நிவாரணப் பொருட்களாக விநியோகிப்பதற்காக நன்கொடையாக வழங்கப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்கு சுங்க இறக்குமதித் தீர்வையிலிருந்து விலக்களிப்பதற்காக.
15.11.2022	06/2022 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2022.11.14 ஆம் திகதிய 2306/14 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - 2023 வரவுசெலவு திட்ட முன்மொழிவுகளைக் கூட்டிணைத்து கட்டளையொன்று வெளியிடப்பட்டது.
01.01.2023	07/2022 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2023.01.01 ஆம் திகதிய 2312/75 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - சட்டப்பூர்வமான சர்வதேச வர்த்தக செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்கு 5 வருடங்களுக்கொரு தடவை இ.மு. குறியீட்டு முறைமையை இற்றைப்படுத்துதல். இலங்கையில் 08 இலக்கங்களில் மொத்தம் 7,842 இ.மு. குறியீடுகளுள்ளன, இருப்பினும், இ.மு குறியீடு 2022 பதிப்பு காரணமாக, மொத்த இ.மு. குறியீடுகளின் எண்ணிக்கை 8155 வரை அதிகரித்துள்ளன.
29.03.2023	01/2023 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2023.03.28 ஆம் திகதிய 2325/07 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - சுங்க இறக்குமதித் தீர்வையின் மூன்றடுக்கு காப்புவரிமுறையை 0 சதவீதம், 10 சதவீதம் மற்றும் 15 சதவீதத்திலிருந்து 0 சதவீதம், 15 சதவீதம் மற்றும் 20 சதவீதமாக திருத்துவதன் ஊடாக செஸ் அறவீடு 20 சதவிகிதத்தினால் குறைக்கப்பட்டதனால், வருமான நடுநிலையைப் பராமரிக்க குறிப்பிட்ட பொருட்களுக்கான சுங்க இறக்குமதித் தீர்வை விகிதத்தை அதிகரிப்பதற்காக.
விசேட வியாபாரப் பண்ட அறவீடு - 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்	
01.01.2022	2021.12.31 ஆந் திகதிய 2260/72 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயங்களின் இறக்குமதியின் மீது விசேட வியாபாரப்பண்ட அறவீட்டினை கிலோ கிராமொன்றிற்கு ரூபா 30.00 இனால் ஆறு மாத காலத்திற்கு குறைப்பதற்கு.
12.01.2022	2022.01.11 ஆந் திகதிய 2262/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - அரிசி மற்றும் சர்க்கரைக்காக புதிய இ.மு. குறியீடுகளின்படி தற்போதுள்ள வரி விகிதங்களை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்கு.

கட்டம் 4.2 பிரதான அரசிறை நடவடிக்கைகள் 2022, சனவரி முதல் 2023, ஏப்பிரல் வரை	
பயன்வலுத் திகதி	**நடவடிக்கைகள்**
04.03.2022	2022.03.03 ஆந் திகதிய 2269/48 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - சிறிய அளவிலான கால்நடைத் தீவன உற்பத்தியாளர்களின் மூலப்பொருள் தேவைகள் மற்றும் கோழிப்பண்ணை பொருட்களின் விலையைக் கருத்தில் கொண்டு, மக்காச்சோளம் மற்றும் உளுந்துக்கு கிலோ கிராமொன்றிற்கு ரூபா 10.00 என்ற சலுகை வரி விகிதத்தை அறிமுகப்படுத்துதல்.
04.03.2022	2022.03.03 ஆந் திகதிய 2269/56 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - உள்நாட்டு ரின் மீன் தொழிலைப் பாதுகாக்கவும், விவசாயிகளுக்கு நல்ல விலையை உறுதி செய்யவும், நுகர்வோருக்காக விலை ஸ்திரத்தன்மையைப் பேணவும் கானாங்கெளுத்தி, உளுந்து, கௌபி, குரக்கன் மற்றும் தினை ஆகியவற்றின் இறக்குமதிக்கான விசேட வியாபாரப்பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை ஓராண்டுக்கு நீடிப்பதற்கு.
10.03.2022	2022.03.09 ஆந் திகதிய 2270/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - இறக்குமதிகைளைக் குறைப்பதற்காக, யோகட் மற்றும் வெண்ணெய் இறக்குமதி மீது கிலோ கிராமொன்றிற்கு ரூபா 1000, பாலாடைக்கட்டி கிலோ கிராமொன்றிற்கு ரூபா 400, பேரிச்சம்பழம் மற்றும் தோடம்பழம் (புதியது) கிலோ கிராமொன்றிற்கு ரூபா 200, திராட்சை (புதியது), ஆப்பிள் மற்றும் பிற பழங்கள் கிலோ கிராமொன்றிற்கு ரூபா 300 எனும் அடிப்படையில் விசேட வியாபாரப்பண்ட அறவீட்டினை ஆறு மாத காலத்திற்கு அதிகரிப்பதற்கு.
28.03.2022	2022.03.28 ஆந் திகதிய 2273/01 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - ரமலான் பண்டிகை காலத்தை கருத்தில் கொண்டு பேரிச்சம்பழம் இறக்குமதிக்கு கிலோ கிராமொன்றிற்கு ரூபா 199/- தீர்வைத் தள்ளுபடியளிப்பதற்காக.
14.04.2022	2022.04.13 ஆந் திகதிய 2275/02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - பருப்பு, மீன், மாசிக்கருவாடு, பச்சைப்பயறு, மங்குஸ்தான் மற்றும் கிவி பழங்களின் இறக்குமதி மீதான விசேட வியாபாரப்பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை ஆறு மாதங்களுக்காக நீடிப்பதற்கு.
15.06.2022	2022.06.15 ஆம் திகதிய 2284/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - பழங்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தவும், உள்நாட்டு சுத்திகரிக்கப்பட்ட சமையல் எண்ணெய் உற்பத்தித்தொழில், தேங்காய் சார்ந்த தொழில்கள் மற்றும் உணவு, பிஸ்கட் மற்றும் சோப்பு போன்ற தொழில்களை வலுப்படுத்தவும்.
10.08.2022	2022.08.09 ஆம் திகதிய 2292/29 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - வெளிநாடுகளிலிருந்து உதவி/நன்கொடையாக இறக்குமதி செய்யப்படுகின்ற விசேட வியாபாரப் பண்ட அறவீடு செலுத்த வேண்டிய அத்தியாவசியப் பொருட்களுக்கு இச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் விலக்களிப்பதற்காக.
12.08.2022	2022.08.10 ஆம் திகதிய 2292/41 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - நுகர்வோர் நலனுக்காகவும், உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற்காகவும் சந்தை விலைகளை நிலைப்படுத்துவதற்காக விசேட வியாபாரப் பண்ட அறவீடு விதிப்பனவு ஒரு வருட காலத்திற்கு நீடிக்கப்பட்டது.
04.09.2022	2022.09.03 ஆம் திகதிய 2295/44 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல். - சிறிய அளவிலான கால்நடைத் தீவன உற்பத்தியாளர்களின் மூலப்பொருள் தேவை மற்றும் கோழிப்பண்ணைப் பொருட்களின் விலையை நிலைப்படுத்துதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மக்காச்சோளம் மற்றும் உளுந்து இறக்குமதியின் மீது விசேட வியாபாரப் பண்ட அறவீடு விதிப்பதற்காக, நடைமுறை விகிதங்கள் 31.12.2022 வரை நீடிக்கப்பட்டது.

கட்டம் 4.2 பிரதான அரசிறை நடவடிக்கைகள் 2022, சனவரி முதல் 2023, ஏப்பிரல் வரை

பயன்வலுத் திகதி	நடவடிக்கைகள்
23.09.2022	2022.09.22 ஆம் திகதிய 2298/51 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - விவசாய அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்டவாறு, உள்நாட்டு அறுவடை காலத்தை கருத்தில் கொண்டு, பெரிய வெங்காயத்தின் இறக்குமதிக்கு கிலோ கிராமொன்றிற்கு ரூபா 10.00 இலிருந்து ரூபா 50.00 ஆக விசேட வியாபாரப் பண்ட அறவீடு உயர்த்தப்பட்டது.
18.05.2022	2022.05.18 ஆம் திகதிய 2280/31 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - அத்தியாவசியமற்ற பழங்களின் இறக்குமதியை கட்டுப்படுத்தவும், வாடிக்கையாளர்களைப் பெரிதும் பாதிக்காத வகையிலும், 15 பொருட்களுக்குப் பொருந்தும் விசேட வியாபாரப் பண்ட அறவீடு, நடைமுறை விகிதங்களில் 01 வருட காலத்திற்கு நீட்டிக்கப்பட்டது.
01.06.2022	2022.05.31 ஆம் திகதிய 2282/23 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கும், இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை அகற்றுவதற்கும், 09 பண்டங்களின் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு விகிதங்களை அதிகரிப்பதற்காகவும்.
14.10.2022	2022.10.13 ஆம் திகதிய 2301/40 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - மீன்பிடித்துறை அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்டவாறு மீன் இறக்குமதி மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை அதிகரிப்பதற்கு.
01.12.2022	2022.11.30 ஆம் திகதிய 2308/17 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - 2282/23 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் ஆறு மாதங்கள் நிறைவடைந்த நிலையில் காலாவதியானதிலிருந்து 9 பொருட்களுக்கான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை, மேலும் ஒரு வருட காலத்திற்குத் தொடருவதற்கு.
05.01.2023	2023.01.04 ஆம் திகதிய 2313/34 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - 2022 இன் புதிய இ.மு. பதிப்புடன், ஏற்பாடுகளில இ.மு குறியீடுகள் 2017 பதிப்பைக் கொண்டுள்ள, நடைமுறையிலுள்ள கட்டளைகளை மீண்டும் வெளியிடுவதற்கு.
26.01.2023	2023.01.25 ஆம் திகதிய 2316/28 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - விவசாய அமைச்சின் செயலாளரின் பரிந்துரையுடன் உள்நாட்டுக் கால்நடைத் தீவன உற்பத்தித் தொழிலை வசதிப்படுத்துவதற்கு மற்றும் துறைமுகங்கள்/விமான நிலையங்களில் 2023.01.15 இல் மக்காச்சோளத்தின் சரக்கேற்றலுக்குட்பட்டு சலுகை நீடிக்கப்பட்டது.
21.02.2023	2023.02.20 ஆம் திகதிய 2320/04 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - முட்டைகளின் இறக்குமதி தொடர்பாக முட்டையொன்றிற்கு ரூபா.50.00 என்ற விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை அறிமுகப்படுத்துதல் மற்றும் வெதுப்பகத் தொழிலுக்கு நியாயமான விலையில் முட்டைகள் கிடைக்கச்செய்வதற்கு அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு முட்டையொன்றிற்கு ரூபா 1.00 மாத்திரம் சலுகை விகிதத்தை வழங்குதல்.
04.03.2023	2023.03.04 ஆம் திகதிய 2321/76 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - உளுந்து, கௌபி, குரக்கன் மற்றும் மற்றொரு வகை தினை மீது விதிக்கப்பட்ட விசேட வியாபாரப் பண்ட அறவீடு மேலும் ஒரு வருட காலத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

கட்டம் 4.2 பிரதான அரசிறை நடவடிக்கைகள் 2022, சனவரி முதல் 2023, ஏப்பிரல் வரை	
பயன்வலுத் திகதி	**நடவடிக்கைகள்**
08.03.2023	2023.03.07 ஆம் திகதிய 2322/21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - ரமலான் பண்டிகைக் காலத்தில் நன்கொடையாகவோ அல்லது அன்பளிப்பாகவோ பெறப்படும் பேரீச்சம் பழங்களை இறக்குமதி செய்ய கிலோ கிராமொன்றிற்கு ரூபா 1.00 1Kg என்ற சலுகை விகிதத்தைப் பயன்படுத்துதல்.
18.03.2023	2023.03.17 ஆம் திகதிய 2323/40 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - வர்த்தக அமைச்சின் செயலாளரின் பரிந்துரைக்குட்பட்டு உறைந்த முழு முட்டை திரவத்தை இறக்குமதி செய்வதற்கு கிலோ கிராமொன்றிற்கு ரூபா 200.00 என்ற சலுகை விகிதத்தைப் பயன்படுத்துதல்.
1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம்	
12.01.2022	2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.01.11 ஆந் திகதிய 2262/16 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - புதிய இ.மு. குறியீடுகளின்படி பழுப்புநிறச் சர்க்கரை மற்றும் வெள்ளைச் சர்க்கரைக்கான தராதரத் தேவைப்பாட்டினைத் தொடரவும், திரவமாக்கப்பட்ட பெற்றோலிய வாயு மற்றும் துணைப் பொருட்களை தரநிலை ஆய்வுத் திட்டத்தின் கீழ் கொண்டு வருதல்.
12.01.2022	2022 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.01.11 ஆந் திகதிய 2262/17 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - புதிய இ.மு. குறியீடுகளின்படி பழுப்புநிறச் சர்க்கரைக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் தேவையைத் தொடரவும் மற்றும் கடல்வாழ் உயிரினமொன்றின் ஓடுகளை இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் கீழ் கொண்டு வருதல்.
12.01.2022	2022 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.01.11 ஆந் திகதிய 2262/18 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - நீண்ட தானிய அரிசி மீதான தற்காலிக இடைநிறுத்தத்தை நீக்குவதற்கும் புதிய இ.மு. குறியீடுகளின்படி மீன் பில்லட் மீதான தற்காலிக கட்டுப்பாடுகளைத் தொடருவதற்காகவும்.
13.01.2022	I2022 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.01.13 ஆந் திகதிய 2262/34 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - சில விலங்குகளின் விந்தணுக்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் தேவைப்பாடுகளை நீக்குவதற்காக.
10.03.2022	2022 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.03.09 ஆந் திகதிய 2270/18 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - தெரிவுசெய்யப்பட்ட சில பொருட்கள் மீது இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் தேவைப்பாடுகளை விதிப்பதற்கு.

கட்டம் 4.2 பிரதான அரசிறை நடவடிக்கைகள் 2022, சனவரி முதல் 2023, ஏப்பிரல் வரை	
பயன்வலுத் திகதி	**நடவடிக்கைகள்**
10.04.2022	2022 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.04.09 ஆந் திகதிய 2274/42 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - தெரிவுசெய்யப்பட்ட சில பொருட்கள் மீது இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் தேவைப்பாடுகளை விதிப்பதற்கு
20.05.2022	2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.05.06 ஆந் திகதிய 2278/21 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - ழுயு இன் கீழ் இறக்குமதிகளை கட்டுப்படுத்தவும் மற்றும் DA மற்றும் DP கட்டண முறைகளின் கீழ் இறக்குமதி செய்வதற்கான நிபந்தனைகளை விதிப்பதற்காகவும்.
01.06.2022	2022 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.05.31 ஆந் திகதிய 2282/21 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - 2022, மாச்சு 09 ஆம் திகதிய 2270/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2022, ஏப்பிரல் 09 ஆம் திகதிய 2274/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி ஆகியவற்றை இரத்துச் செய்வதற்காக.
07.06.2022	2022 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.05.31 ஆந் திகதிய 2282/22 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - 2022, மே 06 ஆம் திகதிய 2278/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினைத் திருத்தம் செய்வதற்காக..
24.06.2022	2022 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.06.24 ஆந் திகதிய 2285/19 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - 2022, மே 06 ஆம் திகதிய 2278/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கட்டண விதிமுறைகள் மீதான இறக்குமதி கட்டுப்பாட்டு விதிமுறைகளைத் திருத்துவதற்கு.
05.08.2022	2022 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.08.05 ஆந் திகதிய 2291/44 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத் தேவைப்பாட்டிற்குட்பட்டு கிளைபோசேட் இறக்குமதியை அனுமதிப்பதற்கு.
23.08.2022	2022 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.08.23 ஆந் திகதிய 2294/29 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - 2022.06.11 ஆம் திகதிய 2231/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2022.05.06 ஆம் திகதிய 2278/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி ஆகியவற்றினைத் திருத்துதல்.
23.08.2022	2022 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.08.23 ஆந் திகதிய 2294/30 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - தெரிவுசெய்யப்பட்ட சில பொருட்களை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு

கட்டம் 4.2 பிரதான அரசிறை நடவடிக்கைகள் 2022, சனவரி முதல் 2023, ஏப்பிரல் வரை	
பயன்வலுத் திகதி	**நடவடிக்கைகள்**
09.09.2022	2022 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.09.09 ஆந் திகதிய 2296/30 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - 2022.08.23 ஆம் திகதிய 2294/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம் செய்வதற்காக.
16.09.2022	2022 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.09.16 ஆந் திகதிய 2297/79 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - திருத்தப்பட்டவாறான 2022, மே 06 ஆம் திகதிய 2278/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கட்டண விதிமுறைகள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளைத் திருத்தம் செய்வதற்காக.
23.09.2022	2022 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.09.23 ஆந் திகதிய 2298/55 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குதல்.
05.10.2022	2022 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.10.05 ஆந் திகதிய 2300/12 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - விவசாய விதைகள், வேளாண் இரசாயனங்கள் மற்றும் இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கான முற்பணக் கட்டண வரம்பை நீடிப்பதற்கு.
21.10.2022	2022 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.10.21 ஆந் திகதிய 2302/31 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - கால்நடைத் தீவன உற்பத்திக்காக உடைந்த அரிசியை இறக்குமதி செய்ய அனுமதிப்பதற்காக.
31.10.2022	2022 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.10.31 ஆந் திகதிய 2304/04 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - திறந்த கணக்கு கட்டண விதிமுறையின் கீழ் கோதுமை மாவை இறக்குமதி செய்ய அனுமதிப்பதற்காக.
31.10.2022	2022 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.10.31 ஆந் திகதிய 2304/05 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - விமான உதிரிப் பாகங்கள் மற்றும் துணைக்கருவிகளுக்கு இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிப்பதற்கு.

கட்டம் 4.2 பிரதான அரசிறை நடவடிக்கைகள் 2022, சனவரி முதல் 2023, ஏப்பிரல் வரை	
பயன்வலுத் திகதி	**நடவடிக்கைகள்**
23.11.2022	2022 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.11.23 ஆந் திகதிய 2307/12 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - 2022.08.23 ஆம் திகதிய 2294/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகளத் திருத்தம் செய்வதற்காக.
01.12.2022	2022 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.12.01 ஆந் திகதிய 2308/26 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - திருத்தப்பட்டவாறான 2022, மே 06 ஆம் திகதிய 2278/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கட்டண விதிமுறைகள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளைத் திருத்தம் செய்வதற்காக.
09.12.2022	2022 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.12.09 ஆந் திகதிய 2309/40 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - அரிசி இறக்குமதியை ஒழுங்குபடுத்துவதற்காக.
20.12.2022	2022 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.12.19 ஆந் திகதிய 2311/08 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - தெரிவுசெய்யப்பட்ட சில பொருட்களுக்கு விதிக்கப்பட்ட தற்காலிக இடைநிறுத்தத்தினை நீக்குவதற்கு.
21.12.2022	2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.12.21 ஆந் திகதிய 2311/18 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - கட்டண விதிமுறைகள் தொடர்பான ஒழுங்குவிதிகளை திருத்துவதற்காக.
01.01.2023	2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.01.01 ஆந் திகதிய 2312/77 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தினை ஒருங்கிணைப்பதற்காக.
01.01.2023	2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.01.01 ஆந் திகதிய 2312/78 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - தற்காலிக இடைநிறுத்தத்தினை ஒருங்கிணைப்பதற்காக.
19.01.2023	2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2023.01.19 ஆந் திகதிய 2315/46 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - கட்டண விதிமுறைகள் தொடர்பான ஒழுங்குவிதிகளை திருத்துவதற்காக.

கட்டம் 4.2 பிரதான அரசிறை நடவடிக்கைகள் 2022, சனவரி முதல் 2023, ஏப்பிரல் வரை	
பயன்வலுத் திகதி	**நடவடிக்கைகள்**
09.12.2022	2022.12.09 ஆம் திகதிய 2309/37 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - மத்தலை மஹிந்த ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தில் விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு(2) வருடங்களுக்கு ஐ.அ.டொ. 60 புறப்படுகை அறவீட்டின் தள்ளுபடியை வழங்குவதற்காக.
12.01.2023	2023.01.11 ஆம் திகதிய 2314/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - விமான நிறுவனங்களிடமிருந்து புறப்படுகை அறவீட்டினைச் சேகரிப்பதற்காக. எவ்வாறாயினும், 2003 ஆம் ஆண்டு புறப்படுகை அறவீடு விதிக்கப்பட்டதிலிருந்து கப்பல்களுக்கான புறப்படுகை அறவீட்டினைச் சேகரிக்க ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவில்லை. எனவே, விமானம் மற்றும் கப்பல் மூலம் இலங்கையிலிருந்து புறப்படும் பயணிகளிடம் புறப்படுகை அறவீட்டினை சேகரிப்பதற்கான ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்துவதற்கு.
25.04.2023	2023.0111 ஆம் திகதிய 2329 /19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - 2023.01.11 ஆம் திகதிய 2314/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளையின் I ஆம் அட்டவணையின் விடய இல. ஐை இனைத் திருத்துவதற்காக.
2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் - சர்வதேச தொலைதொடர்பு இயக்குநர் அறவீடு	
01.01.2023	2023.01.01 ஆம் திகதிய 2312/80 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - உள்வரும் சர்வதேச அழைப்புகள், குறிப்பிட்ட தொலைபேசி எண்களுக்கு உள்வரும் சர்வதேச அழைப்புகள், உள்வரும் உள்;ர் அணுகல் கட்டணம், தொலைத்தொடர்பு மேம்பாட்டுக் கட்டணம் மற்றும் வெளிச்செல்லும் உள்;ர் அணுகல் கட்டணம் ஆகியவற்றில் செலுத்த வேண்டிய வரி விகிதத்தை 2023, சனவரி 01, முதல் 2024, திசெம்பர் 31 வரை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்காக.
2008 ஆம் அண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டம்	
18.01.2022	2022.01.18 ஆந் திகதிய 2263/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - எச்ஸீஎல் டெக்னொலஜிஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் மூலம் ஏற்றுமதி செய்வதற்காக மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சேவைகளை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டத்திற்குத் தொடர்புடைய தகவல் மற்றும் வழங்கப்பட்ட வரிவிலக்களை வெளியிடுவதற்காக.
25.04.2022	2022.04.25 ஆம் திகதிய 2277/02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - புதிய களனி பாலத்திலிருந்து இராஜகிரிய ஊடாக அதுருகிரிய வரையிலான நான்கு வழிச்சாலை உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலையை நிர்மாணித்து இயக்கும் கருத்திட்டத்திற்குத் தொடர்புடைய தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட வரிவிலக்குகளை வெளியிடுவதற்காக.
03.08.2022	2022.08.03 ஆம் திகதிய 2291/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - எச்ஸீஎல் டெக்னொலஜிஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் மூலம் ஏற்றுமதிக்கான மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சேவைகளை மேம்படுத்துவதற்கான கருத்திட்டத்திற்குத் தொடர்புடைய தகவல் மற்றும் வழங்கப்பட்ட வரிவிலக்குகளை வெளியிடுவதற்காக.

கட்டம் 4.2 பிரதான அரசிறை நடவடிக்கைகள் 2022, சனவரி முதல் 2023, ஏப்பிரல் வரை	
பயன்வலுத் திகதி	**நடவடிக்கைகள்**
09.12.2022	2022.12.09 ஆம் திகதிய 2309/37 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - மத்தலை மஹிந்த ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தில் விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு(2) வருடங்களுக்கு ஐ.அ.டொ. 60 புறப்படுகை அறவீட்டின் தள்ளுபடியை வழங்குவதற்காக.
12.01.2023	2023.01.11 ஆம் திகதிய 2314/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - விமான நிறுவனங்களிடமிருந்து புறப்படுகை அறவீட்டினைச் சேகரிப்பதற்காக. எவ்வாறாயினும், 2003 ஆம் ஆண்டு புறப்படுகை அறவீடு விதிக்கப்பட்டதிலிருந்து கப்பல்களுக்கான புறப்படுகை அறவீட்டினைச் சேகரிக்க ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவில்லை. எனவே, விமானம் மற்றும் கப்பல் மூலம் இலங்கையிலிருந்து புறப்படும் பயணிகளிடம் புறப்படுகை அறவீட்டினை சேகரிப்பதற்கான ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்துவதற்கு.
25.04.2023	2023.0111 ஆம் திகதிய 2329 /19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - 2023.01.11 ஆம் திகதிய 2314/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளையின் I ஆம் அட்டவணையின் விடய இல. ஐை இனைத் திருத்துவதற்காக.
2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் - சர்வதேச தொலைதொடர்பு இயக்குநர் அறவீடு	
01.01.2023	2023.01.01 ஆம் திகதிய 2312/80 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - உள்வரும் சர்வதேச அழைப்புகள், குறிப்பிட்ட தொலைபேசி எண்களுக்கு உள்வரும் சர்வதேச அழைப்புகள், உள்வரும் உள்;ர் அணுகல் கட்டணம், தொலைத்தொடர்பு மேம்பாட்டுக் கட்டணம் மற்றும் வெளிச்செல்லும் உள்;ர் அணுகல் கட்டணம் ஆகியவற்றில் செலுத்த வேண்டிய வரி விகிதத்தை 2023, சனவரி 01, முதல் 2024, திசெம்பர் 31 வரை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்காக.
2008 ஆம் அண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டம்	
18.01.2022	2022.01.18 ஆந் திகதிய 2263/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - எச்ஸீஎல் டெக்னொலஜிஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் மூலம் ஏற்றுமதி செய்வதற்காக மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சேவைகளை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டத்திற்குத் தொடர்புடைய தகவல் மற்றும் வழங்கப்பட்ட வரிவிலக்களை வெளியிடுவதற்காக.
25.04.2022	2022.04.25 ஆம் திகதிய 2277/02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - புதிய களனி பாலத்திலிருந்து இராஜகிரிய ஊடாக அதுருகிரிய வரையிலான நான்கு வழிச்சாலை உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலையை நிர்மாணித்து இயக்கும் கருத்திட்டத்திற்குத் தொடர்புடைய தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட வரிவிலக்குகளை வெளியிடுவதற்காக.
03.08.2022	2022.08.03 ஆம் திகதிய 2291/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - எச்ஸீஎல் டெக்னொலஜிஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் மூலம் ஏற்றுமதிக்கான மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சேவைகளை மேம்படுத்துவதற்கான கருத்திட்டத்திற்குத் தொடர்புடைய தகவல் மற்றும் வழங்கப்பட்ட வரிவிலக்குகளை வெளியிடுவதற்காக.

கட்டம் 4.2 பிரதான அரசிறை நடவடிக்கைகள் 2022, சனவரி முதல் 2023, ஏப்பிரல் வரை	
பயன்வலுத் திகதி	**நடவடிக்கைகள்**
2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டம்	
31.08.2022	2022.08.31 ஆம் திகதிய 2295/10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் உரிமமளித்தல் ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்காக.
01.09.2022	2022.08.31 ஆம் திகதிய 2295/09 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, சீட்டாட்டத் தொழில் மேற்கொள்ளப்படும் இடம் அல்லது வளாகம், சீட்டாட்டத் தொழிலில் ஈடுபடுவதற்கான குறிப்பிட்ட பகுதியாகக் குறித்துரைப்பதற்கு.
1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்திவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்	
27.07.2022	2022.07.27 ஆம் திகதிய 2290/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - உள்நாட்டில் பொருத்தப்பட்ட/உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பொருந்தக்கூடிய சலுகை ரீதியான உற்பத்தி தீர்வை விகிதத்தின் வரி அடிப்படையை "செலுத்த வேண்டிய தீர்வையின் சதவிகிதம்" என்பதற்குப் பதிலாக "சீஐஎப்" பெறுமதியின் சதவிகிதம்" எனத் திருத்துவதற்கு.
01.01.2023	2022.12.31 ஆம் திகதிய 2312/68 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - இலங்கை சுங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட 2022 இ.மு. குறியீட்டின் திருத்தத்திற்கு இடமளிக்கும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்ட/துணைப்பிரிவு மற்றும் திருத்தப்பட்ட இ.மு. குறியீடுகளுக்குப் பொருந்தும் உற்பத்தி வரிக்கு ஒதுக்குவதற்காக.
01.01.2023	2022.12.31 ஆம் திகதிய 2312/68 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - பெற்றோலியப் பொருட்களின் உற்பத்தித் தீர்வை விகிதத்தினை அதிகரிப்பதற்கு
2022 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, உண்ணாட்டு அரசிறை (திருத்தச்) சட்டம்	
	நிறுவன வருமான வரி
01.10.2022	**வகைப்பாடு**
	நியம வருமான வரி விகிதம் - 30 சதவீதம் மதுபானம், புகையிலை மற்றும் பந்தயம்பிடித்தல் மற்றும் சூதாடுதல் ஆகிய தொழில்கள் மீது பொருந்தும் வருமான வரி விகிதம் - 40 சதவீதம்
01.01.2023	**தனியாள் வருமான வரி**
	ஆண்டொன்றிற்கான வரி விதிக்கத்தக்க வருமானம்
	முதலாம் 1,200,000 - விலக்களிப்பு 500,000 - 1,000,000 - 6% 1,000,000 - 1,500,000 - 12% 1,500,000 - 2,000,000 - 18% 2,500,000 - 3,000,000 - 24% 3,000,000 - 3,500,000 - 30% 3,500,000 இற்கு மேல் - 36%
01.01.2023	**பிடித்துவைத்தல் வரி**

கட்டம் 4.2 பிரதான அரசிறை நடவடிக்கைகள் 2022, சனவரி முதல் 2023, ஏப்பிரல் வரை	
பயன்வலுத் திகதி	**நடவடிக்கைகள்**
	பிடித்துவைத்தல் வரி விகிதங்கள்
	பங்கிலாபம் – 15% செலுத்தப்பட்ட வட்டி அல்லது கழிப்பீடு – 5% மாதமொன்றிற்கு ரூபா 100,000 இற்கு மேற்படும் வாடகைக் கொடுப்பனவுகள் - 10% சேவைக் கொடுப்பனவுகள் மாதமொன்றிற்கு ரூபா 100,000 – 5% ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் – 14%
2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்	
31.12.2022	2022.12.31 ஆம் திகதிய 2312/73 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - வாடகை.ஃ.குத்தகை பணமாகச் செலுத்தப்படாத காணிக் குத்தகை தொடர்பான ஏதேனும் ஆவணம் முத்திரைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவிற்கு விலக்களிப்பதற்கு.
மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி - 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டம்	
01.01.2023	2022.12.31 ஆம் திகதிய 2312/69 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - இலங்கை சுங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட 2022 இ.மு. குறியீட்டின் திருத்தத்திற்கு இடமளிக்கும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்ட/துணைப்பிரிவு மற்றும் திருத்தப்பட்ட இ.மு. குறியீடுகளுக்குப் பொருந்தும் து.வி.அ.அ. இற்கு ஒதுக்குவதற்காக.
10.02.2023	2023.02.10 ஆம் திகதிய 2318/53 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - மின்சார கார்களை இறக்குமதி செய்யும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு முழுவதுமாக மின்சாரத்தினால் இயங்கும் வாகனங்களின் வரி விலக்கு வரம்பை ரூபா 6 மில்லியனிலிருந்து ரூபா 12 மில்லியன் வரை உயர்த்துவதற்காக.
2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டம்	
01.10.2022	ஆண்டொன்றிற்கு ரூபா 120 மில்லியனுக்கு மேற்பட்ட புரள்வினைக் கொண்டுள்ள ஆட்கள் தொடர்பாக 2.5 சதவீத சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு ஒன்றினை விதித்தல்

05

அரசாங்க செலவினம்

5.1 மேன்நோக்கு

2021 ஆம் ஆண்டில் 20.0 சதவீதமாகக் காணப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசாங்க செலவின விகிதம் 2022 ஆம் ஆண்டில் 1.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 18.5 சதவீதமாகக் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.6 சதவீதமாகக் காணப்பட்ட மீளெழும் செலவினம் 2022 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14.6 சதவீதமாகக் குறைக்கப்பட்டமையும் மூலதனச் செலவினம் 2022 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.0 சதவீதமாக முடக்கப்பட்டமையுமே இதற்குப் பிரதான காரணமாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்குகையில் வட்டிக் கொடுப்பனவுகள் தவிர அனைத்துச் செலவினங்களும் வீழ்ச்சியடைந்துள்ளன. 2021 ஆம் ஆண்டில் 6.0 சதவீதமாகக் காண்பபட்ட வட்டிக்கான கொடுப்பனவுகள் 2022 ஆம் ஆண்டில் 6.5 சதவீதமாக அதிகரித்துடன் அது மீளெழும் செலவினங்களில் ஏறக்குறைய அரைப் பகுதியாகவும் காணப்பட்டது. அதனால், 2021 ஆம் ஆண்டில் 9.7 சதவீதமாகக் காணப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வட்டியல்லா மீளெழும் செலவின விகிதம் 2022 ஆம் ஆண்டில் 1.6 சதவீதத்தால் குறைவடைந்து 8.1 சதவீதமாகக் காணப்பட்டது. சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் தொடர்பில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் செலவின விகிதம் 2022 ஆம் ஆண்டில் 4.8 சதவீதத்தில் இருந்து 4.0 சதவீதமாக வீழ்ச்சியடைந்த அதேவேளை, 2021 ஆம் ஆண்டில் 1.0 ஆகக் காணப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைக்கான விகிதம் 2022 ஆம் ஆண்டில் 0.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், பெயரளவிலான நிபந்தனைகளின் கீழ், 2021 ஆம் ஆண்டில் 3,521.7 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அரசாங்கச் செலவினங்கள் 2022 ஆம் ஆண்டில் 27 சதவீதத்தால் அதிகரித்து 4,472.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரித்தமை ஓய்வூதியச் செலவினம் உள்ளிட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள் அதிகரித்தமை என்பவற்றால் ஏற்பட்டதாகும். 2021 ஆம் ஆண்டில் 2,747.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட மீளெழும் செலவினங்கன் 2022 ஆம் ஆண்டில் 28.1 சதவீதத்தால் அதிகரித்து 3,519.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதேவேளை 2021 ஆம் ஆண்டில் 767.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட மூலதனச் செலவினங்கள் 2022 ஆம் ஆண்டில் 6.8 சதவீதத்தால் குறைவடைந்து ரூபா 715.4 பில்லியனாக காணப்பட்டது.

இந்த வட்டியல்லா மீளெழும் செலவினங்களின் அதிகரிப்புக்கு, ஏனயை காரணிகளுடன் வருமானம் குறைந்த பலவீனமான குடும்பங்களுக்கான மேலதிக நிதியுதவிகளுடன் சமுர்த்தி கொடுப்பனவுகளுக்கான செலவினங்கள் அதிகரிக்கப்பட்டமை, உர மானியம் வழங்கலுக்கான செலவினங்கள் அதிகரிக்கப்பட்டமை, ஓய்வூதியக் கொடுப்பனவுகள் என்பன பிரதானமாகப் பங்களிப்புச் செய்தன. ஊதியம் 2022 ஆம் ஆண்டில் பெயரளவில் 13 சதவீதத்தால் மாத்திரம் அதிகரித்து 956 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. எரிபொருள், மின்சாரம் மற்றும் ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் கணிசமான அதிகரிப்பு காணப்பட்ட போதிலும், பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான செலவினங்கள் 8.2 சதவீத வளர்ச்சியுடன் கவனமான முறையில் முகாமை செய்யப்பட்டன. மேலும், 2021 ஆம் ஆண்டில் 1,048.4 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகள் 2022 ஆம் ஆண்டில் 1,565.2 பில்லியன் ரூபா பெயரளவில் அதிகரித்தது. திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளுக்கான வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரித்தமையினால் உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரித்தமையே இதற்குப் பிரதான காரணமாகும்.

5.2. 2022 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டம்

2022 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2021 அக்டோபர் 07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு 2021 டிசம்பர் 10 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் என்ற பெயரில் நிறைவேற்றப்பட்டது.

இந்த ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு இணங்க, மொத்த அரசாங்க செலவினங்கள் 5,426 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டது. இதில் மீளெழும் செலவினங்களுக்காக 1,827 பில்லியன் ரூபாவும், மூலதனச் செலவினங்களுக்காக 945 பில்லியன் ரூபாவும், படுகடன் சேவைக்காக (வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் கடன் செலுத்துகை) 2,647 பில்லியன் ரூபாவும் முற்பணக் கணக்குச் செயற்பாடுகளுக்காக 6 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டிருந்து. இந்த ஏற்பாடுகள் 181 செலவினத் தலைப்புக்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மூன்று அட்டவணைகளின் சுருக்கம் அட்டவணை 5.1 இல் தரப்பட்டுள்ளது. அச்சட்டகிள் பிரிவு 2(1) (ஆ) க்கு இணங்க, 2022 ஆம் ஆண்டுக்கான கடன் வாங்கல் எல்லை 3,200 பில்லியன் ரூபாவாகும். இது 2021 ஆம் ஆண்டில் 2,997 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

5.2.1. 2022 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம்

2022 ஆம் ஆண்டில் அரச நிதி முகாமையானது பொருளாதார பிரதானமாக நெருக்கடியின் காரணமாக ஏற்பட்ட கணிசமான சவால்களை எதிர்கொண்டது, கட்டுப்படுத்தப்பட்ட அரசிறை இடைவெளி மற்றும் பாரிய காசுப் பாய்ச்சல் சிரமங்கள் காணப்பட்டபோதிலும், சமுதாயத்திலுள்ள வருமானம் குறைந்த மற்றும் பலவீனமான குழுக்களுக்கு வாழ்க்கைச் செலவு நிவாரணங்களை வழங்குவதற்காக தொடர்ச்சியான

முறையில் வரவுசெலவுத் திட்டம் ஏற்பாடுகளை அரசாங்கம் வழங்கியது. மேலும் அரசாங்கம் முன்னுரிமையற்ற மற்றும் அத்தியவசியமற்ற செலவினங்களைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தது.

பிரச்சினையால் பாதிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மேலதிக பண மானியம் வழங்குவதற்கான செலவினங்களை ஈடு செய்வதற்கும், பொருட்கள் மற்றும் சேவைகளின் அதிகரித்த விலைகளுக்கு ஈடுகொடுப்பதற்கும் நிதி ஒதுக்கீடுகளைச் செய்வதற்கான ஆற்றலை அரசாங்கத்திற்கு வழங்குவதற்காக 2022 ஜூன் 08 ஆம் திகதி 695 பில்லியன் ரூபா குறைதிகபு மதிப்பீட்டுக்கு பாராளுமன்றம் அனுமதி வழங்கியது. அத்துடன், இந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 7 இன் கீழ் முன்னுரிமை குறைந்த சில செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட 300 பில்லியன் ரூபா முடக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அரசாங்கம் மாறியதைத் தொடர்ந்து, சில அமைச்சுக்கள் ஒழிக்கப்பட்டு, ஏனைய பல அமைச்சுக்கள் ஒருங்கிணைக்கப்பட்டு பாரிய அமைச்சரவை மாற்றம் செய்யப்பட்டது. அதனால், அமைச்சுக்களின் சுமுமகான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காகவும், கணக்கீட்டுச் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காகவும் அப்போதிருந்த அமைச்சுக்களின் கட்டமைப்புக்கு அமைவாக 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்த வேண்டி ஏற்பட்டது. அதற்கிணங்க, 2022 இடைக்கால வரவுசெலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மேலதிக நலன்புரிக் கொடுப்பனவுகளுக்கான புதிய செலவினத் தேவைப்பாடுகள் மற்றும் 2022 ஜூன் 08 ஆம் திகதி பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட குறயிப்பு மதிப்பீடுகளுக்கான செம்மையாக்கங்களை ஒருங்கிணைத்தல் என்பவற்றுக்கான மேலதிக ஏற்பாடுகளயும் இச்சட்டத்தின் 7 பிரிவின் கீழ் முடக்கப்பட்ட தொகைகளை நீக்கியும் 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் திருத்தப்பட்டது. அதற்கிணங்க, 2022 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் 2022 செப்டெம்பர் 09 பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அதனோடு இணைந்த வகையில், பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மையையும் நம்பிக்கையையும் மீள உருவாக்குவதற்காகா முழுமையான பொருளாதாரக் கொள்கைளை முன்னெடுப்பதற்காக 2022 ஆம் ஆண்டின் இடைக்கால் வரவுசெலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

5.2.2. 2022 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம்

கடுமையான பணப்புழக்கக் தெருப்புகள் மற்றும் பணவியல் கொள்கையின் இறுக்கத்தின் கீழ், அரசாங்கப் பிணைப்பத்திரங்கள், அதாவது திறைசேரி பத்திரங்கள் மற்றும் திறைசேரி உண்டில்கள் மீதான வட்டி விகிதங்கள் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் எதிர்பார்த்த அளவைத் தாண்டி அதிகரித்தன. முதிர்ச்சியடைந்த அரசாங்கப் பிணைப் பத்திரங்கள் முக்கியமாக சந்தை மற்றும் மத்திய வங்கிக்கு மீள வழங்கப்பட்டதன் மூலம் நிதியீட்டம் செய்யப்பட்டன. அதன்படி, திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் பத்திரங்கள் போன்ற கடன் வாங்கும் சாதனங்களை வழங்குவது சாதனத்தின் முகப் பெறுமதியில் கடன் வாங்குவதாக பதிவு செய்யப்படுகிறது. எனவே, அத்தகைய சாதனங்களை வழங்குவதன் பெறப்பட்ட பெறுமதிகள், கடன் வாங்குதல்களின் பதிவு செய்யப்பட்ட பெறுமதிகளை விடக் குறைவாக உள்ளன. இதன் விளைவாக, முதிர்ச்சியடையும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளுகு அவற்றின் வட்டியுடன் நிதியளிக்க மேலதிக கடன் தேவைப்பட்டது. அதனால், 2022 இன் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டுத் (திருத்தச்) சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கடன் வாங்கல் எல்லையைத் திருத்த வேண்டிய தேவை ஏற்பட்டது.

தற்கிணங்க, கடன் வாங்கல் எல்லையை 663 பில்லியன் ரூபாவினால் மேல் நோக்கித் திருத்துவதற்கான ஒதுக்கீட்டுத் (திருத்தச்) சட்டமூலம் 2022 நவம்பர் 30 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, 2022 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் என்ற பெயரில் நிறைவேற்றப்பட்டது.

அட்டவணை 5.1 | 2022 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அட்டவணைகள்

ரூபா. பில்லியன்

அட்டவணை	விபரம்	2021ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டம்	2022ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டம்
முதலாம் அட்டவணை	நிகழ்சசித்திட்ட அடிப்படையில் அரசாங்கத்தின் பொதுச் சேவைகளுக்கான செலவினங்கள்	2,797	3,330
இரண்டாம் அட்டவணை	சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட அரசாங்கத்தின் செலவினங்கள் திரட்டு நிதியத்திலிருந்து செலவிடப்பட வேண்டும்.	2,623	2,901
மூன்றாம் அட்டவணை	முற்பணக் கணக்குச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய செலவினங்கள்	6	6
மொத்த அரசாங்க செலவினங்கள்		5,426	6,237

மூலம் : வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

5.3 குறைநிரப்பு மதிப்பீடுகள்

தற்போதைய பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மற்றும் விவசாய சமூகங்களுக்கு விரைவாக நிவாரணம் வழங்குவதற்கும், அத்தியாவசிய பொதுச் சேவைகளை இடையூறு இன்றிப் பேணிவருவதற்கும் தேவையான மேலதிக செலவினங்களுக்கான ஏற்படுகளை ஒதுக்கீடுகொவதற்காக, 695 பில்லியன் ரூபாய்க்கான குறைதிப்பு மதிப்பீடு 2022 யூன் மாதம் 08 ஆம் திகதி குறைத்திறப்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதே நாளில் அங்கீகரிக்கப்பட்டது.

மேற்கூறிய குறைதிப்பு மதிப்பீட்டில் செலவினத்தை அதிகரிப்பதற்கான மேலதிக ஏற்பாடு, 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கான திருத்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

5.3.1. குறைதிப்பு ஒதுக்கீடுகளாக விசேட சட்ட ஆணைகள்

அரசியலமைப்பினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரளுக்கு இணங்க, அரசாங்கத்தின் மேலதிக நிதித் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக திரட்டு நிதியத்திலிருந்து பணத்தை மீளப் பெறுவதற்கு அதிகாரமளிக்கும் இரண்டு (02) விசேட ஆணைகள் பிறப்பிக்கட்டதுடன் அவை 2022 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் அட்டவணையில் விசேட சட்டச் சேவைகள் என அடையாளம் காணப்பட்டுள்ளன.

அட்டவணை 5.2 | 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள்

அதிகார இல.	தலைப்பு இல.	செலவின நிறுவனம்	நோக்கம்/குறிக்கோள்	தொகை (ரூபா)
1	1	அதிமேதகு சனாதிபதி	2022.07.14 முதல் 2022.12.31 வரையில் முன்னாள் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களுக்கு ஓய்வூதியப் பயன்களைச் செலுத்துவதற்கு	544,113
2	249	திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்	படுகடன் சேவைக்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்தல்	251,000,000,000

மூலம் : வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

5.4 2022 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம்

நிதி அமைச்சரினால் வழங்கப்பட்ட விசேட சட்ட ஆணைப் பத்திரங்கள் மூலம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகள் திருத்தப்பட்டன. அதனால், திருத்தப்பட்டதன் பின்னரான 2022 ஆம் ஆண்டிற்கான மொத்த வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகளை அட்டவணை 5.3 காட்டுகின்றது.

அட்டவணை 5.3 | 2022 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதான மொத்த வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகள்

அதிகார மூலம்	மீளெழும் (ரூபா)	மூலதனம்/படுகடன் தீர்த்தல்	மொத்தம் (ரூபா)
1ஆம் அட்டவணை, 2022ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம்	2,239,829,595,000	1,090,396,963,000	3,330,226,558,000
2 ஆம் அட்டவணை, திருத்தச் சட்டம்	1,396,123,442,000	1,505,000,000,000	2,901,123,442,000
3 ஆம் அட்டவணை, திருத்தச் சட்டம்	-	-	6,000,000,000
பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட துணை மதிப்பீடுகள்	-	-	-
நிதி அமைச்சரினால் வழங்கப்பட்ட விசேட சட்ட ஆணைகள்	251,000,544,113	-	251,000,544,113
மொத்தம்	**3,886,953,581,113**	**2,595,396,963,000**	**6,488,350,544,113**

மூலம் : வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

* 2022 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் தயாரிக்கப்பட்ட போது 2022.06.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 695 பில்லியன் ரூபாவுக்கான குறைப்பு மதிப்பீடும் ஒதுக்கீட்டுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

5.5 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

முற்பணக் கணக்குச் செயல்பாடுகள் என்பவை, தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கிகள் மூலம் செயல்படுத்தப்படும் சொத்துக் கடன்களைத் தவிர்த்து, வணிகத் தன்மையிலான செயல்பாடுகள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணத்தைக் குறிக்கும். 2022 ஆம் ஆண்டுக்கான முற்பணக் கணக்குச் செயற்பாடுகளின் உள்ளபடியான செலவினம் 19.14 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதேவளை மதிப்பிடப்பட்ட அதிகபட்சச் செலவினம் 29.19 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. அதற்கிணங்க, முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்ட சட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட மொத்தச் செலவின வரையறைக்குள் சிறப்பாக அமைந்திருந்தது. எவ்வாறாயினும், குறைந்தபட்ச கிடைப்பனவு எல்லையை அடைய முடியவில்லை. மதிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த கிடைப்பனவான 23.19 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் உள்ளபடியான மொத்தக் கிடைப்பனவு 19.40 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் முற்பணக் கணக்குச் செயற்பாடுகளின் செயலாற்றுகையில் 4 சதவீத வீழ்ச்சி பதிவாகியது. இந்த வீழ்ச்சிக்குப் பிரதான காரணம், 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையில் நடைமுறையில் இருந்த 03/2022 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத்திட்டச் சுற்றறிக்கை மூலம் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான கடன் வசதிகள் இடைநிறுத்தப்பட்டமையாகும். மேலும், வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கும் நேரத்தில் ஏற்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் விளைவாக ஒவ்வொரு செலவினத் தலைப்பின் கீழும் சரியான பதவியணிகளைக் கண்டறிவதில் காணப்பட்ட சிரமமும் முன்கூட்டிய கணக்குச் செயல்பாடுகளின் செயல்திறனை எதிர்மறையாகப் பாதித்துள்ளன.

5.6. பொதுச் செலவின முகாமை

5.6.1 நிதிகளின் மாற்றல்

நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 (நிபி 66 மற்றும் நிதி 69) இல் குறிப்பிடப்பட்டுள்ள வகைமாற்ற நடைமுறையின் கீழ் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொத்தச் செலவின வரையறைக்குள் பயன்படுத்தப்படாத ஏற்பாடுகளை மீள் ஒதுக்கீடு செய்வதற்கு அல்லது மாற்றல் செய்வதற்கு 2022 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவுக்கு இணங்க அனுமதி வழங்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் 313 பில்லியன் ரூபா பெறுமதியான அத்தகைய 1,556 நி.பி 66 மற்றும் 69 மாற்றல் விண்ணப்பங்களுக்கு தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் அனுமதி வழங்கியது.

5.6.2. "குறைநிரப்பு ஒத்துழைப்பு ஆதரவு சேவைகள் மற்றும் தற்செயலான பொறுப்புகள்" திட்டத்தின் கீழ் ஒதுக்கீடுகளை மீள் ஒதுக்கீடு செய்தல்

செலவுத் தலைப்பு 240 இன் கீழான "குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் நானாவிதப் பொறுப்புக்கள் செயற்திட்டம் - தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் செலவீட்டு முகவர்களின் எதிர்பாராத அல்லது அவசர தேவைகளுக்கான மேலதிக நிதி தேவைகளை 2022 ஆம் ஆண்டில் தொடர்ந்து முன்னெடுத்தது. ஆதற்கிணங்க, 72.7 பில்லியன் ரூபா 2022 ஆம் ஆண்டின் அச்சிசடப்பட்ட மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு 2022 ஆம் ஆண்டுக்காக குறைநிரப்பு ஒதுக்கீடுகளாக செலவீட்டு முகவர்களுக்கு மீள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த ஒதுக்கீடுகளின் சுருக்கமொன்று அட்டவணை 5.4 இல் தரப்பட்டுள்ளது ஏற்பாடுகளின் மீள் ஒதுக்கீட்டுடன் தொடர்புடைய அறிக்கைள் 2022 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச்த்துவ சட்டத்திற்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. அது தவிர, அந்த மாற்றல்கள் அனைத்தினதும் விபரங்கள், 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமை (பொறுப்புச்) சட்டத்திற்கு இறுதி வரவுசெலவுத்திட்ட நிலைமை அறிக்கையுடன் (ஆண்டறிக்கை) ஒருங்கிணைக்கப்பட்டன.

அட்டவணை 5.4 | மேலதிக ஒதுக்கீடுகளின் அமைச்சு மட்டத்திலான சுருக்கம் 2022.01.01 முதல் 2022.12.31 வரை

ரூபா

தலைப்பு	அமைச்சு/ திணைக்களம்/ செலவீட்டு அலகு	நோக்கம்	மீளெழும்	மூலதன
2	பிரதம மந்திரியின் அலுவலகம்	சமீபத்திய கிளர்ச்சிகளால் சேதமடைந்த அலுவலக உபகரணங்களை மாற்றுதல்	-	10,000,000
4	உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள்	வாகனப் பராமரிப்பு	7,976,000	-
13	இலங்கை மனித உரிமைகள்	"இலங்கையில் நீதித்துறைக்கான ஆதரவு" திட்டத்திற்காக UNDP இலிருந்து கிடைத்த மானியம்	-	992,000
21	ஆணைக்குழு தேசிய கணக்காய்வு	பதவியுயர்த்தப்பட்ட அலுவலர்களுக்கான சம்பள நிலுவைகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	30,000,000	-
25	அலுவலகம் எல்லை நிர்ணய	எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கான கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய செலவினங்கள்	1,100,000	-
101	ஆணைக்குழு புத்த சாசன, சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சு	மியான்மர் குடியரசு நன்கொடையாக வழங்கிய மார்பிள் பகோடாவை விடுவிப்பதற்கான வரிகள் மற்றும் தீர்வைகள் மற்றும் ஸ்ரீ தலதா மாளிகை கலாச்சார பாரம்பரிய திட்டத்தின் கீழ் பல்லேகலேயில் கண்டியன் நடன பீடத்தை நிர்மாணிப்பதற்காக இந்திய அரசாங்கம் வழங்கிய மானியத்தைப் பயன்படுத்துவதற்கான கணக்கஜ	16,184,000	25,400,000

அட்டவணை 5.4 | மேலதிக ஒதுக்கீடுகளின் அமைச்சு மட்டத்திலான சுருக்கம் 2022.01.01 முதல் 2022.12.31 வரை தொடர்...

ரூபா

தலைப்பு	அமைச்சு/ திணைக்களம்/ செலவீட்டு அலகு	நோக்கம்	மீளெழும்	மூலதன
102	நிதி, பொருளாத உறுதிப்பாடுகளுங்ம் தேசிய பெள்ளபைபள் அமைச்சு	மீளெழும் செலவுகள், அரச தனியார் பங்குடமைக்கான தேசிய நிறுவனம் (NAPPP), IHS இன்டர்நஷனல் LC VA USA வழங்கும் ஆலோசனை சேவைகள், அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் மறுசீரமைப்பு பிரிவை நிறுவுதல் தொடர்பான இடைக்கால வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளை (இல. 17) அமுலாக்குதல்.	104,115,000	20,000,000
237	தேசிய திட்டமிடல் திணைக்களம்	உலக உணவுத் திட்டத்தின் கீழ் கிடைத்த பொருட்களுடன் தொடர்புடைய பொருட்கள் தீர்வை மற்றும் ஏனைய கட்டணங்களுக்கான கணக்கு, ஐக்கிய அமெரிக்காவிடமிருந்து பொருட்களாகக் கிடைத்தவற்றுக்கான நன்கொடையைக் கணித்து தொடர்புடைய வரிகளைச் செலுத்துதல்	–	565,200,000
239	வெளிநாட்டு வளத் திணைக்களம்	மீள்நிர்மாணத்திற்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கியுடன் (IBRD) தொடர்புடைய மாற்றல் கொடுப்பனவுகள், மனித வள அபிவிருத்திப் புலமைப்பரிசில் நிகழ்சசித்திட்டத்திற்கான ஜப்பானிய மானிய உதவி	–	1,135,686,826
241	பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களம்	கஷ்டமான பொருளாதார நிலைமையின் காரணம், வரையறுக்கப்பட்ட வட கடல் கம்பனியின் தொழிற்பாட்டு மூலதனத் தேவைகள், அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் சம்பள நிலுவைகள் மற்றும் ஏனைய தொழிற்பாட்டுச் செலவினங்கள், தற்போது எரிபொருள் விலை ஸ்திரப்படுத்தல் நிதியத்துக்கு சொந்தமாகவுள்ள இலங்கை மின்சார சபையின் பங்குகளை கையகப்படுத்துவதற்கான கணக்கு, மிஹின் லங்கா கம்பனியுடன் தொடர்புடையதாக மக்கள் வங்கிக்கு வழங்கப்பட்ட வசதிக் கடிதத்துடன் தொடர்புடைய பொறுப்புக்களைத் தீர்த்தல்.	–	5,864,000,000
243	அபிவிருத்தி நிதித் இணைக்களம்	மானிய விலையில் பயறு விற்பனைக்காக சதொச நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைகளைத் செலுத்துதல் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	87,024,650	–
244	வர்த்தக, முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்	மீளெழும் செலவினம்	5,750,000	
246	உள்நாட்டு இறைவரித் திணைக்களம்	வருமான நிர்வாக முகாமை தகவல் முறைமைச் (RAMIS) செயற்திட்டத்தின் செலவினங்களுக்கான கணக்கு	–	3,463,124,000
249	திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்	அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்கான அரசாங்கத்தின் பங்களிப்பு	100,000,000	–
250	பொதுக் கணக்குகள் திணைக்களம்	கணனி திருத்தவேலைகள்	–	200,000
296	இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுபாட்டுத் திணைக்களம்	மீளெழும் செலவினங்கள்	2,800,000	–
103	பாதுகாப்பு அமைச்சு	உள்;ராட்சிமன்றங்களுக்கான உள்ளூர் அனர்த்த ஆளுபத்துக் குறைப்புத் திட்டங்களைத் தயாரிப்பதற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்சசித்திட்டத்தினால் வழங்கப்பட்ட கொடைகள், சீன அரசாங்கத்தால் தொடர்பாடல் உபகரணங்களுக்காக வழங்கப்பட்ட கொடை, போதைப் பொருள் தொடர்பான ஆய்வுகள் பற்றிய சர்வதேச ஆய்வரங்குக்காக கொழும்புத் திட்டத்தால் வழங்கப்பட்ட கொடை, நிலுவையாகக் காணப்பட்ட விலைப்பட்டியல்களைச் செலுத்துதல், கடுமையான காற்றினால் பாதிகப்பட்ட குடும்பங்களுக்கான உதவிகள் என்பவற்றைப் பயன்படுத்துதல் மற்றும் கணக்கீடு செய்தல்	–	3,849,000,000

அட்டவணை 5.4 | மேலதிக ஒதுக்கீடுகளின் அமைச்சு மட்டத்திலான சுருக்கம் 2022.01.01 முதல் 2022.12.31 வரை தொடர்...

ரூபா

தலைப்பு	அமைச்சு/ திணைக்களம்/ செலவீட்டு அலகு	நோக்கம்	மீளெழும்	மூலதன
222	இலங்கை இராணுவம்	எரிபொருள் மற்றும் உணவுச் செலவினங்கள்	9,641,072,000	–
223	இலங்கை கடற்படை	உணவுச் செலவினங்கள், அவுஸ்திரேலிய அரசாங்கத்திடமிருந்து கிடைத்த டீசல் மானியத்திற்கான பெறுமதிக்கான கணக்கு	4,027,000,000	515,200,000
224	இலங்கை வான் படை	அத்தியவசியச் சேவைகளுக்கு வழங்கப்பட்ட எரிபொருள்	116,055,200	–
304	வளிமண்டலவியல் திணைக்களம்	கணனி முறைமை இற்றைப்படுத்தல்	3,200,000	–
110	நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு	சம்பளங்கள் மற்றும் வேதனங்கள், ஏனைய கொடுப்பனவுகள், ஆஏ Express-Pearl அனர்த்தத்துடன் தொடர்புடையதாக வழங்கப்பட்ட சட்டச் சேவைகளுக்கான தொழில்சார் கட்டணங்கள்	48,815,000	–
228	நீதிமன்ற நிர்வாகம்	எரிபொருள், எழுதுபொருட்கள், அலுவலகத் தேவைகள், ஏனைய சேவைகள்	227,000,000	–
229	சட்டமாஅதிபர் திணைக்களம்	சட்டமாஅதிபர் திணைக்களத்திலுள்ள அத்தியவசிய பதவி வெற்றிடங்களுக்கான புதிய ஆட்சேர்ப்பு	19,500,000	–
234	உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்	வாடகை மற்றும் உள்ளூர் வரிகள்	16,700,000	–
111	சுகாதார அமைச்சு	வடமாகாணத்தில் உள்ள மருத்துவமனைகளின் அபிவிருத்திக்காக நெதர்லாந்து அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கடன்கள், இலங்கை கொவிட்-19 அவசரகால நடவடிக்கை மற்றும் சுகாதார அமைப்புகளுக்கான தயாரிப்புத் திட்டத்திற்காக உலக வங்கியிடமிருந்து கடன்கள் பயன்படுத்துதல் மற்றும் கணக்கீடு செய்தல், வேலைத் திட்டச் செயற்பாடுகள் செயற்திட்டத்துக்காக உலக சுகாதார அமைப்பிடமிருந்து கிடைத்த மானியத்தைப் பயன்படுத்துதல் மற்றும் கணக்கீடு செய்தல், புகையிலை மற்றும் மது ஒழிப்பு திட்டத்திற்கான உலக சுகாதார ஸ்தாபனத்திடமிருந்து கிடைத்த மானியத்தைப் பயன்படுத்துதல், சார்க் நிதியம், காசநோய் மற்றும் மலேரியா (GFATM) செயற்திட்டத்தின் ஊடாக கண்டி தேசிய வைத்தியசாலையில் கொவிட் 19 க்கான சிகிச்சை நிலையமொன்றை நிறுவுவதற்கான செலவினங்கள், டாக்டர் நெவில் பெர்னாண்டோ போதனா வைத்தியசாலையின் 2022 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான தொழிற்பாட்டுச் செலவினங்கள், பட்டப் பின் பட்டப் படிப்புக்காக வெளிநாடு செல்லும் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய நாணய மாற்று வீத ஏற்ற இறக்கங்களால் ஏற்பட்ட செலவினங்கள், வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படும் இலவச மருந்துகளின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால் ஏற்பட்ட செலவினங்கள், மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுடன் தொடர்புடைய கையிலுள்ள விலைப்பட்டியல்களைச் செலுத்துதல், ருஜேஊநுகு மற்றும் ருகேீயு என்பவற்றின் வேலைத் திட்டச் செயற்பாடுகளின் அமுலாக்கம், களுத்துறை மாவட்ட பொது வைத்தியசாலையுடன் இணைந்ததாக விசேட மகப்பேற்று மற்றும் சிறுவர் வைத்தியசாலையொன்றை உருவாக்குதல்	2,080,000,000	8,393,139,000
220	ஆயுர்வேதத் திணைக்களம்	பொரளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புக்களுக்கான கணக்கு	235,000	2,410,500.00

அட்டவணை 5.4 | மேலதிக ஒதுக்கீடுகளின் அமைச்சு மட்டத்திலான சுருக்கம் 2022.01.01 முதல் 2022.12.31 வரை

ரூபா

தலைப்பு	அமைச்சு/ திணைக்களம்/ செலவீட்டு அலகு	நோக்கம்	மீளெழும்	மூலதன
116	வர்த்தக அமைச்சு	ஏற்றுமதி அபிவிருத்திச் சபையில் சேவையில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள், வாகனப் பராமரிப்பு, புனரமைப்பு, எரிபொருள், ஏனைய மீளெழும்	65,880,000	5,100,000
301	கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் (கூட்டுறவுச் சங்கப் பதிவாளர்)	ஏனைய சேவைகள்	2,200,000	–
117	போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு	மீளெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள்	9,900,000	5,000,000.00
306	இலங்கை புகையிரதத் திணைக்களம்	318 மில்லியன் ஐ.அ. டொலர் கடன் வசதியின் கீழ் 160 லொகோமோட்டிவ்கள், பயணிகள் கோச்சுகள், இரண்டு டீசல் மல்டிபில் அலகுகள், இரத்மலானை வேலைத்தள மேம்பாடுகள், பொல்கஹவலை முதல் குருநாகல் வரையான புகையிரதப் பாதையை இரட்டைப் பாதையாக்குதல், புகையிரதப் பாதை புனரமைப்பு, மாகோ முதல் ஓமந்தை வரை சமிக்கைகள் பொருத்துதல், புகையிரதத் தொழிற்பாடுகள், மின்சாரம், நீர் என்பவற்றுக்கான எரிபொருள், உராய்வு பொருட்களுக்கான செலவினங்கள் உள்ளிட்ட புகையிரத அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கு இந்திய அரசாங்கம் வழங்கிய கடனைப் பயன்படுத்துதலும் கணக்கீடு செய்தலும்.	2,150,000,000	7,840,650,000.00
118	விவசாய அமைச்சு	மீளெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள், சம்பளங்கள் மற்றும் வேதனங்கள், குளிர்காலங்களில் பயறு நடுகைக்கான செயற்திட்டத்தை ஆரம்பித்து நடைமுறைப்படுத்துதல், விதைகள் கொள்வனவு, நடுகைப் பொருட்கள், அறுவடை இயந்திரங்கள், குளங்களைப் புனரமைத்தமைக்கான நிலுவையாக உள்ள விலைப்பட்டியல்களைச் செலுத்துதல்,உலக வங்கியிடமிருந்து விவசாயத் துறை நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்திற்காகக் கிடைத்த கடனைப் பயன்படுத்தி கணக்கீடு செய்தல்	9,889,875	2,060,100,125.00
119	மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு,	பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபைக்கான நிலுவையாகவுள்ள விலைப்பட்டியல்களைச் செலுத்துதல், பெற்றோல் விநியோகத்துடன் தொடர்புடைய ஞசு குறியீடுகளை வலையமைப்பாக்கம் செய்தல், கணினிகள் மற்றும் வலையமைப்பு உபகரணங்க் கொள்வனவு என்பவற்றுடன் தொடர்புடைய அத்தியவசிய செலவினங்களை மேற்கொள்ளுதல், விவசாய மற்றும் மீன்பிடித் துறைக்காக சீனக் குடியரசிடமிருந்து கிடைத்த டீசல் அன்பளிப்புக்கான கணக்க, மீளெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள்	27,308,000	5,131,881,000
122	சுற்றுலாத் துறை மற்றும் காணி அமைச்சு	வாகனப் பராமரிப்புக்கான கையிலுள்ள விலைப்பட்டியல்களைச் செலுத்துதல்	2,000,000	–
287	காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்	எரிபொருள் செலவினங்கள் உரிமை மாற்றங்கள்	676,000	–

அட்டவணை 5.4 | மேலதிக ஒதுக்கீடுகளின் அமைச்சு மட்டத்திலான சுருக்கம் 2022.01.01 முதல் 2022.12.31 வரை தொடர்...

ரூபா

தலைப்பு	அமைச்சு/ திணைக்களம்/ செலவீட்டு அலகு	நோக்கம்	மீளெழும்	மூலதன
123	நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு	உபாயமுறை நகரங்களான அநுராதபுரம் மற்றும் கொழும்பு நகர மீளுருக்கவாச் செயற்திட்டங்களின் அபிவிருத்திக்கான கையிலுள்ள விலைப்பட்டியல்களைச் செலுத்துதல், செப்டெம்பர் முதல் டிசம்பர் வரை சௌம்யமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்திற்கான சம்பளங்கள், நகர மீளுருவாக்கச் செயற்திட்டத்தற்காக ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடமிருந்து கிடைத்த கடனைப் பயன்படுத்தி கணக்கீடு செய்தல், 'MV Express Pearl" கப்பல் விபத்தினால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுவதற்கான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தால் வழங்கப்பட்ட கொடையை பயன்படுத்தி கணக்கீடு செய்தல், 'MV Express-Pearl" கப்பல் விபத்தினால் ஏற்பட்ட கரையோர சுத்தம் செய்தல் வேலைகளுக்கான செலவினங்கள், மீளெழும் செலவினங்கள்	424,300,000	1,740,807,000
291	கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத் திணைக்களம்	வெப்ப மண்டல சூறாவளியினால் வெள்ளம் பற்றிய கரையோர ஆராய்ச்சிக்காக இயற்கைச் சூழல் ஆராய்ச்சி மன்றத்தால் (NERC) வழங்கப்பட்ட கொடையைப் பயன்படுத்தி கணக்கீடு செய்தல்	–	1,385,221.00
126	கல்வி அமைச்சு	மிகச் சிறிய சுய முயற்சியாண்மைக்கான பயிற்சிகளுடன் தொடர்புடைய இடைக்கால வரவுசெலவுத்திட்டப் முன்மொழிவை (இல. 28) நடைமுறைப்படுத்துதல், முறையே "யுனெஸ்கோ செயற்பாடுகள்" செயற்திட்டம், திறன் விருத்தித் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றுக்காக யுனிசெப் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றிடமிருந்து கிடைத்த கொடைகளைப் பயன்படுத்தி கணக்கீடு செய்தல், பாடநூல்கள் அச்சிடுதல், உறுகுணை, சப்ரகமுவை மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகங்களின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப, மனித வள அபிவிருத்திச் செயற்திட்டம் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் என்பவற்றுக்கான நிலுவையாக உள்ள விலைப்பட்டியல்களைச் செலுத்துதல், கொழும்புப் பல்கலைக்கழத்தின் பதினேழு மாடிக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்காகப் பெறப்பட்ட கடன் வட்டி செலுத்துதல்.	3,000,000,000	2,803,340,000
130	பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் போக்குவரத்து இணைப்பு மற்றும் ஆதன முகாமை செயற்திட்டத்திற்காக உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடனைப் பயன்படுத்துதல் மற்றும் கணக்கீடு செய்தல், காலஞ்சென்ற பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அமரகீர்த்தி அதுகோரள அவர்களின் தங்கி வாழ்வோருக்கு நட்டஈடு வழங்குதல், 2016-2020 காலப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான நிலுவையாகவுள்ள விலைப்பட்டியல்களைச் செலுத்துதல்	5,000,000	780,000,000
256	மாவட்ட செயலகம், கம்பஹா	கம்பஹாவில் நிர்வாகக் கட்டடமொன்றை நிர்மாணித்ததற்கான விலைப்பட்டியல்களைச் செலுத்துல்	–	35,000,000.00
263	மாவட்ட செயலகம், அம்பாந்தோட்டை	கமசமக பிலிசந்தரக்-கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	–	4,565,000
275	மாவட்ட செயலகம் - பொலனறுவை	பொலனறுவை மாவட்ட செயலகத்திற்கான புதிய நான்கு மாடிக் கட்டட நிர்மாணத்தற்கான விலைப்பட்டியல்களைச் செலுத்துதல்		50,000,000
278	மாவட்ட செயலகம், இரத்தினபுரி	செயற்திட்டத்திற்கான நிலுவையாகவுள்ள விலைப்பட்டியல்களைச் செலுத்துதல் கமசமக பிளிசந்தரக்-கிராமிய அபிவிருத்தி நிகழ்சசித்திட்டம்	–	24,506,000
314	தென் மாகாண சபை	ஸ்மார்ட் வகுப்பறைகளையும் நவீன கணினி ஆய்வுகூடங்களையும் நிறுவும் செயற்திட்டத்திற்கு இந்திய அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கொடையைப் பயன்படுத்துதல் மற்றும் கணக்கீடு செய்தல்	–	30,000,000

அட்டவணை 5.4 | மேலதிக ஒதுக்கீடுகளின் அமைச்சு மட்டத்திலான சுருக்கம் 2022.01.01 முதல் 2022.12.31 வரை தொடர்...

ரூபா

தலைப்பு	அமைச்சு/ திணைக்களம்/ செலவீட்டு அலகு	நோக்கம்	மீளெழும்	மூலதன
135	பெருந்தோட்ட அமைச்சு	பெருந்தோட்டத் துறை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக ஐக்கிய இராச்சியத்தின் பிரிஸ்டல் பல்கலைக்கழகத்திடமிருந்து கிடைத்த மானியத்தைப் பயன்படுத்தி கணக்கீடு செய்தல், கந்தளாய் சீனிக் கம்பனியின் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள், தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள், மீளெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள், அலுலக விடுதிவீட்டின் துப்புரவு வசதிகளை மேமப்படுத்துதல்	65,818,312	29,567,000.00
149	கைத்தொழில் அமைச்சு	ஆடை உற்பத்தித் துறைக்கு இளைஞர்களின் பங்களிப்பை பெறுவதற்கு அவர்களுக்கு வலுவூட்டும் செயற்பாட்டின் ஓர் அங்கமாக 100 தையல் இயந்திர மெக்கானிக்குகளுக்குப் பயிற்சியளித்தல், வெளிநாட்டுச் செலாவணி ஈட்டும் முன்னெடுப்புக்களை ஊக்குவித்தல், ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி நிறுவனத்திற்கான அங்கத்துவப் பணம்.	7,000,000	5,000,000
151	மீன்பிடித் துறை அமைச்சு	அவுஸ்திரேலிய இந்திய - இந்து பசுபிக் சமுத்திரப் பங்குடமையிடமிருந்து தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவருக்கு கிடைத்த கொடையைப் பயன்படுத்தி கணக்கீடு செய்தல், ஆஏ ஓீசநளள ீநயசட சரக்குக் கப்பலின் தீ விபத்தினால் தமது வாழ்வாதாரத்தை இழந்த மீனவர்களுக்கான நட்டஈடு, மீளெழும் செலவினங்கள் மற்றும் மூலதனச் செலவினங்கள்	783,071,000	2,703,931
290	மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களளம்	இயற்கை அழிவுகளின் காரணமாக உயிரிழந்த இரண்டு மீனவர்களுக்கான நட்டஈடு, கப்பல் கண்காணிப்பு முறைமை (VMS) அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கொடையைப் பயன்படுத்துதுல்	2,000,000	281,525,330.00
160	சுற்றாடல் அமைச்சு	அதிமேதகு சனாதிபதி அவர்களின் விசேட தூதுவராக ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு விஜயம் செய்த சுற்றாடல் அமைச்சரின் பயணத்திற்கான நிலுவையாகவுள்ள விலைப்பட்டியல்களைச் செலுத்துதல்	9,475,000	–
161	வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சு	சூழற்தொகுதிப் பாதுகாப்பு மற்றும் முகாமைச் செயற்திட்டத்திற்கு உலக வங்கியிடமிருந்து கிடைத்த கடனைப் பயன்படுத்துதல் மற்றும் கணக்கீடு செய்தல்	–	326,700,000
166	நீர் வழங்கல் அமைச்சு	அனைவரும் நீர் செயற்திட்டத்தன் கீழ் பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமை மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கான மீளெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள்	11,000,000	2,291,000,000
171	மகளிர், சிறுவர் அலுவல்கள், சமூக வலுவூட்டல் அமைச்சு	ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் அவசர நிதியத்திடமிருந்து செயற்பாட்டுத் திட்டத்தின் அமுலாக்கத்திற்கான செயற்திட்டத்திற்குக் கிடைத்த மானியத்தை பயன்படுத்தி கணக்கீடு செய்தல், சமூக காதுகாப்புச் சபைத் தவிசாளரின் சம்பள மீளளிப்புக்கான தனிப்பட்ட வேதனாதிகள், முன் பிள்ளைப் பருவப் பராமரிப்பு மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்	3,000,000	912,076,000
217	நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்	அநாதை இல்லங்களுக்கும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கும் உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்பட்ட கொடையைப் பயன்படுத்துதல் மற்றும் கணக்கீடு செய்தல்	–	2,025,000.00
176	துறைமுக மற்றும் கப்பற்துறை அமைச்சு	கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கான சாத்தியவள ஆய்வுக்கான ஆலோசனைச் சேவை (இலங்கை அரசாங்கம்-ஆசிய அபிவிருத்தி வங்கி)	–	713,639,360.00
193	தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு	மீளெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள்	6,850,000	–
328	மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்	மீளெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள் மற்றும்	17,678,900	7,387,100

அட்டவணை 5.4 | மேலதிக ஒதுக்கீடுகளின் அமைச்சு மட்டத்திலான சுருக்கம் 2022.01.01 முதல் 2022.12.31 வரை தொடர்...

ரூபா

தலைப்பு	அமைச்சு/ திணைக்களம்/ செலவீட்டு அலகு	நோக்கம்	மீளெழும்	மூலதன
194	இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு	விளையாட்டுத் துறையில் அறிவையும் திறன்களையும் பரிமாறிக்கொள்வதை ஊக்குவிப்பதற்காக பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசிடமிருந்து கிடைத்த கொடையைப் பயன்படுத்துதல் மற்றும் கணக்கீடு செய்தல், மீளெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள், இளைஞர் விவசாயக் கம்பனிகளைத் தாபித்தல் (இல.21.2) மற்றும் திறன்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுக்கு வசதி ஏற்பாடுகளைச் செய்தல் (இல. 27.6) தொடர்பான இடைக்கால வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளைநடைமுறைப்படுத்துதல்	85,689,000	220,395,000
219	விளையாட்டுத் துறை அபிவிருத்தித் திணைக்களம்	மீளெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள்	201,469,000	148,531,000
மொத்தம்			**23,424,731,937**	**49,297,236,393**

5.6.3 செலவு முகாமை, வரவுசெலவுத்திட்டம் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் சுற்றறிக்கைகள் ஊடாக பிறப்பிக்கப்பட்ட பணிப்புரைகள்

2022 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட முகாமை தொடர்பான வழிகாட்டல் 03/2021 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத்திட்டச் சுற்றறிக்கை ஊடாக வெளியிடப்பட்டன. அது தவிர, அட்டவணை 5.5 இல் காட்டப்பட்டுள்ள 2022 ஆம் ஆண்டில் வரவுசெலவுத்திட்டம் தயாரித்தல், நடைமுறைப்படுத்துதல், செலவின முகாமை ஆகிய விடயங்கள் பற்றி தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்தினால் பின்வரும் சுற்றறிக்கைள் வெளியிடப்பட்டன. பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களம் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான செலவு முகாமையுடன் தொடர்புடைய 01/2022, 02/2022, 04/2022, 09/2022 ஆம் இலக்கச் சுற்றறிக்கைளை வெளியிடப்பட்டது.

திரட்டு நிதியத்திலிருந்து பணத்தை மீளப்பெறுவதை இயலுமாக்கும் காலாண்டு ஆணைகளை நிதி அமைச்சர் 2022 ஆம் ஆண்டில் வெளியிட்டார். அதனடிப்படையில், அந்த ஆணைகள் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து ஒவ்வொரு காலாண்டுக்கும் ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

அட்டவணை 5.5 | பொதுச் செலவின முகாமை தொடர்பில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைள்

சுற்றறிக்கை இல.	திகதி	விடயம்
NB/01/2022	02.03.2022	அரசாங்க முகவர்களால் தொழிற்பாட்டுக் குத்தகை முறையின் கீழ் பெறப்பட்ட வாகனங்களுக்கான ஒப்பந்தக் காலத்தை நீடிக்காமை
NB/02/2022	01.04.2022	2022 ஆம் ஆண்டில் செலவுகளை மேற்கொள்வதற்கு அதிகாரமளித்தல் மற்றும் பொதுச் செலவினங்களை முகாமை செய்தல் - 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு
NB/03/2022	26.04.2022	அரச செலவினங்களைக் கட்டுப்படுத்துதல்
NB/04/2022	30.06.2022	2022 ஆம் ஆண்டில் செலவுகளை மேற்கொள்வதற்கு அதிகாரமளித்தல் மற்றும் பொதுச் செலவினங்களை முகாமை செய்தல் - 2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு
NB/05/2022	02.09.2022	வரவுசெலவுத்திட்ட அழைப்பு- 2023	2023-2025 நடுத்தரக் கால வரவுசெலவுத்திட்ட சட்டகத்தினுள் 2023 வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்
NB/06/2022	21.09.2022	2022 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகளின் கீழ் செலவினங்களை மேற்கொள்வதற்கான அதிகாரமளிப்பு, 2022 ஆம் ஆண்டுக்கான செலவினங்களை அறிக்கையிடல் மற்றும் கணக்கீடு செய்தல்
NB/07/2022	21.10.2022	தொழிற்பாட்டுக் குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களை முகாமை செய்தல்
NB/08/2022	25.11.2022	பல்வேறு நிகழ்ச்சிகளுக்கான செலவினங்களை இடைநிறுத்துதல்
NB/09/2022	27.12.2022	2023 ஆம் ஆண்டில் செலவுகளை மேற்கொள்வதற்கு அதிகாரமளித்தல் மற்றும் பொதுச் செலவினங்களை முகாமை செய்தல்

மூலம்: வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

5.7. மொத்த அரசாங்க செலவினங்களின் உள்ளடக்கம்

வட்டிக் கொடுப்பனவுகளுக்கான செலவினம் 1,565.2 பில்லியன் ரூபாவாக அமைந்தது. இது மொத்த மீளெழும் செலவினங்களில் 44.5 சதவீதமாகும். சம்பளங்கள் மற்றும் வேதனங்களுக்கான செலவினம் 956.2 பில்லியன் ரூபாவாக அமைந்தது. இது மீளெழும் செலவினங்களின் 27.2 சதவீதமாகும். ஓய்வூதியங்கள், சமுர்தி, மருத்துவ வழங்கல்கள், உர மானியங்கள், வட்டி மானியங்கள் என்பன உள்ளிட்ட நலன்புரி நிகழ்ச்சிகளுக்கான செலவினங்கள் 719.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

அட்டவணை 5.6 | வகைகளின் அடிப்படையில் அரசாங்க செலவினம்

ரூபா. மில்லியன

செலவின வகை	2021	2022 மதிப்பீடு	2022(ஆ)
மொத்தச் செலவினம்	**3,521.70**	**4,427.40**	**4,472.60**
மீளெழும்	**2,747.5**	**3,620.0**	**3,519.6**
சும்பளங்கள் மற்றும் வேதனங்கள்	845.7	994.5	956.2
பொருட்கள் மற்றும் சேவைகள்	168.9	225.3	182.9
வட்டி	1,048.4	1379.4	1,565.2
மானியங்கள் மற்றும் மாற்றல்கள்	684.5	1,020.9	815.4
மூலதனம் மற்றும் தேறிய கடன் வழங்கல்	**774.2**	**807.4**	**952.9**
ீபொது முதலீடுகள்	789.6	1,072.4	1,014.3
ஏனையவை	-15.4	-265.0	-61.4
மொஉஉயின் % ஆக மொத்தச் செலவினம்			
மீளெழும் செலவினம்	**20.0**	**18.7**	**18.5**
வட்டிச் செலவினம்	**15.6**	**15.3**	**14.6**
மூலதனம் மற்றும் தேறிய கடன் வழங்கல்	6.0	5.8	6.5
மு/ற பொது முதலீடுகள்	4.4	3.4	3.9
	4.5	**4.5**	**4.2**

மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
* உள்ளடக்கப்பட்டுள்ள நிலுவைகள்
(அ) தற்காலிகமானது

5.7.1. சம்பளங்கள் மற்றும் வேதனங்கள்

மாகாண சபைகள், ஆயுதப் படைகள் மற்றும் பொலிஸ் திணைக்களம் என்பவற்றிலுள்ளவர்கள் உள்ளிட்ட அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் வேதனங்களுக்கான செலவினங்கள், 2022 ஆம் ஆண்டில் 956.2 பில்லியன் ரூபாவாகக் காண்பபட்டன. இது 2021 இல் காணப்பட்ட ரூபா 845.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 13.1 சதவீத அதிகரிப்பொனறாகும். இந்த அதிகரிப்புக்குப் பிரதான காரணம், வருடாந்த சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டமை, 5,000 மாதாந்த விசேட கொடுப்பனவு, சுமார் 50,000 பட்டதாரிப் பயிலுநர்களை அவர்களின் சம்பளங்களை 20,000 ரூபாவிலிருந்து 41,700 ரூபா வரையான சம் அதிகரிப்புடன் நிரந்தரமாக்கியமை என்பனவாகும்.

அட்டவணை 5.7 | சம்பளங்கள் மற்றும் வேதனங்களுக்கான செலவினங்கள்

ரூபா. மில்லியன

துறை	2017	2018	2019	2020	2021	2022(அ)
மத்திய அரசாங்கம்	197,914	212,481	240,329	270,521	297,349	367,467
மாகாண சபைகள்ழு	149,715	162,086	179,971	239,034	256,142	268,864
பாதுகாப்பு	180,998	189,055	189,508	199,474	205,542	222,996
பொலிஸ் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு	59,891	62,423	76,644	85,129	86,646	96,884
மொத்தம்	**588,518**	**626,045**	**686,452**	**794,158**	**845,680**	**956,210**

மூலங்கள்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
* அரசாங்க மாற்றல்களின் செலவுகள் மாத்திரம் உள்ளடங்கும்
(அ) தற்காலிகமானது

ஓய்வூதியங்கள்

2021 ஆம் ஆண்டில் 269.8 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட மொத்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 2022 ஆம் ஆண்டில் 14.5 சதவீதத்தால் அதிகரித்து 309.1 பில்லியன் ரூபாவாக அமைந்தன. இந்த அதிகரிப்புக்குப் பிரதான காரணம், வருடாந்த சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டமை, 5,000 மாதாந்த விசேட கொடுப்பனவு, சுமார் 50,000 பட்டதாரிப் பயிலுநர்களை அவர்களின் சம்பளங்களை 2021 ஆம் ஆண்டில் 269.8 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட மொத்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 2022 ஆம் ஆண்டில் 14.5 சதவீதத்தால் அதிகரித்து 309.1 பில்லியன் ரூபாவாக அமைந்தன. இந்த அதிகரிப்புக்குப் பிரதான காரணம் 2021 ஆம் ஆண்டில் 672,196 ஆகக் காணப்பட்ட தேறிய ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 0.6 சதவீதத்தால் அதிகரித்து 676,430 ஆகக் காணப்பட்டமையும் ஓய்வூதியகாரர்களுக்கு மாதாந்த விசேட கொடுப்பனவாக

5,000 ரூபா வழங்கப்பட்டமையுமாகும். அத்துடன், புதிய ஓய்வூதியகாரர்களுக்கான கொடுப்பனவுகள், ஏற்கனவே உள்ள ஓய்வூதியகாரர்களினதும் மரணித்த ஓய்வூதியகாரர்களினதும் கொடுப்பனவுகளை விட கணிசமானளவு அதிகமாகும்.

அரசாங்கம் ஓய்வூதியக் கொடுப்பனவுகளைத் தவிர, காயமடைந்த மற்றும் மரணித்த பாதுகாப்பு படை வீரர்களுக்கான அனைத்தும் உள்ளடங்கிய செலுத்த வேண்டிய நட்டஈடாக 40.2 பில்லியன் ரூபாவை செலவிட்டது. இது 2021 ஆம் ஆண்டின் 37.9 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 6.1 சதவீத அதிகரிப்பாகும். 2021 ஏப்ரல் மாதம் வரையில், மரணித்த ஆட்களுக்கு 55 வருடங்கள் பூர்த்தியடையும் வரையில் அவர்களில் தங்கிவாழ்பவர்கள் இந்த நட்டஈட்டுக்கான உரிமை பெற்றனர். மரணித்தவரின் இந்த நட்டஈட்டை மரணித்த அங்கத்தவர் 55 வயதை அடைந்த பின்னர் மரணித்த அங்கத்தவர்களில் தங்கிவாழ்பவர்களுக்கு ஓய்வூதியத்துடன் அங்கத்தவர்களுக்கு அவர்களின் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து செலுத்தவதற்கு 2021 ஏப்ரல் மாதத்தில் அரசாங்கம் தீர்மானித்தது.

5.7.2. அரசிறை அதிகாரப் பரவலாக்கம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின்படி, அரசாங்கம், நிதி ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரிலும், ஆலோசனையின் பேரிலும், வருடாந்த வரவுசெலவுத் திட்டத்திலிருந்து மீளெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக மாகாண சபைகளுக்கு நிதியை மாற்றும்.

அதற்கிணங்க மத்திய அரசாங்கம், மீளெழும் செலவினங்களுக்காக 298.7 பில்லியன் ரூபாவும், மூலதனச் செலவினங்களுக்காக 14.4 பில்லியன் ரூபாவும் கொண்டதாக 313.1 பில்லியன் ரூபாவை நேரடியாக மாகாண சபைகளுக்கு வழங்கியது. அது தவிர, மூலதனச் செலவினங்களுக்காக பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உளளூராட்சி அமைச்சின் ஊடாக 5.6 பில்லியன் ரூபாவை வழங்கியது. அதற்கிணங்க, 2022 ஆம் ஆண்டில் மூலதனச் செலவினங்களுக்காக மாகாண சபைகளுக்கு மொத்தமாக 20 பில்லியன் ரூபா வழங்கப்பட்டடுள்ளது. 2021 ஆம் ஆண்டின் 284.6 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் மீளெழும் செலவினங்களுக்கான மாற்றல்கள் 4.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. மீளெழும் செலவினங்களில் ஏற்பட்ட இந்த அதிகரிப்புக்கு, அரசாங்க ஊழியர்களுக்கான வருடாந்த சம்பள அதிகரிப்புக்களும், 5,000 ரூபா மாதாந்த விசேட கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டமையே காரணமாகும்.

அட்டவணை 5.8 | 2022 ஆம் ஆண்டில் மாகாணங்களுக்கான மாற்றல்கள்

ரூபா. மில்லியன்

மாகாண சபை	மாற்றல்கள் 2022 (அ)	
	மீளெழும்	மூலதன
மேல்	53,888	1,340
மத்திய	35,182	1,566
தென்	38,014	1,295
வட	27,600	1,795
வட மேல்	35,820	1,548
வட மத்திய	20,357	1,745
ஊவா	26,606	1,860
சப்ரகமுவை	31,307	1,562
கிழக்கு	29,964	1,651
மாகாண சபைகளுக்குப் பொறுப்பான அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்	-	5,620
மொத்தம்	**298,737**	**19,982**

மூலம்: வரவு செலவுத்திட்டத் திணைக்களம்/பொதுக் கணக்குகள் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

5.8. அரசாங்க செலவினங்களின் துறைவாரியான வகையாக்கம்

5.8.1. மனித வள முகாமை

சுகாதாரம்

சுகாதார பராமரிப்புக்கான முதலீடு

கடந்த 2 ஆண்டுகளில் கொவிட்-19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கான செலவினங்கள் அதிகரித்த பிறகு, தொற்றுநோய்க்கு முந்தைய நிலைக்கு சுகாதார சேவைகளை மீட்டெடுப்பதை மையமாகக் கொண்டு 2022 இல் தொடர்ச்சியாக முதலீடுகள் செய்யப்பட்டன. சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சபைகளை உள்ளடக்கிய சுகாதாரத் துறைக்கான மத்திய அரசாங்கத்தினால் செய்யப்படும் மொத்தச் செலவினம் 19.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 308.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் மீளெழும் செலவினங்களும் மூலதனச் செலவினங்களும் முறையே 1.2 சதவீதத்தாலும் 65.1 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்து 269.2 பில்லியன் ரூபாவாவும் 39.2 பில்லியன் ரூபாவாகவும் காணப்பட்டன. இந்த வீழ்ச்சிக்கான பிரதான காரணம் தடுப்பூசி நிகழ்சசித்திட்டத்திற்காகச் செய்யப்பட்ட 69.08 பில்லியன் ரூபா மூலதனமாக்கப்பட்டமை, சமூக சேவைகளுக்காகச் செய்யப்பட்ட செலவினங்கங்கள் 2021 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சின் உள்ளடக்கப்பட்டமை என்பனவாகும்.

5.1 |2022 இல் சுகாதாரப் பராமரிப்புக்கான மத்திய அரசாங்கத்தின் செலவினங்கள்



** 2020/2021 இல் முதியோர் பயன் நிகழ்ச்சித்திட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது*
மூலம் : வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

160.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்களின் ஆளணிக்கான வேதனாதிகள் 2022 ஆம் ஆண்டில் 3.9 சதவீதத்தால் அதிகரித்து 166.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் 32.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட மேலதிக நேர கொடுப்பனவுகள் மற்றும் மேலதிகக் கடமைக் கொடுப்பனவுகள் 2021 ஆம் ஆண்டில் 36.2 பில்லியன் ரூபாவாக அதிகரித்தமை 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மீளெழும் செலவினங்களில் ஒரு முக்கிய அம்சமாகக் காணப்பட்டது,

இலங்கை வான் படையின் ஊழிய மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் முல்லேரியா தள வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட கொவிட் 19 சிகிச்சை நிலையம் 2022 ஆகஸ்ட் 3 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டது. சுகாதாரப் பராமரிப்பின் தரத்தை மேம்படுத்துவதற்காவும் தடங்கலற்ற சிகிச்சை வசதிகளை உறுதிப்படுத்துவதற்காகவும், சுகாதார அமைச்சு 2022 பெப்ரவரி 17 ஆம் திகதி நாடு முழுவதிலும் உள்ள தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளுக்கும் பிராந்திய சுகாதார அலுவலகங்களுக்கும் 25 அம்பியூலன்ஸ் வண்டிகளையும் 38 கெப் வண்டிகளையும் கையளித்தது. இது ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டது,

அத்துடன், திரிபோஷா உற்பத்திக்காக 715.9 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டதுடன், 0.85 மில்லியன் பயனாளிகள் மத்தியில் திரிபோஷா பெக்கற்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மன நலச் சுகாதார நல்வாழ்வில் கவனம் செலுத்தி 2022 ஆகஸ்ட் 16 ஆம் திகதி அடுத்த 10 வருடங்களுக்கான தேசிய மன நலச் சுகாதாரக் கொள்கை முன்வைக்கப்பட்டமை மன நலச் சுகாதாரத் துறையில் ஒரு முக்கிய அடைவாகும். அது தவிர, 2022 பெப்ரவரி 24 ஆம் திகதி, சுகாதார அமைச்சு மருந்தாளுநர்கள் சங்கம் மற்றும் எஸ்எல்ரீ மொபிடெல் ஆகியவற்றுடன் இணைந்து மருத்துவ நோயாளிகளுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மருந்துப் பொருட்கள் பற்றிய தரவுகளின் கிடைக்கும் தன்மையை மேம்படுத்தும் முயற்சியை ஆரம்பித்தது.

சுகாதாரப் பராமரிப்பு ஊழியர் படை 2022 ஆம் ஆண்டில் 938 மருத்துவ உத்தியோகத்தர்களும் 2,153 தாதிமாரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் மூலம் மேலும் பலப்படுத்தப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட பதவி அடிப்படையிலான பதவியணி வகுதிகளின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.

அட்டவணை 5.9 | தெரிவுசெய்யப்பட்ட வகுதிகளின் வகிக்கும் பதவியணிகள்

வகுதிப் பெயர்	வகிக்கும் 31.12.2021	இல் உள்ளவாறானது 30.06.2022
மருத்துவ ஆலோசகர்கள்	1,860	1,970
பல்மருத்துவ ஆலோசகர்கள்	75	81
மருத்துவ உத்தியோகத்தர்கள்	12,558	13,496
பல்மருத்துவ அறுவை சிகிச்சையாளர்கள்	747	774
தாதிச் சகோதரிகள்/மாஸ்டர்கள்	498	933
தாதி உத்தியோகத்தர்கள்	25,940	28,093
ம.ஆ.தொழில்நுட்பவியலாளர்கள்	1,374	1,409
மருந்தாளர்கள்	1,217	1,253
ரேடியோகிர பர்கள்	502	515
இயன்மருத்துவச் சிகிச்சையாளர்கள்	584	600
மருத்துவச்சிகள்	1,312	1,368

மூலம்: 2022 செயலாற்றுகை மற்றும் முன்னேற்ற அறிக்கை, சுகாதார அமைச்சு

அட்டவணை 5.10 | குணப்படுத்தல் சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளில் செய்யப்பட்ட முக்கிய மூலதன முதலீடுகள்

ரூபா. மில்லியன்

முதலீட்டுப் பரப்பு	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020	2021	2022
வைத்தியசாலை அபிவிருத்திச் செயற்திட்டங்கள்	7,775	8,117	11,431	15,429	10,373	10,649	14,654	8,196	31,058	18,657	24,143
வைத்தியசாலை புனரமைப்பு மற்றும் நிர்மாணம்	1,828	2,754	3,403	4,206	3,735	4,814	6,513	6,381	3,734	5,067	2,595
மருத்துவ உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள்	1,969	3,880	3,208	5,068	4,093	4,732	4,438	5,481	3,949	4,590	1,484
கட்டிடங்கள் மற்றும் தளபாடங்கள்	114	127	200	224	325	243	352	346	235	230	125
வைத்தியசாலைகளுக்கான அம்பியூலன்ஸ் வண்டிகள்	69	250	5	-	-	-	-	-	-	-	1,608
மொத்தம்	**11,755**	**15,128**	**18,247**	**24,927**	**18,527**	**20,438**	**25,957**	**24,404**	**38,976**	**28,544**	**29,954**

மூலம்: வரவு செலவுத்திட்டத் திணைக்களம்/பொதுக் கணக்குகள் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

பொதுக் கல்வி

அரசாங்கத்தால் பாடசாலைக் கல்விக்காகச் செய்யப்பட்ட மொத்தச் செலவினம் 298.1 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது 2021 ஆம் ஆண்டின் 257.3 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 15.9 சதவீத அதிகரிப்பாகும். அதற்கிணங்க, கல்வி அமைச்சின் செலவினங்கங்கள் 100.3 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன் ஒன்பது மாகாண சபைகளுக்கான மத்திய அரசாங்கத்தின் மாற்றல்கள் 197.9 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. மீளெழும் செலவினங்கங்கள் 2022 ஆம் ஆண்டில் 19.5 சதவீதத்தால் அதிகரித்து 290.1 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக நிலுவையாக இருந்த கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காக மூலதன முதலீடுகள் மட்டுப்படுத்தப்பட்டதனால் 2022 ஆம் ஆண்டில் மூலதன முதலீடுகள் 44.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 8.0 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டன.

ஆசிரியர்களும் அதிபர்களும் நீண்ட காலமாக காணப்படும் சம்பள முரண்பாடுகளுக்குத் தீர்வுகேட்டு நீண்ட கால தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இந்தப் பிரச்சினைக்கு 2022 வரவுசெலவுத்திட்ட உரையில் முன்மொழியப்பட்ட சம்பள அதிகரிப்புக்கள் மூலம் தீர்வு காணப்பட்டது. அதனால், 2021 ஆம் ஆண்டுன் ஒப்பிடுகையில் ஆளணிக்கான வேதனாதிகள் 80.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளன.

அட்டவணை 5.11 | 2021-2022 ஆம் ஆண்டுகளில் பாடசாலைக் கல்விக்கான செலவினங்கள்

ரூபா. மில்லியன்

	2021			2022 (அ)		
	மீளெழும்	மூலதன	மொத்தம	மீளெழும்	மூலதன	மொத்தம
கல்வி அமைச்சு	60,670**	10,013**	70,683	95,221	5,030	100,251
மாகாண சபைகள்(அ)	182,000	4,573	186,573	194,875	3,012	197,887
மொத்தம்	**242,670**	**14,586**	**257,256**	**290,096**	**8,042**	**298,138**

மூலம்: பொதுக் கணக்குகள் திணைக்களம், நிதி ஆணைக்குழு
(அ) தற்காலிகமானது
* மாகாண சபைகளுக்கான மத்திய அரசாங்கத்தின் மாற்றல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன
** கல்வி அமைச்சின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மகளிர், சிறுவர் அபிவிருத்தி மற்றும் முன்பள்ளிகள் உள்ளடக்கப்படவில்லை

வளப்பு 5.2 | பாடசாலைக் கல்விக்கான செலவினம் (2011-2022)



மூலம் : வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

அட்டவணை 5.12 | பொதுக் கல்வித் துறையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய செயற்திட்டங்கள்

ரூபா. மில்லியன

	2022 (அ)
பாடசாலை - அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் மானியம்	386
பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம்	329
தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்திச் செயற்திட்டங்கள்	352
கிளிநொச்சியில் கல்விச் சூழல் மேம்பாட்டுச் செயற்திட்டம்	184
இடைநிலைப் பாடசாலைகளின் வசதிகளைத் தரமுயர்த்துதலும் 1000 தேசிய பாடசாலைகளை உருவாக்குதலும்	367
சிறுவர் நட்புறவான பாடசாலைகளை உருவாக்குதல்	115
கல்வியில் தரம்சார் அபிவிருத்தி மறுசீரமைப்புக்கள்	509

மூலங்கள்: பொதுக் கணக்குகள் திணைக்களம், நிதி ஆணைக்குழு
(அ) தற்காலிகமானது
மூமாகாண சபைகளுக்கான மத்திய அரசாங்கத்தின் மாற்றல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன

2022 இல் சமகால நெருக்டிகள் இருந்தபோதிலும், பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து இலவசக் கல்வியை உறுதி செய்வதற்காக மாணவர் நலத்திட்டங்கள் அப்படியே தொடரப்பட்டன. நலன்புரி நிகழ்ச்சிகளுக்கான மொத்தச் செலவினம் 10,230 மில்லியன் ரூபாவாகும். இது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 14.3 சதவீத வீழ்ச்சியாகும். இதற்கு பாட நூல்களை அச்சிடுவதில் ஏற்பட்ட தாமதம், காப்புறுதி உரிமை கோரல்களின் எண்ணிக்கை குறைந்த என்பனவே காரணமாகும்ட. 2023 ஆம் ஆண்டிற்கான பாடசாலைகளுக்கான முதல் தவணை தொடங்கும் தேதி ஒத்திவைக்கப்பட்டதாலும், தாள்கள் மற்றும் தேவையான அச்சுப் பொருட்கள் பற்றாக்குறையாலும் 2023 ஆம் ஆண்டிற்கான பாடப் நூல்கள் 2022 இல் அச்சிடப்படவில்லை.

பாடசாலை மாணவர்களின் போசாக்கு நிலையைப் பாதித்த உணவுப் பொருட்களின் விலை உயர்வைக் குறைப்பதற்காக, 2022 இல் அரசாங்கம் ஒரு மாணவரின் நாளொன்றுக்கான சத்துணவின் விலையை 30 ரூபாவில் இருந்து 100 ரூபாவாக உயர்த்தி 3,308 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது.

அட்டவணை 5.13 |முக்கிய நலன்புரி நிகழ்ச்சிகளுக்கான செலவினங்கள்

ரூபா. மில்லியன்

நிகழ்ச்சித்திட்டம்	2014	2015	2016	2017	2018	2019	2020	2021	2022 (அ)
பாடசாலை போஷாக்கு உணவு நிகழ்ச்சித்திட்டம்	3,725	3,938	3,916	4,434	5,325	5,063	2,299	1,685	3,308
பாட நூல்கள்	2,700	3,896	5,415	4,281	4,161	4,599	4,550	2,609	1,650
சீருடைகள்	3,574	2,261	2,157	2,479	1,073	3,789	2,877	2,492	2,355
கஷ்ட மற்றும் அதி கஷ்ட பாடசாலைகளிலுள்ள	299	291	480	640	220	640	492	901	967
மாணவர்களுக்கான சப்பாத்துகள் புலமைப் பரிசில்கள் - தரம் 5*	556	623	613	602	605	607	872	791	855
"சுரக்ஷா" காப்புறுதித் திட்டம்				2,700	33	1,833	1,500	3,331	993

மூலம்: கல்வி அமைச்சு, மாகாண சபைகள், நிதி ஆணைக்குழு, பொதுக் கணக்குகள் திணைக்களம்
(ய) தற்காலிகமானது
* 2014 முதல் மாகாண மற்றும் தேசிய பாடசாலைகளின் தரம் 5 புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன

அட்டவணை 5.14 | முக்கிய நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களால் பயனடைந்த மாணவர்கள்

	2014	2015	2016	2017	2018	2019	2020	2021	2022 (அ)
பாடசாலை போஷாக்கு உணவு நிகழ்சசித்திட்டம்	890,404	937,178	973,245	1,105,605	1,089,705	1,067,465	1,079,097	1,082,136	1,078,238
பாட நூல்கள்	4,076,813	4,277,668	4,345,491	4,355,101	3,628,951	3,642,528	4,180,000	4,180,000	4,180,000
சீருடைகள்	4,423,202	4,415,099	4,341,581	4,326,951	4,357,797	4,725,445	4,180,000	4,180,000	4,180,000
புலமைப் பரிசில்கள் - தரம் 5*	114,458	122,149	140,297	144,739	130,000a	135,000	130,457	103,800	145,000
"சுரக்ஷா" காப்புறுதித் திட்டம்					40,978b	74,328	100,000	34,778	35,906

மூலம்: கல்வி அமைச்சு, மாகாண சபைகள், நிதி ஆணைக்குழு, பொதுக் கணக்குகள் திணைக்களம்
(ய) தற்காலிகமானது
* 2014 முதல் மாகாண மற்றும் தேசிய பாடசாலைகளின் தரம் 5 புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன

பல்கலைக்கழகக் கல்வி

அரசாங்கத்தின் பல்கலைக்கழகக் கல்விக்கான மொத்தச் செலவினங்கள் 75.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.3 சதவீத வீழ்ச்சியாகும். 57.4 பில்லியன் ரூபா மீளெழும் செலவினங்களில் 50.1 பில்லியன் ரூபா உயர் கல்வித் துறையிலுள்ள கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் சம்பளங்களையும் வேதனங்களையும் செலுத்துவதற்காகச் செலவிடப்பட்டது.

2021 இன் 21.9 பில்லியன் ரூபாயுடன் ஒப்பிடுகையில் மொத்த மூலதன முதலீடு 2022 இல் 18.3 பில்லியனாக இருந்தது, இது முக்கியமாக மூலதனச் சொத்துக்களை நிர்மாணித்தல், புனர்வாழ்வு மற்றும் மூலதனச் சொத்துக்களின் மேம்பாடு, நிலையான சொத்துக்களின் கையகப்படுத்தல், மனித மூலதன அபிவிருத்தி, ஆராய்ச்சிச் செயற்பாடுகளைப் பலப்படுத்தல் என்பவற்றுக்காகப் பயன்படுத்தப்பட்டது. பல்கலைக்கழகங்களில் 62 நிர்மாணச் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கான 17 மாடிகள் கொண்ட முன் மருத்துவ கிளினிக் கட்டடம் 5,688 மில்லியன் ரூபா செலவில் பூர்த்தி செய்யப்பட்டது. இது உள்ளூர் நிதிகளைப் பயன்படுத்தி உயர் கல்வித் துறையில் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரும் செயற்திட்டமாகும்.

அட்டவணை 5.15 | உயர் கல்விக்கான முதலீடு (2015-2022)

ரூபா. மில்லியன்

ஆண்டு	2015	2016	2017	2018	2019	2020	2021	2022*
மீளெழும்	26,983	29,300	31,246	37,457	47,323	51,506	54,734	57,351
மூலதன	17,099	20,276	16,176	24,420	23,512	22,615	21,884	18,289
மொத்தம்	44,082	49,576	47,422	61,877	70,835	74,121	76,618	75,640

மூலங்கள்: பொதுக் கணக்குகள் திணைக்களம், வரவு செலவுத்திட்டத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

உள்ளூர் மற்றும் உலகளாவிய தொழிற் சந்தையில் மாற்றமடையும் கேள்வியைப் பூர்த்திசெய்யக்கூடிய வகையில் 2022 ஆம் ஆண்டில் இருபத்து இரண்டு புதிய இளமானிப் பட்ட நிகழ்ச்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்துடன், பல்கலைக்கழக மாணவர்களின் மென் திறன்களைப் பலப்படுத்துவதன் மூலம் அவர்களின் சுய விபரங்களைத் தரமுயர்த்தும் நோக்கில், புதிதாக பல்கலைக்கழக அனுமதி பெறுபவர்களுக்கான பல்கலைக்கழகத்திற்கு முந்திய இணையவழி/ மின் கற்றல் ஆங்கிலப் போதனை நிகழ்ச்சி அறிமுகப்படுத்தப்பட்டது.

2021 ஆம் ஆண்டில் க.பொ.த. உ/த பரீட்சைக்குத் (2021/2022) தோற்றிய மாணவர்களிலிருந்து 42,519 மாணவர்களை உள்வாங்கும் பணி தொடர்ந்து

நடைபெற்று வருகின்றது. அதற்கிணங்க, 2021/2022 பல்கலைக்கழக அனுமதிக்காக 2022 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ள மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 43,000 ஆகும்.

அட்டவணை 5.16 | மாணவர் அனுமதி

கல்வியாண்டு	மாணவர்களின் எண்ணிக்கை
2015/2016	29,083
2016/2017	30,668
2017/2018	31,451
2018/2019	31,902
2019/2020	41,669
2020/2021	43,927
2021/2022	42,519*

மூலம் : பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு
(அ) தற்காலிகமானது

மகாபொல மற்றும் உதவித்தொகை

வருடாந்த வருமானம் 500,000 ரூபாவை விடக் குறைவாக உள்ள குடும்பங்களைச் சேர்ந்த பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கும் மகாபொல மற்றும் உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது

திறன் விருத்தி

திறன் விருத்தி, தொழிற் கல்வி என்பவற்றுக்கான மொத்தச் செலவினம் 2022 ஆம் ஆண்டில் 9,281 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இதில் 7,568 மில்லியன் ரூபா மீளெழும் செலவினங்களுக்காகவும் 1,713 மில்லியன் ரூபா மூலதன முதலீட்டுக்காகவும் செலவிடப்பட்டது.

அட்டவணை 5.17 | பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவி

ரூபா மில்லியன்

ஆண்டு	2015	2016	2017	2018	2019	2020	2021	2022 (அ)
மகாபொல	561	940	593	1,304	1,269	1,366	1,138	952
உதவித்தொகை	481	650	441	521	695	759	862	873
மொத்தம்	**1,042**	**1,590**	**1,034**	**1,825**	**1,964**	**2,125**	**2,000**	**1,825**

மூலம் : வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

அட்டவணை 5.18 | நிதி உதவி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் பயனடைந்த பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை

ஆண்டு	2015	2016	2017	2018	2019	2020	2021	2022(அ)
மகாபொல	45,219	47,595	49,472	51,652	55,491	57,773	63,029	63,224
உதவித்தொகை	20,929	20,265	20,093	22,450	22,923	23,494	29,182	33,842
மொத்தம்	**66,148**	**67,860**	**69,565**	**74,102**	**78,414**	**81,267**	**92,211**	**97,066**

(அ) தற்காலிகமானது

அரச சார்பற்ற உயர் கல்வி

அரசாங்க பல்கலைக்கழக முறையில் காணப்படும் வாய்ப்புக்கள் குறைவாக உள்ளமையைக் கவனத்தில் எடுத்து, உயர் தரம் சித்தியடைந்த மாணவர்களுக்கு அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி வாய்ப்புக்களை மேம்படுத்தும் நோக்கில் வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டத்திற்காக 2022 ஆம் ஆண்டில் 403 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டது. அதற்கிணங்க இந்த வருடத்தில் இந்தக் கடன் திட்டத்தின் கீழ் 17 அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களில் 108 இளமானிப் பட்டப் பாடநெறிகளைத் தொடர்வதற்கு 4,665 மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

உரு 5.3 | திறன் விருத்தித் துறைக்கான செலவினங்கள் 2021 மற்றும் 2022 (ரூபா. மில்லியன்)



மூலம் : வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

அட்டவணை 5.19 | திறன் விருத்தி தொடர்பாக 2022 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய செயற்திட்டங்கள்

ரூபா மில்லியன்

ரூபா. மில்லியன்	2022 செலவினம்
திறன் விருத்தித் துறை அபிவிருத்தி நிகழ்சசித்திட்டம் (ஆசிய அபிவிருத்தி வங்கி/உலக வங்கி)	474
இலங்கையில் தொழிற்கல்வி பயிற்சி (இலங்கை அரசாங்கம் ஜேர்மனி) GIZ	286
நிர்மாணத் துறைக்கான ஆற்றல் விருத்திச் செயற்திட்டம இலங்கையிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் தொழில்நுட்பவியல் கல்லூரிகளிலும் பாடநெறிகள் (இலங்கை அரசாங்கம்-KOICA)	53
சுயதொழில் ஊக்குவிப்பு முன்னெடுப்பு (SEPI) நிகழ்ச்சித்திட்டம்	20
லுழர டுநயன (இலங்கை அரசாங்கம்-USAID)	82
தொழிற்கல்வியை மேம்படுத்துதல்	98
7 தொழில்நுட்பவியல்/ தொழில்நுட்பக் கல்லூரிகளை நவீனமயமாக்கல்	177
தெழில்மற்றும் தொழில்நுட்பவியல் பயிற்சிகளை உருவாக்குதல்	37

விஞ்ஞான மற்றும் புத்தாக்க அபிவிருத்தி

2022 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க உபதுறைக்கான செலவிம் 2,174 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. மூலதன முதலீட 500 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதேவேளை ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத் உபதுறையின் கீழ் உள்ள நிறுவனங்களின் மீளெழும் தன்மையிலான செலவினங்கள் 1,674 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

இந்தத் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய செயற்திட்டங்களில் மெகாட்ரோனிக் இயலுமாக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி முன்னெடுப்பின் கீழ் விஞ்ஞான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், சோலார் பெனல்களுக்கான மாதிரி உற்பத்தி, பொருள் வடிவமைப்புப் பொறியியலுக்கான ஆதரவு, தரங்குன்றிய மண்ணை மேம்படுத்துதல், பாடசாலை விஞ்ஞானச் சங்க நிகழ்சசித்திட்டம் என்பன உள்ளடங்கும். இந்தச் செலவின விபரங்கள் அட்டவணை 5.20 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 5.20 | விஞ்ஞானம் மற்றும் புத்தாக்கம் தொடர்பாக 2022 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய செயற்திட்டங்கள்

ரூபா. மில்லியன்

விபரம்	2022 செலவினம்
விதாதா நிகழ்சசித்திட்டம்	622
விஞ்ஞான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்	63
சோலார் பெனல்களுக்கான மாதிரி உற்பத்தி	22
தரங்குன்றி மண்ணை மேம்படுத்தல் (மீ)	9
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை ஊக்குவித்து வர்த்தகமயப்படுத்தல்	6

மூலம் : வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

5.8.2 போக்குவரத்து

பஸ் பயணிகள் போக்குவரத்து

2022 ஆம் ஆண்டில் அரசாங்கம் இத்துறைக்காக 13.5 பில்லியன் ரூபாவைச் செலவிட்டதுடன் அதில் 11.3 பில்லியன் ரூபா மீளெழும் செலவினங்களாகச் செலவிடப்பட்டுள்ளது. அதேநேரம், பாடசாலை மற்றும் உயர் கல்வி மாணவர்களுக்கான பருவகாலப் பயணச் சீட்டுக்களை வழங்குவதற்கான மீளெழும் செலவினமாக 6.4 பில்லியன் ரூபாவை அரசாங்கம் செலவிட்டது. சமூகப் பொறுப்பு பஸ் சேவை, ஆயுதப் படையினருக்கான பஸ் அனுமதிச் சீட்டுக்கள் வழங்குதல் என்பவற்றுக்கான பங்களிப்பாக கிராமப் புறங்களிலுள்ள வருமானம் உழைக்காத பயண வழிகளில் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளை இயக்குதல் போன்ற ஏனைய நிவாரணச் சேவைகளுக்காக 3.3 பில்லியன் ரூபா செலவிடப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் 12.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட மீளெழும் செலவினங்கள் 2022 ஆம் ஆண்டில் 10 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 11.3 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு 500 புதிய பஸ் வண்டிகளைக் கொள்வனவு செய்தல், பஸ் தொகுதியை மேம்படுத்துதல், சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுதல் உள்ளிட்ட மூலதனச் செலவினமாக 2,224 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

புகையிரதத் துறை

பொருளாதார நெருக்கடி மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட எரிபொருள் விலை அதிகரிப்பு என்பவற்றின் காரணமாக தனியார் பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டமையினால் 2022 ஆம் ஆண்டில் புகையிரதப் போக்குவரத்திற்கான கேள்வி அதிகரித்தது. 2022 ஆம் ஆண்டில் புகையிரதத் துறையின் மீளெழும் செலவினமாக 23.5 பில்லியன் ரூபா செலவிடப்பட்ட அதேவேளை பொது மக்களுக்குத் தடங்கலின்றிய புகையிரதச் சேவையினை வழங்கும் நடைமுறைப்படுத்தப்பட்ட கொழும்பு புறநகர் புகையிரத வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்திட்டத்திற்கான செலவினம் உட்பட 21.6 பில்லியன் ரூபா மூலதனச் செலவினமாகச் செலவிடப்பட்டது. இந்தப் பின்னணியில், புகையிரதத் துறையின் நிர்வாக மற்றும் தொழிற்பாட்டுச் செலவுகள் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 61 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. மீளெழும் செலவினங்களில் அதிகரிப்புக் காணப்பட்ட போதிலும், நிர்மாணச் செயற்பாடுகள் மந்தகதியில் நடைபெற்றமையினால், 2022 ஆம் ஆண்டில் புகையிரதப்

போக்குவரத்துத் துறைகான மொத்தச் செலவினம் 45.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது 2021 ஆம் ஆண்டின் மொத்தச் செலவினமான 48.7 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 7 சதவீத வீழ்ச்சியாகும்.

அட்டவணை 5.21 | பொதுப் போக்குவரத்து தொடர்பில் 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட முக்கிய செயற்திட்டங்கள்

ரூபா. மில்லியன்

விபரம்	2022 செலவினம்
140 பயணிகள் கோச்சுகளின் பெறுகை மற்றும் இரத்மலானை வேலைத் தளத்திற்கான மேம்பாடுகள்	8,295
மாஹோ முதல் ஓமந்தை வரையான புகையிரதப் பாதையைப் புனரமைத்தல் மற்றும் சமிக்கைகள் பொருத்துதல்	4,645
300 பயணிகள் கோச்சுகளைப் புனரமைத்தல்	366
நிரந்தரப் பாதையை புதிய தண்டவாளங்கள் மற்றும் சிலிப்பர் கட்டைகள் மூலம் புனரமைத்தல்	1,902
கொழும்பு புறநகர் புகையிரத வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்திட்டம்	2,660
பாடசாலை மற்றும் உயர் கல்வி பருவகால டிக்கட்டுகள், ஆயுதப் படையினர் - பஸ் அனுமதிப்பத்திரங்கள்	6,539
வருமான தராத கிராமியப் பாதைகளில் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளை இயக்குதல்	2,400
இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் தொகுதியை மேம்படுத்துல்	750

மூலம் : வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

துறைமுகம் மற்றும் கப்பற்துறை

துறைமுகங்கள், கப்பல் துறை, சிவில் விமானப் போக்குவரத்து துறைக்காக அரசாங்கம் 2022 ஆம் ஆண்டில் 3,267 மில்லியன் ரூபாவை செலவிட்டது. அதில் 962 மில்லியன் ரூபா மீளெழும் செலவினமாகவும் 2,305 மில்லியன் ரூபா மூலதனச் செலவினமாகவும் காணப்பட்டது. மீளெழும் செலவினங்களில் 591 மில்லியன் ரூபா, 329 மில்லியன் ரூபா என்பன முறையே வட்டி மற்றும் கடன் தவணைத் தொகை என்பவற்றுக்காகச் செலவிடப்பட்டன. 2022 ஆம் ஆண்டின் மீளெழும் செலவினங்கள் 2021 ஆம் ஆண்டில் பதிவாக 758 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 27 சதவீத அதிகரிப்பாகும். முன்னர் சுற்றுலாத் துறை அமைச்சின் கீழ் இருந்த சிவில் விமானச் செயற்பாடுகள் துறைமுக மற்றும் கப்பற்துறை அமைச்சின் விடயப் பரப்பிற்குள் கொண்டு வரப்பட்டமையே இதற்குக் காரணமாகும்.

அட்டவணை 5.22 | துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறையில் ஆரம்பிக்கப்பட்ட முக்கிய செயற்திட்டங்கள் - 2022

ரூபா. மில்லியன்

விபரம்	2021 செலவினம்
சூரியவெவ சர்வதேச கிரிக்கெட் மைதானச் செயற்திட்டம்	920
துறைமுக அணுகல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலையுடன் தொடர்புடைய கட்டடத் தொகுதி நிர்மாணம் (இலங்கை அரசாங்கம்-ஆசிய அபிவிருத்தி வங்கி)	280
காங்கேசன்துறை துறைமுகத்தைப் புனரமைத்தல் (இலங்கை அரசாங்கம் - இந்தியா)	55

மூலம்: வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

வீதி அபிவிருத்தி

2022 ஆம் ஆண்டுக்கான வீதி அபிவிருத்தித் துறையில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களில் அதிவேகப் பாதைகள் மற்றும் பாலங்களின் நிர்மாணம், வீதிகளின் புனரமைப்பு, வீதிகளை விரிவாக்கி மேம்படுத்துல், வீதிகளையும் பாலங்களையும் பராமரித்தல் என்பன அடங்கும். சில கட்டடப் பொருட்களின் பற்றாக்குறை, பொருட்களின் அதிகரித்த விலைகள், இறக்குமதிக் கட்டுப்பாடுகள் என்பவற்றின் காரணமாக முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்கள் பொதுவாக குறைந்த முன்னேற்றத்தையே பதிவுசெய்தன. மேலும், பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்வதற்கு அரசாங்கம் பின்பற்றிய முன்னெடுப்புக்களில் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு குறைந்த முன்னுரிமையே வழங்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டில் அரசாங்கம் வீதித் துறையின் அபிவிருத்திக்காக சுமார் 200 பில்லியன் ரூபாவை முதலீடு செய்தது. இது 2021 ஆம் ஆண்டின் செலவினமான 213 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 6 சதவீத வீழ்ச்சியாகும்.

வீதி அபிவிருத்திக்காகச் செய்யப்பட்ட மொத்த முதலீட்டில் சுமார் 34.4 பில்லியன் ரூபா (ஏறக்குறைய 17%) கடுகதிப் பாதைகளின் அபிவிருத்திக்காக முதலீடு செய்யப்பட்டது. மத்திய கடுகதிப் பாதையின் கடவத்தை முதல் மீரிகமை வரையான பகுதி | மற்றும் இங்குருக்கடைச் சந்தியில் இருந்து துறைமுக நகரம் வரையான துறைமுக அணுகல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை என்பனவே 2022 ஆம் ஆண்டில் தொடரப்பட்ட இரண்டு பிரதான அதிவேகப் பாதை அபிவிருத்திச் செயற்திட்டங்களாகும்.

ஒருங்கிணைந்த வீதி அபிவிருத்தி நிகழ்சசித்திட்டம், பிரதான வீதிகளையும் கடுகதிப் பாதைகளையும் அணுகுவதற்கான மாற்றுப் பாதை வலையமைப்பு அபிவிருத்தி உள்ளிட்ட நெடுஞ்சாலை அபிவிருத்திக்கான செலவினம் 2022 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 146.3 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. அது தவிர, வீதிப் பராமரிப்புக்காக 3.9 பில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டது.

பாலம் நிர்மாணத்திற்கான முதலீடு 2022 ஆம் ஆண்டில் 7.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன் கொஹுவலை, கெட்டம்பே, உத்தரானந்த மாவத்தை மற்றும் கம்பனித்தெரு ஆகிய இடங்களில் மேம்பால நிர்மாணப் பணிகளைத் தொடர்வதற்குக் கணிசமானளவு தொகை ஒதுக்கப்பட்டது.

ஆட்டவணை 5.23 | 2022 ஆம் ஆண்டின் முக்கிய வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்கள்

ரூபா மில்லியன்

செயற்திட்டத்தின் பெயர்	2022 உள்ளபடியான செலவினம்
கடுகதிப் பாதைகள்	**34,397**
அதில் மத்திய கடுகதிப் பாதை	15,990
துறைமுக அணுகல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை	18,030
புதிய களனிப் பாலத்திலிருந்து அதுருகிரியை வரையான உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை	140
கொழும்பு - இரத்தினபுரி - பெல்மடுல்லை கடுகதிப் பாதை	236
நெடுஞ்சாலை அபிவிருத்தி	**146,274**
அதில் ஒருங்கிணைந்த வீதி மேம்பாட்டு நிகழ்சசித்திட்டம்	41,524
தெற்கு வீதி இணைப்புச் செயற்திட்டம்	2,186
மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள வீதிகளையும் பாலங்களையும் அகலப்படுத்தி மேம்படுத்துல்	1,246
பதுளை-செங்கலடி வீதியில் பேராதனை முதல் பதுளை வரையான பகுதியைப் புனரமைத்தல்	1,163
மெரீன் ட்ரைவ் வீதியை பாணந்துரை வரை விரிவுபடுத்துதல்	350
கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்திச் செயற்திட்டம்	1,186
வாகனப் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக பிரதான வீதிகளையும் கடுகதிப் பாதைகளை அணுகுவதற்கான மாற்று வீதி வலையமைப்பொன்றை உருவாக்குதல்	52,529
அனைத்தையும் உள்ளடக்கிய இணைப்பு மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டம்	1,990
கிராமிய வீதி மீளெழுச்சி நிகழ்சசித்திட்டம் (மகநெகும)	3,810
பராமரிப்பு	**3,866**
வீதிகளை அகலமாக்கி மேம்படுத்துதல் மற்றும் வீதிப் பராமரிப்பு	3,866
பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள்	**7,530**
அதில் தேசிய நெடுஞ்சாலைகளிலுள்ள 25 பாலங்களை மீள் நிரமாணம் செய்தல்	664
இரண்டாவது புதிய களனிப் பாலச் செயற்திட்டம்	1,476
கொஹுவலை மற்றும் கெட்டம்பேயில் மேம்பாலங்களை வடிவமைத்து நிர்மாணித்தல்	860
உத்தரானந்த மாவத்தையில் புகையிரதப் பாதைக்கு மேலாகவும் கம்பனித்தெரு புகையிரத நிலையத்திற்கு அருகிலும் மேம்பாலங்கள் அமைத்தல்	3,430
நிறுவனம்சார் உதவி	**8,013**
வீதி அபிவிருத்தி அதிகாரசபை	8,013
மொத்தம்	**200,080**

மூலம் : வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

5.8.3 சமூக நலனோம்பல் மற்றும் சமூகப் பாதுகாப்பு

சமூக நலனோம்பல் மற்றும் சமூகப் பாதுகாப்புக்காக அரசாங்கத்தால் செய்யப்பட்ட செலவினம் 2022 ஆம் ஆண்டில் 738 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட 609.8 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் இது 21 சதவீத அதிகரிப்பாகும். உர மானிய அதிகரிப்பு, சமுர்த்தி, முதியோர், சிறுநீரக நோயாளிகள் மற்றும் அங்கவீனர்களுக்கு உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும் கொடுப்பனவுக்கு மேலதிகமாக 06 மாதங்களாக பொருளாதார சிரமங்களுக்கு உள்ளான காத்திருப்பு பட்டியலில் உள்ளவ மனிதர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகளை வழங்குதல் மற்றும் நலன்புரி கொடுப்பனவுகளை வழங்குதல் ஆகியவற்றால் இந்த அதிகரிப்பு ஏற்பட்டது. ஆதற்கிணங்க சமுர்த்தி மானியத்திற்காக அரசாங்கம் 116 பில்லியன் ரூபாவையம், முதியோர் கொடுப்பனவுகளுக்காக 16.4 பில்லியன் ரூபாவையும், சிறுநீரக நோயாளிகளுக்காக 2.7 பில்லியன் ரூபாவையும், அங்கவீனர்களுக்காக 5.1 பில்லியன் ரூபாவையும் 2022 ஆம் ஆண்டில் செலவிட்டது. கர்ப்பிணிப் பெண்களின் போஷாக்கு மட்டத்தை அதிகரிப்பதை இலக்காகக் கொண்ட போஷாக்கு உணவுப் பொதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒரு பெண்ணுக்கு 20,000 ரூபா கொடுப்பனவைத் தொடர்ந்து வழங்குவதற்காக 3.7 பில்லியன் ரூபாவை அரசாங்கம் செலவிட்டது. மேலும், 2022 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 35,900 பாடசாலைப் பிள்ளைகள் சுகாதாரக் காப்புறுதியின் கீழ் 993 மில்லியன் ரூபா செலவில் காப்புறுதி செய்யப்பட்டார்கள்.

5.8.4. விவசாயம்

2022 ஆம் ஆண்டில் அரசாங்கம் விவசாயத்துறைக்காக 107 பில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளது. இது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 48 சதவீத அதிகரிப்பாகும்.

அட்டவணை 5.24 | 2022 ஆம் ஆண்டில் விவசாயத் துறைக்கான செலவினங்கள்

ரூபா. மில்லியன்

விபரம்	2022 (அ) செலவினங்கள்
உணவுப் பயிர்கள்	94,089
பெருந்தோட்டக் கைத்தொழில்	7,757
பண்ணை விலங்கு அபிவிருத்தி	971
மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள்	2,729
காணி மற்றும் காணி அபிவிருத்தி	1,988
இறுதி மொத்தம்	**107,534**

மூலம் : வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

உணவுப் பயிர்கள்

2022 ஆம் ஆண்டில் நெல், சோளம், உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், காய்கறிகள், பழங்கள் போன்ற உணவுப் பயிர்களுக்காக அரசாங்கம் 94 பில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளது. இதில் சேதனப் பசளை மானியத்திற்கான 62 பில்லியன் ரூபா செலவினமும் அடங்கும். 2022 ஆம் ஆண்டில் விவசாய விரிவாக்கம், விதை உற்பத்தி, மற்றும் நடுகைப் பொருட்களை மேம்படுத்துல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஊடாக விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கான பல்வேறு செயற்திட்டங்களும் நிகழ்ச்சிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. தெரிவுசெய்யப்பட்ட பயிர்களுக்கான உற்பத்தித்திறன், வர்த்தகமயமாக்கல், பெறுமதிச் சேர்க்கை, சந்தை அணுகல் என்பவற்றை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்ட விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம், சிறிய விவசாய வியாபாரப் பங்குடமை என்பவற்றின் அமுலாக்கத்திற்காக 5.2 பில்லியன் ரூபா செலவிடப்பட்டது. விவசாயிகள் காப்புறுதித் திட்டத்திற்கான அரசாங்கப் பங்களிப்பு 4 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இதன் மூலம் இயற்கை அனர்த்தங்களால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களினால் விவசாயிகளுக்கு ஏற்படும் அபாயங்களைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பெருந்தோட்டத் துறை

விரிவாக்கற் சேவைகளையும், நடுகைப் பொருட்களையும் மானிய விலையில் வழங்கியதன் மூலம் அரசாங்கம் 2022 ஆம் ஆண்டில் தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் ஏனைய ஏற்றுமதிப் பயிர்களுக்காக 7.7 பில்லியன் ரூபாவை முதலீடு செய்தது. அது தவிர, அரசாங்கம் பெருந்தோட்டதப் பயிர்களுக்கான பெறுமதிச் சேர்க்கையை ஊக்குவித்ததுடன் மீள் நடுகை மற்றும் புதிய நடுகைச் செயற்பாடுகளுக்கு நிதியுதவியும் வழங்கியது.

2022 இல் கறுவா, மிளகு, ஏலக்காய், கராம்பு, சாதிக்காய், கோப்பி, கொக்கோ, வெணிலா, வெற்றிலை, சிட்ரோனெல்லா, எலுமிச்சம்பழம், இஞ்சி, மஞ்சள் மற்றும் பாக்கு போன்ற ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கு வசதியாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் மூலம் 241 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

மீன்பிடித் துறை

2022 ஆம் ஆண்டில் மீன்பிடித் தொழிலுக்கான அரசாங்கச் செலவினம் 2.7 பில்லியன் ரூபாவாகும், அதில் 1.6 பில்லியன் ரூபாய்கள் கடல் மீன்பிடித் துறையில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் நங்கூரங்கள் ஆகியவற்றின் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக செலவிடப்பட்டது. மேலும், 2022 ஆம் ஆண்டில், குறிப்பாக குளங்களைச் சுத்தப்படுத்துதல், மீன் வளர்ப்பு மற்றும் நன்னீர்நிலைகளில் மீன் குஞ்சுகளை சேமித்து வைப்பது போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் உள்நாட்டு மீன்பிடித் துறையின் வளர்ச்சிக்காக சுமார் 709 மில்லியன் ரூபாய் பயன்படுத்தப்பட்டது.

கால் நடை வளங்கள்

2022 ஆம் ஆண்டில், இனப்பெருக்கப் பண்ணைகள், செயற்கை கருவூட்டல் மூலம் விலங்கு இனப்பெருக்கம், நோய்க் கட்டுப்பாடு, தடுப்பூசிகள் உற்பத்தி, பண்ணை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி திட்டங்கள் உட்பட கால்நடை துறைக்காக 971 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

5.8.5. நீர்ப்பாசனம்

2022 ஆம் ஆண்டில் நீர்ப்பாசனத் துறைக்கான மொத்த அரசாங்க செலவினம் 58 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டில், நடைபெற்று வரும் செயற்திட்டங்களை சீராக செயல்படுத்துதல், சிறு குளங்கள் மற்றும் கால்வாய்களை புனரமைத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள நடுத்தர மற்றும் பெரிய நீர்ப்பாசன திட்டங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. பாரிய, நடுத்தர மற்றும் சிறியளவான நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனரமைக்கும் பணி, குறிப்பாக கீழருவிகளுக்கு நீர் மூலங்கள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக மேல் நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாத்தல், நீர்த்தேக்கங்களில் வண்டல் அகற்றல் என்பவற்றில் கவனம் செலுத்தும் வகையில் 2022 ஆம் ஆண்டில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. மகாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்சசித்திட்டம், உமாஓயா திசைதிருப்பல் செயற்திட்டம், உமாஓயா கீழருவி அபிவிருத்தி, யான்ஓயா செயற்திட்டம் என்பன போன்ற திட்டங்கள் 2022 ஆம் ஆண்டில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன.

5.8.6. வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அபிவிருத்தி

வீடமைப்பு நீர்மாணம் மற்றும் அதனுடன் தொடர்புடைய உட்கட்டப்பு அபிவிருத்திக்கான மொத்தச் செலவினம் 2022 ஆம் ஆண்டில் 10.4 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இதில் 1.3 பில்லியன் ரூபா மீளெழும் செலவினங்களுக்காகவும் 9.1 பில்லியன் ரூபா மூலதனச் செலவினங்களுக்காகவும் செலவிட்டது. நடுத்தர வருமானம் பெறுவோருக்கான வீடமைப்புத் திட்டம், கொழும்பு நகரிலும் சுற்றுப் புறங்களிலுமுள்ள வசதி குறைந்த குடியிருப்புக்களை மீள்குடியேற்றுவதற்கான நகர மீளுருவாக்க நிகழ்சசித்திட்டம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கல், பெருந்தோட்ட பெருந்தோட்ட வீடமைப்பு நிகழ்சசித்திட்டம், “செமட்ட நிவஹன” வீடமைப்பு நிகழ்சசித்திட்டம் என்பன 2022 ஆம் ஆண்டில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட வீடமைப்புச் செயற்திட்டங்களாகும். 2022 இல் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்

பின்னணியிலும், கட்டுமானப் பொருட்களின் விலையில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பு காரணமாகவும், ஒட்டுமொத்த கட்டுமானத் துறையிலும் கடும் பின்னடைவு ஏற்பட்டதுடன், வீடு கட்டும் நடவடிக்கைகளும் மிகவும் மெதுவாகவே நடந்தன. இவ்வாறான சூழ்நிலையில், 2021 இல் 13.4 பில்லியன் ரூபாவாக இருந்த செலவினத்துடன் ஒப்பிடுகையில், 2022 இல் வீட்டு வசதிகளை வழங்குவதற்கான செலவு 22 வீதத்தால் குறைந்துள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் கரையோரப் பாதுகாப்பு

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் நிர்மாணப் பொருட்களின் விலைகளில் அசாதாரண அதிகரிப்புக் காணப்பட்டது. அது நிர்மாணக் கைத்தொழிலுக்குப் பாரிய தடையாக அமைந்தது. அதனால், நகர அபிவிருத்திச் செயற்பாடுகளில் நேர்மறையான வளர்ச்சியை எதிர்பார்ப்பது சாத்தியமற்றதாக இருந்தது. அதற்கிணங்க, நகர அபிவிருத்தித் துறையில் அரசாங்கத்தால் செய்யப்பட்ட மொத்தச் செலவினம் 2021 ஆம் ஆண்டின் 29.2 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 53 சதவீதத்தால் குறைவடைந்து 13.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இந்த மொத்தச் செலவினத்தில் 1.7 பில்லியன் ரூபா மீளெழும் செலவினங்களுக்காகவும் 11.9 பில்லியன் ரூபா மூலதனச் செலவினங்களுக்காகவும் செலவிடப்பட்டது. திண்மக் கழிவு முகாமை, ஆஏ ஓசநளள நயசட கப்பல் விபத்தினால் ஏற்பட்ட சுற்றாடல் சேதத்தை முகாமை செய்தல் உள்ளிட்ட சமுத்திரம் சுத்தமாக்கல் நிகழ்ச்சிகள் என்பவற்றுக்காக 4.3 பில்லியன் ரூபா செலவிடப்பட்டது. மேலும், வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட பாரிய கொழும்பு அபிவிருத்திச் செயற்திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

அட்டவணை 5.25 | வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி தொடர்பில் 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட முக்கிய செயற்திட்டங்கள

ரூபா. மில்லியன்

செயற்திட்டம்	2022 (அ) செலவினங்கள்
மெட்ரோ கொழும்பு நகர அபிவிருத்திச் செயற்திட்டம் (இலங்கை அரசாங்கம் - உலக வங்கி)	2,937
நகர மீளுருவாக்க நிகழ்சசித்திட்டம்	5,851
சியக் நகர/நகர உட்கட்டமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி நிகழ்ச்சி	2,170
மீள்குடியேற்றம்/பிரச்சினையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிரந்தர வீடுகள்	1,138
"செமட்ட நிவஹன" வீடமைப்பு நிகழ்சசித்திட்டம (ஒபட்ட கெயக் ரட்டட்ட ஹெட்டக்)	1,288
மூலோபாய நகர அபிவிருத்தி - யாழ்ப்பாணம் -(இலங்கை அரசாங்கம் - உலக வங்கி)	1,418
பெருந்தோட்ட வீடமைப்பு நிகழ்சசித்திட்டம்	164
பெருந்தோட்டத் துறையில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி	138
மெட்ரோ கொழும்பு திண்மக் கழிவு முகாமைச் செயற்திட்டம்	2,700

மூலம் : வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

குடிநீர் மற்றும் துப்புரவு

2022 ஆம் ஆண்டில் அரசாங்கம் நீர் வழங்கல் துறைக்காக 31.9 பில்லியன் ரூபாவைச் செலவிட்டதுடன் அதில் 719 மில்லியன் ரூபா சம்பளங்கள் மற்றும் வேதனங்களுக்கான கொடுப்பனவுகள் உள்ளிட்ட மீளெழும் செலவினங்களாகச் செலவிடப்பட்ட அதேவேளை 31.2 பில்லியன் ரூபா மூலதனச் செலவினமாகக் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் பதிவாகிய 54.2 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டின் மொத்தச் செலவினம் 41 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்குப் பிரதான காரணம் மூலதனச் செலவினங்கள் குறைக்கப்பட்டமையாகும்.

முன்னைய வருடங்களைப் போன்றே, நீர் வழங்கல் துறையில் 2022 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பெரும்பாலான செயற்திட்டங்கள் வெளிநாட்டுக் கடன்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருளாதார நெருக்கடியின் காரணமாக, வெளிநாட்டுப் படுகடன்களை மீள்கட்டமைக்க வேண்டிய தேவை காணப்பட்டது. அதற்கிணங்க, பெரும்பாலான இருதரப்புக் கடன் செயற்திட்டங்களளின் பௌதிக முன்னேற்றத்தில் பின்னடைவு காணப்பட்டதுடன் கணக்கீட்டுச் செலவுகளும் உரி முறையில் மேற்கொள்ளப்படவில்லை.

ஆட்டவணை 5.26 : நீர் வழங்கல் மற்றும் துப்புரவு தொடர்பில் 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட முக்கிய செயற்திட்டங்கள்

ரூபா. மில்லியன்

செயற்திட்டம்	2022 (அ) செலவினங்கள்
கண்டி வடக்கு மற்றும் பத்ததும்பறை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டம் - (இலங்கை அரசாங்கம்/சீனா)	1,620
"அனைவருக்கும் நீர்" நீர் வழங்கல் திட்டம் நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது	5,819
புாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமை மேம்பாட்டு முதலீட்டு நிகழ்சசித்திட்டம்- செயற்திட்டம் 1,2,3 (இலங்கை அரசாங்கம்/ ஆசிய அபிவிருத்தி வங்கி)	7,604
நீர் வழங்கல் மற்றும் துப்புரவு மேம்பாட்டுச் செயற்திட்டம் (இலங்கை அரசாங்கம்/உலக வங்கி)	3,117
யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவுச் செயற்திட்டம் (இலங்கை அரசாங்கம்/ஆசிய அபிவிருத்தி வங்கி)	3,106
பாரிய மாத்தளை நீர் வழங்கல் செயற்திட்டம் (இலங்கை அரசாங்கம்/பிரான்ஸ்)	1,629
கண்டி நகர கழிவுநீர் முகாமைச் செயற்திட்டம் (இலங்கை அரசாங்கம்/ஜய்கா)	1,084
அம்பத்தளை நீர் வழங்கல் முறைமை அபிவிருத்தி மற்றும் சக்தி சேமிப்புச் செயற்திட்டம் (இலங்கை அரசாங்கம்/பிரான்ஸ்)	2,917
தெதுரு ஓயா நீர் வழங்கல் செயற்திட்டம் (இலங்கை அரசாங்கம்/கொரியா)	563
அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் 1 (இலங்கை அரசாங்கம்/ஜய்கா)	649
ஆனமடுவை நீர் வழங்கல் செயற்திட்டம் (இலங்கை அரசாங்கம்/ஸ்பெய்ன்/ஹட்டன் நஷனல் வங்கி)	612
"பிரஜா ஜல அபிமான்" நீர் வழங்கல் திட்டம்	399
மாகாணங்களுக்கிடையிலான செயற்திட்டங்கள்/நிகழ்சசித்திட்டம்	91

மூலம் : வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

5.8.7 சுற்றாடல்

மனித-யானை மோதல் மற்றும் காடுகளின் பரப்பளவு குறைதல் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் அதே வேளையில், முறையான கழிவு முகாமை மற்றும் காடுகள் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாப்பதன் மூலம் சுற்றாடலைப் பேணிப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பிற்கு அரசாங்கம் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் அளித்துள்ளது.

வனப் பாதுகாப்பு

வுனப் பாதுகாப்பிற்காக அரசாங்கம் 500 மில்லியன் ரூபாயைச் செலவிட்டது, இச்செயற்பாடுகளில் வனப் பரப்பை விரிவுபடுத்துதல், கைத்தொழில் பெருந்தோட்டங்களை நிறுவுதல் மற்றும் முகாமை செய்தல், நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் பைன் பெருந்தோட்டங்களை பூர்வீக பரந்த இலை இனங்களாக மாற்றுதல் மற்றும் காட்டுத் தீ தடுப்பு போன்ற நடவடிக்கைகள் அடங்கும். அது தவிர, "சுரகிமு கங்கா" ஆற்றுப் பாதுகாப்பு நிகழ்சசித்திட்டத்தின் கீழ் ஆறுகளைப் பாதுகாப்பதற்காக 31 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

வனசீவராசிகள் பாதுகாப்பு

வனசீவராசிகள் பாதுகாப்பின் கீழ், மனித-யானை மோதல்களைத் தணிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டில் அதற்காக 386 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. மேலும், மின்வேலிகளை அமைப்பதற்கு 97 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட அதேவேளை வனசீவராசிகளின் வாழ்விடங்களைச் செறிவூட்டுவதற்காக 48 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. அது தவிர, உல்லாசப் பயணிகளுக்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கில் தேசியப் பூங்காக்களிலுள்ள வீதி வலையமைப்புக்களை மேம்படுத்துவதற்காக 9 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

06

காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம், பற்றாக்குறை நிதியளிப்பு மற்றும் கடன்கள்

6.1 மேன்நோக்கு

2022 ஆண்டில், மொத்த காசு உட் பாய்ச்சல் மற்றும் வெளிப் பாய்ச்சல் முறையே ரூபா 1,876.8 பில்லியனாகவும் ரூபா 4,233.4 பில்லியனாகவும் காணப்பட்டன. பொருளாதார வகுப்பாக்கத்தில் காணப்பட்ட முழுமொத்த பற்றாக்குறையான ரூபா 2,356.6 பில்லியன் பிரதானமாக உள்நாட்டு நிதி மூலங்களால் நிதியளிக்கப்பட்டது. அதன்படி, ஆண்டின் இறுதியில் மொத்த உள்நாட்டுக் கடன் இருப்பு ரூபா 16.0 ட்ரில்லியனாக இருந்த அதேவேளை, மொத்த வெளிநாட்டுக் கடன்கள் ரூபா 12.5 ட்ரில்லியனாகக் காணப்பட்டது. மொ.உ.உ விகிதத்திற்கான மொத்தப் படுகடன் 2021 இல் 100.1 சதவீதத்திலிருந்து 2022 இல் 113.8 சதவீதமாக அதிகரித்தது. 2022 இல் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் மொ.உ.உ. சதவீதமாக முறையே 62.3 சதவீதம் மற்றும் 51.6 சதவீதமாகக் காணப்பட்டது.

திறைசேரி காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம்

திறைசேரி காசுப்பாய்ச்சல் முகாமைத்துவமானது, நிதியாண்டில் அரசின் அரசிறைக் கொள்கையை வினைத்திறனாக, பயனுறுதியாக செயல்படுத்துவதற்கு பல்வேறு முகவர்களினூடாக போதுமான நிதி கிடைப்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. திறைசேரி காசுப்பாய்ச்சல் முகாமைத்துவ செயல்முறையானது ஒரு குறிப்பிட்ட நிதியாண்டிற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவு திட்டத்தினை செயல்படுத்தக்கூடிய நிதிப் பாய்ச்சலாக மாற்றி அமைக்கின்றது. நிதிப் பாய்ச்சல்களில் வருமானம் மற்றும் கடன்கள் வடிவிலான காசு உட்பாய்ச்சல்களையும் கடன் சேவைக் கொடுப்பனவுகள் உட்பட மீண்டெழும் மற்றும் மூலதனக் கொடுப்பனவுகள் இரண்டையும் கொண்டமைந்துள்ள செலவின வடிவிலான காசு வெளிப்பாய்ச்சல்களையும் உள்ளடக்குகின்றன.

6.2 அரசாங்கத் திறைசேரி காசுப்பாய்ச்சல் செயற்பாடுகள் - 2022

திறைசேரி காசுப் பாய்ச்சலுக்கான மொத்த வரவுகள், வருவாய் மதிப்பீடான ரூபா 2,383.7 பில்லியன்களின் 79 சதவீதமான தேறுகையுடன் வருவாய் மற்றும் பிற மூலங்களின் வடிவில் ரூபா 1,876.8 பில்லியன்களாக காணப்பட்டன, இதற்கிடையில், 2022 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவுகள் மற்றும் பொது முதலீடு ஆகிய இரண்டிற்குமான காசு வெளிப்பாய்ச்சல் தொகையானது, ரூபா 1,366.2 பில்லியன்கள் வட்டி கொடுப்பனவு உட்பட மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்துதல் தவிர்த்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,741.5 பில்லியன்களில் 89.0 சதவீதமான ரூபா 4,233.4 பில்லியன்களாக காணப்பட்டன.

2022 ஆம் ஆண்டில் தேறிய கடன் தொகையான ரூபா 2,961.3 பில்லியன்கள் தேறிய பணப் பற்றாக்குறைக்காக முக்கியமாக வட்டி செலுத்துவதற்கு நிதியளிப்பதற்காக பயன்படுத்தப்பட்டது. அத்துடன், வங்கி மேலதிகப்பற்றின் ஒரு பகுதி 2022 ஆம் ஆண்டில் தீர்த்து வைக்கப்பட்டது. இதன் விளைவாக ஆண்டின் ஆரம்ப காசு மறை மீதி ரூபா 831.6 பில்லியன்களி லிருந்து இறுதி காசு மறை மீதி 84.2 பில்லியன்களாக குறைவடைந்தன. 2022 ஆம் ஆண்டில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான காசு வெளிப்பாய்ச்சல் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 1,510.5 பில்லியனகளில் ரூபா 1,449.2 பில்லியன்களாக காணப்பட்டது.

அட்டவணை 6.1 | அரசாங்க திறைசேரி காசுப் பாய்ச்சல் தொழிற்பாடுகள் - 2022

ரூபா பில்லியன்

விடயம்	2020 மதிப்பீடு	2021 மதிப்பீடு	2022 உண்மையான	2022 மதிப்பீடு
வருமான மற்றும் ஏனைய பெறுகைகளிலிருந்து மொத்த காசு உட்பாய்ச்சல்	**1,323.8**	**1,389.8**	**2,383.7**	**1,876.8**
வரி வருமானம்			1,852.0	1,701.9
வரியல்லாத வருமானம்			521.7	174.7
மொத்த பெறுகைகள்			10	0.2
மீண்டெழும் கொடுப்பனவுகளுக்காக மொத்த காசு வெளிப்பாயச்சல்	**-2,587.4**	**-2,713.1**	**-3,635.9**	**-3,220.4**
ஆள்சார் வேதனாதிகள்	-915.9	-970.0	-1,137.6	-1,081.7
ஓய்வூதிய கொடுப்பனவுகள்	-254.1	-251.6	-318.0	-290.4
சமுர்த்தி கொடுப்பனவுகள்	-52.5	-55.4	-97.4	-84.6
உர மானியம்	-36.2	-21.1	-98.4	-46.7
ஏனைய மீண்டெழும்	-372.1	-363.8	-605.2	-350.8
வட்டி	-956.6	-1051.2	-1,379.3	-1,366.2
மூலதன கொடுப்பனவுகளுக்காக மொத்த காசுப்பாய்ச்சல்	**-584.9**	**-718.0**	**-1,105.6**	**-1,013.0**
ஏனைய மூலதனக் கொடுப்பனவுகள்	-580.3	-706.2	-1,070.1	-1,000.9
மானிய கொடுப்பனவுகள்	-1.2	-2.3	-14.8	-3.5
அரசாங்க அலுவலர்களுக்கான முற்பணம்	-3.4	-9.5	-20.7	-8.6
தேறிய காசு மிகை / (பற்றாக்குறை)	**-1,848.5**	**-2041.3**	**-2,357.8**	**-2,356.6**
மொத்த கடன் பயன்பாடு	**2,530.8**	**2,989.4**	**4,507.0**	**4,410.5**
படுகடன் மீள்கொடுப்பனவு	**-968.8**	**-1,315.5**	**-1,510.5**	**-1,449.2**
தேறிய கடன்பெறுகை பயன்பாடு	**1,562.0**	**1,673.9**	**2,996.5**	**2,961.3**
முன்னைய வருடத்தின் ISB/FCTFF பெறுகை மீதி	**51.40**	**–**	**–**	**4.60**
சீராக்கல் கணக்கு மீதி (தற்பாலிக ஊழிய மீதி, தேறிய வைப்புகள்)	21.2	24.0	–	138.1
டிசம்பர் 31 அன்றுள்ளவாறு முடிவுக் கணக்கு மீதி	**-488.2**	**-831.6**	**-192.9**	**-84.2**

- மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

6.3 அரசாங்க படுகடன் நிகழ்த்திட்டம் - 2022

2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு கடன் வரம்பான ரூபா 3,200.0 பில்லியன்களை பாராளுமன்றம் அங்கீகரித்ததோடு, பின்னர் அது 2022 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் ரூபா 3,844.0 பில்லியன்களாக அதிகரிக்கப்பட்டு, மேலும் அது 2022 வரவு செலவுதிட்டத்திலுள்ள வள இடைவெளிக்கு நிதி அளிப்பதற்காக 2022 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் ரூபா 4,507.0 பில்லியன்கள் வரை அதிகரிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டிலுள்ள உண்மையாக பெறப்பட்ட மொத்த கடன்கள் ரூபா 4,337.6 ஆகும். இதில் ரூபா 3,554.2 பில்லியன்கள் உள்நாட்டு மூலங்களிலிருந்தும் மீதமுள்ள ரூபா 783.4 பில்லியன்கள் வெளிநாட்டு மூலங்களிலிருந்தும் பெறப்பட்டனவாகும்.

6.4 வரவு செலவுத்திட்டத்திற்கான நிதியளிப்பு

2022 இல் பொருளாதார வகைப்படுத்தலில் ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையான ரூபா 2,459.9 பில்லியன் பிரதானமாக உள்நாட்டு மூலங்களினைக் கொண்டு நிதியளிக்கப்பட்டது. உள்நாட்டு மூலங்களின் மூலமான நிதியளிப்பு ரூபா 2,035.1 பில்லியனாக அல்லது 2022 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.4 சதவீதமாகக் காணப்பட்ட அதே சமயம் நிகர வெளிநாட்டு நிதியளிப்பு ரூபா 424.8 பில்லியனாக அல்லது 2022 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.8 சதவீதமாகக் காணப்பட்டது. நிகர உள்நாட்டு நிதியளிப்பு 2021 இல் ரூபா 2,071.8 பில்லியனிலிருந்து 2022ல் ரூபா 2,035.1 பில்லியனாக 1.7 சதவீதத்தினால் குறைவடைந்த அதேவேளை, நிகர வெளிநாட்டு நிதியளிப்பு 2021 இல் ரூபா 13.9 பில்லியன் தேறிய மீள்கொடுப்பனவிலிருந்து 2022 இல் ரூபா 424.8 பில்லியனாக கனிசமானளவு அதிகரித்தது.

வெளிநாட்டு நிதியளிப்பு அர்ப்பணிப்புகள்

2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் மற்றும் 2020-21 காலகட்டத்தில் கோவிட்-19 தொற்று நோயால் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த 2020 ஆம் ஆண்டின் முற்பகுதியில் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் இருந்தபோதிலும், இது வெளிநாட்டு வருமான வரவுகளை குறைப்பதற்கும், முக்கியமாக சர்வதேச இறையாண்மை முறிகளின் முதிர்ச்சி காரணமாக கடன் சுமை அதிகரிப்பதற்கும் காரணமாக இருந்தது. 2022 ஆம் ஆண்டு மற்றும் 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிலிருந்து மாற்று விகித அழுத்தத்தை உயர்த்துவதன் காரணமாக, 2022 ஆம் ஆண்டில் சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்துடன் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த, இலங்கை அசாங்கமானது கடன் நிறுத்தக் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது, இது குறுகிய காலத்தில் சந்தைக்கான அணுகலை மேலும் மூடியது. அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு முக்கியமாக இந்தியா மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றிலிருந்து உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி (Official Development Assistance – ODA) வடிவில் வெளிநாட்டு நிதியுதவி உறுதிமொழிகளைப் பெற முடிந்தது. 2022 சனவரி 1 ஆந் திகதி முதல் டிசம்பர் 31 ஆந் திகதி வரை வெளிநாட்டு அபிவிருத்திப் பங்காளிகள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களுடன் 15 ஒப்பந்தங்களை செய்து கொண்டதன் மூலம் இலங்கை அரசாங்கம் மொத்த உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி உறுதிப்பாடாக ஐ.அ. டொ. 1,915.2 மில்லியனைப் பெற்றுள்ளது. இவற்றுள் ஐ.அ. டொ. 1,805.5 மில்லியன் கடனானகப் பெறப்பட்டதுடன், ஐ.அ. டொ. 109.7 மில்லியன் மானியமாகும்.

இந்தக் காலக்கட்டத்தில், இந்தியா ஐ.அ. டொ. 1,555 மில்லியன் முறையே ஆசிய அபிவிருத்தி வங்கி (ஐ.அ. டொ. 203 மில்லியன்), அமெரிக்கா (ஐ.அ. டொ. 73 மில்லியன்), குவைத் (ஐ.அ. டொ. 32.9 மில்லியன்), ஜெர்மனி ஐ.அ. டொ. 17.6 மில்லியன்), ஐரோப்பிய ஒன்றியம், (ஐ.அ. டொ. 13.9 மில்லியன்), கொரியா (ஐ.அ. டொ. 12 மில்லியன்) மற்றும் ஜப்பான் (ஐ.அ. டொ. 7.8 மில்லியன்)

வர்த்தகத் துறைக்கு அதிக அளவு அர்ப்பணிப்பு செய்யப்பட்டது, இது ஐ.அ. டொ. 1,000 மில்லியன் அல்லது மொத்தக் கடமைகளில் 52 சதவிகிதம், முக்கியமாக மின்சாரம் மற்றும் ஆற்றல் துறை (ஐ.அ. டொ. 500 மில்லியன் அல்லது 26 சதவீதம்) மற்றும் மனிதாபிமான உதவித் துறை (ஐ.அ. டொ. 203) மில்லியன் அல்லது 10 சதவீதம்).

அட்டவணை 6.2 | அபிவிருத்தி பங்காளர்களின் அடிப்படையில் அர்ப்பணிப்பு (ஐ.அ.டொ. மில்) 2022

ஐ.அ.டொ. மில்லியன்

அபிவிருத்திப் பங்காளர்	கடன்	மானியம்	மொத்தம்
இருதரப்பு	**1,605.5**	**92.8**	**1,698.3**
இந்தியா	1,555.0	–	1,555.0
ஐக்கிய அமெரிக்கா	–	73.0	73.0
குவைத்	32.9	–	32.9
ஜேர்மனி	17.6	–	17.6
கொரியா	–	12.0	12.0
பப்பான்	–	7.8	7.8
பல்தரப்பு	**200.0**	**16.9**	**216.9**
ஆசிய அபிவிருத்தி வங்கி	200.0	3.0	203.0
ஐரோப்பிய யூனியன்	–	13.9	13.9
மொத்தம்	**1,805.5**	**109.7**	**1,915.2**

மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

வரைபு 6.1 | பாரிய அபிவிருத்தி பங்காளர்களது பொறுப்பளிப்புக்கள் - 2022 (ஐ.அ.டொ. மில்லியன்)



மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

வரைபு 6.2 | பாரிய பொருளாதார துறைகளின் பொறுப்பளிப்புக்கள் - 2022 (ஐ.அ.டொ. மில்லியன்)



மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

அட்டவணை 6.3: வெளிநாட்டு நிதியளிப்பு உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி அர்ப்பணிப்புகள் - 2022 சனவரி 1 இலிருந்து டிசெம்பர் 31 வரை

அபிவிருத்தி பங்காளர் / கடன் வழங்கும் முகவர்	சாதனத்தின் வகை	உடன்படிக்கை திகதி	கருத்திட்டம் /நிகழ்ச்சித்திட்டம் / சாதனத்தின் பெயர்	வழங்கப்பட்ட தொகை (மில்லியன்)				நிதி நிபந்தனைகள்					
				நாணயம்	சாதனத்திற்கான நாணயம்	ரூபா	ஐ.அ.டொ	வகை	வட்டி வருடாந்த விகிதம் (%)	விளிம்பு (100 அடிப்படை புள்ளிகள்)	ஏனைய கட்டணங்கள்	சலுகை காலம் (வருடம்)	கையொப்ப மிட்ட திகதியிலிருந்து முதிர்வு / கிடைக்கும் காலம் (வருடம்)
இருதரப்பு													
குவைத்	கடன்	3/2/22	மொரட்டுவ பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை நிர்மாணித்தல் மற்றும் உபகரணம் செய்தல் திட்டம்.	குவைத் தினார	10.0	6,638.9	32.9	நிரந்தரமானது	1	ஏற்புடையதல்ல	அர்ப்பணிப்பு கட்டணம் 0.5%	5	25
ஜேர்மனி	கடன்	27/1/2022	மாத்தறை திட்டத்தில் தொழிற்பயிற்சி நிலையத்தை நிறுவுதல்	யூரோ	15.7	3,561.6	17.6	நிரந்தரமானது	2	ஏற்புடையதல்ல	-	10	30
	கடன்	2/2/2022	குறுகிய கால கடன் திட்டம்	ஐக்கிய அமெரிக்க டொலர	500.0	100,710.3	500.0	மாறக்கூடியது	SOFR தினசரி கூட்டு	1.5	முகாமைத்துவ கட்டணம் 0.5%, அர்ப்பணிப்பு கட்டணம் 0.5%	1	1.5
இந்தியா	கடன்	17/3/2022	2022 ஆம் ஆண்டிற்கான அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதி.	ஐக்கிய அமெரிக்க டொலர	1000.0	267,862.1	1000.0	மாறக்கூடியது	SOFR 3 மாதங்கள்	1.6	முன்கூட்டிய கட்டணம் 0.5%, சட்ட கட்டணம் ஐ.அ.டொ 3,500	3	4
	கடன்	10/6/2022	யூரியா உரம் வாங்குவதற்கு எக்ஸிம் வங்கியிலிருந்து டொலர் கடன் திட்டம்	ஐக்கிய அமெரிக்க டொலர	55.0	19,789.0	55.0	மாறக்கூடியது	SOFR தினசரி கூட்டு	2	அர்ப்பணிப்பு கட்டணம் 0.5%,	3	3
ஐக்கிய அமெரிக்கா	மானியம	31/08/2022	ஜனநாயக, வளமான, மற்றும் நெகிழ்ச்சியான இலங்கை வேலைத்திட்டம்.	ஐக்கிய அமெரிக்க டொலர	65.0	23,474.6	65.0			ஏற்புடையதல்ல			3
	மானியம்	16/12/2022	யுஎஸ்எயிட் காலநிலை மாற்றம் தழுவல் திட்டம்.	ஐக்கிய அமெரிக்க டொலர	8.0	2,905.4	8.0						3

அட்டவணை 6.3: வெளிநாட்டு நிதியளிப்பு உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி அர்ப்பணிப்புகள் - 2022 சனவரி 1 இலிருந்து டிசெம்பர் 31 வரை

அபிவிருத்தி பங்காளர் / கடன் வழங்கும் முகவர்	சாதனத்தின் வகை	உடன்படிக்கை திகதி	கருத்திட்டம் /நிகழ்ச்சித்திட்டம் / சாதனத்தின் பெயர்	வழங்கப்பட்ட தொகை (மில்லியன்)				நிதி நிபந்தனைகள்				
				நாணயம்	சாதனத்திற்கான நாணயம்	ரூபா	ஐ.அ.டொ	வகை	வட்டி		ஏனைய கட்டணங்கள்	சலுகை காலம் (வருடம்)	கையெழுத்திட்ட திகதியிலிருந்து முதிர்வு / கிடைக்கும் காலம் (வருடம்)
									வருடாந்த விகிதம் (%)	விளிம்பு (100 அடிப்படை புள்ளிகள்)			
கொரியா	மானியம்	28/09/2022	இலங்கையின் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் கொவிட் - 19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் சமூகப் பொருளாதார பின்னடைவை வலுப்படுத்துதல்.	ஐக்கிய அமெரிக்க டொலர்	6.0	2,177.4	6.0		ஏற்புடையதல்ல			3	3
	மானியம்	18/10/2022	இலங்கையில் வுஏநுவு தொழில் மேடை திட்டம்	ஐக்கிய அமெரிக்க டொலர்	6.0	2,180.3	6.0		ஏற்புடையதல்ல			3	3
யப்பான்	மானியம்	04/04/2022	அழிந்துபோகும் தாவரப் பொருட்களின் ஏற்றுமதியை எளிதாக்குவதற்காக இலங்கையில் தாவர சுகாதார சான்றிதழை மேம்படுத்துவதற்கு திட்டம்.	யப்பானிய யென்	500.0	1,337.4	3.7		ஏற்புடையதல்ல			2	2
	மானியம்	18/08/2022	ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு உதவி வழங்கவும்.	யப்பானிய யென்	500.0	1,267.7	4.1		ஏற்புடையதல்ல			2	2
பல்தரப்பு													
ஆசிய அபிவிருத்தி வங்கி	கடன்	09/09/2022	உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவி திட்டம்	ஐக்கிய அமெரிக்க டொலர	200.0	72,400.0	200.0	ஏற்புடையதல்ல	SOFR தினசரி கூட்டு	0.7	அர்ப்பணிப்பு கட்டணம் 0.15%		32
	மானியம்	09/09/2022	உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவி திட்டம்	ஐக்கிய அமெரிக்க டொலர	3.0	1,086.0	3.0		ஏற்புடையதல்ல				2
ஐரோப்பிய ஒன்றியம்	மானியம்	16/12/2022	சமூக ஒற்றுமை மற்றும் அமைதி திட்டத்தை வலுப்படுத்துதல். (SCOPE)	யூரோ	8.0	3,096.6	8.5		ஏற்புடையதல்ல				3
	மானியம்	16/12/2022	பசுமைக் கொள்கை உரையாடல் வசதி திட்டம் (GPDF)	யூரோ	5.0	1,935.4	5.4						3
மொத்தம்						**510,422.7**	**1,915.2**						

மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
குறிப்பு: SOFR = Secured Overnight Financing Rate (பிணையளிக்கப்பட்ட ஓரிரவு நிதியளிப்பு வீதம்)
ஒவ்வொரு ஒப்பந்தத் திகதியிலும் நடைமுறையில் உள்ள தினசரி சராசரி மாற்று விகிதங்களின்படி, வெவ்வேறு நாணயங்களில் செய்யப்பட்ட நிதி மதிப்புகள் ஐக்கிய அமெரிக்க டொலராகவும் மற்றும் ரூபாவாகவும் மாற்றப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நிதி வழங்கல் மற்றும் பயன்பாடு

2022 சனவரி 1 முதல் டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் மொத்த வெளிநாட்டு நிதி வழங்கல் ஐ.அ.டொ. 2,400.9 மில்லியன்களாகும். இதில், ஐ.அ.டொ. 2,390.7 மில்லியன் கடனாகவும், ஐ.அ.டொ. 10.2 மில்லியன் மானியம் மூலமாகவும் வழங்கப்பட்டுள்ளது. 2022 இல் பதிவுசெய்யப்பட்ட பெரும்பாலான விநியோகங்கள் இந்தியாவுடன் கையெழுத்திடப்பட்ட கடன் ஒப்பந்தங்களிலிருந்து வந்தவை, இது மொத்த வழங்கல்களில் கிட்டத்தட்ட 38 சதவீதமாகும், அதைத் தொடர்ந்து ஆசிய அபிவிருத்தி வங்கி (31சதவீதம்) மற்றும் உலக வங்கி (19 சதவீதம்) என்பனவாகும்.

அட்டவணை 6.4 | 2022 சனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் மானியங்கள் பகிர்வு

அபிவிருத்திப் பங்காளர்	பகிர்வு * (ஐ.அ.டொ.மில்லியன்) கடன்	மானியம்	மொத்தம்
இருதரப்பு	**1,151.5**	**3.5**	**1,155.0**
இந்தியா	925.5	-	925.5
ஜப்பான்	75.6	-	75.6
சீனா	65.4	-	65.4
பிரான்ஸ்	35.8	-	35.8
நெதர்லாந்து	24.1	-	24.1
சவுதி நிதி	8.6	-	8.6
குவைத்	5.6	-	5.6
ஹங்கேரி	2.9	-	2.9
கொரியா	3.1	1.8	4.9
ஐக்கிய இராச்சியம்	2.0	-	2.0
ஆஸ்திரியா	1.4	-	1.4
ஸ்பெயின்	1.2	-	1.2
டென்மார்க்	0.3	-	0.3
ஜெர்மனி	-	1.7	1.7
பல்தரப்பு	**1,239.2**	**6.7**	**1,245.9**
ஆசிய அபிவிருத்தி வங்கி	740.7	0.8	741.5
உலக வங்கி	450.2	5.9	456.1
ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி	35.9	-	35.9
ஒபெக் நிதியம்	6.3	-	6.3
விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம்	6.1	-	6.1
மொத்தம்	**2,390.7**	**10.2**	**2,400.9**

மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

* தற்காலிகமானது

குறிப்பு : வெவ்வேறு நாணயங்களில் செய்யப்பட்ட பணப் பரிமாற்றங்களை அமெரிக்க டொலராக மாற்ற, 2022 டிசம்பர் 30 இல் உள்ள மாற்று விகிதங்கள் பயன்படுத்தப்பட்டன.

மின்சாரம் மற்றும் எரிசக்தித் துறையில் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்களில் பெரும்பாலான விநியோகங்கள் பயன்படுத்தப்பட்டன. இது மொத்த வழங்கல்களில் கிட்டத்தட்ட 24 சதவீதமாகும். அதனைத் தொடர்ந்து பதுதை மற்றும் பாலங்கள் (21 சதவீதம்), வர்த்தகம் (14 சதவீதம்), சுகாதாரம் மற்றும் சமூக நலன்புரி (7 சதவீதம்), மனிதாபிமான உதவி (7 சதவீதம்), நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் (5 சதவீதம்), தரைவழிப் போக்குவரத்து (5 சதவீதம்), நீர்ப்பாசனம் (4 சதவீதம்), கல்வி (4 சதவீதம்) மற்றும் விவசாயம் (3 சதவீதம்) என்பனவாகும்.

வரைபு 6.3 | கடன் வழங்குநர் அடிப்படையில் பகிர்வு - 2022 (ஐ.அ.டொ. மில்லியன்)



மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

* ஏனைய = நெதர்லாந்து, சவுதி நிதியம், குவைத், ஹங்கேரி, கொரியா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரியா, ஸ்பெய்ன், டென்மார்க், ஜேர்மனி

வரைபு 6.4 | கடன் வழங்குநர் அடிப்படையில் பகிர்வு - 2022 (ஐ.அ.டொ. மில்லியன்)



மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

** ஏனைய - இடர் முகாமைத்துவம், சுற்றுச்சூழல், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாடு, தொழிலாளர் மற்றும் தொழில் பயிற்சி, காணி அபிவிருத்தி, கால்நடை அபிவிருத்தி, பெருந்தோட்டம், துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து, கிராமப்புற அபிவிருத்தி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்.

பொறுப்பேற்கப்பட்டு, பயன்படுத்தப்படாத மீதி

பொறுப்பேற்கப்பட்டு, பயன்படுத்தப்படாத மீதிகள் 2022 டிசெம்பர் 31 இல், வெளிநாட்டு நிதியில் ஏற்கனவே பொறுப்பேற்கப்பட்டு பயன்படுத்தப்படாததும், அடுத்த 3 - 5 வருடங்களில் பயன்படுத்தப்பட வேண்டியதுமான மொத்த கடன் மீதி, 6.8 பில்லியன் அமெரிக்க டொலர்களாக

மதிப்பிடப்பட்டது. இவற்றில் பெரும்பாலானவை சீனா, ஆசிய அபிவிருத்தி வங்கி, இந்தியா, ஜப்பான் மற்றும் உலக வங்கி நிதியளிக்கப்பட்டிருந்தது.

கிட்டத்தட்ட 20 சதவீத வெளிநாட்டு நிதியளிப்பானது வீதிகளும் பாலங்களும் துறைக்கு பயன்படுத்தப்பட எதிர்பார்க்கப்படுவதுடன், அதேவேளை 18 சதவீதமான தொகைகள் பிரதானமாக நீர் வழங்கலும் துப்புரவும் துறைக்காகவும், 12 சதவீதம் தரை வழிப் போக்குவரத்து துறைக்கும் பயன்படுத்தப்படவுள்ளன.

அடடவணை 6.5 | பொறுப்பளிக்கப்பட்டு வழங்கப்படாத மீதி 2022 டிசெம்பர் 31 அன்று வரை

பொருளாதாரத் துறை	பகிரப்படாத மீதி * (ஐ.அ.டொ. மில்.)
வீதிகளும் பாலங்களும்	1,394.1
நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாடு	1,209.1
தரைப் போக்குவரத்து	831.8
வர்த்தகம்	660.0
கல்வி மற்றும் பயிற்சி	471.7
சுகாதாரமும் சமூக நலன்புரியும்	345.0
மின்வலு மற்றும் சக்தி	307.8
நீர்ப்பாசனம் தொடர்பான செயற்பாடுகள்	279.5
வீடமைப்பும் நகர அபிவிருத்தியும்	241.9
விவசாயம்	202.8
**ஏனைய	874.9
மொத்தம்	**6,818.6**

மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
* தற்காலிகமானது
**ஏனைய = பாதுகாப்பு, அனர்த்த முகாமைத்துவம், சுற்றுச் சூழல், நீதி, தொழிலாளர் மற்றும் தொழில் பயிற்சி, நில மேம்பாடு, கால்நடை மேம்பாடு, ஊடகம், துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து, கிராமப்புற மேம்பாடு, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி மற்றும் விளையாட்டு மேம்பாடு.

வரைபு 6.5 | பிரதான அபிவிருத்தி பங்காளர் அடிப்படையில் பகிர்வு - 2022 (ஐ.அ.டொ. மில்லியன்)



மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

6.5 மத்திய அரசின் படுகடன்

நடப்பாண்டுப் பணப் பெறுமதியில் மத்திய அரசின் மொத்த படுகடன் நிலுவை 2021 ஆம் ஆண்டு இறுதியில் இருந்த ரூபா 17,614.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டு இறுதியளவில் ரூபா 27,492.0 பில்லியனாக 56.1 சதவீதமான குறிப்பிடத்தக்க அதிகரிப்பை காட்டி இருந்தது. 2022 காலப்பகுதியில் ஐ.அ.டொ. எதிராக இலங்கை ரூபா 44.8 சதவீதத்தினால் சடுதியான வீழ்ச்சி மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடுகளின் தொடக்கத்தின் போது படுகடன் மீளச் செலுத்த இயலாமை பற்றிய அறிவிப்பு என்பவற்றின் காரணமாக அமைந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு சொந்தமான முயற்சி நிறுவனங்களின் படுகடன்களையும் மத்திய அரசாங்கத்திற்குள் உள்வாங்கியதன் ஊடாக 2022 ஆம் ஆண்டில் கடன் இருப்பின் அதிகரிப்பு மேலும் இறுக்கமடைந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருந்து மொத்த படுகடன் இருப்பின் விகிதம் 2021 ஆண்டின் இறுதியில் இருந்த 100.1 சதவீதத்தில் இருந்து 2022 ஆண்டின் இறுதியில் 113.8 சதவீதமாக 13.7 சதவீத புள்ளிகளால் அதிகரித்திருந்தது.

2022 ஆண்டு காலப்பகுதியில் பிரதான வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக வெளிநாட்டு படுகடன் 2021 ஆண்டில் இறுதிப்பகுதியிலான 37.0 விகிதத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஆண்டின் இறுதியில் 51.6 விகிதமாக அதிகரித்திருந்தது. எனினும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக உள்நாட்டு படுகடன் 2021 ஆண்டின் இறுதியின் 63 விகிதத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஆண்டின் இறுதியின் 62.3 விகிதத்திற்கு 0.8 விகித புள்ளிகளால் குறைவடைந்து இருந்தது.

மொத்த படுகடனின் வெளிநாட்டு படுகடன் 2021 ஆண்டின் இறுதியில் ரூபா 6,517.00 பில்லியனிலிருந்து 2022 இறுதியில் ரூபா 12,458.20 பில்லியனாக 91.2 விகித்தினால் கணிசமான அளவில் அதிகரித்து இருந்தவேளை, உள்நாட்டு படுகடன் 2021 ஆண்டின் இறுதியில் 11,097.2 பில்லியன் ரூபாவிலிருந்து 2022 ஆண்டின் இறுதியில் 15,033.9 பில்லியன் ரூபாவிற்கு 35.5 சதவீதமாக அதிகரித்தது மொத்த படுகடன் இருப்பில் உள்நாட்டு படுகடனின் பங்கு 2021 ஆண்டின் இறுதியில் 63.0 சதவீத்தில் இருந்து 2022 ஆண்டு இறுதியில் 54.7 விகிதமாக வீழ்ச்சியைப் பதிவு செய்து இருந்தது. இதற்கு மாறாக 2022 ஆண்டின் காலப்பகுதியில் ஐ.அ.டொலரின் இலங்கை ரூபா வீழ்ச்சியடைந்ததன் காரணமாக 2021 ஆண்டின் இறுதியில் 37.0 சதவீதமாக இருந்த மொத்த படுகடன் இருப்பில் வெளிநாட்டு படுகடனின் பங்கு 2022 ஆண்டின் இறுதியில் 45.3 சதவீதமாக அதிகரித்தது.

வரைபு 6.6 | மத்திய அரசாங்க படுகடன்



மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

2021 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்த 2,270.5 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்திருந்த 4,113.9 பில்லியன் ரூபாவிற்கு 81.2 சதவீதத்தினால் கணிசமான அளவு உயர்வடைந்திருந்த திறைசேரி உண்டியல்களின் இருப்பு காரணமாக நிலுவையில் உள்ள குறுங்கால உள்நாட்டுப் படுகடன் இருப்பு என்பது 2021 ஆண்டின் இறுதியில் 3,139.8 பில்லியன் ரூபாவிலிருந்து 2022 ஆண்டின் இறுதியில் 4,267.7 பில்லியன் ரூபாவாக 35.9 சதவீதத்தினால் கணிசமான அளவில் அதிகரித்திருந்தது. மொத்த உள்நாட்டு படுகடன் இருப்பில் குறுங்கால படுகடனின் பங்கு 2021 ஆம் ஆண்டின் இறுதியில் வெளிப்படுத்தியிருந்த 28.3 சதவீத்திலிருந்து 2022 ஆம் ஆண்டின் இறுதியளவில் 28.4 சதவிகிதமாக சிறிய அளவிலான அதிகரிப்பை காட்டியிருந்தது. மேலும் மொத்த உள்நாட்டு படுகடன் இருப்பில் திறைசேரி உண்டியல்களின் பங்கு 2021 ஆண்டு இறுதியின் 20.5 இருந்து 2022 ஆண்டின் இறுதியில் 27.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.

நடுத்தர நீண்டகால உள்நாட்டு படுகடன் இருப்பு 2021 ஆம் ஆணடில் இறுதியில் பதிவுசெய்திருந்த 7,957.4 பில்லியன் ரூபாவிலிருந்து 2022 ஆண்டின் இறுதியில் 9,882.1 பில்லியன் ரூபாவிற்கு 24.2 சதவீத்தினால் அதிகரித்தது. எனினும் மொத்த உள்நாட்டு படுகடன் இருப்பின் நடுத்தர நீண்டகால படுகடன்களின் பங்கு என்பது நடுத்தர நீண்ட கால நிதி ஈட்டத்தை விட 2022 ஆம் ஆண்டில் நிதியீட்டத்திற்கான பற்றாக்குறைகளுக்கு கால வழிமுறைகளில் தங்கி இருந்தமை தொடர்ந்து இருந்ததன் காரணமாக 2021 ஆம் ஆண்டில் இறுதியில் 71.7 சதவீதத்தில் இருந்து 2022 ற்கு 65.7 சதவிகிதத்திற்கு மேலும் குறைவடைந்திருந்தது. மொத்த உள்நாட்டு படுகடன் இருப்பின் நிலுவையில் திறைசேரி முறிகளின் பங்கு 2021 ஆம் ஆண்டு இறுதியில் 62.8 சதவீத்ததிலிருந்து 2022 ஆம் ஆண்டு இறுதியில் 57.9 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

வணிக வங்கிகள் மற்றும் மத்திய வங்கிக்கு பொதுப்படுகடன் அதிகரித்ததன் காரணமாக வங்கித்துறை பொதுப்படுகடன் 2021 ஆம் ஆண்டின் 5,247.9 பில்லியன் ரூபாவிலிருந்து 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 8,525.7 பில்லியன் ரூபாவிற்கு 62.5 சதவித்திற்கு அதிகரித்திருத்தது. அதேவேளையில் வங்கி அல்லாத துறை படுகடனும் 2021 ஆண்டில் இறுதியில் இருந்த 4,822.1 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2022 ஆண்டில் இறுதியில் 6,164.1 பில்லியன் ரூபாவிற்கு 27.8 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்த உள்நாட்டு படுகடனில் வங்கி அல்லாத துறையின் படுகடனின் பங்கு 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 43.5 சதவீதமாக இருந்து 2022 ஆம் ஆண்டில் இறுதியளவில் 41.0 சதவீதமாக குறைவடைந்து இருந்த வேளையில் வங்கித்துறை படுகடனின் பங்கு 2021 ஆண்டு இறுதியில் 47.3 சதவீதமாக இருந்து 2022 ஆம் ஆண்டின் இறுதியளவில் 56.7 சதவீத்திற்கு அதிகரித்தது.

6.5.1 உள்நாட்டுப் படுகடன்

ரூபாய் மதிப்பிலான திறைசேரி உண்டியல்கள் மற்றும் வெளிநாட்டுக்கு வழங்கப்பட்ட பிணைமுறிகள் தவிர்ந்த நிலுவையிலுள்ள வெளிநாட்டுப்படுகடன் 2021 ஆம் ஆண்டு இறுதியில் 11,097.2 பில்லியன் ரூபாவிலிருந்து 2022 ஆம் ஆண்டு இறுதியில் 15,034 பில்லியன் ரூபாய்களாக 35.5 சதவீதம் அதிகரித்தது.

வகைகளின் தொகுப்பு

உள்நாட்டுப் படுகடன்களில் திறைசேரி முறிகள், உண்டியல்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் முறையே 57.9 சதவிகிதம், 27.4 சதவிகிதம் மற்றும் 2.5 சதவிகிதமாக காணப்பட்டன. 2021 ஆம் ஆண்டு ஒப்பிடுகையில் 4,113.9 பில்லியன் ரூபாயாக 81.0 சதவீதமாக காணப்பட்ட திறைசேரி முறிகளின் இருப்பு 25 சதவீதமாக அதிகரித்து 8,709 பில்லியன் ரூபாயாக 2022 ஆம் ஆண்டில் காணப்பட்டது. இலங்கை அபிவிருத்தி முறிகளின் இருப்பு 2022 ஆம் ஆண்டு 16 சதவிகிதத்தால் வீழ்ச்சியுற்றுள்ளது. 2021 ஆம் ஆண்டில் 1.4 சதவிகிதமாகக் காணப்பட்ட இலங்கை மத்திய வங்கியிலிருந்து பெறப்பட்ட தற்காலிக முற்பணத்தின் பங்கு 2022 ஆம் ஆண்டு 57 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.

வரைபு 6.7 | வகை அடிப்படையில் உள்நாட்டு படுகடன்களின் தொகுப்பு



மூலம் : இலங்கை மத்திய வங்கி, திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

முதிர்ச்சி விபரதத்தின் அடிப்படையில் தொகுப்பு

மொத்த மீளச் செலுத்தப்பட வேண்டிய உள்நாட்டுக் கடன்களில் இருந்து ஒரு வருடத்திற்குள் முதிர்ச்சியடைந்த உள்நாட்டுக் கடன்களின் பங்கானது 42.7 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதோடு, மீதமுள்ள 57.3 சதவீதமானது 2022 இற்கு அப்பாற்பட்ட முதிர்வுகளைக் குறித்து நிற்கின்றது. நடுத்தரம் தொடக்கம் நீண்ட கால மொத்த கடன் துறையானது 88.1 சதவீத திறைசேரி முறிகளை உள்ளடக்குவதோடு மீதமுள்ள 11.9 சதவீதமும் வதிவாளர்களினால் வைத்திருக்கப்படும் இலங்கை அபிவிருத்த முறிகளையும் சர்வதேச இறையாண்மை முறிகளையும் மற்றும் கடல்கடந்த வங்கி அலகுகள் மற்றும் பிற கடன்கள் ஆகியவற்றையும் உள்ளடக்குகிறது.

வரைபு 6.8 | உள்நாட்டு படுகடன் முதிர்ச்சி விபரம்



மூலம் : இலங்கை மத்திய வங்கி, திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

உள்நாட்டுப் படுகடனின் உரித்துரீதியான தொகுப்பு

2022 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கி மற்றும் வங்கியல்லாத துறைகளிலுள்ள அரசாங்க உள்நாட்டுக் கடன்களின் உரிமை முறையே 62.5 சதவிகிதத்தாலும் 27.8 சதவிகிதத்தாலும் அதிகரித்துள்ளது. 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த நிலுவையிலுள்ள உள்நாட்டுக் கடன்களில், வங்கித் துறையின் பங்கு 2022 இல் 56.7 சதவீதத்தினால் அதிகரித்த போது வங்கியல்லாத் துறையின் பங்கு 41.0 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. எனினும், திறைசேரி உண்டியல் இருப்புகளில் ஏற்பட்ட கனிசமான அதிகரிப்பு காரணமாக மத்திய வங்கிக்கு சொந்தமான உள்நாட்டு கடன்கள் 81.0 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அதேவேளை 2022 ஆம் ஆண்டில் முந்தைய ஆண்டை விட திறைசேரி முறிகளின் இருப்பு ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக வணிக வங்கிகளின் பங்குகள் 54.6 சதவீதத்தினால் அதிகரித்தன. மேலும், வணிக வங்கிகளின் திறைசேரி உண்டியல் கையிருப்பு 2022 இல் 15.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

அட்டவணை 6.6 | மத்திய அரசாங்கத்தின் உள்நாட்டு படுகடன்

ரூபா.மில்லியன்

மூலம்	2018	2019 (அ)(ஆ)	2020 (அ)(ஆ)	2021 (அ)(ஆ)	2022 (அ)(இ)(ஆ)
மொத்த உள்நாட்டு படுகடன்	6,071,001	6,830,260	9,065,068	11,097,223	15,033,876
குறுகிய காலம்	1,134,553	1,270,374	2,197,594	3,139,794	4,267,724
திறைசேரி உண்டியல்கள் (உ)	746,887	873,943	1,620,705	2,270,508	4,113,907
மத்திய வங்கியிலிருந்தான தற்காலிக முற்பணங்கள்	198,633	236,609	153,079	150,129	235,639
வர்த்தக வங்கியால் வைத்திருக்கும் இறக்குமதி உண்டியல்கள்	0	131	155	9	0
வங்கித் துறைக்கான ஏனைய பொறுப்புக்கள் தேறிய வங்கி வைப்பு (ஊ)	189,034	159,691	423,656	719,148	(81,822)
நடுத்தர மற்றும் நீண்ட காலம்	4,936,447	5,559,887	6,867,473	7,957,430	9,882,058
ரூபா கடன்கள்	24,088	24,088	24,088	24,088	24,088
திறைசேரி முறிகள் (எ)	4,197,323	4,606,232	5,713,300	6,966,218	8,709,057
இலங்கை அபிவிருத்தி முறிகள் (ஏ)	614,219	559,284	486,870	455,203	382,092
சர்வதேச இறையான்மை முறிகள் (ஏ)(ஐ)	இ.ய.	202,099	415,756	372,612	635,443
கடல்கடந்த வங்கி அலகுகள்	100,512	168,011	227,418	139,301	131,372
ஏனையவை	305	173	41	7	7
பிற உள்நாட்டு (ஓ)	கி.இல்லை	கி.இல்லை	கி.இல்லை	கி.இல்லை	884,093
கடன் கருவி மூலம்	6,071,001	6,830,260	9,065,068	11,097,223	15,033,876
ரூபாய் கடன்கள்	24,088	24,088	24,088	24,088	24,088
திறைசேரி உண்டியல்கள் (உ)	746,887	873,943	1,620,705	2,270,508	4,113,907
திறைசேரிமுறிகள் (எ)	4,197,323	4,606,232	5,713,300	6,966,218	8,709,057
இலங்கை அபிவிருத்தி முறிகள் (ஏ)	614,219	559,284	486,870	455,203	382,092
சர்வதேச இறையான்மை முறிகள் (ஏ) (ஐ)	இ.ய.	202,099	415,756	372,612	635,443
மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்கள்	198,633	236,609	153,079	150,129	235,639
ஏனையவை (ஊ) (ஓ)	289,851	328,006	651,269	858,466	933,651
நிறுவனம் மூலம் (ஓ) (ஔ)	6,071,001	6,830,260	9,065,068	11,097,223	15,033,876
வங்கிகள் (உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள் தவிர)	2,171,879	2,737,223	4,542,155	5,247,919	8,525,718
மத்திய வங்கி					
கடன் கருவி மூலம் (ஆ)	244,129	310,909	876,818	1,565,494	2,833,607
திறைசேரி உண்டியல்கள்	44,234	25,873	654,611	1,391,281	2,575,717
திறைசேரி முறிகள் (க)	1,563	48,872	70,575	25,471	22,461
ஏனையவை	198,331	236,165	151,632	148,742	235,429
வர்த்தக வங்கி					
கடன் கருவி மூலம்	1,927,750	2,426,313	3,665,337	3,682,425	5,692,111
ரூபாய் கடன்	15,870	15,870	15,870	15,870	15,870
திறைசேரி உய்டியல்கள் (ஆ) (ஔ)	456,038	628,846	769,946	568,597	657,308
திறைசேரி முறிகள் (ஆ) (ஔ)	581,616	727,227	1,366,883	1,459,183	3,116,024
இலங்கை வங்கி	333.7	82	268.6	80.5	34.0	70	27.3	80.4
மக்கள் வங்கி	333.7	41	306.0	91.7	20.0	25	16.2	81.0
பிரதேச அபிவிருத்தி வங்கி	967.7	196	532.1	55.0	86.2	121	44.7	51.9
நேசன்ஸ் ட்ரஸ்ட் வங்கி	823.5	32	544.1	66.1	21.3	6	9.2	43.3
கொமர்ஷியல் வங்கி	626.5	31	372.2	59.4	54.5	9	27.4	50.3
ஹட்டன் நெஷனல் வங்கி	967.7	59	682.2	70.5	40.6	23	26.5	65.3
செலான் வங்கி	333.7	16	204.8	61.4	20.0	8	10.0	50.2
டீ.எப்.சீ.சீ. வங்கி	967.7	29	420.8	43.5	50.7	14	33.5	66.0
சம்பத் வங்கி	333.7	19	274.7	82.3	14.0	5	8.0	57.1
தேசிய அபிவிருத்தி வங்கி	967.7	36	686.0	70.9	33.3	12	18.6	55.8
சனச அபிவிருத்தி வங்கி	307.8	99	307.8	100.0	9.2	35	9.2	100.4
யூனியன் வங்கி	634.0	37	607.6	95.8	18.4	13	17.5	94.8
பேன் ஏசியா வங்கி	307.8	15	241.1	78.3	9.2	2	3.0	32.1
மொத்தம்	**7,905.2**	**692**	**5,447.9**	**68.9**	**411.4**	**343**	**251.1**	**61.0**

மூலம் : அபிவிருத்தி நிதித் திணைக்களம்

II. அவசர கால எதிர்வினைக் கூறு

இந்தக் கூறின் கீழ், 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 3,842 வரையான கொவிட-19 இனால் பாதிப்புக்குள்ளான நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு அவர்களின் வணிகங்களை மீள உற்சாகப்படுத்தும் பொருட்டு செயற்பாட்டு மூலதனக் கடனாக சுமார் ரூபா 19,348 மில்லியன் வழங்கப்பட்டது. இந்த அவசர கால எதிர்வினைக் கூறு வசதியின் மூலம், விவசாயம் மற்றும் விவசாயம் சார் பதனிடல் துறைக்கு ரூபா 4,867 மில்லியன் மதிப்புள்ள கடன்கள் வழங்கப்பட்ட அதேவேளை, மீன்பிடித் துறை மற்றும் கால்நடை வளர்ப்புத் துறை சார்ந்த நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு முறையே ரூபா 483 மில்லியன் மற்றும் ரூபா 684 மில்லியன் தொகை கடனாக வழங்கப்பட்டது. மேலும், 2022 ஆம் ஆண்டில் கைத்தொழிற் துறையை மீள உற்சாகப்படுத்தும் பொருட்டு ரூபா 6,981 மில்லியன் மதிப்புள்ள கடன்கள் வழங்கப்பட்ட அதேவேளை, சுற்றுலா மற்றும் பிற சேவைகள் சார்ந்த நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு முறையே ரூபா 719 மில்லியன் மற்றும் ரூபா 5,615 மில்லியன் தொகை கடனாக வழங்கப்பட்டது. மேலும், பொருளாதார வீழ்ச்சியால் பாதிக்கப்பட்ட நுண், சிறிய

மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு வசதியளிப்பதற்காக, மேலதிக நிதியாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான கடன் வரிசையின் கீழ் ஒதுக்கப்பட்ட ஐ.அ.டொ. 13.5 மில்லியனை, அதன் நோக்கத்தினை மாற்றுவதனூடாக "அவசர கால எதிர்வினைக் கூறு வசதிக்கு" மீள ஒதுக்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியது. இந்த ஐ.அ.டொ. 13.5 மில்லியன் 2022 ஒக்டோபர் மாதத்தில் இலங்கை வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி, கொமர்ஷியல் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, சம்பத் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, செலான் வங்கி ஆகிய எட்டு வங்கிகளுக்கு சமமாக ஒதுக்கப்பட்டிருந்தது. விவசாயம் மற்றும் விவசாயம் சார் பதனிடல், மீன்பிடி (கடல் மற்றும் உள்நாட்டு), அலங்கார மீன்பிடி, மீன்வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, சுற்றுலா மற்றும் ஏனைய ஏற்றுமதி சார் துறைகள் என்பன, அவசர கால எதிர்வினைக் கூறு வசதிக்கு வழங்கப்பட்டிருந்த புதிய மேலதிக நிதியுதவியின் கீழ் கடன் பெற தகுதியான துறைகளாகவுள்ள அதேவேளை, அவசர கால எதிர்வினைக் கூறு வசதியின் இவ் மேலதிக நிதியுதவியின் கீழ் இத் துறைகளுக்கு கடன்களை வழங்குவதற்கான செயற்பாட்டில் வங்கிகள் ஈடுபட்டுள்ளன.

அட்டவணை 7.4 | சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான கடன் வரிசை அவசர கால எதிர்வினைக் கூறின் 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்றம்

ரூபா. மில்லியன்

பங்கேற்பு நிதி நிறுவனங்கள்	ஒதுக்கப்பட்ட தொகை	அவசர கால எதிர்வினைக் கூறு கடன் வழங்கல்கள்		வழங்கப்பட்ட %
		கடன்களின் எண்ணிக்கை	தொகை	
இலங்கை வங்கி	1,934.30	421	1,934.3	100
மக்கள் வங்கி	1,936.1	407	1,936.1	100
பிரதேச அபிவிருத்தி வங்கி	1,942.5	1,155	1,942.5	100
நேசன்ஸ் ட்ரஸ்ட் வங்கி	1,929.6	232	1,929.6	100
கொமர்ஷியல் வங்கி	1,930.3	300	1,930.3	100
ஹட்டன் நெஷனல் வங்கி	1,930.3	284	1,930.3	100
செலான் வங்கி	1,930.3	261	1,930.3	100
டீ.எப்.சீ.சீ. வங்கி	1,942.7	266	1,942.7	100
சம்பத் வங்கி	1,941.0	248	1,941.0	100
தேசிய அபிவிருத்தி வங்கி	1,930.8	268	1,930.8	100
மொத்தம்	**19,347.9**	**3,842.0**	**19,347.9**	**100**

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

III. வறுமை ஒழிப்புக்கான ஜப்பானிய நிதிய நன்கொடை (JFPR) மற்றும் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கான கடன் வரிசைத் திட்டம்

சிறு தேயிலை உரிமையாளர் கடன் வரிசையின் கீழ், தேயிலை புது நடுகை, மீள் நடுகை, நீர்ப்பாசணம், தானிய உள்நிரப்பல், நாற்று அபிவிருத்தி மற்றும் இயந்திரமயமாக்கல் ஆகியவற்றிற்காக 982 சிறு தேயிலைத் தோட்ட உடமையாளர்களுக்கு முதலீட்டுக் கடன்கள் மற்றும் வறுமைக் குறைப்புக்கான ஜப்பான் நிதி மானியமாக ரூபா 1,515 மில்லியன் தொகை வழங்கப்பட்டது. மேலும், 660 சிறு தேயிலைத் தோட்ட உடமையாளர்களுக்கு தேயிலை புதிய நடுகை மற்றும் மீள் நடுகைக்காக சுமார் ரூபா 86 மில்லியன் வரையான தொகை வறுமைக் குறைப்புக்கான ஜப்பானிய நிதி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவ் ரூபா 1,515 மில்லியன் தொகையில், 56 சதவீதம் தேயிலை மீள் நடுகைக்காகவும் 31 சதவீதம் புதிய நடுகைக்காகவும் வழங்கப்பட்டன.

அட்டவணை 7.5 | சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர் கடன் வரிசையின் 01.01.2022 இலிருந்து 31.12.2022 வரையான காலப்பகுதிக்கான முன்னேற்றம்

ரூபா. மில்லியன்

பங்கேற்பு நிதி நிறுவனங்களின் பெயர	ஒதுக்கப்பட்ட தொகை	கடன் வழங்கல்		% தொகை	ஒதுக்கப்பட்ட தொகை	வறுமை ஒழிப்புக்கான ஜப்பானிய நிதியின் நன்கொடை		வழங்கப்பட்ட %
		கடன்களின் எண்ணிக்கை	தொகை			கடன்களின் எண்ணிக்கை	மானியத் தொகை	
இலங்கை வங்கி	420.4	283	343.0	81.6	24.4	190	18.4	75.4
மக்கள் வங்கி	369.9	45	62.9	17.0	13.8	28	3.1	22.5
பிரதேச அபிவிருத்தி வங்கி	497.3	363	380.2	76.5	29.6	219	23.4	79.1
நேசன்ஸ் ட்ரஸ்ட் வங்கி	79.6	4	31.8	39.9	1.0	3	0.6	60.0
வர்த்தக வங்கி	171.9	52	99.5	57.9	13.8	43	8.3	60.1
ஹட்டன் நெஷனல் வங்கி	279.6	99	197.3	70.6	18.5	85	12.8	69.2
செலான் வங்கி	442.5	31	68.5	24.5	42.4	23	5.6	13.2
டீஎப்சீசீ வங்கி	279.6	37	70.4	–	17.3	35	6.4	37.0
சம்பத் வங்கி	233.4	17	46.8	20.1	13.2	13	2.2	16.7
தேசிய அபிவிருத்தி வங்கி	442.5	16	72.5	16.4	20.7	6	2.0	9.7
சனச அபிவிருத்தி வங்கி	30.7	31	30.7	100.0	1.5	12	1.5	100.0
யூனியன் வங்கி	200.0	2	17.5	8.8	12.3	1	0.5	4.1
பான் ஏசியா வங்கி	30.7	2	7.8	25.4	1.5	2	0.7	46.7
மொத்தம்	**3,478.1**	**982**	**1,428.9**	**41.1**	**210.0**	**660**	**85.5**	**40.7**

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

கூரை மீது பொருத்தப்படும் சூரிய மின்சக்தி உருவாக்கம் தொடர்பிலான கடன் வரிசைக் (RSPGLoC) கருத்திட்டம்

சுற்றுச்சூழலுக்கு இசைவான வளங்களின் உதவியுடன் குறைந்த செலவில் எரிசக்தி மூலங்களை முகாமை செய்யும் பொருட்டு புதை படிவ எரிபொருள் பாவனையிலிருந்து மீளப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களுக்கு மாறுவதற்காக, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ், கூரை மீது பொருத்தப்படும் சூரிய மின்சக்தி உருவாக்கம் தொடர்பிலான கடன் வரிசை (RSPGLoC) கருத்திட்டமானது, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. 2021 ஆம் ஆண்டளவில் தேசிய மின் தொகுப்புக்கு 50 மெகா வோட் மின்சாரத்தினை வழங்குவதை இலக்காகக் கொண்டு, 2018 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியானது, ஐ.அ.டொ. 50 மில்லியனை வழங்கியதோடு, 2022 ஆம் ஆண்டில் இத் திட்டத்தின் முதலாவது கட்டம் நிறைவடைந்த நிலையில், தேசிய மின்கட்டமைப்பிற்கு 70 மெகா வோட் வழங்கியதன் மூலம் இத்திட்டத்தின் இலக்கு எட்டப்பட்டது.

எழுச்சி பெற்று வரும் எரிசக்தி நெருக்கடி மற்றும் சூரிய மின்கலங்களின் ஊடான மின்சக்தி உருவாக்கத்திற்கு எழுந்துள்ள கேள்வி என்பனவற்றைக் கருத்திற் கொண்டு, மேலதிக நிதி பெறுவதற்காக வேண்டுகோள் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு விடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான கலந்துரையாடல்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

7.2.3. நிதியல்லாத ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்கள் - நிறுவன மற்றும் சட்டவாக்க சட்டகம் என்பவற்றை மேம்படுத்தல்

தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் (NCGI)

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் தேசிய கடன் உத்தரவாத நிறுவனத்தினை வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்றாக ஒருங்கமைப்பதற்கு அமைச்சரவையின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. இந் நிறுவனத்தினை ஒருங்கமைப்பதற்கு அவசியமான பங்குதாரர் ஒப்பந்தம் (SHA) மற்றும் கூட்டிணைப்பு ஆவணம் (AoA) என்பன ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் (TA) தயாரிக்கப்பட்டு, அவை இலங்கை மத்திய வங்கி (CBSL) மற்றும் திறைசேரியின் உரிய திணைக்களங்களுடனான கலந்துரையாடல்களின் பின்னர் அங்கீகரிக்கப்பட்டன. பதின்மூன்று பங்கேற்பு நிதி நிறுவனங்கள் (PFIs) (பத்து உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் மூன்று வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள்) தேசிய கடன் உத்தரவாத நிறுவனத்தின் ஆரம்ப உரித்துப் பங்களிப்பு பங்குதாரர்களாக இணைய விருப்பம் தெரிவித்துள்ளன.

கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தில் இக் கம்பனியின் பெயரைப் பதிவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவ் ஒப்புதல் கிடைக்கப்பெற்றதும், இந் நிறுவனத்தினை ஒருங்கமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் கூட்டிணைப்பு ஆவணத்தின் பிரகாரம் இயக்குனர் குழுவினை நியமிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இயக்குனர் குழுவுக்கு, நிதி அமைச்சிலிருந்து மூன்று நியமனங்களும், மத்திய வங்கியிடமிருந்து ஒரு நியமனமும் கிடைக்கப்பெற்றுள்ளன. நிறுவனத்தை நிறுவிய பின்னர், 2023 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில், பங்கேற்பு நிதி நிறுவனங்களுடன் பங்குதாரர் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஜேர்மனிய சர்வதேச ஒத்துழைப்பு - "சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (GIZ – SME Development Programme)

"ஜேர்மனிய சர்வதேச ஒத்துழைப்பு - "சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது", 2012 ஆம் ஆண்டில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் ஒட்டுமொத்த வணிக நிலைமைகளை மேம்படுத்தும் பொருட்டும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கும் பொருட்டும், ஜேர்மன் சர்வதேச ஒத்துழைப்பின் (GIZ) நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜேர்மனியின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான கூட்டாட்சி அமைச்சு (BMZ) என்பவற்றால் இணைந்து நிதியளிக்கப்பட்ட பல்-நன்கொடையாளர் செயற்பாடுகளை (multi-donor action) தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தில், யூரோ 9.2 மில்லியன் தொகை, ஜேர்மனிய சர்வதேச ஒத்துழைப்பு (GIZ) மானியமாக வழங்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூபா 617.2 மில்லியன் ஆக காணப்பட்டது.

7.3. விவசாயத் துறையின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கான ஆதரவு

7.3.1. உர மானியம்

நெற் செய்கைக்கான உரம்

நெற் பயிர்ச்செய்கை தொடர்பிலான அரசின் உர மானியக் கொள்கையானது, 2022/23 பெரும் போகத்தில் "100 சதவீத சேதன உரக் கொள்கையில்" இருந்து "70 சதவீத இரசாயன மற்றும் 30 சதவீத சேதன உரக் கொள்கைக்கு" மாற்றப்பட்டது. 100 சதவீத சேதன உரப் பயன்பாட்டினால் நெல் விளைச்சலில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி மற்றும் இரசாயன மற்றும் சேதன உரம் ஆகிய இரண்டையும் பயன்படுத்தல்

தொடர்பிலான விவசாயத் திணைக்களத்தின் பரிந்துரைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, இக் கொள்கை மாற்றம் மேற்கொள்ளப்பட்டது.

அந்நிய செலாவணிப் பற்றாக்குறை காரணமாக, 2021/22 பெரும் போகத்திலும் 2022 சிறு போகத்திலும் போதுமான அளவு இரசாயன உரம் கிடைப்பதை உறுதி செய்ய முடியாது போனது. எவ்வாறாயினும், 2022 சிறு போகத்தில் 65,000 மெட்ரிக் தொன் யூரியா உரத்தை இறக்குமதி செய்யும் பொருட்டு இந்திய கடன் வரிசை வசதியின் கீழ் ஐ.அ.டொ. 55 மில்லியனை அரசாங்கத்தினால் பெறக்கூடியதாக இருந்தது. 2022 சிறு போகத்திலிருந்து, இந்த யூரியா உரம் 50 கிலோ மூடையொன்று ரூபா 10,000 என்ற வகையில் மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, 2021/22 பெரும் போகத்தில் ரூபா 6,608 மில்லியன் பெறுமதியான சேதன உரங்களும் 2022 சிறு போகத்தில் ரூபா 16,245 மில்லியன் பெறுமதியான சேதன உரங்களும், கூட்டு உரம், திரவ உரம், உயிரியல் உரம் மற்றும் விசேட உரம் ஆகிய வடிவங்களில் விவசாயிகளுக்கு 100 சதவீத மானிய விலையில் விநியோகிக்கப்பட்டன.

2022/23 பெரும் போகத்திலிருந்து தொடங்கப்பட்ட "புதிய 70:30 கலப்பின உரக் கொள்கையின்" கீழ், உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் 105,000 மெட்ரிக் தொன் யூரியா உரத்தையும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் 40,000 மெட்ரிக் தொன் மியூரேட் ஒப் பொட்டாஸ் உரத்தையும் அரசாங்கம் இறக்குமதி செய்ததன் மூலம் நாட்டின் உரத் தேவையை முகாமை செய்யக்கூடியதாக இருந்தது. உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட யூரியா உரம் 50 கிலோ மூடையொன்று ரூபா 10,000 என்ற வகையிலே விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட அதேவேளை, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட MOP உரம் 50 கிலோ மூடையொன்று ரூபா 19,500 ற்கு விநியோகிக்கப்பட்டது. விவசாயிகளுக்கு நியாயமான விலையில் MOP உரம் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, MOP உரம் வாங்குவதற்காக ஒரு ஹெக்டேருக்கு ரூபா 10,000 என்ற வகையில் ஆகக்கூடியது 2 ஹெக்டேயர் வரையான தொகை, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வைப்பிலிடப்பட்டது. மேலும், 30 சதவீத சேதன உரத் தேவையை பூர்த்தி செய்வதற்காக மாவட்ட செயலகங்களின் மேற்பார்வையின் கீழ் 2022/23 பெரும் போகத்தில் நெல் விவசாயிகளுக்கு ரூபா 16,000 மில்லியன் பெறுமதியான சேதன உரங்களை விநியோகிக்கப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

7.3.1.2. நெல் அல்லாத பயிர்களுக்கான உரம்

2022 ஆம் ஆண்டில் நெல் தவிர்ந்த ஏனைய பயிர்களுக்கான உரங்கள் மானிய விலையில் வழங்கப்படவில்லை என்பதுடன் அப் பயிர்களுக்கான உரத் தேவையை பூர்த்திசெய்யும் அதிகாரம் தனியார் துறைக்கு வழங்கப்பட்டது. இருப்பினும், அரசாங்கத்தால் இறக்குமதி செய்யப்பட்ட யூரியா உரத்தினைப் பயன்படுத்தி, சிறு தேயிலைச் செய்கையாளர்களுக்கும் சோளச் செய்கையாளர்களுக்கும் முறையே 3,105 மெட்ரிக் தொன் மற்றும் 8,770 மெட்ரிக் தொன் யூரியா உரம், அப் பயிர்களின் அவசர உரத் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு 50 கிலோ மூடையொன்று ரூபா 15,000 வீதம் விநியோகிக்கப்பட்டன.

உள்நாட்டு சேதன உரத் தயாரிப்பாளர்களுக்கான கடன் திட்டம்

2021 ஏப்ரல் 27 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கேற்ப, சேதன உர உற்பத்தியாளர்கள் மற்றும் சேதன உரத்தினை பயன்படுத்தும் விவசாயிகளுக்கு மானியங்களை வழங்குவதற்கான முன்மொழிவு உள்ளடங்கலாக அமைச்சரவை விஞ்ஞாபனத்திலுள்ள முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதி உதவிகளை வழங்குமாறு திறைசேரி அறிவுறுத்தப்பட்டது. அதன் பிரகாரம், சேதன உரம், கிருமி நாசினி மற்றும் களை நாசினி என்பனவற்றினை உற்பத்தி செய்வோருக்கான விஷேட கடன் திட்டமொன்று இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி என்பவற்றுடன் இணைந்து அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் படி, ரூபா 162 மில்லியன் பெறுமதியான 25 கடன்கள், தகுதி வாய்ந்த உள்ளூர் சேதன உரம், கிருமி நாசினிகள் மற்றும் களை நாசினித் தயாரிப்பாளர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்ட மூன்று வங்கிகளினூடாக வழங்கப்பட்டன. இக் கடன்களுக்கான வட்டி மானியம் தற்போது பொதுத் திறைசேரியினால் செலுத்தபட்டுவருகின்றது. மேலும், இக் கடன் திட்டத்திற்கான வட்டி மானியமாக ரூபா 4.5 மில்லியன் தொகை பொது திறைசேரியினால் விடுவிக்கப்பட்டுள்ளது.

7.3.2. பெருந்தோட்டத் துறை ஊக்குவிப்பு

சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான உதவி

சிறு தோட்ட உரிமையாளர்களின் இயலளவை விருத்தி செய்வதன் மூலம் பிரதான ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக புது நடுகை, மீள் நடுகை, நிலத் தயாரிப்பு, பயிர்ப் பாதுகாப்பு மற்றும் தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை பயிரிடும் சிறு தோட்ட உரிமையாளர்களுடன் தொடர்புடைய ஏனைய நடவடிக்கைகளுக்காக, அரசாங்கம் மானியங்களை

வழங்கியது. இதன் பிரகாரம், ரூபா 2,357 மில்லியன் தொகை, 316,363 தேயிலை, இறப்பர், மற்றும் தென்னை பயிரிடும் சிறிய தோட்ட உரிமையாளர்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன், இதில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 1,643 மில்லியன் தொகை, 39,007 தேயிலை செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதேவேளை, 42 இறப்பர் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும், 2,364 இறப்பர் செய்கையாளர்களுக்கும் முறையே, ரூபா 164 மில்லியன் மற்றும் ரூபா 288 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, இம்மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 274,950 தென்னைச் செய்கையாளர்களுக்கு, ரூபா 262 மில்லியன் தொகை வழங்கப்பட்டது.

அட்டவணை 7.6 | பெருந்தோட்டத் துறையின் சிறு தோட்டச் செய்கைகளின் முன்னேற்றம், 2019 - 2022

ஆண்டு	தேயிலை			இறப்பர்			தெங்கு		
	நிலப்பரப்பு (ஹெக்டெயர்)	மொத்த உற்பத்தி (கி.கி. மில்லியன்)	மொத்த உற்பத்தியின் பெறுமதி (ரூ. மில்லியன்)	நிலப்பரப்பு (ஹெக்டெயர்)	மொத்த உற்பத்தி (கி.கி. மில்லியன்)	மொத்த உற்பத்தியின் பெறுமதி (ரூ. மில்லியன்)	நிலப்பரப்பு (ஹெக்டெயர்)	மொத்த உற்பத்தி (தேங்காய் மில்லியன்)	மொத்த உற்பத்தியின் பெறுமதி (ரூ.மில்லியன்)
2019	122,900	226	180,959	137,608	75	22,537	443,538	3,086	101,499
2020	157,910	279	169,865	137,834	78	25,815	443,538	2,792	122,514
2021	157,971	299	196,198	138,622	77	33,920	456,137	3,382	166,034
2022	158,007	252	246,633	138,511	71	44,971	460,339	3,352	262,934

மூலம்: பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

7.3.3. கால்நடை வளர்ப்போருக்கான ஆதரவு

கோழி பண்ணைத் துறை

கோழித் தீவனத்தின் பிரதான ஆக்கக்கூறொன்றாக விளங்கும் சோளத்தின் உள்நாட்டு உற்பத்தி போதுமானதாக இல்லாமை, கோழிப்பண்ணைக் கைத்தொழில் எதிர்நோக்கும் பிரதான தடையாகவுள்ளது. 2021/22 பெரும் போகத்தில் 77,979 ஹெக்டேயர் பரப்பிலும் 2022 சிறு போகத்தில் சுமார் 6,178 ஹெக்டேயர் பரப்பிலும் சோளம் பயிரிடப்பட்டது. 2021/22 பெரும் போகத்தினதும் மற்றும் 2022 சிறு போகத்தினதும் விளைச்சலானது முறையே 236,927 மெட்ரிக் தொன் மற்றும் 22,112 மெட்ரிக் தொன்களாகும். 2022 ஆம் ஆண்டில் போதுமான உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகள் கிடைக்காத காரணத்தினால், 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் சோளத்தின் விளைச்சலில் கணிசமான வீழ்ச்சி காணப்பட்டது.

அட்டவணை 7.7 | சோள உற்பத்தி

ஆண்டு	பெரும்போகம்		சிறுபோகம்	
	அளவு (ஹெ)	உற்பத்தி (மெட்ரிக் தொன்)	அளவு (ஹெக்டெயர்)	உற்பத்தி (மெட்ரிக் தொன்)
2015	60,950	230,870	9,020	30,240
2016	57,090	207,070	10,540	36,890
2017	44,515	163,733	8,029	32,011
2018	63,926	242,935	6,969	27,106
2019	57,380	220,425	6,114	22,959
2020	66,486	267,767	11,763	45,754
2021	97,122	435,159	11,402	45,185
2022	77,979	236,927	6,178	22,112

மூலம்: விவசாய திணைக்களம்

சோளத்தின் ஆண்டுக்கான தேவை சுமார் 600,000 மெட்ரிக் தொன்களாக இருந்தமையால், கோழிப்பண்ணைத் கைத்தொழிலிலிருந்து எழும் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காக சோளம் அல்லது அதற்குப் பதிலீடான கோதுமைத் தானியம், சோர்கம், பார்லி போன்றவற்றின் இறக்குமதிக்கு 2022 ஆம் ஆண்டில் வசதியளிக்கப்பட்டது. அதன்பிரகாரம், 2022 ஆம் ஆண்டில் கோழித் தீவன உற்பத்தி நோக்கத்திற்காக சுமார் 184,611 மெட்ரிக் தொன் சோளமும் 34,141 மெட்ரிக் தொன் கோதுமைத் தானியமும் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

7.3.4. ஏனைய விவசாய ஆதரவுத் திட்டம்

விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான அரச களஞ்சிய வசதிகள்

உலக வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ், நவீன தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க முறைமையுடன் அநுராதபுரம், மொனராகலை, மன்னார், கிளிநொச்சி மற்றும் பொலன்னறுவை போன்ற முக்கிய விவசாய மாவட்டங்களில் ஐந்து

தானியக் களஞ்சியங்கள் தாபிக்கப்பட்டன. இவ் ஐந்து மாவட்டங்களில் தாபிக்கப்பட்ட விவசாயிகளின் தானியக் களஞ்சிய மையங்களானவை, விவசாயிகள், தமது நெல், சோளம், சோயா அவரை, எள்ளு, உளுந்து, மிளகு, நிலக்கடலை மற்றும் பிற விவசாயப் பொருட்களுக்கு அறுவடைக் காலம் தொடக்கம் சந்தையில் தமது விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் காலம் வரை அவற்றை சேமித்து வைப்பதற்கான நவீன, உயர்தர களஞ்சிய வசதிகளை வழங்குகின்றன. இங்கு விவசாயிகளுக்கு வழங்கப்படும் மிகவும் சுவாரசியமான அம்சமான களஞ்சியப் பற்றுச்சீட்டு நிதி வசதியானது, விவசாயிகள் தமது இருப்புகளை பிணையாக வைத்து சலுகை வட்டி வீதத்தில் கடன் பெற வசதியளிக்கின்றது.

பயனுறுதிமிக்க பொது நிதி நிர்வாகத்தின் காரணமாக, 2021 ஆம் ஆண்டில் ரூபா 44.36 மில்லியன் ஆக காணப்பட்ட செயற்பாட்டுச் செலவினங்கள், சுமார் 3.16 சதவீதத்தினால் குறைவடைந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 43 மில்லியனாக காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் இவ் ஐந்து கருத்திட்டங்களின் செயற்பாட்டு வருமானத்தில் சிறிதளவு அதிகரிப்பு பிரதிபலித்திருந்ததுடன், இதன் மூலம் அவ் ஆண்டில் திரட்டுநிதிக்கு ரூபா 22 மில்லியன் பங்களிக்கப்பட்டிருந்தது. களஞ்சிய செயல்முறையின் காரணமாக விவசாயிகளின் நிகர நிதி நன்மை சுமார் 49 சதவீதத்தினால் அதிகரித்துள்ள அதேவேளை, 2022 ஆம் ஆண்டில் களஞ்சியப் பற்றுச்சீட்டு நிதி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பிரதேச அபிவிருத்தி வங்கியிலிருந்து ரூபா 261 மில்லியன் நிதியுதவி விவசாயிகளால் பெறப்பட்டிருந்தது. ஆனால், 2021 ஆம் ஆண்டில், விவசாயிகளால் களஞ்சியப் பற்றுச்சீட்டு நிதி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து ரூபா 133 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. தற்போதைய நிதி நெருக்கடி நிலையில், விவசாயிகள் தமது பணப்புழக்க பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக வங்கித் துறையை நோக்கி நகர்கின்றனர் என்பதை இது தெளிவாக காட்டுகின்றது.

அட்டவணை 7.8 | தானிய களஞ்சியசாலைகளின் முன்னேற்றம் 2021 - 2022

ஆண்டு	புத்தள தா.கள.		பொலன்னறுவை தா.கள.		அநுராதபுரம் தா.கள.		கிளிநொச்சி தா.கள.		மன்னார் தா.கள.	
	2021	2022	2021	2022	2021	2022	2021	2022	2021	2022
தொழிற்பாட்டு வருமானம் ரூ. மில்லியன்	2.54	7.24	5.03	3.48	1.73	2.02	7.81	7.25	3.16	2.20
தொழிற்பாட்டு செலவு ரூ. மில்லியன்	6.23	6.86	7.65	9.60	8.11	8.07	11.75	8.42	10.62	10.05
வருடாந்த தானிய உள்வருகை (மெட்ரிக் தொன்)	652.10	520.61	484.00	295.30	984.30	1,485.00	1,267.60	1,034.00	414.65	523.65
வருடாந்த தானிய வெளியகற்றல் (மெட்ரிக் தொன்)	596.56	533.44	494.00	176.30	701.20	893.40	1,267.60	998.30	399.55	274.66
விவசாயிகளிற்கான நிகர பயன்கள் (ரூபா மில்லியன்)	9.52	12.09	1.40	0.02	18.60	35.70	5.80	6.80	5.80	6.80
பதிவு செய்யப்பட்ட விவசாயிகள்	1,030.00	1,141.00	144.00	159.00	935.00	1,010.00	130.00	246.00	282.00	389.00
களஞ்சியசாலை நிதி வருவாய்கள் (ரூபா மில்லியன்)	56.51	90.99	5.88	11.77	49.36	112.60	9.94	12.66	11.95	33.20

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

கட்டாய பயிர்க் காப்புறுதி

நெற் பயிர், மற்றும் சோளம், சோயா அவரை, பெரிய வெங்காயம், உருளைக் கிழங்கு, மிளகாய் ஆகிய ஏனைய வர்த்தகப் பயிர்களுக்கும் ஏற்படும் சேதங்களுக்கான விரிவான காப்புறுதிக் காப்பீடொன்றினை வழங்குவதற்காக கட்டாய பயிர் காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டமானது, வறட்சி, வெள்ளம், மற்றும் வன விலங்குகளினால் ஏற்படும் இழப்புகளை உள்ளடக்குவதோடு, ஒரு ஏக்கருக்கு ரூபா 40,000 வீதம் அதிக பட்சமாக நெல்லுக்கு 5 ஏக்கர்கள் வரையான நிலப்பரப்பிற்கும் மற்றும் ஏனைய வர்த்தக பயிர்களுக்கு 2.5 ஏக்கர்கள் வரையிலுமான நிலப்பரப்பிற்கும் காப்புறுதிக் காப்பீட்டினை வழங்குகின்றது. 2021/22 பெரும்போகத்தின் போது, 42,872 ஏக்கர் நிலப்பிரதேசத்தில் பயிரிடப்பட்ட பயிர்களுக்கு ஏற்பட்ட சேதத்தற்கு இழப்பீடாக 31,542 விவசாயிகளுக்கு ரூபா 657.1 மில்லியன் வழங்கப்பட்டது. மேலும், 2021 சிறு போகத்தின் போது 14,054 ஏக்கர் நிலப்பிரதேசத்தில் பயிரிடப்பட்ட பயிர்களுக்கு ஏற்பட்ட சேதத்தற்கு இழப்பீடாக, 13,755 விவசாயிகளுக்கு ரூபா 244.8 மில்லியன் தொகை, 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. இந் நோக்கத்திற்காக பொதுத் திறைசேரியினால் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபைக்கு ரூபா 600 மில்லியனை வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2022 சிறு போகத்திற்கான இழப்பீடு ஏறக்குறைய ரூபா 150 மில்லியனாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், அத் தொகை கையிருப்பிலுள்ள நிதியின் அளவைப் பொறுத்து விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

அட்டவணை 7.9 | கட்டாய பயிர் காப்புறுதி திட்டத்தின் முன்னேற்றம் - 2022

இல	மாவட்ட அலுவலகம்	2021/22 பெரும்போகம்	
		விவசாயிகளின் எண்ணிக்கை	காப்புறுதி (ரூ. மில்லியன்)
1	அம்பாறை	1,025	28
2	அநுராதபுரம்	3,530	83
3	பதுளை	1,796	49
4	மட்டக்களப்பு	112	5
5	கொழும்பு	–	–
6	காலி	142	1
7	கம்பஹா	531	6
8	ஹம்பாந்தோட்டை	251	4
9	யாழ்ப்பாணம்	5,816	79
10	களுத்துறை	229	3
11	கண்டி	281	2
12	கேகாலை	718	3
13	கிளிநொச்சி	630	8
14	குருநாகல்	3,771	54
15	மன்னார்	2,578	77
16	மாத்தளை	398	4
17	மாத்தறை	170	2
18	மொனராகலை	2,367	69
19	முல்லைத்தீவு	945	17
20	நுவரேலியா	267	2
21	பொலன்நறுவை	2,751	81
22	புத்தளம்	2,018	53
23	இரத்தினபுரி	363	3
24	திருகோணமலை	508	14
25	வவுனியா	345	10
மொத்தம்		**31,542**	**657**

மூலம்: கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை

இரண்டு ஹெக்டெயருக்கு குறைவான நெற் செய்கையாளர்களின் செலுத்தப்படாத கடன்களை பதிவளித்தல்

மொத்த தொழிற்படையில் சுமார் 30 சதவீதமான விவசாயத்துறைசார் தொழிற்படையானது, இப் பொருளாதார வீழ்ச்சியினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, இரசாயன உரப் பாவனையிலிருந்து சேதன உரப் பாவனைக்கான மாற்றம் நிலைமையை மேலும் தீவிரமாக்கியது. தொடர்ச்சியாக இரண்டு போகங்களில் நெல் விளைச்சல் குறைவடைந்தமை மற்றும் வங்கிக் கடன்களுக்கான வட்டி வீதத்திலேற்பட்ட அதிகரிப்பு என்பன காரணமாக, குறிப்பாக சிறியளவிலான நெற் செய்கையாளர்கள், தமது பயிர்ச்செய்கைக்காக பெற்றுக்கொண்ட வங்கிக் கடன்களை மீளச் செலுத்த முடியாது சிரமப்பட்டனர். அரசாங்கம் இரசாயன உரங்களை வழங்கிய போதிலும், பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியை எதிர்பார்த்தளவு பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

எனவே, 2022 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதியில், இரண்டு ஹெக்டெயர் அல்லது அதற்கும் குறைவான நிலங்களில் பயிரிடும் நெல் விவசாயிகளினால் பெறப்பட்டு செலுத்தப்படாத கடன்களை தள்ளுபடி செய்ய அரசாங்கம் தீர்மானித்தது. இத் திட்டத்தின் கீழ் இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிளில் காணப்பட்ட 28,711 விவசாயிகளுக்கான மொத்தக் கடன் நிலுவைத் தொகையான ரூபா 675.9 மில்லியன் தொகையை பதிவளிப்பதற்கு பொதுத் திறைசேரியினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதில், 2022 ஆம் ஆண்டில் மேற்குறித்த வங்கிகளுக்கு பொதுத் திறைசேரியினால் ரூபா 350 மில்லியன் தொகை மீளச் செலுத்திப்பட்டிருந்தது. கடன் பதிவளிப்பு தொடர்பான விபரங்கள் அட்டவணை 7.10 இல் காட்டப்பட்டுள்ளது. இது நெற் செய்கையாளர்களின் நிதிச் சுமையைக் குறைத்து, 2022/23 பெரும் போகத்திலிருந்து நெற் செய்கையில் ஈடுபட அவர்களை ஊக்கப்படுத்தியது.

அட்டவணை 7.10 | நெற் செய்கையாளர்களின் கடன் பதிவளித்தலின் முன்னேற்றம்

வங்கி	பதிவளிக்க எதிர்பார்க்கப்பட்ட கடன்		31.12.2022 இல் பதிவளிக்கப்பட்ட கடன்	
	விவசாயிகளின் எண்ணிக்கை	தொகை (மில்லியன்)	விவசாயிகளின் எண்ணிக்கை	தொகை (மில்லியன்)
இலங்கை வங்கி	8,097	208	7,478	197
மக்கள் வங்கி	14,512	129	14,512	129
பிரதேச அபிவிருத்தி வங்கி	6,102	340	5,479	297
மொத்தம்	**28,711**	**676**	**27,469**	**623**

மூலம் : உரிய வங்கிகள்

7.4. சமூகத்தின் இலக்கிடப்பட்ட பிரிவினருக்கான சமூகப் பாதுகாப்பு

7.4.1. சிரேஷ்ட பிரஜைகளுக்கான விஷேட வட்டித்திட்டம்

இத்திட்டமானது, சிரேஷ்ட பிரஜைகளுக்கு உறுதியான மற்றும் பாதுகாப்பான ஓய்வு வாழ்க்கையொன்றை வழங்குவதற்காக அவர்களின் நிலையான வைப்புக்களுக்கு 15 சதவீத வட்டியினை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டது. 15 சதவீத வட்டி வீதத்திற்கும் சாதாரண நிலையான வைப்புக்களின் வட்டி வீதத்திற்கும் இடையிலான வட்டித் தொகை, திறைசேரியினால் உரிய வங்கிகளுக்கு வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும், இலங்கை மத்திய வங்கியினால் முன்னெடுக்கப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன், “சிரேஷ்ட பிரஜைகள்” கணக்குகள் உட்பட நிலையான வைப்பு வைத்திருப்பவர்களுக்கு 15 சதவீத வட்டி வீதத்தை விட அதிகமான வட்டி வீதமொன்றை வழங்கக்கூடிய நிலையிலே உரிமம் பெற்ற வங்கிகள் இருந்தன. சிரேஷ்ட பிரஜைகள் தங்களுடைய நிலையான வைப்புத்தொகைக்கு 15

சதவீதத்திற்கு மேல் வட்டி வருமானம் பெறக்கூடிய வாய்ப்பு இருந்ததால், இத்திட்டத்தின் அமுலாக்கம் 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டது.

2021 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு தொடக்கம் 2022 ஆம் மூன்றாம் காலாண்டு வரையான காலப்பகுதிக்காக வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய மொத்த வட்டி மானியத் தொகை ரூபா 113,042 மில்லியன் ஆக இருந்த அதேவேளை இந் நிலுவைத் தொகையின் ஒரு பகுதியான ரூபா 10,000 மில்லியன் மதிப்புள்ள வட்டி மானியத் தொகை, 2022 ஆம் ஆண்டில் திறைசேரி முறிகளை வழங்கியதன் மூலமாகவும் பணமாகவும் செலுத்தப்பட்டது. இதன்படி, 2022 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டு வரை வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய மொத்த வட்டி மானியத் தொகை ரூபா 114,293 மில்லியன் ஆகும்.

அட்டவணை 7.11 | சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புக்களுக்கான வட்டி மானியத் தொகையினை கொடுத்துத் தீர்த்தல் 2015 - 2021

(ரூபா மில்லியன்)

வருடம்	செலுத்தப்பட்ட மொத்த வட்டிக்கான மானியம்
2015	3,714.5
2016	14,519.0
2017	13,462.2
2018	13,579.4
2019	18,082.7
2020	31,151.8
2021 1ஆம் மற்றும் 2ஆம் காலாண்டு	22,985.8
செலுத்தப்பட்ட மொத்த நிலுவைத் தொகை	**117,495.4**

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

7.4.2. தொழிலாளர்களின் உள்நோக்கிய மாற்றப்பட்ட பணவனுப்பல்களுக்கு ஐக்கிய அமெரிக்க டொலரொன்றுக்கு ரூபா 2.00 ஊக்கத்தொகை வழங்குதல்

2021 வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட, வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்கள் அல்லது இலங்கையில் வசித்துக்கொண்டு வெளிநாடுகளுக்கு சேவைகளை வழங்குவதன் மூலம் வெளிநாட்டு நாணய வருமானத்தை ஈட்டும் இலங்கையர்களுக்கு அவர்கள் ஈட்டும் அந்நியச் செலாவணிக்காக ஐக்கிய அமெரிக்க டொலரொன்றுக்கு, மேலதிகமாக ரூபா 2 வழங்கப்பட்டது. இதன்படி, 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செலுத்த வேண்டியிருந்த நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா 6,175 மில்லியன் தொகை வங்கிகளுக்குச் செலுத்தப்பட்டது.
2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் திகதி தொடக்கம், சந்தை சக்திகளால் நாணயமாற்று வீதத்தை நிர்ணயம் செய்வது தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இத் திட்டத்தை நிறுத்தவும், இது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளை இரத்து செய்யவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

7.4.3. விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டம்

நாட்டின் விவசாய அபிவிருத்திக்காக தமது பங்களிப்பினை நல்கிய வயது முதிர்ந்த விவசாயிகளின் பாதுகாப்பதற்காக கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையானது விவசாய ஓய்தியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. அண்ணளவாக, 959,254 விவசாயிகள், இவ் விவசாயிகளுக்கான ஓய்தியத் திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளதோடு, சராசரியாக சுமார் 168,000 விவசாயிகள் மாதாந்தம் இத்திட்டத்தின் கீழ் நன்மை அடைகின்றனர். 2021 ஆம் ஆண்டில். இத்திட்டத்தின் கீழ் தகைமையுடைய 169,741 விவசாயிகளுக்கிடையே மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவாக ரூபா 4,053 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. இத் திட்டத்தினை, சுயநிதித் திட்டமொன்றாக இயக்குவதற்கு விவசாயிகளின் பங்களிப்பு மாத்திரம் போதியதாக இல்லாத காரணத்தினால், அதற்கு அவசியமான எஞ்சிய நிதித்தொகை வருடாந்தம் திறைசேரியினால் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபைக்கு வழங்கப்படுகின்றது. இதன் அடிப்படையில், 2022 ஆம் ஆண்டில் விசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவை மேற்கொள்வதற்காக ரூபா 4,158 மில்லியன் தொகை திறைசேரியினால் வழங்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதிய 1853/49 ஆம் இலக்கத்தையுடைய அதி விசேட வர்த்தமானி அறிவிப்பினூடாக வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம், ஏற்கனவே நடைமுறையிலிருந்த “விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக நலத் திட்டமானது” புதிய விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தை சுயநிதியிடல் திட்டமாக செயல்படுத்தும் நோக்குடன் மீள்வடிவமைக்கப்பட்டு, 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் திகதி மீள அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்பிரகாரம், 2022 ஆம் ஆண்டில், இப் புதிய விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 503 புதிய விவசாயிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

வரைபு 7.2 | விவசாயிகளின் ஓய்வூதியத் திட்டத்தின் முன்னேற்றம் - 2022



மூலம்: கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை

7.4.4. மீனவர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையினால் மீனவர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்றாக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் இவ் ஓய்வூதியத் திட்டமானது, சுயமாக இயங்கக் கூடிய ஒரு திட்டமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 69,000 மீனவர்கள் தம்மை பதிவு செய்துள்ளதுடன், 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 5,592 மீனவர்களிடையே மாதாந்த ஓய்வூதியமாக ரூபா 80 மில்லியன் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது.

வரைபு 7.3 மீனவர்களின் ஓய்வூதியத் திட்டத்தின் முன்னேற்றம் - 2022



மூலம்: கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை

தற்போது நடைமுறையிலுள்ள ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், மீனவரொருவரின் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச மாதாந்த ஓய்வூதியம் முறையே ரூபா 1,000 மற்றும் ரூபா 4,000 ஆகும். தற்போதைய வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடும் போது இத்தொகை போதுமானதாக இல்லாத காரணத்தினால், மீனவர்களுக்கான புதிய ஓய்வூதியத் திட்டமொன்றை, அதிக நன்மை பயக்கும் வகையில், கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையுடன் இணைந்து ஓர் சுயநிதியிடல் திட்டமாகவும் செயற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7.5. உணவுப் பாதுகாப்பு

7.5.1. அரச நெற்கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம்

நாட்டின் பிரதான உணவு நெல் அரிசிச் சோறு என்ற காரணத்தினால், இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் நெல் உற்பத்தி தீர்மானம் மிக்க காரணியொன்றாக அமைந்துள்ளது. உர மானியம், மானிய விலையில் தரமான விதை நெல், நீட்டிப்பு சேவைகள் மற்றும் நெல்லுக்கான அரச உத்தரவாத விலையை உறுதி செய்தல் உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை வழங்கியதன் மூலம் நெல் உற்பத்தித் துறைக்கு வசதியளிப்பதற்கு அரசாங்கம் அதிக முன்னுரிமை அளித்தது. இதனால், நாட்டில் நெல் உற்பத்தி காலப்போக்கில் அதிகரித்தது. இருப்பினும், நாட்டில் உரம் மற்றும் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக 2022 ஆம் ஆண்டில் நெற் செய்கை மோசமாக பாதிக்கப்பட்டது. இதன் விளைவாக, 2021 ஆம் ஆண்டில் 5.15 மில்லியன் மெட்ரிக் தொன்களாக இருந்த நெல் உற்பத்தி 2022 ஆம் ஆண்டில் 34.1 சதவீதத்தினால் குறைவடைந்து 3.39 மில்லியன் மெட்ரிக் தொன்களாக காணப்பட்டது. வரைபு 7.4 இல் காட்டப்பட்டுள்ளபடி, 2022 ஆம் ஆண்டில் வருடாந்த நெல் உற்பத்தியானது கடந்த ஐந்தாண்டு காலத்தில் பதிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த வருடாந்த நெல் உற்பத்தியாக காணப்படுகின்றது. ஆகவே, விவசாயிகளுக்கு நியாயமான விலையை உறுதிசெய்யும் பொருட்டு, நெல் கொள்வனவு செய்வதில் அரசின் தலையீடு குறைந்தபட்ச அளவில் காணப்பட்டது.

வரைபு 7.4 | மொத்த நெல் உற்பத்தி 2010 - 2022



மூலம்: விவசாயத் திணைக்களம்

குறைந்த அளவிலான நெல் உற்பத்தியைக் கருத்தில் கொண்டு, 2022 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் நெல் கொள்வனவுத் திட்டமானது, இலங்கை வங்கியினூடாக பொதுத் திறைசேரியால் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 6,500 மில்லியன் நிதியைப் பயன்படுத்தி நெல் சந்தைப்படுத்தல் சபையினூடாக மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டது. நெல் சந்தைப்படுத்தல் சபையானது நாடளாவிய ரீதியில் விவசாயிகளிடமிருந்து 78,355 மில்லியன் மெட்ரிக் தொன் நெல்லை 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்தது.

அட்டவணை 7.12 | அரசாங்கத்தின் நெல் கொள்வனவு திட்டத்தின் கீழான நெற் கொள்வனவு 2018-2022

போகம்	அரிசியின் வகைகள்			பெறுமதி
	நாடு (மெ.தொ.)	சம்பா (மெ.தொ.)	மொத்தம் (மெ.தொ.)	(ரூ. மில்லியன்)
2017/18 பெரும்போகம்	4,605	–	4,605	175
2018 சிறுபோகம்	2,077	5	2,082	79
மொத்தம்	**6,682**	**5**	**6,687**	**254**
2018/19 பெரும்போகம்	31,522	16,749	48,271	1,886
2019 சிறுபோகம்	–	–	–	–
மொத்தம்	**31,522**	**16,749**	**48,271**	**1,886**
2019/20 பெரும்போகம்	34,408	17,844	52,252	2,597
2020 சிறுபோகம்	9,636	37	9,673	512
மொத்தம்	**44,044**	**17,881**	**61,925**	**3,109**
2020/21 பெரும்போகம்	51,616	541	52,157	2,447
2021 சிறுபோகம்	13,423	147	13,570	683
மொத்தம்	**65,039**	**688**	**65,727**	**3,130**
2021/22 பெரும்போகம்	63,376	7,903	71,279	6,450
2022 சிறுபோகம்	4,632	2,444	7,076	890
மொத்தம்	**68,008**	**10,347**	**78,355**	**7,340**

மூலம்: நெல் சந்தைப்படுத்தல் சபை மற்றும் குறிப்பிட்ட மாவட்ட செயலாளர்கள்

அட்டவணை 7.13 | அரசாங்கத்தின் நெல்லுக்கான உத்தரவாத விலை 2018 - 2022

பருவம்	உத்தரவாத விலை (ரூபா கி.கி.)		
	நாடு	சம்பா	கீரி சம்பா
2017/18 பெரும்போகம்	38	41	50
2018 சிறுபோகம்	38	41	50
2018/19 பெரும்போகம்	38	41	50
2019/ சிறுபோகம்	38	41	50
2019/20 பெரும்போகம்	50	50	50
2020/ சிறுபோகம்	50	50	50
2020/21 பெரும்போகம்	56	56	56
2021/ சிறுபோகம்	55	52	55
2021/22 பெரும்போகம்	90	92	95
2022 சிறுபோகம்	120	125	130

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

7.5.2. நெல் அகற்றல் நிகழ்ச்சித்திட்டம்

2022 ஆம் ஆண்டில் சந்தையில் அரிசியின் தொடர்ச்சியான, அதிகரித்த சில்லறை விலைகளைக் கருத்தில் கொண்டு, அரசாங்கம் அதிகபட்ச சில்லறை விலை முறைமையின் கீழ் நியாயமான விலையிலே சந்தையில் அரிசியின் கிடைப்பனவை உறுதி செய்தது. இந் நோக்கத்திற்காக, வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனவனத்தின் விற்பனை வலையமைப்பினூடாகவும் தனியார் பல்பொருள் அங்காடிகளின் விற்பனை வலையமைப்பினூடாகவும் அதிகபட்ச சில்லறை விலைக்கும் குறைவான விலையில் சுமார் 42,080 மெட்ரிக் தொன் அரிசியை சந்தைக்கு விநியோகிக்கும் அரசாங்கத்தின் நெல் அகற்றல் நிகழ்ச்சித்திட்டம் 2022 ஆம் ஆண்டில் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

7.5.3. தனியார் துறையினரின் நெற் கொள்வனவு

அரச மற்றும் தனியார் துறை வங்கிகள் இரண்டும், தனியார் துறையின் நெற் கொள்வனவு செயல்முறைக்குத் தேவையான நிதிகளை வழங்குவதன் மூலம் ஆதரவளித்த அதேவேளை, இவை நெற் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தனியார் துறையின் முக்கிய நிதி ஆதாரமாகவும் இருந்தன. 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் அரச மற்றும் தனியார் துறை வங்கிகள், நெல் கொள்வனவு செய்வதற்காக தனியார் துறையினருக்கு வழங்கிய கடனின் மொத்த எண்ணிக்கையும் பெறுமதியும் முறையே 32 சதவீதத்தினாலும் 8 சதவீதத்தினாலும் குறைவடைந்து காணப்பட்டன.

அட்டவணை 7.14 | நெற் கொள்வனவு செய்வதற்காக தனியார் துறையினருக்கு வழங்கப்பட்ட கடன்களின் முன்னேற்றம் - (2021-2022)

வங்கியின் பெயர	2021		2022		ஒப்பீடு	
	கடன்களின் எண்ணிக்கை	கடன்களின் பெறுமதி (ரூ. மில்லியன்)	கடன்களின் எண்ணிக்கை	கடன்களின் பெறுமதி (ரூ. மில்லியன்)	கடன்களின் எண்ணிக்கை%	மொத்த கடன்களின் பெறுமதி
மக்கள் வங்கி	%	4,218	35	628	(51)	(85)
இலங்கை வங்கி	471	19,025	407	21,976	(14)	16
பிரதேச அபிவிருத்தி வங்கி	67	211	100	991	49	369
அரச வங்கிகளின் உப மொத்தம்	610	23,454	542	23,595	(11)	1
கொமர்ஷியல் வங்கி	851	6,398	912	7,954	7	24
சம்பத் வங்கி	279	5,788	80	4,354	(71)	(25)
டீ.எப்.சீ.சீ. வங்கி	87	618	33	288	(62)	(53)
செலான் வங்கி	94	8,671	128	1,448	36	(83)
பான் ஏசியா வங்கி	–	–	3	7	–	–
அமானா வங்கி	818	3,092	161	1,797	(80)	(42)
தேசிய அபிவிருத்தி வங்கி	22	131	65	4,029	195	2,979
நேசன்ஸ் ட்ரஸ்ட் வங்கி	78	1,483	67	1,750	(14)	18
ஹட்டன் நெஷனல் வங்கி	176	838	57	1,236	(68)	47
தனியார் வங்களின் உப மொத்தம்	2,405	27,018	1,506	22,863	(37)	(15)
பீபள்ஸ் லீசிங் மற்றும் பைனான்ஸ்	2	3	–	–	(100)	(100)
நிதி நிறுவனங்களின் உப மொத்தம்	2	3	–	–	(100)	(100)
மொத்தம்	**3,017**	**50,476**	**2,048**	**46,458**	**(32)**	**(8)**

மூலம்: உரிய வங்கிகள்

7.5.4. ஏனைய உள்நாட்டு பயிர்களின் அபிவிருத்தி

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில், பயறு, சோயா அவரை, மஞ்சள், கௌபீ, வெங்காயம், இஞ்சி, நிலக்கடலை, உருளைக் கிழங்கு, உலர்ந்த மிளகாய் உள்ளடங்கலாக தெரிவு செய்யப்பட்ட 15 உள்நாட்டுப் பயிர்கள் மற்றும் இதனை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களில் தன்னிறைவடைவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை செயன்முறைப்படுத்தியது. அந்த வகையில், 2022 ஆம் ஆண்டில், உளுந்து, பயறு, புளி, மிளகு, கறுவா, கராம்பு, இஞ்சி, மஞ்சள் போன்ற உள்நாட்டில் பயிரிடக் கூடிய சில பயிர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அரசாங்கம் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தியது.

குறிப்பாக, பெரிய வெங்காயத்தின் உள்நாட்டு அறுவடைக் காலத்தில், இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதனூடாக உள்நாட்டு விவசாயிகளைப் பாதுகாப்பதற்கான ஒரு நடவடிக்கையாக, அரசாங்கம் பெரிய வெங்காயத்திற்கான சிறப்பு பண்ட வரியை, கிலோ ஒன்றுக்கு ரூபா 10 இலிருந்து ரூபா 50 ஆக 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலே உயர்த்தியது.

இத்தகைய அனைத்து நடவடிக்கைகளினாலும், அடையாளங்காணப்பட்ட உள்நாட்டுப் பயிர்களின் உற்பத்தியில் கணிசமான அளவு அதிகரித்திருந்ததுடன், குறிப்பாக, மஞ்சள், எள்ளு மற்றும் இஞ்சியின் உள்நாட்டு உற்பத்தி 2022 ஆம் ஆண்டில் நாடு தன்னிறைவும் அடைந்திருந்தது.

7.5.5. வாழ்க்கைச் செலவு

நாட்டில் நிலவிய பாதகமான பொருளாதார நிலைமைகள் காரணமாக 2022 ஆம் ஆண்டில் உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பு, அரசாங்கத்திற்கு பெரும் சவாலாக இருந்தது. எனவே, 2022 ஆம் ஆண்டிலும் நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்களை பாதுகாக்கும் சவாலை அரசாங்கம் தொடர்ந்தும் எதிர்கொண்டது. இதன்படி, 2021 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது போன்று, குறைந்தபட்ச உத்தரவாத விலைகளின் தொடர்ச்சியான அமுல்படுத்தல், விரும்பத்தக்க அளவில் அதிகபட்ச சில்லறை விலையை நிர்வகித்தல் மற்றும் சிறப்புப் பண்ட வரியில் மாற்றங்களை ஏற்படுத்தல் போன்றவை 2022 ஆம் ஆண்டிலும் அச் சவால்களை நிர்வகிக்க பயன்படுத்தப்பட்டன.

அட்டவணை 7.15 | வாழ்க்கைச் செலவினத்தை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், 2021/22

பண்டங்கள்	விசேட பண்ட வரி / அதிகபட்ச சில்லறை விலை பற்றிய விபரம்	நடைமுறைக்கு வரும் திகதி
பெரிய வெங்காயம்	கி.கி. இற்கான சி.ப.வ ரூபா. 40 இலிருந்து ரூபா 10 ஆக குறைக்கப்பட்டது	01.01.2022
	பின்னர் கி.கி. இற்கான சி.ப.வ ரூபா 10 இலிருந்து ரூபா 50 ஆக அதிகரிக்கப்பட்டது	23.09.2022
மைசூர் பருப்பு	சி.ப.வ மேலும் ஒரு வருடத்திற்கு கி.கி. இற்கு 25 சதமாக பேணப்பட்டது.	14.10.2022
சோளம்	சி.ப.வ நீக்கப்பட்டது.	25.01.2023
அரிசி	அதிகபட்ச சில்லறைவிலை நடைமுறைப்படுத்தப்பட்டது.	
கீரி சம்பா	கி.கி. ஒன்றுக்கு ரூபா 260	
வெள்ளை/சிவப்பு சம்பா	கி.கி. ஒன்றுக்கு ரூபா 230	02.09.2021
வெள்ளை/சிவப்பு சம்பா நாடு	கி.கி. ஒன்றுக்கு ரூபா 220	
வெள்ளை/சிவப்பு பச்சரிசி (உள்நாடு)	கி.கி. ஒன்றுக்கு ரூபா 210	10.06.2022
அரிசி	சி.ப.வ நீக்கப்பட்டது.	09.12.2022
கௌப்பி	சி.ப.வ இன்னுமோர் ஆண்டிற்கு கி.கி. ஒன்றுக்கு ரூபா 70 ஆக தொடரப்பட்டது	02.03.2022
பயறு	சி.ப.வ இன்னுமோர் ஆண்டிற்கு கி.கி. ஒன்றுக்கு ரூபா 40 ஆக தொடரப்பட்டது	14.10.2022
சீனி	சி.ப.வ இன்னுமோர் மாதத்திற்கு கி.கி. ஒன்றுக்கு 25 சதம் ஆக தொடரப்பட்டது	15.06.2022
உருளைக்கிழங்கு	சி.ப.வ கி.கி. ஒன்றுக்கு ரூபா 50 இலிருந்து கி.கி. ஒன்றுக்கு ரூபா 20 ஆக குறைக்கப்பட்டது	01.01.2022
கறுப்பு முழு உழுந்து	சி.ப.வ இன்னுமோர் ஆண்டிற்கு கி.கி. ஒன்றுக்கு ரூபா 200 ஆக தொடரப்பட்டது	03.03.2022
	அதிகபட்ச சில்லறை விலை நடைமுறைப்படுத்தப்பட்டது	
முட்டை	ஒரு வெள்ளை முட்டை 44 ரூபா	20.01.2023
	ஒரு கபிலநிற முட்டை 46 ரூபா	

மூலம்: நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களம்

2022 ஆம் ஆண்டில், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்தல் என்பவற்றிலுள்ள சவால்களை எதிர்கொள்ளும் ஒரு முழுமையான அணுகுமுறையொன்று என்ற வகையில், "உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கினை உறுதி செய்வதற்கான பல்துறை ஒருங்கிணைப்புப் பொறிமுறைக்கு" அமைச்சரவையின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றது. இப் பல்துறை ஒருங்கிணைந்த பொறிமுறையானது தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு கவுன்சில் மற்றும் மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்குக்கான ஒருங்கிணைந்த பொறிமுறை என்பவற்றை நிறுவுவதன் மூலம் செயற்படுத்தப்பட்டது.

இந்தப் பொறிமுறையின் கீழ், தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு சபை, உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குக்கான தேசிய ஒருங்கிணைந்த பொறிமுறை, உணவுப் பாதுகாப்பு மற்றும் போ'ாக்குக்கான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு, உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குக்கான தற்காலிக ஒருங்கிணைந்த பொறிமுறை, உணவுப் பாதுகாப்புப் மற்றும் போஷாக்குக்கான மாவட்ட ஒருங்கிணைந்த பொறிமுறை, உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குக்கான பிரதேச ஒருங்கிணைந்த பொறிமுறை, பொருளாதார மறுமலர்ச்சி, உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குக்கான கிராமிய மையம் என்பன 2022 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டன.

நாட்டில் நிலவும் பாதகமான பொருளாதார சூழ்நிலைக்கு மத்தியிலும் உணவு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் சந்தைக்கு தட்டுப்பாடின்றி வழங்கப்படுவதை உறுதிசெய்யும் அதேநேரம் தேவையான கொள்கைகள் மற்றும் நடைமுறைத் தீர்வுளுக்கான பரிந்துரைகளை அமைச்சரவைக்கு வழங்குவதற்காக "வாழ்க்கைச் செலவுக்கான அமைச்சரவைத் துணைக் குழுவை" மீள ஸ்தாபிப்பதற்கும் மற்றும் "உணவுப் பாதுகாப்புக் குழுவை" ஸ்தாபிப்பதற்கும் 2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

இருப்பினும், மிகையான இறக்குமதி, சந்தை முறைமையில் இடையூறுகள், உற்பத்தியாளருக்கு இழப்புக்கள் ஏற்பட்டமை போன்ற பிரச்சனைகள் ஏற்பட்ட காரணத்தினால், 22/1495/601/014 ஆம் இலக்க அமைச்சரவைப் விஞ்ஞாபனம் மற்றும் 2022 ஒக்டோபர் 03 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் என்பவற்றின் பிரகாரம் "வாழ்க்கைச் செலவு தொடர்பிலான அமைச்சரவைத் துணைக் குழு" மற்றும் "உணவுப் பாதுகாப்புக் குழு" என்பவற்றுக்குப் பதிலாக ஜனாதிபதியின் செயலாளரின் தலைமையில் "உணவுக் கொள்கைக் குழு" நிறுவப்பட்டது. இதன் பிரகாரம், வாழ்க்கைச் செலவு மற்றும் பரந்துபட்ட உணவுப் பாதுகாப்பு என்பவற்றுடன் தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் வகையில், வலுவான கொள்கை அணுகுமுறைகள் மற்றும் நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு என்பவற்றை திறம்பட வழங்குவதற்கான மையப் புள்ளியொன்றாக 2022 ஆம் ஆண்டிலே "உணவுக் கொள்கைக் குழு" நியமிக்கப்பட்டது.

அரிசி இறக்குமதி

சந்தையில் அரிசியின் விலை அதிகரிப்பினைக் கருத்தில் கொண்டு, அரிசி இறக்குமதியை ஊக்குவிப்பதன் மூலம் சந்தையில் அரிசியின் கிடைப்பனவை உறுதி செய்வதற்காக, கிலோவொன்றுக்கு 65 ரூபாவாகவிருந்த அரிசி இறக்குமதி மீதான சிறப்புப் பண்ட வரி, 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02 ஆம் திகதி தொடக்கம் கிலோவொன்றுக்கு 25 சதமாக குறைக்கப்பட்டது.

எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டில், சந்தையில் நிலவிய, அரிசியின் விலைகளின் அதிகரித்துச் செல்லும் போக்கினை, குறிப்பாக நாடு மற்றும் சம்பா அரிசி கிலோ ஒன்றுக்கு முறையே ரூபா 130-180 மற்றும் ரூபா 160-190 ஆக ஆண்டின் தொடக்கத்தில் காணப்பட்டதை கருத்திற் கொண்டு, சந்தையில் அரிசி நியாயமான விலையில் கிடைப்பதை உறுதிப்படுத்தும் ஒரு மூலோபாய அணுகுமுறையாக, 2022 ஆம் ஆண்டிலும் அரிசி இறக்குமதியைத் தொடர அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. இருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் பண்டிகைக் காலம் வரை சந்தையில் உள்நாட்டு அரிசியின் விலைகள் கணிசமான அளவில் அதிகரித்தது. பண்டிகைக் காலத்தின் பின்னர், சந்தையில் உள்நாட்டு அரிசியின் விலைகள் ஒப்பீட்டளவில் நிலையானதாக காணப்பட்டது. எவ்வாறாயினும், நாட்டின் மாதாந்த அரிசி நுகர்வு சுமார் 200,000 மெட்ரிக் தொன் ஆகவும் மொத்த அரிசித் தேவை சுமார் 2,400,000 மெட்ரிக் தொன் ஆகவும் காணப்பட்டமையால், 2022 ஆம் ஆண்டில் சுமார் 600,000 மெட்ரிக் தொன் வரை அரிசித் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என்று மதிப்பிடப்பட்டிருந்தது. எனவே, அரசாங்கம் அரிசி இறக்குமதியை 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை தொடர்ந்திருந்தது.

இதன்பிரகாரம், 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02 திகதி முதல் 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களால் சுமார் 922,620 மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ரூபா 1,350 மில்லியன் மற்றும் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ரூபா 5,135 மில்லியன் தொகைகளுக்கு திறைசேரி உத்தரவாதங்கள் மக்கள் வங்கிக்கு வழங்கப்பட்டதன் மூலம், இந்தியாவிலிருந்து அரிசியை இறக்குமதி செய்ய, அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்திற்கு அரசாங்கம் வசதியளித்தது. மொத்த இறக்குமதியில், 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி வரை 80,842 மெட்ரிக் தொன் அரிசி அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தினால் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டு, லங்கா சதொச விற்பனை நிலையங்கள், கூட்டுறவுச் சங்க வலையமைப்பு, அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் Q-கடைகள் மற்றும் தனியார் துறை பல் அங்காடிகள் மூலம் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன.

அட்டவணை 7.16 | அரிசி இறக்குமதியின் முன்னேற்றம்

காலம்	அரிசி இறக்குமதி (மெட்ரிக் தொன்)		
	அரச வியாபார கூட்டுத்தாபனம் ஊடாக அரசாங்கம்	தனியார் பிரிவு	மொத்த அளவு
10.11.2021 – 31.12.2021	15,252	120,843	136,095
01.01.2022 – 31.12.2022	65,590	715,049	780,639
01.01.2023 – 15.02.2023		5,886	5,886
மொத்தம்	**80,842**	**841,778**	**922,620**

மூலம்: இலங்கை சுங்கம்

எவ்வாறாயினும், சந்தையிலுள்ள அரிசியின் அளவு மற்றும் விவசாயிகளுக்கான உரம் மற்றும் பிற விவசாய இரசாயனங்கள், எரிபொருள் மற்றும் விதைகளின் போதியளவான கிடைப்பனவு விவசாய அமைச்சினால் மதிப்பிடப்பட்ட 2022/23 பெரும் போகத்திற்கான நெல் அறுவடையின் அளவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அனைத்து வகையான அரிசிகளின் இறக்குமதியும் (பாசுமதி அரிசி தவிர) இறக்குமதி கட்டுப்பாட்டு உரிம முறைமையின் கீழ் வகைப்படுத்துவதற்கான கொள்கை ரீதியான தீர்மானமொன்று அரசாங்கத்தால் எடுக்கப்பட்டதுடன், 2309/40 ஆம் இலக்கத்தையுடைய 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9 ஆம் திகதிய வர்த்தமானியினூடாக வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி விதிமுறைகளின் பிரகாரம், மறு அறிவித்தல் வரை அரிசி இறக்குமதிக்கான உரிமம் வழங்குதல் இடைநிறுத்தப்பட்டது.

"கம சமக பிலிசந்தர" - பிராந்திய அபிவிருத்தித் நிகழ்ச்சித்திட்டம்

ஒட்டுமொத்த சமூகத்தினரிடையேயும் வளர்ச்சியின் பலன்கள் சென்றடைவதை உறுதி செய்வதற்காக, 2022-2024 நடுத்தரகால வரவுசெலவுத்திட்டக் கட்டமைப்பின் கீழ் 2022 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் பிராந்திய மேம்பாட்டு முயற்சிகளை விரைவுபடுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியது. இதன் பிரகாரம், நாட்டின் பிராந்திய மற்றும் கிராமப்புற வளர்ச்சியில் அடையாளம் காணப்பட்ட தேவைகளின் அடிப்படையில், 2022 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தினூடாக, "கம சமக பிலிசந்தர" (கிராமத்துடன் கலந்துரையாடல்) எனும் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் ரூபா 85,000 மில்லியனை தொகையை ஒதுக்கியது.

கிராமிய உற்பத்திப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதன் மூலம் வீட்டுப் பொருளாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் தொடர்பான கருத்தரங்குத் தொடர் நாட்டிலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கிய வகையில் அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய பாதகமான பொருளாதார நிலைமை காரணமாக, இவ் வேலைத்திட்டம் இடைநிறுத்தப்பட்டது.

வீட்டுப் பொருளாதாரத்தைப் பாதுகாத்தல்

கொவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலையின் போது கிராம மட்ட மக்கள், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினைகளை மதிப்பாய்வு செய்து, வீட்டுப் பொருளாதாரப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 2022 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தினூடாக அரசாங்கம் ரூபா. 31,000 மில்லியனை ஒதுக்கீடு செய்தது.

இதன்படி, 24 மாத காலத்திற்கு கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போஷாக்குப் பொதி வழங்குவதற்காக ரூபா. 1000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவின் அழுத்தத்தைக் குறைப்பதற்காக கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் பொருளாதார ரீதியில் பின்தங்கிய குடும்பங்களுக்கு நிவாரணப் பொதி வழங்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 15,000 மில்லியன் ஒதுக்கப்பட்ட அதேவேளை, மீதி ரூபா 15,000 மில்லியன் தொகை, பெண் தொழில்முனைவோருக்கான சிறு பல்லங்காடித் தொடரொன்றினை (வீட்டுக் கடை) தாபிப்பதற்காக ஒதுக்கப்பட்டது.

குறிப்பிட்ட பிரதேச செயலகங்கள், கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் மேம்பாடு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு ஆகிய நிறுவனங்களின், அடையாளங்காணப்பட்ட நடைமுறைப்படுதல் முகவர்களினூடாக இந் நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தி முடிப்பதற்கான நடைமுறைப்படுத்தற் செயற்பாடுகள் வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சினால் 2022 ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்டது.

இருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய பாதகமான பொருளாதார சூழ்நிலை காரணமாக, "வீட்டுக் கடை" திட்டத்தை செயல்படுத்தும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன.

அட்டவணை 7.17 | வீட்டு கடை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாட்டு முன்னேற்றம்

செயற்பாடு	பௌதீக முன்னேற்றம்			நிதி முன்னேற்றம் (ரூபா மில்லியன்)	பொறுப்புவாய்ந்த நிறுவனம்
	அலகு	இலக்கு	முன்னேற்றம்		
வீட்டுக்கடை நிர்மாணம்	இல.	14,021	45	2,894	பிரதேச செயலகம்
கடையில் தட்டுக்களை அமைத்தல், வீட்டுக்கடைக்கான உபகரண கொள்வனவு கணனி முறைமையை தாபித்தல் போன்ற வீட்டுக்கடைக்கான உட்கட்டமைப்பு வசதிகளை பூர்த்தி செய்தல் *	%	14,021	-	-	கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் மேம்பாடு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு
பெண் தொழில் முனைவோருக்கு பயிற்சியளித்தல் *	இல.	14,021	-	-	பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
வீட்டுக்கடைகளின் செயற்பாடுகள்	இல.	45	23		பயனாளர்கள்

மூலம்: வியாபார, வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு
26.04.2022 திகதிய 03/2022 **ஆம் இலக்க வரவு செலவு சுற்றறிக்கைக்கமைய முடிவுறுத்தப்பட்டது.**

தொடங்கப்பட்ட 45 வீட்டுக் கடைகளில் 23 வீட்டுக் கடைகள் முழுமையாகவும், 22 வீட்டுக் கடைகள் பகுதியாகவும் முடிக்கப்பட்டன.

ரூபா 4,591 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான போஷாக்குக் கொடுப்பனவுத் திட்டம் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 3,694 மில்லியன் செலவில் பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

7.6. நடுத்தர வருமானம் ஈட்டுபவர்களுக்கான வீட்டு வசதி

2021 ஆம் ஆண்டில், "சொந்துரு கெதெல்ல" வீட்டுக் கடன் திட்டமானது, நகர அபிவிருத்தி அதிகாரசபை, நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றால் நகர்ப்புறத்தில் கட்டப்பட்ட வீட்டுத் தொகுதிகளிலிருந்து வீட்டு அலகொன்றை கொள்வனவு செய்வதற்காக, வளர்ந்துவரும் தொழிற்படையில் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கு ஆதரவளிக்கும் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவொன்றாக அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் அடிப்படையில், இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் ஊடாக சலுகை வட்டி வீதத்தில் கடன் வசதிகளை வழங்க எதிர்பார்க்கப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றால் மொத்தமாக 4,053 வீடுகள் கட்டிமுடிக்கத் திட்டமிடப்பட்டிருந்த அதேவேளை, 2021 ஆம் ஆண்டில் 479 வீடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், அதிகரித்த வட்டி வீதங்களின் காரணமாக, பங்கேற்பு வங்கிகளினால் மானியத்துடன் கூடிய கடன்களை வழங்கும் நடவடிக்கைகள், 2022 ஆம் ஆண்டில் தாமதப்படுத்தப்பட்டன.

கட்டம் 7.1 | ரூபா 1,000 மில்லியன் இந்திய கடன் திட்டம்

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அமைச்சரவையின் ஒப்புதலின் அடிப்படையில் இந்தியாவிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக ஐ.அ.டொ. 1,000 மில்லியன் கடனைப் பெறுவதற்காக 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதியன்று இலங்கை அரசாங்கத்துக்கும் மற்றும் இந்திய ஸ்டேட் வங்கிக்கும் இடையே கடன் வசதி ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. உள்நாட்டு வங்கி முறைமை மற்றும் சந்தையில் வெளிநாட்டு நாணயத் தட்டுப்பாடு என்பன காரணமாக உணவு மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு நாணயக் கடிதங்களை திறப்பதில் பல சிரமங்களை எதிர்கொண்ட இலங்கை இறக்குமதியாளர்களுக்கு வசதியளிப்பதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும். அந் நேரத்தில் ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு, நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த உதவும் காரணிகளை ஆய்வு செய்து, கைத்தொழில் மூலப்பொருட்கள் (ஐ.அ.டொ. 500 மில்லியன்), அத்தியாவசியப் பொருட்கள் (ஐ.அ.டொ. 300 மில்லியன்) மற்றும் மருந்துப் பொருட்கள் (ஐ.அ.டொ. 200 மில்லியன்) ஆகிய மூன்று துறைகளுக்குக் கடன் வசதி முதலில் ஒதுக்கப்பட்டிருந்த போதும் பின்னர் நாட்டில் ஏற்பட்ட உணவு மற்றும் எரிபொருளின் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு, காலத்திற்குக் காலம் எழுந்த தேவைகளின் அடிப்படையில் ஒதுக்கீடுகள் பல முறை திருத்தப்பட்டு இறுதியாக பின்வருமாறு சீராக்கப்பட்டது. அத்தியாவசியப் பொருட்கள் (ஐ.அ.டொ. 371 மில்லியன்), மருந்துப் பொருட்கள் (ஐ.அ.டொ. 235 மில்லியன்), கைத்தொழில் மூலப்பொருட்கள் (ஐ.அ.டொ. 194 மில்லியன்) மற்றும் எரிபொருள் (ஐ.அ.டொ. 200 மில்லியன்).

இறக்குமதியாளர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பில் அத்தியாவசிய பொருட்கள், கைத்தொழில் மூலப்பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் ஆகிய முக்கிய மூன்று துறைகளுக்கு, உரிய அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட மூன்று துணைக்குழுக்களிடமிருந்து பெறப்பட்ட ஆரம்பப் பரிந்துரையைத் தொடர்ந்து வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட முதன்மைக் குழுவினால் அவ் விண்ணப்பங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டு இறக்குமதிக்கான தேவைகள் மற்றும் இறக்குமதியாளர்கள் அடையாளம் காணப்பட்டு பரிந்துரைக்கப்பட்டனர். முதன்மைக் குழு, பரிந்துரைக்கப்பட்ட விலைப்பட்டியல், இறக்குமதியாளர் மற்றும் ஏற்றுமதியாளர் விவரங்களை இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஒப்புதலுக்காக அனுப்புகின்ற அதேவேளை அங்கீகரிக்கப்பட்ட விலைப்பட்டியல்களானவை, இறக்குமதியைத் தொடங்குவதற்காக இந்திய கடன் வரிசையை செயல்படுத்தும் நோக்கில் நிதி அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள இந்திய கடன் வசதி ஒருங்கிணைப்புப் பிரிவினால் இறக்குமதியாளர்களுக்கு அனுப்பப்படும். இறக்குமதி முடிவடைந்ததும், ஏற்றுமதியாளர்களுக்கு இந்திய உயர்ஸ்தானிகராலயம் மற்றும் இந்திய ஸ்டேட் வங்கி மூலம் பணம் செலுத்துவதற்காக இந்திய கடன் வசதி ஒருங்கிணைப்புப் பிரிவு வசதியளிக்கின்றது. மேலும், இந்திய கடன் வரிசையின் கீழ் இறக்குமதி செய்யப்படும் பொருட்களிற்கு சுங்க அனுமதியை வழங்குவதற்கு வசதியாக இலங்கை சுங்கத்தின் கீழ் சிறப்பு புலனாய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிய நிலவரப்படி, மொத்தம் ஐ.அ.டொ. 826 மில்லியன் விண்ணப்பங்கள் இந்திய கடன் வரிசை ஒருங்கிணைப்புப் பிரிவினால் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அதேவேளை, இது மொத்த ஒதுக்கீட்டில் 82.6 சதவீதம் ஆகும். அதில் ஐ.அ.டொ. 590 மில்லியன் மதிப்புள்ள விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஐ.அ.டொ. 345 மில்லியன் மதிப்புள்ள பொருட்கள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள அதேவேளை, அதில் ஐ.அ.டொ. 328 மில்லியன் ஏற்றுமதியாளர்களின் கொடுப்பனவுகளைச் செயற்படுத்தும் பொருட்டு, இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு கொடுப்பனவு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 7.18| 2022 டிசம்பர் 31 திகதியில் உள்ளவாறான சாராம்சம்

(ஐ.அ.டொ. மில்லியன்)

வகுதி	மொத்த ஒதுக்கீடு	இந்திய உ.யர் ஸ்தானிகராலயத்தின் அனுமதிக்காக அனுப்பப்பட்டவை	அங்கீகரிக்கப்பட்ட பெறுமதி	கிடைக்கப்பெற்ற பொருட்கள்	வழங்கப்பட்ட பணம் செலுத்தும் அங்கீகாரம்	கிடைக்கப் பெற்ற பொருட்கள், வழங்கப்பட்ட பணம் செலுத்தும் அங்கீகாரத்தின் % ஆக
கைத்தொழில்	194	128	64	26	22	83.5
மருந்துப் பொருட்கள்	235	184	130	44	33	75.6
அத்தியாவசிப் பொருட்கள்	371	297	196	75	73	97.2
எரிபொருள்	200	200	200	200	200	100.0
எல்பி எரிவாயு		17	–			
மொத்தம்	**1,000**	**826**	**590**	**345**	**328**	**95.0**

மூலம்: இந்திய கடன் வசதி ஒருங்கிணைப்பு பிரிவு

08

அரசுடமைத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை

8.1 மேன்நோக்கு

அத்தியவசிய சேவைகளை வணிக அடிப்படையில் வழங்குதல் மற்றும் மூலோபாய அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்த வளங்களின் உகந்த பயன்பாட்டினை உறுதிசெய்தல் என்பனவற்றின் மூலம் அரசாங்கத்தின் மூலோபாய அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் அரசுடமைத் தொழில்முயற்சிகள் விசேட பங்காற்றுகின்றன. ஆயினும், உள்நாட்டுப் பொருளாதார சூழலில் அரசுடமைத் தொழில்முயற்சிகள் பரவலாக காணப்பட்ட போதிலும், எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார பிரதிபலன்களை வழங்குவதற்கு அத்தகைய அரசுடமைத் தொழில்முயற்சிகளுக்கு முடியாமற் போயுள்ளன என்பது அவதானிக்கப்படுகிறது. அதற்காக, செல்வாக்கு செலுத்தியுள்ள காரணிகளுக்கு மத்தியில், பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பனவற்றிற்காக முறையாக விலை நிர்ணய முறைமையொன்று இல்லாமை காரணமாக திரட்டிய நட்டங்கள் ஏற்பட்டமை, தொழிற்படுத்தலுக்கான வினைத்திறனின்மை, அதிகரித்த பணியாளர்கள் உள்ளடங்கலாக பலவீனமான மனித வள முகாமை, பலவீனமான முகாமை மற்றும் நிருவாகம் என்பன அவற்றுக்கு மத்தியில் பிரதானமானவைகளாக காணப்பட்டன. இதன் மூலம் உருவான மிக மோசமான நிதி நிலமைகள் காரணமாக , 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினையின் அதிர்ச்சித் தாக்கத்திற்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு முக்கியமான அரசுடமைத் தெழில்முயற்சிகளுக்கு முடியாமற் போயின. பலவீனமான ஐந்தொகை காரணமாக தேவையான நிதியினைத் திரட்டுவதற்கு முடியாமையினால் ஏற்பட்ட நிதிப் பற்றாக்குறை காரணமாக அரசுடமைத் தொழில்முயற்சிகளில் ஏற்பட்ட பலவீனம், மின்சாரம், எரிபொருள் மற்றும் அத்தியவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளில் பொருளாதார நெருக்கடியினைத் தீவிரமடையச் செய்துள்ளன.

அரசுடமைத் தொழில்முயற்சிகளிலுள்ள நிதிப் பலவீனங்கள் பொருளாதாரத்திற்கு எதிர்மறையான தாக்கங்களை குறிப்பாக வங்கித் துறையில் ஏற்படுத்தின. நீண்ட காலமாக செலவினத்தினைப் பிரதிபலிக்கக் கூடிய விலையிடல் முறைமை குறிப்பாக, எரிசக்தித் துறையில் இல்லாமையானது, அரசுடமை வங்கிகளால் நிதியளிக்கப்பட்ட மரபுப் படுகடன் திரட்சியொன்றினைத் தோற்றுவித்தது. இப்படுகடன்களின் திரட்சியானது, இவ் வங்கிகள் மீது அழுத்தத்தினை ஏற்படுத்தியுளள்தோடு, அவற்றின் நீடிப்பானது முழு வங்கித் துறையில் முறைப்படுத்தப்பட்ட இடர்வுகளையும் விரிவுபடுத்தியுள்ளது. இத்தகைய அரசுடமைத் தொழில்முயற்சிகளிலிருந்தான வங்கிப் படுகடன்களில் பெரும்பாலானவற்றிற்கு அரசாங்கத்தினால் உத்தரவாதம் அளிக்கப்பட்டதன் காரணமாக, அவை அரசிறை இடர்வுகளைத் தோற்றுவித்துள்ளன. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உத்திரவாதமளிக்கப்பட்ட அந்நியச் செலாவணிப் படுகடனானது, இலங்கை மின்சார சபையின் உத்திரவாதமளிக்கப்பட்ட அந்நியச் செலாவணிப் படுகடனின் ஒரு பகுதியாக அரசாங்க ஐந்தொகை கணக்கில் எடுக்கப்பட்டதன் விளைவாக, 2022 ஆம் ஆண்டின் நெருக்கடியின் போது இந்த பாரிய எதிர்பாராப் பொறுப்புகளிலிருந்து எழுகின்ற இடர்வானது துள்ளியமாக வெளிப்பட்டது.

மேலும், அரசுடமைத் தொழில்முயற்சிகளுக்கு இடையில் (குறிப்பாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ்) ஏற்படுத்தப்பட்டிருந்த கலப்பு பொறுப்புகள், நிறுவனங்களுக்கு மத்தியில் ஐந்தொகை இடர்வினை ஊடுகடத்துவதற்கு வழிவகுத்தன. அரசுடமைத் தொழில் முயற்சிகளுடன் இணைந்த வகையிலான, முறையான நிதி இடர்வுகள் மற்றும் பிரதான அரசிறை இடர்வுகள் என்பன கருத்திற்கொள்ளப்பட்டு, அரசுடமைத் தொழில்முயற்சிகளை மீள்கட்டமைக்கும் பணியானது, அரசாங்க கொள்கையின் முக்கிய கூறொன்றாக அடையாளங் காணப்பட்டுள்ளதோடு, இது சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பட்டுள்ள விரிவுபடுத்தப்பட்டுள்ள நிதியளிப்பு வசதித் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அரசுடமைத் தொழில்முயற்சிகள் பலவற்றை மறுசீமைப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, குறிப்பாக மாதாந்த அடிப்படையில் எரிபொருட்களுக்கும் வருடத்திற்கு இரண்டு தடவைகள் என்ற வகையில் மின்சாரத்திற்கும் தன்னியக்க செலவினப் பிரதிபலிக்கக் கூடிய விலையிடல் முறைமையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பெற்ரோலிய சில்லறை விற்பனைத் துறையில் போட்டித் தன்மையை ஏற்படுத்துவதற்கும், மின்சாரத் துறையில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை பிரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆயினும், மறுசீரமைப்பு பயணத்தில் இன்னும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக, அரசுடமைத் தொழில்முயற்சிகளின் ஐந்தொகையில் எஞ்சியிருக்கும் குறைபாடுகளை நிவர்த்திசெய்தல் மற்றும் கூட்டிணைந்த ஆளுகையினை மேம்படுத்துதல் என்பன அவற்றில் முக்கியமானதாகும்.

அரசிறை ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பிரதான அரசுடமைத் தொழில்முயற்சிகளை (இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீ லங்கள் எயாரலைன்ஸ்) மீள்கட்டமைப்பதற்கு மேலதிகமாக, அரசாங்கம் மேலும் பல அரசுடமைத் தொழில்முயற்சிகளை மீள்கட்மைப்பதற்கும் எதிர்பார்க்கிறது. நட்டம் ஈட்டுகின்ற அரசுடமைத் தொழில்முயற்சிகள் விடயத்தில் அரசிறைக் கசிவினைக் குறைப்பதனையும், பொது படுகடன்களை நிலையானதாக மாற்றும் வகையில், ஒட்டுமொத்த இலக்குகளின் பின்னணியில் மூலோபாயமற்ற சொத்துக்களை விலக்குவதனையும், வணிக நடவடிக்கைகளில் அரசின் பங்களிப்பினை ஒழுங்குபடுத்துவதனையும் இது நோக்காகக் கொண்டுள்ளது.

அரசுடமைத் தொழில்முயற்சிகளை மறுசீமைக்கும் செயல்முறையை முன்னோக்கி கொண்டு செல்லும் வகையில், நிதி அமைச்சின் கீழ் அரசுடமைத் தொழில்முயற்சிகளை மீள்கட்டமைப்பதற்கான அலகொன்று தாபிக்கப்பட்டுள்ளது. அரசுடமைத் தொழில்முயற்சிக் கொள்கையொன்றும் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு, அரசாங்கத்தின் சார்பில் அரசுடமைத் தொழில்முயற்சிகளின் பங்குகளை சொந்தமாக வைத்திருப்பதற்காக உடமைக் கம்பனியொன்றும் தாபிக்கப்படவுள்ளது. கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள அத்தகைய கம்பனிகளுக்கு நிகரான வெளிப்படைத்தன்மை மற்றும் ஆளுகை நியமங்கள் என்பனவற்றினை அரசுடமைத் தொழில்முயற்சிகள் கடைபிடிப்பது அவசியமாகும். அரசுடமைத் தொழில்முயற்சிகளின் பணிப்பாளர்கள் சபைகளுக்கு பொருத்தமான மற்றும் முறையான நியமங்கள் ஏற்புடமையாக்கப்படும். அரசுடமைத் தொழில்முயற்சிகளின் படுகடனிலிருந்து எழுகின்ற செறிவான இடர்வுகளை குறைப்பதற்காக, அரச வங்கிகள் அரசுடமைத் தொழில்முயற்சிகளுக்கு கடன் வழங்குவது தொடர்பில் இறுக்கமான விதிகளை கடைபிடிக்கும். அத்துடன், வணிக நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் ஈடுபாடு குறைவாக இருக்கமென்பதோடு, அரசுடமைத் தொழில்முயற்சிகளிலுள்ள பங்குகளையும் அரசாங்கம் விலக்கிக் கொள்ளும். பல அரசுடமைத் தொழில்முயற்சிகளிலுள்ள அரசுடமைப் பங்குகளை விலக்குவதற்காக முன்மொழிவுக்கான கோரிக்கைகளை விடுப்பதற்கும் ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கூட்டு அரசுடமைக்கான நியாயப்படுத்தலொன்று ஏற்படும் பட்சத்தில், அரச, தனியார் பங்குடமை மாதிரியான முறைமையொன்று பயன்படுத்தப்படும் என்பதோடு அரச, தனியார் பங்குடமை அலகு ஒன்றும் நிதி அமைச்சின் கீழ் இதற்காக புதிதாக தாபிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் அரசுடமைத் தொழில்முயற்சிகளின் நிதி செயலாற்றுகையானது, வரலாற்றுப் போக்குகளை விடவும் பலவீனமானதாக காணப்பட்டது. 52 பிரதான அரசுடமைத் தொழில்முயற்சிகளின் ஒட்டுமொத்த விளைவுகளின் நியதியில், 2022 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த இழப்புகள் ஆறு மடங்குகளால் அதிகரித்து, ரூபா 744.7 பில்லியனாக காணப்பட்டது. எவ்வாறாயினும், 34 அரசுடமைத் தொழில்முயற்சிகள் சவால்மிக்க பொருளாதார சூழ்நிலையிலும் கூட்டாக ரூபா 214 பில்லியனினை தேறிய இலாபமாக பதிவுசெய்துள்ளன. ஏனைய 18 அரசுடமைத் தொழில் முயற்சிகள் கூட்டாக ரூபா 958.7 பில்லியனினை கூட்டு நட்டமொன்றாக 2022 ஆம் ஆண்டில் பதிவுசெய்துள்ளன. இந்த நட்டங்களுக்கு 2022ல் ஏற்பட்ட தீவிரமான ரூபாய் பெறுமதியிறக்கம் காரணமாக இலங்கை மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளடங்கலாக முக்கிய அரசுடமைத் தொழில்முயற்கிகள் எதிர்கொண்ட அந்நியச் செலாவணி நட்டம் முக்கிய காரணமாக அமைந்திருந்தது. வங்கி மற்றும் நிதித்துறைகள் என்பனவும் ஒட்டுமொத்த பொருளாதார நிலைமைகளினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு, இத்துறையின் இலாபமீட்டல் தன்மையும் 2022 ஆம் ஆண்டில் 25 சதவிகிதத்தினால் வீழ்ச்சிடைந்துள்ளது. அறவீடுகள் மற்றும் பங்கிலாபங்கள் என்பனவற்றிலிருந்தான மொத்த சேகரிப்புகளும் 2021 இல் பதிவாக்கிய ரூபா 30.6 பில்லியனிலிருந்து, 2022 ஆம் ஆண்டில் ரூபா 28 பில்லியனுக்கு குறைவடைந்துள்ளது.

அட்டவணை 8.1 : அரசுடமைத் தொழில் முயற்சிகளின் நிதி விளைவுகள்

(ரூபா.மில்)

துறை	அரசுடமை தொழில் முயற்சிகளின் எண்.	மொத்த வருமானம் 2022(அ)	வரிக்கு முன்னைய இலாபம்/நட்டம் 2021(ஆ)	வரிக்கு முன்னைய இலாபம்/நட்டம் 2022(ஆ)
எரிசக்தி	2	1,457,258	-115,955	-876,922
நீர்	1	35,464	-3,054	-3,064
துறைமுகங்கள்	1	68,408	25,601	57,026
பயணிகள் போக்குவரத்து	1	58,269	-3,054	484
விமானப் போக்குவரத்து	2	373,098	-167,125	-65,743
நிர்மாணத் துறை	3	9,739	-1,453	-844
வங்கித்தொழில் மற்றும் நிதி	7	1,143,432	137,350	102,405
காப்புறுதி	4	92,958	19,775	25,021
லொத்தர்	2	39,519	3,957	4,657
பண்ணை விலங்குகள்	2	17,216	489	-338
பெருந்தோட்டத்துறை	6	7,692	234	1,406
புதுப்பிக்க முடியாத மூலவளங்கள்	3	8,291	1,512	6,304
சுகாதாரம்	4	71,807	4,124	807
ஊடகங்கள்	3	3,902	-560	-1,147
சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம்	11	99,102	315	5,290
மொத்தம்	**52**	**3,486,135**	**-97,845**	**-744,658**

மூலம்: அரசுடமைத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

(அ)தற்காலிகமானது

(ஆ)வரிக்கு முன்னரான இலாபம்.'.(வரிக்கு முன்னரான நட்டம்) தற்காலிகமானது

அட்டவணை 8.2 | அரசுடமைத் தொழில்முயற்சிகளிலிருந்தான அறவீடு / பங்கிலாப வருமானம்

(ரூபா.மில்)

	2018	2019	2020	2021	2022
தீர்வை	**37,230**	**22,634**	**14,769**	**25,919**	**22,004**
தேசிய சேமிப்பு வங்கி	500	2,000	1,000	3,500	–
இலங்கை வங்கி	4,500	–	1,250	1,500	–
மக்கள் வங்கி	3,200	2,200	2,500	1,977	441
தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு	21,850	8,950	5,000	8,500	13,200
பிராந்திய அபிவிருத்தி வங்கி	–	169	–	–	–
அரச மரக் கூட்டுத்தாபனம்	100	50	–	100	320
அரச மருந்துப் பொருட்கள் உற்பத்திக்கூட்டுத்தபானம்	50	–	–	100	100
தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்	2,750	3,268	782	1,824	1,608
புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம்	1,700	2,300	–	2,000	1,000
தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை	25	25	–	15	35
முதலீட்டுச் சபை	250	250	156	–	416
தேசிய லொத்தர் சபை	–	–	–	900	361
பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு	–	53	–	–	–
இலங்கை கட்டளைகள் நிறுவகம்	–	–	–	–	10
இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம்	15	15	–	25	50
மத்திய பொறியியல் மதியுரைப்பணியகம்	25	25	–	25	–
இலங்கை சுற்றுலாத் துறை ஊக்குவிப்புப் பணியகம்	1,000	500	–	–	–
சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை	800	800	–	50	1,000
அரச மருந்துப்பொருட்கள் கூட்டுத்தபானம்	–	–	–	–	350
தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம்	165	200	–	110	290
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்	200	650	–	–	1,200
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு	100	50	–	–	10
இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அணைக்குழு	-	200	–	–	–
இலங்கை நில மீட்பு மற்றும் மேம்பாட்டு ஆணைக்குழு	-	29	–	–	–
இலங்கை துறைமுக அதிகார சபை	-	900	–	–	1,015
தேசிய மருந்தக மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகார சபை	–	–	81	147	400
வீதி அபிவிருத்தி அதிகார சபை	–	–	4,000	4,000	–
காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு	–	–	–	1,100	–
கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை	–	–	–	25	50
தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவகம்	–	–	–	16	33
இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம்	–	–	–	5	–
முகாமைத்துவத்திற்கான பட்ட மேற்படிப்பு நிறுவகம்	–	–	–	–	90
ஏனைய அரசுடமைத் தொழில்முயற்சிகள்	–	–	–	–	25
பங்கிலாபங்கள்	**4,598**	**5,025**	**2,854**	**4,672**	**6,087**
தேசிய சேமிப்பு வங்கி	60	60	60	60	60
இலங்கை வங்கி	346	346	346	346	346
மக்கள் வங்கி	316	316	316	316	316
லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி	41	–	–		-
தேசிய அபிவிருத்தி வங்கி	1	1	1	1	1
இலங்கை சேமிப்பு வங்கி	86	–	–	–	–
வர்த்தக வங்கி	–	–	–	–	0.17
வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம்	1,856	1,720	695	899	1,511
விமான நிலைய மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் கம்பனி	300	500	–	–	500
இலங்கை கனிம மணல் கம்பனி	35	130	–	700	759
இலங்கை பொஸ்பேட் கம்பனி	5	7	–	20	20
வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு	12	–	–		–
லங்கா லேலாண்ட் லிமிடட்	45	13	2	3	13
ரக்னா ஆரக்ஷக லங்கா லிமிடட்	40	37	–		–
மாந்தை ஸோல்ட் லிமிடட் (தேசிய உப்புக் கம்பனி)	–	–	2	15	–
சிலோன் பெற்டிலைசர்ஸ் லிமிடட்	21	15	304	29	15
கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர்ஸ் லிமிடட	20	10	–	–	10
வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனக் கம்பனி	11	–	10	3	50
அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகக் கம்பனி	–	–	–	–	11
.ஸ்ரீலங்கா ரெலிகொம் பீஎல்சீ	795	947	947	1,331	1,805
டி லா ரூ லங்கா லிமிடட்	106	133	–	345	313
வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனி	305	501	–	327	218

அட்டவணை 8.2 | அரசுடமைத் தொழில்முயற்சிகளிலிருந்தான அறவீடு / பங்கிலாப வருமானம் தொடர்ச்சி...

(ரூபா.மில்)

	2018	2019	2020	2021	2022
லங்கா இன்டஸ்டிரியல் எஸ்டேட் லிமிடெட்	78	82	82	82	–
சிலோன் அக்ரோ இன்டஸ்ட்ரீஸ்	19	23	77	95	24
வரையறுக்கப்பட்ட லங்கா லொஜிஸ்டிக்	1	–	–	–	–
பெருந்தோட்டக் கம்பனிகள்	95	172	12	98	95
லங்கா திரிபோசா லிமிடெட்	–	–	–	–	10
ஏனையவை	4	12	–	2	10
மொத்தம்	**41,828**	**27,659**	**17,623**	**30,591**	**28,091**

மூலம் : அரசுடைத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

அட்டவணை 8.3 : அரசுடமைத் தொழில் முயற்சிகளின துறைவரியான ஆதனத் தொகுதி

துறை	அரசுடமைத் தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை	31.12.2021(அ) உள்ளவாறான மொத்தச் சொத்துக்கள்) (ரூபா.மில்)	31.12.2022(அ) உள்ளவாறான மொத்தச் சொத்துக்கள் * (ரூபா.மில்)	வளர்ச்சி (%)
எரிசக்தி	2	1,426,969	1,554,791	8.96
நீர்	1	784,602	954,578	21.66
துறைமுகங்கள்	1	492,621	728,551	47.89
பயணிகள் போக்குவரத்து	1	13,541	36,488	169.46
விமானப் போக்குவரத்து	2	304,988	374,501	22.79
நிர்மாணத் துறை	3	40,433	41,881	3.58
வங்கித்தொழில் மற்றும் நிதி	7	8,812,280	9,795,946	11.16
காப்புறுதி	4	312,859	331,668	6.01
லொத்தர்	2	12,057	12,842	6.51
பண்ணை விலங்குகள்	2	27,080	27,670	2.18
பெருந்தோட்டத்துறை	6	16,640	18,600	11.78
புதுப்பிக்க முடியாத மூலவளங்கள்	3	7,206	12,524	73.80
சுகாதாரம்	4	72,803	97,380	33.76
ஊடகங்கள்	3	6,542	5,641	-13.77
சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம்	11	110,697	128,515	16.10
மொத்தம்	**52**	**12,441,318**	**14,121,576**	**13.51**

மூலம் : அரசுடமைத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

8.2 எரிசக்தி

8.2.1 இலங்கை மின்சார சபை

மூலப்பொருட்களை போதுமானளவில் இறக்குமதி செய்து, வழங்கல் செய்யமுடியாதளவிற்கு விநியோக சங்கிலியில் ஏற்பட்ட அந்நிய செலாவணி பற்றாக்குறையானது, குறிப்பிடத்தக்களவில் சவால்களை ஏற்படுத்தியதன் காரணமாக, 2022 ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபையானது கொந்தளிப்பான ஆண்டொன்றினை எதிர்கொண்டது. மேலும், பிரதான இறக்குமதிகளின் (எரிபொருள் மற்றும் நிலக்கரி) விலையானது, நாணய பெறுமதி இறக்கம் மற்றும் ரஷ்யா - உக்ரைன் மோதல் நிலையின் தாக்கம் மற்றும் சர்தேச ரீதியலான பண்டங்களின் போக்குகள் காரணமாக குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது, இதன் விளைவாக, ஆண்டில் நீண்ட மின்துண்டிப்புக்கள் அமுல்படுத்தப்பட்டு, தொடர்ச்சியாக மின் விநியோகத்தினையும் இலங்கை மினசார சபையினால் வழங்க முடியவில்லை.

இந்த மின்துண்டிப்புக்களின் விளைவாக, 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மின் நுகர்வானது 4.6 சதவீதத்தினால் குறைவடைந்திருந்து. ஆயினும், மின்சார விற்பனை மூலம் கிடைத்த வருமானமானது, 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 248.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 308.5 பில்லியனுக்கு 24 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதற்கு 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாத்தில் மேற்கொள்ளப்பட்ட அதிகரிப்பினை நோக்கிய விலைத் திருத்தம் பிரதான காரணமாக அமைந்தது. 2014 ஆம் ஆண்டு முதல் மின் கட்டணங்களைத் திருத்தத் தவறியமை காரணமாக இலங்கை மின்சார சபை எதிர்கொண்ட தீவிர திரவத்தன்மையானது, இப்பிரச்சினைகளுக்கு முக்கிய பங்களிப்புச்செய்துள்ளதோடு, இத்துறையில் தேவையான முதலீடுகளை மேற்கொள்வதற்கும் தடையாக அமைந்தது. தன்னியக்க அரையாண்டு செலவின மீட்சி அடிப்படையிலான மின் கட்டண முறைமையைச் செயல்படுத்துவதற்கான முதற் படியாக, அரசாங்கம், 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதத்தில் இறுதிப் பயனர் மின் கட்டணத்தை 75

சதவீத்தினால் அதிகரிப்பதற்கு நடவடிக்கையினை எடுத்தது. மேலும், 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில், இறுதிப் பயனர் மின்சாரக் கட்டணமானது, செலவின மீட்சி சரிசெய்கைகளை முழுமையாகப் பிரதிபலிக்கும் வகையில், சராசரியாக 66 சதவீத அதிகரிப்புடன் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது. இலங்கை மின்சார சபையானது, முன்னோக்கிச் செல்லும் செலவின மீட்சியினை அடிப்படையாகக் கொண்டு கிரமமான அரையாண்டு தீர்வைத் திருத்தமொன்றினைக் கொண்டிருக்கும். இது எதிர்கால நட்டங்கள் இல்லாமலாக்கப்படுவதனையும், இலங்கை மின்சார சபையிலிருந்து எழுகின்ற அரசிறைச் சுமைகளும் எதிர்காலத்தில் குறைக்கப்படும் என்பதனையும் இது உறுதி செய்யும்.

2022 ஆம் ஆண்டில் ரூபாப் பெறுமதி வீழ்ச்சியடைந்ததோடு இணைந்த வகையில், சர்வதேச சந்தையில் எரிபொருள் மற்றும் நிலக்கரி விலைகள் அதிகரித்ததன் விளைவாக, நேரடி உற்பத்தி செலவினம் முன்னைய ஆண்டை விடவும் இரண்டு மடங்கு அதிகமாக காணப்பட்டது. மின் தீர்வை அதிகரிக்கப்பட்ட போதிலும், தாமதமான மற்றும் வரையறுக்கப்பட்ட தீர்வை அதிகரிப்பானது, உற்பத்தி செலவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு முழுமையாக ஈடுசெய்வதற்குப் போதுமானதாக காணப்படாமை காரணமாக, 2022 ஆம் ஆண்டிற்காக இலங்கை மின்சார சபைக்கு ரூ. 167.2 பில்லியன் தொழிற்பாட்டு நட்டமொன்று ஏற்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் விற்பனை புள்ளியில் கி.வோ.ம. ஒன்றிற்கு ரூபா 19.42 ஆக காணப்பட்ட, அலகொன்றிற்கான சராசரி உற்பத்திச் செலவினம், 2022 ஆம் ஆண்டில் கி.வோ.ம. ஒன்றிற்கு ரூ.33.65 ற்கு அதிகரித்துக் காணப்பட்டது. உற்பத்திக் கலவையும் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய நீர்மின் (33%), அனல் (எரிபொருள்) (15%) அனல் (நிலக்கரி) (35%) பாரம்பரியமற்ற மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் காற்று (17%) வகுதிகளும் 2022 ஆம் ஆண்டில் பெரும்பாலும் ஒரே மாதிரியாக மாற்றமின்றி நிலையாகக் காணப்பட்டது.

அட்டவணை 8.4 | இலங்கை மின்சார சபையின் பொருத்தப்பட்டுள்ள உற்பத்தி ஆற்றல் மற்றும் மின்னுற்பத்தி - 2020-2022

விபரம்	2020			2021			2022(அ)		
	பொருத்தப்படடுள்ள கொள்ளளவு மெகாவோற்	மின் உற்பத்தி		பொருத்தப்பட்டடுள்ள கொள்ளளவு மெ.வோ	மின் உற்பத்தி		பொருத்தப்பட்டுள்ள கொள்ளளவு மெகாவோற்	மின் உற்பத்தி	
		மொத்த உற்பத்தி சதவீதமாக	ஜிகா வொற் மணித்தியாலம்		மொத்த உற்பத்தியின் சதவீதமாக	ஜிகா வொற் மணித்தியாலம்		மொத்த உற்பத்தி சதவீதமாக	ஜிகா வொற் மணித்தியாலம்
நீர்	1,399	24	3,929	1,383	33	5,658	1,413	33	5,383
அனல் மின் - இ.மி.ச. எண்ணெய்	654	9	1,515	654	7	1,279	654	8	1,384
அனல் மின் - ஐ.பீ.பீ. எண்ணெய்	614	16	2,717	433	8	1,400	270	7	1,128
அனல் - நிலக்கரி	900	39	6,365	900	35	6,111	900	35	5,730
காற்று - இ.மி.ச	31	0	8	104	2	326	104	2	362
பா.பு.ச.மூ.மற்றும் காற்று	672	10	1,589	711	13	2,214	743	12	2,061
கூரை மீது பொருத்தப்பட்டுள்ள சூரிய மின்களம்	275	2	269	416	2	389	535	3	528
மொத்தம்	**4,545**	**100**	**16,392**	**4,601**	**100**	**17,377**	**4,619**	**100**	**16,576**

மூலம் : இலங்கை மின்சார சபை

(அ) தற்காலிகமானது

வரைபு 8.1 மின்னுற்பத்திக் கலவை - 2021



மூலம் : இலங்கை மின்சார சபை

வரைபு 8.2 மின்னுற்பத்திக் கலவை-2022



மூலம் : இலங்கை மின்சார சபை

2022 ஆம் ஆண்டில், சீன எக்ஸிம் வங்கியிடமிருந்து பெறப்பட்டு, இலங்கை மின்சார சபையின் ஐந்தொகையில் தேர்ந்தெடுக்கப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயப் படுகடன்களை அரசாங்க ஐந்தொகையில் மீண்டும் வகைப்படுத்துவதற்காக அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானமொன்றினை எடுத்தது. அதற்கமைய, நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக பெறப்பட்டு, 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாத இறுதி வரையில் நிலுவையிலுள்ள கடன் மீதியான ரூபா 214.7 பில்லியன் (ஐ.அ.டொ 591.4 மில்லியன்) அரசாங்க கணக்குப் புத்தகங்களுக்கு மாற்றப்பட்டது. மேலும், இலங்கை மின்சார சகைபயின் நிதி அறிக்கைகளில் துணைக் கடன்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள ரூபா 146.5 பில்லியன் பெறுமதியான படுகடன்களை, 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாத இறுதியிலுள்ளவாறு, இலங்கை மின்சார சபையின் அரசாங்க பங்கு முதலீட்டிற்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் நிலவிய அந்நியச் செலாவணி வீதத்தினை விடவும் குறிப்பிடத்தக்களவு குறைந்த பெறுமதியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாணய மாற்று வீதத்தில் இலங்கை மின்சார சபையின் கணக்குப் புத்தகத்தில் கடன் கண்டறியப்பட்டதன் காரணமாக, மேற்குறித்த பரிமாற்றம் ரூபா 94.7 பில்லியனினை அந்நியச் செலாவணி இழப்பாகப் பதிவுசெய்துள்ளது. இது இலங்கை மின்சார சபையின் தேறிய நட்டத்தினை 2022 ஆம் ஆண்டில் ரூபா 261.9 பில்லியனுக்கு அதிகரிக்கச்செய்துள்ளது.

மேலும், இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பனவற்றின் சவால்மிக்க திரவத்தன்மை நிலைகளின் ஒளியில், 2022 ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபையின் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான அதன் நிலுவைக் கடன்களைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் இலங்கை மின்சார சபைக்கு ரூபா 80 பில்லியனினை வழங்கியுள்ளது. ஆயினும், பாரிய மரபுக் கடன்கள் காரணமாக, 2022 ஆம் ஆண்டின் இறுதியிசுள்ளவாறு, இலங்கை மின்சார சபையின் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சுதந்திர மின் உற்பத்தியாளர்களுக்கான மொத்த நிலுவைக் கடன் தொகைகள் ரூபா 193.1 பில்லியனில் தொடர்ந்தும் உயர்வடைந்து சென்றுள்ளன. இதேவேளை, அரச வங்கிகள் மற்றும் திட்டக் கடன்களுக்கான இலங்கை மின்சார சபையின் மொத்த படுகடன் பொறுப்புக்கள் என்பனவும் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 220.7 பில்லியனாக காணப்பட்டது.

அட்டவணை 8.5 | இலங்கை மின்சார சபையின் தொழிற்பாட்டு புள்ளி விபரங்கள் மற்றும் நிதி விளைவு

(ரூபா.மில்)

	2018 (மீளக் கூறப்பட்டது)	2019 (மீளக் கூறப்பட்டது)	2020 (மீளக் கூறப்பட்டது)	2021	2022(அ)
தொழிற்பாட்டுக் கூற்று					
வருமானம்	**240,488**	**255,008**	**249,066**	**261,373**	**321,433**
மின் விற்பனை	229,571	242,950	238,911	248,776	308,457
ஏனைய வருமானம்	10,917	12,058	10,155	12,597	12,976
செலவினம்	**270,883**	**352,367**	**309,552**	**295,512**	**488,613**
நேரடி உற்பத்திச் செலவு	**164,873**	**218,469**	**183,213**	**157,374**	**325,245**
சு.மி.உ(பாரம்பரியமல்லாத புதுப்பிக்கத்தக்க சக்தி மூலவளங்கள் மூலம்)	84,497	118,665	110,213	85,690	121,244
இலங்கை மின்சார சபை - எரிபொருட் செலவு	80,376	99,803	73,000	71,684	204,001
உற்பத்தி, மாற்றல், விநியோகம் தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புச் செலவு	56,902	73,121	67,701	76,189	71,510
நிறுவனச் செலவுகள்	5,683	6,969	7,009	8,047	16,115
கடன்கள் மற்றும் தாமதமடைந்த கொடுப்பனவுகளுக்கான வட்டி	13,036	22,526	19,522	20,431	41,749
பெறுமானத்தேய்வு	30,388	31,283	32,107	33,471	33,994
தொழிற்பாட்டு இலாபம்/ (நட்டம்)	**-30,395**	**-97,358**	**-60,486**	**-34,139**	**-167,180**
அந்நியச் செலாவணி அதி ஈட்டம்/(நட்டம்)	–	–	–	–	-94,689
தேறிய இலாபம் /(நட்டம்)	**-30,395**	**-97,358**	**-60,486**	**-34,139**	**-261,869**
திரவத் தன்மை நிலைமை					
வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடன்மூ (தொகை)	68,388	93,796	49,681	32,701	54,832
வங்கிகளுக்கான கொடுப்பனவுகள்	19,695	62,130	20,568	26,938	34,108
நிலுவையாகவுள்ள வங்கிகளுக்கான படுகடன்கள்	288,606	333,245	416,143	428,300	220,743
இ.பெ.கூ மற்றும் சு.மி.உ இடமிருந்து கொள்வனவுகள்	124,104	173,423	137,762	100,630	176,989
இ.பெ.கூ மற்றும் சு.மி.உ இற்கான கொடுப்பனவுகள்	128,760	115,181	147,122	96,598	152,790
இ.பெ.கூ மற்றும் சு.மி.உ இற்கான வெளிறின்ற கடன்கள்	79,365	141,904	128,883	141,094	193,087
தொழிற்பாட்டு புள்ளிவிபரங்கள்					
விற்கப்பட்ட அலகுகள் (கெ.வோ.ம)	14,091	14,611	14,285	15,214	14,519
உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் (கெ.வோ.ம)	15,985	16,556	16,392	17,378	16,575
அலகொன்றிற்கான உற்பத்தி செலவினம் (ரூ.)	19.22	24.12	21.67	19.42	33.65
அலகொன்றிற்கான விற்பனை (ரூ)	16.29	16.63	16.72	16.35	21.25

மூலங்கள்: இலங்கை மின்சார சபை
(அ) தற்காலிகமானது

மேலும், இலங்கை மின்சார சபை மற்றும் அதன் துணை நிறுவனங்கள் என்பனவற்றின் நிறுவன கட்டமைப்பில் மறுசீரமைப்புக்களைப் பரிந்துரை செய்வதற்காக உயர்மட்ட குழுவொன்றை அரசாங்கம் நியமித்துள்ளது. இது தொடர்பில் விரிவான அறிக்கையொன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு, குழுவின் உத்தேச பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அனுமதியும் வழங்கப்பட்டது.

8.2.2 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

பெற்ரோலியக் கைத்தொழில், பொதுவாக, உலகளாவிய பொருளாதாரம் மற்றும் அரசியல் சூழ்நிலை என்பனவற்றிற்கு மத்தியில் நிச்சயமற்ற மற்றும் ஸ்தீரமற்ற நிலைக்கு உட்படுகிறது. 2022 ஆம் ஆண்டில் எண்ணெய் உற்பத்தி செய்யும் பகுதிகளில் ஏற்பட்ட பாரிய ஸ்தீரமற்ற நிலையானது, பண்டக சேவைத் தடைகள், வர்த்தகத் தடைகள், விநியோகப் பக்கம் மீதான மூலதன உட்கட்டமைப்பு சிதைவுகள் மற்றும் நுகர்வோர் கேள்வியில் உயர்ந்தளவிலான நிலையற்ற தன்மை போன்றவற்றினைத் தோற்றுவித்தன.

இத்தகைய நிச்சயமற்ற சூழலில், ப்ரெண்ட் மசகு எண்ணெய் விலையானது, 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத்தின் ஆரம்பத்தில் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொ. 95 இலிருந்து 2022 ஆம் ஆண்டு யூன் மாத இறுதியில் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொ. 120 இற்கு கிட்டத்தட்ட 26 சதவீதத்தினால் அதிகரித்து, கடந்த தசாப்தத்தில் மிக உயர்ந்த விலை அதிகரிப்பினைப் பதிவுசெய்துள்ளது. உலகளாவிய எண்ணெய் விலைகளின் நிலையற்ற தன்மையானது, 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார சவால்களை கூட்டுச்சேர்த்துள்ளது. ஆயினும், 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாத இறுதியளவில் ப்பிரெண்ட் மசகு எண்ணெயப் பீப்பாய் ஒன்றிற்கான விலை ஐ.அ.டொ.81 இற்கு ஏறத்தாள் 32 சதவீதத்தினால் விலை வீழ்ச்சியடைந்து, 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதத்தில் விலையிடல் போக்கினையும் மாற்றியுள்ளது.

வரைபு 8.3 | மசகு எண்ணெய்(பெற்றோலியம்) மாதாந்த பிரெண்ட் விலை -2018-2022 (ஐ.அ.டொ)



மூலம் : டிரேடிங் எகொனொமிக்ஸ்

வங்கி அமைப்பு எதிர்கொண்ட அந்நியச் செலாவணி பற்றாக்குறை காரணமாக வழங்கல் செயற்பாடு கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக, 2022 ஆம் ஆண்டில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருளுக்கான தேவையைப் பூர்த்திசெய்வதற்கு போராடியது. இப் பின்னணியில், விநியோகச் சங்கிலியை மீண்டும் நிலைநிறுவதற்காக, எரிபொருள் இறக்குமதியை எளிதாக்கும் நோக்கில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஐ.அ.டொ.700 மில்லியன் பெறுமதியான நிரல் கடன் ஒப்பநத்மொன்று கைச்சாத்திடப்பட்டது. அதைத் தொடர்ந்து, மின் மற்றும் வலுசக்தி அமைச்சு தனித்துவமான ஞசு குறியீடொன்றினைப் பயன்படுத்தி எரிபொருள் விநியோகத்தினை ஒழுங்குபடுத்துவதற்கான முறையொன்றினை அறிமுகப்படுத்தியது. இம்முறைமை தேவையை நிர்வகிப்பதற்கும், வழக்கமான பொருளாதார நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கும், வரிசைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சமூக அமைதியின்மையை நீக்குவதற்கும் போதுமான விநியோகத்தை உறுதிசெய்வதற்கும் ஒரு திருப்புமுனையாக இது அமைந்தது.

எரிபொருள் வழங்கல் சங்கிலியில் ஏற்பட்ட சீர்குலைவுகள் காரணமாக, நாட்டின் மொத்த மசகு எண்ணெய் மற்றும் பெற்ரோலியப் பொருட்கள் என்பனவற்றின் இறக்குமதி அளவு 2022 ஆம் ஆண்டில் 4.6 மில்லியன் மெ.தொன்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக, இது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 20 சதவீத வீழ்ச்சியாகவும் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இறக்குமதிசெய்த 1.2 மில்லியன் மெ.தொன் மசகு எண்ணெய் மற்றும் 3.1 மில்லியன் மெ,தொன் சுத்திகரிக்கப்பட்ட பொருட்களுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் 0.7 மில்லியன் மெ.தொன் மசகு எண்ணெய்யும் 2.7 மில்லியன் மெ.தொ சுத்திகரிக்கப்பட்ட பொருட்களும் மாத்திரமே இறக்குமதிசெய்யப்பட்டுள்ளது. ஆயினும், உலக சந்தையில் எண்ணெய் விலைகள் அதிகரித்ததன் காரணமாக 2021 ஆம் ஆண்டுக்கெதிராக, 2022 ஆம் ஆண்டில், நாட்டின் மொத்த எரிபொருள் இறக்குமதி கட்டணம் ஐ.அ.டொ.4.9 பில்லியனுக்கு 31 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அதற்கமைய, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய் இறக்குமதி கட்டணமும் 2022 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ.3.3 பில்லியனுக்கு 50 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

வரைபு 8:4 சராசரி மசகு எண்ணெய் விலைகள் - 2022



மூலம் : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை : 8.6 | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானத்தின் நிதி விளைவு

(ரூபா.மில்)

	2018	2019	2020	2021	2022(அ)
மொத்த வருமானம்	**605,952**	**660,646**	**530,878**	**613,733**	**1,193,288**
ஒக்டேன் 92	172,088	195,216	178,196	215,754	405,061
ஒக்டேன் 95	28,669	26,580	21,085	23,491	23,182
டீசல்	220,922	238,967	188,937	218,286	488,831
சுப்பர் டீசல்	11,589	10,877	8,949	10,809	27,096
எச்.எப் 800 சிசி	30,456	13,438	–	–	–
எச்எப்1500 சி.சி	8,774	16,912	18,525	16,807	62,345
எச்.எப்3500 சிசி/சுபர் எண்ணெய்	–	33,652	49,444	19,982	6,662
எல்.எஸ்.எச்.எப்	19,295	10,799	1,852	12,387	28,756
நப்தா	14,270	16,803	11,260	15,216	6,468
மண்ணெண்ணெய்	15,351	17,598	15,162	17,928	19,561
ஜெட் ஏ 1	64,090	58,857	19,401	30,721	82,127
ஏனைய உற்பத்திகள்	6,746	6,892	6,060	12,452	4,360
வேறு வருமானங்கள்	13,702	14,055	12,007	19,900	38,839
மொத்தச் செலவினம்	**712,095**	**672,483**	**528,507**	**695,549**	**1,808,341**
விற்பனைச் செலவுகள்	579,617	626,599	454,880	588,823	1,108,952
விற்பனை மற்றும் விநியோகம்	14,914	17,981	15,782	29,108	39,441
நிர்வாகம்	5,296	4,886	3,683	6,991	5,106
நிதிச் செலவு	12,065	14,699	20,911	25,645	119,537
பெறுமானத்தேய்வு	726	984	2,670	2,684	2,647
ஏனைய செலவுகள் (உ.தீ.தே.க.வ)	16,760	15,732	8,740	9,079	5,648
நாணய மாற்றுவீத வேறுபாடு	82,717	-8,398	21,841	33,220	527,010
வரிக்கு முன்னரான இலபம்/நட்டம்	**-106,143**	**-11,837**	**2,371**	**-81,816**	**-615,053**
வங்கிகளுக்காக வெளிநின்ற படுகடன்கள்	562,457	566,225	529,187	693,040	87,749

மூலம் : இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம்

(அ) தற்காலிகமானது

சிபிசியின் மொத்த விற்பனைச் செலவினம் 2021 இல் பதிவாக்கிய ரூபா 589 மில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 1,109 பில்லியனுக்கு 88 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருட்களின் அதிகரித்த செவினம் மற்றும் நாணயப் பெறுமதி இறக்கம் என்பன இதற்கு செலவாக்குச் செலுத்தியுள்ளன.

தொழிற்பாட்டு நட்டங்களைக் குறைப்பதற்கும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் திரவத்தன்மைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குமான மூலோபாய நகர்வாகவும், அரசாங்கம், 2022 ஆம் ஆண்டு மே மாத இறுதியல் செலவினப் பிரதிபலிப்பு விலையிடல் சூத்திரத்தை மீண்டும் அறிமுகப்படுத்தியது. ஆயினும், மே மாதம் முதல் கிரமமான விலைச் சரிசெய்கைகள் அமுல்படுத்தப்பட்ட போதிலும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2021 ஆம் ஆண்டிற்காகப் பதிவாக்கிய ரூபா 41.3 பில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் முழு ஆண்டுக்குமாகவும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரூபா 6.2 பில்லியனினை அதன் தொழிற்பாட்டு நட்டமாகப் பதிவு செய்துள்ளது.

மேலும், அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி இறக்கமானது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையினையும் மிக மோசமாகப் பாதித்துள்ளது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஐந்தொகையில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்கள் அதிகளவில் காணப்படுவதனால், நாணயத்தின் ஏதேனும் பெறுமதி இறக்கமும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அந்நிய செலாவணி இழப்பாகவே கருதப்படுகிறது. 2021 ஆம் ஆண்டில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அந்நியச் செலாவணி இழப்பாகப் பதிவுசெய்யப்பட்ட ரூபா 33.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில், வரலாற்றில் பதிவாக்கிய மிக மோசமான அந்நியச் செலாவணித் தாக்கம் என 2022 ஆம் ஆண்டில் ரூபா 527 பில்லியனினை அந்நியச் செலாவணி நட்டம் பதிவுசெயயப்பட்டுள்ளது. இதேவேளை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிச் செலவினமும் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 25.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் உள்நாட்டு நாணயப் பெறுமதி இறக்கம் காரணமாக ரூபா 119.5 பில்லியனுக்கு 3.5 மடங்கினால் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, இலங்கைப் பெற்றேலியக் கூட்டுத்தாபனம் ரூபா 615 பில்லியனினை தேறிய நட்டமாகப் பதிவு செய்துள்ளதோடு, அதன் மூலம் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாத இறுதியில் கூட்டுத்தாபனத்தின் திரட்டிய நட்டம் ரூபா 1,031.3 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக, இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீ ரீலங்கன் ஏர்லைன்ஸி என்பனவற்றின் பலவீனமான நிதி நிலைமைகள் மற்றும் நாணயத் திரவத்தன்மைக் கட்டுப்பாடுகள் காரணமாக அவை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து

கொள்வனவுசெய்த எரிபொருட்களுக்கு முழுமையாக நிதியளிக்கமுடியாமையினால் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஐந்தொகையில் கடுமையான தாக்கமொன்றினை ஏற்படுத்தியுள்ளது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்காக இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ என்பனவற்றின் செலுத்தப்படாத பொறுப்புக்கள் உள்ளடங்களாக வெளிநின்ற மொத்தப் பொறுப்புக்கள் ரூபா 226 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஐந்தொகையிலுள்ள இச் சொத்துக்களுக்கு அரச வங்கிகளால் தொடராக நிதியளிக்கப்பட்டதன் விளைவாக, இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி என்பனவற்றிற்கான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்புக்களும் அதிகரித்துள்ளது. இது பாரிய அரசுடமைத் தொழில்முயற்சிகளின் ஐந்தொகைக்கும் வங்கி அமைப்புக்கும் இடையிலான பாதகமான இணைக்கையினை விளக்குகிறது. இத்தகைய ஒவ்வொரு நிறுவனங்களின் ஐந்தொகையிலுமுள்ள பலவீனங்களை நிவர்த்தி செய்வதற்கான மூலோபாயங்களை அடையாளங் காணும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதோடு, இது சர்வதேச நாணய நிதியத்தினால் ஒத்துழைக்கப்பட்ட விரிவான நிதியளிப்பு வசதித் திட்டத்தில் முன்னுரிமையளிக்கப்பட்டதொரு விடயமாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதன் பூர்வாங்க நடவடிக்கையாக, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் அரச உத்திரவாதமளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட படுகடன் பங்குகளின் நிலுவைத் தொகையை மத்திய அரசின் கடன் பங்கிற்கு மாற்றுவதன் மூலம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஐந்தொகையினை மீள்கட்டமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. இது 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாத இறுதியில் ஐ.அ.டொ.2.44 பில்லியனாக (இலங்கை வங்கி: ஐ.அ.டொ.1.34 பில்லியன் மற்றும் மக்கள் வங்கி: ஐ.அ.டொ 1.09 பில்லியன்) ஆக காணப்பட்டது. இவை தவிர, பெற்ரோலியப் பொருட்களின் இறக்குமதி தொடர்பில் முறையே, இந்தியன் நிரல் கடன் வசதித் திட்டம் (ஐ.அ.டொ 697 மில்லியன்), நே'னல் ஈரான் எண்ணெய்க் கம்பனிக்கான பொறுப்புக்கள் (ஐ.அ.டொ. 251 மில்லியன்), மற்றும் இலங்கை வங்கி (ரூபா 87 பில்லியன்) ஆகியவற்றிலிருந்தான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கடன்பெறுகை அடிப்படையில் அரசாங்கத்திற்கு எஞ்சிய பொறுப்புக்களை அது கொண்டுள்ளது. இந்த எஞ்சிய பொறுப்புகள் மற்றும் இலங்கை மின்சார சபை, ஸ்ரீ லங்கள் எயார்லைன்ஸ் மற்றும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபனம் என்பனவற்றிற்கு இடையேயான குறுக்கு பொறுப்புகள் என்பனவற்றினை தீர்ப்பனவானது, முக்கிய அரசுடமைத் தொழில்முயற்சிகளின் ஐந்தொகையினை மீள்கட்டமைப்பதற்கான அரசாங்கத்தின் ஒட்டுமொத்த மூலோபாயத்தில் குறிப்பிடப்படும்.

மற்றொரு முக்கியமான மறுசீரமைப்பு முன்னெடுப்பாக 2022 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, பெற்ரோலிய பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டம் காணப்படுகிறது. இச்சட்டம் சர்வதேச ரீதியான வழங்குநர்களை இலங்கைச் சந்தையில் நுழைய அனுமதிப்பதோடு, அதன்மூலம் பெட்ரோலிய சில்லறை விற்பனைத் துறையையும் தாராளமயமாக்கப்படுகிறது.

இலங்கையில் இயக்கப்பட்ட முன் தீர்மானிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் ஊடாக பெற்ரோலிய உற்பத்திகளின் இறக்குமதி, களஞ்சியப்படுத்தல், பகிர்ந்தளித்தல் மற்றும் விற்பனை என்பனவற்றிற்காக பெற்ரோலிய உற்பத்தி நாடுகளில் நிறுவப்பட்ட கம்பனிகளிடமிருந்து அரசாங்கம் ஆர்வ வெளிப்படுத்துகைகளைக் கோரியுள்ளது. இந்த முக்கியத்துவம் வாய்ந்த மறுசீரமைப்பானது, இலங்கை நுகர்வோர்களது நலனுக்காக வினைத்திறன்களை ஊக்குவித்து, செவலவினங்களைக் குறைத்து, சேவை தரத்தை மேம்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

வரைபு 8.5 | உற்பத்திப் பொருட்களின் வகுதி



மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

வரைபு 8.6 | துறை ரீதியாக இலாபம் / நட்டம்



	போக்குவரத்து	மின்னுற்பத்தி	விமான சேவை	கைத்தொழில்கள்	உள்நாட்டு	விவசாயம்	ஏற்றுமதி
■ இலாபம்/(நட்டம்) 2021	-58 505	-16686	1994	53	-8 773	67	-1 497
■ இலாபம்/(நட்டம்) 2022	-526 865	-59 575	-1 966	-1 861	-26 106	36	112

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

மின் உற்பத்தி உள்ளடங்கலாக பலவீனமான பொருளாதார செயற்பாடு காரணமாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை அளவு 2022 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 1,080 மில்லியன் லிட்டர்களினால் குறைவடைந்துள்ளது. பெற்றோலிய விற்பனை, இடப்பெயர்வு மற்றும் மின் உற்பத்தி என்பனவற்றின் துறை வாரியான பகுப்பாய்விற்கமைய, குறித்த உள்நாட்டுத் துறைகள் முறையே, ரூபா 526.9 பில்லியன், ரூபா 59.6 பில்லியன் மற்றும் ரூபா 26.1 பில்லியன் என குறிப்பிடத்தக்களவில் 2022 ஆம் ஆண்டில் நட்டங்களைப் பதிவு செய்துள்ளதோடு, 2021 ஆம் ஆண்டுடன் இதனை ஒப்பிடும் போது அது முறையே 58.5 பில்லியன், 16.7 பில்லியன் மற்றும் 8.8 பில்லியன் எனக் காணப்பட்டது.

8.3 அரச வங்கிகள்

2021 ஆம் ஆண்டில், வலுவான அரசிறை வருமான வளர்ச்சி மற்றும் மேம்பட்ட இலாபமீட்டல் தன்மை என்பனவற்றுடன் இலங்கை வங்கிகள் நோய்த்தொற்றுத் தாக்கத்திலிருந்து மீண்டன. எவ்வாறாயினும், தீவிரமான பொருளாதாரச் சுருக்கம், இறையாண்மை தரப்படுத்தலில் தரம் குறைக்கப்பட்டமை, ரூபாய் மற்றும் அந்நியச் செலாவணி சந்தைகளில் திரவத்தன்மைத் தடைகள், கூர்மையான வட்டி விகிதங்களை அதிகரிக்கின்ற சுழல் பணவீக்கம் மற்றும் ஏனைய விடங்கள் உள்ளடங்கலாக தொழிற்பாட்டு சூழலில் ஏற்பட்ட தொடர் அதிர்வுகள் காரணமாக 2022 ஆம் ஆண்டில் சூழ்நிலையானது எதிர்பாராத முறையில் மாற்றமடைந்தது.

நாட்டின் அபிவிருத்தி மற்றும் சமூக நலனை ஊக்குவிக்கும் கொள்கைகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதில் அரசாங்கத்துடன் நெருக்கமாக செயற்பட்டு அதேவேளை, வங்கித் துறையில் ஸ்திரத்தன்மையை உறுதி செய்தல் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கல், நிதி மற்றும் நிதியியல் வசதிக்குட்படுத்தல் என்பனவற்றில் அரசுடமை வங்கிகள் உள்நாட்டு வங்கித் துறையில் முக்கிய பங்காற்றுகின்றன. வங்கித் துறையின் மொத்த சொத்துக்களில் கிட்டத்தட்ட 49 சதவீதத்தைக் கொண்ட அரச வங்கிகள் (உரிமம் பெற்ற வணிக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகளை உள்ளடக்கியது) 2022 ஆம் ஆண்டில் வங்கித் துறையில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தியது.

எவ்வாறாயினும், பொருளாதாரத்தில் நிலவிய மோசமான பேரண்டப் பொருளாதார நிலைமைகள், 2022 ஆண்டில் வங்கித் தொழிலைப் பாதிக்கின்ற, ஏனைய எதிர்மறைக் காரணிகள் காரணமாக, அரசு வங்கிகள் நாணயத் திரவத்தன்மை, இலாபமீட்டல் மற்றும் மூலதனப் போதுமாந்தன்மை என்பனவற்றினை நிருவகிப்பதில் குறிப்பிடத்தக்க அழுத்தத்தை எதிர்கொண்டன.

2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 104.9 பில்லியன் அரசுடமை வங்கித்துறையின் மொத்த இலபமீட்டல் தன்மையானது, 2022 ஆம் ஆண்டில் ரூபா 59.2 பில்லியனுக்கு 43.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இது முக்கியமாக, தேறிய வட்டி எல்லையில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட அரசாங்கப் பிணையங்களின் முதலீடுகளின் பெறுமதி இழப்புக்களில் ஏற்பட்ட அதிகரித்த பாதிப்பு என்பன காரணமாக

அமைந்துள்ளன. 2022 இல் இலங்கையின் வங்கித் துறை ஈட்டிய மொத்த இலாபத்தில் 30.8 சதவீதத்தை அரச வங்கிகள் வழங்கியுள்ளன.

2022 ஆம் ஆண்டில் 4 புதிய கிளைகளைச் சேர்ப்பதன் மூலம் சேவை வழங்கல் புள்ளிகள் உட்பட அரச வங்கிகளின் ஒருங்கிணைந்த கிளை வலையமைப்பு 1,924 ஆக விரிவடைந்தது, அதே நேரம் கிட்டத்தட்ட அனைத்து வங்கிகளும் தமது வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்ய டிஜிட்டல் தளங்களையும் பயன்படுத்துகின்றன.

அட்டவணை 8.7 | பிரதான அரச வங்கிகளின் நிதி நிலமை மற்றும் செயலாற்றுகை

விபரம்	வங்கித்துறை	இலங்கை வங்கி		மக்கள் வங்கி		தேசிய சேமிப்பு வங்கி	
		பெறுமதி	பங்கு (%)	பெறுமதி	பங்கு (%)	பெறுமதி	பங்கு (%)
சொத்துக்கள் (இலங்கை ரூபா பில்லி)	19,400	4,336	22.3	2,972	15.3	1,617	8.3
வைப்புக்கள் (இல.ரூபா.பில்)	15,300	3,335	21.7	2,372	15.5	1,477	9.6
வரிக்கு முன்னைய இலாபம் (இல.ரூபா.பில்)	192.2	30.9	16.0	21.3	11.1	4.5	2.3
வரிக்கு பின்னரான இலாபம் (இல.ரூபா.பில்)	151.7	31.9	21.0	17.2	11.3	2.5	1.6
Tier 1 இற்கான மூலதன போதுமாந்தன்மை விகிதம் (%)	12.3	12.4	-	11.9	-	14.6	-
மொத்த மூலதனம் போதுமாந்தன்மை விகிதம் (%)	15.3	15.3	-	16.3	-	16.8	-
வரிக்கு முன்னர் சொத்துக்களிலிருந்தான வருமானம (%)	1.0	0.7	-	0.8	-	0.2	-
வட்டி எல்லை (%)	4.0	3.1	-	2.7	-	2.0	-

மூலம் : அரச வங்கிகள்

8.3.1 இலங்கை வங்கி

இலங்கை வங்கியனது வங்கித் துறையில் மிகப் பெரிய வங்கியாகத் தொடந்து, ரூபா 4,336 பில்லியன் ஆதன அடிப்படையினையும் ரூபா 3,334.7 பில்லியன் பெறுமதியான வைப்பு அடிப்படையினையும் கொண்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில், மொத்த சொத்துக்கள் மற்றும் வைப்புத்தொகைகள் இரண்டும் 14.0 சதவீதம் மற்றும் 16.3 சதவீதம் என அதிகரித்துள்ளதோடு, இவை முறையே தொழில் துறை சராசரி அதிகரிப்பான 15.4 சதவீதம் மற்றும் 18.8 சதவீதம் என்பனவற்றிற்கு கீழாக காணப்பட்டன.

முன்னைய ஆண்டுக்கெதிராக 2022 இல் மொத்த தொழிற்பாட்டு வருமானத்தில் 28.4 சதவீதம் அதிகரிப்பொன்று காணப்பட்ட போதிலும், கடன்கள் மற்றும் ஏனைய சொத்துக்களுக்கான அதிகரித்த பெறுமதி இழப்புக் கட்டணங்கள் காரணமாக 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 43.1 பில்லியன் இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 30.9 பில்லியனுக்கு இலாபம் 28.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

தொழிற் துறையின் சராசரி வளர்ச்சி வீதமான 5.7 சதவீத வீழ்ச்சிக்கெதிராக, இலங்கை வங்கயின் மொத்த கடன்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான முற்பணங்கள் என்பன 2021 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவாக்கிய 2,413.7 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 2,325.5 பில்லியனுக்கு 3.7 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. ஆயினும், இலங்கை வங்கிக்கு அதன் பெறுமதி இழக்கப்பட்ட (கட்டம் 3) கடன்களின் விகிதத்தினை 2022 ஆம் ஆண்டில் 5.2 சதவீதத்தில் பேணுவதற்கு முடிந்துள்ள வேளையில், தொழிற் துறை சராசரியானது 11.3 சதவீதமாகக் காணப்பட்டது.

இலங்கை வங்கியின் வைப்புத் தளமும் 2022 ஆம் ஆண்டில் 16.3 சதவீத வளர்ச்சியொன்றுடன் ரூபா 3,334.7 பில்லியனினை அடைந்திருந்தது. ஆயினும், அதியுயர் நிதியளிப்புச் செலவினத்தினைப் பிரதிபலித்து, நடைமுறைக்கணக்கு சேமிப்புக் கணக்கு விகிதாசாரமானது, முன்னைய ஆண்டின் இறுதியில் பதவாக்கிய 36 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறாக 29 சதவீதத்திற்கு குறைவடைந்துள்ளது.

வரைபு 8.7 | உற்பத்தி அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள்



மூலம் : இலங்கை வங்கி

2023 ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் வாரத்தில், பிட்ச் ரேடிங் நிறுவனமானது, வங்கியின் நீண்ட கால வெளிநாட்டு நாணய வழங்குநர் தவறுகை தரப்படுத்தலினை 'RD (மட்டுப்படுத்தப்பட்ட தவறுகை) இலிருந்து 'CC' தரத்திற்கும், குறுங்கால வழங்குநர் தவறுகை தரப்படுத்தலினை 'RD (மட்டுப்படுத்தப்பட்ட தவறுகை) இலிருந்து 'C' தரத்திற்கும் தரமுயர்த்தியுள்ளதோடு, வங்கியின் தேசிய தரப்படுத்தலும் A(lka) ஆக தொடர்ந்துள்ளது. 2022 ஆம் ஆண்டிலும் இலங்கை வங்கியானது Brand Finance Lanka நிறுவனத்தால் ரூபா 53.9 பில்லியன் பெறுமதியான தரச் சின்னமொன்றுடன் தொடர்ந்தும் 14 வது வருடமாகவும் முதல் தர வங்கியாகப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 8.8 | இலங்கை வங்கியின் நிதி உற்பத்தி விவிளைவு

ரூபா.மில்

விபரம்	2018	2019	2020	2021	2022(அ)
மொத்த வருமானம்	**221,021**	**239,116**	**247,164**	**290,362**	**513,149**
வட்டி வருமானம்	195,394	220,477	226,311	260,513	456,267
வட்டிச்ச் செலவினம்	129,836	145,331	151,535	149,261	329,921
தேறிய வட்டி வருமானம்	65,558	75,146	74,776	111,252	126,346
ஏனைய வருமானங்கள்	25,627	18,640	20,853	29,848	57,686
மொத்த தொற்பாட்டுச் செலவினங்கள்	57,769	64,100	72,077	97,911	153,055
தனியாள் செலவுகள்	17,351	18,365	18,190	24,982	28,991
ஏனைய செவினங்கள்	40,418	45,736	53,887	72,929	124,064
வரிக்கு முன்னைய இலாபம்/ (நட்டம்)	**33,416**	**29,685**	**23,552**	**43,190**	**30,977**
பிரதான செயலாற்றுகை குறிகாட்டி					
முதலீடுகள்	626,078	650,433	785,832	1,125,018	1,601,082
வைப்புக்கள்	1,770,975	2,005,212	2,474,775	2,866,894	3,334,774
கடன்கள் மற்றும் முற்பணங்கள் (மொத்த)	1,429,107	1,549,805	1,988,409	2,413,762	2,325,594
செலாற்றுகையற்ற முற்பணங்கள்	53,754	77,133	98,564	251,158	324,630
சொத்து வருமான சதவிகிதம் (%)	1.6	1.3	0.9	1.27	0.76
பங்கு வருமாமான சதவிகிதம் (%)	17.3	16.8	11.9	21.03	14.06
செயற்பாடற்ற கடன் சதவிகிதம் (%)	3.6	4.8	4.8	4.4	-
பெறுமதி இழப்புக்கள் (கட்டம் 3) சதவிகிதம் (%)	-	-	-	5.08	5.27

மூலம் : இலங்கை வங்கி, பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்
(அ)தற்காலிகமானது
பிரதான செயலாற்றுகை குறிகாட்டி

8.3.2 மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் சொத்துத் தளமானது 15.4 சதவீத வங்கித் துறை வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் ரூபா 2,972 பில்லியனுக்கு 12.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. மேலும், 18.8 சதவீத வங்கித் துறைய சராசரி வளர்ச்சி வீதத்திற்கெதிராக வங்கியின் வைப்பத் தளமும் ரூபா 2.372 பில்லியனுக்கு 14.5 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது. அத்துடன், 2022 ஆம் ஆண்டில் 5.7 சதவீத வங்கித் துறை சராசரியான வீழ்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்கல் வீதமும் ரூபா 1,783.1 பில்லியனுக்கு 2.9 சதவீத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

மக்கள் வங்கியின் தேறிய வட்டி வருமானம் 2022 ஆம் ஆண்டில் 75.7 பில்லியனுக்கு 8.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு தேறிய வட்டி எல்லை நிலை 2021 ஆம் ஆண்டில் 3.4 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 2.7 சதவீதத்திற்கு குறைவடைந்தமையே பிரதான காரணமாக அமைந்துள்ளது. பெறுமதி இழப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட உயர்ந்த மட்டத்திலான ஏற்பாடுகள் மற்றும் தேறிய வட்டி வருமானம் வீழ்ச்சி என்பனவற்றுடன் தேறிய கட்டணங்கள் மட்டும் தரகு வருமானம் என்பன ரூபா 7.9 பில்லியனினால் அதிகரித்ததன் காரணமாக, 2022 ஆம் ஆண்டில் ரூபா 21.3 பில்லியனினை இலாபமாக அடையப் பெறுவதற்கு வங்கிக்கு முடிந்துள்ளதோடு. இது 2021 ஆம் ஆண்டில் ரூபா 30.3 பில்லியனாக காணப்பட்டது.

மக்கள் வங்கியின் வுநைச -1 மூலதனத்திற்கான மூலதன போதுமாந்தன்மை விகிதமானது 11.9 சதவீதமெனப் பதிவாக்கியதோடு, இது இது குறைந்தபட்ச ஒழுங்குமுறை தேவையான 8.5 சதவீதத்தை விடவும் அதிகமாகக் காணப்படுகிறது.

அட்டவணை 8.9 | மக்கள் வங்கியின் நிதி உற்பத்தி விவிளைவு

ரூபா.மில்

விபரம்	2018	2019	2020	2021	2022(அ)
மொத்த வருமானம்	**181,284**	**199,729**	**190,982**	**207,250**	**357,229**
வட்டி வருமானம்	166,441	186,714	179,717	197,330	321,936
வட்டிச் செலவினம்	111,035	125,508	118,784	114,869	246,178
தேறிய வட்டி வருமானம்	**55,406**	**61,207**	**60,934**	**82,461**	**75,758**
ஏனைய வருமானங்கள்	14,479	12,588	10,781	11,265	35,293
மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள்	**45,479**	**54,129**	**50,487**	**63,339**	**89,712**
தனியாள் செலவுகள்	19,905	19,494	19,722	22,772	26,603
ஏனைய செவினங்கள்	25,574	34,635	30,765	40,567	63,109
வரிக்கு முன்னைய இலாபம்/(நட்டம்)	**24,406**	**19,666**	**21,227**	**30,387**	**21,338**
பிரதான செயலாற்றுகை குறிகாட்டி					
வைப்புக்கள்	1,422,961	1,491,386	1,835,099	2,071,533	2,371,519
கடன்கள் மற்றும் முற்பணங்கள் (மொத்த)	1,334,420	1,386,481	1,723,466	1,835,697	1,783,107
செலாற்றுகையற்ற முற்பணங்கள்	31,472	43,569	53,745	59,995	79,335
சொத்து வருமான சதவிகிதம் (வரிக்கு முன்னர்) (%)	1.5	1.1	1.0	1.2	0.8
பங்கு வருமாமான சதவிகிதம் (மூ)(வரிக்குப் பின்னர்)	20.3	13.9	14.4	19.9	12.2
செயற்பாடற்ற கடன் சதவிகிதம்(%)	2.5	3.3	3.2	3.2	-
பெறுமதி இழப்புக்கள் (கட்டம் 3) சதவிகிதம் (%)	-	-	3.5	4	12.8

மூலம் : மக்கள் வங்கி, பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

வரைபு 8.8 | வகை அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள்



மூலம்: மக்கள் வங்கி

8.3.3 தேசிய சேமிப்பு வங்கி

தேசிய சேமிப்பு வங்கியானது நாடு முழுவதும் 262 கிளைகள் மற்றும் 4,064 தபால் அலுவலகங்கள்/உப அஞ்சல் அலுவலகங்கள் என்பனவற்றினைக் கொண்ட வலுவான கிளை வலையமைப்புடன் செயல்படுகிறது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில், தேசிய சேமிப்பு வங்கியின் சொத்துத் தளம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.4 சதவீத வளர்ச்சியொன்றுடன் ரூபா 1,616.7 பில்லியனை அடையப்பெற்றிருந்தது. மேலும், வங்கியின் வைப்புத் தளம் மற்றும் கடன் வழங்கல் பட்டியல் என்பன 2021 ஆம் ஆண்டுக்கெதிராக முறையே 3.4 சதவீத மற்றும் 7.4 சதவீத அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்து 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாத இறுதியில் முறையே ரூபா 1,476.7 பில்லியன் மற்றும் ரூபா 578.6 பில்லியன் எனப் பதிவாக்கியுள்ளது.

2022 இல், தேசிய சேமிப்பு வங்கியின் வரிக்கு முன்னைய இலாபம் ரூபா 4.5 பில்லியனாக காணப்பட்டதோடு, 2021 ஆம் ஆண்டுடன் இதனை ஒப்பிடுகையில் இது 84 சதவீத வீழ்ச்சழியாகும். குறைந்துள்ளது, க்கியமாக நிகர வட்டி வருமானம் ரூ. 40 சதவீதம் குறைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் ரூபா 54.6 பில்லியன் எனப் பதிவாக்கிய தேறிய வட்டி வருமானம் 2022 ஆம் ஆண்டில் ரூபா 32.5 பில்லியனுக்கு 40 சதவீதத்தினால் குறைவடைந்தமையே இதற்குப் பிரதான காரணமாக அமைந்தது.

தனிநபர்/அடகுச் சேவை மற்றும் பிற கடன் வகைகள் என்பனவும் வங்கியின் கடன் பட்டியலிற்கு 48.0 சதவீத பங்களிப்பை வழங்கியுள்ளது, இதேவேளை கட்டுமானம் மற்றும் உட்கட்டமைப்பு துறைகள் என்பனவும் வங்கியன் கடன் புத்தகத்திற்கு முறையே 32.0 சதவீதம் மற்றும் 11.0 சதவீதம் எனப் பங்களிப்புச் செய்துள்ளன.

அட்டவணை 8.10 | தேசிய சேமிப்பு வங்கியின் நிதி விளைவு

ரூபா.மில்

விபரம்	2018	2019	2020	2021	2022(அ)
மொத்த வருமானம்	**111,902**	**121,929**	**127,547**	**134,939**	**174,638**
வட்டி வருமானம்	110,507	118,730	122,512	131,438	173,021
வட்டிச் செலவினம்	85,622	89,898	87,622	76,809	140,477
தேறிய வட்டி வருமானம்	**24,885**	**28,832**	**34,890**	**54,630**	**32,544**
ஏனைய வருமானங்கள்	1,254	3,067	4,881	3,293	2,614
மொத்த தொழிற்பாட்டுச் செலவுகள்	**18,197**	**21,438**	**24,126**	**29,368**	**30,649**
தனியாள் செலவுகள்	9,263	10,158	9,967	12,867	13,791
ஏனைய செவினங்கள்	8,934	11,280	14,159	16,501	16,858
வரிக்கு முன்னைய இலாபம்ஃ (நட்டம்)	**7,941**	**10,462**	**15,645**	**28,555**	**4,510**
பிரதான செயலாற்றுகை குறிகாட்டி					
கிளைகளின் எண்	255	256	259	261	262
தபாலகங்கள், உப தபாலகங்களின் எண்.	4,062	4,063	4,063	4,064	4,064
முதலீடுகள்	565,841	647,760	798,811	980,672	978,772
வைப்புக்கள்	839,574	1,016,574	1,237,124	1,428,467	1,476,740
கடன்கள் மற்றும் முற்பணங்கள்	422,895	454,395	516,795	538,942	578,648
செலாற்றுகையற்ற முற்பணங்கள்	6,136	7,224	14,532	16,282	22,985
சொத்து வருமான சதவிகிதம் (%)	0.78	0.95	1.24	1.93	0.28
பங்கு வருமாமான சதவிகிதம் (%)	10.95	14.34	20.67	33.92	3.4
செயற்பாடற்ற கடன் சதவிகிதம் (%)	1.44	1.57	2.79	2.97	-
பெறுமதி இழப்புக்கள் (கட்டம் 3) சதவிகிதம் (%)	-	-	-	2.54	2.83

மூலம் : தேசிய சேமிப்பு வங்கி

(அ) தற்காலிகமானது

வரைபு 8.9| வகை அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கான கடன்கள், முற்பணங்கள்



மூலம் : தேசிய சேமிப்பு வங்கி, பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

8.3.4 வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டுத்தாபன வங்கி

வீடமைப்பு நோக்கங்களுக்காக கடன் வசதிகளை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியானது, கொழும்பு பங்குப் பரிவர்தனை நிலையத்தில் பட்டியலிடப்பட்டுள்ள ஏக அரசுடமைக் கம்பனியாக காணப்படுகின்றது.

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் கடன் வழங்கல் பங்கானது தொழிற்றுறையின் 5.7 சதவீத வளர்ச்சிக்கெதிராக ரூபா 42.7 பில்லியனுக்கு 2.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. ஆயினும், வங்கியின் செயற்படாக் கடன் வீகிமானது, ஆண்டில் நிலவிய பாதகமான பொருளாதார நிலமைகளின் தாக்கம் காரணமாக 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய 32.4 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 35.6 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. அத்துடன், வங்கியன் வைப்புத் தளமும் 0.9 சதவீதத்தினால் ரூபா 50.3 பில்லியனுக்கு அதிகரித்துள்ள வேளையில், தொழிற்றுறை சராசரி வளர்ச்சி வீதம் 18.8 சதவீதத்தில் காணப்பட்டது.

தேறிய வட்டி எல்லையில் ஏற்பட்ட 4.3 சதவீத வீழ்ச்சியொன்றுடன், வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் வரிக்கு முன்னரான இலாபமானது, 2022 ஆம் ஆண்டுக்காக ரூபா 377 பில்லியனுக்கு 57.1 சதவீத வீழ்ச்சியொன்றினை பதிவாக்கி இருந்தது. இதன் விளைவாக, 2021 ஆம் ஆண்டில் 9.0 சதவீதமாக காணப்பட்ட நிகரப் பங்குப் பெறுமதி 2022 ஆம் ஆண்டில் 5.9 சதவீத வருமானத்தினை ஏற்படுத்தியுள்ளது. வங்கியின் பங்கொன்றுக்கான தேறிய சொத்துக்கள் ரூபா 104.7 இற்கு அதிகரித்த போதிலும், 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் இறுதியில் பங்கொன்றிற்கான விலை ரூபா 27.8 ஆகக் காணப்பட்டது.

அட்டவணை 8.11 | வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் நிதி விளைவுகள்

ரூபா.மில.

விபரம்	2018	2019	2020	2021	2022(அ)
மொத்த வருமானம்	**7,120**	**8,090**	**7,856**	**7,004**	**8,856**
வட்டி வருமானம்	6,679	7,683	7,456	6,612	8,407
வட்டிச் செலவினம்	4,441	4,783	4,475	3,556	5,679
தேறிய வட்டி வருமானம்	**2,238**	**2,900**	**2,981**	**3,056**	**2,728**
ஏனைய வருமானங்கள்	441	407	400	392	449
மொத்த செலவினங்கள்	**2,050**	**2,532**	**2,313**	**2,570**	**2,800**
ஆளுக்குரிய செலவினங்கள்	1,114	1,164	1,174	1,387	1,541
ஏனைய செலவினங்கள்	936	1,368	1,139	1,183	1,259
வரிக்கு முன்னைய இலாபம்/ (நட்டம்)	**629**	**775**	**1,068**	**878**	**377**
பிரதான செயலாற்றுகை குறிகாட்டி					
முதலீடுகள்	9,396	12,440	17,406	18,709	17,179
வைப்புக்கள்	37,016	42,504	47,947	49,813	50,245
கடன்கள் மற்றும் முற்பணங்கள்	37,949	41,216	41,192	41,837	42,708
செலாற்றுகையற்ற முற்பணங்கள்	8,899	11,623	13,134	13,190	14,615
சொத்து வருமான சதவிகிதம் (%)	1.14	0.9	2.36	1.93	1.10
பங்கு வருமாமான சதவிகிதம் (%)	12.56	9.63	12.99	9.02	5.88
ஊ.சே.நி. ஊள்ளடங்கலாக செயற்பாடற்ற கடன் சதவிகிதம் (%)	21.31	25.26	33.03	32.44	35.56

மூலம்: வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

(அ) தற்காலிகமானது

8.3.5 அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

உரிமம் பெற்ற விசேட வங்கியான அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது, 1931 ஆம் ஆண்டு முதல் வீடமைப்பு மற்றும் வீடமைப்பு தொடர்பான நோக்கங்களுக்காக ஈட்டுக் கடனகளை வழங்கும் வணிகத்தில் உள்ளது. வங்கியின் வைப்புத் தளமானது 2021 ஆம் ஆண்டுக்கெதிராக 7.4 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவாக்கி, 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 49.1 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது.

கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பனவற்றின் பெறுமதி ரூபா 39.3 பில்லியனுக்கு 3 சதவீதத்தினால் அதிகரித்ததன் விளைவாக, மொத்த சொத்துக்களின் பெறுமதியும் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 57 பில்லியனுக்கு 7.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வங்கியின் கடன் பங்கும் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 38.1 பில்லியனுக்கெதிராக 3.1 சதவீத அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்து ரூபா 39.3 ஆக காணப்பட்டது. இது தொழிற்றுறை வளர்ச்சியான 5.7 சதவீத வளர்ச்சியினை விடவும் குறைவாகக் காணப்பட்டது. வங்கியின் செயலாற்றுகையற்ற கடன் விகிதம் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய 9.2 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 10.2 சதவீதத்திற்கு அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்ததன் காரணமாக வங்கியின் வங்கிச் சொத்துக்களின் பண்புத் தரமும் வீழ்ச்சியடைந்துள்ளது.

கட்டணம் மற்றும் தரகு வருமானத்துடன் இணைந்து, தேறிய வட்டி வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக, அரச ஈட்டு முதலீட்டு வங்கியானது 2021 ஆம் ஆண்டில் வரிக்கு முன்னரான இலாபமாகப் பதிவாக்கிய ரூபா 405 மில்லியனுடன் ஒப்பிடுகையில், வங்கியானது 2022 ஆம் ஆண்டில் ரூபா 48.3 மில்லியனினை வரிக்கு முன்னரான தேறிய நட்டமொன்றாகப் பதிவுசெய்துள்ளது.

அட்டவணை 8.12 | அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் நிதி விளைவு

ரூபா.மில்

விபரம்	2018	2019	2020	2021	2022(அ)
மொத்த வருமானம்	**5,659**	**6,125**	**6,260**	**5,425**	**7,520**
வட்டி வருமானம்	5,525	5,982	6,077	5,253	7,402
வட்டிச் செலவினம்	3,578	3,951	3,960	2,951	5,463
தேறிய வட்டி வருமானம்	**1,947**	**2,031**	**2,117**	**2,302**	**1,939**
ஏனைய வருமானங்கள்	134	143	183	172	118
மொத்த செலவினங்கள்	**1,601**	**1,674**	**1,728**	**2,069**	**2,105**
ஆளுக்குரிய செலவினங்கள்	824	882	873	1,084	1,090
ஏனைய செலவினங்கள்	777	792	855	985	1015
வரிக்கு முன்னைய இலாபம்/ (நட்டம்)	**480**	**500**	**572**	**405**	**-48**
பிரதான செயலாற்றுகை குறிகாட்டி					
முதலீடுகள்	7,172	9,729	14,248	13,792	15,568
வைப்புக்கள்	34,272	38,872	45,388	45,738	49,140
கடன்கள் மற்றும் முற்பணங்கள்	34,225	35,893	36,857	38,102	39,275
செலாற்றுகையற்ற முற்பணங்கள்	8,602	7,544	8,412	7,598	7,675
சொத்து வருமான சதவிகிதம் (%)	0.99	1.1	1.15	-0.39	-0.54
பங்கு வருமாமான சதவிகிதம் (%)	4.9	4.7	6.09	-1.98	-3.59
ஊ.சே.நி. உள்ளடங்கலாக செயற்பாடற்ற கடன் சதவிகிதம் (%)	21.76	21.21	22.94	19.84	19.33

மூலங்கள்: அரச ஈட்டு, முதலீட்டு வங்கி

(அ) தற்காலிகமானது

8.3.6 பிரதேச அபிவிருத்தி வங்கி

இலகுவில் பெற்றுக்கொள்ளக் கூடியதும் கட்டுப்படியானதுமான கடன் வசதிகளை வழங்கி, கிராமப்புற சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் பிரதேச அபிவிருத்தி வங்கியானது 272 கிளை வலையமைப்புடன் செயற்பட்டுவருகிறது.

பிரதேச அபிவிருத்தி வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பன 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12.3 சதவீத வளர்ச்சியொன்றுடன் 2022 ஆம் ஆண்டன் போது 210 பில்லியனினால் அதிகரித்துள்ளது.

2022 ஆம் ஆண்டின் இறுதியில் தொழில்துறை சராசரி செயலாற்றுகையற்ற கடன் விகிதம் (பெறுமிதி இழக்கப்பட்ட கட்டம் 3) 11.3 சதவீதமாக அதிகரித்த போதிலும், வங்கியின் செயலாற்றுகையற்ற கடன் விகிதம் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய 8.7 சதவீதத்திலிருந்து 8.5 சதவீதத்திற்கு மேம்பட்டுள்ளது. மேலும், வங்கியின் வைப்புத் தளமும் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 201.5 பில்லியனுக்கு 9.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. பிரதேச அபிவிருத்தி வங்கியின் தேறிய வட்டி வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக வங்கியின் இலாபமும் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 0.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 1.8 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைப் பதிவாக்கி இருந்தது.

அட்டவணை 8.13 | பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிதி விளைவு

ரூபா.மில்

விபரம்	2018	2019	2020	2021	2022(a)
மொத்த வருமானம்	**26,070**	**27,508**	**24,354**	**24,497**	**35,918**
வட்டி வருமானம்	24,865	26,357	23,182	23,555	34,977
வட்டிச் செலவினம்	12,959	13,904	12,294	9,806	19,537
தேறிய வட்டி வருமானம்	**11,906**	**12,453**	**10,888**	**13,749**	**15,440**
ஏனைய வருமானங்கள்	946	872	900	942	940
மொத்த செலவினங்கள்	**10,749**	**12,104**	**10,775**	**13,915**	**14,557**
ஆளுக்குரிய செலவினங்கள்	5,878	5,932	5,983	7,325	8,524
ஏனைய செலவினங்கள்	4,871	6,172	4,792	6,590	6,033
வரிக்கு முன்னைய இலாபம்/(நட்டம்)	**2,103**	**1,222**	**1,013**	**776**	**1,823**
பிரதான செயலாற்றுகை குறிகாட்டி					
முதலீடுகள்	38,709	55,465	55,400	60,630	68,418
வைப்புக்கள்	141,560	149,600	172,883	184,392	201,545
மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள்	137,770	144,694	167,099	187,438	210,564
செலாற்றுகையற்ற முற்பணங்கள்	7,263	13,711	16,658	16,322	17,817
சொத்து வருமான சதவிகிதம் (%)	2.08	1.6	0.21	0.27	0.71
பங்கு வருமாமான சதவிகிதம் (%)	10.7	3.4	2.72	2.07	5.07
செயற்பாடற்ற கடன் சதவிகிதம் (%)	5.4	9.63	10.11	8.71	8.46

மூலம்: பிரதேச அபிவிருத்தி வங்கி

(அ) தற்காலிகமானது

8.3.7 ஊழியர் நம்பிக்கை நிதிய சபை

ஊழியர் நம்பிக்கை நிதிய சபை தனது அங்கத்தவர்களுக்கு பல்வகையான பயன்களை வழங்குவதன் மூலம் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக தாபிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் இறுதியின் சபையில் அங்கத்துவம் பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 2.4 மில்லியனாக காணப்பட்டது. தமது ஊழியர்கள் சாரபில் தொழில்தருநர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற மொத்தப் பங்களிப்பானது, 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய 29.7 பில்லியன் பங்களிப்புத் தொகையிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 34.8 பில்லியனுக்கு 17.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

மேலும், பயநர் கோரிக்கைக்காக ரூபா 477.0 மில்லியனும் 5 ஆம் தரப் புலமைப் பரிசில் சித்தியடைந்த மாணவர்களுக்காக ரூபா 87.6 மில்லியனும் 2022 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டுள்ளது. இது தவிர, தொழில் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் அல்லது ஓய்வுபெற்றதன் பின்னர் கணக்கிலுள்ள மீதித் தொகையானது பங்கிலாபம் மற்றும் வட்டி என்பனவற்றுடன் சேர்த்து அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும். அதற்கமைய, 2022 ஆம் ஆண்டில் 198,797 மீளளிப்புக் கோரிக்கைகள் செயற்படுத்தப்பட்டு, ரூபா 25.0 பில்லியன் மீளளிப்புக் கோரிக்கைகளுக்காக மொத்தமாக செலுத்தப்பட்டுள்ளது. சபையின் முதலீட்டுப் பங்கானது 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 410.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 7.8 சதவீத அதிகரிப்பொன்றினைப் பதிவாக்கி ரூபா 442.5 பில்லியனுக்கு வளர்ச்சியடைந்துள்ளது. சபையினால் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான முதலீடுகள பாதுகாப்பான வருமானத்தினை உறுதிப்படுத்துகின்ற அரசாங்க பிணையங்கள் மீது முதலீடுசெய்யப்பட்டுள்ளதோடு, முதலீட்டுப் பங்கும், 2021 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவாக்கிய 86.7 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 94 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது.

அத்துடன், ஊழியர் நம்பிக்கை நிதிய சபையாது, வட்டி வருமானத்தினைப் பாரியளவில் உள்ளடக்கி, ரூபா 46.1 பில்லியனினை 2022 ஆம் ஆண்டில் மொத்த வருமானமாக உழைத்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் இந்நிதியம் ரூபா 43.4 பில்லியனினை தேறிய இலாபமாக உழைத்துள்ளதுடன், அனைத்து அங்கத்தவர்களுக்கும மொத்த பங்கிலாபம் மற்றும் வட்டி என்பனவற்றின் சதவிகிதமாக 8.75 சதவீதத்திகைப் பிரகடனப்படுத்தியுள்ளதோடு, இத்தொகை 36.9 பில்லியனாகவும் காணப்பட்டது.

அட்டவணை 8.14 | ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் நிதி விளைவு ரூபா.மில்

விபரம்	2018	2019	2020	2021	2022(அ)
மொத்த வருமானம்	**22,885**	**32,076**	**34,729**	**35,490**	**46,122**
முதலீட்டு வருமானம் (தேறிய)	22,456	31,647	33,697	35,202	45,677
வேறு வருமானங்கள்	429	429	1032	288	445
மொத்தச் செலவினம்	**2,315**	**2,315**	**2,229**	**2,330**	**2,694**
தொழிற்பாட்டுச் செலவுகள்	1,792	1,792	1,776	1,836	2,120
அங்கத்தவர் செலவுகள்	523	523	453	494	575
வரிக்கு முன்னைய இலாபம்/ (நட்டம்)	20,570	29,764	32,345	33,159	43,428
பகிர்விற்கான இலாபம்	**15,383**	**25,411**	**28,007**	**28,569**	**36,978**
அங்கத்தவர் நிதியத்திற்கான 3% வட்டி	9,193	9,423	10,423	11,553	12,679
பங்கிலாபங்கள்	15,322	15,706	17,371	9,627	24,302
வட்டி, பங்கிலாபங்களின் மொத்த வீதம் (%)	8	8	8	7.25	8.75

மூலம்: ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

8.4 நீர்

8.4.1 தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

2025 ஆம் ஆண்டளவில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீர் வழங்கலுக்கான ஏற்பாட்டினை கோடிட்டுக் காட்டும் அரசாங்கத்தின் தேசிய கொள்கைச் சட்டகத்திற்கமைய, சபையானது, நாட்டில் குழாய் நீர் மற்றும் பாதுகாப்பான குடிநீர் விநியோகத்தை முறையே 60.4 சதவீதம் மற்றும் 96 சதவீதமாக உயர்த்துவதற்கு தொடர் நடவடிக்கையினை எடுத்துள்ளது. இயற்கை நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது, 2022 ஆம் ஆண்டில், 3 பாரியளவிலான அளவிலான நீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் 1 உள்ளூர் வங்கி நிதியுதவி திட்டம் என்பனவற்றினைப் பூரணப்படுத்துவதன் ஊடாக மொத்த இணைப்பர்க்களுடன் 153,127 புதிய இணைப்புகளையும் இணைத்துள்ளது. இதன் விளைவாக, முன்னைய ஆண்டில் பதிவாக்கிய 2.8 மில்லியனிலிருந்து மொத்த இணைப்புகள் 2.9 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது.

மேலும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது 2022 ஆம் ஆண்டில் ரூபா 23.1 பில்லியன் உற்பத்திச் செலவில் 818 மில்லியன்

கன மீற்றர் குடிநீரினை உற்பத்தி செய்துள்ளதோடு, 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 60.6 என்ற அலகொன்றிற்கான உற்பத்திச் செலவினத்துடன் ஒப்பிடுகையில் மூலப் பொருள் மற்றும் மின்சாரம் என்பனவற்றில் ஏற்பட்ட கட்டண அதிகரிப்புகளைப் பிரதிபலித்து, 2022 ஆம் ஆண்டில் ரூபா 67.7 என்ற அலகொன்றிற்கான உற்பத்திச் செலவின விகிதத்தில் 614 மில்லியன் கன மீற்றர் நீரினைப் பகிர்ந்தளித்துள்ளது. ஆயினும், அலகொன்றிற்கான சராசரி விற்பனை விலையும் அலகொன்றிற்காக ரூபா 22.7 இனை நட்டமொன்றாக பிரதிபலித்து, ரூபா 45 ஆகக் காணப்பட்டது. ஆகவே, நீர் மற்றும் வடிகாலமைப்பு என்பனவற்றிற்காக கிரய பிரதிபலிப்பு தீர்வைத் திருத்தம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதோடு, புதிய தீர்வைக் கட்டமைப்பானது 10 வருடங்களின் பின்னர் 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் முதல் பயன்வலுப்பெறுகின்றது.

புதிய தீரவைத் திருத்தம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வருமானத்தினை கணிசமாக அதிகரித்தது. 2021 இன் இறுதியில் அடையப்பெற்ற ரூபா 28.9 பில்லியன் வருமானத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 35.5 பில்லியனினை வருமானமாக அடையப் பெற்றுள்ளது. இதன் விளைவாக தொழிற்பாட்டு நட்டம் ரூபா 1.2 பில்லியனுக்கு 63 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. ஆயினும், ஆண்டின் போது நிலவிய அதிகரித்த வட்டி வீதங்களின் கீழ் நீர் வழங்கள் கருத்திட்டங்களுக்காக கடன் பெறுகைச் செலவினம் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக முன்னைய ஆண்டினைப் போலவே மிளாய்வு ஆண்டிலும் ரூபா 3.1 பில்லியனினை தேறிய நட்டமாக சபை பதிவுசெய்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சார்பில் அதன் கடன் கூறுகளைத் திருப்பிச் செலுத்துவது உள்ளடங்கலாக 2022 ஆம் ஆண்டில் ரூபா 20 பில்லியன் பெறுமதியான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியளிப்புக் கருத்திட்டக் கடன்களை தீர்ப்பனவு செய்வதற்கு வசதியளிப்பதற்காக பொதுத் திறைசேரி அதன் வரவு செலவுத்திட்ட ஒத்துழைப்புச் சேவையினையும் நீடித்துள்ளது

நாட்டின் பாதுகாப்பான குடிநீரை மேம்படுத்தும் நோக்கில் 2022 ஆம் ஆண்டில் 24 நீர் வழங்கல் திட்டங்கள் நடந்து கொண்டிருந்த போதிலும், மோசமான பொருளாதார நிலைமை காரணமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் இலக்கிடப்பட்ட இலக்குகளை அடைவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளது.

அட்டவணை 8.15 : தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் நிதி விளைவு ரூபா மில

	2018	2019	2020	2021[a]	2022[a]
வருமானம்	**24,806**	**26,079**	**27,761**	**28,935**	**35,464**
நீர்	22,744	23,995	25,608	25,735	33,122
நீருடன் தொடர்புடைய வருமானம்	2,062	2,084	2,154	3,200	2,342
விற்பனைச் செலவுகள்	-15,821	-16,614	-16,754	-19,163	-23,145
மொத்த இலாபம்	8,985	9,465	11,007	9,772	12,320
வேறு வருமானங்கள்	1,061	1,259	1,482	1,796	1,289
நிர்வாகச் செலவுகள்	-10,957	-12,059	-12,035	-13,715	-14,449
ஏனைய தொழிற்படுத்தல் செலவுகள்	-906	-765	-839	-998	-313
தொழிற்பாட்டு இலாபம்∴ (நட்டம்)	-1,817	-2,100	-385	-3,145	-1,153
நிதி வருமானம்	1,574	1,454	1,571	843	2,007
ஏனைய செலவுகள் வரிகள்	-325	-531	-677	-752	-3,917
தேறிய இலாபம் ∴(நட்டம்)	-568	-1,177	509	-3,054	-3,064
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
இணைப்புக்கள் (எண்ணிக்கை மில்லியனில்)	2.0	2.2	2.6	2.8	2.9
நீர் உற்பத்தி (மில்லியன் கன மீற்றர்கள்)	732	746	782	815	818
நீர் விற்பனைகள் (மில்லியன் கன மீற்றர்கள்)	527	590	597	605	614
வருமானம் தராத நீர (சதவீதம்)	24.96	24.88	24.63	25.82	25.24
நீர் வழங்கல் செயற்திட்டங்கள் (எண்ணிக்கை)	343	348	331		
பாதுகாப்பான குடிநீர் வழங்கல் தழுவல் அளவு (சதவீதத்தில்)	90	92	93	94.4	96

மூலம்: தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை
(அ) தற்காலிகமானது

8.5 துறைமுகங்கள்

8.5.1 இலங்கை துறைமுக அதிகார சபை

உலகளாவிய வர்த்தக அளவுகளில் ஏற்பட்ட மந்தநிலை மற்றும் நாட்டின் பாதகமான பொருளாதார நிலைமைகள் என்பன காரணமாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் செயல்திறன் வீதம் (கொள்கலன் செயற்பாடுகள்) 2021 ஆம் ஆண்டில் 2.2 மில்லியன் இருபது அடி நீளமான கொள்கலன் கையாளலிருந்து 2022 ஆம் ஆண்டில் 1.9 மில்லியன் இருபது அடி நீளமான கொள்கலன் கையாளலுக்கு குறைந்துள்ளது. மேலும், இலங்கை துறைமுக அதிகார சபையினால் கையாளப்பட்ட மொத்த மெட்ரிக் தொன்னின் அளவும் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய 40.65 மில்லியன் மெட்ரிக் தொன்னிலிருந்து 2022 இல் 33.82 மில்லியன் மெட்ரிக் தொன்னிற்கும் குறைந்துள்ளது.

அட்டவைண 8.15 | நாளாந்த சராசரி கொள்கலன் கையாளல் - 20202

	இ.து.அ.ச	எஸ்ஏஜிரி	சி.ஐ.சி.ரி	கொழும்பு துறைமுகம்
மொத்தமாக கையாளப்பட்டTEU 2022	1,925,895	1,752,236	3,184,053	6,862,184
மொத்தமாக கையாளப்பட்டTEU 2021	2,198,334	1,838,693	3,212,331	7,249,358
% மாற்றம்	**-12.40%**	**-4.70%**	**-0.90%**	**-5.30%**

மூலம்: இலங்கை துறைமுக அதிகார சபை, பொது தொழிலமுயற்சிகள் திணைக்களம்

கப்பற் போக்குவரத்துத் துறையில் சிறிய கொள்கலன்களைக் கொண்ட கப்பல்கள் பாரிய கொள்கலன் கொண்ட கப்பல்கள் மூலம் பதிலீடுசெய்யப்பட்டதன் காரணமாக, கடந்த ஆண்டுகளில் கப்பல் வருகை தொடர்பிலான புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடுகையில், கொழும்பு துறைமுகத்திற்கு வருகைதந்த கப்பல்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்துள்ளது. ஆயினும், இலங்கை துறைமுக அதிகார சபையின் வருமானம் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 45.5 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 68.4 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது. தனியார் துறைமுக இயக்குநர்களின் கட்டண விகிதங்கள் மற்றும் பிராந்திய இயக்குநர்களின் கட்டண வரையறைகள் என்பனவற்றினைப் பூர்த்திசெய்யும் வகையில் 7 ஆண்டுகளுக்குப் பின்னர் கட்டணத் தீர்வைகள் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக வருமானம் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, இலங்கை துறைமுக அதிகார சபையின் வரிக்குப் பின்னரான இலாபமும் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 20.7 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 42.3 பில்லியனுக்கு 105 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

வரைபு 8.10| கொழும்புத் துறைமுகத்தினால் மொத்தமாக கையாளப்பட்ட ரியுக்கள்



மூலம்: இலங்கை துறைமுக அதிகார சபை

அட்டவணை 8.16 | இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதி விளைவு

விபரம்	2018	2019	2020	2021[a]	2022[a]
மொத்த வருமானம்	**38,546**	**40,770**	**38,931**	**45,454**	**68,408**
கடற்போக்குவரத்து	10,583	11,567	10,957	10,793	18,395
ஸ்டீவ்டோரிங்	18,257	18,582	17,847	20,441	28,901
துறைக் களம் கையாளல்	5,607	5,910	5,317	6,260	8,014
துறைமுக வசதிகள்	3,226	3,696	3,443	6,176	9,250
ஏனையவை	873	1,015	1,365	1,785	3,848
வேறு வருமானங்கள்	**11,577**	**11,150**	**11,314**	**12,310**	**22,546**
மொத்தச் செலவினம்	**30,241**	**37,040**	**29,715**	**32,899**	**43,745**
தொழிற்பாட்டுச் செலவுகள்	15,276	16,517	16,300	16,812	22,339
திருத்த வேலைகள், பராமரிப்புச் செலவினங்கள்	5,837	5,868	5,646	7,048	8,382
நிர்வாகச் செலவுகள்	8,868	15,025	7,770	9,039	13,024
தேறிய நிதிச் செலவு/ வருமானம்	**-131**	**287**	**849**	**2,005**	**5,626**
வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம் மற்றும் அந்நியச் செலாவணி நட்டம்)	**20,013**	**17,514**	**21,379**	**26,871**	**52,835**
அந்நியச் செலாவணி அதியீட்டம்/(நட்டம்)	-11,317	1,359	-1,051	-1,270	4,191
வருமான வரி	–	3,486	2,603	2,676	13,261
தவறுகை வரி	4,449	423	1,015	2,230	445
திரட்டு நிதிக்கான பங்களிப்பு	–	600	–	–	1,000
வரிக்கு பின்னரான இலபம் / நட்டம்	**4,247**	**11,646**	**18,738**	**20,695**	**42,319**
வங்கிகளுக்காக வெளிநின்ற படுகடன்கள்	12,884	10,990	9,322	7,355	6,411
அரசாங்க /வெளிநாட்டுக் கடன்களுக்கா வெளிநின்ற படுகடன்கள்	66,335	59,985	55,907	52,896	87,810
கடன்கள் மீதான வட்டி	2,257	2,372	1,532	800	2,400
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
TEU கையாளல் (எண்ணிக்கை மில்லியனில்)	7.05	7.23	6.85	7.25	6.86
கப்பல்களின் வருகை (எண்ணிக்கை)	5,457	5,458	4,762	4,603	4,537
கொழும்பு (எண்ணிக்கை)	5,079	5,001	4,335	4,411	4,366
காலி (எண்ணிக்கை)	143	283	248	54	41
திருகோணமலை (எண்ணிக்கை)	235	174	179	138	130

மூலம்: இலங்கை துறைமுக அதிகாரசபை
(அ) தற்காலிகமானது

8.6 காப்புறுதி

இலங்கையின் காப்புறுதித் தொழிற்றுறையானது 21 உள்நாட்டுக் கம்பனிகளையும் 6 வெளிநாட்டினை அடிப்படையாகக் கொண்ட கம்பனிகளையும் உள்ளடக்குகிறது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபை, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மற்றும் இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பனவற்றின் ஊடாக காப்புறுதித் துறையில் அரச பிரதிநித்துவத்தினைக் காணக்கூடியதாக உள்ளது.

காப்புறுதித் தொழிற்றுரையில் ஒட்டுமொத்த எழுதப்பட்ட காப்புறுதிப் பூட்கையானது 2021 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவாக்கிய ரூபா 233.5 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 257.6 பில்லியனுக்கு 10.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. காப்புறுதித் துறை கம்பனிகளின் மொத்தச் சொத்துக்களின் பெறுமதியும் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 881.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 947.3 பில்லியனுக்கு 7.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

8.6.1 இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது, ரூபா 274 பில்லியன் ஆதனச் சொத்துக்களைக் கொண்டும், ரூபா 159 பில்லியனினைக் கொண்ட மிகப் பெரிய ஆயுட் காப்புறுதி நிதியத்தினையும் கொண்டும் காப்புறுதித் துறையில் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் நாட்டின் மிகப் ரெிய அரசுடமைக் காப்புறுதிக் கம்னியாக காணப்படுகிறது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வருமானமானது 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா ரூபா 64.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் சிறியளவிலான வீழ்ச்சியொன்றுடன் ரூபா 63.7 பில்லியனைப் பதிவாக்கியிருந்தது. எழுதப்பட்ட காப்புறுதிப் பூட்கையும் 10.3 சதவீத காப்புறுதித் துறை வளர்ச்சியாக 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 43.2 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 41.3 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. ஆயுட் காப்புறுதித் துறையிலிருந்தான எழுதப்பட்ட காப்புறுதிப் பூட்கையும் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 22 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 20.9 பில்லியனுக்கு 4.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கை காப்புறுதிக்

கூட்டுத்தாபனத்தின் ஆயட் காப்புறுதியல்லாத் துறைக்கான எழுதப்பட்ட பூட்கையும் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 21.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் அண்டில் 4.3 சதவீத வீழ்ச்சியொன்றுடன் ரூபா 20.3 பில்லியன் என இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அறிக்கையிட்டுள்ளது. இதேவேளை, 2022 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனம் பங்கிலாபமாக ரூபா 0.9 பில்லியனினைப் பதிவாக்கி இருந்தது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமெத்த இலாபமீட்டல் தன்மையயும் 2022 ஆம் ஆண்டில் 12.5 பில்லியனுக்கு 6.4 சதவீதமான மிதமான அதிகரிப்பொன்றினைக் காட்டுவதோடு தொழிற்றுறையும் 19.4 சதவீத வளர்ச்சியொன்றினையும் பதிவாக்கி இருந்தது.

அட்டவணை 8.17 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவு

ரூபா.மில

விபரம்	2018	2019	2020	2021	2022[a]
வருமானம	**44,380**	**48,608**	**52,614**	**64,062**	**63,685**
மொத்த எழுதப்பட்ட காப்புறுதி	31,738	33,794	39,421	43,231	41,272
உழைக்கப்பட்ட தேறிய காப்புறுதி	28,005	29,772	34,206	38,397	37,024
பயன்கள், இழப்புக்கள் மற்றும் செலவுகள்	-28,407	-31,270	-34,888	-42,255	-36,452
முதலீட்டு வருமானம்	13,059	17,671	16,511	23,392	13,794
ஏனைய வருமானம்	3,316	1,165	1,897	2,273	12,867
ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிருவாகச் செலவுகள்	-8,822	-9,134	-9,755	-10,082	-14,757
வரிக்கு முன்னரான இலபம்/ நட்டம்	**7,150**	**8,205**	**7,972**	**11,725**	**12,476**
ஆண்டுக்கான தேறிய இலாபம்	**5,245**	**7,028**	**5,788**	**10,041**	**10,546**
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
கோரிக்கை விகிதம் - பொது (%)	67	61	51	60	63
மூலதனத்தின் போதியதன்மை விகிதம் - ஆயுள் (%)	440	434	459	490	316
மூலதனத்தின் போதியதன்மை விகிதம் - பொது (%)	208	208	223	240	244
ஆயுட் காப்புறுதி நிதியம்	107,108	118,000	134,013	152,585	155,769

மூலம்: இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

8.6.2 தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் 2006 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதோடு, இந் நிதியமானது, அக்ரஹார காப்புறுதித் திட்டம், விவசாயக் கடன் காப்புறுதித் திட்டம், பயிர் காப்புறுதித் திட்டம் மற்றும் மோட்டார் வாகனம், மோட்டார் வாகனமல்லாத பொதுவான காப்புதித் திட்டம் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட காப்புறுதித் திட்டங்களை வழங்குவதன் மூலம் காப்புறுதித் துறை வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றது. மேலும் இது பணிப் பகிஷ்கரிப்பு,கலகங்கள், சிவில் குழப்பங்கள் மற்றும் பயங்கரவாத நிதியம் என்பனவற்றை பேணி, 2007 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் காப்புறுதிசெய்யப்பட்ட நாபரொருவருக்கு எதிராக ஏற்படுகின்ற ஏதும் இயலாமைகளுக்கு மீள் காப்புறுதியாளர் என்ற வகையில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் செயற்பட்டு வருகின்றது.

அட்டவணை 8.18 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் நிதி விளைவு

ரூபா.மில்

விபரம்	2018	2019	2020	2021(அ)	2022(அ)
மொத்த வருமானம் (ரூபா மில்லியன்)	**15,003**	**17,717**	**18,862**	**18,969**	**25,109**
மொத்த எழுதப்பட்ட காப்புறுதி	9,684	12,693	9,818	10,631	11,483
அக்ரஹாரவுக்காகக் கிடைத்த பங்களிப்பு	4,017	4,839	5,469	6,283	6,809
சேகரிக்கப்பட்ட பயிர்க் காப்புறுதித் தீர்வை	2,138	1,780	1,627	2,194	2,573
உழைக்கப்பட்ட தேறிய காப்புறுதி வருமானம்	13,653	16,448	17,475	17,379	20,012
ஏனைய வருமானம்	1,350	1,269	1,387	1,590	5,097
கைவிடப்பட்ட மீள்காப்புறுதிகைவிடப்பட்ட மீள்காப்புறுதி	-2,486	-1,191	-1,102	-590	-684
காப்புறுதிக் கோரிக்கைகள், பயன்கள்	-9,691	-12,079	-7,955	-10,761	-14,693
எழுத்துறுதி மற்றும் கையேற்றல் செலவுகள்	-1,609	-2,056	-1,615	-1,864	-1,996
மொத்தச் செலவினம்	**415**	**574**	**427**	**408**	**411**
ஊழியர்களுடன் தொடர்புடைய செலவுகள்	219	240	226	225	245
நிர்வாகம் மற்றும் ஏனைய செலவுகள்	196	334	201	183	166
வருமானத்திற்கு மேலதிகமான செலவினங்கள்	**3,289**	**3,008**	**8,866**	**5,936**	**8,010**
பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள்					
கிடைக்கப்பெற்ற அக்ரஹார கோரிக்கைகள் (எண்ணிக்கை)	185,870	230,029	218,422	226,639	243,812
செலுத்தப்பட்ட அக்ரஹார கோரிக்கைகள் (எண்ணிக்கை)	166,675	214,381	209,108	212,646	173,820
சேகரிக்கப்பட்ட அக்ரஹார பூட்கைகள்	4,017	4,839	5,469	6,283	6,809
செலுத்தப்பட்ட அக்ரஹார கோரிக்கைகள்	4,033	5,257	4,173	6,380	6,247

மூலம்: தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் வருமானமானது குறிப்பாக, ரூபா 3.5 பில்லியனினால் முதலீட்டு வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய 19.0 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 25.1 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது. மொத்தமாக எழுதப்பட்ட காப்புறுதிப் பூட்கையும் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 10.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 11.5 பில்லியனுக்கு 8.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் இலாபமானது, 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 5.9 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 8.0 பில்லியனுக்கு 35 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதேவேளை, அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டம் மற்றும் மோட்டார் காப்புறுதித் திட்டம் என்பன முறையே 2.3 பில்லியன் மற்றும் 146 மில்லியன் என நட்டத்தினைப் பதிவுசெய்துள்ளது. அத்துடன், நிதியத்தின் அரசாங்கப் பிணையங்கள் மீதான முதலீடுகளும் உயர் வட்டி வீதத் திட்டத்தின் கீழ் முதலீட்டு வருமானத்தினை அதிகரிப்பதற்கு இயலுமாக்கி, 40.6 சதவீத வளர்ச்சியொன்றுடன், 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய 18.2 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 25.6 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது. அத்துடன், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமாது, ரூபா 1.6 பில்லியனினை திரட்டு நிதிக்கான அறவீடாக 2022 ஆம் ஆண்டில் செலுத்தியுள்ளது.

8.7 பயணிகள் போக்குவரத்து

8.7.1 இலங்கை போக்குவரத்துச் சபை

பயணிகள் போக்குவரத்து சேவையானது பொது (பேருந்து மற்றும் புகையிரதம்) மற்றும் கார்கள், வேன்கள், மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் போன்ற சொந்த வாகனங்கள் மூலம் தனியார் போக்குவரத்து முறைகள் மூலம் அனைத்து பயணிகளின் நகர்வுகளையும் கொண்டுள்ளது. சுமார் 38 சதவீதமான மக்கள் தமது போக்குவரத்து தேவைகளுக்காக பொது போக்குவரத்தையும் ஏனையோர் தமது சொந்த வாகனங்களையும் பயன்படுத்துகின்றனர். ஏறத்தாள 7,000 பஸ் வண்டிகளை உள்ளடக்கி, இலங்கைப் போக்குவரத்து சபையினால் அதிகளவிலான பஸ் தொகுதியொன்றினை சொந்தமாக வைத்திருப்பதற்கு முடிந்துள்ளது. இலங்கைப் போக்குவரத்து சபையானது பிரதான தலைமையகமொன்றினையும், 12 பிராந்திய அலுவலகங்கள், 107 பிரதான டிப்போக்கள், 09 உப டிப்போக்கள், 12 மாகாண பணிமனைகள், 21 சாரதி பயிற்சிப் பாடசாலைகள் மற்றும் சுமார் 26,800 நபர்கள் பணிபுரியும் மிகப்பெரிய பொதுப் போக்குவரத்து வழங்குனராகவும் செயல்படுகிறது. மேலும், தனியார் துறையினரால் வழங்கப்படும் போக்குவரத்து சேவைகளைப் போன்றே இலங்கை போக்குவரத்து சபையும் தமது சேவைகளை வழங்குகிறது. சிக்கனத்தன்மையற்ற பாதைகளில் குறிப்பாக, கிராமியப் பிரதேசங்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கும் கெமிசெறிய, இராக்கால பயணிகள் சேவைகளை வழங்கும் நிசிசெறிய,

மற்றும் பாடசாலைப் பிள்ளைகளுக்கான குறைந்த செலவில் போக்குவரத்து சேவையினை வழங்கும் சிசு செறிய மூலம் சேவைகளை வழங்குவதனை இது உள்ளடக்குகிறது.

இலங்கை போக்குவரத்து சபையானது 2021 ஆம் ஆண்டில் 3,232 பேரூந்துகளைப் பயன்படுத்தி தொழிற்படுத்திய 237 மில்லியன் கிலோமீற்றர்களுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் அது 4,330 பேரூந்துகளைப் பயன்படுத்தி தொழிற்படுத்தி 351 மில்லியன் இயக்கப்பட்ட கிலோமீற்றர்களைப் பதிவுசெய்ததன் மூலம் இலங்கை போக்குவரத்து சபையின் தொழிற்பாட்டுக் கிலோமீட்டர்கள் 48 வீத அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது. மேலும், இலங்கை போக்குவரத்து சபையின் வருமானமானது, அதிகரித்த தொழிற்பாட்டு செலவினங்களைப் பிரதிபலிக்கும் வகையில் முதன்மையாக பேரூந்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்படதன் காரணமாக முன்னை ஆண்டில் பதிவாக்கிய 14.6 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 58.3 பில்லியனுக்கு மூன்று மடங்குகளால் அதிகரித்துள்ளது.

பொது திறைசேரியானது இலங்கைப் போக்குவரத்து சபைக்கு பருவ காலச் சீட்டுக்கள் மற்றும் சிக்கனமற்ற பாதைகள் என்பனவற்றிற்கான மானியமாக 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடான ரூபா 9.4 பில்லியனிலிருந்து ரூபா 8.8 பில்லியனினை கட்டுநிதியாக பொது திறைசேரி இலங்கைப் போக்குவரத்து சபைக்கு வழங்கி ஒத்துழைத்துள்ளது. எரிபொருள் விலை மற்றும் உதிரிப் பாகங்களின் விலை அதிகரித்ததன் காரணமாக 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய 28.6 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 68 பில்லியனுக்கு துரிதமாக இலங்கைப் போக்குவரத்து சபையின் தொழிற்பாட்டு செலவுகள் துரிதமாக அதிகரித்த போதிலும் இலங்கைப் போக்குவரத்து சபையானது 2022 ஆம் ஆண்டில் 0.5 பில்லியனினை தேறிய இலாபமொன்றாகப் பதிவுசெய்துள்ளது.

வரைபு 8.11 | இலங்கை போக்குவரத்து சபையின் செயலாற்றுகை



மூலங்கள்: இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

அட்டவணை 8.19 | இலங்கை போக்குவரத்துச் சபையின் நிதி விளைவு (ரூபா.மில்)

வருமானம்	2018	2019	2020	2021(அ)	2022(அ)
வருமானம்	**43,647**	**42,938**	**31,128**	**26,817**	**70,379**
தொழிற்பாட்டு வருமானம்	30,914	29,282	17,996	14,565	58,269
ஏனைய வருமானம்	12,733	13,656	13,132	12,252	12,110
செலவினம்	**41,351**	**40,237**	**31,787**	**28,686**	**68,256**
சம்பளம்	19,436	20,143	18,274	16,174	21,481
எரிபொருள்	14,634	13,879	9,535	8,026	37,344
ஏனைய நடைமுறைச் செலவுகள்	4,428	4,794	3,085	2,808	6,868
மேந்தலை	2,245	1,037	629	1,475	2,360
நிதிச் செலவுகள்	608	384	264	203	203
அரசாங்கத்தின் நிதி உதவிக்கு முன்னரான காசு இலாபம்/ (நட்டம்)	**2,296**	**2,701**	**-659**	**-1,869**	**2,123**
அரசாங்க நிதி உதவி	1,225	1,474	1,127	1,217	642
காசு இலாபம்	3,521	4,175	468	-652	2,765
பெறுமானத்தேய்வு	2,170	2,265	2,507	2,355	2,184
உற்பத்தி நட்டம்	56	20	66	47	97
வரிக்கு முன்னரான இலபாம் (நட்டம்)	**1,295**	**1,890**	**-2,105**	**-3,054**	**484**
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
கி.மீ இற்கான எரிபொருள் செலவினம்	31.91	31.70	30.93	33.01	104.54
பஸ் வண்டிக்கான ஊழியர்களின் எண்	6	6	7	8	6
இயங்கிய பஸ் வண்டிகளின் நாளொன்றுக்கான சராசரி	5,227	5,079	3,961	3,232	4,330
இயங்கிய மில்லியன் கிமீ	446	431	308	237	351
பஸ் தொகுதியின் சராசரி வயதுப் பகுப்பாய்வு					
5 வருடங்களுக்குக் குறைந்தவை	2,559	2,423	1,001	740	521
5,10 வருடங்கள்	968	1,134	2,420	2,273	2,467
10, 15 வருடங்கள்	1,786	2,109	2,155	1,830	1,326
15 வருடங்களுககு மேற்பட்டவை	1,629	1,608	1,382	951	2,775
மொத்தம்	**6,942**	**7,274**	**6,958**	**5,794**	**7,089**

மூலங்கள்: இலங்கை போக்குவரத்துச் சபை
(அ) தற்காலிகமானது

8.8 விமானப் போக்குவரத்துத் துறை

8.8.1 இலங்கை விமான நிலைய, விமானப் போக்குவரத்து சேவை

2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் இலங்கை விமான நிலைய, விமானப் போக்குவரத்து சேவை நிறுவனமானது, விமான சேவைகளோடு தொடர்புபற்ற பல விசேட வான்வழிசார்ந்த சேவைகளை வழங்கி வருகிறது. அரசாங்கத்தின் நியதிச் சட்ட சேவை வழங்குநர் என்ற அடிப்படையில் இலங்கை விமான நிலைய, விமானப் போக்குவரத்து நிறுவனமானது அதன் சுயநிதிகளையும் அரசாங்கப் பின்னணியிலுள்ள வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் மானியங்கள் என்பனவற்றினைப் பயன்படுத்தி விமான நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துகிறது. இந்நிறுவனம் ரூபா 165 பில்லியனுக்கு மேற்பட்ட சொத்து அடிப்படையொன்றினையும் 3,900 ஊழியர்களைக் கொண்டுள்ள ஊழியப் படையொன்றினையும் கொண்டுள்ளது.

அட்டவணை 8.20 | விமான நிலைய, விமானப் போக்குவரத்துச் சேவைக் கம்பனி நிதி விளைவு ரூபா.மில்.

விபரம்	2018	2019	2020	2021	2022(அ)
வருமானம	**28,739**	**29,857**	**11,676**	**11,199**	**33,784**
வான்பயண சார்ந்தவை	5,234	5,431	2,291	2,299	6,195
வான்பயணம் சாராதவை	19,725	20,221	5,486	5,087	19,812
வேறு வருமானங்கள்	3,780	4,205	3,899	3,813	7,777
செலவினம	**18,279**	**14,635**	**15,409**	**11,954**	**27,350**
தனிப்பட்ட செலவினங்கள்	7,458	8,117	7,415	7,305	10,001
நிருவாக மற்றும் தாபனச் செலவுகள்	1,666	2,053	2,088	1,141	2,097
பெறுமானத்தேய்வு	2,694	2,856	2,853	2,648	2,367
திருத்த, பராமரிப்புச் செலவினங்கள்	398	463	266	354	476
தேறிய நிதிச் செலவினங்கள்	6,063	1,146	2,787	506	12,409
வரிக்கு முன்னரான தேறிய இலாபம்	**10,460**	**15,222**	**-3,733**	**-755**	**6,434**
மொத்த சொத்துக்கள்	100,834	108,274	103,216	126,844	179,530
மொத்த பொறுப்புக்கள்	72,356	69,044	66,233	85,530	134,273
மொத்த பங்குரிமை வருமானம்	28,479	39,231	36,983	41,314	45,257
மொத்தக் கடன்கள்	49,208	47,560	46,773	64,725	106,273
வருடத்தினுள் பெற்ற கடன்கள்	1,391	2,150	684	19,833	2,544
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
வானூர்தி அசைவுகள்	67,308	96,812	38,145	47,391	59,451
பயணிகளின் நகர்வுகள் (எண்)(மில்)	11.0	10.0	2.4	1.5	5.5
இடைமாற்றல் பயணிகள் (எண்)(மில்)	1.5	1.7	1.5	1.7	1.0
சரக்கு அசைவு	279,560	261,367	151,141	201,680	173,597

மூலங்கள்: வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமான நிலைய, விமானப் போக்குவரத்துக் கம்பனி
(அ) தற்காலிகமானது

இலங்கை விமான நிலைய, விமானப் போக்குவரத்து சேவைகள் நிறுவனத்தின் வருமானமாது, நோய்த் தொற்றுக்கான முன்னைய காலமான 2019 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 14 சதவீதத்தினால் 29.9 பில்லியனினைக் கடந்து சென்று, 2022 ஆம் ஆண்டில் ரூபா 33.8 பில்லியனுக்கு நோய்த்தொற்றுக் காலமான 2020 ஆம் மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பதிவாக்கிய முறையே 11.7 பில்லியன் மற்றும் 11.1 பில்லியன் என்ற வருமான எல்லயினைத் தாண்டி, மும்மடங்கு வருமானத்தினைப் பதிவு செய்துள்ளது. வான்வழி சேவைகள் சார் வருமானம் 2019 ஆம் ஆண்டில் 5.4 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 6.2 பில்லியனுக்கு 14 சதவீதத்தினால் அதிகரித்த போதிலும், வான்வழியல்லாச் சேவைகளிலிருந்தான வருமானம், 2019 ஆம் ஆண்டில் நோய்த் தொற்றுக்கு முன்னைய நிலையில் பதிவாக்கிய ரூபா 20.2 பில்லியனிலிருந்து, 2022 ஆம் ஆண்டில் 19.8 பில்லியனுக்கு 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

2021 ஆம் ஆண்டில் ரூபா 0.5 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 12.4 பில்லியனுக்கு நிதிச் செலவினங்களில் எற்பட்ட அதிகரிப்பானது, 2021 ஆம் ஆண்டில் ரூபா 11.9 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 27.3 பில்லியனுக்கு 129 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு காணமாக அமைந்தது.

இருப்பினும், இலங்கை விமான நிலைய, விமானப் போக்குவரத்து சேவைகள் நிறுவனமானது, 2022 ஆம் ஆண்டில் ரூபா 6.4 பில்லியனினை வரிக்கு முனனரான இலாபமாக பதிவு செய்து, இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு இலாபகரமான நிறுவனமாக தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது

8.8.2 ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ்

நோய்த் தொற்றினைத் தொடர்ந்து உலகளாவிய விமானப் போக்குவரத்துத் துறையானது, அதன் மீட்சிக்கான பாதையில் பயணித்த போதிலும், இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார அமைதியின்மையின் விளைவாக 2022 ஆம் ஆண்டில் ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் பாதிக்கப்பட்டது. சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காரணமாக, இந்திய துணைக் கண்டம், தூர கிழக்கு, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பாவிலுள்ள சந்தைகளை இணைக்கின்ற இடைமாறல் போக்குவரத்துப் பயணமொன்றினை நோக்கி விமான நிறுவனங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது.

2022 ஆம் ஆண்டு யூன் முதல் ஓகத்து வரையான காலப்பகுதியில் நாடு முழுவதும் ஜெட் எரிபொருள் விநியோகத்திற்கு பெரும் பற்றாக்குறை காணப்பட்டது. பல சர்வதேச விமான நிறுவனங்கள் இலங்கைக்கான சேவைகளை நிறுத்திய அல்லது குறைத்துக் கொண்ட சூழ்நிலையில் தேசத்தின் தொடர்பினைப் பேணுவதற்காக, ஸ்ரீ லங்கன் எயாரட் லைன்ஸ் நிறுவனத்திற்கு 'tankering' (மீள வருவதற்காக மேலதிக எரிபொட்களைக் கொண்டு செல்வது) பயன்படுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது.

மீண்டும் எரிபொருளை நிரப்புவதற்காக இந்தியா வழியாக விமானம் திசைதிருப்பப்படுவதால் நீண்ட தூர விமானங்கள் மீதான பயணிகளின் இணைப்பில் ஏற்படுகின்ற இடையூறுகள் காரணமாக பயணிகள் வருமானத்தில் ஏற்பட்ட இழப்பு மற்றும் சுமைக் கட்டுப்பாடுகள் காரணமாக சரக்கு வருவாயில் ஏற்பட்ட இழப்பு என்பன ஸ்ரீ லங்கன் எயாரட் லைன்ஸ் நிறுவனத்தின் தொழிற்பாட்டுச் செலவினங்களை கணிசமான அளவில் அதிகரிக்கச் செய்துள்ளன.

அட்டவணை 8.21 | ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் நிதி உற்பத்தி விளைவு ’ரூபா மில்

விபரம்	2018/19	2019/20	2020/21	2021/22	2022/2023(அ)
மொத்த வருமானம்	**184,653**	**183,514**	**71,847**	**134,273**	**370,295**
பயணிகள்	147,900	147,673	16,328	77,999	293,004
சரக்கு	15,828	15,745	27,328	43,975	51,019
மிகைப் பயணப் பொதி	1,074	1,166	197	1,157	3,067
வேறு வருமானங்கள்	15,538	15,566	6,841	9,805	19,461
நிதி வருமானம்	90	317	525	638	
ஏனைய வுருமானம்	4,223	3,046	20,629	699	3,743
மொத்தச் செலவினம்	**228,676**	**230,712**	**117,079**	**300,643**	**442,472**
வானூர்தி எரிபொருட் செலவு	60,673	55,328	10,569	42,759	155,522
ஊழியர் செலவு	20,368	21,205	16,206	15,970	24,911
விமான நிலைய, பயண வழி, பயணிகள் செலவுகள்	29,780	29,217	7,440	19,272	48,388
வானூர்திப் பராமரிப்பு முழுயைமான சீராக்கற் செலவு	26,333	22,820	13,695	23,088	41,877
குத்தகை வானூர்தி வாடகை	0	19,485	16,929	12,722	13,654
விற்பனை, சந்தைப்படுத்தல், விளம்பரச் செலவுகள்	15,775	14,541	2,034	7,180	24,342
சிப்பந்திகளுக்கான செலவுகள்	6,582	6,557	1,680	3,231	7,686
ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள	14,302	13,836	4,272	6,862	13,209
தீர்க்கப்பட்ட/தீர்க்கப்படாத செலாவணி(ஈட்டம்)/இழப்பு	3,414	6,119	20,229	145,433	63,713
பெறுமானத்தேய்வு மற்றும் கடனழிவு	1,349	1,214	1,685	1,314	1,251
தேறிய நிதிச் செலவு	19,331	40,390	22,339	22,812	47,917
குத்தகை ஒப்பந்தத்தினை இரத்துச் செய்தல்	30,769	–			
வரிக்கு முன்னரான இலாபம்ஃ(நட்டம்)	**-44,023**	**-47,199**	**-45,231**	**-166,370**	**-72,177**
திரட்டிய நட்டங்கள்	**-223,488**	**-316,477**	**-371,734**	**-537,505**	**-609,682**
கடுமையான மூலதன இழப்பு	ஆம்	ஆம்	ஆம்	ஆம்	ஆம்
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
கொண்டு செல்லப்பட்ட பயணிகள் (RPK மில்)	15,689.19	14,547.97	748.13	4,968.59	11,793.72
வானூர்தித் தொகுதி (எண்ணிக்கை)	27	25	24	24	23
கொண்டு கொள்ளளவு (ASK மில்)	18,925	18,041	3,816	10,144	15,188
மொத்த வருமானத்தில் எரிபொருட் செலவு %	34%	31%	21%	32%	42%
பயணிகள் ஏற்றல் காரணி	82.9	80.64	19.60	48.98	77.65

மூலம்: ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட்- 2023/03/31 இல் முடிவடைந்த நிதியாண்டு
(அ) தற்காலிகமானது

ஸ்ரீ லங்கன் எயாரட் லைன்ஸ் நிறுவனம் 2022/2023 ஆம் ஆண்டுக்காக இதே காலப் பகுதியில் கொவிட் நோய்த் தொற்றுக்கு முன்னைய காலப் பகுதியில் காணப்பட்ட பயணிகள் வருவாயில் 97 சதவீத பயணிகள் வருமானத்தினை மீட்டெடுத்துள்ளதோடு, இதே காலப்பகுதிக்காக ரூபா 293 பில்லியனினை பயணிகள் வருமானமாக உழைத்துள்ளது. குறித்த காலப் பகுதியில் 3.2 மில்லியன் பயணிகள் கொண்டுசெல்லப்பட்டுள்ளதோடு, இதற்கு முன்னர் இலங்கையுடன் நேரடியாக இணைக்கப்படாத ஜேர்மனியின் பிராங்பேர்ட், தென் கொரியாவின் சியோல் மற்றும் ஆஸ்திரேலியாவின் சிட்னி போன்ற மேலதிக முடிவிடங்களை உள்ளடக்கி, இலாபகரமான வழிப்பாதைகளில் இச் சேவையினை இயக்குவதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாணயப் பெறுமதி இறக்கத்துடன் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் அதிகரித்த ஆண்டு இறுதிப் பெறுமதி இழப்புக்களின் விளைவாக, ஸ்ரீ லங்கன் எயாரட் லைன்ஸ் நிறுவனத்திற்கு ரூபா 63.7 பில்லியன் குறிப்பிடத்தக்க அந்நியச் செலாவணி இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், ரூபா 47.9 பில்லியனுக்கு அதிகரித்த நிதிச் செலவினம் மற்றும் மேம்பட்ட செயற்பாட்டுச் செலவினம் என்பன ஸ்ரீ லங்கன் எயாரட் லைன்ஸ் நிறுவனத்தனை 2022/2023 ஆம் ஆண்டில் ரூபா 72.2 பில்லியன் தேறிய நட்டமொன்றுக்கு இட்டுச் சென்றுள்ளது.

ஸ்ரீ லங்கன் எயாரட் லைன்ஸ் நிறுவனம் தாங்க முடியாத அளவிலான கடனைச் சுமந்து வருகிறது. 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதிய நிலவரத்தின் பிரகாரம், படுகடன்கள அனைத்தும் ஐ.அ.டொலரிற்கு மாற்றப்பட்ட போது, அது ஐ.அ.டொ.834 மில்லியனாக காணப்பட்டது. (90 சதவீதம் வெளிநாட்டு நாணய அலகில் உள்ளது). இதற்கு மேலதிகமாக, ஐ.அ.டொலரிலுள்ள குத்தகைப் பெறுப்புக்கள் அனைத்தும் மீள் மதிப்பீடுசெய்யப்பட்டு மூலதனமாக்கப்படுகின்றன.

ஸ்ரீ லங்கன் எயாரட் லைன்ஸ் நிறுவனத்தின் ஊந்து தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் அதன் ஐந்தொகையிலுள்ள சவால்களை எதிர்கொள்ளல் போன்ற நியதிகளில் ஸ்ரீ லங்கன் எயாரட் லைன்ஸ் நிறுவனத்தினை மீள் கட்டமைக்கும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. நிறுவனத்திலிருந்து எழுகின்ற அரசிறை இடர்வுகளை நீக்கியும், அதன் மரபுக் கடனை நிவர்த்தி செய்வதற்குமாகவும் விமான நிறுவனத்தை மறுசீரமைப்பதற்கான மூலோபாயங்களுக்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. சர்வதேச ரீதியாக பிரபல்யமிக்க பரிவர்த்தனை ஆலோசகர்கள் இந்த செயல்முறையை ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

8.9 நிருமாணத் துறை

நாட்டின் பொருளாதார வீழ்ச்சி காரணமாக முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு இலங்கையின் நிருமாணக் கைத்தொழிற் துறை மட்டுப்படுத்தப்பட்ட பங்களிப்பை வழங்கியுள்ளது. அரச பொறியியற் கூட்டுத் தாபனம், மத்திய பொறியியல் மதியுரைப் பணிப்பகம் மற்றும் அரச அபிவிருத்தி மற்றும் நிருமாணக் கூட்டுத்தாபனம் என்பனவற்றின் புரள்வானது, 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெரும்பாலும் 24 சதவீத வீழ்ச்சியொன்றினைப் பதிவாக்கியுள்ளது.

அரச பொறியியற் கூட்டுத் தாபனம், மத்திய பொறியியல் மதியுரைப் பணிப்பகம் மற்றும் அரச அபிவிருத்தி மற்றும் நிருமாணக் கூட்டுத்தாபனம் என்பன நிருமாணக் கைத்தொழிற் துறையில் ஈடுபட்டுள்ள பிரதான மூன்று அரசுடமைத் தொழில் முயற்சிகளாகும் என்பதோடு, இவை அரசாங்கத்தின் பெரும்பாலான ஒப்பந்தங்களைப் பெறுப்பேற்கினறன. ஆயினும், திரவத்தன்மை தடைகள், ஒப்பந்தங்களை இடைநிறுத்துதல் மற்றும் பிற்போடல், கட்டுமானப் பொருட்களின் விலைகள் துரிமாக அதிகரித்தல், கட்டுமானப் பொருட் பற்றாக்குறை மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் என்பன இந்த மூன்று நிறுவனங்களையும் புதிய ஒப்பந்தங்களில் ஈடுபடாது தடுத்துள்ளதோடு, இவற்றின் சொத்தான திறமையான பணியாளர்களைப் பயன்படுத்துவதற்கான அவர்களின் கொள்திறனினையும் இது தடைசெய்துள்ளது.

8.9.1 அரச பொறியியற் கூட்டுத்தாபனம்

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் 2022 ஆம் ஆண்டில் ஸ்ரீ ஜயவர்தனபுரவில் தாதியர் பீட நிர்மாணம், சொய்சாபுர வீடமைப்புத் திட்டம் - மூன்றாம் கட்டம் மற்றும் பல்லேகலவில் புதிய சிறைச்சாலை வளாகத்திற்கான குடிமனைகள் போன்ற கருத்திட்டங்களை ரூபா 95.37 பில்லியன் செலவில் நிருமாணித்துள்ளது.

அட்டவணை 8.22 | அரச பொறியியல் கூட்டுத்தபானத்தின் நிதி விளைவு (ரூபா.மில்)

விபரம்	2018	2019	2020	2021(அ)	2022(அ)
வருமானம்	**3,416**	**4,427**	**2,162**	**2,955**	**2,693**
நிர்மாணத் துறை	3,092	3,768	1,608	2,594	2,255
மதியுரைச் சேவை	186	192	155	338	413
வேறு வருமானங்கள்	138	467	399	23	25
செலவினம்	**5,272**	**5,388**	**3,414**	**4,552**	**3,633**
தொழிற்பாட்டுச் செலவினங்கள்	2,354	2,429	916	1,568	999
நிதிச் செலவு	2,119	2,192	1,593	1,922	1,772
நிதிச் செலவு	258	391	406	220	557
ஏனைய செலவினங்கள்	541	376	499	842	304
வரிக்கு முன்னைய இலாபம்/ (நட்டம்)	**-1,856**	**-961**	**-1,252**	**-1,597**	**-940**
வங்கி நிலுவைப் படுகடன்கள்	**2,121**	**2,370**	**2,130**	**2,130**	**2,737**
கிடைக்க வேண்டியவை	**5,268**	**6,591**	**5,385**	**5,928**	**6,492**

மூலம்: அரச பொறியியல் கூட்டுத்தபானம்

(அ) தற்காலிகமானது

அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் வருமானம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 3 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 2.7 பில்லியனுக்கு 9 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளதனால் அதன் செலவினமும் 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அரச பொறியியற் கூட்டுத்தாபனம் 2022 ஆம் ஆண்டில் 0.9 பில்லியன் நட்டமொன்றினைப் பதிவுசெய்துள்ளதோடு இது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 41 சதவீத வீழ்ச்சியொன்றாகும். 2022 ஆம் ஆண்டில் அரசாங்க நிதியினை வெளியிடுவதிலுள்ள கட்டுப்பாடுகள் அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தின் பெறப்படத்தக்கவைகளை ரூபா 6.5 பில்லியனுக்கு 10 சதவீதத்தினால் அதிகரிக்கச் செய்துள்ளதோடு, நிறுவனத்திற்கு குறிப்பிடத்தக்களவில் திரவத்தன்மைப் பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளது. இதன் விளைவாக நிறுவனத்தின் வங்கிகளுக்கான வெளிநின்ற படுகடன்களும் 28 சதவீத அதிகரிப்பொன்றினைப் பிரதிபலித்து ரூபா 2.1 பில்லியனிலிருந்து ரூபா 2.7 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது.

1,056 ஊழியர்களுக்கு தன்னார்வ இழப்பீட்டு ஓய்வூதியத் திட்டத்தை செயற்படுத்துவதற்கும், 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் முதல் ஒற்றோபர் வரையான காலப்பகுதிக்கான சம்பள நிலுவைகளை வழங்குவதற்காக ரூபா 0.5 பில்லியன் நிதியுதவியினை வழங்குவதற்கும், அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

8.9.2 மத்திய பொறியியல் மதியுரைப் பணியகம்

மத்திய பொறியியல் மதியுரைப் பணியகமானது, ஆது ஆரம்பிக்கப்பட்ட குறியிலக்குகளில் கவனம் செலுத்தி, 2016 ஆம் ஆண்டு முதல் மதியுரைச் சேவைகளை வழங்கி வருவதோடு, கட்டுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மத்திய பொறியியல் சேவைகள் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் மத்திய பொறியியல் மதியுரைப் பணியகம் சொந்தமாக வைத்துள்ள முழு உரிமைத் துணைக் கம்பனியுமாகும்.

மத்திய பொறியியல் மதியுரைப் பணியகம் 2022 ஆம் ஆண்டில் 5.7 பில்லியன் பெறுமதியான மொத்தமாக பூரணப்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்களில் 5.3 பில்லியன் பெறுமதியான அரசாங்க கருத்திட்டங்களைப் பூர்த்திசெய்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 3.7 பில்லியன் பெறுமதியான மதியுரைக் கருத்திட்டங்களையும், ரூபா 20.6 பில்லியன் பெறுமதியான நிருமாணக் கருத்திட்டங்களையும் பணியகம் தற்போது மேற்கொண்டு வருகிறது.

அட்டவணை 8.23 | மத்திய பொறியியல் மதியுரைப் பணிப்பகத்தின் நிதி விளைவு

ரூபா.மில்

	2018	2019	2020	2021 (அ)	2022 (அ)
வருமானம்	**10,128**	**8,032**	**6,557**	**6,362**	**5,105**
நிர்மாணத் துறை	7,033	5,128	4,124	3,947	2,748
மாதியுரை	2,634	2,420	2,008	2,117	1,748
ஏனைய வருமானம்	157	170	162	122	228
நிதி வருமானம்	304	314	263	176	381
மொத்தச் செலவினம்	**9,602**	**7,691**	**6,296**	**6,314**	**5,036**
தொழிற்பாட்டுச் செலவினங்கள்	7,987	6,005	4,548	4,620	3441
ஊழியர் செலவு	1,602	1,682	1,743	1,689	1,591
நிதிச் செலவு	13	4	5	5	4
ஏனையவை	-	-	-		
வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)	**526**	**341**	**261**	**48**	**69**
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
கிடைக்கத்தவைகள்	**11,485**	**11,741**	**9,683**	**10,757**	**9,446**
கிடைக்கத்தக்கவைகள் - வங்கிப் படுகடனல்லாதவைகள்	**13,575**	**13,390**	**12,528**	**11,278**	**10,990**
முதலீடுகள்	**3,254**	**3,174**	**3,420**	**3,223**	**3,314**

மூலங்கள்: அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தபானம் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

மத்திய பொறியியல் மதியுரைப் பணியகத்தின் வருமானம் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 6.4 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 5.1 பில்லியனுக்கு 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் மத்திய பொறியியல் மதியுரைப் பணியகமானது, 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 43 சதவீத அதிகரிப்பொன்றுடன் ரூபா 69 மில்லியனினை இலாபமாகப் பதிவுசெய்துள்ளது. மத்திய பொறியியல் மதியரைப் பணியகத்தின் மொத்தமாக கிடைக்கப் பெறவேண்டியுள்ள தொகையும் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 9.4 பில்லியனாக காணப்பட்டது.

8.9.3 அரச அபிவிருத்தி மற்றும் நிருமாணக் கூட்டுத்தாபனம்

2022 ஆம் ஆண்டில் அரச அபிவிருத்தி மற்றும் நிருமாணக் கூட்டுத்தாபனம் 0.3 பில்லியன் பெறுமதியான அரச திட்டங்களைப் பூர்த்திசெய்துள்ளதோடு, ஆண்டின் இறுதியில் கையிருப்பிலுள்ள திட்டங்களின் பெறுமதி ரூபா 10.2 பில்லியனாக காணப்பட்டது. பூர்த்திசெய்யப்பட்டுள்ள திட்டங்களுக்கு மத்தியில் 71 மில்லியன் பெறுமதியான 14 கிராமியப் பாலங்களும் உள்ளடங்குகின்றன.

அட்டவணை 8.24 | அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தபானத்தின் நிதி விளைவு

ரூபா.மில்

	2018	2019	2020	2021 (அ)	2022 (அ)
வருமானம்	**3,082**	**4,318**	**1,782**	**4,483**	**2,730**
நிர்மாணத் துறை	2,878	4,192	1,449	4,216	2,546
மதியுரை	12	40	10	6	9
ஏனைய வருமானம்	192	86	323	261	176
செலவினம்	**3,064**	**5,432**	**2,039**	**4,386**	**2,704**
தொழிற்பாட்டுச் செலவினங்கள்	2,696	4,854	1,338	3,812	2,182
ஊழியர் செலவு	148	177	161	109	214
நிதிச் செலவு	145	224	209	259	122
ஏனைய வருமானம்	75	177	331	206	185
வரிக்கு முன்னரான இலாபம் / நட்டம்	**19**	**-844**	**-257**	**96**	**27**
வங்கிகளுக்காக வெளிநின்ற படுகடன்கள் - (ரூபா மில்)	**1,497**	**1,680**	**1,854**	**1,989**	**1,982**
கிடைக்கப்பெற வேண்டியவைகள் (ரூபா - மில்)	**437**	**559**	**333**	**557**	**578**

மூலங்கள் : அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தபானம் மற்றும் பொது தொழில்முயற்சிகள்
(அ) தற்காலிகமானது

அரச அபிவிருத்தி மற்றும் நிருமாணக் கூட்டுத்தாபனத்தின் மொத்த வருமானம், 2021 ஆம் ஆண்டில் ரூபா 4.5 பில்லியனாகக் காணப்பட்டதோடு, இது 2022 ஆம் ஆண்டில் ரூபா 2.7 பில்லியனுக்கு 39 சதவீத வீழ்ச்சியொன்றினைப் பதிவாக்கியுள்ளது. இதேவேளை, மொத்த செலவினமும் 2022 ஆம் ஆண்டில் இலாபமானது 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 96 மில்லியனிலிருந்து ரூபா 27 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்ததன் காரணமாக 2022 ஆம் ஆண்டில் பதிவாக்கிய 4.4 பில்லியனிலிருந்து 2.7 பில்லியனுக்கு 38 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அரசாங்கத்தின் நீண்ட கால ஒப்பந்தக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட தாமதம், அரச அபிவிருத்தி மற்றும் நிருமாணக் கூட்டுத்தாபனத்தின் பெறத்தக்கவைகளை ரூபா 578 மில்லியனுக்கு 4 சதவீதத்தினால் அதிகரிக்கச்செய்துள்ளது. கூட்டுத்தாபனத்தின் வங்கிகளுக்கான வெளிநின்ற படுகடன்கள் அரச அபிவிருத்தி மற்றும் நிருமாணக் கூட்டுத்தாபனத்தில் கடுமையான திரவத்தன்மைப் பிரச்சினைகளைத் தோற்றுவித்து, 2022 ஆம் ஆண்டில் ரூபா 1,982 மில்லியனுக்கு 7 மில்லியனினால் மாத்திரம் வீழ்ச்சியடைந்துள்ளது.

8.10 லொத்தர்கள்

இலங்கை லொத்தர் சந்தையானது, தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஆகியவற்றுக்கு இடையேயான சந்தைப் பங்குகளைப் பிரித்து, இருதலை மேலாதிக்க நிலை கொண்ட சந்தையாக வகைப்படுத்தப்பட்டு, இவை இரண்டும் அரசாங்கத்திற்கு முழுமையாக உடமையாக்கப்பட்ட கம்பனிகளாக காணப்படுகின்றன. தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை என்பன லொத்தர் சந்தையில் முக்கிய சந்தைப்படுத்துநர்களாக காணப்படுவதனால், 2022 ஆம் ஆண்டில் தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஆகியவை முறையே 51.8 சதவிகித, 48.2 சதவிகித சந்தைப் பங்கைக் கொண்டிருந்தன. தேசிய லொத்தர் சபையானது, 14 வகையான லொத்தர்களைக் கொண்டுள்ளதோடு (13 உடனடியற்ற மற்றும் 1 உடனடியான) அதே நேரத்தில் அபிவிருத்தி லொத்தர் சபையானது 10 வகையான லொத்தர்களைக் கொண்டுள்ளது (9 உடனடியற்ற மற்றும் 1 உடனடியான). இரண்டு நிறுவனங்களினதும் தாபனச் சட்டங்களுக்கு அமைவாக, தேசிய லொத்தர் சபை நேரடியாக திரட்டு நிதிக்கு பங்களிக்கிறது, அதே நேரத்தில் அபிவிருத்தி லொத்தரானது அதன் இலாபத்தை ஜனாதிபதி நிதியத்திற்கு வழங்குகி, அதன் ஒரு பகுதியினை மஹாபொல உயர் கல்வி அறக்கட்டளை நிதியத்திற்கும் வழங்குகிறது.

2022 ஆம் ஆண்டில் லொத்தர் விற்பனை மூலம் கிடைக்கப் பெற்ற மொத்த வருமானம் ரூபா 40.3 பில்லியனாக காணப்பட்டதோடு, இரண்டு நிறுவனங்களினாலும் பிரகடனப்படுத்தப்பட்ட பரிசில்களின் பெறுமதி ரூபா 20.6 பில்லியனாக காணப்பட்டது. சபைகளின் வருமானமும் 2022 ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து, திரட்டு நிதிக்கும் சனாதிபதி நிதியத்திற்கும் பங்களிப்புக்களை அதிகரிப்பதற்கும் இயலுமாக்கியுள்ளது.

2022 இல், இரு நிறுவனங்களும் அதிகரித்த அச்சிடல் செலவு, போக்குவரத்து மற்றும் மூலப்பொருட்கள் இல்லாமை போன்ற உயர் பணவீக்கத்துடன் தொடர்புடைய சவால்களை எதிர்கொண்டன, இந்த சவால்களுக்கு மத்தியில், இரு நிறுவனங்களும் டிஜிட்டல் தளங்களை நோக்கி நகர்ந்துள்ளன குறிப்பாக, குறுஞ்செய்தி சேவைகளை பயன்படுத்துகின்றன. மேலும், அபிவிருத்தி லொத்தர் சபையானது நிகழ்நிலையில் லொத்தர்களை விற்பனைசெய்வதற்காக மொபைல் அப்ளிகேசன் ஒன்றினையும் உருவாக்கியுள்ளது.

8.10.1 தேசிய லொத்தர் சபை

2022 ஆம் ஆண்டில் தேசிய லொத்தர் சபையானது லொத்தர் விற்பனை மூலம் ரூபா 21.2 பில்லியனினை வருமானமாக ஈட்டியுள்ளது. இது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22.6 சதவீத அதிகரிப்பாகும். பிரகடனப்படுத்தப்பட்ட பரிசில்கள் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 8.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் அது 2022 ஆம் ஆண்டில் 10.7 பில்லியனுக்கு 28.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, தேசிய லொத்தர் சபையானது 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய 1 பில்லியன் இலாபத்துடன் ஒப்பிடுகையில் அது 2022 ஆம் ஆண்டில் 1.4 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது. மீளாய்வு ஆண்டில் தேசிய லொத்தர் சபையானது திரட்டு நிதியத்திற்கு ரூபா 2.6 பில்லியனினை பங்களிப்புச் செய்துள்ளது. இதில் 47 சதவீதமான வருமானம் “மஹஜன சம்பத” என்ற லொத்தரினை விற்பனை செய்வதன் மூலம் திரட்டப்பட்டுள்ளது. தேசிய லொத்தர் சபையானது 58 அதிவிசேட பரிசு வெற்றியாளர்களை தேர்ந்தெடுத்து ரூபா 1.2 பில்லியனினை அவர்களுக்கு மத்தியில் பகிர்ந்தளித்துள்ளது.

அட்டவணை 8.25 | தேசிய லொத்தர் சபையின் நிதி விளைவுகள்

ரூபா.மில்

	2018	2019	2020	2021[a]	2022[a]
வருமானம்	**19,962**	**22,238**	**18,034**	**17,299**	**21,696**
லொத்தர் விற்பனை வருமானம்	20,438	22,079	18,041	17,292	21,209
நேர் வரிகளைக் கழிக்க - உற்பத்தி வரி	–	–	–	–	–
கழி நேரல்லா வரிகள் - பெ.சே.வ	890	911	430	409	641
ச.பா.அ	–	–	–	–	120
ஏனைய வரிகள்	414	1,070	423	416	1,248
செலவினம்	**18,924**	**20,397**	**16,599**	**16,295**	**20,306**
பிரதான முகவர்,விற்பனையாளர் தரகுக் கட்டணம்	3,826	4,278	3,607	3,458	4,315
பிரகடனப்படுத்தப்பட்ட பரிசில்கள்	9,835	10,608	8,668	8,352	10,741
டிக்கற் அச்சிடல் செலவுகள்	507	531	443	425	874
விநியோகம், விற்பனைகள், சந்தைப்படுத்தல்	1,534	1,508	893	1,074	921
நிருவாகச் செலவுகள்	752	809	773	812	840
நிதிச் செலவு	43	25	10	12	6
திரட்டு நிதியம் மற்றும் தேசிய சிறுநீரக நிதியததிற்கான பங்களிப்பு	2,427	2,638	2,205	2,162	2,609
வரிக்கு முன்னரான தேறிய இலாபம்	**1,038**	**1,841**	**1,435**	**1,004**	**1,390**
வருமான வரி	–	862	352	43	305
வரிக்குப் பின்னரான இலாபம் / நட்டம்	1,038	979	1,083	961	1,085
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
முகவர் வலையமைப்பு	3100	4279	3607	3257	3145
திரட்டு நிதிய பங்களிப்பு வருமான மூ இல்	**12**	**12**	**12**	**12**	**12**

மூலங்கள்: தேசிய லொத்தர் சபை

(அ) தற்காலிகமானது

தேசிய லொத்தர் சபையானது 2022 ஆம் ஆண்டின் இறுதியில் கிட்டத்தட்ட 19,500 இற்கும் மேற்பட்ட விற்பனையாளர்கள், 3,030 முகவர்கள் 3 குறுஞ் செய்தி விற்பனையாளர்களை உள்ளடக்கி, 115 விற்பனையாளர்களை உள்ளடக்கிய தேசிய மட்டத்தலான முகவர் வலையமைப்பொன்றுடன் இயங்கி வருகின்றது. அனைத்துப் பங்குதாரர்களும் செல்வத்தினை திரட்டுவதற்கான முக்கியமான மூலோபாயத்துடன் இணைந்த வகையில், சபையானது தனது சந்தைப் பிரிவுகளைத் தொடர்ந்து விரிவுபடுத்தி லொத்தர் துறையில் வலுவான தயாரிப்புப் பட்டியலினையும் உருவாக்கியுள்ளது.

8.10.2 அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி லொத்தர் சபையானது முன்னைய ஆண்டில் பதிவாக்கிய 19.1 பில்லியன் வருமானத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வு ஆண்டில் 24 சதவீத அதிகரிப்பொன்றினைப் பதிவாக்கி இருந்த இதேவேளை, 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 2.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 11.9 சதவீத அதிகரிப்பொன்றுடன் ரூபா 3.2 பில்லியனினை இலாபமாகப் பதிவாக்கியிருந்தது. தேறிய பரிசிக் கொடுப்பனவும் மீளாய்வு ஆண்டில் 9.9 பில்லியனாக காணப்பட்டதோடு, இது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20.4 சதவீத அதிகரிப்பாகவும் காணப்பட்டது. சபையானது 51 சுப்பர் ஜக்பொட் வெற்றியாளர்களையும் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மத்தியில் ரூபா 0.6 பில்லியனினையும் பகிர்ந்தளித்துள்ளது. அபிவிருத்தி லொத்தர் சபையானது மஹபொல புலமைப் பரிசில் அறக்கட்டளை நிதியத்தின் ஊடாக பல்கலைக்கழக மாணவர்களுக்கும் புலமைப் பரிசில்களையும் வழங்கி வருகின்றது. அவ்வாறே, நிதிக் கஷ்டங்களை எதிர்கொள்கின்ற நோயாளர்களுக்கும் அபிவிருத்தி லொத்தர் சபையானது அது உருவாக்குகின்ற நிதி மூலம் உதவிசெய்து, சுகாதாரத் துறைக்கும் ஒத்துழைப்பு வழங்குகிறது. அபிவிருத்தி லொத்தர் சபையானது ரூபா 3.2 பில்லியனினை சனாதிபதி நிதியத்திற்கு வழங்கியுள்ளது. 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புடன் இதனை ஒப்பிடுகையில் இது 12 சதவீத அதிகரிப்பாகும்.

2022 ஆம் ஆண்டின் இறுதியில் நாடளாவிய ரீதியில் 88 விநியோகஸ்தர்கள், 2,517 முகவர்கள் மற்றும் சுமார் 19,048 விற்பனை உதவியாளர்களைக் கொண்ட முகவர் வலையமைப்புடன் அபிவிருத்தி லொத்தர் சபை இயங்கிவருகிறது. மேலும், அபிவிருத்தி லொத்தர் சபையானது சந்தைப் பங்கை அதிகரிப்பதற்காக முக்கிய சந்தைகளுக்கான லொத்தர் கடைகள், லொத்தரகளை மாற்றியமைத்தல், பயன்படுத்தப்படாத சந்தைகளைக் கைப்பற்றுதல் மற்றும் செயலாற்றலற்ற விற்பனையாளர்கள் விகிதங்களைக் குறைத்தல் போன்ற பல உத்திகளை செயல்படுத்தியுள்ளது.

அட்டவணை 8.26 | அபிவிருத்தி லொத்தர் சபையின் நிதி விளைவுகள

ரூபா மில்.

	2018	2019	2020	2021(அ)	2022(அ)
வருமானம்	**16,422**	**17,606**	**15,522**	**15,816**	**19,839**
லொத்தர் விற்பனை வருமானம்	16,583	17,799	15,400	15,730	19,754
கழி: நேரில் வரிகள் - பெ.சே.வ	730	734	367	366	683
வேறு வருமானங்கள்	202	194	158	110	321
பதிவளிக்கப்பட்ட பரிசுகள்	367	347	331	342	447
செலவினம்	**13,687**	**14,709**	**12,528**	**12,863**	**16,572**
முகவர் தரகு கட்டணம்	2,899	3,428	2,884	2,947	2,946
பிரகடனப்படுத்தப்பட்ட பரிசுகள்	8,296	8,903	7,703	7,866	9,884
சீட்டிழுப்புச் செலவினம்	575	584	510	542	751
டிக்கற் அச்சிடற் செலவினம்	402	460	451	434	844
விநியோகம்,,விற்பனை, சந்தைப்படுத்தல்	1,051	792	473	537	1,542
நிருவாகச் செலவுகள்	464	542	507	537	605
வரிக்கு முன்னரான இலாபம் / நட்டம்	**2,735**	**2,897**	**2,994**	**2,953**	**3,267**
வருமான வரி	553	235	11	83	56
வரிக்கு பின்னரான இலாபம் / நட்டம்	**2,182**	**2,662**	**2,983**	**2,870**	**3,211**
சனாதிபதி நிதிய பங்களிப்பு,	**2,058**	**2,428**	**2,297**	**2,305**	**3,211**
முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகள்					
முகவர்மற்றும் விற்பனையாளர் பங்களிப்பு	2,900	3,000	2,810	2,946	2,605
சனாதிபதி நிதிய பங்களிப்பு, வருமான % இல்	12.73	14.00	17.90	18.20	16.80

மூலம்: அபிவிருத்தி லொத்தர் சபை

(அ) தற்காலிகமானது

8.11 கால்நடைகள் மற்றும் பண்ணை விலங்குகள்

இலங்கையின் விவசாயத் துறையில் கால்நடைகள் பன்முகப் பாத்திரங்களை வகிப்பதோடு, இது தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 1 சதவீததிற்கு வகைகூறியது. கால்நடைகளின் துணைப் பிரிவுகளுக்கு மத்தியில், சமூகப் பொருளாதார வளர்ச்சியில் பாற்பண்ணைத் துறையானது தேசிய முன்னுரிமையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இச் சூழலில், அரசுடமை நிறுவனங்களான, தேசிய கால்நடை அபிவிருத்தி சபை மற்றும் மில்கோ பிரைவெட் லிமிட்டெட் என்பன பாற் பொருட்கள் உட்பட கால்நடைப் பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

சமகால தரவுகளின்படி, இலங்கை நாடானது ஏறத்தாள 1,610 மெட்ரிக் தொன் பால் மற்றும் பாற் பொருட்களை ஏற்றுமதி செய்வதோடு, 88,482 மெட்ரிக் தொன் பால் மற்றும் பாற் பொருட்களை ரூபா 63.1 பில்லியன் செலவில் இறக்குமதி செய்கிறது. பால் மற்றும் பால் கிரீம், பால் கிரீம் கொழுப்பு, ஒடுக்கிய பால், பாலாடைக் கட்டி, தயிர், வெண்ணெய் மற்றும் பிற கொழுப்புகள், மோர் மற்றும் தயிர் பாலேடு மற்றும் மோர் மற்றும் மோர் தூள் ஆகியவை இறக்குமதி செய்யப்பட்ட பாற் பொருட்களில் அடங்கும். 2022 ஆம் ஆண்டு வரை இலங்கையின் பால் தேவையில் 48 வீதம் உள்நாட்டு உற்பத்தி மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் வருடாந்த பால் உற்பத்தி 1.3 சதவீதத்தினால் குறைந்துள்ளது. இலங்கை 2022 ஆம் ஆண்டில் சராசரியாக 419 மில்லியன் லீற்றர் பசும்பாலையும் 87 மில்லியன் லீற்றர் எருதுப் பாலையும் உற்பத்தி செய்துள்ளது. ஆண்டு முழுவதும் பால் மற்றும் பாற் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக ரூபா 68.3 மில்லியன் செலவிடப்படுகின்றது.

8.11.1 மில்கோ நிறுவனம்

உள்ளூர் பாற் பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தி, அதே வேளையில், தூய பால் உற்பத்தியில் வளர்ச்சியை அடையும் நோக்கில் இயங்குகின்ற, ஏக அரசுடமைத் தொழில்முயற்சி நிறுவனமாக மில்கோ காணப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில், மில்கோ நிறுவனம் நாட்டின் மொத்த பால் உற்பத்தியில் 19.7 சதவீதத்தை சேகரித்துள்ளது.

மீளாய்விற்கு உட்பட்ட ஆண்டில், மில்கோவின் பால் உற்பத்தி விற்பனை வருமானம் ரூபா 13.1 பில்லியனிலிருந்து ரூ. 12.4 பில்லியனுக்கு 5.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. பாற் பொருட்களின் விலைகளில் அதிகரிப்பு மற்றும் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 80 மில்லியனிலிருந்து ரூபா 216 மில்லியனுக்கு ஏனைய வருமானம் அதிகரித்தமை என்பன இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

மில்கோ நிறுவனத்தின் இலாபமீட்டும் தன்மைமயானது பால் சேகரிக்கும் நிலையங்களில் ஏற்பட்ட 29 சதவீத வீழ்ச்சியினைப் பிரதிபலித்து, 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 329 மில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 484 மில்லியன் நட்டமொன்றினை 230 சதவீதத்தினால் பதிவாக்கிய முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் வியக்கத்தக்க வகையில் வீழ்ச்சியடைந்துள்ளது. இது பங்கொன்றிறகான வருமானங்களை 2021 ஆம் ஆண்டில் ரூபா10.31 இலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா -15.14 இற்கு குறைவடையச் செய்து, கடந்த 3 வருடங்களில் மில்கோ நிறுவனத்தினால் பதிவாக்கப்பட்ட முன்னொரு போதும் பதியப்படாத நட்டமொன்றாக இது கருதப்படுகினறது. இது தொழிற்பாட்டு மூலதன நோக்கங்களுக்காக பெறப்பட்ட வங்கி மேலதிகப் பற்று வசதிகளினால் ஊந்தப்பட்டு, 444.8 சதவீதம் நிதிச் செலவினத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைப் பிரதிபலித்து, 2022 ஆம் ஆண்டில் ரூபா 1, 230 மில்லியனுக்கு வங்கிப் படுகடனில் குறிப்பிடத்தக்களவில் அதிகரிப்பினைக் காட்டியது.

மில்கோ நிறுவனம் 2022 ஆம் ஆண்டில் 2,060 மெட்ரிக் தொன் பால் மாவை உற்பத்தி செய்தது, இது நிறுவனத்தின் ஆற்றலை விட மிகக் குறைவாக உள்ளது, ஏனெனில் அம்பேவெல தொழிற்சாலையினால் 2022 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட அளவை விட 6 மடங்கு அதிகமாக உற்பத்தி செய்யும் ஆற்றலினை இது கொண்டுள்ளது.

அட்டவணை 8.27 | வரையறுக்கப்பட்ட மில்கோ கம்பனியின் நிதி விளைவு (ரூபா.மில்)

	2018	2019	2020(அ)	2021(அ)	2022(அ)
வருமானம்	**12,024**	**10,394**	**11,191**	**12,473**	**13,340**
பால்உற்பத்திகளின் விற்பனை	11,612	10,314	11,105	12,393	13,112
வேறு வருமானங்கள்	412	80	86	80	216
செலவினம்	**12,708**	**11,256**	**10,984**	**12,144**	**13,811**
நேரடிச் செலவுகள்	11,385	9,918	9,813	10,944	12,241
விற்பனை மற்றும் விநியோகம்	475	399	349	412	469
நிர்வாகம்	641	688	695	742	927
நிதிச் செலவு	189	196	120	29	158
ஏனைய செலவினங்கள்	18	55	7	17	16
வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)	**-683**	**-863**	**208**	**329**	**-471**
வங்கிகளுக்காக வெளிநின்ற படுகடன்கள்	1,659	1,289	753	35	1,230
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
பால் சேகரிப்பு (மில்.லீற்)	91	67	67	68	48
பங்கொன்றிற்கான வருவாய்கள்	-21.39	-27.01	6.51	10.31	-15.14

மூலம்: வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) கம்பனி

அ) தற்காலிகமானது

8.11.2 தேசிய கால்நடைகள் அபிவிருத்தி சபை

தேசிய கால்நடை அபிவிருத்தி சபையானது 1973 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதோடு, அதன் களப் பணிகளை 1974 ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. தரமான இனப்பெருக்கப் பொருட்கள், கால்நடைகள் மற்றும் விவசாய பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம் நாட்டு மக்களின் சமூக-பொருளாதார தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள இச் சபையானது 32 வகையான கால்நடைகள் மற்றும் தென்னை ஒருங்கிணைந்த பண்ணைகளை நிர்வகித்து வருவதோடு, திகனவில் அமைந்துள்ள பயிற்சி நிலையத்தின் மூலம் விவசாயிகளுக்கு கால்நடைகள் பற்றிய நடைமுறை மற்றும் தத்துவார்த்த அறிவையும் வழங்கி வருகிறது.

யோகர்ட்,வெண்ணெய் மற்றும் சீஸ் போன்ற பால் சார்ந்த பொருட்கள். மற்றும் பால், முட்டை, இறைச்சி பொருட்கள் போன்ற விலங்கு பொருட்களை விற்பனைசெய்கின்ற 16 பண்ணைகளை அடிப்படையாக கொண்ட விற்பனை நிலையங்கள் மற்றும் 41 தேசிய கால்நடை அபிவிருத்தி சபை பால் விற்பனை நிலையங்களின் வலையமைப்பொன்றுடன் சேர்ந்து காடைகள், வான்கோழிகள், வாத்துகள், கறிக்கோழிகள், வணிகக் கறிக்கோழிகள், பிராய்லர்கள், முயல்கள், செம்மறி ஆடுகள், ஆடுகள், பன்றிகள், எருமைகள், பசுக்கள், ஆகியவற்றின் தூய்மையான மற்றும் கலப்பின வளர்ப்பாளர்களைக் கொண்டு தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் பண்ணைகள் என்பனவற்றினைக் கொண்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, சபை தென்னை முக்கோணத்தில் அமைந்துள்ள 10 பண்ணைகள் உள்ளடங்கலாக 3,908 ஹெக்டேர் நிலப் பரப்பில் தேங்காய் சாகுபடி செய்துள்ளதோடு, 2022 ஆம் ஆண்டில் 17.68 மில்லியன் தேங்காய்கள் உற்பத்திசெய்யப்பட்டு உள்ளூர் நுகர்வோருக்கு தேங்காய் எண்ணெய்யாக மாற்றப்படுகிறது. ஸ்ரீ லங்கா போல்ரி டெவெலொப்மண்ட கம்பனி லிமிடெட், சபையின் துணை நிறுவனமாகும், அதே நேரத்தில் மஹவலி லிவ் ஸ்டொக் எண்டபிரைஸஸ்

லிமிடெட் சபையின் இணை நிறுவனமாக செயல்படுகிறது, அதன் கலைப்பும் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தேசிய பால் உற்பத்தியில் தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் ஒட்டுமொத்த பங்களிப்பு 2022 ஆம் ஆண்டின் இறுதியில் கிட்டத்தட்ட 1.5 சதவீதமாக காணப்பட்டதோடு, மொத்த ஆண்டு பால் உற்பத்தயும் 6.43 மில்லியன் லிட்டராகும்.

2022 ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டை விட சபை ஈட்டிய வருமானத்தில் 12.5 சதவீதம் அதிகரிப்பை பதிவு செய்திருந்தாலும், உற்பத்திச் செலவு அதிகரித்து, கால்நடைத் தீவனத்தில் ஏற்பட்ட விலை அதிகரிப்பு காரணமாக ரூபா 133 மில்லியனுக்கு வரிக்கு முன்னைய இலாபத்தில் சிறிது வீழ்ச்சியொன்றினைப் பதிவாக்கியிருந்தது.

வுஅட்டவணை 8.28 | தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் நிதி விளைவு ரூபா.மில்

	2018	2019 (அ)	2020 (அ)	2021(அ)	2022 (அ)
வருமானம்	**2,742**	**2,807**	**3,232**	**3,651**	**4,104**
செலவினம்	**3,331**	**3,170**	**3,329**	**3,560**	**4,471**
நேரடிச் செலவு	2254	2,099	2,231	2,451	3,219
நிர்வாகச் செலவு	843	983	1030	1046	1202
விநியோகச் செலவு	2	15	26	28	14
ஏனைய செலவு	52	18	16	18	24
நிதிச் செலவு	181	55	26	16	12
வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)	**-589**	**-362**	**-1.1**	**160**	**133**
வங்கிகளுக்காக வெளிநின்ற படுகடன்கள்	202	257	142	141	94
முக்கிய செயலாற்றுகை குறிகாட்டி					
தூய கால்நடை பால் லீற்.'000)	15,834	12,432	12,000	9,774	6,433
எருதுப்பால் லீற்.'000)	715	649	580	587	629
ஆட்டுப்பால் லீற்'000)	13.5	14.8	15	14	12
தயிர் உற்பத்தி லீற்.'000)	515	533	420	431	348
யோகட்.(80 மி.கி. கோப்பைகள் (எண்ணிக்கை) 000	415	350	410	644	591

மூலம்:தேசிய கால்நடைகள் அபிவிருத்தி சபை

(அ) தற்காலிகமானது

8.12 சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம்

8.12.1 லங்கா சதொச லிமிடெட்

லங்கா சதொச லிமிடெட் ஆனது 440 விற்பனை நிலையங்கள் மற்றும் 4,300 இற்கும் மேற்பட்ட ஊழியர்களுடன் செயற்படும, அத்தியாவசிய பொருட்களை நுகர்வோருக்கு மலிவு விலையில் விற்பனை செய்கின்ற அரசுடையான மிகப்பெரிய சில்லறை விற்பனை நிலைய வலையமைப்பு ஆகும். ஆயினும், சதொச நிறுவனம் சந்தைப் பங்கில் கிட்டத்தட்ட 5 சதவீதத்தைக் கொண்டிருந்த போதிலும், தனியார் துறை சூப்பர் மார்க்கெட் வலைப்பின்னல்களின் விரைவான விரிவாக்கம் சதொச நிறுவனத்தின் சந்தைப் பங்கின் வளர்ச்சியைக் குறைத்துள்ளது. எவ்வாறாயினும், நிறுவனம் தொடர்ந்து நட்டத்தைச் சந்தித்த போதிலும், 2022 ஆம் ஆண்டில், சதொச நிறுவனம் மேம்பட்ட நிதிச் செயலாற்றுகையினைக் கண்டுள்ளது.

நிறுவனத்தின் மொத்த இலாப விகிதம் முன்னைய ஆண்டில் 10.9 சதவீதமாக காணப்பட்ட போதிலும் 2022 ஆம் ஆண்டில் 11.7 சதவீத்திற்கு அதிகரித்துள்ளது. லங்கா சதொச நிறுவனத்தின் தொழிற்பாட்டு இலாபம் 2022 ஆம் ஆண்டில் ரூபா 432 மில்லியனாக காணப்பட்டதோடு, இதனை 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 182 சதவீத அதிகரிப்பொன்றினைப் பிரதிபலித்தது. 2021 ஆம் ஆண்டில் ரூபா 40.4 பில்லியன் வருமானத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 56.5 பில்லியனுக்கு வருமானம் 39.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது. இருப்பினும், அதிக வட்டி செலவுகள் காரணமாக, சதொச நிறுவனம் 2022 ஆம் ஆண்டில் 615 மில்லியன் நட்டமொன்றினைப் பதிவாக்கிய போதிலும், முன்னைய ஆண்டில் பதிவாக்கிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் இது 31 சதவீதம் வீழ்ச்சியாகும். 2014/15

ஆம் ஆண்டில் அரிசி இறக்குமதிக்காக திரட்டப்பட்ட நிதியினால் நிறுவனம் அதன் சொத்துக்கள் மீதான பொறுப்புகளை உயர்த்தியுள்ளது. எவ்வாறாயினும், சதொச நிறுவனத்தின் மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக, அரச வங்கிகளிலிருந்து சதொச நிறுவனத்தினால் பெறப்பட்டுள்ள ரூபா 11.47 பில்லியன் பெறுமதியான கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான பெறுப்பினை பொதுத் திறைசேரி பொறுப்பேற்றுள்ளது.

வரைபு 8.12 | விற்பனைகள் எதிர் இலாபம்/ நட்டம்



மூலம்: லங்கா சதோச (தனியார்) நிறுவனம்

அட்டவணை 8.29 | லங்கா சதோச நிறுவனத்தின் நிதி விளைவு

ரூபா.மில

	2018	2019	2020	2021(அ)	2022(அ)
வருமானம்	**30,070**	**26,242**	**36,799**	**41,458**	**57,354**
விற்பனைகள்	29,166	25,492	35,579	40,473	56,541
நேரடியல்லா வருமானம்	904	750	1,220	985	813
தொழிற்பர்டுச் செலவினங்கள்	**31,387**	**27,885**	**37,682**	**41,936**	**56,922**
விற்பனைச் செலவுகள்	25,518	22,263	31,806	36,217	49,920
ஏனைய செலவினங்கள்	5,869	5,622	5,876	5,719	7,002
தொழிற்பாட்டு இலாபம்ஃ நட்டம்	**-1,317**	**-1,643**	**-883**	**-478**	**432**
நிதிச் செலவுகள் (தேறிய)	933	1,339	503	403	1,046
வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)	**-2,250**	**-2,982**	**-1,386**	**-880**	**-615**
விற்பனை நிலையங்களின் எண்.	403	423	416	437	440

மூலம்: லங்கா சதொச (தனியார்) நிறுவனம்

அ) தற்காலிகமானது

8.13 பெருந்தோட்டத் துறை

இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்றுமதி மற்றும் குறிப்பாக வேலைவாய்ப்பை உருவாக்குவதில் பெருந்தோட்டத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. கடந்த பல தசாப்தங்களாக இத் துறை குறிப்பிடத்தக்களவில் மாற்றத்திற்கு உட்பட்டுள்ளதோடு, பெரும்பாலான தோட்டங்கள் இப்போது தனியார் உரிமையின் கீழ் இயங்குகின்றன. இருந்தபோதிலும், அரசுடமையின் கீழ் இயங்கும் பல தோட்டக் கம்பனிகளுடன் அரசுஇத்துறையில் தொடர்ந்து பங்களிப்புச் செய்கிறது.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் ஆகியவை முறையே 1958 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் அரச பெருந்தோட்டத் துறையின் பங்களிப்பை தேசியப் பொருளாதாரத்திற்கு வலுப்படுத்தும் வகையில் முழுமையான அரசுடமைக் கம்பனிகளாக நிறுவப்பட்டன. பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் ஒவ்வொன்றினதும் பொன்மயப் பங்குகள் ஒவ்வொன்றும் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டதோடு, தேசிய பொருளாதாரத்திற்கு அரச பெருந்தோட்டத்துறை பங்களிப்பை வலுப்படுத்தும் நோக்கில், மேற்குறித்த 23 பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளில், சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி, குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி மற்றும் எல்கடுவை பெருந்தோட்டக் கம்பனி மற்றும் கலுபோவிடியான தேயிலைத் தொழிற்சாலை கம்பனி என்பன அரசுடமையின் கீழ் காணப்படுகின்றன.

புத்தளம், குருநாகல் மற்றும் கம்பஹா மாவட்டங்களில் 5,733.23 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள 85 தென்னந் தோட்டங்களை சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி முகாமைசெய்வதோடு, இதில் 3,815.94 ஹெக்டேர் விளை நிலப் பரப்பானது மிருக வளர்ப்பிற்கு மேலதிகமாக, முக்கியமாக தென்னை மற்றும் ஊடுபயிர்களான மர முந்திரிகை, ரம்புட்டான், கறுவா, மிளகு மற்றும் ட்ரகன் பழம் போன்றவற்றில் முக்கியமாக கவனம் செலுத்துகிறது. குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியானது குருநாகல், கம்பஹா மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களிலுள்ள 07 தோட்டங்களை உள்ளடக்கிய 4,971.12 ஹெக்டேர் மொத்த நிலப்பரப்பை நிர்வகிக்கிறது. தெங்குச் செய்கை நிலப்பரப்பு 3,124.60 ஹெக்டேயராக காணப்படுவதோடு, அது பிரதான பயிராகவும், தேயிலை மற்றும் இறப்பர்

இரண்டாம் நிலை பயிர்களாகவும் மற்றும் மிளகு, கறுவா, மா மற்றும் ரம்புட்டான் போன்ற சிறு பயிர்களாகவும் காணப்படுகின்றன. சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி மற்றும் குருணாகல் பெருந்தோட்டக் கம்பனி என்பன முறையே ரூபா 514 மில்லியன் மற்றும் 511 மில்லியன் என வரிக்கு முன்னைய இலாபத்தினைப் பதிவுசெய்துள்ளதோடு, இரு கம்பனிகளும் முறையே ரூபா 975 மில்லியன் மற்றும் ரூபா 1,065 மில்லியன் என மொத்த வருமானத்தினை திரட்டியுள்ளன.

எல்கடுவை பெருந்தோட்டக் கம்பனியானது, மொத்தமாக 2,320 ஹெக்டேயர் நிலப் பரப்பளவுடன் 10 பெருந் தோட்டங்களை உள்ளடக்கியுள்ளதோடு, அதில் தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் சிறு பயிர்களான மா, கொக்கோ, ரம்புட்டான், மிளகு, கறுவா மற்றும் கிராம்பு என்பனவற்றினைப் பயிரிட்டுள்ளது. எல்கடுவை பெருந்தோட்டக் கம்பனி 2022 ஆம் ஆண்டில் ரூபா 553 மில்லியனினை அதன் வரிக்கு முன்னைய உயர் இலாபமாகப் பதிவுசெய்துள்ளது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 73.4 சதவீத அதிகரிப்பொன்றாகும். எவ்வாறாயினும், இரசாயன உரத் தட்டுப்பாட்டின் காரணமாக 2022 ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டை விடவும் மொத்த பச்சை இலை உற்பத்தி மற்றும் ஹெக்டேருக்கு (பச்சை இலை) அறுவடை எள்பன முறையே 16 சதவீதம் மற்றும் 15 சதவீதம் எனக் குறைவடைந்துள்ளது.

தேயிலை உற்பத்தி மூலம் களுபோவிடியான தேயிலைத் தொழிற்சாலை லிமிடெட்டின் வருமானமானது ரூபா 2,637 மில்லியனாக காணப்பட்டதோடு, இதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 153.3 சதவீதம் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஆகும், முதன்மையாக தயாரிக்கப்பட்ட தேயிலையின் நிகர விற்பனை சராசரியில் ஏற்பட்ட அதிகரிப்பே இதற்கு காரணமாக அமைந்தது. களுபோவிடியான தேயிலைத் தொழிற்சாலை நிறுவனமானது, முன்னைய ஆண்டில் ரூபா 2.76 மில்லியனினை நட்டமாக பதிவுசெய்திருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டில் ரூபா 380 மில்லியனினை இலாபமாகப் பதிவுசெய்துள்ளது.

மக்கள் தோட்ட அபிவிருத்திக் கூட்டுத்தாபனமானது 3572 ஹெக்டேயரில் 16 தேயிலைத் தோட்டங்களையும் 02 இறப்பர் தோட்டங்களையும் முகாமைசெய்வதோடு, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் 4,200 ஹெக்டேயர் நிலப்பரப்பில் 16 தேயிலைத் தோட்டங்களையும் 01 இறப்பர் தோட்டத்தினையும் நிருவகிக்கிறது. மக்கள் தோட்ட அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என்பனவற்றின் பிரதான பயிரான, தேயிலை உற்பத்தி முறையே 1,210 மெட்ரிக் தொன் மற்றும் 1,327 மெட்ரிக் தொன்களாக காணப்பட்டதோடு, அதே சமயம் ஒரு ஹெக்டேருக்கு தேயிலை அறுவடையும் முறையே 432 கிலோ கிராம் மற்றும் 545 கிலோ கிராம் எனக் கணப்பட்டது. மக்கள் தோட்ட அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் 2022 ஆம் ஆண்டில் ரூபா 18 மில்லியனினை நட்டமாகப் பதிவுசெய்துள்ளதோடு, இந் நட்டம் உழைக்கும் போக்கு கடந்த 5 ஆண்டுகளாக தொடருகிறது.. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமானது கடந்த 4 ஆண்டுகளாக அனுபவித்த நட்டம் உழைக்கும் போக்கை மாற்றியமைத்து ரூபா 14 மில்லியனினை இலாபமாகப் பதிவுசெய்துள்ளது.

அட்டவணை : 8.30 | அரசுடமை பெருந்தோட்டங்களின் நிதி நிலைமை

		2018	2019	2020	2021 (அ)	2022 (அ)
குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி	**தொழிற்பாட்டுச் செயலாற்றுகை**					
	தேங்காய் உற்பத்தி (மில்) தேங்காய்கள்)	13	16	11	15	15
	இறப்பர் உற்பத்தி (கி.கி)	113,085	107,280	107,088	91,545	95,572
	ஹெக்டயரொன்றுக்கான விளைச்சல் - தேங்காய் (காய்கள்)	4,018	5,212	3,284	5,142	5,163
	-இறப்பர் (கிகி)	652	677	655	561	626
	நிதிச் செயலாற்றுகை					
	மொத்த வருமானம் (ரூபா. மில்லியன்)	613	499	685	932	1,065
	தேங்காய் விற்பனைகள் (ரூபா மில்)	532	403	583	798	875
	இறப்பர் விற்பனைகள் (ரூபா மில்)	27	29	30	37	54
	மொத்த விற்பனைச் செலவுகள்	356	386	409	412	549
	வரிக்கு முன்னரான தேறிய இலாபம் / (நட்டம்)(ரூபா. மில்)	221	120	214	468	511
	பங்கிலாபம் (ரூபா)	50	15	50	75	-
சிலாபம் பெந்தாட்டக் கம்பனி	**தொழிற்பாட்டுச் செயலாற்றுகை**					
	தேங்காய் உற்பத்தி (மில்) தேங்காய்கள்)	8	15	12	15	15
	ஹெக்டயரொன்றுக்கான விளைச்சல் - தேங்காய் (காய்கள்)	2,823	5,025	3,854	4,454	4,499
	நிதிச் செயலாற்றுகை					
	மொத்த வருமானம் (ரூபா. மில்)	350	446	673	1,050	975
	தேங்காய் விற்பனைகள் (ரூபா மில்)	291	348	592	802	882
	விற்பனைச் செலவுகள்	350	356	398	521	521
	வரிக்கு முன்னரான தேறிய இலாபம்∴ (நட்டம்)(ரூபா. மில்)	-35	64	283	511	514
	பங்கிலாபங்கள்	-	10	50	80	-

எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி	**தொழிற்பாட்டுச் செயலாற்றுகை**					
	பச்சை இலைகள் (மெ.தொ)	3,144	2,530	2,519	2,108	1,768
	தேங்காய் உற்பத்தி (மில்) தேங்காய்கள்)	0.91	1.18	0.83	1.06	1.36
	இறப்பர் உற்பத்தி (கி.கி)	98,978	87,582	104,231	124,590	109,666
	ஹெக்டெயருக்கான விளைச்சல்	880	810	686	595	505
	- பச்சை இலை கி.கி					
	- தேங்காய் (காய்களின் எண்	3,204	4,128	2,900	3,695	4,768
	- இறப்பர் கி.கி	360	319	380	454	400
	நிதிச் செயலாற்றுகை					
	மொத்த வருமானம் (ரூபா. மில்)	333	260	311	324	425
	தேயிலை விற்பனைகள் (ரூபா.மில்)	273	200	321	209	285
	தேங்காய் விற்பனைகள் (ரூபா மில்)	32	28	39	52	62
	இறப்பர் விற்பனை (ரூபா.மில்)	26	23	31	54	65
	விற்ப.க்கான மொத்தச் செலவு (ரூ.மில்)	399	379	334	366	348
	வரிக்கு முன்னரான தேறிய இலாபம்/ (நட்டம்)	-34	-61	36	318	553
	திறைசேரி மானியங்கள் - மீண்டெழல்)	95	–	–	–	–
இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்	**தொழிற்பாட்டுச் செயலாற்றுகை**					
	ஹெக்டயரொன்றுக்கான விளைச்சல்	150	190	160	140	140
	சராசரி விலை ரூபா/கிகி	400	390	280	360	50
	நிதிச் செயலாற்றுகை					
	மொத்த வருமானம் (ரூபா. மில்லியன்)	119	100	109	139	154
	தேறிய மரமுந்திரிகை விற்பனை	100	83	109	139	154
	வரிக்கு முன்னரான தேறிய இலாபம்∴ (நட்டம்)	18	-30	-11	-20	2
	திறைசேரி மானியங்கள் - மீண்டெழல்)	50	60	60	65	78
	- மூலதனம்	55	70	85	64	29
மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை	**தொழிற்பாட்டுச் செயலாற்றுகை**					
	தேயிலை உற்பத்தி (மெ.தொ)	1,435	1,371	1,486	1,636	1,210
	இறப்பர் உற்பத்தி (மெ.தொ)	389	363	444	404	364
	ஹெக்.க்கான விளைச்சல் - தேயிலை (கி.கி.)	507	487	535	583	432
	- இறப்பர் (கி.கி.)	682	601	826	793	697
	நிதிச் செயலாற்றுகை					
	மொத்த வருமானம் (ரூபா. மில்)	896	878	1,134	1,480	1,895
	உற்பத்திச் செலவு (ரூபா.மில்.)	1,374	1,635	1,484	1,970	1,914
	வரிக்கு முன்னரான தேறிய இலாபம்∴ (நட்டம்)(ரூபா. மில்)	-477	-757	-350	-490	-18
	திறைசேரி மானியங்கள் - மீண்டெழல்)	425	468	0	30	0
இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்	**தொழிற்பாட்டுச் செயலாற்றுகை**					
	தேயிலை உற்பத்தி (மெ.தொ)	1,576	1,405	1,742	1,803	1,327
	இறப்பர் உற்பத்தி - (மெ.தொ)	33	28	29	19	15
	ஹெக்.க்கான விளைச்சல	546	478	601	634	545
	- தேயிலை(கி.கி.)					
	இறப்பர் (கி.கி.)	510	432	474	272	360
	நிதிச் செயலாற்றுகை					
	மொத்த வருமானம் (ரூபா. மில்)	598	536	767	845	966
	உற்பத்திச் செலவு (ரூபா.மில்.)	720	786	865	1,028	863
	வரிக்கு முன்னரான தேறிய இலாபம்∴ (நட்டம்)(ரூபா. மில்)	-147	-330	-149	-232	17
	திறைசேரி மானியங்கள் - மீண்டெழல்)	158	222	0	0	0
	– மூலதனம்	0	0	0	14	178
கலுபோவிட்டியானை தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி	**தொழிற்பாட்டுச் செயலாற்றுகை**					
	தயார்படுத்தபபட்ட தேயிலை உற்பத்தி	1,460	1,454	1,716	1,508	1,548
	விற்பனைத் தொகை (மெ.தொ)	1,501	1,401	1,704	1,512	1,539
	நிதிச் செயலாற்றுகை					
	மொத்த வருமானம் (ரூபா. மில்லியன்)	971	937	1,175	1,041	2,637
	உற்பத்திச் செலவு (ரூபா மில்)	931	907	1,141	1,036	2,375
	வரிக்கு முன்னரான தேறிய இலாபம்/ (நட்டம்)(ரூபா. மில்)	-53	43	-15	-3	380
லங்கா சீனிக் கம்பனி	**தொழிற்பாட்டுச் செயலாற்றுகை**					
	சீனி உற்பத்தி (மெ.தொ)	42,770	41,175	39,696	48,177	36,738
	ஸ்பிரிட் உற்பத்தி (000 லீற்றர்கள்)	9,787	5,212	8,819	13037	11,790
	நிதிச் செயலாற்றுகை					
	மொத்த வருமானம் (ரூபா. மில்லியன்)	6,243	7,546	8,978	12,313	19,314
	சீனி விற்பனை (ரூபா.மில்.)	3,149	5,458	3,882	5994	9,326
	ஸ்பிரிட் விற்பனை (ரூபா.மில்.)	3,094	2,065	4,739	6272	9,948
	வரிக்கு முன்னரான தேறிய இலாபம்/(நட்டம்) (ரூபா.மில்)	164	-1,297	951	1256	6,086

மூலங்கள்: அரசுடமை வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள்

அ) தற்காலிகமானது

8.14. சுகாதாரம்

8.14.1 அரச மருந்துக் கூட்டுத்தாபனம்

அரச மருந்துக் கூட்டுத்தாபனமானது 51 விநியோகஸ்தர்கள், 111 அங்காடி ஒசுசல விற்பனை நிலையங்கள் மற்றும் 52 ஒசுசல விற்பனை நிலையங்கள் ஊடாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மூலம் பூகோள ரீதியாக பரந்துள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்கு தர உத்தரவாதப்படுத்தப்பட்ட மருந்துகள் மற்றும் சுகாதாரப் பராமரிப்புப் பெருட்கள் என்பனவற்றின் கால மற்றும் தொடர்ச்சியான வழங்கலினை உறுதிப்படுத்தி மருந்து வழங்கல் பிரிவுக்காக மரபுமுறை மாறா அமைப்பில் 780 வகையான மருந்து வகைகளின் பிரதான வழங்குநராகவும் ஏக இறக்குமதியாளராகவும் தொழிற்படுகிறது.

2021 ஆம் ஆண்டு வரையான ஐந்து ஆண்டுகளில் சீராக கிட்டத்தட்ட 25 சதவிகித வருடாந்த கூட்டு வளர்ச்சி விகிதத்தினைக் கொண்டிருந்த அரச மருத்துவக் கூட்டுத்தாபனத்தின் வருமானம், 2022 ஆம் ஆண்டில் 15 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. சந்தையில் அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை காரணமாக ஏற்பட்ட இறக்குதிக் கட்டுப்பாடுகள் மற்றும் வரையறுக்கப்பட்ட அரசிறை இடைவெளி என்பன இந்த வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ளது.

அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் வருமானத்திற்கு, மருந்து வழங்கல் பிரிவு முக்கிய பங்களிப்பாளராக இருப்பதனால், 2022 ஆம் ஆண்டில் மொத்த வருமானத்தில் 80 சதவீத பங்களிப்பைப் பதிவு செய்துள்ளது. சுகாதார அமைச்சின் நிவாரண நடவடிக்கைகளின் காரணமாக 2021 ஆம் ஆண்டில் 580 மில்லியனாக காணப்பட்ட நிதிச் செலவினம் 2022 ஆம் ஆண்டில் 14 மில்லியனாகக் குறைந்து, அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் அடிமட்ட நிலைக்கு ஒத்துழைப்பு வழங்கியதன் காரணமாக ரூபா 1.2 பில்லியனினை வரிக்கு முன்னைய இலாபமாக பதிவாக்கியது. ஆயினும், 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய 3.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 61 சதவீத வீழ்ச்சியாக காணப்பட்டது.

2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், குறித்த ஆண்டுக்காக 3 சதவீதத்தில் சீரான வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்யதிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 51.6 பில்லியனுக்கு மருந்து வழங்கல் பிரிவிலிருந்து கிடைக்கத்தக்கவைகள் அதிகரித்ததன் விளைவாக, அரச மருந்துக் மருந்துக் கூட்டுத்தாபனம் திரவத்தன்மைப் பிரச்சினைளை எதிர் கொள்கிறது. மேம்படுத்தப்பட்ட முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் வர்ச்சியடைந்த பெறுகைச் செயற்பாடுகள் என்பன நிறுவனத்தின் நிதிச் செயலாற்றுகையினை மேம்படுத்துவதற்கு அவசியமானதாக அமையும்.

அட்டவணை 8.31 | அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள்

ரூபா மில

	2018	2019	2020	2021[a]	2022[a]
வருமானம்	**38,895**	**51,885**	**63,122**	**80,300**	**50,919**
மருந்து வழங்கல் பிரிவு	31,437	42,960	54,324	70,853	40,973
மருந்து உற்பத்திப் பிரவு	7,458	8,925	8,798	9,447	9,946
செலவினம்	**37,222**	**49,479**	**60,173**	**76,616**	**49,780**
தொழிற்பாடு	34,998	46,888	57,457	73,491	46,060
தொழிற்பாடு	1,532	1,620	1,754	1,967	2,057
வேறு	692	971	962	1,158	1,663
வேறு வருமானம்	**74**	**91**	**287**	**89**	**107**
தேறிய நிதி வருமானம்	**-62**	**-321**	**-690**	**-573**	**-6**
வரிக்கு முன்னரான இலாபம்/ நட்டம்	**1,685**	**2,176**	**2,546**	**3,199**	**1,239**
முக்கிய செலாற்றுகை குறிகாட்டிகள்					
பெறுகைகளின் எண்	7,901	7,773	7,269	5,336	3,741
ஒசுசல விற்பனை நிலையங்களின் எண்	40	45	45	50	52
விநியோகத்தர்களின் எண்	48	49	53	51	51
அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்களின் எண்	4	4	4	5	–
உரிமையளிக்கப்பட்ட ஒசுசலக்களின் எண்	102	103	104	94	111

மூலம்: அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம்
(அ) தற்காலிகமானது

8.14.2 அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனமானது ஐக்கிய அமெரிக்க மருந்தியல் புத்தகங்கள் மற்றும் பிரித்தானிய மருந்தியல் புத்தகங்கள் என்பனவற்றிலுள்ள சர்வதேச தர நிர்ணயங்களைப் பயன்படுத்தி 94 மருந்துப் பொருட்களுக்கான சூத்திரங்களை வடிவமைத்துள்ளது. அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் அதிக பட்ச வெளியீடு என்ற வகையில் 2022 ஆம் ஆண்டில் மெத்தமாக 3,302 மில்லியன் அலகுகள் மாத்திரகள் மற்றும் கப்ஸ்யூல்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனமானது பங்குதாரர் ஒப்பந்தங்கள் மூலம் ஐந்து கூட்டு நிறுவனங்களுடன் கூட்டு முயற்சி தயாரிப்புகளை வழங்குகிறது. நாட்டில் பலவீனமான அந்நியச் செலாவணி நிலையைக் கருத்தில் கொண்டு, 2022 ஆம் ஆண்டில் அரசு மருத்துவமனைகளிலுள்ள மருந்துத் தேவைகளின் பற்றாக்குறையைப் பூர்த்திசெய்யும் நோக்கில் அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் பிற உள்ளூர் உற்பத்தியாளர்கள் முக்கியப் பங்காற்றினர்.

அட்டவணை 8.32 | அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் ரூபா மில்.

விபரம்	2018	2019	2020	2021 (அ)	2022 (அ)
வருமானம்	**4,622**	**5,647**	**7,648**	**8,539**	**16,620**
மருந்து வழங்கல் பிரிவு	3,929	4,693	6,639	6,963	13,928
மருந்து உற்பத்திப் பிரிவு	24	6	7	94	108
வேறு	669	948	1,002	1,482	2,584
தொழிற்பாட்டு செலவு	**4,319**	**5,090**	**6,588**	**7,471**	**15,410**
விற்பனைச் செலவு	3,991	4,743	6,281	7,099	14,582
நிர்வாகம்	242	238	247	244	336
விற்பனை மற்றும் விநியோகம்	76	99	49	109	473
வேறு தொழிற்பாடு	10	10	11	19	19
வேறு வருமானம்	**6**	**7**	**7**	**14**	**18**
தேறிய நிதி வருமானம்	51	28	94	157	333
வரிக்கு முன்னரான இலாபம்(நட்டம்)	**360**	**592**	**1,161**	**1,239**	**1,561**
முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகள்					
தயாரிக்கப்பட்ட வில்லைகள் கப்யூல் அலகுகளின் எண் (மில்)	1,897	2,400	3,015	3,043	3,302

மூலம்:அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

ரூபாவின் நாணயப் பெறுமதி இறக்கம் காரணமாக மருந்துப் பொருட்கள் மற்றும் பிற மேந்தலைச் செலவுகள் கிட்டத்தட்ட 100 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இச் சூழ்நிலையில், சுகாதார அமைச்சு மாத்திரைகள்.'. காப்ஸ்யூல்களின் அலகு விலையை பல சந்தர்ப்பங்களில் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் மொத்த வருமானமும் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய 8.5 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 16.6 பில்லியனுக்கு 94 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மொத்த வருமானம் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 7 பில்லியனிலிருந்து ரூபா 13.9 பில்லியனுக்கு 2022 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளதோடு, இதற்கு மருந்து வழங்கல் பிரிவு 84 சதவீத பங்களிப்பினை வழங்கியுள்ளது.

மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம், 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 1.2 பில்லியன் இலாபத்துடன் ஒப்பிடுகையில் அது 2022 ஆம் ஆண்டில் 1.6 பில்லியனுக்கு அதிகரித்து 26 சதவீத அதிகரிப்பொன்றினைப் பதிவாக்கியது. அதற்கமைய, அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் ரூபா 100 மில்லியனினை அறவீடாக பொது திறைசேரிக்கு செலுத்தியுள்ளது.

அட்டவணை 8..33: ஏனைய அரசுடமைத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை

விபரம்	பிரதான செயற்பாடுகள்	செயலாற்றுகை	கரிசனை
காப்புறுதி			
இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம்	ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்றுமதிக் கடன் காப்புறுதி மற்றும் கடன் உத்தரவாதச் சேவைகளை வழங்குவதன் ஊடாக ஏற்றுமதித் துறைக்கு ஒத்துழைப்புச் சேவைகளை வழங்குதல்.	ஒட்டு மொத்த ஒழிற்பாட்டு வருமானம் 2021 இல் பதிவாக்கிய ரூபா 272.0 மில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 443.8 மில்லியனுக்கு 63.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன்னைய இலாபமானது ஆண்டின் போது அறிக்கையிடப்பட்ட அதி ஈட்டு முலதனப் பறிமாற்றம் காரணமாக குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 334.4 மில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 1,883.6 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது.	இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அதிக முன்னேற்பாட்டு அணுகுமுறைகளுடன் ஏற்றுமதி வருமானங்களை அதிகரிப்பதற்கான புதிய மூலோபாயங்கள் மீது கவனம் செலுத்த வேண்டும்.
விவசாய, கமத்தொழில் காப்புறுதிச் சபை	விவசாயக் காப்புறுதித் திட்டம், விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் மீனவர் என்பவற்றை நடைமுறைப்படுத்தல்	விவசாய காப்புறுதித் திட்டத்தில் தொழிற்பாட்டு இலாபம் அதிகரித்ததன் காரணமாக விவசாய, கமத்தொழில் காப்புறுதி சபையின் தேறிய மிகையானது 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 1,779.6 மில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 2,650.8 மில்லியனுக்கு 48.9 சதவீதுத்தினால் அதிகரித்துள்ளது.	காப்புறுதிப் பூட்கைகள் மற்றும் கொடுப்பனவுகள் என்பனவற்றில் காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் என்பனவற்றில் பொருத்தப்பாடின்மை காரணமாக தேசிய வரவு செலவுத் திட்டதில் அதிகம் சார்ந்திருத்தல்.
புதுப்பிக்கப்பட முடியாத வளங்கள்			
வ/ப இலங்கை கனிம மணல் கம்பனி	பாரமான கனிய மணல்களை அகழ்ந்து, தயார்படுத்தி சந்தைப்படுத்துதல் கனிய மணல்களைச் சுத்திகரித்து தயார்படுத்தும் போது கிடைக்கக் கூடிய பக்க விளைவுப் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்தல்.	இலங்கை கனிம மணல் கம்பனியின் வருமானம் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 2,720 மில்லியன் வருமானத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 7,563 மில்லியனுக்கு 178 சதவீத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக வரிக்கு முன்னைய இலாபமும் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 1,387 மில்லியனிலிருந்கு 2022 ஆம் ஆண்டில் ரூபா 6,160 மில்லியனுக்கு பாரியளவில் அதிகரித்துள்ளது.	மூலப் பொருட்களை ஏற்றுமதி செய்தாலும், நாட்டிற்கு அதிகளவில் பிரதிபலன்கள் மற்றும் அந்நியச் செலாவணியைக் கொண்டுவரும் வகையில் வெளிநாட்டுச் சந்தையின் தேவைக்கு ஏற்ப பெறுமதியினை அதிகரிப்பதற்கான புதிய வழிகளை இலங்கை கனிம மணல் கம்பனி ஆராய வேண்டும்.
கஹட்டகஹ கிர/ பைட் லங்கா லிமிடட்	கைத்தொழில் மூலப் பொருள் என்ற கையில் கிர/பைட்டை அகழ்தல், தயார்படுத்தல மற்றும் விற்பனை செய்தல்	நாணயப் பெறுமதியிறக்கம் காரணமாக கஹட்டகஹ கிர.∴ பைட் லங்கா லிமிடெட் நிறுவனத்தின் வருமானம் முன்னைய ஆண்டில் பதிவாக்கிய ரூபா 123 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022/23 ஆம் ஆண்டில் 182 மில்லியனுக்கு 48 சதவீதத்தினால் பாரியளவில் அதிகரித்துள்ளது. இதன் கஹட்டகஹ கிர.∴பைட் லங்கா லிமிடட் நிறுவனத்தின் இலாபம் 2021/22 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 8 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வு ஆண்டில் ரூபா 70 மில்லியனுக்கு பாரியளவில் அதிகரித்துள்ளது.	நாட்டுக்கு அந்நியச் செலாவணியை பெற்றுக் கொள்வற்காக கஹட்டகஹ கிர.∴பைட் லங்கா லிமிடெட் நிறுவனம் பெறுமதி சேர்கை கருத்திட்டங்களில் அதிகம் கவனம் செலுத்துதல் வேண்டும்.
லங்கா பொஸ்பேட் லிமிடெட்	தேயிலை, இறப்பர், தென்னை போன்ற நீண்ட கால விவசாயப் பயிர்களுக்கான உரமாகப் பயன்படுத்தப்படும் பொஸ்பேட் பாறைகளை அகழ்வு செய்து, தயார்படுத்தி விற்பனை செய்தல்.	லங்கா பொஸ்பேட் லிமிடெட் நிறுவனத்தின் இலாபம் 2021/2022 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 741 மில்லியனிலிருந்து 2022/23 ஆம் ஆண்டில் ரூபா 546 மில்லியனுக்கு குறைவடைந்துள்ளது. இதன் விளைவாக, நிறுவனத்தின் இலாபம் மீளாய்வுக் காலத்தில் ரூபா 74 மில்லியனுக்கு 52 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.	இயற்கை வளப் பயன்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் லங்கா பொஸ்பேட் நிறுவனம் புதிய தயாரிப்பு மேம்பாட்டிற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வது அவசியமாகும்.

அட்டவணை 8..33: ஏனைய அரசுடமைத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை

விபரம்	பிரதான செயற்பாடுகள்	செயலாற்றுகை	கரிசனை
இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தபானம்	ரூபவாஹினி, நேத்ரா ரீவி, ஐ அலைவரிசை ஆகிய மூன்று அலைவரிசைகளின் ஊடாக தகவல், கல்வி மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து ஒளி - ஒலி பரப்புதல்	2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 1,320 மில்லியனுக்கு வருமானம் 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. விநியோகச் லெவினம் 2022 ஆம் ஆண்டில் ரூபா 69 மில்லியனுக்கு 45 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 227 மில்லியன் தேறிய நட்டமானது 2022 ஆம் ஆண்டில் ரூபா 541 மில்லியனுக்கு 138 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. கூட்டுத்தாபனத்தின் மீண்டெழும் செலவினங்களை ஈடுசெய்வதற்காக பொதுத் திறைசேரியானது கூட்டுத்தாபனத்திற்கு 2022 ஆம் ஆண்டில் ரூபா 25 மில்லியனினை வரவுசெலவுத் திட்ட ஒத்துழைப்பாக வழங்கியுள்ளது. 2021 ஆம் ஆண்டில் ரூபா 362 மில்லியன் மீண்டெழும் செலவினங்களுக்காக வழங்கப்பட்டுள்ளது.	இலங்கை ரூப்பவாஹினிக் கூட்டுத்தாபனம் தனது நிகழ்சித் திட்டங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கும், அதன் ஒளி-ஒலிபரப்பு வீச்சு எல்லையினை விரிவுபடுத்துவதற்கும் அதன் தரப்படுத்தல்களை மேம்படுத்துவதற்குமான மூலோபாயங்களை பின்பற்றுதல் வேண்டும். இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் தனது வணிகத் திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட மூலோபாயங்களை குறைந்தபட்சம் சரிசமமான புள்ளியை அடைவதற்காவது வினைத்திறனுடன் செயல்படுத்த வேண்டும்.
இலங்கை ஒலிபரப்பரப்புக் கூட்டுத்தாபனம்	இலங்கையிலுள்ள மிகப் பழைய வானொலி நிலையம் என்ற வகையில், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமானது, முன்னோடி வானொலி ஒலிபரப்பரப்பு வலையமைப்பு என்ற வகையில் தனது சேவைகளை வழங்குவதற்காக 06 தேசிய அலைவரிசைகளினூடாகவும், (சிங்கள தேசிய சேவை, தமிழ் தேசிய சேவை, வர்த்தக சேவை சிடி எப் எம் தென்றல் சேவைகள் ஆங்கில சேவை) 06 பிராந்திய அலை வரிசைகள் ஊடாகவும் (ரஜ ரட எப்எம், றுஹுண எப்எம், கந்துரட்ட எப்எம், பெய்ரி எப்எம், யாழ் எப்எம் வயம்ப சேவைகள்) 01 சமுதாய வானொலி அலைவரிசை (தம்பஹன) ஒலிபரப்பரப்புச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது	முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் வருமானம் ரூபா 1,046 மில்லியனக்கு 7.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதோடு நிருவாகச் செலவினங்கள் ரூபா 3,545 மில்லியனுக்கு 6.2 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமானது 2011 ஆம் ஆண்டில் பதிவாக்கிய 11 மில்லியன் இலாபத்துடன் ஒப்பிடுகையில் அது 2022 ஆம் ஆண்டில் ரூபா 236 மில்லியனினை தேறிய நட்டமொன்றாகப் பதிவுசெய்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் ரூபா 40 மில்லியன் பொது திறைசேரியினால் வரவுசெலவுத் திட்ட ஒத்துழைப்பு என்ற வகையில் வழங்கப்பட்டுள்ளது.2021 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் மீண்டெழும் செலவினங்களை ஈடுசெய்வதற்காக ரூபா 497.8 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.	இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது நிகழ்சித் திட்டங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கும், அதன் ஒலிபரப்பு வீச்சு எல்லையினை விரிவுபடுத்துவதற்கும் அதன் தரப்படுத்தல்களை மேம்படுத்துவதற்குமான மூலோபாயங்களை பின்பற்றுதல் வேண்டும். கூட்டுத்தாபனம் தனது வணிகத் திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட மூலோபாயங்களை குறைந்தபட்சம் சரிசமமான புள்ளியை அடைவதற்காவது வினைத்திறனுடன் செயல்படுத்த வேண்டும்.

அட்டவணை 8..33: ஏனைய அரசுடமைத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை

விபரம்	பிரதான செயற்பாடுகள்	செயலாற்றுகை	கரிசனை
சந்தைப்படுத்தல் மற்றும் வநியோகம்			
இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை	இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபையானது உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு பரிசு மற்றும் நினைவுப் பொருட்களை தயாரிப்பதன் மூலம் பாரம்பரிய கைவினைத் தொழிலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், இலங்கை கைவினைஞர்களின் பாரம்பரிய திறன்களைப் பாதுகாத்து மேம்படுத்துவதன் மூலம் கைவினைப் பொருட்களின் உற்பத்தி சந்தை வலையமைப்பை விரிவுபடுத்த முயற்சிக்கிறது. தற்போது, 11 கிளைகள் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டு, வர்த்தகப் பரிசுகள் மற்றும் நினைவு சின்னங்களை விற்பனை செய்கின்றன.	2022 இல் நாட்டில் சமூக-அரசியல் அமைதியின்மை நிலவிய போதிலும், இலங்கை கைப்பணிப் பொருட்கள் தனது வருமானத் துறையைப் பாதுகாக்க முடிந்தது. சபையானது 2022 ஆம் ஆண்டில் ரூபா 288 மில்லியனை வருமானமாகப் பதிவுசெய்துள்ளது. இதனை முன்னைய ஆண்டில் பதிவாக்கிய ரூபா 124 மில்லியனுடன் ஒப்பிடுகையில் அது 132 சதவீத வளர்ச்சியாக காணப்பட்டது. ஆயினும், சபையானது, பணவீக்க அழுத்தம் காரணமாக கடந்த ஆண்டின் ரூபா 35 மில்லியன் இழப்பிலிருந்து 51 சதவீத அதிகரிப்பொன்றுடன் ரூபா 53 மில்லியனை நட்டமொன்றாகப் பதிவுசெய்தள்ளது.	வெளிநாட்டு வாடிக்கையாளர்களை மையப்படுத்தி நாடளாவிய ரீதியிலுள்ள சுற்றுலாத் தளங்களில் அதன் விற்பனை நிலையங்களை விரிவுபடுத்துவதன் மூலம் அதன் புவியியல் மையங்களை விரிவுபடுத்த சபை திட்டமிடல் வேண்டும். இதேபோல், டிஜிட்டல் தளத்தை நோக்கிய தெளிவான நகர்வு மற்றும் இ-வர்த்தகம், சமூக ஊடகங்கள் ஊடாக சந்தைப்படுத்தல் மூலம் டிஜிட்டல் திறன்களை மேம்படுத்தி, சபையின் நிகழ்நிலைப் பிரசன்னத்தினை விரிவுபடுத்துதல் என்பன காலத்தின் தேவை என்பதைக் கருத்திற் கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.
அரசாங்க மரக் கூட்டுத்தபானம்	பலகை அறுத்து கொள்வனவு செய்து அவற்றைப் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளாக மாற்றுதல் மரக் கட்டைகள், கிழிக்கப்பட்ட பலகைகள் மற்றும் முடிவுப் பொருட்கள் மீள்காடாக்கம்	2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 5,696 மில்லயன் வருமானத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் வருமானம் 4,743 மில்லியனுக்கு 16 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும் தேறிய இலாபமும் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 1,136 மில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 315 மில்லியனுக்கு 72 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.	நிறுவனத்தின் நிலைபேற்றுத்தன்மைணை உறுதி செய்வதற்குத் தேவையான தொழில்நுட்பத்தினை உட்செலுத்துவதன் மூலம் போட்டித் தன்மையின் பிரதிபலன்களை அடையப்பெறுவதற்கு கூட்டுத்தாபனம் கவனம் செலுத்துதல் வேண்டும். திறன்மிக்க தொழிலாளர்களின் ஒழுங்குமுறையான பயிற்சி முறையானது, மாறிவரும் சந்தை முறைகளுக்கு (எ.கா. மரப் பொருட்களை) அமைவான தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கான கூட்டுத்தாபனத்தின் முக்கிய காரணியாகும்.
அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகக் கம்பனி	சில்லறை விற்பனை, இரசாயனங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள், அலுவலகப் பொருட்கள், கட்டுமானப் பொருட்கள், விவசாயப் பொருட்கள், மோட்டார் சைக்கிள்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் வாகன டயர் மற்றும் வீட்டு உபகரணங்கள் முதல் தொழில்துறை இயந்திர பொருட்கள் வரையிலான சேவைகள் போன்ற பல்வேறு தயாரிப்புகளை வழங்குவதில் ளுவுஊ ஈடுபட்டுள்ளது.	**அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின்** தேறிய இலாபம் 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 60 மில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து ரூபா 473 மில்லியனாக காணப்பட்டது. மேலும், இரசாயனம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் மற்றும் அத்தியாவசிய உணவுகள் விற்பனையில் 2022 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.	தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப அதன் தயாரிப்பு வீச்சினை மேம்படுத்தி, கம்பனி தனது வணிக மேம்பாட்டு உத்திகளைத் தொடர வேண்டும
அரசாங்க அச்சகக் கூட்டுத்தபானம்	அரசாங்க அச்சக கூட்டுத்தாபனம் முதன்மையாக பாடசாலை பாட புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள் மற்றும் லொத்தர் சீட்டுகளை அச்சிடும் பணியில் ஈடுபட்டுள்ளது.	வருமானமானது 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 1,633 மில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 825 மில்லியனுக்கு 49 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும் தேறிய நட்டமானது 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 281 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 380 மில்லியனுக்கு 35 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.	வணிகத்தைத் தொடர்ந்தும் தக்கவைக்கும் வகையில் அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனமானது அதன் வணிகச் செயல்முறையை மறுசீரமைக்க வேண்டும்.

அட்டவணை 8..33: ஏனைய அரசுடமைத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை

விபரம்	பிரதான செயற்பாடுகள்	செயலாற்றுகை	கரிசனை
ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா லிமிடெட	ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா லிமிடெட் நிறுவனமானது விருந்தோம்பல் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது.	பிரதானமாக சுற்றுளாத் துறையில் ஏற்பட்ட மேம்பாடு காரணமாக முன்னைய ஆண்டுக்கான ரூபா 976 மில்லியன் நட்டங்களுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 633 மில்லியனை நட்டமொன்றாகப் பதிவுசெய்துள்ளது.	செலந்திவா இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட் உடனான மறுசீரமைப்பு செயல்முறை நிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், அமைச்சரவை தீர்மான அறிவுறுத்தல்களுக்கு அமைய ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா லிமிடெட் ஆனது பரந்தளவிலான அரசுடமைத் தொழில்முயற்சிகளை மறுசீரமைக்கும் திட்டத்தின் கீழ் உள்ளது.
கடற்றொழிற் துறை			
இலங்கை கடற்தொழில் துறைமுகக் கூட்டுத்தபானம்	நாடு முழுவதிலும் பரந்துபட்டுள்ள துறைமுகங்களின் ஊடாக மீன்பிடிச் சமுதாயங்களுக்கு மீன்பிடித் துறைமுகங்கள் சார்ந்த சேவைகளையும் துணை உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்குதல்	வருமானம் மற்றும் ஏனைய வருமானங்கள் என்பன முறையே 395 சதவீதம் மற்றும் 88 சதவீதம் என அதிகரித்ததன் விளைவாக, 2021 ஆம் ஆண்டில் கணக்குக் கூறிய ரூபா 136.22 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 37.5 மில்லியனினை நட்டமொன்றாக இலங்கை கடற்தொழில் துறைமுகக் கூட்டுத்தாபனம் பதிவுசெய்துள்ளது.	மீன்பிடி துறைமுகங்களிலுள்ள வளங்களை உச்ச முறையில் பயன்படுத்தி, மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான தற்போதைய பங்களிப்பை அதிகரிக்க வேண்டும்.
இலங்கைப் கடற்தொழில் கூட்டுத்தபானம்	சந்தையில் மீனின் விலையை உறுதியாக வைத்திருக்கும் நோக்கில் இலங்கை கடற்தொழில் உற்பத்திக் கூட்டுத்தாபனம் மீனவர்களிடமிருந்து மீன்களைக் கொள்வனவு செய்து சந்தைக்கு விற்பனை செய்கின்றது	மீளாய்வு ஆண்டில் மீன் விற்பனை வருமானம் 42 சதவீத்தினால் அதிகரித்ததன் காரணமாக முன்னைய ஆண்டில் பதிவாக்கிய ரூபா 64 மில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 42 மில்லியன் நட்டமொன்றினைப் பதிவாகியுள்ளது.	இலங்கை கடற்தொழில் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வணிக நிலைபேற்றுத் தன்மையினைப் பாதுகாப்பதற்காக, கொள்வனவு, சந்தைப்படுத்துதல், தொழிற்பாட்டு மூலதன முகாமை, உளளக் கட்டுப்பாட்டு முறையை வலுப்படுத்துதல் உள்ளடங்கலாக துறைகளில் முழு வர்த்தகத்தினையும் மீள்கட்டமைப்பது அவசியமாகும்
உரம்			
கொழும்பு கொமர்சல் பெர்டிலைசர்ஸ் லிமிடட்	நெல், தேயிலை, தென்னை, இறப்பர் மற்றும் பிற பயிர்களுக்குத் தேவையான உரங்களை இறக்குமதி செய்தல், கலப்படம் செய்தல் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றில் கொழும்பு கொமர்சல் பெர்டிலைசர்ஸ் லிமிடட் முதன்மையாக ஈடுபட்டுள்ளது.	இறக்குமதி கட்டுப்பாடுகள் ஊடாக உருவாக்கப்பட்ட உரப் பற்றாக்குறையின் விளைவாக 2020/21 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 1,541 மில்லியன் வருமானமானது, 2021/22 ஆம் ஆண்டில் ரூபா 770 மில்லியனுக்கு 50 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அவ்வாறே, வருமானமும் 2021/21 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 314 மில்லியனிலிருந்து 2021/22 ஆம் ஆண்டில் ரூபா 161 மில்லியனுக்கு 25.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.	நாட்டின் உணவுப் பாதுகாப்பைப் பேணுவதற்கு முக்கியமான விவசாய உற்பத்தித் திறனைப் பேணுவதற்கு இரண்டு நிறுவனங்களும் முக்கியப் பங்காற்றுகின்றன. சரியான விநியோகச் சங்கிலி மேலாண்மை உத்திகளுடன் சந்தை தேவையைப் பூர்த்தி செய்ய இதுபோன்ற கூட்டு அணுகுமுறை தேவைப்படுகிறது.
சிலோன் உரக் கம்பனி லிமிடெட்	இரண்டு அரசுடமை நிறுவனங்களில், சிலோன் உரக் கம்பனியானது நிறுவனம், நாட்டில் உர இறக்குமதி, கலவைப்படுத்தல், பொதியிடல் மற்றும் விநியோகம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள மிகப்பெரிய அமைப்பாகக் கருதப்படுகிறது.	பிரதானமாக குறைந்தளவிலான உர விநியோகம் காரணமாக 2020/21 இல் பதிவாக்கிய ரூபா 2,258 மில்லியனிலிருந்து வருமானமானது, 2021/22 ஆம் ஆண்டில் ரூபா 1,210 மில்லியனுக்கு 46.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அவ்வாறே, நிறுவனத்தின் தேறிய இலாபமும் 2020/21 இல் பதிவாக்கிய ரூபா 124 மில்லியனிலிருந்து 2021/22 ஆம் ஆண்டில் 0.5 மில்லியனுக்கு 99.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ள	

மூலம்: அரசுடமைத் தொழில்முயற்சிகள், பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

பின்னிணைப்பு 8.1 | அரசுடமை வியாபாரத் தொழில்முயற்சிகளின் இலாபமீட்டும் தன்மை (ரூபா.மில்ல்)

	தொழில்முயற்சி	வரிக்கு முன்னதான இலாபம் / நட்டம் 2020*	2021(ஆ)	2022(ஆ)	வியாபாரப் புரள்வு 2022(ஆ)	வரவுசெலவுத்திட்ட ஒத்துழைப்பு மீண்டெழும்	- 2022 மூலதனம்
1	இலங்கை வங்கி	23,552	43,190	30,977	513,149	–	–
2	மக்கள் வங்கி	21,227	30,387	21,338	357,229	–	–
3	தேசிய சேமிப்பு வங்கி	15,645	28,555	4,510	174,638	–	–
4	அரச ஈட்டு, முதலீட்டு வங்கி	572	405	-48	7,520	–	–
5	எச்.டீ.எப்.சீ. வங்கி	1,068	878	377	8,856	–	–
6	பிரதேச அபிவிருத்தி வங்கி	1,013	776	1,823	35,918	–	–
7	ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை	32,345	33,159	43,428	46,122	–	–
8	இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம்	7,972	11,725	12,476	63,685	–	–
9	தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்	8,866	5,936	8,010	25,109	–	–
10	இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம்	265	334	1,884	444	–	–
11	விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை	1,257	1,780	2,651	3,720	4,158	–
12	இலங்கை மின்சார சபை	-60,486	-34,139	-261,869	308,457	–	90,800**
13	இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம்	2,371	-81,816	-615,053	1,148,801	–	–
14	இலங்கை துறைமுக அதிகாரசபை	20,328	25,601	57,026	68,408	–	–
15	தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை	509	-3,054	-3,064	35,464	–	20,000**
16	விமான நிலையங்கள், விமானப் போக்குவரத்துச் சேவைகள் கம்பனி	-3,733	-755	6,434	26,007	–	–
17	ஸ்ரீ லங்கன் எயாரலைன்ஸ் லிமிடெட்(அ)	-45,230	-166,370	-72,177	347,091	–	–
18	இலங்கை போக்குவரத்துச் சபை	-2,105	-3,054	484	58,269	8,800	642
19	அரசு பொறியியல் கூட்டுத்தபானம்	-1,252	-1,597	-940	2,668	466	–
20	மத்திய பொறியியல் ஆலோசனைச்சேவைப் பணியகம்	261	48	69	4,496	–	–
21	அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தபானம்	-257	96	27	2,555	–	–
22	மில்கோ (பிரைவெட்) லிமிடட்	208	329	-471	13,112	–	–
23	தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை	-1	160	133	4,104	–	–
24	இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தபானம்	-149	-232	17	966	–	–
25	மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை	-350	-490	-18	1,895	–	–
26	குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி	214	468	511	1,065	–	–
27	சிலோ பிளான்டேஷன்ஸ் லிமிடட்	283	511	514	975	–	–
28	கலுபோவிட்டியானை தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி*	-15	-3	380	2,637	–	–
29	இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தபானம்	-11	-20	2	154	78	29
30	இலங்கை கனிம மணல் கம்பனி	69	1,387	6,160	7,563	–	–
31	இலங்கை பொஸ்பேட் கம்பனி(அ)	150	117	74	546	–	–
32	கஹட்டகஹ கிர/பைட் லங்கா லிமிடட்*	14	8	70	182	–	–
33	அபிவிருத்தி லொத்தர் சபை	2,994	2,953	3,267	19,071	–	–
34	தேசிய லொத்தர் சபை	1,435	1,004	1,390	20,448	–	–
35	அரசு மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தபானம்	1,161	1,239	1,586	16,620	–	–
36	இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தபானம்	9	-14	14	936	–	–
37	அரசு மருந்துப்பொருட் கூட்டுத்தபானம்	2,546	3,157	1,240	50,919	–	–
38	ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை	174	-258	-2,033	3,332	2,280	45
39	சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு	-251	-344	-370	1,536	–	–
40	இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தபானம்	-236	-227	-541	1,320	25	–
41	இலங்கை ஒலிபரப்பரப்புக் கூட்டுத்தபானம்	-2	11	-236	1,046	40	–
42	இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை	-106	-35	-53	288	–	–
43	அரசாங்க மரக் கூட்டுத்தபானம்	464	1,136	315	4,743	–	–
44	அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகக் கம்பனி(அ)*	-120	60	473	8,750	–	–
45	லங்கா சதொச நிறுவனம்	-1,386	-880	-615	56,541	–	–
46	அரசாங்க அச்சகக் கூட்டுத்தபானம்	-44	-281	-380	825	–	–
47	இலங்கைப் கடற்தொழில் கூட்டுத்தபானம்	-48	-64	-42	4804	–	–
48	இலங்கை கடற்தொழில் துறைமுகக் கூட்டுத்தபானம்	-236	-136	-38	494	501	46
49	சிலோன் பெரடிலைசர் கம்பனி லிமிடெட்(அ)*	188	0.5	115	413	–	–
50	கொழும்பு கொமர்ஷல்/பெர்டிலைசர் கம்பனி(அ)*	314	234	61	42.8	–	–
51	ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா பீஎல்சீ	-877	-976	-633	2,887	–	–
52	லங்கா சீனிக் கம்பனி	951	1,256	6,086	19,314	–	–
	மொத்தம்	**31,530**	**-97,845**	**-744,658**	**3,486,135**	**16,347**	**111,562**

மூலங்கள்: அரசுடமை வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

** பங்கு முதலீடுகள்

(அ) 31ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டு(உ.ம் 2022,2022/2023)

(ஆ) தற்காலிகமானது

* தற்காலிகமானது

பின்னினைப்பு 8.2 | ஆண்டறிக்கைகள் சமர்ப்பித்தல் - அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள்

		2017	2018	2019	2020	2021
1	இலங்கை வங்கி	√	√	√	√	√
2	மக்கள் வங்கி	√	√	√	√	√
3	தேசிய சேமிப்பு வங்கி	√	√	√	√	√
4	அரச ஈட்டு, முதலீட்டு வங்கி	√	√	√	√	X
5	வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்	√	√	√	√	X
6	பிராந்திய அபிவிருத்தி வங்கி	√	√	√	√	X
7	ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை	√	√	√	√	√
8	இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம்	√	√	√	√	X
9	தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்	√	X	X	X	X
10	இலங்கை மின்சார சபை	√	√	√	√	√
11	இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம்	√	√	√	√	√
12	இலங்கை துறைமுக அதிகாரசபை	√	√	√	√	√
13	தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை	√	√	√	√	√
14	விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) கம்பனி	√	√	√	√	√
15	ஸ்ரீ லங்கன் எயாரலைன்ஸ் லிமிடெட்	√	√	√	√	√
16	இலங்கை போக்குவரத்துச் சபை	√	√	√	√	√
17	இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தபானம்	√	X	X	X	X
18	மத்திய பொறியியல் ஆலோசனைச்சேவைப் பணியகம்	√	√	√	X	X
19	அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தபானம்	√	√	√	X	√
20	மில்கோ (பிரைவெட்) லிமிடட்	√	√	X	X	X
21	தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை	√	X	X	X	X
22	இலங்கைப் கடற்தொழில் கூட்டுத்தபானம்	X	X	X	X	X
23	இலங்கை கடற்தொழில் துறைமுகக் கூட்டுத்தபானம்	√	√	√	X	X
24	அரசு மருந்தாக்கற் உற்பத்திக் கூட்டுத்தபானம்	√	√	√	√	√
25	இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தபானம்	√	√	√	√	√
26	அரசு மருந்துப்பொருட் கூட்டுத்தபானம்	√	√	√	√	√
27	ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியியசாலை	√	√	√	√	X
28	சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு	√	√	√	√	√
29	இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தபானம்	√	√	√	√	X
30	இலங்கை ஒலிபரப்பரப்புக் கூட்டுத்தபானம்	√	√	√	√	X
31	லங்கா உரக் கம்பனி	√	√	√	√	√
32	கொழும்பு கொமர்'ல் ∴பெர்டிலைசர் கம்பனி	√	√	√	√	X
33	அரசாங்க மரக் கூட்டுத்தபானம்	√	√	√	√	√
34	அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகக் கம்பனி	√	√	√	X	X
35	ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா பீஎல்சீ	√	√	√	√	√
36	லங்கா சீனிக் கம்பனி	√	X	X	X	X
37	லங்கா சதொச நிறுவனம்	√	√	√	√	X
38	அபிவிருத்தி லொத்தர் சபை	√	√	√	√	X
39	தேசிய லொத்தர் சபை	√	√	√	√	X
40	இலங்கை கனிம மணல் கம்பனி	√	√	√	√	√
41	இலங்கை பொஸ்பேட் கம்பனி	√	√	√	√	√
42	அரசாங்க அச்சகக் கூட்டுத்தபானம்	√	√	X	X	X
43	இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம்	√	X	X	X	X
44	விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை	√	√	√	√	√
45	இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தபானம்	√	√	√	X	X
46	குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி	√	√	√	√	√
47	மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை	X	X	X	X	X
48	சிலோ பிளான்டேஷன்ஸ் லிமிடட்	√	√	√	√	X
49	கலுபோவிட்டியானை தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி	√	√	√	X	X
50	இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தபானம்	√	√	X	X	X
51	இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை	√	√	√	√	X
52	கஹட்டகஹ கிர.∴பைட் லங்கா லிமிடட்	√	√	X	X	X

மூலம்: அரசுடமைத் தொழல்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

09

அரச நிதி முகாமை

9.1 மேன்நோக்கு

நாட்டில் ஏற்பட்டுள்ள எதிர்பாராத பொருளாதார நெருக்கடியானது, அரசிறைத் திரட்சியினை அடிப்டையாக கொண்ட அரசிறை வருமானத்தினை அடைவதனை நோக்கி அரச செலவினத்தினை முகாமைசெய்வதற்கும் அதனை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கும், இப் பிரச்சினைக்கு பகுதியளவில் காரணமாக அமைந்த பலவீனமான அரச நிதி முகாமைச் செயல்முறைகள் மற்றும் முறைமைகள் என்பனவற்றினை மறுசீமைப்பதற்கும் அரசாங்கத்தை வலியுறுத்தியது. அரச நிதிகளில் தேவையான அரசிறை சார்ந்த ஒழுக்கத்தைக் கொண்டு வருவதற்காக ஆற்றல்மிக்கதும், அனைத்தையும் உள்ளடக்கியதுமான அரச நிதி முகாமைத்துவத்துவ முறைமையொன்றிற்கான தேவை முன்பை விட அதிகமாக அழுத்தப்பட்டு வருகிறது. எனவே, அரச நிதிகள் மீது முன்மதியடைய அரசிறை சாரந்த ஒழுக்கத்தை உறுதி செய்வதற்காக, அரசாங்கத்தின் மிக முக்கியமான சட்டமான புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தை அறிமுகப்படுத்துவது இன்றியமையாததாகும்.

இறக்குமதி வரைறைகள் மற்றும் அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகள் என்பனவற்றின் அமுலாக்கத்துடன் இணைந்து, பணவீக்க அழுத்தங்களால் உருவாக்கப்படுகின்ற அரசிறை இடைவெளியின்மை காரணமாக பெரும்பாலான அரச துறை மூலதனத் திட்டங்கள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. அதேவேளை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பனவற்றினை உறுதிசெய்து, அரசாங்க பெறுகை செயல்முறையை சீராகச் செயற்படுத்துவதற்கு இயலுமாக்கும் வகையில் பல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

9.2 அரச நிதி முகாமை செயல்முறைகளை மறுபரிசீலனை செய்தல்

தற்போதைய அரச நிதிப் பணிச்சட்டகத்திலுள்ள பல இடைவளிகளை நிரப்பி, அரசிறைக் கொள்கை உருவாக்கத்தின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி, விரிவானதொரு சட்டமாக, புதிய அரச நிதி முகாமைத்துவ சட்டமூலத்தினை நடைமுறைகள் மற்றும் முறைமைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்து இயற்றுவதற்கான தேவை, அரசாங்கத்தின் மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலின் முக்கிய அம்சமாக அமைந்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்குறித்த விடயம் தொடர்பில் பல சுற்று உயர்மட்ட ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு, 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அரச நிதி முகாமைத்துவ சட்டமூலத்தினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டல் மீது உடன்பாடும் ஏற்பட்டுள்ளது. அரச நிதி முகாமைத்துவ சட்டமூலமானது அரசிறை விதிகள், படுகடன் முகாமைத்துவக் கொள்கை, அரச செலவினங்களுக்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், சொத்து முகாமை மற்றும் நல்லாட்சிக்கான ஒட்டுமொத்த விதிகள் என்பனவற்றினை உள்ளடக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. வரைவு அரச நிதி முகாமைத்துவ சட்டமூலத்தின்னை உருவாக்கும் பணியுடன், 2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சம்பந்தப்பட்ட ஏனைய பல சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் என்பனவற்றினை உருவாக்குவதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன.

9.3 பெறுகை முகாமை

பொருளாதார நெருக்கடியானது அரசாங்கத்தின் பெறுகைச் செயற்பாடுகள் தடையின்றி செயல்படுவதை உறுதிசெய்வதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தை தூண்டியது. இந்த நடவடிக்கைகள் குறிப்பாக, பொதுப் பாதுகாப்பு மற்றும் பொது சுகாதாரம் என்பனவற்றினைப் பாதுகாப்பதற்கு ஏதுவானதாக அமைந்தன. ஆகவே, வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சினைகள், இறக்குமதிக் கட்டுப்பாடுகள், விலை அதிகரிப்புக்கள் உள்ளடங்கலாக குறித்த காலப் பகுதியில் நிலவிய பல நடைமுறைச் சிக்கல்களைக் கையாளும் வகையில் சுகாதாரத் துறை அவசர பெறுகை செயல்முறை (Health Sector Emergency Procurements Process – HSEPP) அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த உடனடி நடவடிக்கைகள், அவசரமாகத் தேவைப்படும் அத்தியாவசிய மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் சாதனங்களின் பற்றாக்குறையைப் போக்குவதற்கு பயனுறுதியுடன் உதவியுள்ளன.

மேலும், குறைந்து வரும் வெளிநாட்டு நாணய கையிருப்பு மற்றும் இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கம் என்பன காரணமாக வழங்குநர்கள் அரசாங்கத்துடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதற்கும், ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் ஒப்பந்தங்களைப் பூரணப்படுத்துவதற்கும் தயங்குகின்றனர். இந்நிலைமையைக் கருத்திற்கொண்டு, அரசாங்கம் பொது மக்களுக்கு தடங்களற்ற சேவைகளை வழங்குவதற்காக பொதுத் திறைசேரியில் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட விலை வேறுபாட்டுக் குழுவைத் தாபித்தது. மேலும், ஒப்பந்தத் துறையில் ஒப்பந்ததாரர்களுக்கு சம நிலையான சூழலினை வழங்குவதற்கு வசதியளிப்பதற்காக தரப்படுத்தல் முறைமை குறித்த சுற்றறிக்கையினை கட்டுமானக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டது.

அத்துடன், பணம் மற்றும் நியாயமான கொடுக்கல் வாங்கல் என்பனவற்றுக்கான பெறுமதியினை உறுதிசெய்து, வெளிப்படைத்தன்மையான, துரிதமான மற்றும் வினைத்திறனுள்ள செயன்முறையொன்றின்

மூலம், மருந்துகள் மற்றும் நுகர்வு தன்மையில் அமைந்த வரையறுக்கப்பட்ட மருத்துவ சாதனங்கள் என்பனவற்றினை கொள்வனவு செய்வதனை எளிதாக்கும் வகையில், அமைச்சரவையின் அங்கீகாரத்துடன், மருந்துகள் மற்றும் நுகர்வுத் தன்மையான மருத்துவ சாதனங்களைப் பெறுகை செய்வதற்கான புதிய வழிகாட்டுதல்கள் - 2022 ஆனது, வெளியிடப்பட்டது.

9.4 இலத்திரனியல் அரசாங்கப் பெறுகை (e-GP)

அரசாங்க நிறுவனங்களால் இலத்திரனியல் அரசாங்கப் பெறுகை முறைமையின் பயன்பாட்டை விரிவுபடுத்துவதற்காக மீளாய்வுக் காலத்தில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த முறைமையானது பொருள் தேடி வாங்கல் நடைமுறையின் கீழ் "விலை மனுக் கோரலுக்கான அழைப்பு" முதல் "விலைமனுக் கோரல்களைத் திறத்தல்" வரையிலான பெறுகைப் படிமுறையின் தொடர் செயற்பாடுகளை உள்ளடக்குகிறது. இதற்கதைய, 2023.01.12 ஆம் திகதி வரையில், 342 பெறுகை நிறுவனங்களும் 2,944 விற்பனையாளர்களும் இந்த இலத்திரனியல் அரசாங்கப் பெறுகை முறைமையின் கீழ் பதிவுசெய்துள்ளதோடு, இம்முறைமை மூலம் 2,159 இலத்திரனியல் பெறுகைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் மற்றும் உலக வங்கி என்பன வழங்கியுள்ள பரிந்துரைகளை செயல்படுத்துவதற்காக, இலத்திரனியல் அரசாங்கப் பெறுகை முறைமைச் செயலகம் அதன் வடிவமைப்பு செய்முறையியல்கள், தொழில்நுட்பவியல் மற்றும் கட்டிடவடிவமைப்பு என்பனவற்றினை மீள வடிவமைத்துள்ளது. இதில் இந்த மேம்பாடுகளை உள்டக்குவதற்காக, இலத்திரனியல் அரசாங்கப் பெறுகை அமைப்பின் வடிவமைப்பு, உருவாக்கம், அமுலாக்கம் மற்றும் பராமரிப்பு என்பனவற்றிற்கான மூல ஒப்பந்தத்திற்கு பிற்சேர்க்கை ஒன்றினையும் இலத்திரனியல் அரசாங்கப் பெறுகை செயலகம் தயாரித்துள்ளது.

அதற்கமைய, இலத்திரனியல் அரசாங்கப் பெறுகை செயலகத்திற்காக இலத்திரனியல் அரசாங்கப் பெறுகையின் வடிவமைப்பு, உருவாக்கம், அமுலாக்கம் மற்றும் பராமரிப்பு என்பனவற்றிற்கான மூல ஒப்பந்தத்திற்குப் பிற்சேர்கை ஒப்பந்தம் ஒன்றினைக் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. குறித்த ஒப்பந்தமானது, 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் திருத்தப்பட்ட நியதிகள், நிபந்தனைகள் மற்றும் ஒப்பந்தப் பெறுமதி என்பனவற்றுடன், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளருக்கும் இலத்திரனியல் அரசாங்கப் பெறுகை முறைமையின் வடிவமைப்பாளருக்கும் இடையில் கைச்சாத்திடப்படுவதற்கும் உத்தேசிக்கப்படுகிறது.

அத்துடன், 2023 ஏப்ரல் முதல் 2027 மார்ச்சு வரையிலான காலப்பகுதியில் இலத்திரனியல் அரசாங்கப் பெறுகை முறைமையை நடைமுறைப்படுத்துவதற்காக ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையில் அரச நிதி முகாமைத்துவம் மற்றும் பொறுப்புக்கூறலை வலுப்படுத்தும் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் ஊடாக ஐ.அ.டொ. 04 மில்லியனினை மானிய அடிப்படையில் வழங்குவதற்கு இணங்கியுள்ளது. மேலும், இலத்திரனியல் அரசாங்கப் பெறுகை முறைமையை 2026 ஆம் ஆண்டு முதல் முழு அளவில் அனைத்து அரச நிறுவனங்களிலும் அமல்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

9.5 அரச நிதி மீதான கட்டுப்பாடு

அரசியலமைப்பின் 74 ஆம் உறுப்புரை மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளை இல. 119 இன் பிரகாரம் அரச நிறுவனங்களின் செயல்பாட்டை மேற்பார்வையிடும் நோக்கத்துடன் அரசாங்க கணக்குகள் பற்றிய பாராளுமன்றக் குழுவினால் அழைக்கப்பட்ட 25 கூட்டங்களில் அரச நிதித் திணைக்களம் பங்கேற்றுள்ளது. அதன்படி, இத் திணைக்கள அதிகாரிகள் அரசாங்க கணக்குகளுகள் பற்றிய பாராளுமன்றக் குழுவின் அதிகாரிகளுக்கு உதவுவதற்காக குறித்த பாராளுமன்றக் குழு கூட்டங்களில் பங்கேற்றுள்ளதோடு, நிறுவனங்களின் அரச நிதி முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் குறித்து அரசாங்க கணக்குகள் பற்றிய பாராளுமன்றக் குழுவின் வழிகாட்டுதலின்படி சரிசெய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு தெரித்து, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டில் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற கணக்காய்வு வினாக்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கைகள் கிடைக்கப் பெற்றதனைத் தொடர்ந்து, கணக்காய்வாளர் நாயகம் முன்வைத்துள்ள வினாக்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் உரிய தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு பின்தொடர் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

9.6 நிதி ஒழுங்குவிதி மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கைகள்

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான வரவு செலவுத் திட்ட உரைகள் மூலம் புதிய அரச நிதி நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. 2022 ஆம் ஆண்டில் செலவினக் கட்டுப்பாடு தொடர்பான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு 5.4 இன் நியதிகளின் அடிப்படையில், செலவின முகாமைத்துவ முன்மொழிவின் கீழ் அரச நிறுவனங்களின்

தொலைபேசிச் செலவினத்தினை 25 சதவீதத்தால் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய, 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய, அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் பந்தி 4 இன் பிரிவு 4 இலுள்ள "அரச அலுவலர்களுக்கு தகவல் தொடர்பாடல் வசதிகளை வழங்குதல் மற்றும் தொலைபேசிப் பட்டியலினைத் தீர்த்தல்" என்ற 4.1 அட்டவணை திருத்தப்பட்டு, புதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல. 01/2020 (i) ஆனது, 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

மேலும், 2023 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட உரையில் 35.1 ஆம் இலக்க, முன்மொழிவினை அடிப்படையாகக் கொண்டு, பயன்பாட்டிலுள்ள 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய, 01/2020 ஆம் இலக்க, அரச நிதி சுற்றறிக்கையின் பகுதி II இன் பந்தி 05 இற்குத் திருத்தமாக, 2022 திசெம்பர் 20 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல. 01/2020 (ii) உம் வெளியிடப்பட்டது.

9.7 நியதிச் சட்ட நிதிகள் மற்றும் நம்பிக்கை நிதிகளை முகாமைசெய்தல்

வருடாந்த வரவு செலவு கணக்குகள், நிதி அறிக்கைகள் மற்றும் நிதிச் செயலாற்றுகை அறிக்கைகள் என்பன 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல. 01/2020 இன் கீழுள்ள 04 ஆம் மற்றும் 05 ஆம் வழிகாட்டுதல்களுடன் இணங்கிச் செல்லும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். குறித்த சுற்றறிக்கையானது, நியதிச் சட்ட நிதிகள் மற்றும் நம்பிக்கை நிதியங்கள் என்பனவற்றின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஆண்டறிக்கைகள் என்பனவற்றினைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் என்பனவற்றுடன் தொடர்பான படிவங்களை அறிமுகப்படுத்துகிறது. அதற்கமைய, நிரல் அமைச்சுக்களின் ஒருங்கிணைப்புடன், நிதியங்கள் தொடர்பில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு, நிதியங்கள் குறித்து கணக்காய்வாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட கணக்காய்வு வினாக்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கைகள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 9.1 | அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள்

சுற்றறிக்கை	விபரம்
அரச நிதிச் சுற்றறிக்கை இல. 01/2020 (i) வெளியிடப்பட்ட திகதி : 12.01.2022 அரசு அலுவலர்களுக்கு தொடர்பாடல் வசதிகளை வழங்குதல் மற்றும் தொலைபேசிப் பட்டியல்களைத் தீர்த்தல்.	2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையின் 5.4 ஆம் இலக்க, முன்மொழிவு மூலம் மீண்டெழும் செலவினங்களைக் குறைக்கும் நோக்கில் முன்மொழியப்பட்ட முன்மொழிவிற்கு அமைய, அரச நிறுவனங்களின் தொலைபேசிச் செலவினங்களை 25 சதவீதத்தால் குறைப்பதற்காக இச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.
அரச நிதிச் சுற்றறிக்கை இல. 01/2020 (ii) வெளியிடப்பட்ட திகதி: 20.12.2022 சேவை வழங்கலின் பேரில் அரச நிறுவனங்களால் அறவிடப்படுகின்ற கட்டணங்களைத் திருத்துதல்.	2023 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்ட உரையின் 35.1 ஆம் இலக்க, முன்மொழிவு மூலம் அரசிறைத் திரட்சி செயற்பாட்டில் வரி அல்லாத வருமானத்தினை அதிகரிக்கும் நோக்கில், 2023 ஆம் ஆண்டு முதல் பயன்வலுப்பெறும் வகையில் கட்டணங்கள் மற்றும் அறவீடுகளை 20 சதவீதத்தினால் அதிகரிப்பதற்காக இச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.
அரச நிதிச் சுற்றறிக்கை இல. 01/2023 வெளியிடப்பட்ட திகதி 13.01.2023 மருந்துப் பொருட்கள் மற்றும் நுகர்வுத் தன்மையான மருத்துவ சாதனங்களைப் பெறுகை செய்வதற்கான வழிகாட்டுதல்கள் - 2022,	மருந்துகள் மற்றும் நுகர்வுத் தன்மையான மருத்துவ சாதனங்களை பெறுகை செய்வதற்கான வழிகாட்டுதல்கள் - 2022 ஆனது 2007 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 01 ஆம் திகதிய தேசிய பெறுகை முகவர் நிறுவனத்தின் 10 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் வெளியிடப்பட்ட மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்களை பெறுகை செய்வதற்கான முன்னைய வழிகாட்டுதல்கள் - 2006 என்ற சுற்றறிக்கையினை பதிலீடுசெய்கின்றது. அதற்கமைய, இந்த வழிகாட்டுதல்கள் 2023 ஆம் ஆண்டு பெப்வரி மாதம் 01 ஆம் திகதி முதல் பயன்வலுப் பெறுகின்றது.
அரச நிதிச் சுற்றறிக்கை இல. 04/2016 (iv) வெளியிடப்பட்ட திகதி 09.02.2023 உள்நாட்டு நிதிகளின் கீழ் பிராந்திய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ரூபா 50 மில்லியன் வரையிலான பணிகளை பெறுகைசெய்தல்.	நாட்டின் பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல. 04/2016 (iii) இன் 3.3 ஆம் பந்திக்கு உடனடுத்து வந்துள்ள அட்டவணையினைத் திருத்துவதற்காக வெளியிடப்பட்டது. குறித்த திருத்தமானது, 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் பயன்வலுப் பெறும்.

கட்டம் 9.1 | அரசாங்கத்தின் நிதியல்லாச் சொத்து முகாமை பற்றிய சுருக்கப் பார்வை

அரசாங்கத்தின் நிதியல்லாச் சொத்துக்கள் முறையான பராமரிப்பின்றிக் காணப்படுகின்றன. இந்தச் சொத்துக்களுக்குப் போதிய பதிவேடின்மை மற்றும் உடைமைத்துவப் பிரச்சினைகள் என்பன காணப்படுகின்றன. இத்தகைய சொத்துக்களின் வினைத்திறனான முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்காக, கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகம் சொத்து முகாமை சுற்றறிக்கை இல. 01/2017 இனை வெளியிட்டு. வாகனங்கள், கட்டமைப்புக்கள், கட்டிடங்கள், காணிகள், தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள், பொறிகள் மற்றும் இயந்திர சாதனங்கள் தொடர்பில் விரிவான தகவல்களைத் திரட்டுவதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளது.

வாகனங்கள் : 2021 ஆம் ஆண்டு 31 ஆம் திகதியன்றுள்ளவாறு, அரச துறை நிறுவனங்கள் 84,247 மோட்டார் வாகனங்களை சொந்தமாக வைத்திருந்தன. அவற்றில் 77,678 வாகனங்கள் இயங்கு நிலையில் இருந்தன. 2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து, அபிவிருத்திச் செயற்பாடுகள், ஏனைய அத்தியாவசிய நோக்கங்களுக்குத் தேவையான பயன்பாட்டு வாகனங்கள் மற்றும் இலங்கை பொலிஸ் துறையின் பயன்பாட்டிற்காக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் நீங்கலாக, புதிய மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதிலிருந்து இலங்கை அரசாங்கம் தவிர்ந்துகொண்டது. தற்போதுள்ள மோட்டார் வாகனத் தொகுதியானது அரசாங்கத்தின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக மேலதிக செலவினங்கள் ஏதும் ஏற்படவில்லை. ஆயினும், 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு, 5,430 வாகனங்கள் பழுதுபார்க்கப்பட வேண்டி இருந்ததோடு, 4,073 வாகனங்கள் பாவனையிலிருந்து ஒதுக்கப்படவும் இருந்தன. இப்பிரச்சினையினைத் தீர்க்கும் வகையில், சொத்து முகாமை சுற்றறிக்கை இல. 05/2020 மற்றும் 04/2022 என்பன வெளியிடப்பட்டுள்ளதோடு, அதற்கமைய, 2023 மே 15 ஆம் திகதியிலுள்ளவாறு, ரூபா 915 மில்லியன் செலவில் 2,241 வாகனங்கள் பழுதுபார்க்கப்பட்டு இயங்கு நிலை வாகனத் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளதோடு, 1,742 வாகனங்கள் பாவனையிலிருந்தும் ஒதுக்கப்பட்டு, அதன் மூலம் ரூபா 634 மில்லியன் வருமானமாகவும் திரட்டப்பட்டுள்ளது. மேலும், 02/2017 மற்றும் 03/2018 ஆம் இலக்கங்களைக் கொண்டுள்ள சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் வழிகாட்டல்களுக்கு அமைவாக 284 வாகனங்களின் உடைமைத்துவப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டுள்ளன.

இயங்கா நிலையிலுள்ள வாகனங்களைத் திருத்திப் பயன்படுத்தல் அல்லது அகற்றுதல்

அரசாங்க துறை நிறுவனம்	2020 ஆகஸ்ட் 31 அன்று அறிக்கையிடப்பட்டது					2023 மே 15 அன்று திருத்தத்தின் முன்னேற்றம்						2020 ஆகஸ்ட் 31 அன்று அறிக்கையிடப்பட்டது 31ளவ யுரபரளவ 2020					2023 மே 15 அன்று அகற்றல் முன்னேற்றம் 15வா ஆயல 2023					
	திருத்தப்படவுள்ள வாகனம்					திருத்தப்படவுள்ள வாகனம்					திருத்த செலவு (ரூபா மில்.)	அகற்றப்பவுள்ள வாகனம்					அகற்றப்பவுள்ள வாகனம்					அகற்றல் மூலம் கிடைத்த வருமானம் (ரூபா மில்.)
	எஸ்புலி	கார்	பஸ் கெப்	வேன்	ஏனைய	எஸ்புலி	கார்	பஸ் கெப்	வேன்	ஏனைய		எஸ்புலி	கார்	பஸ் கெப்	வேன்	ஏனைய	எஸ்புலி	கார்	பஸ் கெப்	வேன்	ஏனைய	
அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பொது தொழில் முயற்சிகள்	485	183	517	148	2,253	353	160	433	113	1,336	915	380	475	346	142	2,893	95	283	138	71	1,083	566
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள்	24	21	66	29	347	18	21	50	18	179	80	59	45	125	41	924	23	22	35	15	230	68
மொத்தம்	**509**	**204**	**583**	**177**	**2600**	**371**	**181**	**483**	**131**	**1,515**	**795**	**439**	**520**	**471**	**183**	**3817**	**118**	**305**	**173**	**86**	**1,313**	**634**

அரசாங்க மோட்டார் வகனத் தொகுதி

அரசாங்க மோட்டார் வாகனத் தொகுதி	2017 (அ)	2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு	2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு
இயங்கு நிலையிலுள்ள மோட்டார் வாகனங்கள்	64,518	76,661	77,678
மத்திய அரசு	50,160	60,326	61,248
மாகாண சபைகள்	14,358	16,335	16,429
இயங்கா நிலையிலுள்ள மோட்டார் வாகனங்கள	9,303	5,533	6,569
மத்திய அரசு	7,723	3,839	4,889
மாகாண சபைகள்	1,580	1,694	1,680
மொத்தம்	**73,821**	**82,194**	**84,247**

அ - 2017.12.31 அன்று அறிக்கையிடப்பட்டவாறு, அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரசுடமை தொழில்முயற்சிகள்
2018.04.24 அன்று அறிக்கையிடப்பட்டவாறு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள்

கட்டம் 9.1 | அரசாங்கத்தின் நிதியல்லாச் சொத்து முகாமை பற்றிய சுருக்கப் பார்வை தொடர்...

அரசாங்க மோட்டார் வகனத் தொகுதி வயதுப் பகுப்பாய்வு (2021.12.31 உள்ளவாறு)

வாகன வகை	0 - 5 வருடங்கள்	6 - 10 வருடங்கள்	10 வருடங்களுக்கு மேற்பட்டவை	பதிவாண்டு அறிக்கையிடப்பதாவை	மொத்தம்
விசேட பயன்பாட்டு வாகனம்	107	565	3,995	135	4,802
கார்	361	1,994	5,250	340	7,945
டபல் கெப்	427	2,470	7,333	558	10,785
வேன்	188	644	2,208	217	3,257
சிங்கல் கெப்/ இரு நோக்க	282	988	4,466	255	5,991
பஸ்	384	1,459	2,933	3,554	8,330
க்ரூ கெப்	3	25	46	5	79
லொறி	514	1,387	3,665	206	5,772
ட்ரக்டர்	109	864	4,261	479	4,261
ஏனையவை	6,832	7,381	16,360	2,399	33,022
முழு மொத்தம்	**9,257**	**17,777**	**47,074**	**10,139**	**84,247**

கட்டிடங்கள் : 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, அரச துறை நிறுவனங்களுக்குச் சொந்தமான மற்றும் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெறப்பட்ட கட்டிடத்தின் தளப் பரப்பளவு கிட்டத்தட்ட 60.0 மில்லியன் சதுர மீற்றராகும். இதில் 57 மில்லியன் சதுர மீட்டர் பரப்பளவு அரசுக்கு சொந்தமான தளப் பரப்பாகும், மீதமுள்ள 2.9 மில்லியன் சதுர மீட்டர் வாடகை அல்லது குத்தகைக்குப் பெறப்பட்டதாகும். இதேவேளை, 0.8 மில்லியன் சதுர மீட்டர் தளப் பரப்பு பயன்படுத்தப்படாமல் உள்ளது. இதேவேளை, வருடாந்த வாடகை அல்லது குத்தகை செலவு ரூபா 11.6 பில்லியனாகும். மேலும், அரச துறை நிறுவனங்கள் தங்களுக்கு சொந்தமான தளப் பரப்பளவிலிருந்து 1.7 மில்லியன் சதுர மீட்டர் தளப் பரப்பளவை வாடகைக்கு விட்டு, அரச துறை நிறுவனங்களிலிருந்து ரூபா 6.2 பில்லியனினையும், தனியார் துறை நிறுவனங்களிடமிருந்து ரூபா 3.1 பில்லியனையும் ஆண்டு வருமானமாகப் பெறுகின்றது.

அரச துறை நிறுவனங்களில் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெறப்பட்ட கட்டிடங்கள் மற்றும்/வாடகைக்கு விடப்பட்ட தளப் பரப்புக்கள் உள்ளடங்கலாக சொந்தக் கட்டிடங்கள் (2021.12.31 உள்ளவாறு)

அரச துறை நிறுவனங்கள்	பயன்படுத்தப்பட்டுள்ள தளப் பரப்பளவு (ச.மீ)			பயன்படுத்தப்பட்டுள்ள தளப் பரப்பளவு (ச.மீ)	வருடாந்த வாடகை அல்லது குத்தகைச் செலவினம் (ரூபா)	வாடகைக்கு விடப்பட்டவை	
	சொந்தமான	வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெறப்பட்டவை	மொத்தம்			தளப் பரப்பளவு (ச.மீ)	ஆண்டு வருமானம் (ரூபா)
அரசாங்க முகவர் நிறுவனங்கள் மற்றும் அரசுடமைத் தொழில் முயற்சிகள்	46,041,744	2,680,256	48,722,000	596,855	11,439,593,083	970,225	8,564,198,801
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள்	11,137,528	200,502	11,338,030	188,345	148,416,427	721,656	749,588,943
மொத்தம்	**57,179,272**	**2,880,758**	**60,060,030**	**785,200**	**11,588,009,510**	**1,691,881**	**9,313,787,745**

குறிப்பு : இத்தகவல்கள் காரஜ்கள், குடிமனைகள், சுற்றுப் பயண மாளிகைகள்,ஓய்வு இல்லங்கள் மற்றும் ஏனைய குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கவில்லை.

கழிவுப் பொருட்களை அகற்றுதல் : 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆம் திகதிய, 10/2022 ஆம் இலக்க சொத்து முகாமை சுற்றறிகை மூலம் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக கழிவுப் பொருட்களை அகற்றுவதன் ரூபா 54.4 மில்லியன் ஈட்டப்பட்டுள்ளது.

கழிவுப் பொருட்களை அகற்றுதல் (2022.12.15 உள்ளவாறு)

விபரம்	அடையாளங் காணப்பட்ட அளவு (மெ.தொ)	அகற்றப்பட்ட அளவு (மெ.தொ)	விற்பனை வருமானம் (ரூ.மில்)
இரும்பு / உருக்கு	2,832	116	12.1
ஏனைய உலோகம்	299	40	11.7
ஏனைய கழிவு	-	-	30.6

மூலதனச் சொத்து விற்பனையிலிருந்தான வருமானம் : இயங்கா நிலையிலுள்ள வாகனங்கள் மற்றும் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைத் தொடர்ந்து, மூலதனச் சொத்துக்கள் விற்பனை வருமானமானது, 2021 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 188.4 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 584.2 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது.

மூலதனச் சொத்து விற்பனை வருமானம் (ரூபா மில்லியன்)

நிதி அல்லாத	2020	2021	2022
மூலதனச் சொத்துக்கள் விற்பனை - வாகனங்கள்	201	128.3	226.4
மூலதனச் சொத்துக்கள் விற்பனை - ஏனையவை	56	60.1	357.8
மொத்தம்	**257**	**188.4**	**584.2**

நிதியல்லாச் சொத்துக்களை மதிப்பீடுசெய்தல் : 04/2018, 02/2019 மற்றும் 05/2021 ஆம் இலக்க, சொத்து முகாமைச் சுற்றறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் அரசாங்கத்தின் நிதியல்லாச் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டுதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

நிதியல்லாச் சொத்துக்களை முகாமை செய்வதற்கான நிகழ்நிலை முறைமை : அரசாங்கத்தின் நிதியல்லாத சொத்துக்களை மையப்படுத்தி, தரவுத் தளமொன்றினை உருவாக்குவதற்கும், அதன் மூலம் இந்த சொத்துக்களை வினைத்றனுடன் ஒதுக்கீடுசெய்வதற்கும், பயன்படுத்துவதற்குமாகவும் ஒருங்கிணைந்த நிகழ்நிலை மென்பொருள் முறைமையொன்று வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்படுகிறது.

10

மனிதவள முகாமைத்துவம்

10.1 பொதுத்துறையில் மனிதவள முகாமைத்துவம்

2022 ஆம் ஆண்டில், தொழிற்சங்க நடவடிக்கைகள், எதிர்ப்புக்கள் மற்றும் பொதுமக்களின் அமைதியின்மை உள்ளிட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் எழுச்சிக்கு மத்தியில் அரசாங்கமானது நிலையானதொரு பொதுச் சேவை வழங்கலைப் பராமரித்துள்ளது. இந் நெருக்கடியானது பொதுத்துறையில் மனித வள முகாமைத்துவத்தில் மிகவும் அவசியமான மற்றும் மிகவும் புறக்கணிக்கப்பட்ட சீர்திருத்தத்தை மேற்கொள்வதற்கான ஒரு களமேடையினை வழங்கியுள்ளது. அதேபோன்று, பொதுத் துறைக்கான உகந்த பதவியணி இலக்கினை அடையும் அதே வேளையில், சம்பளம் மற்றும் ஊதியத்திற்கான செலவினங்களை நிலைபேறான பாதையில் கையாளுவதற்கு அரசாங்கம் துணிச்சலான மற்றும் தொலைநோக்குமிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அரசாங்கத்தின் நிதி ஒருங்கிணைப்பு செயல்பாட்டில் செலவின சீரமைப்பானது ஒரு ஊக்கியாக உள்ளது. எனவே, சம்பளம், ஓய்வூதியம், சமூக நலன் மற்றும் கடன் சேவை தவிர்ந்த அத்தியாவசியமற்ற பொதுச் செலவினங்களைக் குறைக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அரச துறைக்கான புதிய ஆட்சேர்ப்புகள் வருடத்தில் நிறுத்தப்பட்டதுடன், பிரதம மந்திரியின் செயலாளர் தலைமையில் விசேட குழுவொன்றின் ஊடாக அத்தியாவசிய பதவியணிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பொதுத்துறையின் அளவைக் குறைக்க அரசாங்கம் இரண்டு முக்கிய திட்டங்களை முன்வைத்தது. அந்தவகையில், பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 14/2022 மற்றும் பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம். 05/2022 ஆகியவை வெளியிடப்பட்டன. மேலும், 2022 இல், இளைஞர்களை இத்துறையில் ஈர்க்கும் வகையில், அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயதை 60 ஆக மாற்ற அரசு முடிவு செய்தது.

சம்பளம் மற்றும் ஊதியத்திற்கான செலவினம் மற்றும் ஓய்வூதியத்திற்கான கொடுப்பனவுகள் அரசாங்க வருவாயில் அரைவாசிக்கும் மேலாகக் காணப்படுகிறது. சம்பளம் மற்றும் ஊதியங்களுக்கான இத்தகைய செலவு, பெயரளவிலான வகையில், 1.39 மில்லியன் அரச ஊழியர்களினை முகாமை செய்வதற்காக 2021 இல் 845.7 பில்லியனிலிருந்து 2022 இல் 956.2 பில்லியனாக அதாவது 13.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. ஓய்வூதிய கட்டணம் 2021 இல் ரூபா. 269.8 பில்லியனிலிருந்து 2022 இல் 309.1 பில்லியனாக கிட்டத்தட்ட 15 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2021 ஆண்டுடன் ஒப்பிடும் போது 5.2 சதவீதமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் காணப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவு உட்பட மொத்த சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள், 2022 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.3 சதவீதமாக காணப்பட்டது. எனவே, நாட்டின் மொத்த சனத்தொகையுடன் ஒப்பிடும் போது இவ்வளவு பாரிய அரச சேவையினைப் பராமரிப்பதானது, பொருளாதார நெருக்கடியால் சூழப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட நிதி இடைவெளி காரணமாக அரச நிதி முகாமைத்துவத்தில் முதன்மையான பிரச்சினையாக மாறியுள்ளது. இது பொதுத்துறை மற்றும் மனித வளங்களின் திறமையான முகாமைத்துவத்திற்கு ஏனையவைகளுக்கு மத்தியில் உத்தரவாதம் அளித்துள்ளது.

அட்டவணை 10.1 | பொதுத்துறை பதவியணிக் கட்டமைப்பு 2014-2022

நிர்வாக நிலை		2014	2015	2016	2017	2018	2019	2020	2021	2022	21/22 இல் அதிகரித்த அல்லது குறைந்த வீதம்
தேசிய	அங்கீகரி	844,948	858,680	874,046	880,971	892,509	906,264	1,006,276	1,013,419	1,018,019	0.45
	உண்மை	703,600	722,950	754,548	756,339	742,960	740,574	805,802	792,317	783,238	-1.15
மாகாண சபைகள் மற்றும்	அங்கீகரி	392,698	394,812	412,560	428,433	440,560	444,348	444,174	446,025	441,748	-0.96
உள்ளூராட்சி சபைகள்	உண்மை	377,445	374,330	372,033	385,311	392,528	400,897	390,061	389,105	398,528	2.42
மொத்த அரச சேவை	அங்கீகரி	1,227,646	1,253,492	1,286,606	1,309,404	1,333,069	1,350,612	1,450,450	1,459,444	1,459,767	0.02
	உண்மை	1,081,045	1,097,280	1,126,581	1,141,650	1,135,488	1,141,471	1,195,863	1,181,422	1,181,766	0.03
அரசுக்கு சொந்தமான	அங்கீகரி	245,339	244,800	234,220	242,194	248,625	251,419	251,440	255,545	255,650	0.04
தொழில் முயற்சிகள்	உண்மை	221,213	219,583	226,695	233,849	235,145	236,293	227,253	219,838	212,117	-3.51
மொத்த அரச துறை	அங்கீகரி	1,482,985	1,498,292	1,520,826	1,551,598	1,581,694	1,602,031	1,701,890	1,714,989	1,715,417	0.02
	உண்மை	1,302,258	1,316,863	1,353,276	1,375,499	1,370,633	1,377,764	1,423,116	1,401,260	1,393,883	-0.53
அங்கீகரிக்கப்பட்ட பதவியணி பயன்பாட்டு வீதம் (%)		88	88	88	88	87	86	84	82	81	
ஓய்வுதியம் பெறுவோரின் திரட்டிய எண்ணிக்கை		546,379	564,472	579,414	585,670	617,386	639,984	660,934	672,196	676,430	0.63

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
ஓய்வூதியத் திணைக்களம்
அங்கீகரி - அங்கீகரிக்கப்பட்ட பதவியணி
உண்மை - உண்மையான பதவியணி எண்ணிக்கை

10.2 2022 இல் பதவியணி முகாமைத்துவம்

2022 ஆம் ஆண்டின் இறுதியில், பொதுத் துறையில் பணிக்கமர்த்தப்பட்ட மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 1,393,883 ஆகும், இது 2021 உடன் ஒப்பிடும்போது 0.53 சதவீதத்தினால் சிறிதாக சரிவு அடைந்துள்ளது. புதிய ஆட்சேர்ப்பு இடைநிறுத்தம், புதிய பதவியணியினரின் பதவிகள் குறைப்பு மற்றும் ஓய்வு பெற்றதன் காரணமாக இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பதவிகளின் மொத்த எண்ணிக்கைக்கு எதிரான பதவியணிப் பயன்பாட்டு விகிதம் 2022 இன் இறுதியில் 81 சதவீதமாக இருந்தது, இது 2021 உடன் ஒப்பிடும்போது 1 சதவீதம் சரிவினை அடைந்துள்ளது. அரசு பொதுச் செலவுக் குறைப்புக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் காரணமாக பதவியணிப் பயன்பாட்டில் சரிவு ஏற்பட்டுள்ளது.

வரைபு 10.1 | பொதுத்துறையின் மொத்த பதவியணி (2014-2022)



மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

அட்டவணை 10.2 | பொதுத்துறை பதவியணிப் பயன்பாடு - 2022

நிறுவன வகை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதைய பதவியணி	அங்கீ. பதவியணிப் பயன்பாட்டு வீதம்
அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் விசேட செலவின பிரிவுகள் முப்படைகள்	1,018,019	783,238	77%
மாகாண சபைகள்	441,748	398,528	90%
அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகள்	255,650	212,117	83%
மொத்தம்	**1,715,417**	**1,393,883**	**81%**

10.3 சேவை மட்டத்தின்படி பொதுச் சேவை பதவியணிப் பங்கீடு (முப்படைகள் மற்றும் அரச தொழில்முயற்சிகள் தவிர்ந்த)

பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இன் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டதன் படி, சிரேஷ்ட, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை ஆகிய நான்கு முக்கிய நிலைகளைக் கொண்ட ஊழியர்களின் கீழ் பொது சேவையானது வழங்கப்படுகிறது. இந்த சேவை நிலைகளில் திறமையற்ற, திறமையான தொழில்சார்ந்த, முகாமைத்துவ மற்றும் நிர்வாக வேலைப் பிரிவுகள் தொடர்பான தொழில்கள் உள்ளடங்கும்.

வரைபு 10.2 | சேவை மட்டத்தின்படி பொதுச் சேவை பதவியணிப் பங்கீடு (முப்படைகள் மற்றும் அரச தொழில்முயற்சிகள் தவிர்ந்த)



மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

2022 ஆம் ஆண்டில் இரண்டாம் நிலை சேவை நிலை ஊழியர்களின் மேலாதிக்கம் 58 சதவீதம் என்ற வீதத்தில் தொடர்ந்தது என்பதை பொதுத்துறை ஊழியர்களின் சேவை நிலைப் பகிர்வின் பகுப்பாய்வு வெளிப்படுத்துகிறது. இந்தத் துறையில் முக்கியமாக ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோர் அடங்குகின்றனர். பொதுத்துறைத் தொழிற்பிரிவின் பகிர்வானது, இரண்டாம் நிலை மட்டத்தினது அதீத வளர்ச்சியின் காரணமாக நிறுவனங்களுக்குள்ளேயே இருக்கும் தொழிற்பிரிவின் பாரம்பரியப் கூம்பக வடிவத்திலிருந்து கணிசமாக விலகிச் சென்றுள்ளது. மேற்கூறிய வகையின் பெரிய அளவிலான சீரற்ற பகிர்வு, சமச்சீரற்ற மேல்நிலை மட்டத்துடன் அரச துறையில் நடுத்தர அளவிலான பணியாளர்களின் குறைப்பயன்பாட்டுக்கு பரவலான காரணமாகியுள்ளது. இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் அரச சேவையில் தற்போதுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் கல்வித்துறைக்கு பொருத்தமான ஆட்களை இணைத்துக்கொள்ள கொள்கை தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கட்டம் 10.1 | கல்வித் துறைக்கான உகந்த கல்விப் பதவியணி

- **பாடசாலைகள்**

கல்வித் துறைக்கான உயர்தர மற்றும் தொழில்நுட்பத் தகுதி வாய்ந்த மனித வளத்தை உறுதி செய்வதற்காக, கல்வி அமைச்சின் சுற்றறிக்கை இல. 06/2021 இன் அடிப்படையில் பாடசாலை அடிப்படையிலான உகந்த கல்விப் பதவியணியை உருவாக்கி கல்வித்துறைக்கு தேவையான பௌதீக மற்றும் மனித வளங்களை வழங்குவதற்காக 2022 இல் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மாணவர்களுக்கான தொடர்ச்சியான கல்வியை உறுதி செய்வதை இலக்காகக் கொண்ட முறைமைபடுத்தப்பட்ட மனித வள மேம்பாட்டிற்கு பாடசாலை அடிப்படையிலான பதவியணியை அங்கீகரிப்பது அவசியம் என இனம் காணப்பட்டுள்ளது. சுற்றறிக்கை இல. 06/2021 இன் பிரகாரம் ஒவ்வொரு பாடசாலையிலும் உள்ள மாணவர்கள், வகுப்புகள் மற்றும் பாடங்களின் எண்ணிக்கையைக் கொண்டு தேவையான ஆசிரியர்களின் பதவியணி எண்ணிக்கையானது கணக்கிடப்பட்டது. இதன்படி, 396 தேசிய பாடசாலைகளுக்கும் 87 மாகாண பாடசாலைகள் தவிர்ந்த 9,644 மாகாண பாடசாலைகளுக்கும் பாடசாலை அடிப்படையிலான ஆசிரியர் பதவி நிலைகள் தீர்மானிக்கப்பட்டன.

அட்டவணை 10.3 | 2022 இல் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கான பங்கீடு

பாடசாலை வகை		தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளின் எண்ணிக்கை			மொத்தம்
		மாணவர்கள் 0 - 10	மாணவர்கள் 11 - 1,000	மாணவர்கள் 1,000 இற்கு மேல்	
தேசிய பாடசாலை		0	64	332	396
மாகாணம்	மேல்	2	1,067	200	1,269
	மத்திய	12	1,020	46	1,078
	தென்	9	1,380	71	1,460
	வட	11	1,003	66	1,080
	கிழக்கு	32	892	28	952
	வடமேல்	0	1,117	87	1,204
	வடமத்திய	4	955	74	1,033
	ஊவா	0	756	40	796
	சப்ரகமுவ	17	810	32	859
மொத்தம்		**87**	**9,064**	**976**	**10,127**

மூலம் - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
கல்வி அமைச்சு

முறைசாரா இடமாற்றங்கள் காரணமாக தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் ஆசிரியர்கள் தேவையற்ற வகையில் அணிதிரட்டப்படுவதைத் தடுப்பதற்கு புதிய அணுகுமுறை துணைபுரியும். அதேசமயம், இது அனைத்துப் பாடசாலைகளுக்கும் சம வாய்ப்புகளைப் பகிர்ந்துகொள்வதுடன், முறையான இடமாற்றத் திட்டத்தை முறையாக உருவாக்கவும் வழிவகுக்கிறது. கல்விச் சுற்றறிக்கை இல. 06/2021 விதிமுறைகளின்படி இனம் காணப்பட்ட கல்விப் பதவியணிப் பதவிகளின் மொத்த எண்ணிக்கையானது அட்டவணை 10.4 இல் விபரிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 10.4 | 2022 இல் பாடசாலை அடிப்படையிலான கல்விப் பதவியணி

பாடசாலை வகை		பாடசாலைகளின் எண்ணிக்கை	மாணவர்களின் எண்ணிக்கை 11-1,000	கல்விச் சுற்றறிக்கை இல. 06/2021 அடிப்படையில் கல்விப் பதவியிணி
தேசிய பாடசாலை		396	1,708,935	44,083
மாகாணம்	மேல்	1,267	686,828	40,169
	மத்திய	1,451	459,612	35,139
	தென்	1,029	373,440	26,448
	வடக்கு	920	235,819	20,046
	கிழக்கு	1,066	334,679	24,118
	வடமேல்	1,204	310,303	31,002
	வடமத்திய	796	308,536	18,699
	ஊவா	842	239,950	20,312
	சப்ரகமுவ	1,069	311,269	25,854
மொத்தம்		**10,040***	**4,969,371**	**285,870**

* 10 இற்கு குறைவாக மாணவர் உள்ள 87 மாகாணப் பாடசாலைகள் தவிர்ந்த

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
கல்வி அமைச்சு

பொதுத்துறையில் இருக்கும் பதவியணியை திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காக, பாடசாலை அடிப்படையிலான பதவியணிப் பதவிகள் உட்பட வெற்றிடமாக உள்ள ஆசிரியர் பதவியணிகளை ஏற்கனவே அரச சேவையில் பணிக்கமர்த்தப்பட்ட பட்டதாரிகளிடமிருந்து நிரப்புவதற்கு கொள்கை தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கட்டம் 10.1 | கல்வித் துறைக்கான உகந்த கல்விப் பதவியணி தொடர்ச்சி...

பிரிவெனாக்கள்

தற்போது, 1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க பிரிவெனா கல்விச் சட்டம் மற்றும் 1980 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பிரிவெனா ஒழுங்குமுறை விதிகளின் கீழ் நிறுவப்பட்ட 825 பதிவு செய்யப்பட்ட பிரிவெனாக்கள் நாடளாவிய ரீதியில் இயங்கி வருகின்றன. இவை ஆரம்ப பிரிவெனாக்கள், மஹா பிரிவெனாக்கள், பிரிவெனா வித்திதென, சிறப்பு பிரிவெனாக்கள், த்விபாஷா பிரிவினாக்கள் (இருமொழி), மற்றும் புத்த சீலமாதா பிரிவெனாக்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த பிரிவெனாக்களில் உள்ள சாதாரண மற்றும் மதகுரு மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 71,427 ஆகவும், கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் 7,591 ஆகவும் உள்ளனர். முறையான மதிப்பீட்டு செயல்முறையைப் பின்பற்றி 2022 ஆம் ஆண்டில் முதன்முறையாக 7,500 பிரிவின் பதவியணியினை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அரசு சுமார் 06 பில்லியன் ரூபாவினை 2023 ஆம் ஆண்டில் பிரிவெனா கல்விக்காக ஒதுக்கியுள்ளது

கட்டம் 10.2 | கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளின் தற்போதைய நடைமுறையை மறுபரிசீலனை செய்வதன் அவசியம்

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 01/2019 இன் விதிகளின் படி, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டில் நிதியளிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு வழிமுறையாக வெவ்வேறு வரிசை அமைச்சுக்களின் கீழ் கருத்திட்ட முகாமைத்துவ அலகுகள் நிறுவப்பட்டுள்ளன. குறிப்பிட்ட கருத்திட்ட நடவடிக்கைகளில் நேரடியாகவும் முழு நேரமும் ஈடுபடும் ஒரு நியமிக்கப்பட்ட குழுவைக் கொண்டிருக்கும் நோக்கத்துடன் இந்த குறிப்பிட்ட அலகுகள் உருவாக்கப்பட்டன, இதனால் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மேற்கூறிய திட்டங்களை நிறைவேற்ற இயலும் என்பதால், எதிர்பார்க்கப்படும் பொருளாதார மற்றும் சமூக கருத்திட்ட நன்மைகளை அடையக் கூடியதாக இருக்கும். அத்துடன், கருத்திட்ட அமுலாக்க முகாமைகளுக்குள் தேவையான திறன்கள் இல்லாத பட்சத்தில், குறிப்பிட்ட கருத்திட்ட செயற்பாடுகள் தொடர்பான சிறப்பு அறிவு மற்றும் அனுபவமுள்ள நபர்களைப் பெறுவதற்கான தேவையை கருத்திட்ட முகாமைத்துவ அலகுகள் இலகுபடுத்துகின்றன. 2022 ஆம் ஆண்டின் இறுதியில், 5.8 ரில்லியன் ரூபாய்கள் பெறுமதியான 260 பாரிய திட்டங்கள், பல்வேறு நிரல் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வளங்களின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்தன. மேற்கூறிய 260 பாரிய திட்டங்களில் 133 திட்டங்கள் கருத்திட்ட முகாமைத்துவ அலகுகள்[1] மூலம் செயற்படுத்தப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளை நிறுவுவதன் நோக்கங்கள் பல்வேறு திட்டங்கள் தொடர்பான சிக்கல்களால் திசைதிருப்பப்பட்டிருப்பது சமீபத்தில் கவனிக்கப்பட்டுள்ளது. முக்கிய காரணம் இந்த கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளை பராமரிப்பதற்கான செலவாகும். ஒவ்வொரு திட்டத்திற்கும் கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளை நிறுவுவது ஒரு போக்காக மாறியுள்ளது குறிப்பிட்டதொரு கருத்திட்டத்தை செயல்படுத்தும் முகவரகம் இது போன்ற திட்ட செயல்பாடுகளை செய்ய வேண்டும் என்ற அதிகாரமுள்ள சமயங்களில் ஒரு தனி கருத்திட்ட முகாமைத்துவ அலகு தேவை என்பதை நியாயப்படுத்தாது. அத்துடன், கருத்திட்டத் தயார்படுத்தல் மற்றும் கருத்திட்டத் தயார்நிலை அளவுகோல்களை போதுமான அளவு கருத்தில் கொள்ளாததால், கருத்திட்ட செயலாக்கத்தில் ஏற்பட்ட தாமதம், கணிசமான அளவில் மேலதிக கருத்திட்டச் செலவை ஏற்படுத்தியது.

சமீபகாலமாக நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரக் கட்டுப்பாடுகளால் இந்தப் பிரச்சினைகள் பல மடங்கு அதிகரித்துள்ளன 2022 ஏப்ரல் 12 அன்று நிதியமைச்சினால் அறிவிக்கப்பட்ட முற்கூட்டிய கடன் கொடாநிலையின் விளைவாக, நாடு முழுவதும் பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆதரவளித்த இருதரப்பு கடன் வழங்குநர்களிடமிருந்து நிதியுதவி நிறுத்தப்பட்டது. நடந்துகொண்டிருக்கும் கருத்திட்டப் பணிகளுக்கான நிதி வழங்கப்படாததாலும், எதிர்கால நிதியளிப்பின் நிச்சயமற்ற தன்மையாலும், பல வெளிநாட்டு நிதியுதவித் திட்டங்களின் திட்டமிட்ட செயல்பாடுகளைத் தொடரவும் முடிக்கவும் முடியாமல் போனது. மேலும், உள்ளூர் நிதியுதவி அல்லது வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள், மூலதனம் மற்றும் மீண்டெழும் செலவினங்கள் மீதான கடுமையான நிதிக் கட்டுப்பாடுகளுடன் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்கூறிய சூழ்நிலையானது அபிவிருத்தி திட்டங்களைச் செயல்படுத்துவதில் தடையாக இருந்தது, அதன் விளைவாக செயற்திட்ட நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன அல்லது ரத்து செய்யப்பட்டன, மறுபுறம், கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளை மேலும் தொடர வேண்டியதன் அவசியத்திற்கான வினாவினையும் இது எழுப்பியது.

1 கருத்திட்ட அலுவலகங்கள் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளை மதிப்பாய்வு செய்ய நியமிக்கப்பட்ட குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட 2022 நவம்பர் 24 ஆந் திகதிய அறிக்கை.

கட்டம் 10.2 கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளின் தற்போதைய நடைமுறையை மறுபரிசீலனை செய்வதன் அவசியம் தொடர்ச்சி...

அதன்படி, 2022 இடைக்கால வரவு செலவுத்திட்ட உரையின், வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இல. 10.5 மூலம் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி பல்வேறு நோக்கங்களுக்காக நிறுவப்பட்ட கருத்திட்ட அலுவலகங்கள் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளின் செயற்பாடுகளை மதிப்பாய்வு செய்ய ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழு 2022 நவம்பர் இல் அமைச்சரவைக்கு பரிந்துரைகளை சமர்ப்பித்தது. அமைச்சரவையின் ஒப்புதலுடன், 2023 ஆம் ஆண்டில் பரிந்துரைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் செயல்படுத்தப்படும் என்று கூறியது. முக்கிய பரிந்துரைகளில் 55 கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளை மூடுவது மற்றும் 32 கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளை நிறுத்துவது ஆகியவை அடங்கும். மேலும் குழு, முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 01/2019 இனை இரத்துச் செய்ய பரிந்துரைத்தது. அதன்படி, கருத்திட்ட அமுலாக்கத்தை ஆதரிக்கும் ஒரு புதிய வழிமுறை தயாரிக்கப்படும், மேலும் இந்த முறையானது, அமைச்சுக்களின் நடைமுறையிலுள்ள அமுல்படுத்தல் கட்டமைப்பிற்குள் மற்றும் குறிப்பாக நாட்டிற்கு குறைந்த செலவில் விரும்பிய திட்ட நோக்கங்களை அடைய உதவும்.

பகுதி IV

நிதிக்கூற்றுகள்

நிதி
அறிக்கை

வாசகர்களுக்கான குறிப்பு

நிதிச் செயலாற்றுகைக் கூற்று, நிதி நிலைமை பற்றிய கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, தேறிய சொத்துக்களின்/ உரிமைகளின் மாற்றம் பற்றிய கூற்று, ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களின் குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக 2022 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்கள், த்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதி நிலைமை கூற்றுக்களின் மூலம் அரசாங்கத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி எடுத்துக்காட்டப்படுகின்ற அதேவேளையில், நிதி செயலாற்றுகை கூற்றின் மூலம் வருமானத்தை திரட்டுதல் சம்பந்தமாக அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மற்றும் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 09 ஆம் தேதி 21 ஆம் ,லக்க சட்டத்தின் மூலமும் 2022 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதி 42 ஆம், லக்க சட்டத்தின் மூலமும திருத்தப்பட்ட 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் தேதி 30 ஆம் ,லக்க ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு அமைவாக 2022 ஆம் ஆண்டுக்கான பத்தொன்பது (19) விசேட செலவின அலகுகள், ருபத்தொன்பது (29) அரசாங்க அமைச்சுக்கள், தொண்ணூற்றெட்டு (98) அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும், ருபத்தைந்து (25) மாவட்ட செயலகங்கள் ஆகியவற்றுக்காக வழங்கப்பட்ட வளப் பயன்பாடு மற்றும் நிதிப் பற்றாக்குறைக்கு நிதியிடும் விதம் என்பவற்றை எடுத்துக் காட்டுகின்றது. மேலும், ,ந்த நிதி கூற்றுக்களின் மூலம் ஐம்பது (50) வர்த்தக ரீதியான அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அரசாங்க முதலீட்டு பங்களிப்பு அல்லது பங்கு உரிமை உள்ள தொண்ணூற்று நான்கு (94) அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பெனிகள்/ பெருந்தோட்ட கம்பனிகளள்/ அமெரிக்க டொலரின் மூலம் ஆதிக்கம் செலுத்தும் கம்பெனிகள், ஒரு (01) அபிவிருத்தி வங்கி மற்றும் ஒன்பது 09) மாகாண சபைகள் ஆகியவற்றுக்காக மத்திய அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி வளங்கள் பற்றிய தகவல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

2003 ஆம் ஆண்டின் 03 ஆம், லக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, லங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பெறுபேறுகள் மற்றும் நிதி நிலைமையை எடுத்துக்காட்டக் கூடியவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் வேண்டும். தற்கு மேலதிகமாக அரசியலமைப்புச் சட்டத்தின் 149 மற்றும் 150 ஆம் பிரிவுகளின் கீழ் அந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்க வேண்டியுள்ளபடியினால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கையை எல்லா சந்தர்ப்பத்திலும் பின்பற்ற முடியாது. அதன் பிரகாரம், அவ்வாறு விலகிச்செல்கிற சந்தர்ப்பங்களில் அவ்வாறு விலகிச்செல்வதற்கான காரணங்களையும் அதற்கு ஏற்புடையதாக்கிக் கொள்ளப்பட்ட மாற்று கணக்கீட்டு கொள்கையும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றது.

மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையிலான கணக்கீட்டு கொள்கை நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற அதேவேளையில், தன்போது காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களின் மூலம் தோன்றுகின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை முடியுமான வரையில் நிதிக் கூற்றுக்களில் சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கணனிமயப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த அரசாங்க கணக்கீட்டு மென்பொருள் (சிகாஸ்) நிகழ்ச்சித்திட்டம் 2015 ஆம் ஆண்டு முதல் நிதி அல்லாத சொத்துக்களின் தகவல்களை நிதிக் கூற்றுக்களினூடாக அறிக்கையிடக்கூடிய விதமாக மேலும் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

பொறுப்புக்கள் பற்றிய கூற்று

அரச கணக்குகள் திணைக்களத்தினால் ,ந்த நிதிக் கூற்றுக்கள் ,லங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 149 மற்றும் 150 ஆம் பிரிவுகளிலும், அத்துடன் 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் ,லக்க நிதி முகாமைத்துவம் (பொறுப்புச்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ,ணங்கியதாக தயாரிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு முறைமை மற்றும் திறைசேரியின் சுற்றறிக்கைகளுக்கும் ,ணங்கியதாகும். அதே சமயம் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டபடி மிகவும் பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்தப்படுகின்றன.

அறிக்கையிடப்படுகின்ற கொடுக்கல்வாங்கல் நியதிச்சட்டமுறை அதிகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது என்பதையும் ஒதுக்கீட்டுச் சட்டம் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டின் பயன்பாடு பற்றி உரிய விதத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளது என்பதையும் நியாயமாக உறுதிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டு தொகுதியொன்றை தாபித்து, பேணிவருவது பொது திறைசேரியின் பொறுப்பாகும்.

,தனுடன் காணப்படுகின்ற "கணக்கீட்டு கொள்கை பற்றிய கூற்று" மற்றும் "நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்" ,ந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும். அரச கணக்குகள் திணைக்களம் ,ந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரியாகும்.

.....
டபிள்யு.ஏ. சமன்த உபனந்த
பணிப்பாளர் நாயகம்
அரச கணக்குகள் திணைக்களம்

.....
கே.எம்.மகிந்த சிறிவர்த்தன
செயலாளர்
நிதி,பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு திறைசேரியின் செயலாளர்

பொதுத் திறைசேரி
கொழும்பு - 01
2023 மார்ச் ஆம் திகதி

நிதிச் செயலாற்றுகைக் கூற்று

2022 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான

		உண்மை நிலை	
	குறிப்பு	2022 ரூபா.	2021 ரூபா.
வருமானம்			
வரி வருமானம்		**1,751,132,076,743**	**1,298,019,059,952**
வருமான வரி	1	534,020,830,117	302,115,199,047
உள்ளூர் பொருட்கள் சேவைகள் மீதான வரி	2	872,866,921,923	643,085,821,017
சர்வதேச வர்த்தகம் தொடர்பிலான வரிகள்	3	344,244,324,703	352,818,039,888
வரியற்ற வருமானம் மற்றும் ஏனையவைகள்	4	**247,656,485,315**	**168,882,688,007**
மொத்த வருமானம் (அ)		**1,998,788,562,058**	**1,466,901,747,959**
கழி : செலவினம்			
சம்பளம், கூலி மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	712,944,725,052	611,993,870,409
ஏனைய பொருட்கள் சேவைகள்	6	239,834,649,098	218,380,545,886
மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றங்கள்	7	1,021,054,450,565	878,372,338,301
வட்டிக் கொடுப்பனவுகள்	8	1,565,189,627,374	1,048,382,440,515
ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	**213,436,451**	**213,890,682**
மொத்த மீண்டுவரும் செலவினம் (ஆ)		**3,539,236,888,540**	**2,757,343,085,792**
வருமானப் பற்றாக்குறை (அ)-(ஆ)		1,540,448,326,483	1,290,441,337,833
அரசாங்க முதலீடுகள்	10	**1,014,292,931,441**	**789,636,210,652**
பாதீட்டுப் பற்றாக்குறை		2,554,741,257,924	2,080,077,548,485
பாதீட்டுப் பற்றாக்குறைகளுக்கான நிதியிடல்			
வெளிநாட்டுக் கடன் பெறுகைகள்	11	783,326,415,649	516,606,370,092
வெளிநாட்டுக் கடன் மீளக் கொடுப்பனவுகள்		**(358,504,739,872)**	**(530,507,831,086)**
தேறிய வெளிநாட்டுக் கடன் பெறுகைகள்		424,821,675,777	(13,901,460,995)
வெளிநாட்டுக் கொடைகள்	12	**33,402,403,963**	**6,739,545,252**
மொத்த வெளிநாட்டு நிதியிடல்		458,224,079,740	(7,161,915,743)
உள்நாட்டு வங்கியல்லாக் கடன் பெறுகைகள்	13	4,218,528,886,900	2,519,420,543,584
உள்நாட்டு கடன் மீள்கொடுப்பனவுகள்	14	**(1,073,950,438,577)**	**(801,708,208,303)**
தேறிய உளநாட்டுக் கடன் பெறுகைகள்		3,144,578,448,323	1,717,712,335,281
உள்நாட்டு மானியங்கள்	15	2,645,500	-
வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள்	16	60,482,742,905	15,155,729,205
மூலதன சொத்துக்களின் விற்பனை		584,212,972	188,384,750
வைப்புக் கணக்குகள் மற்றும் பொறுப்புக்களின் தேறிய மாற்றம்		(294,583,038,486)	19,598,069,646
காசு, மற்றும் காசுக்குச் சமமானவைகளின் அதிகரிப்பு - வீழ்ச்சி		**(769,547,833,029)**	**334,584,945,346**
மொத்த நிதியிடல்		**2,554,741,257,924**	**2,080,077,548,485**

நிதி நிலைமைக் கூற்று

2022 டிசம்பர் 31ல் உள்ளவாறான

	குறிப்பு	உண்மை நிலை	
		2022 ரூபா	2021 ரூபா
நிதிச் சொத்துக்கள்	17	2,093,287,997,716	1,850,007,342,256
காணி		1,010,203,611,484	992,116,029,261
கட்டடம்		375,071,254,691	348,232,804,726
ஏனைய சொத்துக்கள்		708,013,131,541	509,658,508,269
நிதிச் சொத்துக்கள் (ஆ)		2,710,511,445,614	988,010,842,020
அரச ஊழியர்களுக்கான கடன்கள்	18	30,469,406,491	31,356,235,383
அரச திணைக்களங்களுக்கான முற்பணங்கள்	19	16,093,892,983	15,727,677,353
செலுத்தப்பட்ட அங்கத்துவக் கட்டணம்	20	2,900,368,322	2,900,368,322
மீள் கடன் செலுத்துகை	21	**491,552,273,430**	**173,491,458,394**
அரசவுடமை நிறுவனங்களுக்கான மூலதனப் பங்களிப்பு	22	**2,165,981,657,905**	**760,777,405,378**
வாடகை மற்றும் முன் வேலை	23	**1,666,563,995**	**2,256,451,263**
முத்திரை இருப்புக் கணக்கு		**1,847,282,488**	**1,501,245,927**
மொத்த சொத்துக்கள்(இ)=(அ)(ஆ)		4,803,799,443,330	2,838,018,184,276
நியதிச்சட்ட சபைகள் மற்றும் ஏனைய நிதிகள் (ஈ)		(22,477,362,524,574)	(14,979,010,260,682)
திரட்டு நிதி	24	73,639,939,070	(990,490,932,444)
எதிர்பாராத செலவு நிதி		500,000,000	500,000,000
வெளிநாட்டுக் கடன் சுழற்சி நிதி	25	**72,489,344,533**	**48,852,791,091**
நானாவிதக் கணக்குகள்	26	**2,807,316,389**	**2,426,012,245**
தேறிய சொத்து இணக்கக் கணக்கு	27	(22,626,799,124,566)	(14,040,298,131,574)
பொறுப்புகள் (உ)		27,281,161,967,904	17,817,028,444,958
வங்கி மீதி	28	28,905,752,213	798,453,585,243
மத்திய வங்கியிடமிருந்து முற்பணம்	29	235,638,700,400	150,128,800,400
வெளிநாட்டுக் கடன் சுழற்சி நிதி	30	27,379,287,617,613	16,826,830,788,866
வைப்புக்கள்	31	**101,151,327,336**	**82,313,142,224**
அரச திணைக்களங்களுடனான தொழிற்படும் கணக்குகள்	32	**(478,331,952,972)**	**(14,137,207,250)**
நானாவித கணக்குகள்	33	14,510,523,313	(26,560,664,524)
மொத்த நிதியும் பொறுப்புகளும் (ஊ)=(ஈ), (உ)		4,803,799,443,330	2,838,018,184,276

நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள் மற்றும் தொடர்புடைய திறைசேரி சுற்றறிக்கைகளுக்கு இணங்குகின்றன.அதே சமயம் நிதி கூற்றுக்களுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டபடி மிகவும் பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்தப்படுகின்றன.

.....

டபிள்யு.ஏ. சமன்த உபனந்த
பணிப்பாளர் நாயகம்
அரச கணக்குகள் திணைக்களம்

.....

கே.எம்.மகிந்த சிறிவர்த்தன
செயலாளர்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
திறைசேரியின் செயலாளர்

நிதிப் பாய்ச்சல் கூற்று

2022 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான

பாதீட்டு மதிப்பீடு - 2022 ரூபா.		உண்மை நிலை - 2022 ரூபா.	உண்மை நிலை - 2021 ரூபா.
	தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
1,852,000,000,000	மொத்த வரிப் பெறுகைகள்	1,751,132,076,743	1,298,019,059,952
60,885,000,000	கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	65,917,167,274	39,199,989,240
34,700,000,000	இலாபம்	22,004,727,426	25,918,973,952
141,115,000,000	ஏனைய பெறுகைகள்	146,321,290,402	92,625,878,430
-	**அரச ஊழியர்களுக்கான கடன்கள்**	**886,828,892**	**257,488,840**
-	அரச திணைக்களங்களுக்கான முற்பணங்கள்	-	55,397,250
-	வைப்புக்கள்	18,838,185,112	4,059,864,141
-	அரச திணைக்களங்களுடனான தொழிற்படும் கணக்குகள்	-	25,258,647,012
-	நானாவிதக் கணக்குகள்	41,071,187,837	84,494,311
2,088,700,000,000	தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்தக் காசு (அ)	2,046,171,463,688	1,485,479,793,128
	கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
1,012,440,658,365	ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	952,779,374,151	830,374,416,294
1,147,780,882,824	மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	1,021,054,450,565	878,372,338,301
1,429,479,838,000	நிதிச் செலவுகள்	1,565,403,063,825	1,048,596,331,197
-	அரசாங்க திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள	366,215,630	-
-	முத்திரை இருப்புக் கணக்கு	346,036,561	162,610,162
	அரசாங்க திணைக்களங்களுடன் செயற்படுத்தப்படும் கணக்குகள்	464,194,745,722	-
3,589,701,379,189	**தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)**	**4,004,143,886,453**	**2,757,505,695,954**
(1,501,001,379,189)	**தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)**	**(1,957,972,422,765)**	**(1,272,025,902,826)**
	முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
7,000,000,000	**வட்டி**	**7,325,545,826**	**6,465,927,143**
6,300,000,000	**பங்கு இலாபம்**	**6,087,754,385**	**4,671,919,242**
700,000,000	பங்குகளை விலக்கல் மற்றும் பௌதிக சொத்துக்களின் விற்பனை	584,212,972	188,384,750
271,000,000,000	வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள்	60,482,742,905	15,155,729,205
285,000,000,000	முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான மொத்தக் காசு (ஈ)	74,480,256,089	26,481,960,340
	கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
1,180,382,539,009	கொள்வனவு அல்லது பௌதிகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	1,014,292,931,441	789,636,210,652
1,180,382,539,009	முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	1,014,292,931,441	789,636,210,652
(895,382,539,009)	**முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)**	**(939,812,675,353)**	**(763,154,250,312)**
(2,396,383,918,199)	**தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இஊ)**	**(2,897,785,098,118)**	**(2,035,180,153,138)**
	நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
2,472,242,400,590	உள்ளூர்க் கடன்கள்	**4,218,528,886,900**	**2,519,420,543,584**
785,083,995,745	வெளிநாட்டுக் கடன்கள்	**783,326,415,649**	**516,606,370,092**
10,000,000,000	பெற்ற நன்கொடைகள்	**33,405,049,463**	**6,739,545,252**
-	வெளிநாட்டு கடன் சுழற்சி நிதியம்	**23,636,553,442**	-
-	இதர நிதிகள்	**381,304,143**	**381,689,949**
-	மத்திய வங்கியிடமிருந்து பெறப்பட்ட முற்பணம்	**85,509,900,000**	-
3,267,326,396,335	**நிதிச் செயற்பாடுகளிலிருந்தான மொத்தக் காசு (ஏ)**	**5,144,788,109,597**	**3,043,148,148,877**
	கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:		
1,135,470,000,000	**உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்**	**1,073,950,438,577**	**801,708,208,303**
375,000,000,000	**வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்**	**358,504,739,872**	**530,507,831,086**
-	**வெளிநாட்டுக் கடன் சுழற்சி நிதி**	-	**7,386,630,695**
-	**மத்திய வங்கியிடமிருந்து முற்பணம்**	-	**2,950,271,000**
-	**உள்நாட்டு தவணைக் கடன் வசதியை திறைசேரி உண்டியலுக்கு மாற்றுதல்**	**45,000,000,000**	-
1,510,470,000,000	**நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)**	**1,477,455,178,450**	**1,342,552,941,085**
1,756,856,396,335	**நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** (x)=(V)-(I)	**3,667,332,931,147**	**1,700,595,207,792**
(639,527,521,864)	**காசில் ஏற்பட்ட தேறிய அசைவு** (X)=(v)+ (x)	**769,547,833,029**	**(334,584,945,346)**
	ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	**(798,453,585,243)**	**(463,868,639,897)**
	டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	**(28,905,752,213)**	**(798,453,585,243)**

தேறிய சொத்து / பங்குகளின் மாற்றங்களின் கூற்று

2022 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான

ரூபா.

விபரம்	அரச பங்களிப்புகள்				மொத்த தேறிய சொத்து/பங்குகள
	திரட்டு நிதி	எதிர்பாரா நிதியம்	வெளிநாட்டு கடன் சுழற்சிநிதியம்	நாணாவித நிதியம்	
2020.12.31 ஆம் திகதிக்கேற்ப மீதி	(636,307,917,453)	500,000,000	56,239,421,786	2,044,322,296	(577,524,173,371)
	(636,307,917,453)	**500,000,000**	**56,239,421,786**	**2,044,322,296**	**(577,524,173,371)**
2021 ஆம் ஆண்டிற்கான தேறிய சொத்து/ பங்குகளின் மாற்றம்					
திரட்டு நிதியின் தேறிய மாற்றம்	(354,183,014,992)				(354,183,014,992)
எதிர் பாராத செலவு நிதியின் தேறிய மாற்றம்		-			-
வெளிநாட்டு கடன் சுழற்சி நிதியின் தேறிய மாற்றம்			(7,386,630,695)		(7,386,630,695)
நாணாவித நிதியின் தேறிய மாற்றம்				381,689,949	381,689,949
2021.12.31 ஆம் திகதியின் மீதி	**(990,490,932,444)**	**500,000,000**	**48,852,791,091**	**2,426,012,245**	**(938,712,129,108)**
2022 ஆம் ஆண்டிற்கான தேறிய சொத்து /பங்குகளின் மாற்றம்					
திரட்டு நிதியின் தேறிய மாற்றம்	1,064,130,871,515				1,064,130,871,515
எதிர் பாராத செலவு நிதியின் தேறிய மாற்றம்		-			-
வெளிநாட்டு கடன் சுழற்சி நிதியின் தேறிய மாற்றம்			23,636,553,442		23,636,553,442
நாணாவித நிதியின் தேறிய மாற்றம்				381,304,143	381,304,143
2022.12.31 ஆம் திகதியின் மீதி	**73,639,939,070**	**500,000,000**	**72,489,344,533**	**2,807,316,388**	**149,436,599,992**

நடப்பு ஆண்டு உண்மைக்கு எதிராக திட்டமிட்டது

2022 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான

ரூபா.000

	ஆரம்ப வரவு செலவு	திருத்தப்பட்ட	உண்மை	வேறுபாடு	%
வருமானம்					
வரி வருமானம்	1,987,000,000	1,852,000,000	1,751,132,077	100,867,923	5
வருமான வரி	496,000,000	558,000,000	534,020,830	23,979,170	4
உளளூர் பொருட்கள் சேவைகள் மீதான வரி	1,027,960,000	968,968,000	872,866,922	96,101,078	10
சர்வதேச வர்த்தகம் தொடர்பிலான வரிகள்	463,040,000	325,032,000	344,244,325	(19,212,325)	-6
வரியற்ற வருமானம் மற்றும் ஏனையவைகள்	244,000,000	250,000,000	247,656,485	2,343,515	1
வெளிநாட்டுக் கொடைகள்	10,000,000	9,900,000	33,402,404	(23,502,404)	-237
உள்நாட்டு மானியம்	–	100,000	2,646	97,355	97
வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள்	19,000,000	271,000,000	60,482,743	210,517,257	78
மூலதன சொத்துக்களின் விற்பனை	500,000	700,000	584,213	115,787	17
மொத்த வருமானம்	**2,260,500,000**	**2,383,700,000**	**2,093,257,922**	**290,342,078**	**12**
செலவினம்					
சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	**739,601,934**	**731,474,117**	**712,944,725**	**18,529,392**	**97**
ஏனைய பொருட்கள் சேவைகள்	**255,644,580**	**280,966,541**	**239,834,649**	**41,131,892**	**85**
மானியங்கள், கொடைகள். மற்றும் மாற்றங்கள்	**1,211,226,685**	**1,147,780,883**	**1,021,054,451**	**126,726,432**	**89**
வட்டிக் கொடுப்பனவுகள்	1,379,349,984	1,630,349,984	1,565,189,627	65,160,357	96
ஏனைய மீண்டுவரும் செலவினம	50,129,854	926,480	213,436	713,043	23
மொத்த மீண்டுவரும் செலவினம்	3,635,953,037	3,791,498,005	3,539,236,889	252,261,117	93
அரசாங்க முதலீடுகள்	1,084,926,963	1,180,382,539	1,014,292,931	166,089,608	86
வெளிநாட்டுக் கடன் மீளக் கொடுப்பனவுகள்	**375,000,000**	**375,000,000**	**358,504,740**	**16,495,260**	**96**
உள்நாட்டு கடன் மீளக்கொடுப்பனவுகள்	**1,135,470,000**	**1,135,470,000**	**1,073,950,439**	**61,519,561**	**95**
மொத்தச் செலவினம்	**6,231,350,000**	**6,482,350,544**	**5,985,984,998**	**496,365,546**	**92**

கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றிய கூற்று

அறிக்கையிடும் நிறுவனம்

அரசாங்கத்தின் இந்நிதிக் கூற்றுக்களின் அறிக்கையிடும் அலகுகளாக அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், விசேட செலவு அலகுகள் மற்றும் மாவட்ட செயலகங்கள் உட்பட "அரசாங்கத்தை" உள்ளடக்குகின்றது. எவ்வாறாயினும், இதில் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், அரசுடைமை தொழில்முயற்சிகள், அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகள் அல்லது ஏனைய கம்பனிகள் மற்றும் நியதிச் சட்டசபைகள் என்பன உள்ளடக்கப்படவில்லை. அறிக்கையிடும் வருடக் காலப்பகுதியில் மத்திய அரசாங்கத்திலிருந்து அந்த நிறுவனங்களுக்காக இடம்பெற்ற அத்தகைய காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் மூலதன உதவுதொகை அல்லது கடன்கள் என்ற வகையில் அவ்வாறான அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அரசுடைமை தொழில்முயற்சிகள், அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகள் அதேபோன்று ஏனைய கம்பனிகளில் காணப்படுகின்ற அரசாங்கத்தின் முழுமையான தொடர்புகள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. மாகாண சபைகளின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் அளவுரீதியாக மத்திய அரசாங்கத்தினால் நிருவகிக்கப்படாதபடியினால் அந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாக மாகாண சபைகளின் வருமானம் மற்றும் செலவினம் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

டிசெம்பர் 31 இ 2022 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தயாரிப்பு அடிப்படை

இந்நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க வரலாற்றுக் கிரய சம்பிரதாயத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில் அளவீட்டு அடிப்படையில் வரலாற்று கிரயமும் கணக்கீட்டுக்காக மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையிலான கணக்கீடும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நிதிப் பாய்ச்சல் கூற்று நேரடியான முறைமையைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டது.

ஏதேனும் சுட்டிக் காட்டப்பட்ட இடங்களைத் தவிர நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சகல பெறுமதிகளும் கிட்டிய ரூபாவில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

அறிக்கையிடும் காலம்

2022 சனவரி 01 இருந்து டிசெம்பர் 31 வரையான காலப் பகுதி இந்நிதிக் கூற்றுக்களின் அறிக்கையிடும் காலப் பகுதியாகும்.

ஒன்றிணைப்பின் அடிப்படை

ஒருங்கிணைந்த கணக்குகளைத் தயாரிப்பதற்காக அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் வரவுசெலவு வகைப்படுத்தலில் குறிப்பாகக் காட்டப்பட்டுள்ள குறியீட்டுக்கு அமைவாக செலவழிக்கப்பட்ட செலவினம் மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானம் என்பவற்றை வகுப்பீட்டுக் குறியீடுகளைப் பயன்படுத்தி நிதிச் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் என்ற விதமாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

வருமானம்

மத்திய அரசாங்கத்தினால் வருமானத்தினைக் கொடுக்காத பல பொருட்களையும் சேவைகளையும் மற்றும் நன்மைகளையும் மக்களுக்கு வழங்குகின்றது. பாராளமன்றத்தினால் அத்தகைய பொருட்கள் சேவைகள் மற்றும் நன்மைகளை வழங்கும் போது ஏற்படும் செலவுகளுக்கு நிதியீட்டுவதற்காக தேவைப்படும் வருமானமானது பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் விதிக்கப்பட்ட வரிகள், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் என்பவற்றினூடாக பெறப்படுகின்றது. தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினூடாக அதேவிதமாக சேகரிக்கப்படுகின்ற வருமானங்கள் உழைக்கப்பட்டு சேகரித்த காலத்திலேயே அடையாளங்கண்டு கணக்கு வைக்கப்படுகின்றது. முதலீட்டு வருமானமானது, அந்த வருமானம் உண்மையில் திரட்டப்பட்ட காலப்பகுதியிலேயே கணக்கு வைக்கப்படுகின்றது.

வட்டங்களும் கழிவுகளும்

கடன் ஆவணமொன்று வழங்கலின் மீது ஏற்படும் வட்டங்களும் கழிவுகளும் பெறப்படும் கடன்களின் கிரமமான வட்டிக்கு செம்மையாக்கல் செய்தல் மூலம் கணக்கீடு செய்யப்படுகிறது.

செலவுகள்

எல்லாச் செலவுகளும் அவை செலவழிக்கப்பட்ட வருடத்திலேயே கணக்கு வைக்கப்படுகின்றன.

வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள்

வெளிநாட்டு நாணயங்களில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் அவை நடைபெற்ற திகதியிலிருந்த நாணயமாற்று வீதத்தினை பயன்படுத்தியே இலங்கை ரூபாய்க்கு மாற்றப்படுகின்றது. அதன் பிரகாரம் இக்கொடுக்கல் வாங்கல்களை தீர்த்துக் கொள்வதன் போது ஏற்படும் நாணயமாற்று வித்தியாசங்கள் தொடர்புடைய பிரதான பேரேடுகளில உரியபடி கவனத்திற்கெடுத்து கணக்கிடப்படுகின்றது.

முதலீடுகள்

அரச உடமை தொழில்முயற்சிகளில் மேற்கொள்ளப்படும் உரிமை முதலீடுகள் கிரயத்தில் பதியப்பட்டு நிதிக் கூற்றுக்களில் வேறாகக் காட்டப்படுகின்றன. ஆனால், நியதிச் சட்டசபைகள் அவர்களது மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக ஏனைய திணைக்களங்களைப் போன்று அரசாங்கத்தினை நம்பி இருப்பதால் நியதிச் சட்டசபைகளுக்காக செய்யப்படும் முதலீடுகள் கணக்குகளில் வேறாகக் காட்டப்படுவதில்லை.

பெறுகைகள்

நிதி நிலைமை பற்றிய கூற்றில் காட்டப்படுகின்ற எல்லா உள்ளூர் பெறுகைகளும் நிதிநிலைவரக் கூற்றில்

கிரயத்தில் பதியப்படுகின்றன. வெளிநாட்டு பெறுகைகள் சம்பந்தமாக நாணயமாற்று வீத வேறுபாடுகளுக்கு ஏற்புடையதாக இருக்குமிடத்து அத்தகைய வெளிநாட்டு நிதி, அறிக்கையிடப்படும் வருடத்தின் இறுதியில் உள்ளவாறான நாணயமாற்று வீதத்தைப் பயன்படத்தி இலங்கை ரூபாவுக்க மாற்றப்படுகின்றன. கடன் பற்றிய விபரக் கறிப்பு இல - 29(I) மறறும் 29(II) மூலம் காட்டப்பட்டுள்ளது.

ஊழியர் உரிமைகள்

சம்பளங்களும் கூலிகளும், வருடாந்த விடுமுறைகள், இளைப்பாற்று விடுமுறைகள் மற்றும் ஏனைய நன்மைகளுக்கு அரசாங்க ஊழியர்களுக்கு உள்ள உரிமைகள் உண்மையாகவே ஊழியர்கள் பயன்படுத்துகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது உண்மையாக ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அறிக்கையிடப்படுகின்றன. இளைப்பாறிய அரச ஊழியர்களின் இளைப்பாற்றுக் கொடுப்பனவுக்கான உரிமைகளும் அதே அடிப்படையிலேயே பதிவுசெய்யப்படுகின்றது.

நிகழக்கூடிய பொறுப்புக்கள் மற்றும் அர்ப்பணிப்புகள்

நிகழக்கூடிய பொறுப்புக்கள் மற்றும் அர்ப்பணிப்புக்களைப் பொறுத்தவரை அவை எப்பொழுது வெளிப்படுகின்றதோ அத்தருணத்திலேயே நிகழக்கூடிய பொறுப்புக்கள் கூற்றில் பதியப்படுகின்றன. 2022 இல் ரூபாய் 1,292,180,874,993ம் 2021 இல் ரூபாய் 1,583,335,901,659ம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. (அட்டவணை I)

ஒப்பீடுகள்

நிதித் தகவல்களை போதுமான நியாயமான முறையில் வெளியீடு செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட நடைமுறை காலப்பகுதிக்கு ஏற்ப வகுப்பீட்டுமுறைமை என்பன தொடர்பில் சீரான கொள்கையினை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு பொருத்தமான இடங்களில் ஒப்பீட்டுப் பெறுமானங்கள் மீண்டும் கொடுக்கப்பட்டுள்ளன.

வங்கி மீதி

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசின் நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களிலான/ மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அரசின் நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, இதனுடன் சமர்ப்பிக்கப்படும் அரசின் நிதிக்கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1.2.1 அரசின் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பிலான கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்று ஆகியவற்றுக்கிடையே நேரடியான தொடர்பொன்று காணப்படவில்லை. அதாவது நிதிச் செயலாற்றல் கூற்றின் மூலம் தனியாக மீளாய்வாண்டுக்குரிய வரவு செலவுத்திட்டத்திற்குரிய உண்மையான நிலைமையின் பிரதிபலிப்பொன்று மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ஆண்டுக்குரிய பற்றாக்குறையொன்று அல்லது மிகையொன்று கணிப்பிடப்பட்டு அந்த பற்றாக்குறை அல்லது மிகை நிதி நிலைமைக்கூற்றில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் நிதி நிலைமைக்கூற்று ஒன்றுக்கொன்று வேறுபட்டுக் காணப்பட்டது.

(ஆ) நிதி நிலைமைக்கூற்றின் நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியங்களின் கூட்டுத்தொகையாக ரூபா 22,477,362,524,574 ஆன வரவு மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், உரிமை மூலதனதிலான மாற்றங்கள் கூற்றில் ரூபா 149,436,599,992 ஆன செலவுப் பெறுமதியொன்று மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன்போது உரிமை மூலதனம் தொடர்பில் நேரடியாக மற்றும் பொருண்மையாக தாக்கமளிக்கும் தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கின் வரவு மீதியான ரூபா 22,626,799,124,566 பெறுமதி உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடங்கியுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாததாக வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோருக்கு மற்றும் அது தொடர்பில் அக்கறையுடைய தரப்பினருக்கு எதிர்வரும் வருடத்தில் அரசினால் செலுத்தி தீர்க்கப்பட வேண்டிய வெளிவாரிப் பொறுப்புகள் தொடர்பில் தெளிவான அபிப்பிராயமொன்றை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஈ) நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் மொத்த வெளிவாரி பொறுப்புகளின் பெறுமதி ரூபா 27,281,161,967,904 ஆன போதிலும், அதற்கு ஒப்பாக மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 4,803,799,443,330 மாத்திரமானமையால் மொத்த சொத்துக்களை விட மொத்த வெளிவாரிப் பொறுப்புகள் ரூபா 22,477,362,524,574 இனால் விஞ்சியிருந்தது.

(உ) அரசின் நிதிக்கூற்றினுள் காணிகள், புத்துருவாகும் பணிகள் நீங்கலாக ரூபா 775,918 மில்லியன் கூட்டுப் பெறுமதியுடைய நிதியல்லாத சொத்துக்களுக்காக அந்த சொத்துக்களின் பெறுமானத் தேய்விடக்கூடிய பெறுமதி அதன் பயன்படு ஆயுட்காலம் முழுவதும் கிரமமான முறையில் ஒதுக்கீடு செய்து விவேகமான கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலம் கழிக்கப்பட்டு ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. அதற்கமைய இந்த சொத்துக்களின் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட அழிவுநட்டம் காணப்படின் அது கழிக்கப்பட்ட பின்னர் கிடைக்கும் கொண்டுசெல்லும் பெறுமதி (Carrying amount) தொடர்பில் அரசின் நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோருக்கு திட்டவட்டமான அறிவினை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(ஊ) அரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள காசுப்பாய்ச்சல்கூற்றின் நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலினுள் மானியங்களாக ரூபா 33,405,049,463 உள்ளடங்கியிருந்த போதிலும், அந்த பெறுமதியினுள் காசு உட்பாய்ச்சலொன்று அல்லாத ரூபா 19,487,743,093 பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் மானியங்களாக பெறுவனவுகள் உள்ளடங்கியிருந்தது.

(எ) மீளாய்வாண்டினுள் ரூபா 45,000,000,000 ஆன உள்நாட்டு மற்றும் கால அடிப்படையிலான கடன் மீதியொன்று திறைசேரி உண்டியல்களாக மாற்றப்பட்டிருந்ததுடன், அதன்போது எதுவித காசுப்பாய்ச்சலும் உருவாகவில்லை. எவ்வாறான போதிலும், அது மீளாய்வாண்டினுள் இடம்பெற்ற காசுப்பாய்ச்சலாக கருதி நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், இந்த பெறுமதி நிதிச் செயலாற்றல் கூற்றில் வரவு செலவுத்திட்ட நிதியீட்டத்தின் கீழான உள்நாட்டுக் கடன் பெறுவனவுகள் மற்றும் வைப்புகள் மற்றும் பொறுப்புக்களினது தேறிய மாற்றங்களினுள்ளும் உள்ளடங்கியிருந்தது.

(ஏ) 2020 ஆம் ஆண்டின் போது, காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலினுள் உள்ளடங்கியிருந்த வைப்புக்கள் மற்றும் ஏனைய பொறுப்புகளின் தேறிய மாற்றங்களின் பெறுமதி, 2021 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு உரிய காசுப்பாய்ச்சல்களினுள் தனித்தனியாக காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அந்த பெறுமதிகளில் உள்ளடங்கியுள்ள காசுப்பாய்ச்சல்கள் திரண்ட நிதியத்தினுள் உள்ளடங்கியிருந்ததுடன், அதன் காரணமாக வைப்புக்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்களின் பெறுமதிகளிலான தேறிய மாற்றங்கள் திரண்ட நிதியத்திற்கு சேர்ப்பனவாக சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டினுள் வைப்புகள் மற்றும் பொறுப்புகளினுள் தேறிய மாற்றங்களாக ரூபா 294,583,038,486 திரண்ட நிதியத்திலிருந்து அகற்றுதலாக (Reverse) பதிவு செய்யும் அரசியலமைப்பின் 150(1) உறுப்புரையுடன் முரண்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஐ) திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்திற்கு எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியத்திலிருந்து 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,022,280,600 தொகை 2022 ஆம் ஆண்டின் அரசின் நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமைக்கூற்றின் பொறுப்பொன்றாக மறைப் பெறுமதியொன்றாக காண்பிக்கப்பட்டு நானாவித கணக்குகளின் கீழ் எரிபொருள் விலை உறுதிப்பாட்டு கணக்காக பெயரிடப்பட்டு தவறுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் இலங்கை மத்திய வங்கியின் இலாபங்களிலிருந்து அரசாங்கத்திற்கு சாட்டுதலாக்கப்பட்டிருந்த ரூபா 30,007,245,202 ஆக காணப்பட்டதுடன், இலங்கை மத்திய வங்கியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா 31,035,788,000 ஆகும். அதற்கமைய ரூபா 1,028,542,798 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஓ) பொது முயற்சிகளுக்கு வழங்கப்பட்டிருந்த அரசின் மீண்டெழும் மானியங்கள் மற்றும் மூலதன மானியங்கள், குறித்த நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதிகளுடன் ஒப்பிடும் போது தேறிய பெறுமதி முறையே ரூபா 38.5 மில்லியன் மற்றும் ரூபா 16.52 மில்லியனால் குறைத்து அரசின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

1.2.2 வெளிநாட்டு அரச கடன்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கமைய, 2022 ஆம் ஆண்டு மற்றும் 2021 ஆம் ஆண்டுகளினுள் அல்லது அதற்கு முன்னர் தீர்வையான போதிலும் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கணக்கு வைக்கப்படாத வெளிநாட்டு கடன்களின் பெறுமதி முறையே ரூபா 10,665.4 மில்லியன் மற்றும் ரூபா 3.6 மில்லியன் ஆகும். அவ்வாறான போதிலும், திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தினால் சமர்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் நிலவிய அன்னிய செலாவணி மாற்று வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வினால் மேற்கொண்ட கணிப்பீடுகளுக்கமைய இவ்வாறு கணக்கு வைக்கப்படாத வெளிநாட்டுக் கடன்களின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மொத்த பெறுமதி ரூபா 11,700.6 மில்லியன் ஆகும். அதற்கமைய ரூபா 1,031.5 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, மீளாய்வாண்டினைப் போன்றே இதற்கு முன்னைய ஆண்டுகளிலும் தீர்வையாகியுள்ள போதிலும் கணக்கு வைக்கப்படாத கடன் பெறுமதிகள் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலவுவதாக மேலும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, கணக்கு வைக்கப்படாத வெளிநாட்டு கடன் பணத்தை பயன்படுத்தி ஏதேனும் செலவினமொன்று காணப்பட்டால் அந்த செலவினம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்காது காணப்படக்கூடும் என்பது தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2021 ஆம் ஆண்டினுள் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளினுள் தீர்வையாகியுள்ள நிதி நிலைமைக்கூற்றிற்கு புறம்பாக பேணிச் செல்லப்பட்ட 21 கடன் வகைகளுக்குரிய ரூபா 17,305.2 மில்லியனான தீர்வையாதல்கள் மீளாய்வாண்டினுள் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் அரசின் நிதிக்கூற்றுக்களில் எதுவித வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்படவில்லை. அதற்கமைய காலரீதியான எண்ணக்கருவிற்கு மாற்றமாக குறித்த வருடத்தினுள் தீர்வையாகிய போதிம், அந்த வருடத்தினுள் சில வெளிநாட்டுக் கடன்கள் கணக்கு வைக்கப்படாமை தொடர்ந்தும் இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் அரசின் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 30(11) இன் பிரகாரம் கடன் இலக்கம் 2001042 கடனுக்குரிய ஆரம்ப மீதி 5,644,462 யூரோக்களாக குறிப்பிடப்பட்டிருந்த போதும், ஆண்டினுள் எதுவித தீர்வையாதலும் அல்லது மீள் செலுத்தலும் இல்லாது 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இந்த கடன் மீதி 6,702,014 யூரோக்களாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) அரசாங்கத்தினால் 2021 ஆம் ஆண்டின் போது ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கடப்பாடுகளின் கீழ் 2021007 ஆம் இலக்க கடன் உடன்படிக்கைக்குரிய 854-1 அறிக்கையின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்படியாக காணப்பட்ட கணக்கு வைக்கப்படாத ரூபா 589 மில்லியனான கடன் மீதி 2022 ஆம் ஆண்டினுள் நடப்பாண்டின் தீர்ப்பனவொன்றாக கருதி கணக்கு வைக்கப்பட்டிராததுடன் அது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய அரசின் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 11 இல் மற்றும் குறிப்பு இலக்கம் 30(II) இல் மீளாய்வாண்டினுள் உள்ளபடியான தீர்வையாதல்கள் முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) அரசின் நிதிக்கூற்றுக்களினுள் நிதி நிலைமைக் கூற்றிலிருந்து முழுமையாக புறம்பாக பேணிவரப்பட்ட 08 கடன் வகைகளுக்குரிய ரூபா 518,293 மில்லியனான கடன் மீதி மீளாய்வாண்டினுள் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் அரசின் நிதிக்கூற்றுக்களில் எதுவித வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், குறித்த 08 வகையான கடன்களின் மீதிகள் நேரடியாக குறிப்பு இலக்கம் 30(II) இன் இறுதி மீதியினுள் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும்,

(i) அரசாங்கத்தினால் கடன் பெறுவனவுகள் திரண்ட நிதியத்தின் ஊடாக கணக்கு வைக்கப்படல் பொதுவான நடைமுறையொன்றான போதிலும், மேற்குறிப்பிடப்பட்ட 08 வகையான கடன் வகைகள் திரண்ட நிதியத்தின் ஊடாக கணக்கு வைக்கப்பட முடியாதாக காணப்பட்ட போதிலும், இந்த 08 வகையான கடன் வகைகளுக்குரிய கடன் தவணைகள் திரண்ட நிதியத்தின் ஊடாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) இந்த 08 வகையான கடன் வகைகளை பெற்று மேற்கொள்ளப்பட்ட எதுவித செலவினமும், கடன் பெற்றுக்கொள்ளப்பட்ட காலப்பகுதியினுள் அல்லது வேறு ஏதேனும் காலப்பகுதியினுள் அரசின் நிதிக்கூற்றுக்களில் செலவினமொன்றாக கணக்கு வைக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டதுடன் இந்த கடன்களை பெற்று சுவீகரிக்கப்பட்ட எந்த சொத்தும் அரசின் நிதிக்கூற்றுக்களில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கடந்த வருடத்தில் இரண்டு கடன் உடன்படிக்கைகளுக்காக அரசின் நிதிக்கூற்றுக்களில் வேறுபட்ட பயன்பாட்டு நாணய அலகுகள் பயகன்படுத்தப்பட்ட காரணத்தால் குறித்த கடன் மீதியில் ரூபா 340 மில்லியன் மற்றும் ரூபா 285 மில்லியனால் CS-DRMS தொகுதியின் 854-1 அறிக்கையின் பிரகாரம் மாற்றமடைந்திருந்தது. எவ்வாறான போதிலும் மீளாய்வாண்டின் போது இந்த இரு கடன் மீதிகளுக்குரிய ஆரம்ப மீதிகளின் கடன் பயன்பாட்டு நாணய அலகின் வகை மாத்திரம் மாற்றப்பட்டிருந்த போதிலும் ஆரம்ப மீதிகள் திருத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய குறித்த மாற்றங்கள் அந்த கடன் தொகை காரணமாக மீளாய்வாண்டினுள் பதிவு செய்யப்பட்ட செலாவணி மாற்ற நட்டத்தினுள் உள்வாங்கப்பட்டிருந்தது. அதற்கமைய அந்த கடன் மீதிகள் இரண்டிற்குரிய அரசின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் CS-DRMS தொகுதியின் 854-1 அறிக்கையின் பிரகாரம் செலாவணி மாற்ற நட்டமாவதுடன் அந்த பெறுமதிகளில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(எ) கடன் இலக்கம் 2019010 இற்கு உரியதாக மீளாய்வாண்டினுள் 500,000 யூரோக்கள் கிடைத்திருந்த போதிலும் CS-DRMS தொகுதியின் 854-1 அறிக்கையின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா 114,180,500 ஆக காணப்பட்டதுடன், அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 148,497,550 ஆகும். அதற்கமைய நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் பெறுமதி ரூபா 34,317,050 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) அரசின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்க 30(II) இல் உள்ளடக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயன்பாட்டு நாணய அலகிற்கமைய ஆரம்ப கடன் மீதிக்கு மீளாய்வாண்டினுள் தீர்வையாதல்கள் சேர்க்கப்பட்டதன் பின்னர் மற்றும் மீளாய்வாண்டினுள்ளான கடன் செலுத்தல்கள் கழிக்கப்பட்டதன் பின்னர் இறுதி கடன் மீதிக்கு சமனாக வேண்டிய போதிலும், அவ்வாறு சமனாகாத 12 கடன் உடன்படிக்கைகளுக்குரியதாக ரூபா 1,327,324,971 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஐ) அரசின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்க 30(I) இல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயன்பாட்டு நாணய வங்கி அலகு செயற்திட்டக் கடன் மீதி (Foreign Currency Banking Unit Loan (Project) Balances) CS-DRMS 2000+Report 854-1 அறிக்கையுடன் பரீட்சிக்கப்பட்ட போது இரு கடன் உடன்படிக்கைகளுக்குரிய 2022 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியான ஆரம்ப மீதிகளின் ரூபா 94,064,888 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் கடன் மீள் செலுத்தலின் போது கடன் உடன்படிக்கை இலக்கம் 2018034 இற்குரிய ஐ.அ.டொ. 454,444 ஆன அவேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. மேலும், கடன் உடன்படிக்கை இலக்கம் 2016002 இற்கு உரிய ரூபா 2,978,950 தொகையானது சராசரி/சீராக்கல் (Parity/Adjustments) நிரலில் சீராக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் இதுவித வெளிப்படுத்தலும் நிதிக்கூற்றுக்களில் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஒ) 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலவிய வெளிநாட்டு கடனை உள்நாட்டு பயன்பாட்டு நாணய அலகிற்கு மாற்றும் போது ரூபா 5,232,909 மில்லியனான செலாவணி மாற்று நட்டமொன்று கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பெறுமதி தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கிற்கு

(Net Assets Adjustment) சீராக்கப்பட்டிருந்தது. மேலும், கடந்த ஆண்டின் செலாவணி மாற்று நட்டம் ரூபா 363,647 மில்லியனானதுடன், மீளாய்வாண்டினுள் அது ரூபா 5,232,909 மில்லியனான காரணத்தால் கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் 1,339 சதவீதமான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

(ஓ) வெளிநாட்டுக் கடனுடன் தொடர்படைய நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 30(ii), (iii) மற்றும் (iv) இன் பிரகாரம் கணிப்பீட்டினுள் மீளாய்வாண்டின் போது மீள செலுத்தப்பட்ட கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 348,629 மில்லியனான போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் அது ரூபா 358,504 மில்லியனாக காணப்பட்டமையால் ரூபா 9,874 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. மேலும், CS-DRMS தொகுதியின் 854-1 அறிக்கையின் பிரகாரம் அந்த பெறுமதியானது ரூபா 369,825 மில்லியனாக அவதானிக்கப்பட்டது.

(ஔ) நிதிச் செயலாற்றல் கூற்றினுள் குறிப்புகளினூடாக உள்நாட்டு கடன் மீள் செலுத்தல்களுக்கு உரியதாக தகவல் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட வெளிநாட்டு கடன் மீள்செலுத்தல் பெறுமதியான ரூபா 358,504 மில்லியனுக்குரியதாக அவ்வாறானதொரு பதிவு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(க) வழங்குநர்களால் அனுப்பப்பட்டிருந்த கடன் மீதி உறுதிப்படுத்தல்கள், அரசின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணனி மயப்படுத்தப்பட்ட கடன் முகாமைத்துவ தொகுதியின் 854-1 அறிக்கையுடன் ஒப்பிடப்பட்ட போது 07 கடன் வகைகளுக்குரியதாக மீதி ரூபா 7,607,493,758 அதிகமாகவும், 37 கடன் வகைகளுக்குரியதாக ரூபா 13,082,627,225 குறைவாகவும் அரசின் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(கா) கடன் வழங்கிய நிறுவனங்களிடமிருந்து கிடைத்த கடன் மீதி உறுதிப்படுத்தல்களை பரிசோதிக்கும் போது சில கடன் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களில் செலுத்த வேண்டிய அர்ப்பணிப்புக் கட்டண நிலுவையான (Commitment Fee due) 82,158 யூரோக்களும், தாமத வட்டியாக (Delay Interest) 31,571 யூரோக்களும் செலுத்த வேண்டிய கட்டணமாக (Fees Overdue) 194,391 யூரோக்களும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கி) தீர்வையாதல் பிற்போடப்பட்ட காலப்பகுதியை கருத்திற்கொள்ளும் போது 2022 ஆம் ஆண்டுக்கு உரியதாக பிற்போடப்பட்ட வெளிநாட்டுக் கடன் 2023 மே 02 ஆந் திகதி அச்சிடப்பட்ட கணனி மயப்படுத்தப்பட்ட கடன் முகாமைத்துவ தொகுதியின் 814-1 அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட போதிலும், 2023 சனவரி 20 ஆந் திகதி அச்சிடப்பட்ட அவ்வறிக்கையில் உள்ளடங்கியிருகவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன், அதற்கமைய தேறிய பெறுமதி ரூபா 27,392 மில்லியனான வெளிநாட்டுக் கடன் அரசின் நிதிக்கூற்றுக்களிலும் தீர்வையாகிய கடனாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்த கடன் மீதிகளிடையே 2023 மே 02 ஆந் திகதி அச்சிடப்பட்ட அவ்வறிக்கையின் தீர்வையாதல்கள், 2023 சனவரி 20 ஆந் திகதி அச்சிடப்பட்ட அறிக்கையை விட குறைவாக அறிக்கையிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

(கீ) வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் வெளிநாட்டு கடன் முகாமைத்துவத்திற்காக பேணிச் செல்லும் கணனி மயப்படுத்தப்பட்ட CS-DRMS தொகுதியின் அறிக்கையை பகுப்பாய்வு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(i) 2021008 ஆம் இலக்க மற்றும் 2021016 ஆம் இலக்க கடன்களுக்காக 2021 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட CS-DRMS தொகுதியின் 854-1 பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதிகள் பதிவு செய்யப்பட்டிராத போதிலும், 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட அந்த அறிக்கையினுள் 2022 சனவரி 01 ஆந் திகதியில் உள்படியாக பின்வருமாறு ஆரம்ப மீதிகள் அவதானிக்கப்பட்டன.

கடன் இலக்கம்	கடன் பண வகை	கடன் தொகை	பெறுமதி ரூபா
2021008	USD	392,385	78,647,303
2021016	USD	12,500	2,505,423

அவ்வாறே, அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக மேற்படி இரு வகையான கடன்களுக்காக ஆரம்ப மீதிகள் காணப்படாததுடன், மீளாய்வாண்டினுள் தீர்வையாதல்களாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் கணக்கு வைக்கப்பட்டிருந்தன. அதற்கமைய இந்த கடன் பெறுவனவுகள் எந்த வருடத்திற்குரியவை என்பது தெளிவாகவில்லை.

கடன் இலக்கம்	கடன் பண வகை	தீர்வையான கடன் தொகை	பெறுமதி ரூபா
2021008	USD	392,385	78,280,893
2021016	USD	472,500	168,106,589

(ii) 2002054 ஆம் இலக்க கடனுக்குரிய 2022 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியான கடன் மீதி 11 யூரோக்கள் அல்லது ரூபா 2,495 மாத்திரமாக காணப்பட்டதுடன், இந்த கடன் தொகைக்கு உரியதாக மீளாய்வாண்டின் போது எதுவித கடன் தீர்வையாதலும் இல்லாது 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக குறித்த கடன் மீதி 4,373 யூரோக்கள் அல்லது ரூபா 1,692,045 ஆக காணப்பட்டது.

(iii) இரு கடன் உடன்படிக்கைகள் தொடர்பில் ரூபா 1,803,456 கூட்டுத்தொகையான மறை கடன் மீதிகள் அரசின் நிதிக்கூற்றுக்களில் மற்றும் CS-DRMS தொகுதியின் 854-1 அறிக்கையில் அவதானிக்கப்பட்டது.

(iv) இரு கடன் உடன்படிக்கைகளுக்கு உரியதாக ரூபா 24,945,542 கூட்டுத்தொகையான மறை கடன் தீர்வையாதல்கள் அரசின் நிதிக்கூற்றுக்களில் மாத்திரம் அவதானிக்கப்பட்டதுடன், அந்த மீதிகளுக்கு உரியதாக CS-DRMS தொகுதியின் 854-1 அறிக்கை பிரகாரம் கடந்த வருடத்தின் இறுதி மீதிகள் மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,936,975,642 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

அதன் பிரகாரம், கடன் முகாமைத்துவ கணனி தொகுதியினுள் ஒரு குறித்த திகதியில் காணப்படும் வெளிநாட்டு கடன் மீதி தொடர்பான சரியான தன்மை தொடர்பாக திருப்தியடைய முடியாதிருந்தது.

1.2.3 **நிதியல்லாத சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2021 ஆம் ஆண்டின் அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதியல்லாத சொத்துக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 1,850,007 மில்லியனான போதிலும் 2022 ஆம் ஆண்டின் அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக அந்த பெறுமதி ரூபா 1,802,121 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய நிதியல்லாத சொத்துக்களில் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி ரூபா 47,886 மில்லியனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 84 நிறுவனங்களின் சில நிறுவனங்களின் நிதியல்லாத சொத்துக்களின் மீதி ரூபா 38,245 மில்லியனாக காணப்பட்டதுடன், அந்த நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் ஏ.சீ.ஏ – 6 மாதிரிக்கமைய அந்த மீதி ரூபா 21,382 மில்லியனாக காணப்பட்ட காரணத்தால் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அரசின் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 16,863 மில்லியனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 84 நிறுவனங்களின் சில நிறுவனங்களின் நிதியல்லாத சொத்துக்களின் மீதி ரூபா 6,277 மில்லியனாக காணப்பட்டதுடன், அந்த நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் ஏ.சீ.ஏ – 6 மாதிரிக்கமைய அந்த மீதி ரூபா 7,829 மில்லியனாக காணப்பட்ட காரணத்தால் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அரசின் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,552 மில்லியனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 2 நிறுவனங்களின் 2022 ஆம் ஆண்டிற்குரிய ஏ.சீ.ஏ – 6 மாதிரியில் நடப்பாண்டினுள் மதிப்பீடு செய்யப்பட்டு ஆரம்ப மீதிகளுக்கு சீராக்கம் செய்யப்பட்ட கட்டிடங்களின் பெறுமதி மற்றும் விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடங்கியுள்ள பெறுமதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 344 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

1.2.4 வாடகை மற்றும் பணி முற்பணம்

அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தலைப்பு 290 – கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களத்தின் மற்றும் தலைப்பு 247 - இலங்கை சுங்கத் திணைக்களத்தின் ஆரம்ப (2021 திசெம்பர் 31) வாடகை மற்றும் பணி முற்பண மீதி முறையே ரூபா 8,518,925 மமற்றும் ரூபா 780,000 ஆக பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டின் போது அந்த திணைக்களங்களின் நிதிக்கூற்றுக்களில் வாடகை மற்றும் பணி முற்பணக் கணக்கின் ஆரம்ப மீதிகள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.2.5 மூலதனப் பங்களிப்பு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசின் கூட்டுத்தாபனங்கள் மற்றும் பங்குடமையுள்ள பொது முயற்சிகள் மற்றும் அரச கம்பனிகள் 13 இனால் சமமர்ப்பிக்கப்பட்ட நேரடி மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அந்த நிறுவனங்களின் மூலதனப் பங்களிப்பு ரூபா 985,745 மில்லியனாக காணப்பட்டதுடன், அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 149,875 மில்லியனாக காணப்பட்ட காரணத்தால் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரசின் நிதிக்கூற்றுக்களினுள் மூலதனப் பங்களிப்பு ரூபா 835,870 மில்லியனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சமர்ப்பிக்கப்பட்ட நேரடி மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் அரசின் நிதிக்கூற்றுக்கள் ஆகியவற்றுக்கடையே 07 நிறுவனங்களுக்குரிய அரசாங்கத்திற்குரிய பங்குகளின் எண்ணிக்கையில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. அதற்கமைய, 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அரசின் மூலதனப் பங்களிப்பு ரூபா 1,877 மில்லியன் குறைத்து அரசின் நிதிக்கூற்றுக்களில் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) 02 அரச கம்பனிகளின் உரித்தினை கொண்டுள்ள பங்குகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயரளவு பெறுமதி ஆகியவற்றுக்கமைய கணக்காய்வின் போது மேற்கொண்ட கணிப்பீடுகளுக்கமைய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பெறுமதி ரூபா 5,148 மில்லியனான போதிலும், அது அரசின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 14,556 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அரசின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 9,408 மில்லியன் அதிகரித்து மூலதனப் பங்களிப்பு காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பிரதேச அபிவிருத்தி வங்கியின் மூலதனப் பங்களிப்பு Capital Adequacy (Tier 1) அபிவிருத்தி செய்வதற்காக அதற்கு முன்னதாக லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 175 மில்லியனான பொது திறைசேரிக்கு செலத்த வேண்டிய கடன் தொகை ஈடுசெய்யப்பட்டு 2022 திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி ரூபா 175 மில்லியன் பெறுமதியான 6,183,946 பங்குகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அது 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரசின் நிதிக்கூற்றுக்களில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினுள் அரசாங்கத்திற்கு சொந்தமான முயற்சிகளின் மூலதனப் பங்களிப்பு அதிகரித்தமை ரூபா 1,405,204 மில்லியனாக ஆக

காணப்பட்டதுடன், அவற்றுள் ரூபா 109,625 மில்லியன் அல்லது 8 சதவீதம் ஒவ்வொரு நிறுவனங்களுக்கு மீண்டெழும் தன்மையிலான அதாவது கடன் மற்றும் கடன் வட்டி செலுத்தல்கள் மற்றும் சம்பளம் மற்றும் படிகள் செலுத்துவதற்காக பொது திறைசேரியினால் விடுவிக்கப்பட்ட பணத்தை கொண்டிருந்தது.

1.2.6 வெளிநாட்டு மானியம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2022 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 12 வெளிநாட்டு மானியம் (பணமாகக் கிடைத்த) கீழ் மீளாய்வாண்டினுள் கிடைத்த வெளிநாட்டு மானிய கூடடுத் தொகை ரூபா 3,218 மில்லியனாக குறிப்பிட்டிருந்ததுடன் குறித்த வைப்பு பதிவேட்டின் பிரகாரம் அதன் கூட்டுத் தொகை ரூபா 3,190 மில்லியனானது. இவ் வெறுபாட்டினுள் கூட்டுத் தொகை ரூபா 27.7 மில்லியனான வெளிநாட்டு மானியம், மீளாய்வாண்டினுள் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2022 சனவரி 01 திகதியளவில் இலங்கை அரசாங்கத்திற்கு வெளிநாட்டு மானியமாக கிடைத்துள்ள போதும் 2022 திசெம்பர் 31 திகதியளவிலும் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாது செயலற்று காணப்பட்ட வெளிநாட்டு மானிய பெறுமதி ரூபா 34.9 மல்லியனானது.

(இ) 1994 ஏப்ரல் 20 திகதிய இலக்கம் 30/94 கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம், வெளிநாட்டு மானியம் தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பொது திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்ட போதும், மாதிரி பரிசோதணையின் மீது பெற்றுக் கொண்ட தகவல்களின் பிரகாரம், 2022 ஆண்டினுள் அவ்வாறு பொது திறைசேரியை அறிவூட்டாது ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களிற்கு 20 கருத்திட்டங்களிற்காக கூட்டுத் தொகை ரூபா 1,837,321,420 ஆன வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக கிடைத்திருந்ததுடன் அப் பெறுமதிக்கு ஏற்பாடு பெற்றுக் கொண்டு நிதிக்கூற்றுக்களிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.2.7 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் 2022 ஏப்ரல் மாதம் 12 திகதி வெளியிடப்பட்ட இடைக்கால வெளிநாட்டு கடன் செலுத்துவதை இடைநிறுத்தும் கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் 2022 ஏப்ரல் மாதம் 13 திகதி முதல் மீளாய்வாண்டு இறுதித் திகதிக்கு 391 கடன் உடன்படிக்கைகளிற்கு உரிய கடன் தவணைகளாக ரூபா 671,569 மில்லியனும் கடன் வட்டி ரூபா 305,435 மில்லியனும் செலுத்துவதை இடைநிறுத்தியிருந்த போதும் அது தொடர்பாக மற்றும் இடைக்கால வெளிநாட்டு கடன் செலுத்துவதை இடைநிறுத்தும்

கொள்கை ரீதியான தீர்மானம் தொடர்பாக அரசின் நிதிக்கூற்றுக்களில் எவ்வித வெளிப்படுத்தல்களும் செய்திருக்கவில்லை.

(ஆ) 2022 ஆண்டினுள் உடன்படிக்கை செய்த போதும் கிடைக்காத ரூபா 10,200 மில்லியனான 02 வெளிநாட்டு கடன்கள் தொடர்பாக அரசின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(இ) அரசின் உரிமை பங்களிப்பு கொழும்பு பங்குச் சந்தையின் பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் மேற்கொண்ட முதலீடு மற்றும் பட்டியலிடப்படாத கம்பனிகளில் மேற்கொண்ட முதலீடாக வகைப்படுத்தியிருக்கவில்லை. மேலும் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் உரிமையின் பெறுமதி அவற்றின் பெயரளவு பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும், அவற்றின் 2022 திசெம்பர் 31 திகதியிலான சந்தை பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.2.8 எல்லைகள் மீறப்படுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2021 இன் இலக்கம் 12 கொண்ட அரச நிதிமுகாமைத்துவ (பொறுப்பு) (திருத்திய) சட்டம் பிராகரம், பிணைமுறி விநியோகிக்கும் எல்லை முன்னைய இரண்டு நிதியாண்டுகளுடன் மீளாய்வாண்டு நிதியாண்டிற்காக மொத்த தேசிய உற்பத்தியின் ஒட்டுமொத்தத்தின் சதவீதம் 15 சதவீதமாகும். அதன் பிரகாரம் 2022 ஆண்டிற்குரிய ரூபா 2,826,300 மில்லியன் எல்லையினுள் பிணைமுறி விநியோகிக் வேண்டிய போதும் ரூபா 2,908,515 மில்லின் வரை பிணைமுறி விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டினுள் ரூபா 82,214 மல்லியன் திறைசேரி பிணைமுறிகள் எல்லையை விஞ்சி விநியோகிக்கப்பட்டிருந்தது, அது 15.4 சதவீதமானது.

(ஆ) 2021 இன் 30 கொண்ட வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் கீழான முற்பண நடவடிக்கைகளிற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரித்த பின்வரும் விபரங்கள் குறிப்பிடப்படும் எல்லைகள் திறைசேரி புத்தகங்கள் பிரகாரம் பின்பற்றாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. சட்டத்தின் 8(1)(ஆ) பிரிவு பிரகாரம் 2023 மே 31 திகதியளவில் பாராளுமன்றத்திற்கு சமர்பித்து அவ் எல்லைகளை திருத்திக் கொள்ள வேண்டியிருந்த போதும் 2022 மே 19 திகதியளவிலும் அவ் எல்லைகளை திருத்திக் கொண்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை.

(i) அரச உத்தியோகத்தர்களுக்கு 03 முற்பண நடவடிக்கைகள் தொடர்பாக உச்ச செலவின எல்லை கூட்டுத் தொகை ரூபா 1,070,283 இனை விஞ்சி செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) விடய இலக்கம் 31002 – அரசின் கைத்தொழிற்சாலை திணைக்களத்தில் பூர்தியான வேலை முற்பணக் கணக்கின் உச்ச செலவின எல்லை ரூபா 76,900,472 இனை விஞ்சி ரூபா 196,900,472 செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இவ் அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் அரச நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான

கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்குபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கம் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளார்

2. செயற்பாட்டு மீளாய்வு

2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கு இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கு இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரை

2022 திசெம்பர் 31 திகதியளவிலும் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாது அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மீது எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியத்தை ஸ்தாபித்து பேணிச் செல்லப்பட்டிருந்தது.

(ஆ) 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) அதிகாரச்சட்டம்

(i) 2021 இன் 12 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தம்) அதிகாரச்சட்டத்தினால் மற்றும் 2013 இன் இலக்கம் 15 கொண்ட நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தம்) அதிகாரச்சட்டத்தினால் திருத்திய 2003 இன் இலக்கம் 3 கொண்ட நிதி முகாமைத்துவ (பொறுப்பு) அதிகாரச்சட்டம் பிரகாம், ஏதேனும் ஆண்டு இறுதியில் காணப்பட முடியுமான உச்ச பொறுப்பு பெறுமதி அவ்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய 'உற்பத்தியின் 80 சதவீதத்தை விஞ்சக்கூடாத போதும் 2022 திசெம்பர் 31 திகதி அவ் எல்லை 114.83 சதவீதம் வரை விஞ்சியிருந்தது. விபரம் பின்வருமாறு

பொறுப்புக்கள்	2022 திசெம்பர் 31 திகதியன்று பொறுப்புக்கள் பெறுமதி * ரூபா பில்லியன்
வங்கி மேலதிக பற்று	84
மத்திய வங்கி முற்பணம்	235
அரசாங்க கடன்கள்	27,379
நிதிக்கூற்றுக்களினூடாக கணக்கீடு செய்யப்படாத பொறுப்பு - கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன்-	39
மொத்த பொறுப்புக்கள்	27,379
மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி	23,843
மொத்த பொறுப்புக்கள் மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக	114.83

* பொது திறைசேரியின் பிணைமுறி மீது அரச முயற்சிகள் மூலம் பெற்றுக் கொண்டுள்ள கடனிற்காக வங்கிக்கு வழங்கியுள்ள பிணைமுறி மற்றும் நிவாரணக் கடித பெறுமதியான ரூபா 1,292 பில்லியன் மற்றும் அமைச்சு, திணைக்களம் மற்றும் விஷேட செலவு அலகுகளில் கணக்காய்விற்கு சமர்ப்பித்த பொறுப்புக்கள மற்றும் கடப்பாடுகள் கூற்று பிரகாரம் ரூபா 106 பில்லியன் பெறுமதியான பொறுப்புக்கள் மேற்குறிப்பிட்ட பொறுப்புக்களிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) "2006 ஆண்டிறுதியில் வரவுசெலவுத் திட்ட இடைவெளி, அவ் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தை விஞ்ஞாததாக மற்றும் அம் மட்டத்தை அதன் பின்னர் தொடர்ந்து பேணிச் செல்வதற்கு பொறுப்பேற்று அரச கடனை தூரநோக்கு மட்டம் வரை குறைத்தல்" அரசாங்கத்தினால் கடைபிடிக்க வேண்டிய பொறுப்புவாய்ந்த நிதி முகாமைத்துவத்திற்கு அடிப்படையான நோக்கமாக 2003 இன் இலக்கம் 3 கொண்ட நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 3(அ) பிரிவில் காட்டப்படுகிறது. எனினும் மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட பாதீட்டு இடைவெளியை, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தை விஞ்சாதவாறு மதிபிடவும், மீளாய்வாண்டு இறுதியிலான உள்ளவாறான பாதீட்டு இடைவெளி, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தை விஞ்சாதவாறு பேணிச் செல்ல நிதியமைச்சுக்கு இயலாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டில் அந்த சதவீதங்கள் முறையே மதிப்பிடப்பட்ட பாதீட்டு இடைவெளிக்குரியதாக 9.78 சதவீதம் மற்றும் உள்ளவாறான பாதீட்டு இடைவெளிக்குரியதாக 10.71 சதவீதமாக காணப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு.

மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி	பாதீட்டு இடைவெளி		மதிப்பிடப்பட்ட பாதீட்டு இடைவெளி, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக	உள்ளவாறான பாதீட்டு இடைவெளி, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக
	மதிப்பிடப்பட்ட	உள்ளவாறான		
ரூபா பில்லியன்	ரூபா பில்லியன்	ரூபா பில்லியன்	நூற்றுக்கு	நூற்றுக்கு
23,843	2,333	2,554	9.78	10.71

(இ) **2015 ஜுன் 24 243/2015 ஆம் இலக்கமுடைய அரச கணக்குகள் சுற்றறிக்கை**

2015 ஜுன் 24 திகதிய் 243/2015 ஆம் இலக்கமுடைய அரச கண்ககுகள் சுற்றறிக்கை பிரகாரம், 6003 தொகுதியின் வைப்புக் கணக்கு வெறிதாக்க எதிர்பார்த்திருந்ததுடன் 2016 ஆண்டு முதல் அந் நடவடிக்கை வருடாந்த மதிப்பீட்டினூடாக மேற்கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், இலக்கம் 6003 இன் கீழான வைப்புக் கணக்கொன்றில் ரூபா 10 மில்லியனான மீதியொன்று 2022 திசெம்பர் 31 திகதியளவிலும் தீர்க்கப்படாது முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஈ) **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) நி.பி 373 இன் பிரகாரம், 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளபடியாக அமைச்சு மற்றும் திணைக்களங்களின் 93 கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 3,893 மில்லியனான வரவு மீதி தீர்க்கப்படாத காணப்பட்டது. அதில் ரூபா 121 மில்லியன் மீதியானது பல ஆண்டுகளாக நிலவி வருவதுடன், அம் மீதிகளை தீர்த்துக் கொள்ள 2022 திசெம்பர் 31 திகதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) நி.பி 387 பிரகாரம் எந்தவொரு அரச வங்கிக் கணக்கொன்ரிலிருந்தும் மேலதிக பற்று பெற்றுக் கொள்வது தடையான போதும், ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் மக்கள் வங்கி கணக்கினூடாக 2022 மே 09 திகதி வங்கி மேலதிக பற்று வசதியை பெற்றிருந்ததுடன், அத் திகதியில் அக்கணக்கின் மேலதிக பற்று மீதியான ரூபா 7,727,113,034 ஆன பெறுமதிக்காக ரூபா 30,925,253 ஆன மேலதிக பற்று வட்டியினை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

3. **முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) அரசின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதிக்கு விநியோகித்துள்ள திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பிணைமுறிகளின் பெறுமதி முறையே ரூபா 4,126,383,805,527 மற்றும் ரூபா 8,692,134,561,000 ஆனது. இப் பெறுமதியினுள் இலங்கை மத்திய வங்கியினால் கொள்வனவு செய்துள்ள திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பிணைமுறிகளின் பெறுமதி முறையே ரூபா 2,575,716,725,527 மற்றும் ரூபா 22,461,378,516 ஆனது. அதன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதிக்கு விநியோகித்துள்ள திறைசேரி உண்டியல்களில் 62.42 சதவீதம் மற்றும் திறைசேரி பிணைமுறிகளில் 0.26 சதவீதம் இலங்கை மத்திய வங்கியினால் கொள்வனவு செய்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) இலகு புகையிரத இடம்பெயர் தொகுதி கருத்திட்டத்தை பூர்த்தி செய்ய ஒப்பந்ததாரர் கோரியிருந்த உரிமை தொடர்பாக கலந்துரையாட அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கலந்துரையாடல் குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளின் பிரகாரம் OCG-JV கம்பனியினால் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஐ.அ.டொ. 2,930,307.48 இற்கு சமமான தொகையை, வெட் வரி மீள்நிரப்புதல் தாமதித்தன் காரணமாக தாமதித்த தொகைக்குரிய வட்டித் தொகையாக ரூபா 3,733,128 மற்றும் கருத்திட்டத்தை இடைநிறுத்திய காரணத்தால் OCG-JV கம்பனி ஆனணியின் சேவையை முடிவுறுத்த ஏற்பட்ட பொது செயற்பாட்டு செலவிற்காக செலவிட்ட தொகையாக கோரியிருந்த பணமாக ஐ.அ.டொ 492,749 யை OCG-JV கம்பனிக்கு செலுத்த 2022 நவம்பர் 22 திகதி அமைச்சரவையினால் தீர்மானிபக்கப்பட்டிருந்தது.

(இ) 2018 இன் 254 ஆம் வரவுசெலவு திட்ட முன்மொழிவு பிரகாரம், 10 ஆண்டுகளினுள் தற்போது பயன்படுத்தும் மேம்படுத்திய பண அடிப்படை முறைமையிலிருந்து அட்டுறு அடிப்படை கணக்கு முறைமையின் கீழ் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பரிமாற்ற தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ் அமைச்சரவை அங்கீகாரத்திற்குரியதாக முன்வைத்த வழகாட்டித் திட்டத்தில் (Road map) உள்ளடங்கிய செயற்பாடுகளிற்குரிய கால சட்டகத்தை அரச கணக்குகள் திணைக்களத்தினால் திருத்தப்பட்டிருந்த போதும், அதற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் அமைச்சரவை குறிப்பு பிரகாரம் ஒவ்வொறு ஆண்டு முடிவடைந்து ஒரு மாதத்தின் பின் குறித்த செயற்பாடுகளின் முன்னேற்றத்தை அமைச்சரவைக்கு அறிக்கையிட வேண்டிய போதும், 2023 மே 19 திகதி வரையும் அவ்வாறு முன்னேற்றத்தை அறிக்கையிட்டிருக்கவில்லை. பரிமாற்ற செயற்பாடுகள் தொடர்பாக சரயான கொள்கை ரீதியா தீர்மானத்திற்கு வந்ததன் பின்னர் உரியவாறு திருத்தப்பட்ட வழகாட்டித் திட்டத்திற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளவுள்ளதாக அரச கணக்குகள் திணைக்களத்தால் கணக்காய்விற்கு அறித்துள்ளது.

(ஈ) அரச திணைக்ளங்களுடன் செயற்படும் கணக்குகளின் கீழ் வங்கிகளினால் மறுக்கப்பட்ட காசோலைகளாக நீண்ட காலமாக நிலவிவரும் ரூபா 3,995,094 ஆன வரவு மீதியை மீளாய்வாண்டினுள்ளும் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணத்தின் கீழ், மாகாணசபைகளுக்கு இடமாறிச் சென்ற அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கிய முற்பணமாக ரூபா 191,466,910 தொகை நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் நிலவிய போதும் அப் பெறுமதியை மீளாய்வாண்டினுள்ளும் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) அரச அங்கீகார திறைசேரி 8 முற்பணக் கணக்குகளின் கூட்டுத் தொகை ரூபா 70,959,434 ஆன வரவு மீதி மற்றும் 3 முற்பணக் கணக்குகளின் கூட்டுத் தொகை மறை ரூபா 18,066,465 ஆன மீதி தீர்க்கப்படாது பல ஆண்டுகளாக தொடர்ந்தும் பேணிச் செல்லப்பட்டிருந்தது.

(எ) 2022 திசெம்பர் 31 திகதியன்று 06 தலைப்புகளிற்குரிய 06 முற்பணக் கணக்குகளிற்குரிய ரூபா 455,036,103 தொகையான மறை மீதி நிலவியது.

(ஏ) தலைப்பு 111 – சுகாதார அமைச்சின் கீழ் ரூபா 1,221,599,026 ஆன களஞ்சிய மற்றும் ஏனை முற்பண கணக்கின் ஆரம்ப மீதியொன்று நிலவிய போதும், அதற்குரிய காலப் பகுப்பாய்வு அல்லது அது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை.

(ஐ) 2008 மே 22 திகதி நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட இலக்கம் 1550/7 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் 7 பந்தி பிரகாரம் இலங்கையிலிருந்து ஆரம்பமாகும் விமான பயணத்திற்காக இலங்கைக்கு வெளியில் விநியோகிக்கும் அல்லது விற்வனை செய்யும் ஒவ்வொறு பயணச் சீட்டு தொடர்பாகவும் அவ்வாறான பயணச் சீட்டு விற்பனை செய்த முறை மற்றும் அல்லது விநியோகிப்பதை கவனிக்காது அ.டொ 60 மிகை அறவீடு அல்லது அத்தொகைக்கு சமமான தொகை அறவிட வேண்டுமெனவும், அவ் வர்த்தமானியில் 8 பந்தி பிரகாரம் அவ்வாறு திரட்டும் மிகை அறவீட்டுத் தொகை சிவில் விமான சேவை பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கின்ற வாறு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2008 ஆகஸ்ட் 01 திகதி முதல் 2022 திசெம்பர் 31 திகதி வரை சிவில் விமான சேவை அதிகாரசபையினால் மிகை அறவீடாக ரூபா 16,982 மில்லியன் திரட்டியிருந்த போதும் அத்தொகையை திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்திருக்கவில்லை. மேலும் இது தொடர்பாக 2017 ஜுன் 12 திகதி சட்ட செயற்பாடுகள் திணைக்களத்தினால் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அபிப்பிராயமான "இம் மிகை அறவீட்டை தொடர்ந்தும் அறவிட இயலுமை காணப்படுவதாகவும், அம் மிகை அறவீட்டுத் தொகையை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கும் சட்ட கடப்பாடு காணப்படுவதாகவும்" குறிப்பிட்டு 2017 ஏப்ரல் 07 திகதிய சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட கடிதத்துடன் பொது முயற்ச்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அறிவூட்டப்பட்டிருந்தார். அவ்வாறாயினும், கணக்காய்வு திகதியளவிலும் இம் மிகை அறவீட்டுத் தொகையை சிவில விமான சேவைகள் அதிகாரசபையிடமிருந்து அறவிட பொது முயற்ச்சிகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஒ) 2022 திசெம்பர் 31 திகதி சமர்பிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர் முற்பணக் கணக்கிற்கான காலப் பகுப்பாய்வு அட்டவணை பிரகாரம், இடமாறிச் சென்ற உத்தியோகத்தர், கூட்டுத்தாபனம், சபைகள் மற்றும் மாகாணசபைக்கு நிறந்தரமாக விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர், மரணித்த உத்தியோகத்தர், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், கடமை தடைவிதித்த உத்தியோகத்தர், கடமையை விட்டுச் சென்ற/ முடிவுறுத்திய உத்தியோகத்தர் மற்றும் ஏனைய வகையின் கீழான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 01 ஆண்டுகள் மற்றும் 04 ஆண்டுகளிற்கிடையிலான கடன் மீதி ரூபா 319 மில்லியனானதுடன் 05 ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா 391 மில்லியனாக இருந்தது.

(ஓ) அரசின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம், 2022 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 491,552 மல்லியனான உப கடன் மீதி கிடைக்க வேண்டியதாக காணப்பட்டது. குறித்த நிறுவனங்கள் தொடர்பான உப கடன் உடபடிக்கை பிரகாரம் செலுத்தாத காரணத்தால் 5 உப கடன் உடன்படிக்கைகளிற்குரியதாக 4 நிறுவனங்களினால் 2022 திசெம்பர் 31 திகதிக்கு அறவிட வேண்டிய உப கடன் தவணைகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 260,503 மில்லியனானது. அவற்றில் ரூபா 778 மில்லின் கூட்டு தவைணப் பெறுமதி 5 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவிவரும் மீதியாகும்.

(ஔ) 2022 திசெம்பர் 31 திகதிக்கு உப கடனிற்காக கிடைக்க வேண்டிய வட்டிப் பெறுமதி ரூபா 912 மில்லியனானதுடன், 3 நிறுவனங்கள் குறித்த உடன்படிக்கை பிரகாரம் பொது திறைசேரிக்கு

2022 ஆண்டிற்குரியதாக எவ்வித வட்டித் தொகையையும் செலுத்தி இருக்காததுடன் அவற்றில் 5 ஆண்டுகளை விஞ்சிய செலுத்தாத வட்டி பெறுமதியின் கூட்டுத் தொகை ரூபா 616 மில்லியனானது.

(ஔ) 2022 ஆண்டினுள் ரூபா 318,061 மில்லியனான கூட்டு உப கடன் மீதியை வழங்கியிருந்ததுடன் அவற்றில் ரூபா 285,191 மில்லியனான உப கடன் மீதி 06 நிறுவனங்களிற்காக மீளாய்வாண்டினுள் புதிய உப கடன் மீதியாக வழங்கப்பட்டிருந்தது. இவ் உப கடன் பெறுமதி மீளாய்வாண்டினுள் வழங்கிய மொத்த பெறுமதியின் 90 சதவீதமாக இருந்தது.

(க) அரசின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மீளாய்வாண்டினுள் அரசிற்கு சொந்தமான முயற்சிகளின் மூலதன பங்களிப்பு அதிகரிப்பு ரூபா 1,405,204 மில்லியனானதுடன் அவற்றில் ரூபா 1,246,401 மில்லியன் அதாவது 89 சதவீதம் 2023 பெப்ரவரி 07 திகதி அ.ம.ப. 23/0154/604/014 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் அரசிற்கு சொந்தமான முயற்சிகளின் இனங்கண்ட பொறுப்புக்களை இலங்கை அரச ஐந்தொகைக்கு ஒப்படைப்பதன் கீழ் செம்மையாக்கிய பெறுமானங்களின் காரணத்தினால் என அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறு.

இலக்கம்	நிறுவனம்	அரசிற்கு சொந்மான முயற்சிகளின் இனங்கண்ட பொறுப்புக்களின் கீழ் அரச ஐந்தொகைக்கு செம்மையாக்கிய பெறுமானம்
		ரூபா
01	Ceylon Electricity Board	362,307,620,369
02	Ceylon Petrolium Corporation	884,093,386,477
	கூட்டுத் தொகை	1,246,401,006,846

(கா) மீளாய்வாண்டினுள் 04 மானியம் வழங்குனர்களிடமிருந்து 05 கருத்திட்டங்களிற்குரியதாக கிடைத்திருந்த போதும் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாது கூட்டுத் தொகை ரூபா 34,740,561 ஆன வெளிநாட்டு மானியம் மீண்டும் மானிய வழங்குனருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

4. செயலாற்றுகை

4.1 வருமானங்களை மதிப்பீடு செய்தல்

2022 ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தி ரூபா 24,148 பில்லியன் ஆக இருந்ததுடன், 2021 ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தி ரூபா 16,809 பில்லியன் ஆக இருந்தது. அதன் பிரகாரம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த தேசிய உற்பத்தி ரூபா 7,339 பில்லியனால் அதாவது 43.66 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2022 ஆண்டிற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரித்த வருடாந்த பாதீட்டு ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம் அரச வருமானம் ரூபா 2,213 பில்லியனாக இருந்ததுடன், 2022 ஆண்டில் முன்வைத்த உப பாதீட்டின் மூலம் அரச வருமானம் ரூபா 2,084 பில்லியனாக இருந்ததுடன், கடந்த

ஆண்டில் அது ரூபா 1,961 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் கடந்த ஆண்டைவிட அரச வருமானம் ஆரம்ப பாதீட்டு மதிப்பீடு மற்றும் உப பாதீட்டிற்கு அமைய முறையே ரூபா 252 பில்லியனினால் மற்றும் ரூபா 123 பில்லியனினால் அதாவது 12.85 சதவீதத்தால் மற்றும் 6.27 சதவீதத்தினால் அதிகரித்து அரச பாதீட்டு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

அந்த வருமான மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பாதீட்டு நிலுவையை மதிப்பிட்டிருந்த போதும் ஆரம்ப வருமான மதிப்பீடு வருமான மதிப்பீட்டு உத்தியோகத்தரினால் ரூபா 2,102 பில்லியனாக காட்டி ரூபா 111 பிலிலியனினால் குறைத்து திருத்தப்பட்டிருந்தது. அத் திருத்திய வருமான மதிப்பீட்டின் பிரகாரம் அரச வருமானம் மொத்த தேசிய உற்பத்தியின் 8.7 சதவீதமாக இருந்தது. வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது மொத்த தேசிய உற்பத்தியின் அதிகரிப்பு மீது கவனம் செலுத்த வேண்டியிருந்த போதும், அதன் பால் கவனம் செலுத்தாது வருமான மிகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

2022 ஆண்டில் திரட்டிய அரச வருமானம் ரூபா 1,999 பில்லியனான இருந்ததுடன், அது திருத்திய வருமான மதிப்பீட்டை விட ரூபா 103 பில்லியனினால் குறைந்திருந்தது. அதன் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்பித்த வருடாந்த பாதீட்டு ஆரம்ப மதிப்பீடு மற்றும் 2022 ஆண்டு சமர்பித்த உப பாதீட்டு மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் அக் குறைவு முறையே ரூபா 214 பில்லியன் மற்றும் ரூபா 85 பில்லியனாக இருந்தது. 2012 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை கால வீச்சளவினுள் ஒவ்வொறு ஆண்டினுள்ளும் பாராளுமன்றத்திற்கு சமர்பித்த வருமான மதிப்பீட்டில் குறிப்பிடப்படும் வருமானத்திலும் திரட்டிய வருமானத்தின் குறைவு 4.08 சதவீதம் முதல் 26.06 சதவீத வீச்சளவை கொண்டிருந்ததுடன், அக்கால வீச்சளவினுய் அதிகரிப்பு சதவீதம் 2021 ஆண்டில் அவதானிக்கப்பட்டது.

நிதிப் பிரமாணம் 85(2)(ஆ) பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வருமான மதிப்பீட்டை மதிப்பிட அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்திற்கு அறிக்கையிடல் மாத்திரம் குறிப்பிடப்படுவதால், பாராளுமன்றத்தினால் அங்கீகரித்த வருமான மதிப்பீடொன்றை பாராளுமன்றத்தின் அங்கீகாரமின்றி திருத்த சந்தர்ப்பம் வழங்கியதால் வருமானம் ஆக்கபூர்வமான மதிப்பீடு செய்யும் கடப்பாடு குறைந்துள்ளதாக அவதானிக்கப்பட்டது.

4.2 வருமான பற்றாக்குறை

மீளாய்வாண்டிற்காக கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் வருமான பற்றாக்குறை ரூபா 1,540 பில்லியனாக இருந்ததுடன், கடந்த ஆண்டில் அது ரூபா 1,290 பில்லியனாக இருந்தது. 2006 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான கால வீச்சளவில் உச்ச வருமான பற்றாக்குறை 2022 ஆண்டில் அறிக்கையிடப்பட்டிருந்தது. அக் கால வீச்சளவில் ஒவ்வொறு ஆண்டும் திரட்டிய வருமானம் அரச மீண்டுவரும் செலவினத்தை தீர்த்துக் கொள்ள இயலாதிருந்தது. வருமான பற்றாக்குறையின் குறைந்த பெறுமதி 2007 ஆண்டில் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அது ரூபா 43 பில்லியனாக இருந்ததுடன் திரட்டிய அரச வருமானத்தில் 7.52 சதவீத பிரதிநிதிப்படுத்தலானது. அக்காலப் பகுதியினுள் மொத்த வருமான குறைபாடு ரூபா 6,319 பில்லியனாக இருந்தது. அக் குறைபாட்டை தீர்த்துக் கொள்ள தேசிய மற்றும் வெளிநாட்டுக் கடன் மற்றும் வெளிநாட்டு மானியம் பெறப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் அக் கால வீச்சளவினுள் தேசிய கடன் ரூபா 20,484 பில்லினும் வெளிநாட்டு கடன் ரூபா 7,487 பில்லியனும் வெளிநாட்டு மானியம் ரூபா 246 பில்லியனாக கூடடுத் தொகை ரூபா 28,218 பில்லியன் பெறப்பட்டிருந்தது. ஒவ்வொறு ஆண்டுகளிலும் அவ்வாறு பெறப்பட்ட கடன் மற்றும் மானியங்களினால் 6.89 சதவீதம் முதல் 45.59 சதவீதமான வீச்சளவினூடாக வருமான

பற்றாக்குறை நிதியிடப்பட்டிருந்தது. பெறப்பட்டிருந்த கடன் மற்றும் மானியங்களால் முதலீடு செய்யாது மீண்டுவரும் செலவுகளை தீர்க்க 2019 ஆண்டில் 20.25 சதவீதமும், 2020 ஆண்டில் 45.59 சதவீதமும், 2021 ஆண்டில் 42.39 சதவீதமும் மற்றும் 2022 ஆண்டில் 30.59 சதவீதமுமாக பயன்படுத்தப்பட்டிருந்தன. மீளாய்வாண்டினுள் ரூபா 1,565 பில்லியனான வட்டி செலுத்தியிருந்ததுடன் அது மொத்த மீண்டுவரும் செலவின் 44.22 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியது. கடந்த ஆண்டில் வட்டி செலுத்தல் ரூபா 1,048 பில்லியன் அதாவது மொத்த மீண்டுவரும் செலவின் 38.01 சதவீதமாக காணப்பட்டது. வட்டி செலுத்தல் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 517 பில்லியனால் அதிகரித்திருந்தது. மேலும், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட இடைகால வெளிநாட்டு கடன் செலுத்தல் இடைநிறுத்துவதன் கொள்கைரீதியான தீர்மானம் பிரகாரம் 2022 ஏப்ரல் 13 ஆம் திகதி முதல் மீளாய்வாண்டு இறுதி அளவில் சில கடன்தவணைகள் மற்றும் வட்டி கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டிருந்த போதும் அதற்குரிய கொடுப்பனவை மேற்கொண்டால் அப் பற்றாக்குறை மேலும் அதிகரிப்பதாக அவதானிக்கப்பட்டது. 2006 ஆண்டில் 151 பில்லியனான வட்டி செலுத்துதல் 2022 ஆண்டளவில் அது ரூபா 1,565 பில்லியன் வரை 936 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. பாதீட்டு நிலுவையை நிதியீட்டம் செய்ய கடன் பெற்றுக் கொள்ள வேண்டியேற்பட்டிருந்ததுடன் அதற்கான வட்டி செலுத்தல் வருடாந்தம் அதிகரித்திருந்தது. 2022 ஆண்டில் திரட்டிய ரூபா 1,999 பில்லியனான அரசின் வருமானத்தில் ரூபா 1,565 பில்லியன் அதாவது 78.29 சதவீதமான வட்டி செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. இந் நிலைமை குறித்த காலப் பகுதியில் வருடாந்தம் அதிகரித்துள்ளதுடன், 2019 ஆண்டு முதல் அது துரிதமாக அதிகரித்துள்ளது.

வருமானம் திரட்டும் பிரதான நிறுவனமான உள்நாட்டு இறைவரி திணைக்களம். .இலங்கை சுங்கம், மதுவரி திணைக்களம் மற்றும் மோடார் வாகன திணைக்களத்திற்குரிய மீளாய்வாண்டில் அறவிட வேண்டிய நிலுவை வருமான மீதியின் கூட்டுத் தொகை ரூபா 971,330,513,621 ஆனது.

எவ்வாறாயினும், கூடுதலான நிலுவை வருமானமொன்று அறிக்கையிடப்பட்டுள்ள உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் 2022 திசெம்பர் 31 திகதியளவில் திரட்ட வேண்டியிருந்த ரூபா 904 பில்லியனான வருமானம், திரட்டாது நிலுவையாக காணப்பட்டது. அவ் வருமானம் 2022 ஆண்டில் திரட்ட முடியுமாக இருப்பின் அவ்வாண்டு வருமான பற்றாக்குயை ரூபா 636 பில்லியன் அதாவது 41.30 இனால் குறைத்துக் கொள்ள முடியுமாக இருந்தது. அந் நிலுவை வருமானம் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் முறையே ரூபா 698 பில்லியன் மற்றும் ரூபா 620 பில்லியனாக இருந்தது. அவ்வாண்டுகளிலும அந்த நிலுவை வருமானத்தை திரட்ட முடியுமாக இருந்திருந்தால் 2020 ஆண்டில் வருமான பற்றாக்குறை ரூபா 606 பில்லியன் வரை 46.47 சதவீதத்தால் 2021 ஆண்டில் வருமான பற்றாக்குறை ரூபா 670 பில்லியன் வரை 51.94 சதவீதத்தால் குறைத்துக் கொள்ளக்கூய இயலுமை காணப்பட்டது.

அதன் பிரகாரம், வரி நிர்வாக முகாமைத்துவ தகவல் தொகுதியின் நிலவும் குறைபாடுகள், வரி மேன் முறையீட்டு செயல்முறையின் நீண்டகாலத்தன்மை, நிலுவை வரி அறவிடல் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகளை அமுல்படுத்த வஷேடமான நீதி மன்ற தொகுதியொன்று நிறுவப்படாமை போன்ற காரணங்கள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் நிலுவை வரி அறவிடலின் தாமதத்திற்கு தாக்கம் செலுத்தியிருந்தன.

சரியாக வருமான மதிப்பீட்டை தயாரித்திருக்காதமை அல்லது தயாரித்த வருமானம் மதிப்பீட்டின் பிரகாரம் வருமானம் திரட்டாமையும், சிக்கனமாக செலவினத்தை முகாமைத்துவம் செய்யாமையும் காரணமாக அரச கடன் பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. அக் கடன் பெற்றுக் கொள்ளல்

